பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர்

நூல் தொகுப்பு :

தொகுதி 2



35

P.G. 5085

இந்நூலைப் பற்றி

டாக்டர் பாபாசாகேப் பி. ஆர். அம்பேத்கர் அவர்களின் அரசியலமைப்புச் சட்டச் சீர்திருத்தம் மற்றும் பொருளியல் சிந்தனைகள் பற்றிய சிறந்த கட்டுரைகளும், பேச்சுகளும் இந்தத் தொகுதியில் இடம் பெற்றுள்ளன. டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் அவர்கள், தாம் எடுத்துக்கொண்ட பொருள் எதுவாயினும் அதனை ஆராய்ச்சி நெறிகளின்படி நுட்பமாக ஆய்ந்து, தக்க ஆதாரங்களுடனும், புள்ளி விவரங்களுடனும் அறிவுக் களஞ்சியமாகத் திகழும் வகையில் விளக்கிக் கூறும் ஆற்றல் மிக்கவர் என்பதற்கு இக்கட்டுரைகள் ஆணித்தரமான சான்றுகளாக அமைந்துள்ளன.

இந்திய நாட்டுச் சமூக அமைப்பையும், பிரிட்டிஷ் இந்திய மாநிலங்கள், சுதேச சமஸ்தானங்கள் என இருந்த அரசியல் **பிரிவுகளையும்,** பெரும்பான்மையோர், சிறுபான்மையினர் என இருந்த மக்கள் கூட்டத்தையும் கருத்தில் கொண்டு, சுதந்திர இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதனை 1919-ஆம் ஆண்டுமுதலே ஆய்ந்து தம் உயரிய கருத்துக்களை வெளிப்படுத்தி வந்திருப்பதையும் இக்கட்டுரைகளும் பேச்சுகளும் புலப்படுத்துகின்றன.

இந்திய நாட்டுச் சமூக, அரசியல் சிந்தனை வளர்ச்சி வரலாற்றை அறிவதற்குச் சிறந்த ஆவணமாகப் பயன்படக் கூடிய இந்தக் கட்டுரைகள் டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் அவர்கள் வலியுறுத்திய ''சமூக ஜனநாயகம்'' என்னும் இலட்சியக் கோட்பாட்டினைத் தெளிவுபடுத்துவனவாக உள்ளன.

நூலகப் பதிப்பு:
விலை ரூ. 85/-

டாக்டர் பாபாசாகேப்

அம்பேத்கர்

நூல் தொகுப்பு

தொகுதி 2

டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர்,
எம். ஏ, பிஎச். டி., டி. எஸ்ஸி., பார்-அட்-லா., எல். எல். டி., டி. லிட்.,
1891 — 1956

''இந்தியரின் வாழ்க்கை நெறியைப் போற்றியுரைக்க முன்வைக்கும் பல காரணங்களில் ஒன்று, அந்த நெறியைப் பின்பற்றி வந்திருப்பதால்தான் இன்றளவும் உலகில் எஞ்சியுள்ள பழைமைச் சிறப்புள்ள நாடாக இந்தியா நிலைத்து இருந்து வருகிறது என்ற கருத்தாகும். இந்தக் கூற்றினை அடிக்கடி கேட்டு வருகிறோம்; அவ்வளவு சுலபமாக ஒதுக்கிவிட முடியாத அளவு உயர்ந்த கருத்துக்களைக் கூறும் பெரிய அறிவாளிகள்கூட இவ்வாறு கூறியிருக்கிறார்கள். இக்கூற்றுக்குச் சான்றுகள் உள்ளனவா, இல்லையா என்பதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. அந்தத் தொடர்நிலை உண்மை என்றே கொள்வோம். இந்த நிலை குறித்து அதைக் காட்டிலும் முக்கியமாக ஒன்றைக் குறிப்பிடுவது அவசியமாகிறது. அது இதுதான்: தொன்றுதொட்டுத் தொடர்ந்து நிலைத்திருந்து வந்திருப்பவற்றில் பல பாங்குகள் உண்டு; அவை யாவுமே ஒரே விதமாகப் பாராட்டுதலைப் பெறத்தக்கவை அல்ல. எடுத்துக்காட்டாக, பணிந்திருந்து, தகுந்த தருணத்தில் பின்வாங்கி வளைந்து கொடுப்பதன் காரணமாகப் பலவீனமான மக்கள் தொடர்ந்து வாழ்ந்து வருவார்கள். இவ்வாறு மானங்கெட்டு அஞ்சி வாழ்வதோ, அடிமையாய் அடிபணிந்து, காலங்காலமாய்த் தொடர்ந்து வாழ்ந்து வருவதோ பாராட்டத்தக்கதுதானா? இந்த இழிந்த வாழ்வும், வீரிட்டெழுந்து பெருமையை நிலைநாட்டி வழிவழியாய் வாழ்வைத் தொடருவதும் சமமாகிவிடுமா? ஆகவே ஒரு மக்கள் கூட்டத்தினர் காலத்தைப் புறங்கண்டு எஞ்சி வாழ்ந்து வருகிறார்கள் என்பதனாலேயே அவர்கள் காலங்காலமாய் வளர்ச்சியுற்று முன்னேறி வந்துள்ளார்கள் என்பதை ஒப்புக் கொள்ள முடியாது. எனவே, தொடர்வாழ்வு முக்கியமல்ல; பண்புத் தரமும் வாழ்க்கைத் தளமும்தான் முக்கியமானவை.''

டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர்

'திரு. ரஸ்ஸலும் சமுதாய மறுசீரமைப்பும்'

This Volume-II in Tamil forms the second part of the English Edition — Vol. I: **Dr. Babasaheb Ambedkar — Writings and Speeches** Published by the Education Department, Government of Maharashtra, Reprinted in 1989.

முதற்பதிப்பு: டிசம்பர், 1993
அக்ரஹாயண, 1915

© உரிமைப்பதிவு

விலை: ரூ. 25/-

நூலகப் பதிப்பு: ரூ. 85/-

வெளியீட்டாளர்:

டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன்,
நல அமைச்சகம், இந்திய அரசு

விற்பனை நிலையம்:

டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன்,
25, அசோகா சாலை,
புது டில்லி-110 001

WM91
N3.2

அச்சிட்டோர்:

பாவை பிரிண்டர்ஸ் (பி) லிமிடெட்
சென்னை-600 014.
தொலைபேசி: 832441

ஆலோசனைக் குழு

மாண்புமிகு திரு. சீதாராம் கேசரி,
நலத்துறை அமைச்சர்,
இந்திய அரசு

மாண்புமிகு திரு. கே. வி. தங்கபாலு,
இணை அமைச்சர், நலத்துறை,
இந்திய அரசு

திரு. மோகன்தாஸ் மோசஸ், இ. ஆ. ப.,
செயலாளர், நல அமைச்சகம்,
இந்திய அரசு

திரு. கங்கா தாஸ், இ. ஆ. ப.,
இணைச் செயலாளர், நல அமைச்சகம்,
இந்திய அரசு

உறுப்பினர் — செயலாளர்
டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன்,
புது டில்லி

தலைமைப் பதிப்பாளர் :

டாக்டர் ஷ்யாம்சிங் ஷஷி, பிஎச். டி., டி. லிட்.

நிர்வாகப் பதிப்பாளர் — ஒருங்கிணைப்பாளர் (தமிழ்) :

டாக்டர் எஸ். பெருமாள், எம். ஏ., எம். பில்., பிஎச். டி.

ஆங்கில நூல் தொகுப்பாளர் :

திரு. வஸந்த் மூன்
பம்பாய்

தமிழ் நூல் பதிப்பாளர் :

டாக்டர் எஸ். பெருமாள்

மொழி பெயர்ப்பாளர்கள் :

திரு. ஐ. இசக்கி
திரு. எ. எஸ். மூர்த்தி
திரு. எ. எஸ். மணி
திரு. ஆர். எஸ். நாராயணன்
திரு. உலோ. செந்தமிழ் கோதை

ஒப்புநோக்கியோர் :

திரு. லா. சு. ரங்கராஜன், திரு. கே. கணேசன், இ. த. ப.
திரு. ரங்கசாமி (மாஜினி)

பிழை திருத்த உதவி:

திரு. பெ. மாணிக்கம், பி. ஏ.
திரு. ஆ. இரத்தினம், எம். ஏ.
திரு. மு. பா. எழிலரசு
திரு. இ. செல்லதுரை

அணிந்துரை

டாக்டர் பாபாசாகேப் பீம்ராவ் இராம்ஜி அம்பேத்கர் அவர்களின் பேச்சும் எழுத்துக்களும் அடங்கிய ஆங்கில நூல் முதல் தொகுதியின் முதற்பகுதி இந்தி, குஜராத்தி, தமிழ் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு முதல் தொகுதியாக மிகக்குறுகிய காலத்தில் வெளிவந்து, 1993 ஏப்ரல், 14-ஆம் நாளன்று இந்திய அரசின் நலத்துறை ஏற்பாடு செய்த டாக்டர் பாபாசாகேப் பி. ஆர். அம்பேத்கர் அவர்களின் நூற்றாண்டு விழாவின்போது மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் அதனை நாட்டு மக்களுக்கு அளித்தார் என்பதனை மகிழ்வுடன் குறிப்பிட விரும்புகின்றேன்.

நலத்துறையைச் சார்ந்த டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன் தற்போது இரண்டாம் தொகுதியை (ஆங்கில நூல் முதல் தொகுதியின் பிற்பகுதி), நமது பேரார்வமிக்க வாசகர்களுக்கு அளிப்பதை அறிந்து முன்னிலும் பெரிதும் மகிழ்வடைகின்றேன்.

டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷனில் தலைமைப் பதிப்பாளராகப் பொறுப்பேற்றுள்ள டாக்டர் ஷ்யாம் சிங் ஷஷி அவர்களும், பதிப்பாளர் குழுவின் உறுப்பினர்களும் இந்தத் தொகுதியை வெளிக்கொணர்வதில் சிறப்பாகப் பணியாற்றியுள்ளமைக்காகப் பாராட்டுக்குரியவர்களாவர்.

டாக்டர் பாபாசாகேப் பி. ஆர். அம்பேத்கர் அவர்களின் நூல் தொகுப்பாக அமைந்த இந்தத் தொகுதியை அனைவரும் விரும்பி வரவேற்பார்கள் என நம்புகிறேன்.

சீதாராம் கேசரி
நலத்துறை அமைச்சர்,
இந்திய அரசு

புது டில்லி
நவம்பர் 23,1993

பதிப்புரை

டாக்டர் பாபாசாகேப் பி. ஆர். அம்பேத்கர் அவர்களின் நூல் தொகுப்பு முதல் தொகுதி இந்தி மற்றும் பிற இந்திய மொழிகளில் வெளிவந்து மக்களிடையே நல்லதொரு வரவேற்றைப் பெற்றிருப்பது பெருமகிழ்ச்சியை அளிப்பதாகும். மொழிபெயர்ப்பாளர்கள், ஒப்புநோக்குவோர், பதிப்பாசிரியர்கள் ஆகிய அனைவரும் தங்கள் பணியில் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்க நேர்ந்தது. எனினும் முதல் தொகுதியைக் குறித்த காலத்தில் வெளியிடும் முயற்சியில் வெற்றி பெற்றுள்ளோம்.

தங்கள் முன்னுள்ள இரண்டாம் தொகுதியில் பின்வரும் பகுதிகள் அடங்கியுள்ளன.

1. **சவுத்பரோ குழுவின் முன் அளித்த சாட்சியம்**
2. **கூட்டாட்சியா? சுதந்திரமா?**
3. **சமூகத் தடையும் அதைத் தீர்க்கும் வழியும்**
4. **மாநிலங்களும் சிறுபான்மையினரும்**
5. **இந்தியாவில் சிறு நிலவுடைமைகளும் அவற்றுக்கான தீர்வுகளும்**
6. **திரு. ரஸ்ஸலும் சமுதாய மறுசீரமைப்பும்**

நூல்களை மொழிபெயர்ப்பதில் உள்ள சிரமங்களை மொழி பெயர்ப்புப் பணியில் தொடர்புடையோர் நன்கு அறிவர். அதிலும் ஒரே நூலைப் பலர் மொழிபெயர்க்கும்போது ஒப்புநோக்குவோரும், பதிப்பாளர்களும் மிகுந்த சிரமங்களை எதிர்கொள்ள நேர்வது இயல்பே. எனினும் மூல நூலுக்கு மாறுபடாத வகையில் மொழிபெயர்ப்பு அமையுமாறு பார்த்துக் கொள்வதில் இயன்றதனைத்தையும் செய்துள்ளோம்.

இந்தத் தொகுதியைக் குறிப்பிட்ட காலத்தில் முடித்து வெளியிடுவதற்கு நலத்துறை அமைச்சகம் மற்றும் டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன் ஆகியவற்றைச் சார்ந்த அன்பர்கள் பெரிதும் உதவியுள்ளனர். அவர்களுக்கு நன்றி செலுத்தும் கடப்பாடுடையோம்.

டாக்டர் ஷ்யாம்சிங் ஷஷி,
தலைமைப் பதிப்பாசிரியர்

புது டில்லி
25 நவம்பர், 1993

பொருளடக்கம்

(பக்கம்)

அணிந்துரை

பதிப்புரை

பகுதி 1

அரசியலமைப்புச் சட்டச் சீர்திருத்தம் பற்றியவை

1. சவுத்பரோ குழுவின் முன் அளித்த சாட்சியம் 1
2. கூட்டாட்சியா? சுதந்திரமா? 53
3. சமூகத் தடையும் அதைத் தீர்க்கும் வழியும் 161
4. மாநிலங்களும் சிறுபான்மையினரும் 199

பகுதி 2

பொருளாதாரப் பிரச்சினைகள் குறித்து

5. இந்தியாவில் சிறு நிலவுடைமைகளும் அவற்றுக்கான தீர்வுகளும் 285
6. திரு ரஸ்ஸலும் சமுதாய மறுசீரமைப்பும் 325

சிறப்புப் பெயரகராதி 343

பகுதி 1

அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் பற்றியவை

1

வாக்குரிமை பற்றிய சவுத்பரோ குழுவின் முன் அளித்த சாட்சியம்

1919, ஜனவரி 27 அன்று விசாரிக்கப்பட்டது

சீர்திருத்தக் குழு (வாக்குரிமை) அளித்த அறிக்கையிலிருந்து தொகுதி 2, 1919

சவுத்பரோ குழுவின் முன் அளித்த சாட்சியம்

குழு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.

ரைட் ஆனரபிள் சவுத்பரோ பிரபு, ஜி. ஸி. பி., ஜி. வி. ஓ., ஜி. ஸி., எம். ஸி. *(தலைவர்)*

ஸர் ஃப்ராங்க், ஜி. ஸ்லை, கே. ஸி. எஸ். ஐ., ஐ. ஸி. எஸ்.

ஸாஹிப்ஜாடா அஃப்தாப் அகமத் கான்

திரு பாபு சுரேந்திரநாத் பானர்ஜி

திரு எம். என். ஹாக்

டபிள்யூ. எம். ஹெய்லி அவர்கள், ஸி. எஸ். ஐ., ஸி. ஐ. இ., ஐ. ஸி. எஸ்.

திரு ஸ்ரீநிவாச சாஸ்திரி (25.1.1919, 27.1.1919 ஆகிய தேதிகளில் வரவில்லை)

கூடுதல் உறுப்பினர்கள்:

எல். சி. க்ரம்ப் அவர்கள், ஐ. ஸி. எஸ்.

கே. நடராஜன் அவர்கள்,

பி. சி. டாலன்ட்ஸ் அவர்கள், ஐ. ஸி. எஸ்., *(செயலாளர்)*

சவுத்பரோ குழுவின் முன் அளித்த சாட்சியம்

எழுத்து மூலமான அறிக்கை

''தனிநபர் கருத்துக்களிலும் விருப்பங்களிலும் காணப்படும் வலிமையை மக்களின் செயலில் வெளிப்படச் செய்வது எவ்வாறு என்பதே அரசாங்கத்தின் மிகக் கடினமான, மிக முக்கியமான பிரச்சினை. மக்களாட்சி அமைப்புகள் விடை காண வேண்டிய புதிர் வினாவாக இருப்பது இதுவே.'' இவ்வாறு பேராசிரியர் ஏ. பி. ஹார்ட் (A. B. Hart) கூறுகிறார். ஆனால், மக்கள் அரசாங்கம் என்பதன் விளக்கத்தில் இது ஒரு பாதியே ஆகும். இதே அளவுக்கு முக்கியமான இதன் மறுபாதியையும் வலியுறுத்துவது அவசியம். தனிநபர்களின் திறன்களைச் செயல்படுத்த வாய்ப்பளிக்கும் மிக முக்கியமான துறையாக இருப்பது அரசாங்கம். எனவே அரசாங்கத்தின் செயற்பாட்டில் ஈடுபட்டுப் பங்கு பெறும் வாய்ப்பு யாருக்கும் மறுக்கப்படாமலிருப்பது மக்களின் நலனுக்கு உகந்தது. அதாவது மக்களாட்சி என்பது பொது மக்களுக்காக நடக்கும் அரசாங்கமாக மட்டுமின்றி மக்களால் நடத்தப்படும் அரசாங்கமாகவும் இருக்க வேண்டும். இதையே வேறு விதமாகச் சொன்னால் கருத்துக்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிப்பதனால் மட்டும் மக்கள் ஆட்சி ஆகிவிட முடியாது. அதனுடைய உண்மையான பொருள் நிறைவு பெறுவதற்கு மக்களின் பிரதிநிதிகள் இடம்பெற வேண்டும். பல சமயங்களில் முன்னது இருந்து, பின்னது இல்லாமல் போகிறது. எனவே இந்தியாவில் மக்கள் அரசாங்கத்துக்கான வாக்குரிமையையும் தொகுதிகளையும் உருவாக்கும் போது, கருத்துக்கள், பிரதிநிதிகள் ஆகிய இரண்டு பிரதிநிதித்துவங்களும் இடம்பெறுமாறு வாக்குரிமைக் குழு பார்த்துக் கொள்ள வேண்டும். இதைச் செய்யத் தவறும் எந்த வாக்குரிமை முறையும் மக்கள் அரசாங்கம் ஒன்றை அமைக்கத் தவறுவதாகும்.

2. இந்தப் பணியில் வெற்றி பெறுவது, மக்கள் அரசாங்கமாக உருவாக்கப்படவிருக்கும் சமூகத்தைப் பற்றி நடைமுறையில் உள்ள கருத்து எவ்வளவு தூரம் சரியானது என்பதையே பொறுத்திருக்கிறது. நடைமுறையில் இந்தியா எவ்வாறு உள்ளது என்பதை டஃப்ரின் பிரபு (Lord Dufferin) நன்கு சித்தரித்திருக்கிறார். அவர் கூறுவது:

''(இந்தியாவின்) மக்கள் தொகை, பல தனித்த தேசிய இனங்களைக் கொண்டது. இந்த மக்கள் பல்வேறு மதங்களைச் சார்ந்தவர்களாகவும், வெவ்வேறு சடங்கு முறைகளைப் பின்பற்றுவோராகவும், வெவ்வேறு மொழிகளைப் பேசுவோராகவும் உள்ளனர். அவர்களில் பலர் ... ஒன்றுக்கொன்று முரண்பாடான கருத்துக்

களாலும், மாறுபட்ட மூலங்களைக் கொண்ட பழக்க வழக்கங்களாலும், ஒன்றுக்கொன்று எதிரான உலகியல் நலன்களாலும் மேலும் பிரிவுபட்டிருக்கிறார்கள். இவை எல்லாவற்றையும்விட அநேகமாக மிக வெளிப்படையான தனித்தன்மையாக நமது இந்தியப் பெருவெளியில் காணப்படுவது இரண்டு சக்தி வாய்ந்த அரசியல் சமுதாயங்களாக அது பிரிந்து நிற்கும் நிலையாகும். இந்த இரண்டும் இரண்டு துருவங்களைப் போலத் தனித்து விலகி நிற்கின்றன—ஒரு புறம், இந்துக்கள் விரிவாக, நுணுக்கமாக அமைக்கப்பட்ட சாதி வேற்றுமைகளுடன்—மறுபுறம், முகமதியர்கள், சமூக சமத்துவத்துடன்—என்பதாக இந்தப் பிரிவினை அமைந்துள்ளது. இந்த இரண்டு பிரிவுகள் மட்டுமின்றி மேலும் பல சிறிய தேசிய இனங்களும் உள்ளன. இவற்றில் பலவற்றின் மக்கள் தொகை பல லட்சங்களாகும். இந்துக்கள் முகமதியர்களிடமிருந்து எவ்வளவு அதிகமாக வித்தியாசப்பட்டிருக்கிறார்களோ, அதே அளவுக்கு இந்த தேசிய இனங்களும் ஒன்றுக்கொன்று வேறுபட்டுள்ளன. உதாரணமாக, சீக்கியர்களை எடுத்துக் கொள்வோம். போர்க் குணமும், தனிப்பட்ட மரபுகளும், ஆர்வம் மிக்க மத நம்பிக்கையும் கொண்ட மக்கள் இவர்கள். மேலும் ரோஹில்லர், பட்டாணியர், அஸ்ஸாமியர், பலூச்சியர், நமது எல்லைப் பகுதிகளில் உள்ள போர்க்குணம் கொண்ட மற்றும் பல இனக் குழுக்கள், இமயமலைப் பகுதிகளில் வசிக்கும் மலைவாழ் மக்கள் இருக்கிறார்கள். பர்மாவில் உள்ள நமது குடிமக்கள் வருண இனத்தால் மங்கோலியராக, மதத்தால் பௌத்தர்களாக இருக்கிறார்கள். கோண்ட், மஹார், பீல் முதலான ஆரியரல்லாத மக்கள் மத்திய இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் வசிக்கிறார்கள். தொழில் முயற்சி ஆர்வம் கொண்டவர்களாக உற்பத்தித் தொழில்களிலும் வர்த்தகத்திலும் விரைவாக முன்னேறிவரும் பார்சி மக்கள் இருக்கிறார்கள். பெரும் எண்ணிக்கையில் உள்ள இந்தச் சமுதாயங்களில், மனித குலம் சரித்திரத்துக்கு முந்திய காலத்திலிருந்து இன்றுவரை கடந்துவந்துள்ள நாகரிக நிலைகள் அத்தனையையும் ஒரே சமயத்தில் காண முடியும்.'';

3. இந்தியாவின் மக்கள் பல்வேறு சாதிகளையும் மதக்கோட்பாடுகளையும் சார்ந்தவர்களாகப் பிரிவுபட்டிருப்பதனால் இந்தியா, பிரதிநிதித்துவ அரசாங்க முறைக்குத் தகுதியற்றது என்று ஆங்கிலேயர்கள் எப்போதும் கூறிவந்திருக்கிறார்கள். இந்திய அரசியல் வாதிகளில் முன்னேறிய பிரிவினர் இந்த வாதத்தை ஏற்கவில்லை. இந்தியாவில் இருப்பதைப் போலவே ஐரோப்பாவிலும் சமூகப் பிரிவினைகள் உள்ளன என்று இவர்கள் கூறுகிறார்கள். இதற்கு ஆதரவாக நிறைய உண்மை விவரங்கள் உள்ளன. அமெரிக்கா (U. S. A.) போன்ற ஒரு நாட்டில் இந்தியாவில் உள்ள அளவுக்குச் சமூகப் பிரிவினைகள் காணப்படுகின்றன. இந்தியாவில் இருப்பது போலவே பொதுமக்களைச் சூறையாடும் கும்பல்கள் அமெரிக்காவிலும் உண்டு. அங்கே அரசியல் உட்பிரிவுகள் மட்டுமின்றி,

தொழில், விஞ்ஞான, சமய சங்கங்களும் உள்ளன. இவற்றின் நோக்கங்கள் பல்வேறு விதமாக மாறுபட்டிருப்பதோடு, இவை தமக்குள் ஒன்றைப் பற்றி மற்றொன்று கொண்டுள்ள கருத்துக் களும் வெவ்வேறாக உள்ளன. இவ்வாறு பல்வேறு நோக்கங் களைக் கொண்ட அரசியல் கட்சிகள், சமூகக் குழுக்கள், கோஷ்டி கள், கும்பல்கள் தவிரவும் இவற்றைவிட நிரந்தரமான பல பிரிவினைகளும் அமெரிக்காவில் இருக்கின்றன. அமெரிக்க மக்களில் போலந்து நாட்டிலிருந்து வந்தவர்கள், டச்சுக்காரர்கள், ஸ்வீடன் நாட்டினர், ஜெர்மானியர்கள், ரஷ்யர்க்ள் போன்ற பல்வேறு நிரந்தரப் பிரிவினர் தத்தம் சொந்த மொழிகளையும் மத, அறநெறிக் கோட்பாடுகளையும் மரபுகளையும் கொண்டிருக் கிறார்கள். சமூகப் பிரிவினைகள் உள்ள ஒரு நாடு பிரதிநிதித்துவ அரசாங்கத்துக்குத் தகுதியற்றது என்றால், இந்தியாவைப் போலவே அமெரிக்காவும் அதற்குத் தகுதியற்றதாகும். ஆனால் இத்தனை சமூகப் பிரிவினைகளைக் கொண்ட அமெரிக்கா, பிரதிநிதித்துவ அரசாங்கத்துக்குத் தகுதி பெற்றுள்ளது என்றால் இந்தியாவும் ஏன் தகுதி பெற்றதாகக் கூடாது என்பதே நமது அரசியல்வாதிகளின் கூற்று. இவர்களை இம்மாதிரியான, பிடிவாதக் கருத்திலிருந்து விடுவித்து, இந்தியச் சமூகப் பாகுபாடுகள் வேறுவிதமானவை என்று எடுத்துரைப்பது கடினம். இல்லையெனில் இவர்கள் கூறு வதைச் சரி என ஆமோதிக்க வேண்டிய நிலை எழுகிறது. இந்த இரண்டைத் தவிர மூன்றாவது வழி ஏதுமில்லை.

4. என்னுடைய கருத்து அவர்களின் வாதத்தை ஏற்க முடி யாது என்பதாகும். ஏனென்றால் இந்தியாவில் உள்ள சமூகப் பிரிவினைகள் அரசியலில் முக்கியத்துவம் பெறுகின்றன. இவை எவ்வாறு முக்கியத்துவம் பெறுகின்றன என்பதைக் காண்பதற்கு இவற்றுக்கு எங்கே முக்கியத்துவம் இல்லாமல் போகிறது என் பதைப் புரிந்து கொள்வதே சிறந்த வழியாகும். மனிதர்கள் ஒரு சமுதாயமாக வாழ்வதற்கு அடிப்படையாக அமைவது அவர் களிடையே காணப்படும் பொதுத் தன்மைகளாகும். இவ்வாறு பொதுவாக இருக்க வேண்டியவை அவர்களின் குறிக்கோள்கள், நம்பிக்கைகள், நாட்டங்கள், அறிவு, ஒரு பொதுவான நல்லுணர்வு ஆகியவை: அல்லது சமூகவியலாளர்களின் மொழியில் சொல்லு வதென்றால் அவர்கள் 'ஒத்த நோக்கம்' கொண்டவர்களாக இருக்க வேண்டும். அவர்களுக்கு இந்த விஷயங்கள் எப்படிப் பொதுவானவையாக அமைகின்றன, அல்லது எப்படி அவர்கள் ஒத்த நோக்கம் கொண்டவர்களாகிறார்கள்? ஒரு 'கேக்' துண்டைப் பகிர்ந்து கொள்வது போல மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் விஷயம் அல்ல இது. மற்றவர்களைப் போன்ற மனப்பான்மையை வளர்த்துக் கொள்வதற்கு அல்லது மற்றவர்களுடன் மனமொத்து வாழ்வதற்கு அவர்களுடன் தொடர்பு கொண்டிருக்க வேண்டும், அல்லது அவர்களின் நடவடிக்கைகளில் கலந்து கொள்ள வேண் டும். ஒருவருக்கொருவர் அருகில் வசிப்பதனால் மட்டும் ஒத்த

நோக்கு ஏற்பட்டு விடாது; அதேபோல ஒருவருக்கொருவர் தூரத்தில் வசிப்பதன் காரணமாக ஒத்த நோக்கம் இல்லாமல் போய் விடாது. ஒரு குழுவுடன் ஒத்த நோக்குக் கொள்வதற்கு ஒரே வழி அந்தக் குழுவின் செயல்களில் பங்கேற்பதேயாகும். ஒவ்வொரு குழுவும் தனக்கென தனிப்பட்ட முறையில் பொது நோக்கு ஒன்றை உருவாக்கிக் கொள்கிறது. ஒன்றுக்கு மேற்பட்ட குழுக்களை ஒரே அரசியல் கூட்டமைப்பில் கொண்டு வருகையில் ஒவ்வொரு குழுவின் பொது நோக்கும் வெவ்வேறாக இருப்பதால் அவற்றிடையே பொருந்தாமை அல்லது மோதல் ஏற்படுகிறது. இந்தக் குழுக்கள் தனிமைப்பட்டு இருக்கும்வரை இந்த மோதல் தொடர்ந்து நீடித்து, இணக்கமான செயல்பாட்டுக்குத் தடையாக இருந்துவரும், குழுக்கள் தனிமைப்பட்டு இருப்பதுதான் இங்கு முக்கிய தீமையாகிறது. குழுக்களுக்கிடையே பரிவர்த்தனைக்கு இடம் இருந்தால் தீமை இல்லாமற் போகிறது. ஒரு சமூகத்தில் உருவான மனப்பான்மைகள் மாற்றியமைக்கப்படுவதற்குப் பரிவர்த்தனை மூலம் வாய்ப்புக் கிடைக்கிறது. முன்பு இருந்த ஒத்த மனப்பான்மையின் இடத்தில் புதிதாக ஓர் ஒத்த மனோபாவம் உருவாகிறது. சம்பந்தப்பட்ட எல்லாக் குழுக்களின் நலன்கள், லட்சியங்கள், ஆர்வ விருப்பங்கள் ஆகியவற்றைப் பிரதிபலிப்பதாக அது அமைகிறது. மக்களின் இணக்கமான சமூக அல்லது அரசியல் வாழ்க்கைக்கு ஒத்த மனப்பான்மை இன்றியமையாதது. ஒத்த நோக்கு உருவாவது இப்போது குறிப்பிட்டது போல மக்களுக்கிடையே உள்ள தொடர்பு, நடவடிக்கைகளில் பங்கேற்றல், குழுக்களிடையே பரிவர்த்தனை ஆகியவை எந்த அளவுக்கு உள்ளன என்பதைப் பொறுத்தது. இதைக் கருத்தில் கொண்டு இந்தியாவில் உள்ள பிரிவினைகளைப் பார்த்தால், அவை இணக்கமான அரசியல் வாழ்க்கையை அடைவதற்குத் தடையாக உள்ளன என்றுதான் கூற வேண்டும்.

5. தங்களுக்கெனத் தனித்த ஒத்த மனோபாவம் கொண்டவையாக, நிச்சயமாக மோதல் நிலைக்கு வரக்கூடிய குழுக்கள் அல்லது பிரிவுகள் என்று பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்:

(1) இந்துக்கள்

(2) முகமதியர்கள்

(3) கிறிஸ்தவர்கள்

(4) பார்ஸிகள்

(5) யூதர்கள் முதலானோர்.

இந்துக்களைத் தவிர மற்ற எல்லாப் பிரிவுகளிலும் அவற்றின் உறுப்பினர்களிடையே தொடர்புகளுக்கு முழுமையான சுதந்திரம் உள்ளது. எனவே இவற்றின் உறுப்பினர்கள் தங்களுக்குள் ஒருவருக்கொருவர் முற்றிலுமாக ஒத்த மனப்போக்கு கொண்டவர்களாக இருப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம். இந்துக்களைப் பொறுத்த

மட்டில் இந்த ஆய்வை மேலும் கொஞ்சம் விரிவுபடுத்த வேண்டும். இந்துக்களைப் பற்றிய குறிப்பிடத்தக்க ஒரு விஷயம் அவர்கள் இந்துக்கள் என்பதற்கு முன், முதலில் ஏதேனும் ஒரு சாதியின் உறுப்பினர் என்பதுதான். சாதிகள் தம்மளவில் முற்றிலும் தனிப்பட்டவையாகவும் தனிமைப்பட்டவையாகவும் இருந்தபோதிலும், ஒரு இந்து, இந்து அல்லாதவருடன் எப்படி நடந்து கொள்வது என்பதில் தாம் ஒரு இந்து என்ற உணர்வே அவருக்கு முக்கிய வழிகாட்டியாக இருக்கிறது. ஆனால் வேறொரு சாதியைச் சேர்ந்த இந்துவுடன் அவரது நடவடிக்கைக்கு முக்கிய வழிகாட்டியாக இருப்பது அவருடைய சாதி உணர்வேயாகும். இதிலிருந்து இரண்டு இந்துக்களிடையே, இந்து என்ற அடிப்படையான ஒத்த உள்ளத்தை விட, சாதி அடிப்படையிலான ஒத்த நோக்கு அதிகச் சக்தி வாய்ந்ததாக இருப்பது தெளிவாகிறது. எனவே இந்துக்களுக்குள்ளேயே, வெளியிலிருப்பவர்களுடன் ஏற்படுவதைப் போலவே வெவ்வேறு வகையான ஒத்த நோக்கு கொண்டவர்களிடையே மோதல் ஏற்படக் கூடும். இந்த முரண்பாடு, சாதி முறை அமைப்பின் அடி முதல் முடிவரை காணப்படுவதாகச் சிலர் கூறுகிறார்கள். ஆனால் இது அளவுக்கு மிஞ்சிய, ஏற்க முடியாத கூற்றாகும். தொடர்பு கொள்வதைப் பொறுத்தமட்டில் இந்துக்கள், சாதி வேறுபாடுகள் பல இருந்த போதிலும், தங்களை இரண்டு முக்கிய குழுக்களாக—தீண்டத் தக்கவர், தீண்டத் தகாதவர் என்று—பிரித்துக் கொள்கிறார்கள். தீண்டத் தக்கவர்களிடையே போதிய அளவு தொடர்பு இருப்பதனால் அவர்களிடையே வெவ்வேறு விதமான ஒத்த நோக்குகளின் முரண்பாடு குறித்து அதிகமாக பயப்பட வேண்டியதில்லை. ஆனால் தீண்டத் தக்கவர்களுக்கும், தீண்டத் தகாதவர்களுக்குமிடையே உண்மையான வேற்றுமைகள் இருப்பதால் அவர்களின் ஒத்த நோக்குத் தன்மையும் வேறுபட்டு மோதல் ஏற்படுகிறது. இவர்களிடையே பரிவர்த்தனைக்கு மிக வலிமையான தடையாகத் தீண்டாமை அமைந்திருக்கிறது. இவர்கள் இவ்வாறு முற்றிலுமாகத் தனிமைப்பட்ட நிலையில் இருப்பதுதான் இந்த மோதல்கள் மிகக் கடுமையாக இருப்பதற்குக் காரணமாகும்.

எனவே, இந்தியாவில் உள்ள உண்மையான சமூகப் பிரிவுகள் பின்வருமாறு:

(1) தீண்டத்தக்க இந்துக்கள்;

(2) தீண்டத்தகாத இந்துக்கள்;

(3) முகமதியர்கள்;

(4) கிறிஸ்தவர்கள்;

(5) பார்ஸிகள்;

(6) யூதர்கள்.

6. மக்கள் அரசாங்கம் என்ற வடிவத்தைப் பெறக்கூடிய கொள்கைத் தொகுப்பு ஒன்றை உருவாக்கும்போது இந்த உண்மையான பிரிவினைகளைப் புறக்கணிப்பது நன்மை தராது. மக்கள் அரசாங்கத்தின் வெற்றி, தேர்தல் தொகுதிகளும் வாக்குரிமைகளும் சமூக சக்திகளை எந்த அளவுக்குச் செயல்பட வைக்கின்றன என்பதைப் பொறுத்தது; எந்த அளவுக்கு மக்களின் பிரதிநிதிகளுக்கு இடம் கிடைக்கச் செய்கின்றன என்பதைப் பொறுத்தது. இதைக் காண்பதற்கு முன்னர் முதலில் குழுக்களின் இடையிலான மோதல், தேர்தலின்போது எந்த வடிவத்தை அடையும் என்பதை நாம் ஆராய வேண்டும்.

7. ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பைத் தேர்தல் தொகுதியாக (Territorial constituency) அமைக்கும்போது மேலே குறிப்பிட்ட குழுக்களைச் சார்ந்த எல்லா வாக்காளர்களும் அந்தத் தொகுதியின் வாக்காளர்கள் என ஒன்றாகச் சேர்க்கப்படுகிறார்கள். இவர்களின் வாக்குகளில் பெரும்பாலான வாக்குகளைப் பெறுபவர் அந்தத் தொகுதியின் பிரதிநிதியாக அறிவிக்கப்படுகிறார். இப்போது எழும் வினா இதுதான்: இவ்வாறு, தேர்ந்தெடுக்கப்படும் வேட்பாளர் அந்தத் தொகுதியில் உள்ள குழுக்களின் உண்மையான பிரதிநிதி ஆவாரா? அந்தத் தொகுதியின் மனோபாவத்தை அவர் உண்மையாகப் பிரதிபலிப்பவரா? அந்தத் தொகுதியில் உள்ள எல்லாத் தரப்பு நலன்களுக்கும் அவர் பிரதிநிதியா? இன்னும் திட்டவட்டமாக கூறுவதானால் உதாரணமாக, ஒரு இந்து வேட்பாளர், முகமதியர் நலன்களுக்குப் பிரதிநிதியாயிருப்பாரா? இந்தச் சந்தர்ப்பத்தில், மேலே விவரிக்கப்பட்ட பல்வேறு பிரிவுகளின் மக்களும் மதத்தை அடிப்படையாகக் கொண்ட பொதுவான நலன்கள் மூலமே அந்தந்தப் பிரிவில் ஒன்றாக இணைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ஒவ்வொரு பிரிவும் மதச்சார்பற்றவையல்லாத, உலகியல் நலன்களால் இணைந்து நிற்கின்றன என்று கூற முடியாது. அப்படியானால் மதச்சார்பற்ற விஷயங்களில் இந்தக் குழுக்கள் பலவிதமாகப் பிரிந்து விடும். உலகியல் நலன்களை வைத்துப் பார்க்கும் போது முகமதியர், பார்ஸிகள், இந்துக்கள் என்பன போன்ற மக்கள் இல்லை. ஒவ்வொரு குழுவிலும் நிலப்பிரபுக்கள், தொழிலாளர்கள், முதலாளிகள், சுயேச்சை வர்த்தகத்தை ஆதரிப்பவர்கள், வர்த்தகக் காப்பு வரி முறைகளை ஆதரிப்போர் என்பன போன்ற பல்வேறு தரப்பினர் இருப்பார்கள். இவ்வாறு பொதுவான உலகியல் நலன்களைக் கொண்ட ஒவ்வொரு குழுவிலும் இந்துக்கள், முகமதியர், பார்ஸிகள் முதலான பல்வேறு சமயத்தினரும் இருப்பார்கள். எனவே, ஒரு இந்து வேட்பாளர், முகமதியர்களின் பொருளியல் நலன்களுக்குப் பிரதிநிதியாகவும், அதேபோல ஒரு முகமதியர் இந்துக்களின் பொருளியல் நலன்களுக்குப் பிரதிநிதியாகவும் இருக்க முடியும். ஆகவே, சமுதாயங்களிடையே பொருளியல் நலன்களில் மோதல் இல்லை. வருங்காலத்தில் மத ரீதியான நலன்களுக்கு மக்களின் வாழ்க்கையில் குறைவான

முக்கியத்துவமே இருக்கும் என்று நாம் கருதினால் ஒரு குழுவின் சமயச் சார்பற்ற நலன்களுக்கு மற்றொரு குழுவைச் சேர்ந்த வேட் பாளர் பிரதிநிதியாக இருக்க முடியும்.

8. இவ்வகையில் பார்த்தால் குறிப்பிட்ட நிலப்பரப்பை ஒரு தேர்தல் தொகுதியாக அமைக்கும் முறை மக்கள் அரசாங்கம் அமைப்பதற்குப் போதுமானதாகும். ஆனால் மேலும் சிறிது ஊன்றிப் பார்ப்போமானால், மக்கள் அரசாங்கம் என்பதன் விளக்கத்தில் ஒரு பாதிக்கு மட்டுமே இது போதுமானது என்பதைக் காணலாம். இவ்வாறு கூறுவது எவ்வளவு உண்மையானது என்பது இப்போது எடுத்துக்காட்டப்படும். ஒரு நிலப்பரப்பின் அடிப்படை யிலான தொகுதியில் தேர்தல் போட்டி நடக்கும்போது வாக்காளர் கள் எந்த வேட்பாளருடன் தங்கள் உணர்வுகள் ஒத்து இருக்கின் றனவோ அவருக்கே ஆதரவளிப்பார்கள். ஆனால் எந்த வேட் பாளருடன் அவர்களின் உணர்வுகள் ஒத்து இருக்கும் என்பது முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டு விடுகிறது. ஒரே நலனைப் பிரதி நிதித்துவப்படுத்தும் இரண்டு வெவ்வேறு குழுக்களைச் சேர்ந்த வேட்பாளர்கள் நிற்கும்போது வாக்காளர்கள் தங்கள் சமூகத்தைச் சேர்ந்தவருக்கே வாக்களிப்பார்கள். பெரும் எண்ணிக்கையில் வாக்காளர்களைக் கொண்ட எந்தக் குழுவும் தம் குழுவைச் சேர்ந்த வேட்பாளரைத் தேர்தலில் வெற்றிபெறச் செய்துவிடும். வாக்காளர் கள் இவ்வாறு தங்கள் சமூகத்தைச் சேர்ந்தவருக்குச் சாதகமாக வாக்களிப்பதன் மூலம் சிறிய குழுக்களின் நலன்களுக்குப் பிரதி நிதித்துவம் கிடைக்காமல் போகாது என்றாலும் அந்தக் குழுக் களைச் சேர்ந்த நபர்கள் அவர்களின் பிரதிநிதியாக வருவதற்கு வாய்ப்பு இல்லாமல் போகிறது.

9. பல்வேறு நலன்களுக்கும கருத்துக்களுக்கும் போதிய அளவில் பிரதிநிதித்துவம் கிடைக்கச் செய்யும் திட்டங்களை உரு வாக்குவதில் முனைப்பாக இருப்பவர்களுக்கு இவ்வாறு சொந்தப் பிரதிநிதித்துவம் கிடைக்க வேண்டியதன் முக்கியத்துவத்தைப் பற்றி விரிவாகப் பேசுவது வீண் எனத் தோன்றலாம். இதனால் சொந் தப் பிரதிநிதித்துவம் முக்கியமற்றது என்று ஆகிவிடாது. சமீப காலமாக ''மக்களால் நடத்தப்படும் அரசாங்கம்'' என்பதைவிட ''மக்களுக்காக நடத்தப்படும் அரசாங்கம்'' என்பது அதிக கவனத் தைப் பெற்று வருகிறது. ''மக்களால் நடத்தப்படும் அரசாங்கம்'' என்பது இல்லாமலேயே ''மக்களுக்காக நடத்தப்படும் அரசாங்கம்'' இருக்க முடியும் என்பதைக் காட்டுவதற்குப் பல உதாரணங்கள் இருக்கின்றன. ஆனால் எல்லா அரசியல் தத்துவ அறிஞர்களும் அத்தகைய அரசாங்கத்தை ஒருமனதாகக் கண்டனம் செய்வார்கள். அதற்கு என்ன காரணம் என்பதை அறிந்து கொள்வது முக்கியம். ஒவ்வொரு விதமான கூட்டுச் சேர்க்கையும் ஒரு அறிவூட்டும் சூழ லாக இருப்பதால் அதன் உறுப்பினர்களின் பண்பு இயல்பை உரு வாக்குவதில் அதற்குப் பெரும் பங்கு இருக்கிறது. எனவே ஒருவர் தனிநபர் என்ற முறையில் என்னவாக இருக்கிறார் என்பது

மற்றவர்களுடனான கூட்டுச் சேர்க்கையில் அவர் என்னவாக இருக்கிறார் என்பதைப் பொறுத்து அமைகிறது. மக்களால் நடத்தப் படுவதாக இல்லாமல், மக்களுக்காக நடத்தப்படும் அரசாங்கம் சிலரை எசமானர்களாக இருப்பதற்கும் மற்றவர்களைக் கீழ்ப்படி வோராக இருப்பதற்கும் பழக்குகிறது; ஏனென்றால் கூட்டுச் சேர்க் கையின் தன்னிச்சையான விளைவுகள் மூலம்தான் ஒருவர் தமது ஆளுமையின் வளர்ச்சியை உணரவும் அளவிடவும் முடியும். ஆளுமை வளர்ச்சிதான் சமூகத்தின் மிக உயர்ந்த குறிக்கோளாகும். ஒருவர் தாம் ஏற்பதற்குத் திறன் உள்ள எந்த நிலையையும் அது சமூக ரீதியாக விரும்பத்தக்கது என்றால், அதனை அடைவதற்குத் தடையின்றி முயற்சி எடுக்கவும் வாய்ப்புப் பெறவும் சமூக ஏற்பாடு துணை செய்ய வேண்டும். ஒருவர் புதிய நிலை ஒன்றை ஏற்பது தமது ஆளுமையைப் புதுப்பித்து வளர்ச்சிபெறுவதாகும். ஒரு கூட்டுச் சேர்க்கையில்—அரசாங்கம் என்பது ஒரு கூட்டுச் சேர்க்கை அமைப்புத்தான்—ஒவ்வொரு நிலையையும் எல்லோரும் அடைவது சாத்தியமாயிருக்க வேண்டும். அப்படி இல்லையென்றால் அது பலரின் ஆளுமை வளர்ச்சிக்குப் பாதகமான முறையில் சிலரின் வளர்ச்சிக்கு உதவுவதாகிவிடும். இத்தகைய விளைவு ஜனநாயகத் தின் நலனுக்கு உகந்ததல்ல என்பதால் அதை நிச்சயமாகத் தவிர்க்க வேண்டும். குறிப்பிட்டுக் கூறினால், தேர்ந்தெடுப்பவர்களாக இருப்பது மட்டும் போதாது, சட்டம் இயற்றுவோராக இருப்பதும் அவசியம்; இல்லையென்றால், யார் சட்டம் இயற்றுவோராக வர முடிகிறதோ அவர்கள்தான் தேர்ந்தெடுப்போராக மட்டுமே இருப் பவர்களுக்கு எஜமானர்களாக இருப்பார்கள்.

10. நிலப்பரப்பின் அடிப்படையிலான தேர்தல் தொகுதிகள் இந்தப் பொருத்தமற்ற விளைவைத் தடுப்பதற்கு எதுவும் செய்ய வில்லை என்ற காரணத்தால் அவை ஆட்சேபிக்கப்படுகின்றன; அந்த ஆட்சேபம் சரியானதே. இந்தத் தொகுதி முறையில் வாக் காளர்கள் வேட்பாளர்களின் திட்டங்களை மட்டும் கவனித்து, வேட்பாளர்களாக நிற்கும் நபர்கள் யார் என்பதை நோக்காமல் வாக்களிப்பார்கள் என்று கருதப்படுகிறது; இந்தக் கருத்துத் தவறானது. உண்மையில் வாக்களிப்பவர்கள் முதலில் ஒரு குழு வின் உறுப்பினர்களாகவும் பின்புதான் வாக்காளர்களாகவும் இருக் கிறார்கள். வேட்பாளர்களாக நிற்கும் நபர்கள் யார் என்பது அவர் களுக்கு முக்கிய விஷயமாகிறது. எனவே ஒரே நலனைப் பிரதி நிதித்துவப்படுத்துவதாகக் கூறிக்கொள்ளும் இரண்டு வேட்பாளர் கள் போட்டியிடும் போது வாக்காளர்கள் ஒரு குழுவின் உறுப் பினர்கள் என்ற முறையில், தங்கள் குழுவைச் சேர்ந்த வேட் பாளரையே ஆதரிக்கிறார்கள். இதன் விளைவாக, பெரிய குழு ஒன்றைச் சேர்ந்தவர்கள் சட்டம் இயற்றுவோராக உயர்ந்த நிலைக்கு வருவதும், சிறிய குழுவைச் சேர்ந்தவர்கள், தங்கள் பிழை எதுவும் இல்லாமல், தேர்ந்தெடுப்போராக மட்டுமே கீழ் நிலையில் இருப் பதுமான நிலை ஏற்படுகின்றது. மக்கள் அரசாங்கத்தின் ஒரு முக்கிய அம்சம், பல்வேறு நலன்களுக்கும் கருத்துக்களுக்கும் பிரதிநிதித்துவம்

அளிப்பதே. மற்றொரு முக்கிய அம்சம் நபர் பிரதிநிதித்துவம் ஆகும். ஒரு நிலப்பரப்பின் அடிப்படையிலான தொகுதி முறையில் சிறிய குழுக்களைச் சேர்ந்தவர்களுக்கு நபர் பிரதிநிதித்துவம் கிடைக்காமல் போவதால் இந்த முறையின் மூலம் மக்கள் அரசாங்கத்தை உருவாக்க முடிவதில்லை.

11. சமூகப் பிரிவினைகள் சில சமூகங்களின் அரசியல் வாழ்க்கைக்குப் பாதகமான வகையில் எவ்வாறு செயல்படுகின்றன என்பது குறித்து இங்கு விவரித்திருப்பது சரியானது என்றால், விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை இதற்குப் பொருத்தமான தீர்வாக இருக்க முடியாது. பல்வேறு கருத்துக்களுக்கும் விகிதாசாரப்படி பிரதிநிதித்துவம் கொடுப்பதே அந்த முறையின் நோக்கம். வாக்காளர்கள் ஒரு வேட்பாளரின் கருத்துக்களை மட்டும் வைத்து, அவர் யார் என்பதைக் கருதாமல் வாக்களிப்பார்கள் என்ற அடிப்படையில் அது உருவாக்கப்பட்டது. இப்போது நாம் எடுத்துக் கொண்டுள்ள பிரச்சினைக்குத் தீர்வாக அமைவதற்கு இது பொருத்தமற்றது.

12. எனவே, இந்த நிலைமைக்குத் தீர்வு காண இரண்டு வழிகள் உள்ளன: பல உறுப்பினர் தொகுதிகளில், நபர் பிரதிநிதித்துவம் பெற முடியாத சிறுபான்மையினருக்கு இடங்கள் ஒதுக்கீடு செய்ய வேண்டும்; அல்லது வகுப்புவாரித் தொகுதிமுறையை ஏற்க வேண்டும். இரண்டிலும் நன்மைகள் உள்ளன. முகமதியர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிப்பதைப் பொறுத்தமட்டில் அவர்கள் பல உறுப்பினர் தொகுதிகளில் தங்களுக்கு இட ஒதுக்கீடு ஏற்பாட்டுடன் பொதுத் தேர்தலில் கலந்து கொள்வதே மிகவும் விரும்பத்தக்கது. இந்துக்களுக்கும் முகமதியர்களுக்குமிடையே உள்ள பிரிவினை ஏற்கனவே தீவிரமாக உள்ளது என்றும், வகுப்புவாரி பிரதிநிதித்துவம் அதை மேலும் தீவிரமாக்குவதாகும் என்றும் கூறலாம். ஆனால் வகுப்பு அடிப்படையிலான தேர்தல் முகமதியர்களைப் பொறுத்தமட்டில் முடிவாகிவிட்ட விஷயமாகத் தோன்றுகிறது. இதில் மாறுதல் செய்வது நல்லது தான் என்றாலும் எதுவும் இம்முடிவை மாற்றிவிடக் கூடும் என்று தோன்றவில்லை.

13. ஆனால் இங்கே கூறப்படும் வாதம் பொதுவாக இந்துக்களுக்கு, குறிப்பாக தீண்டாதாரான இந்துக்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிப்பது சம்பந்தமானது. இந்துக்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கும் பிரச்சினை பற்றிய விவாதத்துக்கு முன்னோடியாக ஒரு மேற்கோளை எடுத்துக்காட்டலாம். பல்வேறு இந்து வகுப்புக்களிடையே ஏற்பட்டுள்ள ஒரு புதிய விழிப்புணர்வை அது வெளிக்காட்டுகிறது. அது வருமாறு:

> ‘‘ஒரு சமூகம் தனக்குப் பிரதிநிதித்துவம் வேண்டும் என்று கோருவதற்கு அதற்கென்று தனியான நலன்களும் அவற்றுக்குப் பாதுகாப்புத் தேவை என்ற நிலையும் இருப்பதுதான் ஒரே அடிப்படையாக இருக்க முடியும். இந்தியாவில் இப்படிப்பட்ட நலன்கள் மூன்று வகையாக மட்டுமே உள்ளன: ஒன்று,

மதரீதியான துவேஷ உணர்வுகளின் அடிப்படையில் இவை எழுகின்றன. இந்தியாவில் இந்த உணர்வுகள் சற்று வலுவாகவே உள்ளன. இரண்டாவதாக, ஒரு சமூகம் கல்வியில் பிற்பட்ட நிலையில் இருப்பதன் அடிப்படையிலும், மூன்றாவதாக, ஒரு சமூகத்தின் மீது சுமத்தப்பட்டுள்ள சமூக-மத தடைகள் காரணமாகவும் இத்தகைய நலன்கள் உருவாகின்றன. இந்து சமூகங்களை மட்டும் இங்கே கவனிப்போம். இவற்றில் சில சமூகங்கள் மிகவும் பிற்பட்ட நிலையில் இருப்பதுடன் மாபெரும் சமூகக் கொடுமைக்கும் உள்ளாகியிருக்கின்றன. தீண்டாத வகுப்புகளின் குறைகளைத் தீர்க்கப் போராடுவதற்குச் சட்டமன்றத்தில் அவர்களைச் சார்ந்தவர்கள் இருக்க வேண்டும். பிராமணரல்லாதோர் என்ற பிரிவினரும், பிராமணப் புரோகிதக் குழுவின் சமூக, அறிவுத்துறை ஆதிக்கத்தின் கீழ் அடக்கப்பட்டுள்ளனர். எனவே பிராமணரல்லாதோரும் தங்களுக்குத் தனிப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்று கோருவது நியாயமாகும்.''

14. இதிலிருந்து இந்துக்களிடையே ஏற்பட்டுள்ள புதிய விழிப்புணர்வு தீண்டாதாரின் தனி உரிமைகளை ஒப்புக் கொள்வதையும் அதே சமயம் தீண்டத்தக்க இந்துக்கள் ஏக அணியைச் சார்ந்தவர் என்கிற நிலையை ஏற்கவில்லை என்பதையும் காணலாம். தீண்டத்தக்கவர்களைத் தத்தமது சொந்தத் தனி நலன்களைக் கொண்ட பிராமணர், பிராமணரல்லாதோர் எனப் பிரிக்க வேண்டுமென புதிய விழிப்புணர்வு வலியுறுத்துகிறது. இந்துக்களில் உள்ள மூன்று பிரிவுகளுக்கும் தனித்தனி தொகுதிகள் அல்லது கலப்புத் தொகுதிகளில் இட ஒதுக்கீடு வேண்டும் என்று வற்புறுத்தப்படுகிறது. தீண்டாதாரின் பிரதிநிதித்துவம் பற்றி விவாதிப்பதற்கு முன், பிராமணர்-பிராமணரல்லாதார் பிரச்சினை பற்றிக் கூற வேண்டியுள்ளது.

15. பிராமணரல்லாதார் ''கல்வியில் பிற்பட்ட நிலையில் இருக்கிறார்கள்'' என்பதை அவர்களுடைய தனிப்பட்ட பிரச்சினையாகக் கூற முடியாது. பிராமணர்களிலும் கல்வியில் பிற்பட்ட நிலையில் உள்ளவர்கள் இருக்கிறார்கள். இவர்களையும் சேர்த்து எல்லோருக்கும் பொதுவாக உள்ள பிரச்சினை அது. பிராமணர்களின் அறிவுத் துறை மற்றும் சமூக ஆதிக்கம் என்பது பிராமணரல்லாதாரை மட்டும் பாதிக்கும் விஷயம் அல்ல. அது அனைவரையும் பாதிக்கிறது; எனவே அது அனைவருக்கும் பொதுவான பிரச்சினை ஆகும். இனி, பிராமணரல்லாதாரின் தனிப்பட்ட நலனாகவும், பாதுகாப்புக்குத் தேவைப்படுவதாகவும் என்ன மிஞ்சியிருக்கிறது?

பிராமணரல்லாதவர்களுக்கு மட்டும் பொதுவான நலன் எதுவும் இருப்பதாக நிரூபிக்க முடியாததால் அவர்களுக்குத் தனித் தொகுதி வேண்டும் என்ற வாதம் அடிப்பட்டுப் போகிறது.

16. ஆனால் அவர்களுக்கு நபர் பிரதிநிதித்துவம் கிடைக்காமலிருக்கிறதா? புள்ளி விவரங்களை வைத்து இதைக் காணலாம்—

	பிரிவு 1		பிரிவு 2	
உள்ளாட்சி மன்ற வாக்காளர்களின் சாதி	பெல்காம், பீஜப்பூர், தார்வார் மாவட்டங்களில் உள்ளாட்சி மன்றங்களுக்கான வாக்காளர்களின் எண்ணிக்கை	இந்த மூன்று மாவட்டங்களின் மொத்த மக்கள் தொகை	ரத்னகிரி, கொலாபா மாவட்டங்களில் உள்ளாட்சி மன்றங்களுக்கான வாக்காளர் எண்ணிக்கை	இந்த இரண்டு மாவட்டங்களின் மொத்த மக்கட் தொகை
1	2	3	4	5
பிராமணர் ..	4,600	85,739	4,477	89,786
லிங்காயத்து ..	12,730	933,123	...	...
மராட்டியர் ..	1,074	255,526	3,667	4,46,077
மகார் ..	22	196,751	33	1,38,738
முகமதியர் ..	661	295,838	1,169	1,06,273
மற்றவர்கள் ..	4,241	10,65,821	2,837	10,16,930
	23,328	28,32,798	12,183	17,97,804

மேலே கொடுத்துள்ள புள்ளி விவரங்களை மொத்த மக்கள் தொகை ஆயிரம் என்று வைத்துக் கொண்டு கணக்கிட்டால் பின் வரும் விவரங்கள் கிடைக்கின்றன:

	பிரிவு 1			பிரிவு 2		
சாதிகளின் பெயர்கள்	ஒவ்வொரு ஆயிரம் மக்கள் தொகையிலும் ஒரு சாதியின் மக்கள் தொகையின் விகிதம்	ஒரு சாதியின் ஒவ்வொரு ஆயிரம் மக்கள் தொகையிலும் அந்தச் சாதி வாக்காளர்களின் விகிதம்	ஒவ்வொரு ஆயிரம் வாக்காளர்களில் ஒரு சாதி வாக்காளர்களின் விகிதம்	ஒவ்வொரு ஆயிரம் மக்கள் தொகையிலும் ஒரு சாதியின் மக்கள் தொகையின் விகிதம்	ஒரு சாதியின் ஒவ்வொரு ஆயிரம் மக்கள்தொகையிலும் அந்த் சாதி வாக்காளர்களின் விகிதம்	ஆயிரம் வாக்காளர்களில் ஒரு சாதி வாக்காளர்களின் விகிதம்
1	2	3	4	5	6	7
பிராமணர் ..	30.2	53.7	197.2	50.8	49.8	367.4
லிங்காயத்து ..	329.4	13.6	545.7	...	...	...
மராட்டியர் ..	90.2	4.2	46.0	248.8	8.2	300.9
மகார் ..	69.5	0.1	0.9	74.5	0.2	2.7
முகமதியர் ..	104.4	2.2	28.3	59.2	10.9	95.9
மற்றவர்கள் ..	376.2	3.9	181.3	562.2	2.8	232.8

இவ்வாறு கணக்கிட்டுப் பார்க்கும்போது நமக்குக் கிடைக்கும் முடிவுகள் மிக முக்கியமானவை.

(1) அனைவருக்கும் ஒரே மாதிரியான வாக்குரிமை இருக்கும் போது, பிராமணர்கள் எண்ணிக்கையில் சிறுபான்மையாக

இருந்தாலும், மொத்த வாக்காளர்களில் அவர்கள் பிரிவு 2 இல் பெரும்பான்மை ஆகி விடுகிறார்கள்.

(2) ஒரு மாதிரியான வாக்குரிமை காரணமாக பிராமண ரல்லாத லிங்காயத், மராட்டியர் போன்ற வகுப்பினர் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றபோதிலும் அவர் களின் மக்கள் தொகைக்கும் அவர்களின் வாக்காளர் தொகைக்கும் உள்ள விகிதம் பிராமணர்களுக்கு இதே விதத்தில் உள்ள விகிதத்துடன் ஒப்பிடும்போது மிகக் குறைவாக இருக்கிறது.

17. பிராமணர்களில் வாக்காளர்களின் விகிதம் மிக அதிக மாக உள்ளது. அவர்களிடம் உள்ள நம்பிக்கையோ அல்லது அவர் களின் எண்ணிக்கையோ இதை நியாயப்படுத்துவதாக இல்லை. லிங்காயத்துகள் தங்களுடைய வாக்காளர்களின் விகிதம் குறை வாக உள்ளது என்று நியாயமாகக் குறை கூற முடியும். ஆயினும் அவர்களுக்கு நபர் பிரதிநிதித்துவம் கிடைத்து விடும். மராட்டியர் கள், எண்ணிக்கையில் பிராமணர்களைவிட அதிகமாக இருந் தாலும் வாக்காளர் பட்டியலில் அவர்களின் விகிதம் மிகக் குறை வாக உள்ளது. எனவே அவர்களுக்கு நபர் பிரதிநிதித்துவம் கிடைக்காமல் போகக்கூடும்.

இந்த வாதத்தின்படி மராட்டியர்களுக்குத் தனி ஏற்பாடு வேண் டும் என்ற கோரிக்கைக்கு ஆதாரம் இருக்கிறது, அதை ஏற்க வேண்டும்.

18. இந்தத் தனி ஏற்பாடு எந்த வடிவில் அமைய வேண்டும் என்ற கேள்வி எழுகிறது. என்னுடைய கருத்து: இந்த ஏற்பாடு அவர்களுக்கெனத் தனியான தேர்தல் தொகுதியாகவோ இட ஒதுக் கீடாகவோ இருப்பதைவிட, அவர்கள் வாக்குரிமை பெறுவதற் கான தகுதித் தேவைகளைக் குறைத்து நிர்ணயிக்க வேண்டும். பிராமணரல்லாதார் வாக்குரிமை பெறுவதற்கான தகுதித் தேவை கள் பிராமணர்களுக்கு உள்ளவற்றைவிடக் குறைவாக இருக்க வேண்டும். இந்த ஏற்பாட்டின் மூலம் வாக்காளர் பட்டியலில் மராட்டியர் அதிக இடம் பெற முடியும். அதிகச் சாதகமான நிலை யில் உள்ள பிராமணர்களுக்கும் இவர்களுக்கும் சமநிலை ஏற் படும். பிராமணர்கள் அரசியலில் இதுவரை மிகப் பெரும் அளவில் பங்கு பெற்று வந்திருக்கிறார்கள். இந்த நிலையை மாற்று வது எல்லோருடைய நலனுக்கும் உகந்தது. நாட்டின் சமூக வாழ்க்கையில் அவர்களின் செல்வாக்கு தீய விளைவுகளை ஏற் படுத்தியுள்ளது. இத்தகைய பெருங்கேடான செல்வாக்கை அரசிய லில் குறைந்தபட்ச அளவில் வைப்பது எல்லோருக்கும் நல்லது. பிராமணர்கள் மற்றவர்களைத் தம்மிடமிருந்து விலக்கி வைப்பதில் எல்லோரிலும் மிஞ்சியவர்களாக இருப்பதால் அவர்கள் மிகப் பெரிய சமூக விரோதிகளாயிருக்கிறார்கள்.

19. அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் பற்றிய அறிக்கையை வரைந்தவர்கள் கூட ஒரு அளவுக்குட்பட்ட அல்லது ஒரே மாதிரியான வாக்குரிமையை ஆதரிக்கவில்லை. அவர்கள் கூறுகிறார்கள்: ''வாக்குரிமையை முடிந்த அளவுக்கு விரிவுபடுத்துவது விரும்பத்தக்கது. அதே சமயம் அதை ஒரு அளவுக்குள் வைப்பது பற்றித் தீர்மானிக்கும்போது வாக்குரிமைக்குத் தகுதி பெறுவதற்கு ஒருவருக்கு எவ்வளவு கல்வி அல்லது வருமானம் இருக்க வேண்டும் என்பதைப் பார்க்காமல் நடைமுறையில் உள்ள கஷ்டங்களைப் பார்க்க வேண்டும். மக்கள் தொகை எல்லாப் பகுதிகளிலும் ஒரே சீராகப் பரவியிருக்கவில்லை; மக்களிடையே செல்வ நிலைகள் சமமாக இல்லை. எனவே வாக்குரிமை பெறுவதற்கான தகுதிகளைத் தீர்மானிக்கும்போது மாகாணங்களுக்கிடையில் மட்டுமின்றி ஒரே மாகாணத்தின் வெவ்வேறு பகுதிகளுக்கும் இடையிலும் வேறுபாடு காட்டி வெவ்வேறு விதமாக நிர்ணயம் செய்வது அவசியமாகலாம்'' (பக்கம் 147). இதற்கும் மேலே நான் சொல்ல விரும்புவது ஒரே மாகாணத்தின் பல்வேறு பிரிவு மக்களுக்கும் வாக்குரிமைத் தகுதிகளை வெவ்வேறாக நிர்ணயிக்க வேண்டும் என்பதே. இத்தகைய வேறுபாடு இல்லையென்றால் செல்வந்தர்களையும் கல்வி பெற்றவர்களையும் கொண்ட சில சிறிய கூட்டத்தாருக்கு, ஏழைகளான கல்வியறிவற்ற மக்களைக் கொண்ட ஒரு பெரிய கூட்டத்தாரை விட அதிகமான வாக்குகள் கிடைத்துவிடும். இந்தச் சிறிய கூட்டத்தாருக்கும் பெரிய கூட்டத்தாருக்கும் ஒரே மாதிரியாக வாக்குரிமை அளிப்பதைக் கைவிட வேண்டும். இதன் ஒரு முக்கிய விளைவாக, இப்போது பிராமணரல்லாத சில வகுப்பினர் கோரி வரும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அல்லது இட ஒதுக்கீடு அளிப்பதைத் தவிர்த்துவிட முடியும்.

20. தீண்டாதார் வழக்கமாக இரக்கத்துக்குரியவர்களாகக் கருதப்படுகிறார்கள். ஆயினும் எந்த ஒரு அரசியல் திட்டத்திலும் அவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை பாதுகாக்கப்பட வேண்டிய நலன்கள் என்று ஏதும் இல்லை என்று இதற்குக் காரணம் கூறப்படுகிறது. ஆனால் அவர்களுக்குத்தான் மிக அதிகமாக நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டியுள்ளது. இதனால் அவர்களுக்கு பெரும் சொத்துக்கள் இருப்பதாகவோ, அவை பறிமுதலாகி விடாமல் பாதுகாக்க வேண்டியுள்ளதாகவோ பொருள் அல்ல. அவர்கள் தங்களையே பறிகொடுத்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள சமூக, மதக் கொடுமைகள் அவர்களின் மனிதத் தன்மையையே அழித்துவிட்டன. எனவே இடருக்குள்ளாகியுள்ள அவர்களது நலன்கள் மனித குலத்தின் நலன்களாகும். இவ்வளவு மாபெரும் முக்கியத்துவம் உள்ள நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டியிருக்கும் போது சொத்து நலன் என்பது பொருளற்றதாகி விடுகிறது.

21. அடிமை என்பதற்கு பிளேட்டோ ஒரு பொருள் வரையறை கூறுகிறார். தன்னுடைய நடவடிக்கைகள் என்ன நோக்கத்துக்குப் பயன்படுமாறு அமைய வேண்டும் என்பதை இன்னொருவர் தீர்மானிக்க, அதை ஏற்றுச் செயல்படுபவன் அடிமை என்று அவர் கூறுகிறார். இதன்படி பார்த்தால் தீண்டாதார் உண்மையில் அடிமைகளே. அவர்கள் தங்களுடைய தாழ்ந்த நிலை பற்றி ஒரு போதும் புகார் கூறாத அளவுக்கு சமூகச் சூழ்நிலை அவர்களைப் பழக்கியிருக்கிறது. மனிதனுக்கு மனிதன் தர வேண்டிய சாதாரண மரியாதை கொடுத்து மற்றவர்கள் தங்களை நடத்துமாறு நிர்ப்பந்தம் செய்வது பற்றியோ அதன் மூலம் தங்கள் நிலையை உயர்த்திக் கொள்ள முயல்வது பற்றியோ அவர்கள் கனவுகூடக் காண்பதில்லை. இத்தகைய அவலநிலையில் வாழவே தாங்கள் பிறந்திருக்கிறோம் என்ற எண்ணம் அவர்களின் மனத்தில் ஆழ்ந்து பதிந்து போயிருக்கிறது; அதனால் தங்கள் விதி மாற்ற முடியாததல்ல என்ற எண்ணம் அவர்களுக்கு ஒருபோதும் தோன்றுவதில்லை. எல்லா மனிதர்களும் ஒரே மண்ணால் படைக்கப்பட்டவர்கள் என்றோ, தாங்கள் இப்போது நடத்தப்படுவதைவிட நல்ல முறையில் நடத்தப்பட வேண்டும் என்று வற்புறுத்தத் தங்களுக்கு உரிமை உள்ளது என்றோ அவர்கள் எந்தக் காரணத்தாலும் நினைக்கவே மாட்டார்கள்.

22. அவர்கள் நடத்தப்படும் விதத்தை அப்படியே முழுமையாக விவரிப்பது இயலாது. தீண்டாதார் என்ற சொல்லே அவர்களின் அவல நிலையையும் அவர்கள் படும் துன்பங்களையும் சுருக்கமாக விளக்கிவிடுகிறது. தீண்டாமை அவர்களின் ஆளுமை வளர்ச்சியைத் தடுத்து நிறுத்தியிருப்பதுடன், அவர்களின் பொருளாதார நல்வாழ்க்கைக்கும் பெரிய தடையாக உள்ளது. சில சமுதாய (Civil) உரிமைகள் அவர்களுக்குக் கிடைக்க விடாமல் அது தடுத்திருக்கிறது. உதாரணமாக, கொங்கணத்தில் (Konkan) அவர்கள் பொதுச்சாலையைப் பயன்படுத்தக் கூடாது என்று தடை செய்யப்பட்டுள்ளது. மேல் சாதியைச் சேர்ந்த ஒருவர் தம்மைக் கடந்து செல்ல நேர்ந்தால் தீண்டாதார் ஒதுங்கி நின்று தமது நிழல் கூட அவர் மீது விழாத தூரத்தில் நின்று கொள்ள வேண்டும். தீண்டாதார் ஒரு குடிமகன் கூட அல்ல. குடியுரிமை என்பது பல உரிமைகளின் தொகுப்பு, அவை, (1) தனி மனித சுதந்திரம், (2) தனி நபர் என்ற முறையில் பாதுகாப்பு, (3) சொந்தமாகச் சொத்து வைத்துக் கொள்ளும் உரிமை, (4) சட்டத்தின்முன் சமத்துவம், (5) மனச்சாட்சிச் சுதந்திரம், (6) கருத்து மற்றும் பேச்சு சுதந்திரம், (7) கூட்டம் கூடும் உரிமை, (8) நாட்டின் அரசாங்கத்தில் பிரதிநிதித்துவ உரிமை (9) அரசில் பதவி வகிக்கும் உரிமை ஆகியவை இந்த உரிமைத் தொகுப்பில் உள்ளன. பிரிட்டிஷ் அரசாங்கம் படிப்படியாக இந்த உரிமைகளைத் தனது இந்தியப் பிரஜைகளுக்குக் கொள்கை அளவிலாவது வழங்கியிருக்கிறது என்று கூறலாம். குடியுரிமைகளில் அடங்கிய உரிமைகளில்

பிரதிநிதித்துவ உரிமையும் அரசில் பதவி வகிக்கும் உரிமையும் மற்றவற்றைக் காட்டிலும் முக்கியமான இரண்டு உரிமைகளா கும். ஆனால் தீண்டாமை மேற்கொள்ளப்படுவதால் இந்த உரிமை கள் தீண்டாதார்களின் கைக்கு எட்டாதவையாக உள்ளன. சில இடங்களில் அவர்களுக்குத் தனிமனித சுதந்திரம், தனி நபர் பாது காப்பு போன்ற குறைந்தபட்ச உரிமைகள் கூட இல்லை. சட்டத் தின் முன் சமம் என்பதும் அவர்களுக்கு எப்போதும் நிச்சய மாக கிடைக்கும் என்ற உறுதியும் இல்லை. இவையெல்லாம் தீண்டாதாருக்குப் பாதுகாக்கப்பட வேண்டிய நலன்களாகும். இந்த நலன்களுக்குப் பிரதிநிதியாகத் தீண்டாதான் மட்டுமே இருக்க முடியும் என்பதையும் எளிதில் உணரலாம். இவை இந்த மக்களின் தனிப்பட்ட நலன்களாகும். வேறு யாரும் இவற்றை உண்மையாக எடுத்துக்கூற முடியாது. சுதந்திர வர்த்தக நலன் களை ஒரு பிராமணர், முகமதியர் அல்லது மராட்டியர் எடுத்துக் கூற முடியும். ஆனால் இவர்களில் யாரும் தீண்டாதாரின் நலன்களுக்காகப் பேச முடியாது. ஏனென்றால் இவர்கள் தீண்டா தார் அல்ல. தீண்டாமை என்பது தனிப்பட்ட நலன்களின் தொகுப்பாகும். தீண்டாதார் மட்டுமே அதன் சார்பில் பேச முடியும். எனவே தீண்டாதாரின் நலன்களைப் பாதுகாக்க அவர் களது மனக்குறைகளை எடுத்துரைக்கக்கூடிய தீண்டாதாரையே நாம் கண்டுபிடிக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. இரண் டாவதாக, இவர்களின் குறைகளைத் தீர்ப்பதற்கான நிவாரணங் களை வலியுறுத்திப் பெறக்கூடிய அளவுக்கு ஒரு சக்தியாகச் செயல்படுவதற்கு இவர்களது பிரதிநிதிகளின் எண்ணிக்கை போதிய அளவில் இருக்க வேண்டும்.

23. இப்போதுள்ள நிலப்பகுதி அடிப்படையிலான பொது வான தேர்தல் தொகுதி முறையில் தீண்டாதார், சட்டமன்றத் துக்குப் போதிய எண்ணிக்கையில் தேர்ந்தெடுக்கப்பட முடியுமா? மேலே கொடுத்துள்ள புள்ளி விவரங்களைப் பார்த்தால் தீண்டா தார் (புள்ளி விவர அட்டவணையில் குறிப்பிடப்படும் மகார்கள்) ஆயிரம் மக்கள் தொகையில் 69.4 என்ற எண்ணிக்கையில் இருந்த போதிலும், அவர்களுள் வாக்காளராக ஒருவர்கூட இல்லை. இத்தகைய சூழ்நிலையில் பொதுத் தொகுதி தேர்தலில், இவர்கள் தங்களைச் சேர்ந்த ஒருவரைத் தேர்ந்தெடுப்பது இயலாது. அதே சமயம் தீண்டாதாரான வேட்பாளருக்குத் தீண்டத்தக்கவர் களான இந்துக்கள் வாக்களிப்பார்கள் என்று இவர்கள் நம்பு வதற்கும் இடமில்லை. சாதிகளின்படித்தரவரிசைகளால் தீண்டா தாரை இரண்டு பக்கமும் வெட்டக் கூடிய ஆயுதம் போன்ற ஓர் அடிப்படை உருவாகிறது. கீழ்ப்படிகளில் உள்ளவர்களின் மனத் தில் மேல் படிகளில் உள்ளவர்களுக்கு ஆதரவான எண்ணத்தை யும், அதே சமயம் உயர்ப்படிகளில் உள்ளவர்களின் மனத்தில் கீழ்ப்படிகளில் உள்ளவர்களைப் பற்றி உதாசீனமான எண்ணத் தையும் அது ஏற்படுத்துகிறது. இவ்வாறாக மேல்படிகளுக்கு

ஆதரவும் கீழ்ப்படிகளுக்கு வெறுப்பும் உதாசீனமும் காட்டப்படும் நிலையினால் தீண்டாதார் இருவழிகளிலும் இழப்புக்கு உள்ளாகிறார்கள். தீண்டத்தக்கவர்கள் தீண்டாதாருக்கு ஒரு வாக்குகூட அளிக்காமல், அதே சமயம் ஏற்கனவே குறைவாக உள்ள தீண்டாதாரின் வாக்குகளிலிருந்தும் பெரும் அளவு தங்களுக்குச் சாதகமாகப் பெற்றுக் கொள்கிறார்கள்.

24. இப்படிப்பட்ட நிலைமையில், பாதுகாப்புத் தேவையான மிகப் பெரிய நலன்களைக் கொண்ட தீண்டாதார், நிலப்பகுதி அடிப்படையிலான பொதுத் தொகுதியில் மிகப் பெரிய பாதிப்புக்கு உள்ளாவார்கள். எனவே அவர்களுக்குப் போதிய அளவில் பிரதிநிதித்துவம் கிடைக்கச் செய்வதற்குச் சிறப்பு ஏற்பாடு செய்வது அவசியம். இதற்கான ஒரு திட்டத்தைக் கூறுவதற்கு முன், பம்பாய் மாகாணத்தில் தீண்டாதாரின் மக்கள் தொகை எவ்வளவு என்பதைப் பார்க்க வேண்டும். பம்பாய் மாகாணத்தின் 1911-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ''தீட்டு ஏற்படுத்தும் சாதிகள்'' (Castes which cause pollution) பற்றிப் பின்வரும் புள்ளி விவரங்களைத் தருகிறது.

பங்கி	 93,691
சமார், மோச்சி, மச்சிகார்	 3,06,478
ஸோச்சி, மகார், ஹோலியா, தேட்	 14,70,992
மாங், மடிக்	 2,74,037
மொத்தம்	 21,45,193
இதனுடன் சேர்க்க வேண்டிய 'தோர்' சாதியினர் எண்ணிக்கை	 13,506
மொத்தம் தீண்டாதார்	 21,58,699

தீண்டாதாரின் மாவட்டவாரியான புள்ளிவிவரம் கீழே தரப்படுகிறது:

மாவட்டம்	மொத்த மக்கள் தொகை (1911)	மொத்த இந்து மக்கள் தொகை	மொத்த தீண்டா தாரின் மக்கள் தொகை	மொத்த மக்கள் தொகையில் தீண்டாதார் சதவீதம்	இந்து மக்கள் தொகையில் தீண்டாதார் சதவீதம்
1	2	3	4	5	6
பிரிட்டிஷ் மாவட்டங்கள் (ஏடன் நீங்கலாக)	1,96,28,477	1,49,20,267	16,27,980	8	10.9
1. பம்பாய் நகரம்	9,79,445	6,64,042	89,052	9	11.6
வடக்குப் பகுதி	36,85,383	31,17,263	2,45,050	6.6	7.8
2. அகமதாபாத்	8,27,809	6,93,155	78,869	10	11.4
3. ப்ரோச்	3,06,717	1,92,935	22,390	7	11.6
4. கைரா	6,91,744	5,98,164	41,497	5.9	6.9
5. பஞ்ச் மஹல்ஸ்	3,32,695	2,74,339	14,410	4	5
6. சூரத்	6,54,109	5,71,745	36,509	5.6	6
7. தானா	8,82,309	7,86,925	50,010	5.6	6
மத்திய பகுதி	63,87,064	59,98,828	7,73,184	12	13
8. அகமத்நகர்	9,45,305	8,55,676	1,16,929	12	13.6
9. காந்தேஷ் (கிழக்கு)	10,34,886	9,02,131	1,12,929	10.8	12
10. காந்தேஷ் (மேற்கு)	5,80,723	4,74,200	36,809	6	7.7
11. நாசிக்	9,05,030	8,43,705	97,740	10.7	11
12. புனா	10,71,512	9,91,725	1,13,118	12.4	13.3
13. சதாரா	10,81,278	10,28,176	1,44,688	13	14
14. ஷோலாப்பூர்	7,68,330	7,03,215	1,29,063	16.7	18
தெற்குப் பகுதி	50,61,150	45,02,708	3,85,470	7.6	8.5
15. பெல்காம்	9,43,820	8,17,797	83,199	8.8	10.1
16. பீஜப்பூர்	8,62,973	7,57,542	80,501	9	10.6
17. தார்வார்	10,26,005	8,72,885	52,540	5	6
18. கனரா	4,30,548	3,83,624	10,767	2.4	2.9
19. கொலாபா	5,94,156	5,60,266	51,108	8.5	9.1
20. ரத்னகிரி	12,03,638	11,10,594	1,07,354	8.9	9.7
சிந்து (பிரிட்டிஷ் மாவட்டங்கள்)	35,13,435	8,37,426	1,35,224	3.8	16

25. பம்பாய் மாகாணத்தின் (பிரிட்டிஷ் மாவட்டங்கள் மட்டும்) மொத்த மக்கள் தொகை 1911 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி 1,96,26,477. இதில் தீண்டா தார் மக்கள் தொகை 16,27,980, அதாவது மொத்தத்தில் எட்டு சதவீதம். இப்போதைக்குப் பம்பாய் சட்டசபையில் தேர்ந்தெடுக்கப் பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை நூறு என்று வைத்துக் கொண்டால், சபையில் தீண்டாதாரின் பிரதிநிதிகள் எட்டுப் பேர் இருக்க வேண்டும். ஒவ்வொரு 2,00,000 மக்கள்தொகைக்கும் ஒரு பிரதிநிதி என்ற விகிதத்தில் (2 கோடி மக்கள் தொகைக்கு 100 பிரதிநிதிகள் என்பது இதே விகிதம்தான்) பார்த்தால், தீண்டாதாரின் பிரதிநிதிகளாக எட்டுப் பேர் இருக்க வேண்டும். ஆயினும் பம்பாய் மாகாணத்தின் தீண்டாதார் மொத்தம் ஒன்பது

உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க அனுமதிக்கலாம். ஒரு உறுப்பினர் கூடுதலாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குக் காரணம் பின்னர் கூறப்படும்.

26. இவ்வாறு ஒன்பது உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க அனுமதிக்கும் போது, அவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டிய தொகுதிகள் பின்வருமாறு இருக்க வேண்டும்:

1. மாகாணத்தின் பல்வேறு மாவட்டங்களையும், பம்பாய் நகரமும் சிந்து மாகாணமும் நீங்கலாக, மொழி அடிப்படையில் பின்வருமாறு குழுக்களாகச் சேர்க்கப்பட வேண்டும்:

1. குஜராத்தி மொழி பேசும் மாவட்டங்கள்		2. மராட்டி மொழி பேசும் மாவட்டங்கள்		3. கன்னட மொழி பேசும் மாவட்டங்கள்	
1. அகமதாபாத்	78,969	1. தானா	50,010	1. தார்வார்	52,540
2. ப்ரோச்	22,390	2. கொலாபா	51,108	2. பிஜப்பூர்	80,503
3. கைரா	41,497	3. ரத்னகிரி	1,07,354	3. பெல்காம்	83,199
4. பஞ்ச் மஹல்	14,410	4. அகமத் நகர்	1,16,929	4. கனரா	10,758
5. சூரத்	36,509	5. காந்தேஷ் (மேற்கு)	36,809		
		6. காந்தேஷ் (கிழக்கு)	1,12,391		
		7. சதாரா	1,44,738		
		8. புனா	1,48,118		
		9. நாசிக்	96,740		
		10. ஷோலாப்பூர்	1,29,063		

27. தீண்டாதாரின் தொகுதிகளும், ஒவ்வொரு தொகுதியும் தேர்ந்தெடுக்க வேண்டிய பிரதிநிதிகளின் எண்ணிக்கையும் பின்வருமாறு இருக்க வேண்டும்:

மொழி	மாவட்டம்	ஒவ்வொரு மாவட்டத்தின் மக்கள் தொகை	ஒவ்வொரு தொகுதியின் மக்கள் தொகை	தொகுதியின் எண்	அந்தத் தொகுதி தேர்ந்தெடுக்க வேண்டிய பிரதி நிதிகளின் எண் ணிக்கை
1	2	3	4	5	6
	பம்பாய் நகரம்	89,052	89,052	I	1
1. குஜராத்தி	1. அகமதாபாத்	78,869	1,93,675	II	1
	2. ப்ரோச்	22,390			
	3. கைரா	41,497			
	4. பஞ்ச் மஹல்	14,410			
	5. சூரத்	36,509			

1	2	3	4	5	6
	1. தானா	50,010			
	2. கொலாபா	51,108	2,08,472	III	1
	3. ரத்னகிரி	1,07,354			
	4. அகமத்நகர்	1,16,929			
2. மராத்தி	5. காந்தேஷ் கிழக்கு	1,12,391	3,63,869	IV	2
	6. காந்தேஷ் மேற்கு	36,809			
	7. நாசிக்	97,740			
	8. சதாரா	1,44,688			
	9. புனா	1,33,118	4,06,869	V	2
	10. ஷோலாப்பூர்	1,29,063			
	1. பெல்காம்	83,199			
	2. பிஜப்பூர்	80,501			
3. கன்னடம்	3. தார்வார்	52,540	2,27,007	VI	
	4. கனரா	10,767			
	சிந்து	1,35,224	1,35,224	VII	1

மாகாணத்தின் தீண்டாதோர் தேர்ந்தெடுக்க வேண்டிய பிரதிநிதிகளின் மொத்த எண்ணிக்கை

தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த ஒன்பது உறுப்பினர்கள் ஒரு தொகுதியாக அமைந்து தம்மில் ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அவர் மத்திய சட்டசபையில் தீண்டாதாரின் பிரதிநிதியாயிருப்பார்.

28. தீண்டாதோர் மக்கட் தொகைக்கு எட்டுப் பிரதிநிதிகள் அதிகம் அல்ல என்றாலும் அவர்களுடைய வாக்காளர்களின் எண்ணிக்கையைப் பார்க்கும்போது இது அதிகம் என்று ஆட்சேபம் எழக்கூடும். தீண்டாதார் ஏழைமக்கள் என்பதும், ஒரே மாதிரியான வாக்குரிமைத் தகுதியின்படி ஆயிரம் மக்கள் தொகையில் அவர்களுடைய வாக்காளர்களாக இருப்பவர்களின் விகிதம் மிகவும் குறைவு என்பதும் நன்கு தெரிந்த உண்மைகள். ஆனால் இந்த மக்கள் மிக மோசமான நிலைமையில் இருக்கிறார்கள் என்பதை ஒப்புக் கொண்டால், அவர்களின் பிரதிநிதிகளின் எண்ணிக்கையைக் குறைக்க முயலக் கூடாது. அவர்களின் வாக்காளர்கள் எண்ணிக்கையை உயர்த்துவதை நோக்கமாகக் கொள்ள வேண்டும். இதற்காக தீண்டாத மக்களைப் பொறுத்தமட்டில் வாக்குரிமை பெறுவதற்கான தகுதித் தேவைகளைக் குறைத்து நிர்ணயிக்க வேண்டும்.

29. வாக்குரிமைத் தகுதி என்னவாக இருக்க வேண்டும் என்பது ஒரு முக்கியமான விஷயம். வாக்குரிமையை அறிவுள்ள முறையில் பயன்படுத்துவார்கள் என்று எதிர்பார்க்கக் கூடியவர்களுக்கு மட்டுமே அதை அளிக்க வேண்டுமென்று ஒரு வாதம் கூறப்படுகிறது. இதற்கெதிரான மற்றொரு கருத்தைப் பேராசிரியர் எல். டி. ஹாப்ஹவுஸின் (L. T. Hobhouse) சொற்களில் பின்

வருமாறு கூறலாம்: ''ஜனநாயகத்தின் வெற்றி, வாக்காளர்கள் தங்களுக்கு அளிக்கப்படும் வாய்ப்புக்களை எப்படிப் பயன்படுத்து கிறார்கள் என்பதைப் பொறுத்தது என்பது உண்மையே. ஆயினும் வாக்காளர்கள் பயன்படுத்துவதற்கு முதலில் வாய்ப்புக்களைக் கொடுக்க வேண்டும். மக்கள் அரசாங்கம் என்ற நடைமுறையே ஒரு கல்விதான் ... வாக்குரிமை அளிப்பதே இதில் ஆர்வத்தைத் தோற்றுவிப்பதற்குத் தூண்டுகோலாக அமையலாம். குடிமகனுக்கு கூச்சல்போடுபவரிடமிருந்தும் தம் செல்வாக்கினால் காரியம் சாதிக்கும் தந்திரக்காரர்களிடமிருந்தும் அமைதியான விடுதலை கொடுப்பது வாக்குரிமையால் மட்டுமே முடியும். இப்போது செய லற்றுக் காணப்படுவதை மட்டும் காரணமாகக் காட்டி பொறுப் புள்ள அரசாங்கத்தை அளிக்க மறுப்பதோ வாக்குரிமையை மட்டுப்படுத்துவதோ கூடாது.'' வாக்குரிமையே ஒரு கல்விதான் என்பதையும் பல்வேறு குழுக்களிடையே செல்வமும் கல்வியும் சம மற்ற முறையில் அமைந்துள்ளன என்பதையும், இந்தக் குழுக்கள் ஒரே மாதிரியான உணர்வுகள் கொண்டவை அல்ல என்பதையும் கருத்தில் கொண்டு, அரசியலமைப்புச் சீர்திருத்த அறிக்கையை வரைந்தவர்கள் வாக்குரிமைத் தகுதி எல்லோருக்கும் ஒரே மாதிரி இருக்க வேண்டும் என்ற வாதம் ஏற்கத்தக்கதல்ல என்று கூறியிருக் கிறார்கள்.

30. தீண்டாதார் விஷயத்தில் அவர்களுடைய பிரதிநிதிகளைக் குறைப்பதற்குக் காரணங்கள் இல்லை. இதேசமயம் அவர்களின் வாக்காளர்களை அதிகமாக்க வேண்டும் என்பதற்குப் பல கார ணங்கள் உள்ளன. ஒரு குறிப்பிட்ட வாக்குரிமைத் தகுதியின்படி அவர்கள் பலமான வாக்காளர் குழுவாக உருவாக முடியவில்லை என்றால், அது அவர்களின் குற்றம் அல்ல. அவர்கள் மீது சுமத்தப் பட்டிருக்கும் தீண்டாமையை அவர்களுடைய தார்மிக, உலகியல் முன்னேற்றத்துக்குத் தடையாக இருக்கிறது. செல்வம் சேர்ப்பதற்கு முக்கிய வழிகளாக இருப்பவை வர்த்தகம், தொழில், சேவைப் பணிகள் ஆகியவை. தீண்டாதார் தீண்டாமை காரணமாக அவை எதிலுமே ஈடுபட முடியாது. தீண்டாதாரான வர்த்தகரிடமிருந்து எந்த இந்துவும் பொருள்கள் வாங்க மாட்டார்கள். தீண்டாதார் நல்ல வருமானம் கிடைக்கும் உத்தியோகங்கள் எதிலும் சேர முடியாது. கிழக்கிந்தியக் கம்பெனியின் காலம் முதல் ராணுவ சேவை தீண்டாதாரின் ஏகபோகமாக இருந்தது. அவர்கள் மிகப் பெரும் எண்ணிக்கையில் ராணுவத்தில் சேர்ந்திருந்தார்கள். அதனால் ட்வீடில்டேல் கோமான் (Marquis Tweedledale) 1859-ம் ஆண்டின் இந்திய ராணுவக் கமிஷனிடம் சமர்ப்பித்த குறிப்பில் பின்வருமாறு குறிப்பிட்டார்: ''இந்தியா தாழ்ந்த சாதி மனிதர் களின் உதவியுடன் வென்று பிடிக்கப்பட்டது என்பதை ஒரு போதும் மறந்து விடக்கூடாது.'' ஆனால் சிப்பாய்க் கலகத்துக்குப் பின் பிரிட்டிஷார் மராட்டியர்களை ராணுவத்தில் சேர்த்துக் கொள்ள முடிந்தது. அதைத் தொடர்ந்து பம்பாய் ராணுவத்தின்

முக்கிய பலமாக இருந்துவந்த தாழ்ந்த ஜாதியினரின் நிலை நலிவுற்றது. இவர்களைவிட மராட்டியர்கள் சிறந்த போர் வீரர்களாயிருந்தார்கள் என்பதால் இவ்வாறு ஏற்படவில்லை. மதரீதியான அடிப்படையில் அவர்கள் மனத்தில் இருந்த வெறுப்புணர்வு தாழ்ந்த சாதி அதிகாரிகளின் கீழ் அவர்கள் பணிபுரிவதற்குத் தடையாக இருந்ததே அதற்குக் கரணம். இந்த விரோத உணர்வு மிக வலுவாக இருந்ததால் சாதி எதுவும் இல்லாத பிரிட்டிஷார் கூட தாழ்ந்த சாதியினரை ராணுவத்தில் சேர்ப்பதை நிறுத்த வேண்டியதாயிற்று. இதைப்போலவே காவல்துறை அணியிலும் தீண்டாதவருக்கு வாய்ப்பு மறுக்கப்படுகிறது. அரசு அலுவலகங்கள் மிகப் பலவற்றில் தீண்டாதார் ஒருவர் இடம் பெறுவது இயலாத காரியம். பஞ்சாலைகளிலும்கூட இவர்கள் ஓரளவு தள்ளியே வைக்கப்படுகிறார்கள். இவர்கள் தொழில் முறையில் நெசவாளர்களாக இருந்தபோதிலும்கூட இந்த ஆலைகளின் நெசவுப் பிரிவில் இவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. பம்பாய் நகராட்சியின் பள்ளி முறையிலிருந்து ஓர் உதாரணம் எடுத்துக் காட்டலாம். எல்லாவகையான மக்களும் வசிக்கும் இந்த நகரத்தை ஆளும் மாநகராட்சி இந்தியாவில் உள்ள வேறெந்த மாநகராட்சியையும்விட அதிக சுதந்திரத்துடன் செயல்படுகிறது. இதன் கீழ் உள்ள பள்ளிக்கூடங்கள் இரண்டு வகையாக உள்ளன: ஒன்று, தீண்டத்தக்கவர்களின் குழந்தைகளுக்கானது; மற்றது தீண்டாதோரின் குழந்தைகளுக்கானது. இதுவேகூட கவனிக்கத்தக்க ஒரு விஷயமாகும். ஆனால் இதைவிடவும் கவனிக்கத்தக்கது இருக்கிறது. பள்ளிக்கூடங்களை இரண்டு வகையாகப் பிரித்தது போலவே பள்ளி ஆசிரியர்களும் தீண்டத்தக்கவர்கள், தீண்டாதோர் என்று பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். இதில் நெஞ்சை வருத்தும் விநோதம் என்னவென்றால், தீண்டாதாரான ஆசிரியர் பிரிவில் மேல்நிலைப் பணியிடம் காலியாக இருந்தால் தீண்டத்தக்க ஆசிரியர் ஒருவர் அந்த இடத்தில் திணிக்கப்படலாம். பயிற்சி பெற்ற தீண்டாதாரான ஆசிரியர்கள் மிகக் குறைவாகவே இருப்பதால் இத்தகைய காலியிடங்கள் ஏற்படவே செய்யும். ஆனால் தீண்டத்தக்க ஆசிரியர் பிரிவில் காலியாகும் மேல்நிலைப் பணியிடத்துக்குத் தீண்டாதோரைத் திணிக்க முடியாது. தீண்டாதார் பிரிவில் காலியிடம் ஏற்படும்வரை அவர் காத்திருக்க வேண்டும்!!! இந்து சமூக வாழ்க்கையின் நீதிமுறை இவ்வாறு இருக்கிறது! இதன்படி தீண்டாதார் ஏழைகளாக இருந்தால் அவர்களுடைய வாக்காளர் பட்டியல் சிறியதாக இருக்கும் காரணத்தால் அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்க சவுத்பரோ குழு மறுத்து விடாது என்று நம்புவோம். தீண்டாதோரின் வறுமைக்குக் காரணமாக உள்ள அவர்களுடைய இழிவான நிலைக்கு முடிவுகட்ட உதவும் வகையில் போதிய பிரதிநிதித்துவம் அளிக்க வழிகாணும் என்று நம்புவோம். இப்போது செல்வம் சேர்க்கும் வழிகள் எல்லாம் அவர்களுக்கு அடைக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் அவர்கள்

வாக்குரிமை பெறுவதற்கு உயர்ந்த அளவில் சொத்துரிமையைத் தகுதியாக நிர்ணயிப்பது விவேகமாகாது. சொத்து சேர்க்கும் வாய்ப்புகளைக் கிடைக்காமல் செய்துவிட்டு, வாக்குரிமைக்குச் சொத்துத் தகுதி இருக்க வேண்டும் என்று கூறுவது அடித்துக் காயப்படுத்தி விட்டு அவமானமும் படுத்துவதைப் போலாகும். தீண்டாதோர் போதிய அளவில் வாக்காளர் பலத்தைப் பெறுவதற்கு வாக்குரிமைக்கு எந்தவிதமான தகுதியை எந்த அளவில் நிர்ணயம் செய்ய வேண்டும்? இதைக் குழுவே தீர்மானிக்கட்டும் என்று விட்டு விடுகிறேன். தீண்டாதோர் இயன்றமட்டும் அதிக அளவில் அரசியல் வாழ்க்கையில் கலந்து கொள்ளச் செய்யும் வகையில் தகுதித் தேவையை மிகக் குறைவாக நிர்ணயிக்க வேண்டும். இவர்கள் இப்போது இருக்கும் மிகத் தாழ்வுற்ற நிலையில் தங்களைப் பற்றிய உணர்வே இல்லாமலிருக்கிறார்கள். தீண்டாதாரின் பிரதிநிதித்துவத்தைத் தீர்மானிக்கும்போது, அவர்களின் நலன்களைப் பாதுகாப்பது பற்றிப் பரிசீலிக்கும் குழு, இவர்களின் வாக்காளர் எண்ணிக்கையைப் பார்த்து பிரதிநிதிகளின் எண்ணிக்கையைத் தீர்மானிக்காமல், பிரதிநிதிகளின் எண்ணிக்கையைப் பார்த்து வாக்காளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வழி செய்ய வேண்டும் என வலியுறுத்த விரும்புகிறேன்.

31. இந்தச் சந்தர்ப்பத்தில் மார்லி பிரபு (Lord Morley) கூறியதைக் குழுவுக்கு நினைவூட்டுவது பொருத்தமாகும். அவர் கூறியதாகச் சொல்லப்படுவது இது: ''சட்ட சபைகள், உண்மையான சமூக சக்திகளின் நிலைமையைக் கூடியமட்டும் உள்ளபடி எடுத்துக் காட்டுவனவாக, பல்வேறு சமூகங்களின் விருப்பங்களையும் தேவைகளையும் உண்மையாகவும் பலனுள்ள முறையிலும் பிரதிபலிப்பனவாக இருக்க வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நோக்கம். இதை எண்கணிதம், இயற்கணிதம், வடிவியல் போன்ற கணிதங்களோ அல்லது தர்க்கவியல் மூலமோ செய்ய முடியாது. பரந்த நோக்கின் மூலமே செய்ய முடியும். பிரதிநிதித்துவத்தின் அளவைத் தீர்மானிப்பதில் எண்ணிக்கைதான் முக்கியம் என்றாலும், பிரதிநிதிகள் எத்தனைபேர் என்பதைத் தீர்மானிப்பதற்கு வேறு சில அம்சங்களையும் கருத்தில் கொள்ளலாம் என்ற சமரச ஏற்பாட்டில் தீங்கு ஏதும் இல்லை.'' எனவே, பம்பாய் மாகாணத்தின் தீண்டாதோர் மேலே குறிப்பட்டபடி அமைந்த தொகுதிகளிலிருந்து ஒன்பது உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க அனுமதிக்க வேண்டும். இந்த ஒன்பது பேரும் தங்களில் ஒருவரை மத்திய சட்டசபைக்குத் தீண்டாதோரின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். மற்ற எட்டு உறுப்பினர்கள் பம்பாய் சட்டசபையில் தீண்டாதோரின் பிரதிநிதிகளாக இருக்க வேண்டும்.

32. வகுப்புவாரித் தொகுதிகள் தவிர, தீண்டாதோருக்குப் பிரதிநிதித்துவம் அளிப்பதற்கான வேறு திட்டங்களும் உள்ளன. இந்தத் திட்டங்கள் பற்றி சில வார்த்தைகள் கூறாமல் இந்த அறிக்கையை முடிப்பது சரியாகாது.

33. முகமதியர்களைத் தவிர்த்து மற்றவர்களுக்கு வகுப்புவாரி பிரதிநிதித்துவம் அளிப்பதை காங்கிரஸ் மறுத்திருக்கிறது. நியமனங்களை அதிக அளவில் பயன்படுத்துவதையும் அது மறுக்கிறது. எனவே, பொதுவான வாக்காளர் தொகுதியில் போட்டியிடும் ஒரே வழிதான் தீண்டாதோருக்கு இருக்கிறது. போட்டியிடுவதற்கு எல்லோருக்கும் சமமான சுதந்திரம் இருந்தால் இது சரியானதுதான். சாத்திரங்களின் மூலம் தீண்டாதாரிடம் தீண்டத்தக்கவர்களுக்கு ஆதரவான உணர்வையும், தீண்டத்தக்கவர்களிடம் தீண்டாதோருக்கு எதிரான உணர்வுகளையும் உருவாக்கிவிட்டு, இரு தரப்பினரும் பொதுவான தேர்தலில் போட்டியிட வேண்டும் என்று கூறுவது பாரபட்சப்போக்கை அல்லது சூழ்ச்சி மனப்பான்மையைக் காட்டுவதாகும். காங்கிரஸில் உள்ளவர்களில் பெரும் எண்ணிக்கையினர் திட்டமிட்டே அரசியலில் தீவிரவாதிகளாகவும் சமூகத்தில் பழமைவாதிகளாகவும் இருக்கிறார்கள் என்பதை மறக்கக் கூடாது. அரசியலும் சமூகமும் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத இரண்டு தனிப்பட்ட விஷயங்கள் என்பது இவர்களின் கூற்று. அவர்களுக்குச் சமூகமும் அரசியலும் பருவநிலைக்குத் தகுந்தபடி எடுத்து அணிந்து கொள்ளக்கூடிய இரண்டு உடைகளாக உள்ளன. இத்தகைய மனப்பான்மை நகைப்புக்குரியது. ஏற்றுக் கொள்வதா, நிராகரிப்பதா என்று பரிசீலிக்கக்கூடத் தேவையில்லாத அளவுக்கு இது சுயநலத்தன்மை கொண்டிருக்கிறது. ஆனால் இதில் நம்பிக்கை வைப்பதில் லாபம் இருப்பதால் இது எளிதில் மறைந்துவிடாது. இந்த அசாதர்ரணமான கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட காங்கிரஸின் நடவடிக்கைகள் அதற்குத் தகுந்தபடி அமைந்திருப்பது இயல்பே. காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொள்பவர்கள் அதே பந்தலில் நடத்தப்படும் தேசிய சமூக மாநாட்டில் கலந்துகொள்வதில் அக்கறை காட்டுவதில்லை. உண்மையில் அவர்கள் அந்தப் பந்தலில் சமூக மாநாடு நடத்தப்படுவதை எதிர்த்து ஒரு இயக்கம் தொடங்கினார்கள். நமது மாகாணத்தில் அறிவாளிகள் நிறைந்துள்ள புனா காங்கிரஸ் நகரில் ஒரு முறை இந்த மாநாட்டுக்குப் பந்தலைப் பயன்படுத்த அனுமதி மறுக்கப்பட்டது. காங்கிரஸ் தேசியத்தன்மை இல்லாத அல்லது தேசிய விரோதமான அமைப்பு ஆதலால் வகுப்புவாரித் தொகுதிகள் பற்றிய அதன் கருத்துக்கள் கவனிக்க வேண்டியவை அல்ல.

34. மிதவாதிகள் தனியாக நடத்திய கூட்டத்தில் நியாயத்தை விடப் பரிவை அதிகமாகக் காட்டியிருக்கிறார்கள். பல உறுப்பினர் தொகுதிகளில் பிற்பட்ட வகுப்புகளுக்கு இட ஒதுக்கீடு செய்யலாம் என்று அவர்கள் யோசனை கூறினார்கள். தீண்டாதாருக்கு எத்தனை இடங்கள் என்பதை அவர்கள் குறிப்பிடவில்லை. ஆனால் விவேகிகளான மிதவாதிகள் பலரும், பரிவு மனம் கொண்ட மற்றவர்களும், பொதுவாக நினைப்பது சட்டசபையில் தீண்டாதாரின் பிரதிநிதிகள் ஒருவர் அல்லது இருவர் இருந்தால் போதும் என்பதாகும். இவர்கள் இந்த அளவுக்கு அனுதாபம்

காட்டியிருப்பதற்கு அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம் என்றாலும் அவர்கள் கூறும் கருத்தை ஏற்க முடியாது. தீண்டாதாரின் ஒன்று அல்லது இரண்டு பிரதிநிதிகள் இருப்பது என்பது ஒருவர்கூட இல்லாமலிருப்பதைப் போன்றதே. சட்ட சபை என்பது ஒரு அரும்பொருள் அங்காடி அல்ல. சமுதாயத்தின் வாழ்வை ஆக்கவும் அழிக்கவும் வல்ல சட்டங்களை இயற்றும் அதிகாரம் கொண்ட சபை அது. அதில் ஒருவர் அல்லது இருவர் மட்டும் பிரதிநிதிகளாக இருந்தால் தீண்டாதாரின் நிலையை உயர்த்தக்கூடிய சட்டங்கள் நிறைவேறச் செய்யவோ, அவர்களின் நிலையை மேலும் மோசமாக்கக் கூடிய சட்டங்கள் நிறைவேறாமல் தடுக்கவோ அவர்களால் எப்படி முடியும்? வெளிப்படையாகச் சொன்னால், உயர் சாதி இந்துக்களிடம் கொடுப்படும் அரசியல் அதிகாரத்தின் மூலம் தீண்டாதார் அதிகமாக நன்மைகள் எதிர்பார்க்க முடியாது. அந்த அதிகாரம் இவர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படாது என்றாலும்—அதையும் நிச்சயமாகச் சொல்ல முடியாது—இவர்களின் நிலையை உயர்த்துவதற்கு அது பயன்படுத்தப் படாமல் போகலாம். சட்டசபை தான் விரும்பிய எதையும் செய்ய அதிகாரம் படைத்ததாக இருக்கலாம். ஆனால் அது செய்ய விரும்புவது என்ன என்பது அதனுடைய சொந்தத் தன்மையைப் பொறுத்தது. இங்கிலாந்தின் நாடாளுமன்றம் எதையும் செய்வதற்கு அதிகாரம் பெற்றிருந்தபோதிலும் தனிச்சலுகைப் பெற்ற வர்க்கத்தினரைப் பாதுகாப்பது சட்ட விரோதம் என அறிவிக்காது என்று நிச்சயமாகக் கூறலாம். முகமது நபியின் மதத்தைச் சுல்தான் மாற்ற முடியும் என்றாலும் அவ்வாறு செய்ய மாட்டார். போப், கிறிஸ்துவின் மதத்தைக் கவிழ்த்துவிட முடியும் என்றாலும் அவ்வாறு செய்ய மாட்டார். அதேபோல, முக்கியமாக உயர் சாதி இந்துக்களையே கொண்ட சட்டசபை தீண்டாமையை ஒழிப்பதற்கோ, கலப்பு மணங்களை அனுமதிப்பதற்கோ, தீண்டாதார் பொது வீதிகளையும், பொதுக் கோவில்களையும், பொதுப் பள்ளிக்கூடங்களையும் பயன்படுத்தக் கூடாதென்ற தடையை நீக்குவதற்கோ, சுருக்கமாகச் சொன்னால், தீண்டாதார்மீது சுமத்தப்பட்டுள்ள மாசுகளை நீக்கிச் சுத்தப்படுத்துவதற்கோ வழிசெய்யும் சட்டம் எதையும் இயற்றாது. இதற்குக் காரணம் அவர்களால் இவற்றைச் செய்ய முடியாது என்பது அல்ல; அவர்கள் செய்ய மாட்டார்கள் என்பதே முக்கிய காரணம். சட்டசபை என்பது ஒரு குறிப்பிட்ட சமூக நிலைமையின் விளைவுப் பொருளே. சமுதாயத்தை எது தீர்மானிக்கிறதோ அதுவே சட்டசபையின் அதிகாரத்தையும் தீர்மானிக்கும். மறுக்க முடியாதபடி தெளிவாக உள்ள விஷயம் இது. வருங்காலத்தில் என்ன நடக்கலாம் என்பதைக் கடந்தகாலத்தில் என்ன நடந்தது என்பதை வைத்து ஊகிக்க முடியும். சட்டசபையில் உள்ள உயர்சாதியினர் எந்தச் சமூகப் பிரச்சினையும் சபைக்குக் கொண்டுவரப்படுவதை விரும்புவதில்லை. மத்திய சட்டசபையில் 1916-ம் ஆண்டு கனம் திரு. தாதாபாய் கொண்டு வந்த தீர்மானத்துக்கு நேர்ந்த கதி

யிலிருந்து இதைத் தெரிந்து கொள்ளலாம். தீண்டாதாரிடம் அக்கறை கொண்டிருப்பதாகக் கூறிக்கொள்ளும் பலர் அதைக் குறை கூறினார்கள் என்பது நன்கு தெரிந்த விஷயம். தெரியாத விஷயம் என்னவென்றால், அந்தத் தீர்மானம் தோல்வியடைந்த போதிலும் அதைக் கொண்டு வந்தவர் மன்னிக்கப்படவில்லை என் பதே; அப்படிப்பட்ட அருவருக்கத்தக்க தீர்மானத்தைக் கொண்டு வந்தது ஒரு பாவமாகக் கருதப்பட்டது. அடுத்த தேர்தலில் அவர் விலகிக் கொண்டு திரு. கபார்டேவுக்குத் தமது இடத்தைக் கொடுக்க வேண்டியதாயிற்று. இவர் ஒரு கட்டுரையில் பின்வருமாறு எழுதி னார்: ''தீண்டாதாரின் நிலையை உயர்த்த உழைப்பவர்களும் இழிந்தவர்களாகவே கருதப்படுகிறார்கள்.''

தீண்டாதாருக்கு உயர்சாதியினர் காட்டும் 'அனுதாபம்' பழிவாங்கும் அனுதாபமேதவிர வேறல்ல, இல்லையா?

35. தீண்டாதாருக்குப் பிரதிநிதிகளாக ஒருவர் அல்லது இரண்டு பேர் மட்டுமே உறுப்பினராக இருந்தால் போதும் என்று கூறுவோர், அரசியல் உரிமையின் உண்மையான அர்த்தத்தை உணரத் தவறிவிடுகிறார்கள். அரசியல் உரிமை என்பது வாக் களிக்கும் அதிகாரத்தில் பிரதானமாக அடங்கியிருப்பதாகச் சுருக்க மாகக் கூறப்பட்டாலும் அதன் மெய்யான அர்த்தம் சட்டங்கள்மீது வாக்களிப்பதிலோ அல்லது சட்டங்களை இயற்றுவோரைத் தேர்ந் தெடுக்க வாக்களிப்பதிலோ இல்லை; ஏதேனும் ஒரு விஷயத்தின் மீது அதற்கு ஆதரவாகவோ எதிராகவோ பேசும் உரிமையிலோ அல்லது சட்டசபையில் வாக்கெடுக்கும்போது ''ஆம் அல்லது இல்லை'' என்று சொல்வதிலோ அது அடங்கவில்லை. வாக்குப் பெட்டியில் பெயர்ப்பட்டியல் அச்சிட்ட ஒரு சீட்டைப் போட முடிவது மேலே குறிப்பிட்ட பல செயல்களைப் போலவே, வாழ்க் கையில் சாதாரணமாகச் செய்யும் பல செயல்களில் ஒன்றுதான். மற்ற செயல்களைவிட இதற்குத் தன்னளவில் தனிச் சிறப்பு ஒன்றும் இல்லை. இவை போதனை அளிக்கும் செயல்கள் என்றாலும் மற்ற செயல்களின் அளவுக்குத்தான் இவையும் அதைச் செய்கின்றன. வாக்குரிமையின் அல்லது அரசியல் உரிமையின் முதன்மையான முக்கியத்துவம் மக்கள் ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொண்டு வாழும் வாழ்க்கையின் உறவுநிலைகளை முறைப்படுத்துவதில் செய லூக்கத்துடன் நேரடியாகப் பங்கு கொள்ளும் வாய்ப்பினைப் பெறு வதில்தான் அடங்கியிருக்கிறது. தீண்டத்தக்கவர்களுக்கும் தீண்டா தாருக்கும் இடையில் இப்போதுள்ள உறவு நிலை முன்னவர்களுக்கு அவப்பெயரும் பின்னவர்களுக்குத் தீங்கும் தருவதாக உள்ளது. ஒரு மக்கள் இனத்தின் திறன்கள் செயல் வடிவம்பெறச் செய் வதற்கு, அவற்றைப் பயன்படுத்துவதற்கான சமூக நிலைமைகளைத் தீர்மானிக்கும் அதிகாரம் இருக்க வேண்டும். இந்த நிலைமைகள் மிகவும் கடுமையாக இருந்தால் அவற்றை மாற்றியமைப்பது இரு தரப்பாரின் நலனுக்கும் உகந்தது. இவ்வாறு மாற்றியமைக்கச் செய் யும் வலிமை தீண்டாதாருக்கு இருக்க வேண்டும். அவர்களது

நலன்களின் முக்கியத்துவத்தைக் கணக்கிலெடுத்துக் கொண்டு பார்க்கும் போது அவர்களுடைய மக்கள் தொகைக்குத் தகுந்த விகிதத்தில் அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் இருப்பது அவசியம் என்றாகிறது. ஒன்று அல்லது இரண்டு பிரதிநிதிகளுக்கு வழி செய்வது பரிவைக் காட்டலாமே தவிர, நியாயமானதோ போதுமானதோ அல்ல.

36. சமீப காலமாக தீண்டாதாரின் பிரதிநிதித்துவம் சம்பந்தமாக ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்கான சேவைக்குழு (Depressed Class Mission) ஒரு போட்டி திட்டத்தைத் தெரிவித்து வருகிறது. ''தேர்ந்தெடுக்கப்பட்டோர் நியமித்துச் சேர்க்கும் முறை'' (Co-Option) என்று இந்தத் திட்டம் குறிப்பிடப்படுகிறது. சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் நபர்களைத் தீண்டாதாரின் பிரதிநிதிகளாக நியமனம் செய்ய வேண்டும் என்பது இந்தத் திட்டம். இந்தக்குழு, தீண்டாதாரிடம் இவ்வாறு காட்டும் அக்கறையைப் பார்த்து அழுவதா, சிரிப்பதா என்றே தெரியவில்லை. அழுதால், இத்தகைய மடத்தனமான திட்டம் என்றாவது ஏற்கப்படும் என்று நம்புவதாக ஆகிவிடும். எனவே, இதைச் சிரித்து ஒதுக்கி விடுவதே சரியான வழி என்று தோன்றுகிறது. நல்லெண்ணம் கொண்டு மற்றவர்களிடம் அக்கறை காட்டுவதாகக் கூறப்படுவது அவர்களுக்கு எது நல்லது என்று அவர்களே தீர்மானித்து அதை அடைய உதவுவதற்குப் பதிலாக, அவர்களுக்கு எது நல்லது என்பதைத் தாங்கள் தீர்மானிப்பதற்காகச் சிலர் போடும் வேஷமே தவிர வேறல்ல என்பதை இந்தத் திட்டத்திலிருந்து புரிந்து கொள்ளலாம். இந்தக் குழு ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களை உயர் சாதி எஜமானர்களின் சமூகக் கொடுங்கோன்மையிலிருந்து விடுவித்து அவர்களின் நிலையை மேம்படுத்துவதற்காகத் தொடங்கப்பட்டது என்பதைக் குறிப்பிட வேண்டும். ஆனால் அதற்கு மிக்வும் கெட்டகாலம் ஏற்பட்டுவிட்டது. அதனால் அது தன் பாதுகாப்பில் உள்ள மக்களை அல்லது அவர்களின் பிரதிநிதிகளை அவர்களின் முன்னாள் எஜமானர்களுக்கு அடிமையாக்கக்கூடிய ஒரு திட்டத்தை எடுத்துப் பேச வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இந்த எஜமானர்களும் குழுவும் கூடிப்பேசி, ஒடுக்கப்பட்ட மக்கள் விடுதலை பெறும் நம்பிக்கைக்கே இடமில்லாமல் என்றென்றைக்கும் ஒடுக்கப்பட்டவர்களாகவே இருக்கச் செய்யும் திட்டம் ஒன்றை உருவாக்கியிருக்கிறார்கள். இந்த மாதிரித் தந்திரங்களால் தீண்டாதாரான மக்களை, அவர்கள் அறியாமையில் இருப்பவர்களாக உள்ளபோதிலும்கூட, ஏமாற்றிவிட முடியாது, வாக்குரிமைக் குழுவை நிச்சயமாக ஏமாற்றிவிட முடியாது. மற்றொரு வகையிலும் ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்கான சேவைக்குழுவின் திட்டம் ஏற்கக் கூடியதாக இல்லை. இந்தக் குழு தன்னுடைய நிர்வாகக் குழுவில் ஒரு தீண்டாதாருக்கு இடம் அளிக்க விடாப்பிடியாக மறுத்து வருகிறது. அப்படிப்பட்டது தீண்டாதாரின் பிரதிநிதித்துவத்துக்குத் திட்டம் தருவது எரிச்சலூட்டுகிறது. சுயநல நோக்கம் கொண்டதும், தேவையில்லாமல் தரப்படுவதுமான இந்தத் திட்டம் நிராகரிக்கப்பட வேண்டும்.

37. இம்மாதிரியான நியமனத்தைவிட அரசின் மூலமான நியமனம் நல்லது என்றாலும், தீண்டாதாரின் நலனைக் கருதும் போது நியமனம் என்பதே ஆட்சேபிக்கத்தக்கதே. நியமன முறை யில் பிரதிநிதிகளின் சுதந்திரம் கட்டுப்படுத்தப்படுவதுடன், மக்க ளுக்கு அரசியல் அறிவு அளிப்பதற்கு இது உதவியாயில்லை. அரசியல் அறிவுதான் இப்போது எல்லா வகுப்புகளுக்கும், குறிப் பாகத் தீண்டாதாருக்கும் அவசரமாகத் தேவைப்படுகிறது.

38. இந்தக் கட்டத்தில் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்துக்கு எதிரான வாதத்தை நாம் பரிசீலனை செய்ய வேண்டும். அறிக் கையை வரைந்தவர்கள் கூறும் முதலாவது வாதம் பின்வருமாறு: ''சுயாட்சியை உருவாக்கி வளர்த்துள்ள நாடுகளில் அதன் வரலாறு நிச்சயமாக வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்கு எதிராக இருக்கிறது.'' ஆனால் அறிக்கையில் முன்னதாக ஒரு இடத்தில் அவர்கள்'' சாதி, கோட்பாடு வேற்றுமைகள் இந்திய சமுதாயத் தின் ஒரு அம்சமாக இருப்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்'' என்று கூறுகிறார்கள். ''இந்த அம்சம், உலகின் பிற பகுதிகளில் பிரதிநிதித்துவ அமைப்புகளுக்கு அடிப்படையாக அமைந்துள்ள கருத்துகளுக்கு முரணாக உள்ளது'' என்று அவர்கள் குறிப்பிடு கிறார்கள் (பக்கம் 97). முதலில் கூறிய கருத்தை அவர்கள் எழுதும் போது நிலைமை குறித்துப் பின்னால் அவர்கள் மேற்கொண்ட பகுத்தாய்வை மறந்து விட்டிருக்கிறார்கள். அல்லது அவர் ஒரே சமயத்தில் இரண்டு மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருக்கிறார் கள் என்று கூற வேண்டும். இரண்டு கருத்துக்களையும் அருகருகே வைத்துப் பார்க்கும் போது, அசாதாரணமான ஒரு நிலைமைக்குத் தீர்வுகாண அசாதாரணமான ஒரு வழியைப் பின்பற்ற வேண்டும் என்ற அடிப்படையில் அவர்கள் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத் திற்கு இணங்குவார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

39. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்கு எதிராகக் கூறப் படும் மற்றொரு முக்கியமான வாதம், அது சமூகப் பிரிவின்ன களை நிரந்தரமாக்கி விடும் என்பதாகும். சமூகப் பிரிவினைகளை ஆதரிப்பவர்கள்தான் இந்த வாதத்தைக் கூறுகிறார்கள் என்பது தான் வேடிக்கை. இந்தக் காரணத்தைக் காட்டி வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை எதிர்ப்பவர்கள் திரு. படேலின் சாதிக் கலப்புத் திருமண மசோதாவை எதிர்த்தவர்கள் என்பதைக் குழு தயவுசெய்து கவனிக்க வேண்டும். அந்த மசோதா சாதிகளை உடைத்து விடும் என்று அவர்கள் வாதித்தார்கள். எனவே வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவத்துக்கு எதிராக இந்த வாதத்தைக் கூறுபவர் கள் உண்மையான மனத்துடன் அதைக் கூறுகிறார்களா என்பதைச் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. ஆயினும் அறிக்கையை வரைந்த வர்கள் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்துக்கு எதிரான இரண்டா வது வாதமாக இதைக் குறிப்பிட்டிருப்பதனால் இதற்குப் பதில் கூற வேண்டும்.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் சமூகப் பிரிவினைகளை நிரந்தரமாக்குகிறதா? சமூகப் பிரிவினைகளை அடிப்படையாகக் கொண்ட வாக்காளர் தொகுதிகளை வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் உருவாக்குவதாகக் கருதினால் இந்த ஆட்சேபம் பொருத்தமாகும். சமூகப் பிரிவினைகள் உண்மையான பிரிவினைகள் அல்ல என்றும், அவற்றைப் பொருட்படுத்த வேண்டியதில்லை என்றும் ஒரு அடிப்படைக் கருத்தை வைத்துக் கொண்டால்தான் இவ்வாறு கூறமுடியும். ஆனால் இத்தகைய அனுமானம் தவறாகும்.

ஆங்கிலேயர்கள் கூடிப்பழகும் குணம் இல்லாதவர்கள் என்று கூறுவதைப் போன்றது இது. பிரிவினைகளின் தீய விளைவுகளைத் தவிர்ப்பதற்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஒரு கருவியாகும். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தினால் ஏற்படும் இந்த நன்மையை ஒப்புக் கொள்பவர்கள், அது பிரிவினைகளை நிரந்தரமாக்குகிறது என்ற ஆட்சேபத்தை எழுப்பினால் வேறொரு கோணத்திலிருந்து அதற்குப் பதில் கூறலாம். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் சமூகப் பிரிவினைகளை நிரந்தரமாக்குவதற்குப் பதிலாக அந்தப் பிரிவினைகளையே நீக்கிவிடுவதற்கான வழிகளில் ஒன்றாக அமைந்துள்ளது எனக் கூறலாம்.

40. வகுப்புவாரித் தேர்தல் தொகுதிகள் சமூகப் பிரிவினைகளை எல்லையாகக் கொண்டவை என்றாலும், அதன் முக்கியமான விளைவு வெவ்வேறு சாதிகளைச் சேர்ந்த மனிதர்களைச் சட்டசபைக்குள் கொண்டுவருவதாகும். அப்படியில்லையென்றால் அவர்கள் கலந்துபழக மாட்டார்கள். வெவ்வேறு சாதிகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் முன்பு தனித்தனியாகப் பிரிந்திருந்ததால் சமூக விரோதிகளாக இருந்த நிலையை மாற்றி, அவர்கள் ஒன்று கூடிச் செயல்படும் ஒரு புதிய வாழ்க்கை முறையை உருவாக்க வழி வகுக்கும் ஒரு புதிய பங்கெடுப்புக்களமாக சட்டசபைப் பரிணமிக்கிறது. இப்படிக் கூட்டு வாழ்க்கையில் முன்னின்று பங்கெடுத்துக் கொள்ளும்போது அவர்களுடைய எண்ணங்களிலும் மனப்போக்குகளிலும் மாறுதல் ஏற்படாமல் போகாது. இன்று ஒரு சாதி அல்லது மதப்பிரிவு என்பது ஒரு குறிப்பிட்ட மனப்பான்மையைக் குறிக்கிறது. ஒவ்வொரு சாதியும், பிரிவும் தனிமைப்பட்டுப் பிரிந்து நிற்கும் போது அவர்களின் மனப்பான்மைகளும் அப்படியே உறைந்து போகின்றன. ஆனால் பல்வேறு சாதியினரும் பிரிவினரும் தொடர்புகொண்டு ஒருவருடன் ஒருவர் ஒத்துழைக்கும் சூழ்நிலையில் இந்த மனப்பான்மை நிச்சயமாக மாற்றியமைக்கப்படும். இந்துக்களிடம் முகமதியர், கிறிஸ்தவர் முதலானவர்கள் சம்பந்தமாக உள்ள மனப்பான்மையும், அதே போல, முகமதியர் கிறிஸ்தவர் முதலானவர்கள் இந்துக்கள் சம்பந்தமாகக் கொண்டுள்ள மனப்பான்மையும் தீண்டத்தக்க இந்துக்கள், தீண்டாதார்பால் கொண்டுள்ள மனப்பான்மையும் மாற்றியமைக்கப்பட்டால் சாதியும் பிரிவினைகளும் மறைந்து போய்விடும். சாதி என்பது ஒரு மனப்பான்மையே தவிர, வேறொன்றும் இல்லையென்றால், அந்த

மனப்பான்மை மறைந்துவிட்டால் சாதியும் மறைந்துவிட்டதாகக் கூறலாம். ஆனால் வெவ்வேறு சாதியினரிடமும் பிரிவினரிடமும் இப்போதுள்ள மனப்பான்மைகள் மறைய வேண்டுமானால் அவர்கள் பொதுவான ஒரு நடவடிக்கையில் ஒன்றுசேர்ந்து பங்கெடுத்தால்தான் முடியும். இப்படி எண்ணங்களிலும் மனப்பான்மைகளிலும் ஏற்படும் மாற்றம் தற்காலிகமானதாக இல்லாமல் சட்டசபைக்கு வெளியிலும் மற்றவர்களுடன் தொடர்புகொண்டு நடத்தும் வாழ்க்கையிலும் பிரதிபலிக்கும். இவ்வாறு கூடிச்சேர்ந்து செயல்படும் நடவடிக்கைகளுக்கு எந்த அளவுக்கு அதிகமாக வாய்ப்புக் கிடைக்கிறதோ அந்த அளவுக்கு நல்லது. அதனால் சமூக மனப்பான்மைகள் மாறியமைவது பெரிய அளவில் நடைபெற்றுச் சாதிகளுக்கும் பிரிவுகளுக்கும் முடிவு ஏற்படுவது விரைவுபடுத்தப்படும். எனவே வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இப்போதுள்ள பிரிவினைகளை நிரந்தரமாக்கிவிடும் என்று கூறுபவர்கள் சிந்தித்துப் பார்த்தால், அந்தப் பிரிவினைகளை ஒழிப்பதற்கு அது ஒரு சக்தி மிக்க சாதனமாயிருக்கும் என்பதை உணர்ந்து அதை வரவேற்பார்கள்.

41. தீண்டாதாருக்கு வகுப்பு அடிப்படையில் போதிய அளவில் பிரதிநிதித்துவம் கிடைக்கவேண்டியதன் முக்கியத்துவம் பற்றி கேள்விக்கு இடமில்லை. தீண்டாதார் இதுபற்றி எவ்வளவு ஆழ்ந்த உணர்வுடன் பேசுகிறார்கள் என்பதைச் சென்னை மாகாணத்தின் தீண்டாதார் திரு. மாண்டேகுவிடம் என்ன சொன்னார்கள் என்பதிலிருந்து உணர்ந்து கொள்ளலாம். உள்நாட்டுச் சுயாட்சியுடன் (Home rule) சேர்ந்து தீண்டாதாருக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படவில்லை என்றால் ரத்தம் சிந்தும் நிலைமை ஏற்படும் என்று அவர்கள் கூறினார்கள். அறிக்கையை வரைந்தவர்கள், தீண்டாத மக்களை நிரந்தரமாக இழிநிலையிலிருந்தும் சமூகப் புறக்கணிப்பிலிருந்தும் காப்பாற்றிக் கைதூக்கி விடுவதற்கான எல்லாச் சீர்திருத்தங்களையும் நாட்டின் கற்றறிந்த மக்கள் கொண்டுவந்து விடுவார்கள் என்று நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். ''கற்றறிந்த இந்தியர்கள் அரசியல் குறிக்கோள்களுக்காக மட்டுமின்றி பல்வேறு பொது, சமூக சேவைகளுக்காகவும் ஒன்றுபட்ட முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதைத் தாங்கள் காண்பதாக'' அவர்கள் கூறுகிறார்கள். அறிக்கை வரைந்தவர்கள் இந்த விஷயத்தில் தீண்டாதாரின் கோரிக்கைகளுக்கு உடன்பட்டவர்களாக இருப்பதால் அவர்களின் நம்பிக்கைக்கு ஆதாரம் இருக்கிறதா என்பதைப் பரிசீலிக்க வேண்டும். கல்வி பற்றியும் அதன் சமூக மதிப்புப் பற்றியும் ஜோஸப் அடிஸன் கூறுவதை இங்கே நினைவூட்டலாம்: ''நல்ல திறமைகளைப் பெற்றவர்கள் அவற்றை எப்படிப் பயன்படுத்துகிறார்கள் என்பதைச் சிறிதும் பார்க்காமல் அது அவர்களுக்குப் பெருமையளிப்பதாகக் கருதுவது சமூகத்துக்கு மிகவும் தீங்கானது. இயற்கை அளித்த திறமைகளும் கலையில் பெற்ற தேர்ச்சிகளும் நன்மைக்காகப் பயன்படுத்தப்பட்டால், அல்லது கண்ணிய நெறிகளுக்குக் கட்டுப்பட்டவையாக இருந்தால் மட்டுமே

மதிப்புப் பெறுகின்றன. நாம் சந்தித்துப் பேசுபவர்களிடம் நாம் காணும் எந்தச் சிறப்பையும், அவர்களின் மனம் நல்லதாக உள்ளது என்று நாம் தெரிந்துகொள்ளும்வரை உயர்வாகக் கருதக் கூடாது. இல்லையென்றால் வெறுக்கத்தக்கவர்கள் என்று நமது அறிவு யாரைப் பற்றிக் கூறுகிறதோ அவர்களிடம் நமது மனம் அன்பைக் காட்டத் தொடங்கிவிடும்''.

42. புள்ளிவிவரங்களைப் பார்த்தால் கற்றறிந்தவர்கள் என்பதும் பிராமண சாதி என்பதும் ஒன்றுக்கொன்று மாற்றிப் பயன்படுத்தக்கூடிய சொற்கள் என்பது தெரியும். கற்றறிந்த மக்களின் மனப்பான்மை என்பது பிராமண மனப்பான்மையே. அதனுடைய கண்ணோட்டம் பிராமணக் கண்ணோட்டமே. பிராமணத் தலைவர் எல்லோருடைய சார்பிலும் பேசுவதாகக் கூறிக் கொண்ட போதிலும் அவர் எந்த வகையிலும் மக்களின் தலைவர் அல்லர். அவரைத் தமது சாதியின் தலைவர் என்றுதான் கூற முடியும்; ஏனென்றால் வேறெந்த மக்களையும்விட அவர்களிடமே அவருடைய உணர்வுகள் ஈடுபடுகின்றன. தீண்டாதாரிடம் பரிவுணர்வு கொண்ட பிராமணர்களே இல்லை என்று சொல்ல வரவில்லை. நியாயமாகக் கூறுவதென்றால், மிதவாத உணர்வும் நேர்மையும் கொண்ட பிராமணர்கள் ஒரு சிலர் இருக்கிறார்கள். தீண்டாமை முறையின் கொடுமையைக் கருத்தளவில் அவர்கள் ஒப்புக் கொள்வதுடன், அதன் மூலம் சமூகத்துக்கு நேரக்கூடிய அபாயங்களையும் உணர்ந்திருக்கிறார்கள். ஆனால் மிகப் பெரும்பாலான பிராமணர்கள் மலைபோல் எத்தனை எத்தனையோ சான்றுகள் இருந்த போதிலும் அவற்றையெல்லாம் புறக்கணித்து இந்த முறையின் கொடுமைகளைப் பிடிவாதமாக மறுக்கிறார்கள். இந்த அளவுக்கு அதிகமான சான்றுகள் வேறு எந்த விஷயத்துக்கும் குவித்துக் காட்டப்பட்டதில்லை; அன்றாட அனுபவங்களும் இதற்கு மேலும் மேலும் சான்றுகளைத் தந்து வருகின்றன. இவர்கள் சுதந்திரத்தைப் பற்றிப் பேசுகிறார்கள் என்றால் மற்றவர்களை ஒடுக்குவதற்கும், மிருகத்தனமாக, இரக்கமற்று, கொடுமையாக நடந்து கொள்வதற்கும்தான் சுதந்திரம் கேட்கிறார்கள். இவர்களுடைய மாற்ற முடியாத உரிமை என்பது தீண்டாதாரான மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளில்தான் தழைக்க முடியும். அவர்களுடைய நாசூக்கான உயர்குலப் பெருமை ஆங்கிலேயரைத் தங்களைவிட உயர்ந்தவர்களாகவோ, தீண்டாதாரைத் தங்களுக்குச் சமமானவர்களாகவோ ஏற்காது. ''எனக்கு மேலே ஒருவரை நான் சகித்துக்கொள்ள மாட்டேன், எனக்குக் கீழே இருப்பவர்களில் யாரும் எனக்கு மிக அருகே வந்துவிடக்கூடாது'' என்பதே அவர்களுடைய சமூக, அரசியல் கோட்பாட்டின் சாரமாகும். பிராமணத் தலைவர்களின் சமூக விரோத மனப்பான்மையை எதிர்த்துப் பேசுபவர்கள் மேலே குறிப்பிட்ட சில நல்ல வகையான பிராமணத் தலைவர்களும் இருப்பதைக் கவனிக்க மறந்துவிட வேண்டாம் என்று கூறப்படுகிறது. இது உண்மைதான். அவர்களில் தமது சொத்து சுகங்களைத் தியாகம் செய்யக்கூடிய உயர்ந்த குணம்

படைத்தவர்களும், இயற்கைக்கு முரணான தமது அதிகாரத்தைப் பயன்படுத்துவதில் மென்மையாக நடந்து கொள்பவர்களும் சிலர் மிக அரிதாக இருக்கவே செய்கின்றனர் என்பதில் ஐயமில்லை. ஆயினும் மனிதகுலமும் வாய்மையும் சமாளிக்க வேண்டியுள்ள இப்போதுள்ள நிலைமையுடன் இந்த அநீதி பிரிக்க முடியாதபடி இணைந்துள்ளதாகவே அஞ்ச வேண்டியிருக்கிறது. சில இளகிய உள்ளத்தினர் பரிவுகாட்டுவார்கள் என்பதை வைத்து தீண்டாதாரின் அவல நிலைமையைச் சகித்துக் கொள்ள முடியாது. இந்தக் கொடுமையை எதிர்த்து நேர்மையுடன் எழும் சினத்தின் அலைகள் குற்றவாளிகளான பலருடன் சேர்த்து அவர்களிடையே ஓரளவு நல்லவர்களாக உள்ளவர்களையும் அடித்துச் செல்லும் என்பதற்காக அவற்றை நிறுத்தி வைக்கவும் முடியாது.

43. இந்தியாவில் தேசியவாதத்தின் போக்கைப் பார்க்கும் போது பரிவுணர்வு கொண்ட சிலரின் எண்ணிக்கை பெருகும் என்று நம்புவதற்கு இடமில்லை. மாறாக குற்றவாளிகளாக உள்ள பலரின் எண்ணிக்கைதான் மேலும் பெருகும். அரசியல் கிளர்ச்சி வளர்ச்சி பெற்றபின் சமூக சீர்திருத்தத்துக்கான கிளர்ச்சி தணிந்து விட்டது மட்டுமல்ல, மறைந்தும்விட்டது. மிகுந்த செல்வாக்கு பெற்றிருந்த பிரார்த்தனா சமாஜம், பிரம்மசமாஜம் ஆகியவை பழங்கதையாகி விட்டன. வருங்காலத்தில் இவை போன்று வரக்கூடிய எதையும் காணோம். கல்வி வளர்ச்சி ஒரு வகுப்பாருக்கு மட்டுமே கிடைப்பதாயிருந்தால், தாராளக் கருத்துக் கொள்கை உருவாகும் என்பது நிச்சயமில்லை. ஒரு வகுப்பாரின் நலன்களையே பாதுகாப்பதும், நியாயப்படுத்துவதும் அதன் விளைவாகி விடக்கூடும். அடக்கி ஒடுக்கப்பட்டவர்களுக்கு விடுதலை தருவோர் உருவாவதற்குப் பதிலாக, கடந்தகாலத்துக்கு வக்காலத்து வாங்கி இன்றுள்ள நிலை மாறாமல் காக்க விரும்புவோர் உருவாகக் கூடும். இதுவரை கல்வியின் பலன் இதுவாகத்தானே இருந்திருக்கிறது? வருங்காலத்தில், மற்ற விஷயங்கள் இப்போது போலவே இருந்தால், இது ஒரு புதிய பாதையில் செல்லும் என்று கருத இடமில்லை. எனவே, தீண்டாதாரை உயர்சாதியினர் தங்கள் விருப்பப்படி நடத்தும் நிலையில் விட்டுவைக்காமல் அவர்களுக்கே அதிகாரம் கொடுப்பதுதான் விவேகமான கொள்கையாகும். இவர்கள், மற்றவர்களைப் போல, பிறருடைய அதிகாரத்தைத் தாங்கள் கைப்பற்றிக் கொள்ள விரும்பவில்லை. மாறாக சமூகத்தில் தங்களுக்குரிய இயல்பான இடம் தங்களுக்குக் கிடைக்க வேண்டும் என்றுதான் விரும்புகிறார்கள்.

44. இந்த மாபெரும் உலகப்போர், அதற்கான நோக்கங்கள் என்னவாக இருந்த போதிலும், சுயநிர்ணயம் என்ற தத்துவத்தைக் கொண்டு வந்திருக்கிறது. வருங்காலத்தில் இதுதான் சர்வதேச உறவுகளைத் தீர்மானிக்கப் போகிறது. 1917 ஆகஸ்ட் 20-ம் தேதி வந்த அறிவிப்பு இந்தத் தத்துவம் இந்தியாவுக்குப் பொருந்தும்

என்று கூறியிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. ஒவ்வொருவரும் தாங்கள் எத்தகைய நிலையில் வாழவிரும்புகிறார்கள் என்பதை அவர்களே தீர்மானித்துக் கொள்ளச் சுதந்திரம் இருக்க வேண்டும் என்று இந்தத் தத்துவம் கூறுகிறது. இந்தத் தத்துவம் நாடுகளுக்கிடையிலான உறவுகளுக்கு மட்டும்தான் பொருந்தும் என்று குறுக்கி வைப்பது இதன் உண்மையான பொருளைச் சரியாக உணரவில்லை என்பதையே காட்டும். ஏனென்றால் பிணக்குகள் நாடுகளிடையே மட்டும் இல்லை. ஒரு நாட்டுக்குள்ளேயே வகுப்புகளுக்கிடையே பிணக்குகள் இருக்கின்றன. இந்திய அரசியல்வாதிகள் தங்களுடைய அரசியல் பேச்சுக்களில் இந்திய மக்கள், சட்டப்படி ஒரே மக்கள் என்ற கருத்தை மனமறிந்தே வலியுறுத்திப் பேசி வருகிறார்கள். இந்திய மக்கள் இயற்கையாகவே ஒரே மக்கள் என்றும், இந்த ஒற்றுமை காரணமாக தங்கள் நோக்கங்கள் பற்றியும் நல்வாழ்வு பற்றியும் ஒரே கருத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும், பொது லட்சியங்களில் விசுவாசம், பரஸ்பர அனுதாப உணர்வு ஆகிய உயர்ந்த பண்புகளைப் பெற்றிருக்கிறார்கள் என்றும் இந்தத் தத்துவத்தை வைத்து அவர்கள் கருதுகிறார்கள். ஆனால் சட்டப்படியான ஒற்றுமை என்ற கருத்தும், நடைமுறைப்படியான ஒற்றுமை என்னும் கருத்தும் ஒன்றுக்கொன்று முரணாக உள்ளதைக் குழு கவனிக்க வேண்டும். ஒரு உதாரணமாகப் பின்வரும் குறிப்பைக் கூறலாம். இந்திய மக்களை பிரிட்டிஷார் வெற்றி கொண்டு தங்கள் ஆட்சிக்கு உட்படுத்தியதனால் இந்திய மக்களுக்கு ஏற்பட்டுள்ள தார்மீகத் தீமையைப் பிராமண அரசியல்வாதிகள் மிகவும் உத்வேகத்துடன் பேசுகிறார்கள். இந்தத் தீமைகளை ஜான் ஷோர் (John Shore) 1832-ல் எழுதிய "இந்திய விவகாரங்கள் பற்றிய குறிப்பு" ஒன்றில் விவரித்திருக்கிறார். காலஞ்சென்ற திரு. கோகலே (Honourable Mr. Gokhale) "வெளிநாட்டு ஏஜென்சியினால் ஏற்படும் பெரும் செலவு" என்பது பற்றிப் பேசுகையில் அதே கருத்துக்களைக் கூறியிருக்கிறார். அவர் கூறியதாவது:

> "இதைவிடப் பெரிய தார்மிகத் தீமை ஒன்று இருக்கிறது. இப்போதைய முறையின் கீழ் இந்திய இனம் வளர்ச்சி குன்றி குறுகிப் போய்க் கொண்டிருக்கிறது. நம்முடைய வாழ்நாட்கள் முழுவதையும் தாழ்வுமிக்க ஒரு சூழ்நிலையிலேயே வாழ வேண்டியிருக்கிறது. இப்போதைய முறையின் அவசரத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக நம்மில் மிக உயர்ந்தவர் கூட குனிந்து போக வேண்டியிருக்கிறது. ஈட்டன் (Eton) அல்லது ஹாரோ (Harrow)வில் படிக்கும் ஒவ்வொரு பள்ளி மாணவனும் தான் ஒரு நாள் ஒரு கிளாட்ஸ்டன் (Gladstone) அல்லது நெப்போலியன் (Napolean) அல்லது வெலிங்டன் (Wellington) ஆக முடியும் என்ற உணர்வு கொண்டிருக்கிறான். அந்த உணர்வு அவனால் முடிந்த உயர்ந்தபட்ச முயற்சியை அவன் வெளிக்கொணரச் செய்கிறது. இப்போதைய

முறையின்கீழ் நமது மனிதத்தன்மை அதன் முழுமையான உயரத்துக்கு வளர முடியாது. சுயாட்சி பெற்ற ஒவ்வொரு வருக்கும் இருக்கும் தார்மிகப் பெருமிதத்தை நாம் உணர முடியாது. நமது நிர்வாக, ராணுவத் திறமைகள் சரிவரப் பயன்படுத்தப்படாமல் அதனாலேயே படிப்படியாக மறைந்து போகும். நாம் 'விறகு வெட்டுவோராகவும் நீரிறைப்பவராக வுமே காலம் கழிக்க வேண்டும்.''

45. நான் குழுவின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்பு வது இதுதான்: ஒரு பிராமணர் (நிச்சயமாக உயர்ந்த உள்ளம் கொண்ட பிராமணர்) பிரிட்டிஷ் அதிகாரவர்க்கம் வெட்கப்படும் வகையில் மேலே கூறிய கருத்துக்களைத் தீண்டாதார் ஒருவர் பிராமண அதிகாரக் குழுவினர் வெட்கப்படும்படியாகக் கூறுவது பொருந்தும் அல்லவா? அதிகார வர்க்கம் தன் மீது கூறப்பட்ட குற்றச்சாட்டை மறுக்கும் வகையில் மரமண்டைத்தனம் காட்டா மல், தனக்கெதிராகத் தெரிவிக்கப்பட்ட உணர்வுகளை மதித்துச் செயல்பட்டிருப்பதைப் பாராட்ட வேண்டும். அரசாங்கம் எந்த மக்களுக்காக நடக்கிறதோ அந்த மக்களின் ஆளுமையின் வளர்ச்சி யைக் குன்றச் செய்வதாக அரசாங்க முறையில் உள்ள குறைகளை மாற்றுவதற்கு அது யோசனைகள் கூறியிருக்கிறது. ஆனால் பிராமண அதிகாரக்குழு இம்மாதிரியான உயர்ந்த செயலில் பாதி யாவது செய்திருப்பதாகக் கூறமுடியுமா? இந்து சமூக அமைப்பைத் தமது முன்னோர்கள் எல்லாக்காலங்களுக்கும் பொருந்துவதாகக் குறையற்றதாக அமைத்து விட்டார்கள் என்று அவர்கள் நம்பு கிறார்கள். வருங்காலம் அனைத்தையும் காணும் தெய்வீக சக்தி அவர்களுக்கு இருந்ததாகவும், வருங்காலம் முழுமைக்கும் தேவையான எல்லா ஏற்பாடுகளையும் நிர்ணயித்து வைக்கும் இயற்கையை மீறிய சக்தி அவர்களுக்கு இருந்தது என்றும் அவர்கள் நம்புகிறார்கள். இப்படித் தங்கள் இனத்தின் உயர்வு பற்றி அவர் கள் மனத்தில் ஆழ்ந்து ஊறிப்போயுள்ள கருத்துக்கள் இந்து சமூகம் சீரமைக்கப்படுவதற்கும், பொது நன்மைக்காகச் சுயநல உரிமைகளை மறுபரிசீலனை செய்வதற்கும் தடையாக இருந்து வந்துள்ளன. தீண்டாமையை ஒழிப்பதற்கு நாடகம் போன்ற ஒரு மாநாடு 1918 மார்ச் மாதம் பம்பாயில் நடைபெற்றது. கர்விர் (Karvir) புகழ் சங்கராச்சாரியர் டாக்டர் குர்டகோடி (Doctor Kurtakoti) மாநாட்டில் கலந்து கொள்வதாக வாக்களித்திருந்த போதிலும், மாநாடு கூடுவதற்கு ஓரிரண்டு நாட்களுக்கு முன் ஏதோ அவசர வேலையாக வட இந்தியாவுக்குப் பயணமாகி விட்டார். திரு. திலகர் இந்த மாநாட்டில் சிறிய உரை நிகழ்த்திய தாகக் கூறப்படுகிறது. திரு. திலகரின் நல்லதிர்ஷ்டம் காரணமாக அந்த உரை பற்றி செய்தி வெளியாகவில்லை. ஆனால் இந்த உரை தீண்டாதாரை ஏமாற்றுவதற்காக உதட்டளவில் நிகழ்த்தப்பட்டது தான். ஏனென்றால் தீண்டாமையை ஒழிக்கும் பிரகடனத்தின் நகல் வாசகத்தைத் திரு. திலகரிடம் கொடுத்தபோது அவர் அதில்

கையொப்பமிட மறுத்துவிட்டார் என்பது நம்பத் தகுந்த சான்றுகள் மூலம் தெரிகிறது.

46. ஒரு தேசத்துக்குள்ளேயே பிணக்கு இருக்கிறது என்பது இதிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. சுயநிர்ணய உரிமையைச் செயல்படுத்தப் பொருத்தமான விஷயம் இது. முற்பட்ட வகுப்பினர், வருங்காலத்தில் இந்திய மக்களின் வளர்ச்சி குன்றிப் போகக் கூடாது என்பதற்காக இந்தியாவுக்கு இந்த உரிமையைக் கோருகிறார்கள். அதிகாரத்தில் உள்ளவர்களும் அதை ஓரளவுக்கேனும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இதே போல தீண்டாதாரான மக்களும் நியாயமாக தங்களுடைய நலனைப் பாதுகாப்பதற்கு அந்த உரிமையைக் கேட்கக் கூடாதா? தீண்டாதாருக்குச் சுயநிர்ணய உரிமை தேவை என்பதை ஒப்புக் கொண்டால் அவர்களுக்கு வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை அளிக்காமல் இருக்க முடியாது. ஏனென்றால் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம், சுயநிர்ணய உரிமை ஆகிய இரண்டும் ஒரே கருத்தை வெளியிடும் இரண்டு வெவ்வேறு சொற்றொடர்களே ஆகும்.

திரு. பீம்ராவ் அம்பேத்கரின் எழுத்து மூலமான துணை அறிக்கை

1. என்னுடைய முந்திய அறிக்கையில் பம்பாய் மாகாணத்தின் தீண்டாதாருக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கும் திட்டம் ஒன்றைப் பரிந்துரை செய்திருந்தேன். பம்பாய் மாகாண சட்டசபை அமைப்புக்குப் பம்பாய் அரசாங்கம் யோசனை கூறியிருக்கும் பிரதிநிதித்துவத் திட்டத்தில் என்னுடைய திட்டத்தை எப்படி இணைத்துக் கொள்ளலாம் என்பதைத் தெரிவிப்பதே இந்தத் துணை அறிக்கையின் நோக்கம்.

2. முதலில், பல்வேறு முக்கிய தொகுதிகளுக்கும் அரசாங்கம் குறிப்பிட்டிருக்கும் இடங்களின் எண்ணிக்கையில் சில மாறுதல்களுக்கு நான் யோசனை கூற விரும்புகிறேன். இந்த மாறுதல்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன:

இடங்கள் வினியோகிக்கப்படும் தொகுதிகள்	அரசாங்கத்தின் திட்டம்	என்னுடைய திட்டம்
(1) சிந்து ஜமீன்தார்கள், ஜாகீர்தார்கள்	1	1
(2) குஜராத்தின் சர்தார்கள்	1	1
(3) தக்காணத்தின் சர்தார்கள்	1	1
(4) பம்பாய்ப் பல்கலைக் கழகம்	2	2
(5) ஐரோப்பியர்கள்	4	4

இடங்கள் வினியோகிக்கப்படும் தொகுதிகள்	அரசாங்கத்தின் திட்டம்	என்னுடைய திட்டம்
(6) சிந்து இந்துக்கள்	3	4
(7) முகமதியர்கள்	18	10
(8) ஆறு நகரங்கள்	18	17
(9) மாகாணத்தின் இருபத்தாறு மாவட்டங்கள்	52	60
மொத்தம்	100	100

3. மேலே குறிப்பிடப்பட்ட தொகுதிகளில் 1, 2, 3, 4, 5 ஆகிய தொகுதிகளுக்கு அரசாங்கம் யோசனை கூறியுள்ள தேர்தல் முறையை நான் ஒப்புக் கொள்கிறேன்.

4. அரசாங்கம் சிந்து இந்துக்களுக்கு 3 இடங்கள் ஒதுக்கியிருக் கிறது. நான் அவர்களுக்கு 4 இடங்கள் கொடுக்க யோசனை கூறி யிருக்கிறேன். இவற்றில் ஒரு இடம் சிந்துவின் தீண்டாதார்களுக் கென ஒதுக்கப்பட்டு வகுப்புவாரி தொகுதிமுறையில் நிரப்பப்பட வேண்டும்.

5. ஆறு நகரங்களுக்கு நான் 17 இடங்கள் தந்திருக்கிறேன். இவற்றில் 10 இடங்கள் பம்பாய்க்குக் கொடுக்கப்பட வேண்டும். இந்த 10 இடங்களில் ஒன்று நகரின் தீண்டாதரார்களுக்கு ஒதுக்கப் பட்டு வகுப்புவாரித் தொகுதி முறையில் நிரப்பப்பட வேண்டும்.

6. இதுவரை சிந்துவிலும் பம்பாயிலும் உள்ள தீண்டா தாருக்கு எப்படி இடங்கள் அளிப்பது என்பது கூறப்பட்டது. இந்த இரண்டு இடங்கள் தவிர, பம்பாய் நகரம் நீங்கலாக மாகா ணத்தின் மற்ற பகுதியில் உள்ள தீண்டாதோருக்கு 7 இடங்கள் கொடுக்கப்பட வேண்டும். இந்த 7 இடங்கள் எந்தத் தொகுதி களில் இருக்க வேண்டும் என்பதை என்னுடைய முந்திய அறிக்கை யில் பக்கம் 7-ல் குறிப்பிட்டிருக்கிறேன். மாகாணத்தின் தீண்டா தாருக்கு 9 இடங்கள் இம்மாதிரியாகக் கொடுக்கப்பட வேண் டும். ஒடுக்கப்பட்ட வகுப்புகள் என்பதற்குப் பொருள் வரையறை செய்வது பம்பாய் அரசாங்கத்துக்குக் கடினமாயிருக்கிறது.

இது உண்மையில் கடினமானதல்ல. ஏனென்றால் நடைமுறை நிலையில் எல்லா விஷயங்களிலும் தீண்டாதார்கள் என்பதும் ஒடுக்கப்பட்ட வகுப்புகள் என்பதும் ஒன்றுதான். தீண்டாதாரின் தாழ்ந்த நிலையை நன்கு தெரிந்திருந்தும் பம்பாய் அரசாங்கம் கடினசித்தம் காட்டுவது கொடுமையாயிருக்கிறது. ஒடுக்கப்பட்ட வகுப்புகளுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்க மறுப்பதன் மூலம் அரசாங்கம் மிக முக்கியமாகப் பாதுகாக்க வேண்டிய நலன்களை மனம் அறிந்தே மிகப் பெரிய அபாயத்துக்குள்ளாக்கியிருக்கிறது.

குழு இந்தப் பெரிய அபாயத்தைத் தவிர்க்கும் என்று நான் உறுதியாகக் கருதுகிறேன்.

7. மொத்தமுள்ள 60 இடங்களிலிருந்து 7 இடங்களை இவ்வாறு எடுத்துவிட்டபின் மீதமுள்ள 53 இடங்களை 26 மாவட்டங்களின் தீண்டத்தக்க மக்களிடையே பின்வருமாறு வினியோகம் செய்யலாம் என்று நான் யோசனை கூறுகிறேன்:

சிந்துவின் 7 மாவட்டங்கள் ஒவ்வொன்றும் 2 பிரதிநிதிகள் வீதம் 14 பேரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று அரசாங்கம் கூறியிருப்பதை நான் முற்றிலுமாக ஏற்கமுடியவில்லை என்றாலும், அதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் சிந்துவுக்கு வெளியே உள்ள 19 மாவட்டங்களில் இரு உறுப்பினர் கொண்ட தொகுதிகள் போதாது என்பது என் கருத்து. தீண்டத்தக்க இந்துக்கள் ஒரே வகையினராக இல்லை என்பதே இதற்கு முக்கிய காரணம். இந்த மக்களின் உட்பிரிவுகளின் ஆர்வ விருப்பங்களை நிறைவேற்றுவதற்கு, சில இடங்களிலாவது இரு-உறுப்பினர் தொகுதி முறை [91(2)] கைவிட வேண்டும். இந்த 19 மாவட்டங்களிடையே 39 இடங்களைப் பிரித்துக் கொடுப்பதற்கு, முதலில் இந்த மாவட்டங்களை மொழி அடிப்படையில் பின்வருமாறு குழுக்களாகப் பிரிக்க வேண்டும்:

மாவட்டங்கள்		தீண்டத்தக்க இந்துக்களின் மக்கள்தொகை
1. குஜராத்தி		
1. அகமதாபாத்	....	614,286
2. ப்ரோச்	....	170,545
3. கைரா	....	556,667
4. பஞ்ச் மஹல்	....	259,929
5. சூரத்	....	535,236
மொத்தம்		21,36,663
2 மராத்தி		
1. தாணா	....	736,915
2. கொலாபா	....	509,158
3. ரத்னகிரி	....	1,003.240
4. அகமத்நகர்	....	738,747
5. காந்தேஷ் கிழக்கு	....	789,740
6. காந்தேஷ் மேற்கு	....	437,391
7. நாசிக்	....	745,965
8. சதாரா	....	883,488

மாவட்டங்கள்		தீண்டத்தக்க இந்துக்களின் மக்கள்தொகை
9. புனா	....	858,607
10. ஷோலாப்பூர்	....	574,152
	மொத்தம்	72,77,403

3. கன்னடம்

1. பெல்காம்	....	734,598
2. பிஜப்பூர்	....	677,041
3. தார்வார்	....	820,345
4. கனரா	....	372,857
	மொத்தம்	26,04,841

இந்த 19 மாவட்டங்களில் தீண்டத்தக்க இந்துக்களின் மொத்தத் தொகை 12,018,907.

இந்த மாவட்டங்களுக்கான 39 இடங்களில் 8 இடங்கள் குஜராத்தி மாவட்டங்களுக்கும், மராட்டி மாவட்டங்களுக்கு 23-ம், கன்னட மாவட்டங்களுக்கு 8 இடங்களும் கொடுப்பது என்னுடைய யோசனை.

இந்த இடங்களுக்கான தொகுதிகள் பின்வருமாறு இருக்கலாம்:

மொழி மாவட்டங்கள்	ஒவ்வொரு தொகுதியிலும் மக்கள்தொகை	தொகுதிகள் எண்	அந்தத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர் எண்ணிக்கை
1	2	3	4
1. குஜராத்தி			
1. அகமத் நகர்	6,14,286	I	2
2. ப்ரோச் .... 3. கைரா	7,27,212	II	3
4. பஞ்ச் மஹல் .... 5. சூரத்	7,95,165	III	3
2. மராத்தி			
1. தாணா ... 2. கொலாபா	12,46,073	IV	4
3. ரத்னகரி	10,03,240	V.	2

1		2	3	4
4. அகமத்நகர் 5. நாசிக்	...	14,84,712	VI	2 3
6. காந்தேஷ் கிழக்கு 7. காந்தேஷ் மேற்கு	...	12,27,131	VII	3
8. சதாரா	...	8,83,488	VIII	*
9. புனா	...	8,58,607	IX	3
10. ஷோலாப்பூர்	...	5,74,152	X	3
		3. கன்னடம்.		
1. பெல்காம் 2. பிஜாப்பூர்	...	14,11,639	XI	4
3. தார்வார் 4. கனரா	...	11,93,202	XII	4
19 மாவட்டங்களுக்கும் மொத்தப் பிரதிநிதிகள் எண்ணிக்கை				39

மாவட்டங்களை இவ்வாறு குழுக்களாகப் பிரிப்பதில் உள்ள முக்கியமான அனுகூலம் மராட்டியர், லிங்காயத்துகள் ஆகியோரின் கோரிக்கைகளை வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறை இல்லாமலே நிறைவேற்ற முடியும் என்பதாகும். ஒரு மாவட்டம் அரசியல் நோக்கங்களுக்காக அதன் எல்லைகளைக் கடந்து செயல்படுவதை எதிர்த்து ஆட்சேபம் கூறப்பட்டால் அதை முக்கியமாகக் கருத வேண்டியதில்லை. இவ்வாறு எல்லை மீறிச் செயல்படுவதனால் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் செயல்பட வேண்டிய பிரிவுகளைக் குறைக்க இது உதவுகிறது என்பதையே முக்கியமாகக் கருத வேண்டும்.

8. முகமதியர்களுக்குக் கொடுக்க வேண்டிய பிரதிநிதிகளின் எண்ணிக்கை பற்றி பம்பாய் அரசாங்கம் கூறியுள்ள யோசனையிலிருந்து மாறுபட்டதான யோசனையை நான் கூறியிருக்கிறேன். பிரதிநிதித்துவம் கொடுப்பதற்கான இரண்டு அடிப்படைகளான மக்கள் தொகை, காங்கிரஸ் திட்டம் ஆகியவற்றில் அரசாங்கம் பின்னதை ஏற்றுக் கொண்டுள்ளது. அதற்கான காரணம் எதுவும் கூறப்படவில்லை. சீர்திருத்தத் திட்டத்தை வரைந்தவர்கள் நன்கு பரிசீலனை செய்து தெரிவித்துள்ள கருத்துக்கு முரண்பட்ட விதத்தில் அரசாங்கம் இவ்வாறு செய்திருக்கிறது. காங்கிரஸ்-லீக் திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் முகமதியர் பிரதிநிதித்துவ விகிதம் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்துவதைத் தவிர வேறு அடிப்படை எதுவும் இல்லை என்பது அவர்கள் கூறிய கருத்து. காங்கிரஸில் இருப்பவர்கள் யார் என்பதைப் பார்க்கும்போது, பிறர் சார்பில் அது கொடுக்கும் வாக்குறுதிகள், அதன் ஆலோசனைகளில் எந்தப்

* மூலத்தில் சதாரா மாவட்டம் சம்பந்தமாக எந்தப் புள்ளி விவரமும் தரப்படவில்லை.

பங்கும் எடுக்காத பெருந்தொகையான மக்களைக் கட்டுப்படுத்த முடியாது என்பது சுட்டிக்காட்ட வேண்டியதாகும்.

9. இந்த மாகாணத்தின் முகமதியர்கள் மொத்த மக்கள் தொகையில் 20 சதவீதமாக இருக்கிறார்கள். எனவே மக்கள் தொகை அடிப்படையில், தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய 100 இடங்களில் 20 இடங்களே அவர்களுக்குக் கொடுக்க வேண்டியவை. ஆயினும் மக்கள் தொகைக் கணக்குடன் அவசியத்தையும் சேர்த்துக் கருதினால் முகமதியர்களுக்கு 24 இடங்கள் கொடுத்தால் அவர்கள் திருப்தியடைவார்கள் என்று நான் நினைக்கிறேன். இதற்கு மேல் இடங்கள் கொடுப்பதைச் சகித்துக் கொள்ள முடியாது. ஏனென்றால் மற்ற வகுப்புகளுக்கு பாதகம் செய்வதன் மூலமே அவ்வாறு கொடுக்க முடியும். இந்த 24 இடங்களில் சிந்துவின் 7 மாவட்டங்கள் ஒவ்வொன்றும் 2 பிரதிநிதிகள் வீதம் 14 முகமதியர்களைத் தேர்ந்தெடுக்கும். மீதமுள்ள 10 இடங்கள் பின்வருமாறு பிரித்துக் கொடுக்கப்படும்:

	மக்கள் தொகை	பிரதிநிதிகள் எண்ணிக்கை
1. பம்பாய் நகரம்	179,246	2
2. வடக்குப் பகுதி	342,696	2
3. மத்திய பகுதி	367,509	3
4. தெற்குப் பகுதி	457,997	3
		மொத்தம் 10

முகமதியர்கள் விஷயத்தில் கூட நிலப்பிரிவு அடிப்படையில் பிரிப்பதைவிட (divitional grouping) மொழி அடிப்படையில் பிரிப்பதையே நான் விரும்புகிறேன். தானா மாவட்டமும் சூரத் மாவட்டமும் ஒரே நிலப்பிரிவில் (டிவிஷனில்) உள்ள மாவட்டங்களாயினும் இந்த இரண்டு மாவட்டங்களிலும் உள்ள முகமதியர்களுக்கு இடையே எப்படி உறவு இணைப்பு இருக்க முடியும் என்று எனக்குத் தெரியவில்லை. இனத்தால் வேறுபட்டுள்ள மக்களை அரசியல் நோக்கங்களுக்காக ஒரு குழுவில் சேர்ப்பது அர்த்தமற்றது.

திரு. பீம்ராவ் ஆர். அம்பேத்கர் அழைக்கப்பட்டு விசாரிக்கப்படுதல்

ஸர் ஃப்ராங்க் ஸ்லை (Sir Frank Sly):

அவர் ஸிடன்ஹாம் வணிகவியல் கல்லூரியில் (Sydenham College of Commerce) பேராசிரியர். பம்பாய் எல்ஃபின்ஸ்டன்

கல்லூரியிலிருந்து பட்டம் பெற்றார். நியூயார்க், கொலம்பியா பல்கலைக் கழகத்தில் எம்.ஏ. பட்டம் பெற்றவர். அவர் சாதியில் மகார். அவரது அறிக்கையில் பெரும்பாலும் ஒடுக்கப்பட்ட வகுப்பினர்களைப் பற்றிக் கூறியிருக்கிறார்.

இந்து சமூகத்தைப் பொறுத்தமட்டில் அவர் அதை இரண்டு வகுப்பினராக தீண்டத்தக்கவர்கள், தீண்டாதார் என்று பிரித்திருக்கிறார்: நடைமுறையில் குழப்பத்திற்கு இடமின்றித் தெரியும் வித்தியாசம் இது; மேலும் இது சாதிகளாகப் பிரிப்பதைவிட செளகரியமான பிரிவினை. பிராமணர்கள், பிராமணரல்லாதார் என்றும் ஒரு வித்தியாசம் இருப்பதை அவர் ஒப்புக் கொள்கிறார். இந்த வித்தியர்சம் அவ்வளவு முக்கியமானதல்ல. பிராமணருக்கும் பிராமணரல்லாதாருக்கும் இடையே உள்ள வித்தியாசம், ஒரு வேட்பாளர் பற்றி வாக்காளர் கொள்ளும் மனப்பான்மையில் அதிக வேறுபாட்டுக்குக் காரணமாயிராது. ஆனால் தீண்டத்தக்கவருக்கும் தீண்டத்தகாதவருக்கும் இடையில் உள்ள வித்தியாசம் இந்த மனப்பான்மையில் பெரிதும் வேறுபாட்டை ஏற்படுத்தும்.

பிராமண்ரல்லாதாருக்கு வகுப்புவாரித் தொகுதிக்கு அவசியம் இருப்பதாக அவர் கருதவில்லை. ஏனென்றால் அவருடைய துணை அறிக்கையில் கூறப்பட்டுள்ள மூன்று உறுப்பினர் தொகுதி முறை ஏற்கப்பட்டால் பிராமணரல்லாதாருக்குச் சில இடங்கள் கிடைக்கும். அவருடைய எழுத்து மூலமான அறிக்கையின் 16-வது பாராவில் கொடுத்துள்ள புள்ளி விவரங்கள் மூலம், வாக்குரிமை பெறுவதற்கு அனைவருக்கும் ஒரே மாதிரியாகத் தகுதி நிர்ணயம் செய்தால், மக்கள் தொகையில் சிறுபான்மையாக உள்ள ஒரு வகுப்பு, வாக்காளர் எண்ணிக்கையில் பெரும்பான்மை ஆகிவிட முடியும் என்று காட்டுவது அவரது நோக்கம். அவர் குறிப்பிட்டுள்ள வகுப்புகளில் சில, மாகாணம் முழுவதிலும் சிறுபான்மையாகவும், சில மாவட்டங்களில் பெரும்பான்மையாகவும் இருக்கலாம். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கோரிக்கைக் காய்ச்சலைக் கூடிய மட்டும் குறைக்க முயல வேண்டும்; இதற்காக அவர் மூன்று உறுப்பினர் தொகுதிகளை யோசனை கூறியிருக்கிறார்.

வாக்குரிமைக்குத் தகுதி நிர்ணயிப்பதில் தீண்டாதார் சம்பந்தமாக வித்தியாசமாக நிர்ணயிக்க வேண்டும் என்று அவர் கோரினார். ஆனால் இரண்டு உறுப்பினர்களுக்கு மேல் உள்ள தொகுதி முறையை ஏற்றால் வாக்குரிமைத் தகுதியைக் குறைத்து நிர்ணயிப்பதன் முக்கியத்துவம் குறையும். சிறிய தொகுதிகள் விஷயத்தில், உதாரணமாக, மராட்டியர் விஷயத்தில் அவற்றைக் குழுக்களாகச் சேர்ப்பது விரும்பத்தக்கது.

ஒரு தொகுதியில் ஒரு குறிப்பிட்ட வகுப்புக்குப் பெரும்பான்மை இருந்தால் அந்த வகுப்புக்குத் தனியான வகுப்புவாரி பிரதிநிதித்துவம் தேவையில்லை. ஒர குறிப்பிட்ட தொகுதியில் தீண்டாதார்

பெரும்பான்மையாக இருந்தால் அவர் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கோரமாட்டார். ஒரே மாதிரியான வாக்குரிமை தகுதி நிர்ணயத்தில் அவர்கள் சிறுபான்மையாக இருப்பதாலும், எப்போதுமே அவ்வாறு சிறுபான்மையாகவே இருப்பார்கள் என்பதாலும்தான் அவர்களுக்குத் தனியான பிரதிநிதித்துவம் வேண்டும் என்று கேட்கிறார். வாக்குரிமைத் தகுதியைக் குறைத்து நிர்ணயிக்க வேண்டும் என்று அவர் கோருவதற்குக் காரணம் தீண்டாதார், தீண்டாதாராக இருப்பதனாலேயே சொத்து இல்லாதவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் வியாபாரம் நடத்த முடியாது; ஏனென்றால் அவர்களிடமிருந்து யாரும் பொருள்களை வாங்க மாட்டார்கள். ஒரு மகார் பெண் தர்பூசணிப் பழம் விற்றாள் என்பதற்காக அவள் காவல் நிலையத்துக்கு இட்டுச் செல்லப்பட்ட நிகழ்ச்சி ஒன்று அவருக்கு நினைவிருக்கிறது. பம்பாய் மாகாணத்துக்கு வெளியில் உள்ள நிலைமைகள் பற்றி அவருக்குத் தெரியாது. பம்பாய் மாகாணத்தின் பஞ்சாலைகளில் தீண்டாதார் நெசவுப் பிரிவில் வேலை செய்ய அனுமதிக்கப்படுவதில்லை. ஒரு இடத்தில் தீண்டாதார் ஒருவர் தாம் ஒரு முகமதியர் என்று கூறிக் கொண்டு நெசவுப் பிரிவில் வேலை செய்தார். ஆனால் உண்மை தெரிந்தபோது அவர் கடுமையாக அடிக்கப்பட்டார்.

''தீண்டாதார்'' என்பதற்கு, தொடுவதன் மூலமாகத் தீட்டு ஏற்படுத்துபவர் என்று பொருள் வரையறை செய்வது தேர்தல் காரியத்துக்குப் போதுமான வரையறையாகும். சில சாதிகள் சில மாவட்டங்களில் தீண்டத்தகாதவையாகவும், வேறு சில மாவட்டங்களில் தீண்டத்தக்கவையாகவும் இருப்பதில்லை.

அவருடைய கணக்குப்படி தீண்டாதார்கள் மக்கள் தொகையில் 8 சதவீதம் இருக்கிறார்கள். ஆனால் அவர் அவர்களுக்கு 9 இடங்கள் தரப்பட வேண்டும் என்று யோசனை கூறியிருக்கிறார். இது சுமார் 9 சதவீதத்துக்குச் சமமாகும். இந்த இடங்கள் தனியான வகுப்புவாரித் தேர்தல் மூலம் நிரப்பப்பட வேண்டும்.

தீண்டாதார் இப்போது உள்ள அபிவிருத்தி நிலையில் பொறுப்புள்ள முறையில் வாக்களிக்கத் தகுதி பெற்றிருக்கவில்லை என்பது அவருக்குத் தெரியும். பம்பாய் மாகாணம் முழுவதிலும் ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்குள் ஒரே ஒரு பி. ஏ.யும், மெட்ரிக்குலேஷன் படித்தவர்கள் 6 அல்லது 7 பேரும்தான் இருக்கிறார்கள். ஆங்கிலம் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களின் விகிதம் மிகவும் குறைவு; ஆனால் பிற்பட்ட வகுப்புகளில் உள்ளதைவிட அதிகம் குறைவானதல்ல. ஒடுக்கப்பட்ட வகுப்பினர், குறிப்பாக மகார்களும் சமார்களும் வாக்குரிமையைச் செலுத்தத் தகுதிபெற்றவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு போதனை அளிக்கும் ஒரு பயிற்சியாகவும் கூட வாக்குரிமை அளிக்க அவர் விரும்புகிறார். அவர்களில் குறைந்தது 25 பேர் அல்லது அதற்கும் அதிகமானோர் உயர்நிலைப் பள்ளியில் 6-வது அல்லது 7-வது வகுப்பு படித்தவர்களைக்

கண்டுபிடிக்க முடியும். இந்த எண்ணிக்கை அதிகம் அல்ல என்றாலும், ஒடுக்கப்பட்ட வகுப்புகளுக்கு அவர் யோசனை கூறியுள்ள 9 இடங்களை இவர்களிலிருந்து நிரப்ப முடியும். இத்தகைய வேட்பாளர் நடைமுறை விஷயங்களில் பட்டதாரிக்குச் சமமாயிருப்பார்; பட்டதாரி இவரைவிட நல்ல முறையில் தமது கருத்தை வெளியிட முடியும் என்பதுதான் வித்தியாசம்.

ஒடுக்கப்பட்ட வகுப்புகளுக்குப் பிரதிநிதிகளாக மற்ற வகுப்புகளிலிருந்து யாரும் வரக்கூடிய எந்த முறையையும் அவர் எதிர்க்கிறார். உதாரணமாக, சமயப் பரப்பாளர்கள் (missionaries) பிரதிநிதிகளாக இருப்பது உண்மையில் பிரதிநிதித்துவமே அல்ல, என்கிறார்.

ஒடுக்கப்பட்ட வகுப்புகளுக்கு வேண்டிய எண்ணிக்கையில் இடங்கள் கிடைப்பதற்காக, முகமதியர்களுக்க அரசாங்கம் யோசனை தெரிவித்துள்ள 18 இடங்களை 10 இடங்களாகக் குறைக்கலாம் என்கிறார். மக்கள் தொகை அடிப்படையில் முகமதியர்களுக்கு 20 சதவீதம் இடங்கள்தான் கிடைக்க வேண்டும் என்பதால் இவ்வாறு குறைப்பது நியாயம்தான் என்று கூறுகிறார். காங்கிரஸ்-லீக் ஒப்பந்தம் எல்லோரையும் கட்டுப்படுத்தும் என்று அவர் கருதவில்லை.

திரு ஹெய்லி:

தீண்டாதார் என்போர் குடியுரிமைப்படியான சில உரிமைகள் மறுக்கப்பட்டுள்ள மக்கள். உதாரணமாக, தெருவில் நடந்து செல்வது ஒவ்வொரு குடிமகனுக்கும் உள்ள உரிமை. ஒருவரை அவ்வாறு நடக்க விடாமல் தற்காலிகமாகக்கூடத் தடுப்பது அவரது உரிமையில் குறுக்கிடும் செயலாகும். ஒருவர் தமது உரிமையைப் பயன்படுத்த முடியாமல் சட்டத்தால் தடுக்கப்பட்டாலும் சமூக வழக்கத்தால் தடுக்கப்பட்டாலும் அவருக்கு அதனால் எந்த வித்தியாசமும் இல்லை. அரசாங்கம் சமூக வழக்கத்தை அங்கீகரித்திருக்கிறது. தீண்டாத வகுப்பினர் அரசாங்க சேவையில் வேலைக்கு அமர்த்தப்படவில்லை.

வாக்குரிமை பெறுவதற்கு வேண்டிய தகுதியைத் ஒடுக்கப்பட்ட மக்கள் விஷயத்தில் குறைவாக நிர்ணயிக்க வேண்டும் என்று அவர் யோசனை கூறுகிறார். ஏனென்றால் அந்த வகுப்பின் நிலையை மேம்படுத்துவது அரசாங்கத்தின் நோக்கமாக இருக்க வேண்டும்.

மக்கள்தொகை புள்ளிவிவர அறிக்கையில் உள்ள விவரங்களிலிருந்து தீண்டத்தக்கவர், தீண்டத்தகாதவர் என்ற பிரச்சினை சிந்துவிலும் இருப்பதாகக் கூற வேண்டும் என்கிறார். அங்குள்ள மக்களில் பெரும் பகுதியினர் முகமதியர்களாக இருந்தாலும், இந்துக்களும் இருக்கிறார்கள். சிந்துவில் இந்துக்களுக்குத் தனியான

ஏற்பாடுகள் செய்யப்படும் என்றால், ஒடுக்கப்பட்ட வகுப்புகளுக்கும் அவ்வாறு செய்யாமலிருப்பதற்குக் காரணம் எதுவும் கிடையாது என்று அவர் கூறுகிறார்.

திரு. பானர்ஜி:

ஒடுக்கப்பட்ட வகுப்பினர், ஆங்கிலம் பேசக் கூடியவர்களாகவும் சபையில் தங்களுக்குப் பிரதிநிதியாயிருக்கக் கூடியவர்களுமான 9 பேரைக் கண்டுபிடிக்க முடியும். ஆறாம் வகுப்பு மெட்ரிக் குலேஷனுக்குக் கீழே உள்ள வகுப்பு. அந்த வகுப்புத் தேறியவர் சட்டசபையில் நடக்கும் விவாதங்களைப் புரிந்து கொள்ள முடியும்.

அரசியல் விஷயங்களுக்கு, ஒடுக்கப்பட்ட வகுப்பு என்பதற்குப் பொருள் வரையறை செய்வது கடினம் அல்ல; ஒடுக்கப்பட்ட வகுப்பினர் என்றால் தீண்டாதார்களே. ஒடுக்கப்பட்ட வகுப்பைச் சேராதர் எவரும் தாம் அந்த வகுப்பைச் சேர்ந்தவர் என்று காட்டிக் கொள்ள நினைக்க மாட்டார். ஆனால் பிற்பட்ட வகுப்புகளைப் பொறுத்தமட்டில் இம்மாதிரி நடக்கக் கூடும்.

ஒடுக்கப்பட்டவர்களுக்குக் குறைந்தபட்சமாக 8 பிரதிநிதிகள் இருப்பதை அவர் ஏற்பார். இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருக்க வேண்டும். நியமனம் செய்யப்பட்ட பிரதிநிதிகள் அவர்களுடைய நலன்களுக்குப் போதிய அளவில் பிரதிநிதித்துவம் தரமாட்டார்கள்.

திரு. க்ரம்ப் (Mr. Crump):

சிந்துவில் உள்ள தீண்டாதார் நிலைமைகள் பற்றியும் பிரச்சினை பற்றியும் அவருக்கு அனுபவம் இல்லை. அங்கே பங்கிகள் என்ற ஒரே வகுப்பினர்தான் இருக்கிறார்கள் என்று கூறுவதைத் தவிர அவரால் வேறு எதுவும் சொல்ல முடியாது. அவருக்குத் தெரிந்த அளவில் சிந்துவின் மொத்த மக்கள் தொகை 837,426; தீண்டாதார் வகுப்பினரின் மொத்தத் தொகை 135,224.

திரு. நடராஜன்:

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் நோக்கம் எல்லோருக்கும் சமவாய்ப்புக் கொடுப்பதாகும் என்பது அவரது கருத்து. அதிகாரத்தின் ஒரு பெரிய பங்கை மக்களின் சபைகளுக்கு மாற்றிக் கொடுக்கும்போது சமூக அமைப்பின் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ள கஷ்டங்களும் பாதிப்புகளும் அரசியல் அமைப்புகளிலும் ஏற்படாமலும் நிரந்தரமாக்கப்படாமலும் பார்த்துக் கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். இப்போதுள்ள துல்லியமான நிலைமையைப் பொறுத்தமட்டில், உதாரணமாக, ஒடுக்கப்பட்ட மக்களுக்கான பரேல் (Parel) பள்ளிக்கூடம் நல்ல பள்ளிக்கூடம் என்பதால்

அதில் மேல் சாதிகளைச் சேர்ந்த பல மாணவர்கள் படிக்கிறார்கள் என்பதை அவர் ஒப்புக் கொள்கிறார். அதே போல அவர் ஒடுக்கப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவராக இருந்தாலும், அவர் ஒரு பேராசிரியர் என்ற முறையில் எல்லா வகுப்புகளையும் சேர்ந்த மாணவர்களும் அவரிடம் படிக்கிறார்கள்; உயர் சாதி மாணவர்களுடனான நடவடிக்கைகளில் அவருக்கு எந்தக் கஷ்டமும் இல்லை. தீண்டாதாருக்கு இடங்கள் கொடுப்பதன் மூலம் அரசாங்கம் அவர்களை அங்கீகரித்தால் அவர்களுடைய அந்தஸ்து உயருவதுடன் அவர்களுடைய திறன்களுக்கும் ஊக்கம் கிடைக்கும். அவர்களுக்கு எத்தனை இடங்கள் இருக்க வேண்டும் என்பதில் குறிப்பிட்ட எண்ணிக்கை எதையும் அவர் வலியுறுத்தவில்லை; இடங்கள் போதிய எண்ணிக்கையில் இருக்க வேண்டும் என்பதுதான் அவரது கோரிக்கை.

பின்வரும் நபர்கள் பம்பாயில் 24 ஜனவரி 1919 முதல் 31 ஜனவரி 1919 வரை அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர்:

1. எல். சி. க்ரம்ப், ஐ. ஸி. எஸ்., பம்பாய் அரசாங்கத்தின் சார்பாக *(24, ஜனவரி 1919)*
2. ஹானரபிள் மேஜர் ஸி. ஃபெர்னாண்டெஸ், எம். டி., ஐ. எம். எஸ் (தற்காலிகம்)
   (24 ஜனவரி 1919)
3. ரெவரண்ட் கானன் டி. எல். ஜோஷி, பம்பாய் இந்தியன் கிரிஸ்டியன் (ப்ராடெஸ்டெண்ட்) அஸோசியேஷன் சார்பாக *(24 ஜனவரி 1919)*
4. லெஃப்டினன்ட் கர்னல் எச். ஏ. ஜே. கிட்னி, ஐ. எம். எஸ் (ஓய்வு), ஆங்கிலோ-இந்தியன் எம்பயர் லீக் (பம்பாய் கிளை) சார்பாக *(25 ஜனவரி, 1919)*
5. ஸர் ஜாம்ஸெட்ஜீ ஜீஜிபாய், பார்ட், *(25 ஜனவரி, 1919)*
6. டபிள்யு. ஏ. ஹேக் ப்ரெளன், யுரோப்பியன் அஸோஸியேஷனின் பம்பாய் கிளை சார்பாக *(25 ஜனவரி 1919)*
7. மிஸ்டர் டி. டி. ஸதாயே, பம்பாய் நேஷனல் யூனியன் சார்பாக *(25 ஜனவரி 1919)*
8. ஹானரபிள் மிஸ்டர் எம். ஏ. ஜின்னா *(25 ஜனவரி, 1919)*
9. மிஸ்டர் ஸி. என். வாடியா, பம்பாய் மில் உரிமையாளர்கள் அஸோஸியேஷன் சார்பாக *(27 ஜனவரி 1919)*
10. மிஸ்டர் வி. ஆர். ஷிண்டே *(27 ஜனவரி 1919)*
11. மிஸ்டர் கே. ஆர். கோரேகாவ்கர், மராட்டா ஐக்யீச்சு சபா சார்பாக *(27 ஜனவரி 1919)*

12. ஹானரபிள் மிஸ்டர் எம். ஏ. ஜின்னா (27 ஜனவரி, 1919)
13. மீர்ஜா அலி முகமத்கான் (27 ஜனவரி 1919)
14. பீம்ராவ் ஆர். அம்பேத்கர் அவர்கள் (27 ஜனவரி 1919)
15. ஹானரபிள் மிஸ்டர் வி. ஜே. பட்டேல் (28 ஜனவரி 1919)
16. ஹானரபிள் ஸாஹப் ஹீராலால் தேசாய்பாய் தேசாய் (28 ஜனவரி 1919)
17. ஹானரபிள் மிஸ்டர் சுணிலால் வி. மேத்தா (28 ஜனவரி 1919)
18. ஏ. பி. லட்டே அவர்கள் (28 ஜனவரி 1919)
19. ஹானரபிள் மிஸ்டர் ஆர். பி. பராஞ்ஜ்பை (28 ஜனவரி 1919)
20. மிஸ்டர் வி. ஆர். கோத்தாரி, டெக்கான் ரயட்ஸ் அஸோஸியேஷன் சார்பாக (28 ஜனவரி 1919)
21. மிஸ்டர் உமர் ஸோபானி, மிஸ்டர் எஸ். ஜி. பாங்கர் இருவரும் பம்பாய் ஹோம் ரூல் லீக் சார்பாக (28 ஜனவரி 1919)
22. எச். என். ஆப்டே அவர்கள், டெக்கான் சபா, புனா சார்பாக (23 ஜனவரி, 1919)
23. என். ஸி. கேல்கர் அவர்கள் (29 ஜனவரி 1919)
24. ஹானரபிள் மிஸ்டர் டி. வி. பெல்லி (29 ஜனவரி, 1919)
25. ராவ் பகதூர் டாகுர்ராம் கபில்ராம் (29 ஜனவரி, 1919)
26. என். எம். ஜோஷி அவர்கள், உறுப்பினர் ஸர்வன்ட்ஸ் ஆஃப் இந்தியா ஸொஸைட்டி (30 ஜனவரி 1919)
27. ஹானரபிள் ராவ் பகதூர் வெங்கடேஷ் ஸ்ரீனிவாஸ் நாயக் (30 ஜனவரி 1919)
28. பண்டிட் ஆர். சிக்கோடி (30 ஜனவரி 1919)
29. ஹானரபிள் மிஸ்டர் எஸ். ஜே. கில்லம், ஸர் தாமஸ் பிர்கெட், நைட், பம்பாய் சேம்பர் ஆஃப் காமர்ஸ் சார்பாக (30 ஜனவரி 1919)
30. மிஸ்டர் அம்பாலால் ஸாராபாய், அவருடன் மிஸ்டர் கஸ்தூர்பாய் லால்பாய், தல்பத்பாய், அஹமதாபாத் மில் முதலாளிகள் சங்கத்தின் சாாபாக (30 ஜனவரி 1919)
31. தேவிதாஸ் மாதவ்ஜி தக்கர்ஸே அவர்கள், பம்பாய் நேட்டிவ் பீஸ் கூட்ஸ் மெர்ச்சண்ட்ஸ் அஸோஸியேஷன் சார்பாக (30 ஜனவரி 1919)
32. ஹானரபிள் மிஸ்டர் குலாம் ஹுஸேன் ஹிதாயத்துல்லா (31 ஜனவரி 1919)

33. மிஸ்டர் பி. வி. ஜாதவ் (31 ஜனவரி 1919)

34. ஹானரபிள் ஸர் பஜுல்பாய் கரீம்பாய், நைட், ஸி. ஐ. இ. (31 ஜனவரி 1919)

35. எச். பி. மோடி அவர்கள் (31 ஜனவரி 1919)

36. சர்தார் வி. என். முத்தலிக், இனாம்தார்ஸ் ஸென்ட்ரல் அஸோஸியேஷன், ஸதாரா, சார்பாக (31 ஜனவரி 1919).

2

காலத்தின் அடிச்சுவடுகள்: 3

கூட்டாட்சியா? சுதந்திரமா?

(காலே நினைவுச் சொற்பொழிவு)

1939, ஜனவரி 29ஆம் நாளன்று
புனா கோகலே மன்றத்தில் நடைபெற்ற
கோகலே அரசியல், பொருளாதார நிறுவனத்தின்
வருடாந்தர விழாவில்
நிகழ்த்திய சொற்பொழிவு

''இன்று நீங்கள் செல்லும் திசைவழியைவிட
நீங்கள் கடந்து வந்துள்ள தொலைவு குறைந்த முக்கியத்துவமுடையதே.''

— டால்ஸ்டாய்

முதல் பதிப்பு: 1939
முதல் பதிப்பிலிருந்து மறுபதிப்பு செய்யப்பட்டது.

கூட்டாட்சியா? சுதந்திரமா?

முன்னுரை

இக்கட்டுரையின் தோற்றத்தையும், அதைத் தற்போது வெளியிடத் தூண்டியதற்கான நோக்கத்தையும் குறித்து ஓரிரு வார்த்தைகள் கூறுவது சந்தர்ப்பத்திற்குப் புறம்பானதல்ல என்றே நான் எண்ணு கிறேன்.

டாக்டர் டி. ஆர். காட்கிலின் (Dr. D. R. Gadgil) தலைமையில் இயங்கிவரும் கோகலே அரசியல், பொருளாதார நிறுவனம் (Gokhale Institute of Politics and Economics) என்று பெயர் கொண்ட அமைப்பு புனாவில்* உள்ளது என்பது இந்நாட்டில் பலருக்கும் தெரிந்திருக்கும். இந்த அமைப்பு, ஆண்டுதோறும் நிறுவனர் தினம் என்ற விழாவினைக் கொண்டாடுகின்றது; அப்போது அரசியல் அல்லது பொருளாதாரத்துடன் தொடர் புள்ள ஏதேனும் பொருள் பற்றி உரையாற்ற யாரையேனும் அது அழைக்கிறது. இவ்வாண்டு உரை நிகழ்த்துமாறு டாக்டர் காட்கில் என்னைக் கேட்டுக் கொண்டார். நான் அழைப்பினை ஏற்று, கூட்டாட்சித் திட்டம் (Federal Scheme) என்ற பொருள் பற்றிப் பேச இசைந்தேன். அந்த உரையில் 1) கூட்டாட்சியின் கட்டுக் கோப்பு மற்றும் 2) அக்கட்டுக்கோப்பு குறித்த விமர்சனம் ஆகிய இரண்டுமே அடங்கியிருந்தன. புனாவிலுள்ள கோகலே மண்டபத் தில் 1939 ஜனவரி 29-ம் நாளன்று அவ்வுரை ஆற்றப்பட்டது. நான் தயாரித்திருந்த உரை, எனக்கு அளிக்கப்பட்டிருந்த கால அளவைக் காட்டிலும் பெரிதும் நீண்டிருந்தது. இத்தகைய உரைக் கான கால அளவு வழக்கமாக ஒரு மணி நேரம்தான் என்றாலும், நான் இரண்டு மணி நேரம் உரையாற்றினேன்; இருந்தும்கூட கட்டுக்கோப்பு குறித்த முழுப் பகுதியையும் அது பற்றிய விமர் சனம் குறித்ததொரு பகுதியையும் நான் நீக்க வேண்டியதாயிற்று. அந்நிகழ்ச்சிக்காக நான் தயாரித்த முழு உரையும் இக்கட்டுரையில் அடங்கியுள்ளது.

இக்கட்டுரையின் தோற்றம் இதுவே. இதனைப் பிரசுரிப்பதற் கான காரணங்கள் பற்றிக் கூறுகிறேன். கோகலே நிறுவனத்தில் ஆற்றப்படும் எல்லா உரைகளுமே பிரசுரிக்கப்படுகின்றன. எனவே, இதுவும் முறையாக பிரசுரிக்கப்படும்தான். எனினும் இதனை நான் பிரசுரிப்பதற்கு வேறு சில காரணங்களும் எனக்குண்டு. கூட்டாட்சியைப் பொறுத்தவரை, இந்தியப் பொது மக்களில் பெரும்பாலானோர் ஒரு பனிமூட்டத்தில் வாழ்ந்து கொண்டிருப் பதாகவே தோன்றுகிறது. ஒரு கூட்டாட்சி வரப்போகிறது,

---

* புனா என்னும் நகரின் பெயர் தற்போது 'புனே' என மாற்றப்பட்டுள்ளது.

கூட்டாட்சி என்றாலே தீங்கானது, மோசமானது என்பதற்கு மேல், அந்தக் கூட்டாட்சியின் தன்மை என்ன என்பது பற்றிப் பொது மக்களுக்குத் தெளிவானதொரு கருத்துக் கிடையாது. எனவே அது குறித்த ஓர் அறிவார்ந்த எண்ணத்தினை அவர்களால் பெற முடியவில்லை. கூட்டாட்சிக் கட்டுக்கோப்பு குறித்த ஒரு வரிவடிவமும், அந்த அமைப்பு பற்றிய சிறியதொரு விமர்சனமும் அடங்கிய, அதாவது, அத்திட்டத்தைச் சரிவரப்புரிந்து கொள்ளப் போதுமானதொரு துண்டுப் பிரசுரம் பொது மக்களுக்குத் தேவையாகும். இச்சிறு நூல் அத் தேவையைப் பூர்த்தி செய்யும் என்று நான் எண்ணுகிறேன்.

இச்சிறு பிரசுரம், காலத்திற்கு ஏற்புடையதாகக் கருதப்படும் என்றும்கூட நான் கருதுகின்றேன். கூட்டாட்சி என்பது ஓர் உயிர்த்துடிப்புள்ள பிரச்சினை; அது அவசரமானதும் கூட. பிரிட்டிஷ் இந்திய மக்கள், ஒரு கூட்டாட்சி அமைப்பினை ஏற்றுக் கொள்ள வேண்டுமா, கூடாதா என்பதைத் தீர்மானிக்குமாறு விரைவில் கேட்டுக் கொள்ளப்படுவர். இந்த நாட்டின் தலையாய அரசியல் ஸ்தாபனமான காங்கிரஸ் கட்சி, மாகாண சுயாட்சியை ஏற்றுக் கொண்டதால், இந்தக் கூட்டாட்சியையும் ஏற்றுக் கொள்ளச் சம்மதிப்பதாகத் தெரிகிறது. முஸ்லிம் லீகுடன் நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகளும், இந்திய சமஸ்தானங்களுடன் மேற் கொள்ளப்பட்டு வரும் பேரங்களும், காங்கிரஸ் கட்சி கூட்டாட்சியை ஏற்றுக் கொள்ளத் தயாராக உள்ளதென்றும், மாகாணங்களில் உள்ளதைப் போன்றே மத்தியிலும் இதர கட்சிகளின் உதவியுடன் காங்கிரஸ் ஆட்சி பீடத்தில் அமருவதற்காக அக்கட்சிகளுடன் ஒரு நடைமுறை ஏற்பாட்டினைச் செய்து கொள்வதையே இந்தப் பேச்சுவார்த்தைகளும் பேரங்களும் நோக்கமாகக் கொண்டுள்ளன என்றும் எனக்குத் தோன்றுகிறது. காங்கிரசின் வலது சாரி பிரிவு தனது அமைச்சரவையையே தெரிந்தெடுக்கும் அளவிற்குச் சென்றுள்ளதென்றும், கூட்டாட்சியை ஏற்றுக் கொள்ள அது கட்டுப்பட்டு விட்டது என்றும் கூறுமளவிற்குத் திரு. சுபாஷ் சந்திர போஸ் சென்றுள்ளார். இவையனைத்தும் உண்மையா, அல்லவா என்பது பிரச்சினையல்ல. உண்மையல்ல என்றே நான் நம்புகிறேன். இது இவ்வாறிருக்க, இந்த விஷயம், மிக முக்கியமானதும் அவசரமானதுமாகும். இப்பொருள் பற்றி, ஏதேனும் கூற விரும்புபவர்கள் அனைவரும் அது குறித்து எடுத்துரைக்க வேண்டும். இத்தகைய நேரத்தில் பேசாமலிருப்பது பெரும் குற்றமாகும் என்று நான் கருதுகிறேன். அதனால்தான் எனது உரையைப் பிரசுரிக்க விரைந்துள்ளேன், கூட்டாட்சி குறித்த எனது கருத்துக்கள் பிறரை ஏற்கச் செய்ய முடியாவிடினும், அவர்கள் சிந்தனையைத் தூண்டவாவது செய்யும் என்று எண்ணுகிறேன்.

1.3.39 **பி. ஆர். அம்பேத்கர்**

ராஜ்கிரஹா, தாதர், பம்பாய் 14

1

அறிமுகம்

டாக்டர் காட்கில் அவர்களே, மற்றும் கோகலே நிறுவன மாணவர்களே, இன்று மாலை உங்களிடையே உரையாற்ற நீங்கள் விடுத்த அழைப்பு குறித்து நான் பெரிதும் பெருமைபடுகின்றேன். உங்களது 'நிறுவனர் தினம்' என்று வகுக்கப்பட்ட தினத்தைக் கொண் டாடுவதற்கென நீங்கள் இன்று குழுமியிருக்கிறீர்கள். உங்கள் நிறுவனத்தை நிறுவிய மறைந்த ராவ் பகதூர் ஆர். ஆர். காலேயை நெருக்கமாக அறியும் நற்பேறு பெற்றவன் நான். பழைய பம்பாய் சட்ட மேலவையில் அவர் எனது நண்பர்; சக உறுப்பினர். தாம் கையாண்ட ஒவ்வொரு பொருள் பற்றியும் எத்துணை கவனமும், ஆய்வும் அவர் கொண்டிருந்தார் என்பதை நான் அறிவேன். இந்த நிறுவனத்தை ஏற்படுத்த உதவியமைக்காக அறிவிலும் ஆய்விலும் அக்கறை கொண்ட அனைவரது நன்றியையும் பெறத் தகுதியான வர் அவர் என்பது உறுதி; அறிவைத் தூண்டி, அதனைப் பயன் படுத்த விழைவோருக்கு அதனை அளிப்பதே இந்த நிறுவனத் தின் பிரதான பணி என்று நான் அறிகிறேன். ஏனெனில் முதலா வதாக வேறு எதைக் காட்டிலும் அறிவே சக்தி, இரண்டாவதாக, அறிவைப் பெறுவதில் ஆர்வமும் அக்கறையும் கொண்ட அனை வருக்கும் அதனை அகழ்ந்தெடுப்பதற்கான அவகாசமும் பொறு மையும் இருப்பதில்லை. அறிவின் தேவையை உணர்ந்தவன் என்ற வகையிலும், அதனைப் பெறுவதில் உள்ள இன்னல்களைப் புரிந்து கொண்டவன் என்ற வகையிலும் உங்கள் நிறுவனருடனும் அவர் ஏற்படுத்திய இந்த நிறுவத்துடனும் தொடர்பு கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

எனது உரைக்காக, நான் தேர்ந்தெடுத்துள்ள பொருள் 1935-ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டத்தில் பொதிந் துள்ள கூட்டாட்சித் திட்டம் என்பதே. இப்பொருளின் தலைப் பானது, நான் கூட்டாட்சி அரசியல் சட்டத்தை விளக்கப் போவ தைப் போன்ற தோற்றத்தை உங்களுக்கு ஏற்படுத்தக் கூடும். அது ஒரு சாத்தியமில்லாத பணியாகும். கூட்டாட்சித் திட்டம் என்பதே மிகவும் விரிவானதொன்று. அதன் விதிகள், முதலாவ தாக. 1935 இந்திய அரசாங்கச் சட்டத்தின் 321 பகுதிகளிலும், இரண்டாவதாக, அந்தச் சட்டத்தின் பகுதியான 9 பட்டியல்களி லும், மூன்றாவதாக அச்சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்ட 31 அவை ஆணைகளிலும், நான்காவதாக, இந்திய சமஸ்தானங்களால் நிறைவேற்றப்படவுள்ள நூற்றுக்கணக்கான இணைப்பு ஒப்பந்தப் பத்திரங்களிலும் அடங்கியுள்ளன. இத்துணை விரிந்து பரந்த பொருளில் தேர்ச்சி பெற்றவராக எவரும் இருக்க முடியாது: அப்படி எவரேனும் இருந்தால், அதனை எல்லா விவரங்களுடனும் விளக்கியுரைக்க அவருக்கு ஆண்டுகள் பலவாகும். ஒரு வரம்புக்

குட்பட்ட பணியையே என் நோக்காகக் கொண்டுள்ளேன். சில ஒப்புக் கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி அந்தத் திட்டத்தைப் பரிசீலிப்பதும், அப்பரிசீலனைகளின் விளைவுகளை உங்கள் முன் வைப்பதுவுமே அது; அதன் மூலம் அத்திட்டத்தின் தகுதிகள் பற்றி நீங்களே உங்களது சொந்த தீர்ப்பினை வழங்கும் நிலையிலிருப் பீர்கள். அத்திட்டத்தின் சுருக்கத்தை எடுத்துரைப்பதை நான் அறவே தவிர்க்க முடியாது என்பது உண்மையே. எனினும் அத் திட்டத்தின் சுருக்கத்தினை நான் இப்பொழுது உங்கள் முன் தரப் போகிறேன். அது ஒரு அத்தியாவசியப் பீடிகை என்றும், அது இல்லாமற் போனால் எனது விமர்சனம் புரிந்து கொள்ள முடி யாததாக இருக்கும் என்றும் நான் உணர்கிறேன். எனது நோக்கத் திற்காக நான் தரவிருக்கும் சுருக்கம் மிகக் குறுகியதே; அத் திட்டத்தின் தகுதிகள் குறித்து நான் சொல்ல இருப்பதை நீங்கள் புரிந்து கொள்ளும் அளவிற்கே அது இருக்கும்.

இந்தியக் கூட்டாட்சியின் தோற்றமும் வளர்ச்சியும்

நவீன காலகட்டத்தில், கூட்டாட்சி அரசாங்க அமைப்பினை மேற்கொண்டதாக அறியப்படும் நாடுகள் ஐந்து. அவை யாவன: 1) அமெரிக்கா 2) சுவிட்சர்லாந்து 3) பேரரசான ஜெர் மனி 4) கனடா 5) ஆஸ்திரேலியா. இந்த ஐந்துடன் ஆறாவதாக, அகில இந்திய கூட்டாட்சியைச் சேர்ப்பதற்கு இப்பொழுது முன் மொழியப்படுகிறது.

இந்தக் கூட்டாட்சியின் பகுதிகளான பகுதிகள் (units) யாவை? இக்கேள்விக்கான விடைக்கு பகுதி 5-ஐக் காண்க. அது கூறுகிறது:

"5. இந்தியக் கூட்டாட்சிக்கான ஆணை.

(1) பாராளுமன்றத்தின் ஒவ்வொரு சபையும் அது குறித்து விண்ணப்பித்து பின் குறிப் பிடப்படும் நிபந்தனை பூர்த்தி செய்யப் பட்டால், ஓர் ஆணையின் மூலம் அதில் குறிப்பிடப்படும் நாளிலிருந்து மாட்சிமைக் குரிய மன்னரின் கீழ் இந்திய கூட்டாட்சி என்ற பெயருடன் அழைக்கப்படும் ஒரு கூட்டாட்சியாக இணைய மாட்சிமை தங்கிய மன்னர் பிரகடனப்படுத்துவது சட்டப்பூர்வமானதாகும் —

அ) மாகாணங்கள் இனிமேல் கவர்னரின் மாகாணங்கள் என்றழைக்கப்படும்; மற்றும்

ஆ) கூட்டாட்சியில் ஏற்கனவே இணைந்துள்ள இந்திய சமஸ்தானங்கள் அல்லது அதற்குப் பின்னர் இணை பவை; இவ்வாறு நிறுவப்படும் கூட்டாட்சியில் இனி மேல் பிரதம ஆணையர்கள் மாகாணங்கள் என் றழைக்கப்படும் மாகாணங்களும் அடங்கும்.

2) குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனையாவது, சமஸ்தானங்கள்—

அ) இந்தச் சட்டத்தின் முதலாவது அட்டவணை பகுதி 2-ல் கண்டுள்ள விதிகளுக்கேற்ப, ஆள்பவர்கள் மாநிலங்களவைக்கு 52 உறுப்பினர்களுக்குக் குறையாமல் தேர்வுசெய்ய உரிமை கொண்டவர்களாவர்; மற்றும்

ஆ) கூறப்பட்ட விதிகளின்படி உறுதிப்படுத்தப்பட்ட மொத்த மக்கட் தொகை, சமஸ்தானங்களின் உறுதிப்படுத்தப்பட்ட ஒட்டுமொத்த மக்கட்தொகையினரில் பாதியாவது இருந்தால் கூட்டாட்சியில் இணைந்தவர்களாவர்.''

கூட்டாட்சியின் முறையான தொடக்கத்திற்கு இந்தப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை ஒதுக்கிவிட்டாலும் கூட்டாட்சியின் பகுதிகள் (Units) (1) கவர்னர்களது மாகாணங்கள் (2) பிரதம ஆணையாளர் மாகாணங்கள் (3) இந்திய சமஸ்தானங்கள் ஆகியவையே என்பது தெளிவாகிறது.

இந்தியக் கூட்டாட்சியின் பரப்பெல்லை அளவு என்ன?

இந்தியக் கூட்டாட்சியைப் பற்றிப் பேசும்போது அது எவ்வளவு மாபெரும் அமைப்பாக இருக்கப்போகிறது என்பதைப் பலரும் உணர்ந்ததாகத் தெரியவில்லை—

	மக்கட்தொகை	பரப்பளவு	பகுதிகள்
அமெரிக்கா	122,775,040	2,973,773	48 கூட்டரசுகளும் 1 சமஷ்டி மாவட்டமும்
ஜெர்மனி	67,000,000	208,780	25
சுவிட்சர்லந்து	466,400	15,976	22
கனடா	10,376,786	3,729,665	9
ஆஸ்திரேலியா	6,629,839	2,974,581	6
இந்தியா	352,837,778	1,808,679	162

பரப்பளவைப் பொறுத்து, இந்தியக் கூட்டாட்சி, அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியாவில் ஐந்தில் மூன்றும் (3/5), கனடாவில் பாதியுமாகும். அது ஜெர்மனியைப் போல 9 மடங்கும், சுவிட்சர்லந்தைப் போல 120 மடங்கும் ஆகும். மக்கட் தொகையைப் பொறுத்து, அமெரிக்காவைக் காட்டிலும் 3 மடங்கும், ஜெர்மனியைக் காட்டிலும் 5 மடங்கும், கனடாவைக் காட்டிலும் 35 மடங்கும்,

ஆஸ்திரேலியாவைப் போல 58 மடங்கும், சுவிட்சர்லந்தைவிட 88 மடங்கும் ஆகும். அதில் அடங்கியுள்ள பகுதிகளைக் கணித்தால், அமெரிக்காவைவிட 3 மடங்கும், ஜெர்மனியை விட 6½ மடங்கும், சுவிட்சர்லாந்தைவிட 8 மடங்கும், கனடா, ஆஸ்திரேலியாவை விட முறையே 18 மடங்கும் 27 மடங்கும் பெரிதாகும். ஆக, இந்தியக் கூட்டாட்சி ஒரு பெரிய கூட்டாட்சி மட்டுமல்ல, அது உண்மையில் கூட்டாட்சிகளில் ஒரு இராடசசன் ஆகும்.

தனது அரசாங்க அதிகாரங்களையும், மேலாண்மை உரிமையையும் கூட்டாட்சி எதிலிருந்து பெறுகிறது?

கூட்டாட்சியின் நிர்வாக அதிகார உரிமை மாட்சிமை தங்கிய மன்னரின் சார்பாக கவர்னர் ஜெனரலால் பிரயோகிக்கப்படும் என்று பிரிவு 7 கூறுகிறது. கூட்டாட்சியின் அதிகார உரிமை மன்னரிடமிருந்து பெறப்படுகிறது என்பதே அதன் பொருள். இந்த அம்சத்தில் இந்தியக் கூட்டாட்சியானது அமெரிக்கக் கூட்டாட்சியிலிருந்து வேறுபடுகிறது. அமெரிக்காவில் கூட்டாட்சியின் அதிகார உரிமை மக்களிடமிருந்து பெறப்படுகிறது. அங்கு அதிகார உரிமையின் ஊற்றுக்கண் அமெரிக்க மக்களே. அமெரிக்கக் கூட்டாட்சியிலிருந்து மாறுபடும் இந்தியக் கூட்டாட்சியானது, ஆஸ்திரேலியா மற்றும் கனடாவின் கூட்டாட்சிகளின் சாயலிலுள்ளது. ஆஸ்திரேலியாவிலும் கனடாவிலும் கூட்டாட்சி அரசாங்கங்களின் அதிகார மூலம் மன்னரே; இந்திய அரசாங்கச் சட்டத்தின் 7-வது பிரிவு, ஆஸ்திரேலியச் சட்டத்தின் 61-வது பிரிவையும் கனடா நாட்டு சட்டத்தின் 9-வது பிரிவையும் ஒத்ததாகும். இந்தியக் கூட்டாட்சியானது, அமெரிக்கக் கூட்டாட்சியினின்று மாறுபட்டும் கனடா, ஆஸ்திரேலிய கூட்டாட்சிகளுடன் ஒத்துப் போகிறதென்பதும் நன்கு புரிந்து கொள்ளக் கூடியதே. அமெரிக்கா ஒரு குடியரசு; ஆனால், கனடாவும் இந்தியாவும் மன்னராட்சியின் குடியேற்ற நாடுகளாகும். அமெரிக்காவில் எல்லா அதிகார உரிமையின் ஊற்றுக்கண் மக்களே; பின்னதில், எல்லா அதிகார உரிமைகளின் ஊற்றுக்கண் மன்னரே.

மன்னரின் அதிகார உரிமை எங்கிருந்து பெறப்படுகிறது?

கனடாவையும் ஆஸ்திரேலியாவையும் பொறுத்தமட்டில், இந்தக் கேள்வி தேவையற்றதாகும்; ஏனெனில் அங்கு எல்லா அதிகார உரிமைகளின் ஊற்றுக்கண் மன்னரே; அதற்கு அப்பாலோ, அல்லது புறம்பாகவோ அவரது அதிகாரம் குறித்து எங்கும் விண்ணப்பிக்க முடியாது. இந்தியக் கூட்டாட்சியைப் பொறுத்தும் அதுவேதான் நிலைமையா? கூட்டாட்சியின் அதிகாரப்

பிரயோகத்தின் இறுதி ஊற்றுக்கண் மன்னர்தானா? மன்னருக்கு அப்பாலோ, புறம்பாகவோ அந்த அதிகார உரிமைக்கான மேல் முறையீடு ஏதுமில்லையா? இந்தக் கேள்விக்கான விடை என்ன வெனில், கூட்டாட்சி அதிகாரத்தின் ஒரு பகுதியினது ஊற்றுக் கண்தான் மன்னர்; எஞ்சிய பகுதியின் ஊற்றுக்கண் மன்ன ரல்லர்.

இதுதான் உண்மை நிலவரம் என்பது இணைவுப் பத்திர (Instrument of Accession) நிபந்தனைகளிலிருந்து தெளிவாகிறது. நகல் பத்திர விதிகளில் கண்டுள்ளதை இங்கு தருகிறேன்.

''கூட்டாட்சியில் இணையக் கூடிய இந்திய சமஸ்தானங்களை யும், சுயாட்சி மாகாணங்களான பிரிட்டிஷ் இந்திய மாகாணங் களையும் கொண்ட இந்தியக் கூட்டாட்சியை நிறுவும் பிரேரணைகள் குறித்து மாட்சிமை பொருந்திய மன்னர் பிரானின் அரசாங்கப் பிரதிநிதிகள் பிரிட்டிஷ் இந்தியா மற்றும் இந்திய சமஸ்தானங்களின் ஆட்சியாளர் பிரதிநிதிகளுடன் விவாதித் துள்ள படியாலும்;

பிரிட்டிஷ் பாராளுமன்றச் சட்டத்தின்படியும், இந்திய சமஸ் தானங்கள் இணைவதன் மூலமும் இந்தியக் கூட்டாட்சி நிறுவப்பட வேண்டுமென்று அந்தப் பிரேரணைகள் கூறுகிறபடியாலும்,

1935-இந்திய அரசாங்கச் சட்டத்தில் இந்தியக் கூட்டாட்சியை அமைப்பதற்கான வழிவகைகள் இப்பொழுது செய்யப்பட்டிருப் பதாலும்;

மாட்சிமை பொருந்திய மன்னர் ஓர் ஆணையின் மூலம் பிரகடனப்படுத்தும் நாளுக்கு முன்னர் அந்தக் கூட்டாட்சி நிறுவப் பட முடியாதென்றும் தேவையான எண்ணிக்கையில் கூட்டாட்சி யில் இந்திய சமஸ்தானங்கள் இணையும் வரை, அத்தகைய ஆணை பிரகடனப்படுத்தப்பட முடியாதென்றும் சட்டம் வகை செய்துள்ளதாலும்;

கூட்டாட்சியில் நான் இணைவதற்கான எனது ஒப்புதலும், உடன்பாடுமின்றி எனது பிராந்தியங்களுக்கு அந்தச் சட்டம் செல்லாது என்றபடியாலும்;

இப்பொழுது இதன் மூலம், ... என்னும் சமஸ்தானத்தின் (சமஸ்தானத்தின் பெயரைக் குறிப்பிடவும்) ஆட்சியாளரான நான் (முழுப்பெயரும், ஆட்சிப் பட்டமும் குறிப்பிடவும்) எனது ஆட்சிக்குட் பட்ட சமஸ்தானத்தின் மீது எனக்குள்ள ஆட்சி அதிகார உரிமை யைப் பிரயோகித்து, இந்திய நலன்களையும், நல்வாழ்வையும் மேம் படுத்த ஒத்துழைக்கும் நோக்குடன், ஆளுநர் மாகாணங்கள் என்றழைக்கப்படும் மாகாணங்கள், பிரதம ஆணையர் மாகாணங் கள் என்றழைக்கப்படும் மாகாணங்கள் மற்றும் இந்திய சமஸ் தானங்களின் ஆட்சியாளர்களைக் கொண்டதொரு, இந்தியக் கூட்டாட்சி என்றழைக்கப்படும் மன்னரது அதிகாரத்தின் கீழுள்ள

கூட்டாட்சியில் இணைவதற்கான ஒப்புதலை இதன்மூலம் நிறைவேற்றுகிறேன்; இந்தப் பத்திரத்தை மாட்சிமை பொருந்திய மன்னர் ஏற்றுக் கொள்வதன் பேரில், 1935-இந்திய அரசாங்கச் சட்டத்தின் கீழ் நிறுவப்படும் இந்தியக் கூட்டாட்சியில் இணைவதாக நான் பிரகடனம் செய்கிறேன்.''

இந்தியக் கூட்டாட்சியின் மிக முக்கியமான அம்சம் இது. கனடா, ஆஸ்திரேலியா கூட்டாட்சிக்கும் இந்திய கூட்டாட்சிக்குமுள்ள இந்த வித்தியாசத்தைக் கொணர்ந்தது எது? எந்தப் பகுதிக்கு, மன்னரின் அதிகாரம் ஊற்றுக்கண்? எந்தப் பகுதிக்கு அவ்வாறில்லை? இதனைப் புரிந்து கொள்வதற்கு, நீங்கள் இரண்டு விஷயங்களைக் கவனிக்க வேண்டும். முதலாவதாக, பிரிட்டிஷ் இந்தியா மற்றும் இந்திய சமஸ்தானங்கள் என்ற இரு தனிப்பட்ட பிராந்தியங்களைக் கொண்டது இந்தியக் கூட்டாட்சி, 5-ம் பிரிவு இதனைத் தெளிவாக்குகிறது. இரண்டாவதாக, மன்னருடனான இந்த இரண்டு பிராந்தியங்களின் உறவும் ஒரே மாதிரியானவை அல்ல. பிரிட்டிஷ் இந்தியா மன்னருக்குக் கட்டுப்பட்டது. இந்திய சமஸ்தானப் பிராந்தியம் மன்னருக்கல்லாமல், அதனை ஆட்சி செய்பவர்களுக்குக் கட்டுப்பட்டது. பிரிவுகள் 2 மற்றும் 311-ஐப் பார்த்தால், இது தெளிவாகும். பிரிட்டிஷ் இந்தியப் பிராந்தியம் மன்னருக்குக் கட்டுப்பட்டதால் அதன் அரசுரிமை மன்னரைச் சேர்ந்தது. இந்திய சமஸ்தானங்கள் அவற்றை ஆள்பவர்களுக்கே கட்டுப்பட்டதால், அவற்றின் அரசுரிமை அந்தந்தச் சமஸ்தானத்தை ஆள்பவர்களையே சாரும்.

இந்தியக் கூட்டாட்சியின் ஒரு பிரிவான பிரிட்டிஷ் இந்தியாவைப் பொறுத்தவரை மன்னர் முழுக்க முழுக்க ஆட்சி அதிகாரம் பெற்றவராகவும் மற்றொரு பிரிவான இந்திய சமஸ்தானங்களைப் பொறுத்தவரை அவ்வாறல்ல என்றும் அதனால்தான் அவ்வாறு சொன்னேன் என்பதை நீங்கள் புரிந்து கொள்ளக் கூடும். கூட்டாட்சியிலுள்ள சமஸ்தானங்களைப் பொறுத்து, அவற்றை ஆளும் இந்திய ஆட்சியாளர்களிடமே முழு அதிகாரமும் உள்ளது. அதனால்தான், கூட்டாட்சியின் நிர்வாக உரிமையை, மன்னரின் சார்பில் கவர்னர் ஜெனரலே நிலைநாட்டுவார் என்று 7-வது பிரிவு கூறும்போது, இந்திய கூட்டாட்சியின் நிர்வாகத்திற்கு மன்னரால் கவர்னர்-ஜெனரலுக்கு அளிக்கப்படும் அதிகாரத்தின் ஒரு பகுதி மன்னரிடமிருந்தும், மறுபகுதி இந்திய சமஸ்தானங்களை ஆட்சி செய்வோரிடமிருந்தும் பெறப்படுகிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்திய சமஸ்தான ஆட்சியாளர்களுக்கான அதிகார உரிமையை மன்னர் ஈட்டுவதற்கான முறை என்ன? அந்த முறைக்கு இந்தியச் சட்டத்தில் இணைவு (Accession)என்று பெயர். சமஸ்தான மன்னரால் நிறைவேற்றப்படும் இணைவுப் பத்திரத்தின் மூலம் அது மேற்கொள்ளப்படுகிறது. இணைவுப் பத்திரம் குறித்த

வாசகங்கள் பிரிவு 6(1)-ல் அடங்கியுள்ளது. அந்தப் பிரிவு கீழ் வருமாறு உரைக்கிறது:

''6. ஒரு சமஸ்தானத்தின் ஆட்சியாளர் தன் சார்பிலும், வாரிசுகள், வழிவருவோர் சார்பிலும் நிறைவேற்றும் இணைவுப் பத்திரத்திற்கு மாட்சிமை பொருந்திய மன்னர் தனது ஒப்புதலைத் தெரிவித்தால், அந்த சமஸ்தானம் கூட்டாட்சியில் இணைந்ததாகக் கொள்ளப்படும்—

அ) இந்த இணைவுப் பத்திரம் மூலம், மாட்சிமை பொருந்திய மன்னர், இந்திய கவர்னர்-ஜெனரல் கூட்டாட்சி சட்டசபை, கூட்டாட்சி நீதிமன்றம் மற்றும் கூட்டாட்சியின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கென ஏற்படுத்தப்படும் வேறு எந்தக் கூட்டாட்சி அதிகாரக் குழுவும் கூட்டாட்சியின் நோக்கங்களுக்காக அதன் நிபந்தனைக்குட்பட்டு ஆட்சி செய்பவருக்குள்ள கடமைகளை நிறை வேற்ற ஒப்புக்கொண்டு கூட்டாட்சியில் இணைவதாக சமஸ்தானதி பதி பிரகடனம் செய்கிறார்.

ஆ) இணைவுப் பத்திரத்தின் காரணமாக, தனது சமஸ்தானத் திற்குப் பொருந்தக்கூடிய கூட்டாட்சி சட்ட நடைமுறை வசதிக ளனைத்தையும் தனது சமஸ்தானத்தில் செயல்படுத்துவதை உறுதி செய்யும் பொறுப்பினையும் அவர் ஏற்கிறார்.''

ஓர் இந்திய சஸ்தானத்தைக் கூட்டாட்சியின் ஓர் அங்கமாக்கு வதற்கு இந்த இணைவுப் பத்திரமே மன்னருக்கு அதிகாரம் வழங்கு கிறது; இதனால்தான், கூட்டாட்சியின் மீது மன்னரின் அதிகாரம் ஓரளவிற்கு வருவிக்கப்பட்ட அதிகாரம் என்கிறோம்.

கூட்டாட்சியின் தோற்றம் பற்றிய சட்டவிதி இதுதான். கூட்டாட்சி வளர்ச்சி பற்றிய சட்ட விதி என்ன? வேறுவிதமாகக் கூறின், மாற்றம் பற்றிய சட்ட விதி எது? அது பற்றி பிரிவு 6 (1) (அ), அட்டவணை (2) மற்றும் பிரிவு 6 (5)-ல் காணப்படுகிறது.

பிரிவு 6 (1) (அ) ஓர் இந்திய சமஸ்தான மன்னர் இணைவுப் பத்திரத்தின் மூலம் நிறைவேற்றும் இணைவானது, ''இந்த ஆணை யின் வாயிலாக ஸ்தாபிக்கப்படும் கூட்டாட்சியுடன்தான்'' என் பதைத் தெளிவாக்குகிறது. அட்டவணை II அரசியல் சட்டத்தின் வருங்காலத்திருத்தங்கள் குறித்துக் கூறுகிறது. சமஸ்தான இணைவுப் பத்திரத்தை எந்தெந்தத் திருத்தங்கள் பாதிக்கும், எது பாதிக்காது என்பதற்குரிய இந்திய அரசாங்க ஆணையின் ஷரத்துக்களை அது எடுத்துரைக்கிறது.

பிரிவு 6 (5) இரு விஷயங்களைச் செய்கிறது. முதலாவதாக, இணைவுப் பத்திரத்தைப் பாதிக்காத அளவில், திருத்தங்களுக்குள் ளாகும் அட்டவணை II-ல் எடுத்துரைக்கப்பட்டுள்ள ஷரத்துக் களைத் திருத்துவதற்கு நாடாளுமன்றத்திற்கு உள்ள உரிமை பற்றி அது வழிவகைகளை வகுக்கிறது. இரண்டாவதாக, அட்டவணை II-ன்படி இணைவுப் பத்திரத்தைப் பாதிக்காத வகையில் நாடாளு மன்றம் திருத்தம் கொண்டுவந்த போதிலும் அத்தகைய திருத்த

மானது, ஒரு துணை இணைவுப் பத்திரத்தின் மூலம் ஏற்றுக் கொள்ளப்பட்டாலொழிய அது அந்த சமஸ்தானத்தைக் கட்டுப் படுத்துவதாகக் கொள்ள முடியாது.

இவற்றைத் தொகுத்துரைக்கின், கூட்டாட்சிப் பகுதிகள் பொது வான செயல்முறை ஊற்றுகொண்ட தனியொரு முழுமையான அங்கமாக அமையவில்லை. பகுதிகள் தனித்தனியேயுள்ளன. அவை வெறுமனே ஒன்றாகப் பிணைக்கப்பட்டுள்ளன. பகுதி களின் நிலை, சில நோக்கங்களுக்காக என்றுமே மாற்றப்பட முடி யாதது. சில நோக்கங்களுக்காக மாற்றம் அனுமதிக்கப்படுகிறது. ஆனால் அந்த மாற்றம், பகுதிகள் அனைத்தையும் ஒரே மாதிரி யாகக் கட்டுப்படுத்தமுடியாது. சில அதற்குக் க்ட்டுப்பட வேண் டும்; வேறு சில அவை கட்டுப்பட இசைந்தாலொழிய கட்டுப்படு பவை அல்ல. வேறு வார்த்தைகளில் கூறப்புகின், இந்தக் கூட் டாட்சியில் வளர்ச்சிக்கான வழிமுறைகள் ஏதுமில்லை. அது ஸ்திர மானது. அசைந்து கொடுக்கக் கூடியதல்ல. படிப்படியான வளர்ச் சிக்கான மாற்றம் ஏதும் சாத்தியமில்லை; எங்கு அது சாத்தியமோ அங்கும் அது ஏற்கப்படாவிடில், கட்டுப்பாட்டுக்கு உரியதல்ல.

3

கூட்டாட்சியின் கட்டுக்கோப்பு

அ) கூட்டாட்சியின் சட்டசபை

கூட்டாட்சி சட்டசபை இரு உறுப்புக்களைக் கொண்ட சட்ட சபையாகும். சட்டசபை என்ற கீழ்ச்சபையையும், மாநிலங்களவை என்ற மேல் சபையையும் கொண்டதாக அது இருக்கும். இந்த இரு சபைகளின் இயைபு குறிப்பிடத்தக்க அம்சமாகும். கூட்டாட்சி சட்டசபையின் மொத்த உறுப்பினர்கள் 375 என்றும், மாநிலங் களவையின் தொகை 260 என்றும் பார்க்கும் போது மக்கட் தொகை மற்றும் பிராந்தியப் பரப்பளவைக் கருத்தில் கொண்டு நோக்கும் போதும் அவை இதர சட்டசபைகளுடன் ஒப்பிட்டால், மிகச் சிறிய சபைகளேயாகும். அங்கத்தினர்களின் இடங்கள் பிரிட்டிஷ் இந்தியாவுக்கும், இந்திய சமஸ்தானங்களுக்குமிடையே ஒரு குறிப்பிட்ட வீதாசாரத்தில் பிரிக்கப்பட்டுள்ளன. கூட்டாட்சி சட்டசபையின் 375 இடங்களில், 250 பிரிட்டிஷ் இந்தியாவுக் கும், 125 இந்திய சமஸ்தானங்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன. மாநிலங்களவையிலுள்ள 260 இடங்களில், பிரிட்டிஷ் இந்தியா வுக்கும், சமஸ்தானங்களுக்கும் முறையே 156 இடங்களும், 104 இடங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன. பிரிட்டிஷ் இந்தியாவுக்கும் இந்திய சமஸ்தானங்களுக்குமிடையேயான இட ஒதுக்கீடு சமத் துவக் கோட்பாட்டின் அடிப்படையில் அமையவில்லை என்பதைக் கண்டு கொள்ளலாம். பிரதிநிதித்துவத்திற்கான அடிப்படையாக

மக்கட்தொகையை மேற்கொள்வது சாத்தியமாகும். அதன் அடிப்படையாக வருவாயை எடுத்துக் கொள்வதும் சாத்தியமே ஆகும். ஆனால் இந்த இரண்டுமே இட ஒதுக்கீட்டிற்கான அடிப்படையாக எடுத்துக் கொள்ளப்படவில்லை. மக்கட்தொகையையோ அல்லது வருவாயையோ அடிப்படையாகக் கொண்டாலும், பிரிட்டிஷ் இந்தியாவுக்கு உரிய பிரதிநிதித்துவம் இருக்காது என்பதையும், இரு சபைகளிலுமே இந்திய சமஸ்தானங்களுக்கு அதிகப்படியான பிரதிநிதித்துவம் இருக்கும் என்பதையும் நீங்கள் கண்டு கொள்ளலாம். சபை உறுப்பினர்களை நிரப்பும் முறையும் குறிப்பிடத்தக்கது. இரு சபைகளிலுமுள்ள பிரிட்டிஷ் இந்தியாவின் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவர். அதற்கு மாறாக, இந்திய சமஸ்தானப் பிரதிநிதிகள் அந்தந்த சமஸ்தான மன்னர்களால் நியமிக்கப்படுவர். மன்னரால் நியமிக்கப்படும் உறுப்பினர்கள், குடிமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களா அல்லவா என்பது அந்த மன்னரின் இச்சைக்குட்பட்டதேயாகும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவரை அவர் நியமிக்கலாம்; அல்லது அவர் விரும்பினால், அவரையோ அல்லது வேறு எவரையுமோ தேர்ந்தெடுத்து நியமிக்கலாம். இறுதியாகப் பார்க்கும் போது, சமஸ்தானத்தின் பிரதிநிதி மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு மாறாக, ஆட்சியாளரால் நியமிக்கப்படலாம். பிரிட்டிஷ் இந்தியாவைப் பொறுத்தவரை, பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்; இதிலும் கூட ஒரு விசேஷ நிலையை நாம் காணலாம். இரு அவைகளைக் கொண்ட எல்லாச் சட்டமன்றங்களிலும் கீழ்ச்சபைக்கான உறுப்பினர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் போது, மறுபரிசீலனை செய்யும் மேல்சபைக்குப் பிரதிநிதிகள் மறைமுகத் தேர்தலின் மூலம் அனுப்பப்படுகின்றனர். இந்திய கூட்டாட்சியைப் பொறுத்தவரை, இந்த முறை தலைகீழாக மாற்றப்பட்டுள்ளது. மேல்சபைப் பிரதிநிதிகள், மக்களால் நேரடியாகவும், கீழ்ச்சபைப் பிரதிநிதிகள் மாகாண சட்டசபைகளால் மறைமுகமாகவும் தேர்ந்தெடுக்கப்படுவர். கூட்டாட்சியின் கீழ்ச்சபை ஐந்தாண்டுக் கால ஆயுளைக் கொண்டது. அதற்கு முன்னரும் அது கலைக்கப்படலாம். மாறாக, மாநிலங்களவை ஒரு நிரந்தர சபையாகும். அது கலைக்கப்பட முடியாதது. மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை, மூன்றில் ஒரு பங்கு அங்கத்தினர்களைப் புதுப்பித்துக் கொள்வதன் மூலம் அது உயிர் வாழ்கிறது.

இப்பொழுது சட்டமியற்றுவதற்கும் செலவினங்களை அனுமதிப்பதற்குமான இரு சபைகளின் அதிகாரங்களையும் நாம் பார்ப்போம். சட்டமியற்றும் அதிகாரத்தைப் பொறுத்தவரை, சில அரசியல் சட்டங்கள், நிதி மசோதாக்களுக்கும் இதர மசோதாக்களுக்கும் வேறுபாட்டை ஏற்படுத்தியுள்ளன. மேலவைக்கு நிதி மசோதாக்களைக் கொண்டுவரவோ, அல்லது அவற்றைத் தள்ளுபடி செய்யவோ அதிகாரம் கிடையாது. குறிப்பிட்ட காலத்திற்கு அந்த மசோதா நிறைவேறாமல் ஒத்திவைக்கவே அதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசியல் சட்டம், அத்தகையதொரு

வேறுபாடு எதையும் காட்டவில்லை. நிதி மசோதாக்களும், இதர மசோதாக்களும் ஒரே மட்டத்தில் வைக்கப்பட்டு அவை சட்ட மாகும் முன் இரு அவைகளின் ஒப்புதலையும் பெற வேண் டும். ஒரேயொரு வேறுபாடு என்னவெனில், பிரிவு 30(1) படி, நிதி சம்பந்தப்படாத எந்த மசோதாவும், எந்த ஒரு சபையிலும் கொண்டு வரப்படலாம் என்பதும் பிரிவு 37-ன்படி ஒரு நிதி மசோதா மேல்சபையில் தோற்றுவிக்கப்படக் கூடாது என்பதுமே யாகும். ஆனால் பிரிவு 3(2)-ன்படி ஒரு நிதி மசோதா, இதர மசோதா எதையும் போன்றே, மேல்சபையின் ஒப்புதலையும் பெற வேண்டும்.

செலவினங்களை ஒதுக்குவதற்கான அதிகாரம் பற்றி: இரு சபைகளைக் கொண்ட சட்டமன்றத்தில், இரு சபைகளின் அதி காரப் பங்கீடு சம்பந்தமான ஒப்புக் கொள்ளப்பட்ட கோட்பாடு களிலிருந்து சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

31(1) வது பிரிவின்படி, மதிப்பீட்டு வரவு செலவு குறித்த வருடாந்தர நிதி அறிக்கை கூட்டாட்சி சட்டசபையின் இரு அவை களிலும் வைக்கப்பட வேண்டும்: அச்சபைகளில் அது விவாதத்திற் குட்படுவதோடு வாக்கெடுப்பிற்கும் விடப்படும். செலவீட்டிற்கான தொகை, மானிய கோரிக்கைகளாக கூட்டாட்சி சட்டசபையில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்றும், அதன் பின்னர், அது மாநிலங் களவைக்குத் தரப்படுமென்றும், ஏதேனும் ஒரு சபை அந்த மசோ தாவை ஏற்றுக் கொள்ளவோ அல்லது அதை மறுக்கவோ, குறிப் பிட்ட தொகையைக் குறைக்கவோ அதிகாரம் உண்டென்றும் பிரிவு 34(3) கூறுகிறது.

இதன்மூலம், சட்டங்கள் இயற்றுவது குறித்தோ, செலவீடு களை அங்கீகரிப்பது குறித்தோ இரு சபைகளுக்குமே சம அதிகா ரங்கள் உண்டென்பது தெளிவாகிறது. ஏதேனும் ஒரு சபை விட்டுக் கொடுக்க இணங்காவிடினும் அது விட்டுக் கொடுப்பதன் மூலம் இரு சபைகளுக்கும் உள்ள முரண்பாடு முடிவுக்கு வராது. வேறுபாடுகளைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் வழிமுறை யானது, இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தை நடத்துவதே. ஏதேனும் ஒரு மசோதா குறித்துத் தகராறு ஏற்படுமாயின் கூட்டுக் கூட்டம் நடத்துவது குறித்த வழிமுறையைப் பிரிவு 31(1) கூறு கிறது. செலவீட்டை அங்கீகரிப்பது குறித்த வேறுபாடுகள் பற்றிய தகராறைத் தீர்ப்பதற்குப் பிரிவு 34 (3) வழி வகுக்கிறது.

ஆ) கூட்டாட்சி நிர்வாகம்

கூட்டாட்சி நிர்வாக அமைப்பை நிறுவுவது குறித்து பிரிவு 7(1)ல் விரித்துரைக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரிவின்படி, கூட் டாட்சியின் நிர்வாக அதிகாரம் கவர்னர் ஜெனரலிடம் தரப்பட் டுள்ளது. அவர்தான் கூட்டாட்சியின் நிர்வாகப் பொறுப்பு அதி காரி. அந்தப் பொறுப்பு தனியொரு நபரைச் சார்ந்துள்ளதென்பதும்

அது ஒரு கூட்டமைப்பு அல்ல என்பதும் எடுத்த எடுப்பில் குறிப்பிடப்பட வேண்டியதாகும். இந்தியாவில், நாட்டின் சிவில் மற்றும் இராணுவ ஆட்சியதிகாரத்தை பிரிட்டிஷார் ஏற்றுக் கொண்ட நாளிலிருந்தே, நிர்வாக அமைப்பு தனியொருவரைச் சார்ந்ததாக இருந்ததில்லை. அது ஒரு கூட்டு நிர்வாகமாக இருந்தது. மாகாணங்களில் அது (கவர்னர் தலைமையிலுள்ள) கவர்னரின் ஆலோசனைசபையாகவும் மத்தியில் கவர்னர் ஜெனரலின் ஆலோசனை சபையாகவும் இருந்தது. மாகாணங்கள் மற்றும் இந்தியாவின் சிவில் மற்றும் இராணுவ கவர்னரிடமோ, ஆட்சியதிகாரம் கவர்னர் ஜெனரலிடமோ இருந்ததில்லை. கவர்னரையும் அவரது ஆலோசகர்களையும் கொண்ட அமைப்பிடமே இருந்தது. ஆலோசகர்கள் மன்னரால் நியமிக்கப்பட்டார்கள்; கவர்னர்-ஜெனரலின் மூலமாக அவர்கள் தங்கள் அதிகாரத்தைப் பெற்றவர்களல்லர். மன்னரிட மிருந்து தங்கள் அதிகாரத்தை அவர்கள் பெற்றதால் கவர்னர் மற்றும் கவர்னர்-ஜெனரலுக்கு சமமான அதிகாரமுடையவர்கள் அவர்கள். பிராந்தியத்தின் அமைதி, ஒழுங்குப் பிரச்சினைகளைத் தவிர்த்து, கவர்னரும், கவர்னர்-ஜெனரலும் பெரும்பான்மையினரின் முடிவுக்குக் கட்டுப்பட்டவர்களே. எனவே ஏற்றுக் கொள்ளப்பட்ட விதிமுறையிலிருந்து கூட்டாட்சி அரசியல் சட்டம் விலகிச் செல்கிறது. இந்த விலகல், கொள்கையளவில் சரியானதல்லவென்றோ, இதற்கு முன்னர் நடந்துள்ளதுடன் முரண்படுகிறதென்றோ, ஒரு கூட்டாட்சி அரசியல் சட்டத் தேவைகளிலிருந்து எழும் சூழ்நிலைக்கு ஒவ்வாததென்றோ நான் கூறவில்லை. நான் கூற விரும்புவதெல்லாம், அது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த மாற்றம் என்பதே.

கூட்டாட்சி நிர்வாகத்துறை பற்றிய மற்றொரு குறிப்பிடத்தக்க விஷயம், கூட்டாட்சியின் நிர்வாக அதிகாரி கவர்னர் ஜெனரல் என்றாலும் கூட, நிர்வாக அதிகாரங்களை அவர் பிரயோகிப்பதற்குச் சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன, அவரது நிர்வாக அதிகாரத்தின் கீழுள்ள விவகாரங்களை அது நான்கு வகைகளாகப் பிரித்து, அந்த நான்கு வகைப்பட்ட விஷயங்களிலும் அவர் எவ்வாறு தனது நிர்வாக அதிகாரத்தைப் பிரயோகிக்க வேண்டும் என்றும் வரையறுத்துள்ளது. சில விஷயங்களில், கவர்னர் ஜெனரல் (1) தனது உசிதம் போல் செயல்படலாம். 2) சிற்சிலவற்றில் அவர் தனது அமைச்சர்களின் ஆலோசனையின்படி செயல்பட வேண்டும் 3) சில விஷயங்களில், அமைச்சர்களுடன் கலந்தாலோசித்த பின்னர் செயல்பட வேண்டும் 4) சிலவற்றில் அவர் தனது சொந்த முடிவின்படி செயல்படலாம். கவர்னர் ஜெனரலின் நிர்வாக அதிகாரம் பிரயோகிக்கப்படும் இந்த நான்கு சந்தர்ப்பங்களிலும் அதன் அடிப்படையான சட்டப் பண்பு குறித்து ஒரு வார்த்தை. இந்தச் சட்டப் பண்பு குறித்த விளக்கத்தைத் தொடங்குவதற்கான சிறந்த வழி ''அமைச்சர்களின் ஆலோசனைப்படி செயல்படுவது''

என்பதற்கு என்ன பொருள்என்பதைத் தெரிந்து கொள்வதே ஆகும். இதன் பொருள், இந்த விஷயங்களில், கவர்னர்—ஜெனரலின் பெயரால், அமைச்சர்களின் அதிகாரப்படிதான் உண்மையில் அரசாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதே. இதையே வேறுவிதமாகக் கூறப் போனால் அமைச்சர்களின் ஆலோசனை கவர்னர் ஜெனரலைக் கட்டுப்படுத்தும் என்பதும் அவர் அந்த ஆலோசனையிலிருந்து விலக முடியாது என்பதும்தான். கவர்னர் ஜெனரல் ''தனது உசிதப்படி'' செயல்படும் விஷயங்கள் என்று கூறப்படுவதன் பொருள் என்னவெனில் அரசாங்கம் கவர்னர் ஜெனரலின் பெயரால் மட்டுமின்றி, அவரது அதிகாரத்தின் மூலமே செயல்படுகிறது என்பதே. எந்தக் கட்டத்திலும் அமைச்சர்களது தலையீடோ, குறிக்கீடோ இராது என்பதுவே அதன் பொருள். அமைச்சர்கள் எந்த ஆலோசனையும் வழங்குவதற்கு உரிமை கிடையாது. கவர்னர் ஜெனரலும் அவர்களது ஆலோசனையைக் கோரக் கட்டுப்பட்டவரல்லர்; இதனை அறுதியிட்டுக் கூறப்புகின், சம்பந்தப்பட்ட கோப்புகள் அமைச்சர்களிடம் செல்ல வேண்டியதில்லை. ''தனிப்பட்ட முடிவின்படி செயல்படுவது'' என்பதன் பொருள், ஒரு விஷயம் அமைச்சரின் ஆலோசனை வழங்கும் அதிகாரத்துக்குட்பட்டிருந்த போதிலும் அவருக்கு இறுதித் தீர்ப்பு அளிக்கும் அதிகாரம் கிடையாது. அந்த அதிகாரம் கவர்னர்-ஜெனரலுக்கே உண்டு. ''அவரது உசிதப்படி'' மற்றும் ''அவரது சொந்த முடிவின்படி'' என்ற சொற்றொடர்களுக்கான வேறுபாடு என்னவெனில், ''அவரது உசிதம்போல் செயல்படக்கூடிய'' விஷயங்களில் கவர்னர் ஜெனரலுக்கு ஆலோசனை வழங்க அமைச்சர்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்பதும், ''அவரது சொந்த முடிவின் கீழ்'' வரும் விஷயங்களில், கவர்னர் ஜெனரலுக்கு ஆலோசனை வழங்கும் உரிமை அமைச்சர்களுக்கு உண்டு என்பதுமேயாகும். இதனையே, வேறுவிதமாகக் கூறின், கவர்னர் ஜெனரலின் ''சொந்த முடிவின்'' கீழ் வரும் விஷயங்களில் அவர் தனது அமைச்சர்களிடமிருந்து ஆலோசனை பெறக் கட்டுப்பட்டிருந்தாலும் அந்த ஆலோசனையைப் பின்பற்றக் கட்டுப்பட்டவரல்லர். அவர் அந்த ஆலோசனையை ஆராய்ந்து பார்க்கலாம்; ஆனால் அமைச்சர்கள் தந்த ஆலோசனையின்படி அல்லாமல் அதனின்றும் மாறுபட்டு வேறுவிதமாகச் செயல்படலாம். ஆனால் அவரது உசிதப்படி செயல்படக்கூடிய விஷயங்களில் அவர் அமைச்சரின் ஆலோசனையைப் பெறுவதற்கும் கட்டுப் பட்டவரல்லர். ''கலந்தாலோசித்த பின்னர்'' என்ற சொற்றொடர் வெறும் நடைமுறை சம்பிரதாயமே. அது போன்ற விஷயங்களில் அதிகாரம் கவர்னர் ஜெனரலுக்கே. தேவைப்படுவதெல்லாம் அவர் அமைச்சர்களது விருப்பங்களையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதே. இந்த வகையில்தான், ''கலந்தாலோசித்த பின் செயல்படுவது'' என்பதை ''தனிப்பட்ட முடிவிலிருந்து'' வேறுபடுத்திக் கூறலாம். ''தனிப்பட்ட முடிவுகள்'' விஷயத்தில் அதிகாரம் அமைச்சர்களிடமே உள்ளது. கவர்னர்

ஜெனரல் அதனை மேற்பார்வையிட்டு, தேவையானால், அதனை மறுத்தொதுக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளார். ''கலந்தாலோசித்த பின்னர்'' எனும் விஷயங்களில் அதிகாரம் கவர்னர் ஜெனரலுக்கே; என்ன செய்யப்பட வேண்டும் என்று கூறும் சுதந்திரமே அமைச்சர்களுக்கு உண்டு.

இ) கூட்டாட்சி நீதித்துறை

கூட்டாட்சி அரசியல் சட்டத்தின் ஒரு பகுதியாக கூட்டாட்சி நீதிமன்றம் ஒன்றினை அமைக்கவும் இந்திய அரசாங்கச் சட்டம் வழிவகுக்கிறது. கூட்டாட்சி நீதிமன்றம் ஒரு தலைமை நீதிபதியையும், மாட்சிமை தங்கிய மன்னர் எத்தனை தேவை என்று கருதுகிறாரோ அத்தனை உப-நீதிபதிகளையும் கொண்டதாகவிருக்கும்; சட்டசபைகள் அந்த எண்ணிக்கையை உயர்த்தக்கோரி விண்ணப்பம் தந்தாலொழிய அவர்களின் எண்ணிக்கை ஆறுக்கு மேற்பட்டிருக்காது. கூட்டாட்சி நீதித்துறை ஆரம்ப வழக்குகளையும், மேல் முறையீடு வழக்குகளையும் விசாரிக்கும் உரிமை படைத்தவை. கூட்டாட்சி நீதிமன்றத்தின் வரம்புகள் குறித்துக் கூறும் பிரிவு 204, கூட்டாட்சிக்கும் கூட்டாட்சி மாகாணங்களுக்கும் கூட்டாட்சியிலுள்ள சமஸ்தானங்களுக்கும் இடையே ஏற்படும் சட்டப் பிரச்சினையையோ அல்லது எந்த அளவிற்கு சட்ட உரிமை அவற்றைச் சார்ந்துள்ளது என்பதையோ தீர்மானிக்கும் பிரத்தியேக உரிமை கூட்டாட்சி நீதிமன்றத்திற்கு உண்டு என்று கூறுகிறது. இந்தப் பிரிவானது, ஏதேனும் ஒரு சமஸ்தானம் வழக்கில் சம்பந்தப்பட்டிருந்தால், ஆணையை அல்லது கவுன்சில் உத்தரவை அல்லது இணைவுப் பட்டியலின் கீழ் கூட்டாட்சிக்குட்பட்ட நிர்வாக அதிகாரத்தை அல்லது சமஸ்தானங்களின் கூட்டாட்சிச் சட்டங்களை நிர்வகிக்கும் ஒப்பந்தத்தின் ஆறாவது பிரிவின்கீழ் எழும் பிரச்சினையை அல்லது சமஸ்தானங்களுக்கான சட்டங்களை உருவாக்க கூட்டாட்சி சட்டசபைக்குள்ள அதிகாரத்தை அல்லது சமஸ்தானங்களுக்கும் கூட்டாட்சிக்கும் அல்லது ஒரு மாகாணத்திற்கிடையே மன்னரது பிரதிநிதியின் ஒப்புதலுடன் கூட்டாட்சியுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் குறித்த பிரச்சினையையோ விசாரணைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்றும் அதற்குரிய வரம்பும் அதற்கு வழங்கப்பட்டிருப்பதாகவும் கூறுகிறது. சமஸ்தானங்களின் மீது கூட்டாட்சி நீதிமன்றத்தின் இந்தக் குறுகிய வரம்பும்கூட ஒரு விதியின் மூலம் மேலும் குறுக்கப்பட்டுள்ளது: அதாவது, அத்தகைய சட்டவரம்பைத் தெளிவாகத் தவிர்க்கும் ஓர் ஒப்பந்தம் இருக்குமாயின் எந்தத் தகராறும் நியாயமானதல்ல என்று அந்த விதி கூறுகிறது.

கூட்டாட்சி நீதிமன்றத்தின் மேல் முறையீடு விசாரணை வரம்பானது பிரிவு 205 மற்றும் பிரிவு 207 ஆல் முறைப்படுத்தப்பட்டுள்ளது. பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ளதொரு உயர் நீதிமன்றம், சம்பந்தப்பட்ட வழக்கு, இந்த ஆணையையோ அல்லது கவுன்சில் உத்தரவையோ விளக்கியுரைப்பது பற்றிய கணிசமான அளவு

சட்டப் பிரச்சினையை உள்ளடக்கியது என்று சான்றளித்தால், அந்த உயர் நீதிமன்றத்தின் எந்தத் தீர்ப்பும் ஆணையும் இறுதி உத்தரவும் கூட்டாட்சி நீதிமன்றத்தின் மேல்விசாரணைக்குட்படும் என்று பிரிவு 205 கூறுகிறது. கூட்டாட்சியிலுள்ள சமஸ்தான நீதி மன்றங்களின் தீர்ப்பு பற்றிய மேல்முறையீடு விசாரணை குறித்து பிரிவு 207 எடுத்துரைக்கிறது. ஒரு சட்டப் பிரச்சினை தவறுதலாக முடிவு செய்யப்பட்டுவிட்டதென்றாலோ, அது அந்த சமஸ்தான இணைவுப் பட்டியலின்படி கூட்டாட்சிக்குட்பட்ட நிர்வாக மற்றும் சட்ட அதிகாரத்திற்கு விளக்கம் தரும் பிரச்சினையாக இருக்கு மென்றாலோ அல்லது கூட்டாட்சி சட்டசபை நிர்வாகத்தைப் பொறுத்து இந்த ஆணையின் ஆறாவது பிரிவின் கீழ் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி ஏதேனும் பிரச்சினை எழுந்தாலோ; கூட்டாட்சி நீதிமன்றத்துக்கு மேல் முறையீடு செய்ய வேண்டும் என்று இந்தப் பிரிவு கூறுகிறது. ஆனால் பிரிவு 207, உபபிரிவு 2-ன்படி, இந்தப் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்த மேல் விசாரணையும் உயர் நீதிமன்றமானது கூட்டாட்சி நீதி மன்றத்தின் அபிப்பிரா யத்தை நாடும் விசேஷ வழக்காக இருக்கும்; அதனை கூட்டாட்சி நீதி மன்றம் தனக்குரிய வழக்காக எடுத்துக் கொள்ளும்.

கூட்டாட்சி நீதிமன்றம் குறித்து மேலும் இரு அம்சங்கள் குறிப் பிடக் கூடியதாகும். முதலாவது தனது சொந்தத் தீர்ப்புகளையே கூட்டாட்சி நீதிமன்றம் நிறைவேற்றுவதற்கான அதிகாரம் பற்றி யது. அதன் ஆணைகளை அமுல்படுத்துவதற்கு எந்த நிர்வாக அமைப்பும் கூட்டாட்சி நீதிமன்றத்திற்குக் கிடையாது. பிரிட்டிஷ் இந்தியாவின் எந்தப் பகுதியிலும், அதே போல் கூட்டாட்சியிலுள்ள எந்த ஒரு சமஸ்தானத்திலும் இருக்கும் நீதிமன்றங்களும் அதிகார வர்க்கத்தினரும் கூட்டாட்சி நீதிமன்றத்தின் ஆணைகளை நிறை வேற்ற வேண்டுமென்றும், அவை அந்தப் பகுதியைச் சேர்ந்த சிவில், மற்றும் குற்றவியல் வரம்புக்குட்பட்ட மிக உயர்ந்த நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்ட ஆணையாகக் கருதப்பட வேண்டும் என்றும் 210 ஆவது பிரிவு கூறுகிறது. எனவே தனது சொந்த ஆணை களை நிறைவேற்றுவதற்குப் பயன்படும் கருவி, கூட்டாட்சிப் பகுதி களின் நிர்வாக எந்திரமேயாகும். கூட்டாட்சியின் பகுதிகள் கூட் டாட்சி நீதிமன்றத்திற்கு உதவும் வகையிலேயே செயல்படக் கட்டுப் பட்டவை. இது, உதாரணமாக, அமெரிக்காவின் நிலையினின்றும் மாறுபட்டது; அங்கு, உச்சநீதி மன்றம் தனது தீர்ப்புகளை நிறை வேற்றுவதற்கென சொந்த அமைப்புக்களைப் பெற்றுள்ளது.

குறிப்பிடத்தக்க இரண்டாவது அம்சம் என்னவெனில், நீதிபதி களை அகற்றுவதற்கு நிர்வாக அமைப்புக்குள் அதிகாரமும், அவர் களது நடத்தை குறித்து விவாதிப்பதற்கு சட்டமன்றங்களுக்குள்ள அதிகாரமும் ஆகும். இந்த விஷயத்திலும் இதர கூட்டாட்சிகளின் கூட்டாட்சி நீதிமன்றங்களிலிருந்து (நமது) கூட்டாட்சி நீதிமன்றம் வேறுபடுகிறது. கூட்டாட்சி நீதிமன்ற நீதிபதியைத் தற்காலிகப் பதவி நீக்கம் செய்யும் அதிகாரத்தை அரசியல் சட்டம் கவர்னர்- ஜெனரலுக்கு வழங்கவில்லை. ஒரு நீதிபதியின், நியாயக்குறை நலன்

பற்றி விவாதிக்கும் உரிமையைச் சட்டசபைகளுக்கு மறுக்கிறது. இது, சந்தேகத்திற்கிடமின்றி, ஒரு கூட்டாட்சி நீதிபதிக்கு நிர்வாக மற்றும் சட்டசபை தலையீட்டு பாதிப்பின்மையை அளித்து அவரது பதவிக்காலத்தை உறுதிப்படுத்துகிறது. நிர்வாகக் கட்டுப்பாட்டி லிருந்த நீதிமன்றங்களை அகற்றுவதற்கு, நீதிபதிகளின் பதவிக் காலம், நிர்வாகத்தின் இச்சைக்கு உட்பட்டதாக இருக்கக் கூடாது. எனவே, ஒரு நீதிபதியின் பதவிக்காலம், அவரது நன்னடத்தை யைப் பொருத்ததென்றும், அவர் நன்னடத்தையுள்ளவரல்ல என்று சட்டசபை தீர்மானித்தால் அந்த நீதிபதி விலக்கப்பட வேண்டியவர் என்றும் எல்லா அரசியல் சட்டங்களும் வழிவகை செய்துள்ளன. ஒரு நீதிபதியின் நன்னடத்தை பற்றிப் பிரஸ்தா பிக்க ஏதேனும் ஒருவரிடம் அதிகாரம் இருத்தல் வேண்டும். அது, கூட்டாட்சி அரசியல் சட்டத்தில் இல்லை; எனவே, தனது பதவிக் காலத்தில் அவரது நடத்தை எவ்வாறிருப்பினும் அவர் ஓய்வு பெறும் வரை, கூட்டாட்சி நீதிபதியாக ஒருவர் நியமிக்கப்பட்டு விட்டால், அவரைப் பதவியிலிருந்து அகற்ற முடியாது. அதற்குப் பதிலாக ஒரு கூட்டாட்சி நீதிபதி, தவறிழைத்தவர் என்றோ, உடலாலும் உள்ளத்தாலும் குறைபாடுள்ளவர் என்றோ, மன்னரது உயர் அவையின் நீதிக் கமிட்டி, அந்தக் காரணத்திற்காக அவரை அகற்ற வேண்டுமென்று கூறினால், பிரிவு, 200 (2) (ஆ) யின் கீழ் மாட்சிமை தங்கிய மன்னருக்கு அவரை அகற்றும் அதிகாரம் தரப்பட்டுள்ளது.

4

கூட்டாட்சியின் அதிகாரங்கள்

கூட்டாட்சி அரசாங்கத்தின் அதிகாரங்கள் குறித்து நான் விளக்கியுரைப்பதற்கு முன்னர், கூட்டாட்சி அரசாங்க அமைப்பின் சாராம்சத்தை எடுத்துரைப்பது பொருத்தமாகவிருக்கும். அதனை அரசாங்க ஒருமை அமைப்புடன் (Unitory Form of Government) மாறுபடுத்திக் காட்டுவதைவிட, எளியமுறை வேறெதுவும் இருக்க முடியாது.

கூட்டாட்சி அரசாங்கம், ஒருமை அமைப்பு அரசாங்கத்துடன் வேறுபட்டதல்ல என்றாலும் கூட அந்த வேறுபாட்டினைப் புரிந்து கொள்வது எளிதல்ல. மாறாக, வெளித் தோற்றத்தில் அவற் றிடையே மிகப்பெரிய ஒருமைப்பாடு உள்ளது. இந்நாட்களில் அநேகமாக ஒவ்வொரு நாட்டின் அரசாங்கச் செயல்பாடுகளும், குறிப்பிட்ட பொதுப்பணிகளை ஆற்றும் குறிப்பிட்ட துறைகளில் இயங்கி வரும், ஒன்றுக்கொன்று தொடர்புடைய நிர்வாகக் குழுக் களின் மூலமே நடைபெறுகின்றன. கூட்டாட்சி அமைப்பு (Federal Form of Government) அரசாங்கமாயினும் ஒருமை அமைப்பு

(Unitory Form of Government) அரசாங்கமாயினும் அதுவே தான் எதார்த்த உண்மை. கூட்டாட்சி அரசியல் சட்டத்தில், ஒரு மத்திய அரசாங்கமும், அதனுடன் பரஸ்பரத் தொடர்பு கொண்ட ஸ்தல அரசாங்கங்களுமுள்ளன. அதேபோன்றுதான், ஒருமை அமைப்பு அரசியல் சட்டத்திலும், ஒரு மத்திய அரசாங்கமும், அதனுடன் தொடர்பு கொண்ட பல ஸ்தல அரசாங்கங்களும் உள்ளன. எனவே, மேலோட்டமாகப் பார்த்தால் இந்த இரண்டிற்கும் வேறு பாடு ஏதும் இருப்பதாகத் தோன்றவில்லை.

எனினும், வெளிப்படையாகத் தெரியாவிடினும், அவற் றிடையே மெய்யானதொரு வேறுபாடு உள்ளது. மத்திய மற்றும் ஸ்தல நிர்வாக அமைப்புகளுக்கிடையேயுள்ள பரஸ்பர உறவுமுறை யின் தன்மையிலேயே இந்த வேறுபாடு அடங்கியுள்ளது. அந்த வேறுபாட்டினைக் கீழ்வருமாறு தொகுத்துரைக்கலாம்: ஒருமை அமைப்பு அரசாங்கத்தில், ஸ்தல ஸ்தாபனங்களின் அதிகாரங்கள், மத்திய அரசாங்க ஆணைச்சட்டத்திலிருந்தே பெறப்படுகின்றன. அவ்வாறிருப்பதால், ஸ்தல அரசாங்கத்தின் அதிகாரங்கள், மத்திய அரசாங்கத்தினால் எப்பொழுதும் திரும்பப் பெற்றுவிடக் கூடும். கூட்டாட்சி அமைப்பிலான அரசாங்கத்திலோ, மத்திய அரசாங்கம் மற்றும் ஸ்தல அரசாங்கத்தின் அதிகாரங்கள், அரசியல் சட்டத் தின் மூலம் பெறப்படுகின்றன; அவற்றைத் தமது சொந்தச் சட்டத் தின் மூலம் ஸ்தல அரசாங்கமோ, மத்திய அரசாங்கமோ மாற்ற முடியாது. இரண்டும் தங்கள் அதிகாரத்தை அரசியல் சட்டத்தி லிருந்தே பெறுகின்றன; ஒவ்வொன்றும், அதற்கு அளிக்கப் பட்டுள்ள அதிகார வரம்புக்குள் இயங்குமாறு அரசியல் சட்டம் கோருகிறது. ஒவ்வொன்றின் அதிகாரங்களையும் அரசியல் சட்டம் நிர்ணயிப்பதோடன்றி, அது நிர்ணயித்த வரம்புகளை மீறினால், ஸ்தல அல்லது மத்திய அரசாங்கத்தின் எந்தச் சட்டமும் செல்லத் தக்கதல்ல என்பதைப் பிரகடனப்படுத்துவதற்கான நீதி அமைப் பையும் நிறுவுகிறது. கனடா நாட்டு அரசியல் சட்டம் குறித்த தொகுதியில், கிளெமண்ட் இதனைக் கீழ்வரும் வாசகங்களில் நன்றாகவே குறிப்பிட்டுள்ளார்:

''விவரங்களை விடுத்து, கூட்டாட்சி ஒன்றியம் என்ற பதம், நவீன காலத்தில் ஓர் ஒப்பந்தத்தைக் குறிக்கிறது.... பொது அக் கறைக்குரியவை என்று ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயங்களைப் பொறுத்தவரை, மக்களை ஒரு பொதுவான அரசாங்கக் கட்டுப் பாட்டினை ஏற்குமாறு செய்கிறது; அதேபோல, ஒவ்வொரு ஸ்தல அரசாங்கத்தையும் இதர எல்லா விஷயங்களிலும் சுதந்திரமான தாகவும், சுயேச்சையாகவும் செயல்பட விட்டுவிடுகிறது; அதன் இயல்பான விளைவாக, இந்த முழு ஏற்பாடும், நீதிமன்றங்களின் மூலம் அங்கீகரிக்கப்பட்டு நிறைவேற்றப்படும் அடிப்படையான சட்டமாக அமைகிறது.

''கூட்டாட்சி முழுவதற்கும் பொதுவான கவலையளிக்கும் விஷயங்களையும் ஒவ்வொரு பகுதிக்கும் ஸ்தல அக்கறையுள்ள விஷயங்களையும் பிரிக்கும் கோட்டின் துல்லியமான நிலை, கூட் டாட்சித்துவத்தின் சாராம்சத்திற்குப் புறம்பானது. உத்தேசிக்கப் பட்ட எந்தத் திட்டத்திலும், அந்தக் கோட்டினை எங்கு வரை வதென்பது, கூட்டாட்சி உறுப்பினர்களால் எத்தகைய பூகோள, வர்த்தக, இன அல்லது பிற எதார்த்தச் சூழ்நிலைகளில், மெய் யாகவே பொதுவான அக்கறைக்கான விஷயம்தானா என்று கொள்ளும் கருத்தினைச் சார்ந்ததாகும்; அவ்வாறிருப்பின் அதனை ஒரு பொதுவான அரசாங்கத்திற்கு ஒதுக்கிவிடுதல் முறையானது. ஆனால் கூட்டாட்சிக்கான ஒப்பந்தத்தினால் நிர்ணயிக்கப்பட் டுள்ளபடி, அந்தக் கோட்டினைத் தொடர்ந்து மேற்கொள் வதானது, நவீன கூட்டாட்சித்துவத்தின் சாராம்சத்தைச் சேர்ந்த தாகும்; இது இன்றைய முப்பெரும் ஆங்கிலோ, சாக்சன் கூட் டாட்சிகளான அமெரிக்கா, ஆஸ்திரேலியக் காமன்வெல்த், கனடிய டொமினியன் ஆகியவற்றில் வெளிப்படுகின்றது. எனவே தான், நாட்டின் அடிப்படைச் சட்டத்தைக் கொண்டுள்ள, ஒருங் கிணைந்த ஆதாரக் கோட்பாட்டினை, அரசியல் சட்டபூர்வமாக விளக்கியுரைக்கும் ஒரே கருவியாக நீதிமன்றங்களின் பால் முக்கியத் துவமும் கடமைப்பளுவும் சுமத்தப்படுகின்றன.''

இவ்வாறாக, மத்திய மற்றும் ஸ்தல அரசாங்கங்களுக்கிடையே அரசாங்க அதிகாரங்களை அரசியல் சட்டத்தின் மூலம் பிரிப்பதை நோக்காகக் கொண்ட எல்லைக் கோட்டினை வரைவதும் அந்தக் கோட்டினை நீதி அமைப்புகளில் பேணிக் காப்பதுவும் கூட்டாட்சி முறை அரசாங்கத்தின் இரு இன்றியமையாத அம்சங்களாகும். இந்த இரு அம்சங்கள்தான், ஒருமை அரசாங்க அமைப்பிலிருந்து கூட்டாட்சி அமைப்பை வேறுபடுத்துவதாகும். சுருங்கக்கூறின் ஒவ்வொரு கூட்டாட்சியும் இரு விஷயங்களை தன்னுள் கொண்ட தாகும்: 1) மத்திய அரசாங்கத்திற்கும், அரசியல் சட்டப்படி அதன் அங்கங்களாக விளங்கும் அமைப்புகளுக்குமிடையே எல்லை வரை முறைகளின் மூலம் அதிகாரப் பங்கீடு; அதனை இரண்டுமே மாற்றுவது சாத்தியமில்லை என்பதுடன் தரப்பட்டுள்ள அதிகார வரம்புக்குள் தமது செயல்பாட்டினை நிறுத்திக் கொள்ளுதல் 2) மத்திய அரசு அல்லது அதன் ஓர் அங்கம் சட்டசபை, நிர்வா கம், அதிகார அல்லது நீதித்துறை அமைப்புக்களின் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட செயல் அரசியல் சட்டத்தால் அதற்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அப்பாற்பட்டதென்ற பிரச்சினை எழுமானால், அதனைத் தீர்மானிப்பதற்கு அந்த அமைப்புக்களின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டதொரு உயர்மட்ட நடுவர் குழு (Tribunal) அமைத்தல்.

கூட்டாட்சி அரசாங்கம் என்பதன் பொருளை விளக்கியுரைத் துள்ள படியால் இனி அரசியல் சட்டத்தினால் கூட்டாட்சி அரசாங்கத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பற்றி ஓரளவு கூற முற்படுகிறேன்.

அ) கூட்டாட்சியின் சட்டமியற்றும் அதிகாரங்கள்

சட்டமியற்றும் அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்கென, சட்டமியற்றுதற்கான தலைப்புப் பொருள்கள் மூன்று வகைப்படும். முதல்வகை, கூட்டாட்சிச் சபைக்குப் பிரத்தியேகமாக அளிக்கப்பட்டுள்ள சட்டமியற்றும் உரிமைக்கான பொருட்பட்டியல்: இந்தப் பட்டியல் கூட்டாட்சிப் பட்டியல் என்றழைக்கப்படுகிறது. இரண்டாவது வகையில், மாகாண சட்டசபைகளுக்கு மட்டுமே பிரத்தியேக உரிமையுள்ள பொருட்பட்டியல்; அது மாகாணப் பட்டியல் என்றழைக்கப்படுகிறது. மூன்றாவது வகையில், கூட்டாட்சி மற்றும் மாகாண சபைகள் ஆகிய இரண்டுக்குமே சட்டமியற்றும் உரிமை கொண்ட பட்டியல். இது ஒத்தியங்கு பட்டியல் (Concurrent list) ஆகும். இந்தப் பட்டியல்களின் நோக்கமும் உள்ளடக்கமும் இந்திய அரசாங்கச் சட்டத்தின் ஏழாவது அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

கூட்டாட்சியின் அடிப்படைக் கோட்பாடுகளின்படி, மாகாணப் பட்டியலில் கண்டுள்ளதொரு பொருள் பற்றி கூட்டாட்சி சபை ஒரு சட்டமியற்றினால், அது உரிமை வரம்புக்கு அப்பாற்பட்டதும் செல்லத்தகாததும் ஆகும். அதேபோன்று, கூட்டாட்சிப் பட்டியலில் கண்டுள்ள விஷயம் குறித்து மாகாணச் சட்டசபை சட்டமியற்றினாலும் அதுவும் வரம்பு மீறிய உரிமையானதால் செல்லத்தக்கதல்ல. இது சட்டத்தில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது; இது குறித்து, 107-வது பிரிவே இன்றையச் சட்ட விதியாகும். கூட்டாட்சிப் பட்டியலையும், மாகாணப் பட்டியலையும் குறித்து சட்ட முரண்பாடுகள் அடிக்கடி நிகழ்வது சாத்தியமல்ல. ஆனால் ஒத்தியங்கு பட்டியலைப் பொறுத்தவரை, சட்டமியற்றுவதில் இரண்டுக்குமிடையே முரண்பாடுகள் நிச்சயமாகத் தோன்றக் கூடும். அதுகுறித்த சட்டவிதியை, 107-வது பிரிவில் காணலாம். மாகாணச் சட்டத்திற்கும் மேல் கூட்டாட்சிச் சட்டம் எப்பொழுது ஓங்கி நிற்கும் என்பதை உப-பிரிவு (1) வரையறுக்கிறது. கூட்டாட்சிச் சட்டத்தை மீறி, மாகாணச் சட்டம் எப்போது மேலோங்கி நிற்கும் என்பதை உப பிரிவு (2) வரையறுக்கிறது. இரு உப பிரிவுகளையும் சேர்த்துப் பார்த்தால் சட்ட நிலை இதுதான்: இரு சட்டங்களிடையே முரண்பாடு ஏற்பட்டால் கூட்டாட்சிச் சட்டமே மேலோங்கி நிற்கும். ஆனால் மாகாணச் சட்டம், கவர்னர் ஜெனரலின் ஆய்வுக்காக ஒதுக்கப்பட்டு அல்லது அதற்குச் சரியான விளக்கம் அளிப்பதற்காக மாட்சிமை தங்கிய மன்னருக்கு சமர்ப்பிக்கப்பட்டு, கவர்னர் ஜெனரல் அல்லது மன்னரின் ஏற்பினைப் பெற்றிருந்தால், அதே விஷயம் குறித்து கூட்டாட்சி சட்டசபை மேற்கொண்டு சட்டமியற்றும்வரை, மாகாணச் சட்டமே மேலோங்கி நிற்கும்.

சட்டமியற்றும் அதிகார ஒதுக்கீட்டு விஷயத்தைப் பொறுத்தவரை, ஒவ்வொரு கூட்டாட்சியுமே ஒரு பிரச்சினையை எதிர்

நோக்குகிறது. அந்தப் பிரச்சினை எழுவதற்கான காரணம் என்ன வெனில், சட்டமியற்றலுக்கான பொருள்களின் எண்ணிக்கை நிறைவுடையதாகவும், சாத்தியமான எல்லாப் பொருள்களையும் அடக்கியதாகவும் இருக்கும் என்பதற்கு உத்தரவாதம் இருக்க முடியாது. எவ்வளவுதான் அந்தப் பட்டியல் முழுமையும் நிறைவும் கொண்டதாக இருப்பினும், ஏதேனும் ஒரு பொருள் கணக்கி லெடுத்துக் கொள்ளப்படாமலிருக்கும் சாத்தியப்பாடு உள்ளது. அத்தகையதொரு எதிர்பாரா நிலைக்கு மாற்றாக ஒவ்வொரு கூட்டாட்சியும் எஞ்சியுள்ள இந்தப் பொருள்கள் குறித்து சட்ட மியற்றும் உரிமை யாருக்கு என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும். அவை அரசாங்கத்திடம் விடப்பட வேண்டுமா அல்லது அவை அதன் பிரிவுகளிடம் விடப்பட வேண்டுமா? இதுகாறும், இவற் றைச் சமாளிப்பதற்கு ஒரே ஒரு வழிதான் உள்ளது. கனடாவைப் போன்று சில கூட்டாட்சிகளில் இந்த எஞ்சிய அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்திற்குத் தரப்பட்டுள்ளன. ஆஸ்திரேலியாவைப் போன்ற சில கூட்டாட்சிகளில் அவை மாகாணங்களுக்கு அளிக்கப் பட்டுள்ளன. இந்தியக் கூட்டாட்சி இதற்கு ஒரு புதிய வழியை ஏற்றுக் கொண்டுள்ளது. அது மத்திய அரசாங்கத்திற்கோ, மாகா ணங்களுக்கோ ஒதுக்கப்படவில்லை. 104-வது பிரிவின் கீழ் அந்தப் பொறுப்பு கவர்னர்-ஜெனரலிடம் ஒப்படைக்கப்படுகிறது. மூன்று பட்டியல்களிலும் குறிப்பிடப்படாததொரு பொருள் பற்றிச் சட்டமியற்றப்பட வேண்டுமெனில், அந்த அதிகாரம் மத்திய சபைக்கா அல்லது மாநில சபைக்கா என்று கவர்னர்-ஜெனரல் முடிவெடுப்பார்.

ஆ) கூட்டாட்சியின் நிறைவேற்ற அதிகாரங்கள்

கூட்டாட்சியினது நிறைவேற்ற அதிகாரத்தின் பரப்பெல்லை என்ன என்பதே முதல் கேள்வி. சட்டமியற்றும் அதிகாரங்களுடன் அவை சமவீச்சுக் கொண்டவையா? சில கூட்டாட்சிகளில், இது அடிப்படைச் சட்டத்தில் தெளிவுபடுத்தப்படவில்லை. நீதிமன்ற முடிவுக்கு அது விடப்படுகிறது. கனடாவில் அப்படித்தான், இந்திய அரசியல் சட்டத்தில் இந்த விஷயம் நீதிமன்றங்களின் தீர்ப்புக்கு விடப்படவில்லை. அடிப்படைச் சட்டத்திலேயே அது திட்டவட்டமாக வரையறுக்கப்பட்டுள்ளது. அதற்குரிய பிரிவு, பிரிவு 8(1) ஆகும். கூட்டாட்சியின் நிர்வாக அதிகாரம்—

அ) கூட்டாட்சிச் சட்டசபை சட்டமியற்றும் அதிகாரம் பெற் றுள்ள விஷயங்கள்;

ஆ) மன்னரின் சார்பாக, பிரிட்டிஷ் இந்தியாவில் கடற்படை, இராணுவம் மற்றும் விமானப்படையைத் தோற்றுவித்து, இந்திய நிர்வாகத்தைக் கொண்டு மன்னரது அந்தப் போர் படைகளை நிர்வகித்தல்;

இ) உடன்படிக்கை, மான்யம், இணக்கம், பயன்பாடு ஆகியவை மூலம் மன்னரால் நிர்வகிக்கப்படக்கூடிய உரிமைகள், அதிகாரம், ஆட்சி வரம்புகளை நிறைவேற்றுதல் மற்றும் பழங்குடியினர் பகுதிகள் குறித்த விஷயங்கள், போன்றவற்றில் அடங்கும்.

இந்த உபபிரிவின் வாசகங்களைப் புரிந்து கொள்வது கடினமல்ல. துணை வாசகம் (ஈ) யைப் புரிந்து கொள்வதில் ஒரு வேளை சிறிது கஷ்டமிருக்கலாம். கூட்டாட்சியின் சட்டமியற்றும் அதிகாரங்களுடன், நிறைவேற்ற அதிகாரம் சமவீச்சுக் கொண்டவை என்று அது கூறுகிறது. எனினும் கூட்டாட்சியின் சட்டமியற்றும் அதிகாரம், கூட்டாட்சிப் பட்டியலுடன் நில்லாது ஒத்தியங்கு பட்டியலுக்கும் விரிவடைகிறது. ஒத்தியங்கு பட்டியலில் அடங்கிய விஷயங்ளிலும் கூட்டாட்சியின் நிறைவேற்ற அதிகாரம் விரிவடையுமா? இந்தக் கேள்விக்குப் பதில் கூறுமுன்னர் இரண்டு அம்சங்களை மனத்தில் கொள்ள வேண்டும். முதலில், ஒத்தியங்கு பட்டியல் மாகாணத்தின் சட்டமியற்றும் அதிகாரத்திற்கும் உட்பட்டதாகும். இரண்டாவதாக, பிரிவு 49(2)ன் படி, சட்டமியற்றும் அதிகாரத்தை மாகாண சட்டசபைகள் கொண்டிருப்பதால், அது குறித்த விஷயங்களின் நிறைவேற்ற அதிகாரமும் அந்தந்த மாகாணங்களையே சாரும். கூட்டாட்சியின் நிறைவேற்ற அதிகாரம் ஒத்தியங்கு பட்டியலுக்கும் விரிவடையுமா என்ற கேள்விக்கான பதில், அந்தப் பட்டியல் குறித்த விஷயங்களின் நிறைவேற்ற அதிகாரம், கூட்டாட்சி அரசாங்கம் மற்றும் மாகாண அரசாங்கம் ஆகிய இரண்டுக்குமே உண்டு என்பதுதான். பிரிவு 126 (2)-ன் வாசகத்தில் இதுதெளிவாகிறது. கூட்டாட்சிச் சட்டசபை அத்துறையைத் தழுவியிருந்தால் தவிர நிறைவேற்ற அதிகாரம் மாகாண அரசாங்கத்திற்கே உரியது. அதே போன்று மாகாண சட்டசபை அத்துறையைத் தழுவியிருந்தால் தவிர, அது கூட்டாட்சி அரசாங்கத்தைச் சாரும்.

ஒத்தியங்கு பட்டியல் மட்டுமே, கூட்டாட்சிச் சட்டசபையின் சட்டமியற்றலுக்கு உட்பட்ட பட்டியல் அல்ல. அவசரகால நிலையின் போது, பிரிவு 102-ன் கீழும், சர்வதேச ஒப்பந்தங்களைச் செயல்படுத்துவதற்காகப் பிரிவு 106-ன் கீழும், மாகாண விஷயங்கள் குறித்து கூட்டாட்சி சட்டசபைக்குச் சட்டமியற்றும் உரிமை உண்டு. அத்தகைய விஷயங்களில் நிறைவேற்ற அதிகாரமும் கூட்டாட்சிக்கு உண்டா? கூட்டாட்சியின் சட்டமியற்றலுக்கு எப்பொழுது ஒரு துறை உட்படுகிறதோ, அப்பொழுது அந்தத் துறையின் நிறைவேற்ற அதிகாரமும் கூட்டாட்சிக்கு உண்டு.

இ) கூட்டாட்சியின் நிர்வாக அதிகாரங்கள்

எவ்வாறு சமஷ்டியின் சட்டமியற்றும் அதிகாரங்களைத் தொடர்ந்து அதற்கு நிறைவேற்ற அதிகாரம் கிடைக்கிறதோ, அதே

போன்று நிறைவேற்ற அதிகாரத்தைத் தொடர்ந்து நிர்வாக அதிகாரங்களும் பெறப்படுகின்றன.

இதற்கு ஒரு விதிவிலக்கு உண்டு. அது ஒத்தியங்கு பட்டியலில் அடங்கிய பொருள்கள் பற்றியதாகும். பிரிவு 100-ன் காரணமாக, ஒத்தியங்கு பட்டியலுக்குக் கூட்டாட்சியின் சட்டமியற்று அதிகாரம் கிடைக்கிறது. ஏற்கனவே, நாம் குறிப்பிட்டதைப் போன்று, ஒரு துறையின் சட்டமியற்று அதிகாரத்தைப் பெற்று விட்டதால், நிறைவேற்ற அதிகாரத்தையும் சமஷ்டி பெறுகிறது. ஆனால் ஒத்தியங்கு பட்டியலின் கீழ் வரும் விஷயங்களின் நிர்வாக அதிகாரங்கள் கூட்டாட்சியைச் சேர்ந்தவை அல்ல. அவை, மாகாணங்களையே சேர்ந்தவை ஆகும்.

ஈ) கூட்டாட்சியின் நிதி அதிகாரங்கள்

கூட்டாட்சி அரசாங்கத்தின் வருவாய் நான்கு வேறுபட்ட வழிகளில் பெறப்படுகிறது. 1) வணிக நிறுவனங்களிலிருந்து 2) ஆட்சிப் பணிகளிலிருந்து 3) கப்பம் (அல்லது திறைகளிலிருந்து) 4) வரிகளிலிருந்து.

முதலில் கூறப்பட்டதில், தபால், தந்தித்துறை, இரயில்வேத் துறை, வங்கி லாபங்கள் மற்றும் இதர வணிகச் செயல்முறைகளின் மூலம் கிடைக்கும் எல்லா வருவாயும் சேரும். பணம், நாணயத் தயாரிப்பு, உரிமை கோரப்படாத பொருள்கள், மற்றும் கூட்டாட்சி அரசாங்கத்தின் நேரடி ஆட்சியிலுள்ள பிராந்தியங்கள் ஆகியவற்றிலிருந்து பெறப்படும் வருவாய் இரண்டாவது தலைப்பின் கீழ் வரும். இந்திய சமஸ்தானங்களிலிருந்து கிடைக்கப்பெறும் கப்பம் திறை ஆகியவற்றிலிருந்து கிடைப்பவை மூன்றாவது ஆகும்.

அரசியல் சட்டத்தினால் கூட்டாட்சி அரசாங்கத்திற்குத் தரப்பட்டுள்ள வரி விதிப்பு அதிகாரத்தினால் பெறப்படும் வரிகளே நான்காவது தலைப்பின்கீழ்கிடைக்கும் வருவாய் ஆகும். வரி விதிப்பு அதிகாரங்கள் பிரதானமாக மூன்று வகைப்படும். முதல் வகையில் பெறப்படும் மொத்த வரிகளும் கூட்டாட்சி அரசாங்கத்தையே சேரும். வருவாயைப் பெருக்குவதற்காக விதிக்கப்படும் வரிகள் கூட்டாட்சி அரசாங்கத்திற்கும் மாகாண அரசாங்கங்களுக்குமிடையே பிரிக்கப்படக்கூடியவை.

முதலாவது பிரிவின் கீழ் பெறப்படும் வரிவருவாய் இனங்கள் கூட்டாட்சிப் பட்டியலில் விசேஷமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன —

1. ஏற்றுமதித் தீர்வை உள்ளிட்ட சுங்கத்தீர்வை
2. புகையிலை மற்றும் இந்தியாவில் உற்பத்தியாகும் அல்லது தயாரிக்கப்படும் பொருள்களின் மீதான ஆயத்தீர்வை. அவற்றுள் விலக்களிக்கப்பட்டுள்ளவை —

அ) மனிதர்கள் உபயோகத்திற்கான மதுவகைகள்;

ஆ) அபினி, இந்திய கஞ்சா மற்றும் இதர போதை மருந்துகளும், போதைப் பொருள்களும், போதையற்ற மருந்துகள்;

இ) சாராயம்கலந்த மருத்துவ மற்றும் ஒப்பனைத் தயாரிப்புகள் அல்லது இப்பட்டியலின் உப-பத்தி (ஆ) வில் அடங்கிய எந்தப் பொருளும்;

3. கார்ப்பரேஷன் வரி

4. உப்பு

5. சமஸ்தானங்களின் அதிர்ஷ்டக் குலுக்கல்

6. விவசாய வருவாய் அற்ற இதர வருமானத்தின் மீது வரி

7. தனியார் அல்லது நிறுவனங்களின் விவசாய நிலம் தவிர்த்து, சொத்துக்களின் மூலதன மதிப்பின் மீது வரிகள்; நிறுவனங்களின் மூலதனத்தின் மீது விதிக்கப்படும் வரிகள்

8. விவசாய நிலம் நீங்கலாக, சொத்துக்களின் வாரிசுரிமையின் மீது தீர்வை.

9. பரிவர்த்தனைப் பத்திரங்கள், காசோலைகள், பண உறுதிப் பத்திரங்கள், ஏற்றுமதிப் பத்திரங்கள், கடன் பத்திரங்கள், காப்பீட்டு உறுதிப் பத்திரங்கள் மற்றும் பற்றுச் சீட்டுகளுக்கான பதிவுத் தீர்வு.

10. ரயில் அல்லது விமானத்தின் மூலம் செல்லும் சரக்குகள் அல்லது பயணிகள் மீது விதிக்கப்படும் இறுதி முனைவரி; ரயில் கட்டணங்கள், சரக்குகளின் மீதான வரிகள்.

11. இப்பட்டியலிலுள்ள எந்தப் பொருள் குறித்தும் விதிக்கப்படும் கட்டணம்; ஆனால் நீதிமன்றத்தில் பெறப்படும் கட்டணம் இதில் அடங்காது.

இது சம்பந்தமாக, ஒத்தியங்கு பட்டியலிலுள்ள கீழ்வரும் இனங்கள் குறித்து கவனம் செலுத்த வேண்டும்:

1. திருமணம் மற்றும் விவாகரத்து

2. உயில் எழுதி வைக்காமல் இறந்து போதல், வாரிசு உரிமை.

3. சொத்து ம்ற்றும் இதர விவசாய நிலங்கள் மாற்றும்.

ஒத்தியங்குப் பட்டியலில் இருப்பதால், இது குறித்து சட்டமியற்றுவதற்குக் கூட்டாட்சி சபைக்கு அதிகாரம் உண்டு. இவை குறித்துச் சட்டமியற்றும் அதேபோது அவற்றிலிருந்து வருவாயும் பெறலாமா? இந்தக் கேள்விக்குச் சட்டம் எந்த பதிலையும் தரவில்லை. எனினும், எஞ்சிய அதிகாரங்களைப் பிரயோகிப்பது

குறித்த பகுதி 104-ல் அடங்கியுள்ள விதிகள் இதற்கும் பொருந்தும் என்று கூறலாம்.

அரசியல் சட்டத்தின்படி பிரிக்கப்படக் கூடிய வருவாய் மூலாதாரங்கள்: (1) கார்ப்பரேஷன் வரி நீங்கலாக வருமானவரி மற்றும் (2) சணல் ஏற்றுமதி வரி. கூட்டாட்சிச் சட்டத்தின்படி பிரிக்கப்படக் கூடியவை: (1) உப்பின் மீதான தீர்வை (2) புகையிலை மற்றும் இதர பொருள்களின் மீதான உற்பத்தித் தீர்வை (3) ஏற்றுமதித் தீர்வை.

கூட்டாட்சியின் நிதி அதிகாரங்களைப் பொறுத்து, ஒரு அம்சம் அது மிக விசேஷமானது என்பதால் நமது கவனத்தைக் கவருகிறது. வரி விதிக்கும் உரிமையைச் சட்டம் கூட்டாட்சி அரசாங்கத்திற்கு அளித்த போதும், வரி விதிப்பதற்கான அதிகாரத்திற்கும், அதனை வசூலிப்பதற்கான உரிமைக்குமிடையே ஒரு வேறுபாட்டினைச் செய்துள்ளது; வரி விதிக்கும் அதிகாரத்தை அது தருகிறதேயன்றி, அதனை வசூலிப்பதற்கான உரிமையை அளிக்கவில்லை. வருமான வரியின் மீதான மிகு வரியையும் (Surcharge) கார்ப்பரேஷன் வரியையும் குறித்த நிலை இதுவே. கூட்டாட்சி நோக்கங்களுக்காகத் தான் என்றாலும் வருமான வரி மாகாணங்களின் மீது விதிக்கப்படுகிறதேயன்றி, சமஸ் தானங்களில் விதிக்கப்படுவதில்லை. சமஸ்தானக் குடிமக்கள் வருமான வரியின் மீதான மிகு வரியை மட்டுமே கொடுக்கக் கடமைப்பட்டவர்கள்; ஏனெனில் அந்த மிகுவரி மாகாணங்களிலும் சமஸ்தானங்களிலும் விதிக்கப்படுகிறது. ஆனால் பகுதி 138 (3)ன் கீழ், சமஸ்தானங்களில் அதனை வசூலிக்கும் உரிமை கூட்டாட்சி அரசாங்கத்திற்குக் கிடையாது. அந்த வசூல் உரிமை சமஸ்தான மன்னர்களிடம் விடப்பட்டுள்ளது. தனது குடிமக்களிடமிருந்து மிகுவரியை வசூலிப்பதற்குப் பதில் ஆட்சிபுரிபவர் மொத்தமாக ஒரு தொகையைக் கூட்டாட்சிக்கு தர ஒப்புக் கொள்ளலாம். அதனை ஏற்றுக் கொள்ள கூட்டாட்சி கட்டுப்பட்டது. அதே நிலைதான் கார்ப்பரேஷன் வரி குறித்தும் ஆகும். சமஸ்தானக் குடிமக்களின் மீது, கூட்டாட்சி அந்த வரியை விதிக்கலாம்; ஆனால் தனது சொந்த செயலமைப்பின் மூலம் அதனை நேரடியாக வசூலிக்க முடியாது. கார்ப்பரேஷன் வரியை வசூலிப்பது சமஸ்தான ஆட்சியாளரின் உரிமை என்று பகுதி 139 கூறுகிறது.

5

கூட்டாட்சியின் தன்மைகள்

(1) ஒன்றியத்தின் இயல்பு

இதர கூட்டாட்சிகளுடன், இந்தியக் கூட்டாட்சியின் ஒப்பீடு எவ்வாறுள்ளது? இது ஒரு இயற்கையான கேள்வி மட்டுமன்றி,

தேவையானதொரு கேள்வியுமாகும். ஒரு விஷயத்தைப் புரிந்து கொள்வதற்கான மிகச் சிறந்த வழி, ஒப்பீடு மற்றும் மாறுபாட்டு முறையேயாகும். ஒப்பீடு பற்றி பல கருத்தோட்டங்களைக் கூற லாம். அத்தகைய பரந்த அளவில் ஒப்பீட்டினை நோக்குவதற்குக் காலம் இடமளிக்காது. இந்த ஒப்பீட்டினை ஓரளவிலான வரை யறைக்குள் நான் சுருக்கிக் கொள்கிறேன். எனவே, நான் நான்கு கேள்விகளை மட்டுமே எழுப்ப முற்படுகிறேன். 1) இந்தக் கூட் டாட்சி ஒரு நிரந்தர ஒன்றியமா? 2) கூட்டாட்சி அரசாங்கத்துடன் அதன் பகுதிகள் அல்லது அங்கங்களுக்கான உறவு முறை என்ன? 3) பகுதிகளுக்கிடையேயான உறவு முறை என்ன? 4) இந்த பகுதி களின் கீழுள்ள மக்களிடையேயான உறவு முறை என்ன?

ஆணையினால் (சட்டத்தினால்) தோற்றுவிக்கப்பட்ட கூட் டாட்சி இருக்கும்வரை, கூட்டாட்சியுடன் இந்திய சமஸ்தானங் களின் இணைவு நிரந்தரமானதே என்பதில் சந்தேகமில்லை. கூட்டாட்சி இருக்கும்வரை, பிரிந்து செல்வதற்கான உரிமை கிடை யாது. ஆனால், அது மெய்யான பிரச்சினை அல்ல. மெய்யான பிரச்சினை என்னவெனில், ஆணை (அல்லது சட்டம்) மாற்றப் பட்டாலும், கூட்டாட்சி தொடர்ந்து நீடிக்குமா? வேறு வார்த்தை களில் கூறினால், அது பிரிவதற்கு உரிமையற்றதொரு நிரந்தர ஒன்றியமா? அல்லது அது பிரிந்து செல்லும் உரிமை கொண்ட தொரு வெறும் கூட்டுதானா? என்னுடைய அபிப்பிராயத்தில், இந்தியக் கூட்டாட்சி ஒரு நிரந்தர ஒன்றியமல்ல; இந்திய சமஸ் தானங்களுக்குப் பிரிந்து செல்லும் உரிமை உண்டு. இதைப் பொறுத்தவரை, அமெரிக்காவின் அரசியல் சட்டமும் இந்தியக் கூட்டாட்சியின் அரசியல் சட்டமும் தெளிவான மாறுபாட்டுக் குரியது. அமெரிக்க அரசியல் சட்டம் பிரிந்து செல்வது பற்றி எதுவுமே கூறவில்லை. இந்த விடுபடலுக்கு இருவேறு வழிகளில் விளக்கம் அளிக்கப்படுகிறது. ஒத்தபடிவம் என அங்கீகரிக்கப் பட்டதால், அது வழங்கப்படவில்லை என்று சிலர் கூறுகின்றனர். வேறு சிலர் அது மறுதலித்துக் கூறப்படாததால், தவிர்க்கப்பட்ட தாக கொள்ள முடியாது என்கின்றனர். அது அங்கீகரிக்கப்படாத தால் பிரிவினை உரிமை தவிர்க்கப்பட்டதா என்ற கேள்வியில் எழுந்த கருத்து மோதல்தான் 1861-ல் நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்திற்கு இட்டுச் சென்றது. உள்நாட்டு யுத்தம் இரண்டு முக்கிய மான கோட்பாடுகளுக்குத் தீர்வாக அமைந்தது 1) கூட்டாட்சி அரசாங்கத்தின் ஓர் ஆணையைச் செல்லத் தக்கதல்ல என்று கூறும் உரிமை எந்த மாநிலத்திற்கும் கிடையாது. 2) எந்த மாநிலமும் ஒன்றியத்திலிருந்து பிரிந்து செல்லும் உரிமை கொண்டதல்ல. சில குறிப்பிட்ட நிகழ்வுகளின்போது இந்தியக் கூட்டாட்சியிலிருந்து சமஸ்தானங்கள் பிரிந்து செல்லும் உரிமையை அரசியல் சட்டம் அங்கீகரித்துள்ளதால், பிரிந்து செல்லும் உரிமையை நிலைநாட்டு வதற்கென இந்தியக் கூட்டாட்சியில் போருக்குச் செல்வது தேவை யற்றதாகும். நிரந்தர ஒன்றியம் எது, நெருங்கிய தொடர்புள்ள

ஒன்றியம் எது என்பதை இங்கிலாந்துக்கும் ஸ்காட்லாந்துக்கு மிடையேயான ஒன்றியத்தின் தன்மை குறித்த தனது விளக்கத்தில் பிளாக்ஸ்டோன் கூறியுள்ளது போன்று வேறு எங்கும் தெளிவாகக் கூறப்படவில்லை. அவரது வாசகத்தைப் பயன்படுத்திக் கூறப் புகின், இந்தியக் கூட்டாட்சி ஓர் ஒருங்கிணைந்த ஒன்றியம் அன்று; ஏனெனில், ஓர் ஒன்றியத்தில், உடன்பாட்டினை மேற்கொண்டுள்ள இரு மாநிலங்கள், மீளும் வாய்ப்பு ஏதுமின்றி முற்றிலும் அழிக்கப்பட்டு விடுகின்றன. இந்தியக் கூட்டாட்சியோ, மன்னர் மற்றும் இந்திய சமஸ்தானங்கள் என்ற இரு உடன்பாட்டுக் கட்சிக்காரர்களிடையேயான நேசக் கூட்டு; இதில் இரு தரப்பினருமே அழிக்கப்பட்டுவிடவில்லை; ஆனால், நிபந்தனை மீறல் ஏற்பட்டால், ஒவ்வொன்றும் தனது பழைய அந்தஸ்துக்கு மீளும் உரிமையைக் கொண்டுள்ளனர். அமெரிக்க அரசியல் சட்டம் நெருங்கிய தொடர்புடையதொன்றாகத் தோன்றி, ஓர் ஒன்றியத்தில் முடிந்தது. இந்தியக் கூட்டாட்சியோ, நெருங்கிய தொடர்புடையதாகத் தோன்றி, அதே நிலையில் தொடர்கிறது. இந்தியக் கூட்டாட்சியில் ஒன்றியத்திற்கான தடயங்கள் ஏதுமில்லை; மாறாக அதனிடம் எந்தப் பூசலுக்கும் அப்பாற்பட்டு நெருங்கிய தொடர்புள்ளதொரு ஆட்சிக்கான அடையாளங்கள் உள்ளன. ஓர் ஒன்றியத்தின் வேறுபடுத்திக் காட்டும் அடையாளங்கள் பற்றி, டேனியல் வெப்ஸ்டர் நன்கு வர்ணித்துள்ளார். அமெரிக்க அரசியல் சட்டம் பற்றிய தனது உரைகள் ஒன்றில் அவர் கூறினார்:

> "...அமெரிக்க அரசாங்கம்" என்று நிறுவப்பட்டுள்ள அரசியல் அமைப்பு பற்றி அரசியல் சட்டம் பேசுகிறது. தனியுரிமை ஆட்சிகளுக்கிடையேயான ஒரு கூட்டினைவையோ அல்லது நெருங்கிய தொடர்பினையோ, ஒரு அரசாங்கம் என்று அழைப்பது, அப்பதத்திற்கு நாம் அளிக்கும் இழுக்கு அல்லவா? ஒரு நாட்டின் அரசாங்கம் என்பது அரசியல் அதிகாரம் குடியிருக்கும் ஒரு ஸ்தாபனமேயாகும்."
>
> ".... ஒரு அரசாங்கத்திற்கும், ஒரு கூட்டு அல்லது நெருங்கிய தொடர்புள்ளதொரு ஆட்சிக்கும் இடையேயான பரந்த, தெளிவான வேறுபாடு, ஒரு அரசாங்கம் என்பது ஓர் அரசுச் சமுதாயம்; அதற்கென சொந்தமானதொரு சிந்தனை உண்டு; அது தனது சொந்தக் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குரிய ஆற்றலையும், செயல்திறனையும் பெற்றுள்ளது. நெருங்கிய தொடர்புள்ள ஒவ்வோர் ஆட்சியும், தனது ஒப்பந்தங்களை நிறைவேற்ற, ஏதேனும் ஓர் சக்தியை நாடுகிறது. தனியுரிமை ஆட்சிக் குழுக்களைக் கொண்ட, நெருங்கிய தொடர்புள்ளதொரு ஆட்சியில்கூட, அதன் நிறைவேற்றத்தை உறுதிப்படுத்துவதற்கு ஏதேனும் ஒரு சக்தியிடம் இறுதியாக முறையிட்டே ஆக வேண்டும். எனினும், இத்தகு சந்தர்ப்பங்களில், இந்த சக்தியானது, ஒரு தரப்பு மற்றொரு தரப்பிற்

கெதிராகக் கடைப்பிடிக்கும் வன்முறையேயாகும்; அதாவது, யுத்தத்தின் சக்தியே அது. ஆனால், ஒரு அரசாங்கம் தனது சொந்த உச்சபட்ச அதிகாரத்தைக் கொண்டே தனது முடிவு களைச் செயல்படுத்துகிறது. தான் இயற்றிய சட்டங்களுக்குக் கீழ்படியுமாறு வற்புறுத்துவதற்கு வன்முறையை அது பயன் படுத்துவது யுத்தம் அல்ல. மறுப்புத் தெரிவிக்கும் உரிமை கொண்ட எதிர்த்தரப்பு ஏதும் இல்லை என்றே அது கருது கிறது. தனது இச்சையை நடைமுறைப்படுத்த அது தனது சக்தி யையே நம்புகிறது. இந்த சக்தி அதற்கு இல்லாது போயின், அதற்கு மேல் அது அரசாங்கம் அல்ல."

இந்தப் பகைப்புலனில், கீழ்க்கண்ட உண்மைகள் கவனத்திற் குரியவை. பிரிட்டிஷ் இந்தியாவுக்கும் இந்திய சமஸ்தானங்களுக் கும் ஒரு கூட்டாட்சி அரசாங்கத்தை நிறுவவேண்டுமென்று சட்டம் பணிக்கவில்லை. பிரிட்டிஷ் இந்தியாவுக்கு மட்டுமே ஒரு கூட்டாட்சி அரசாங்கத்தை நிறுவ அது பணிக்கிறது. ஒவ்வொரு சமஸ்தான மும் இணைவுப் பத்திரத்தை ஏற்றுக் கொண்டால்தான் கூட்டாட்சி அரசாங்கம் சமஸ்தானங்களின் அரசாங்கமாக ஆகும். மேலும், சமஸ்தானங்களைக் கூட்டாட்சி அரசாங்கத்திற்குக் கீழ்ப்படியச் செய்வதானது எல்லாக் காலத்திற்கும் அல்ல. சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களின் கீழ்தான் அது தொடரவிருக்கிறது. சட்டத்தின் சில விதிகள் மாற்றமின்றி தொடரும் வரைதான் அது நீடிக்க விருக்கிறது. மூன்றாவதாக, விதிகளின் மாற்றங்கள் அனுமதிக்கப் படும் போது, அந்த மாற்றங்களுக்குக் கட்டுப்பட சமஸ்தானங் கள் ஒப்புக் கொண்டாலொழிய அவை அவற்றைக் கட்டுப்படுத் தாது.

இவையெல்லாம், இந்தியக் கூட்டாட்சி ஒரு நெருங்கிய தொடர் புடையதொரு அரசாங்கமே அன்றி, நிரந்தர ஒன்றியம் அல்ல என்பதைக் காட்டும் அப்பழுக்கற்ற குறியீடுகள் ஆகும். அதன் சாராம்சம், கூட்டிலிருந்து பிரிந்து மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பும் வலிமையை அது கொண்டுள்ளது என்பதே.

இந்த வகையில், இந்தியக் கூட்டாட்சியானது, அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியக் கூட்டாட்சிகளிலிருந்து வேறுபடுகிறது. அது அமெரிக்காவிலிருந்து வேறுபடுகிறது; ஏனெனில் இந்திய அரசியல் சட்டம் மாற்றப்பட்டால், அதில் பிரிந்து செல்லும் உரிமை அங்கீகரிக்கப்படுகிறது; ஆனால் ஒரு குறிப்பிட்ட மாநிலத் தின் விருப்பத்திற்கெதிராக, அரசியல் சட்டம் மாற்றப்பட்டாலும் கூட அமெரிக்க அரசியல் சட்டத்தில் பிரிந்து செல்லும் உரிமை அங்கீகரிக்கப்படவில்லை. ஆஸ்திரேலியாவையும் கனடாவையும் பொறுத்தவரை அத்தகைய பிரச்சினை எதார்த்தத்தில் எழ முடி யாது; அப்படியே எழுந்தாலும், பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரு உள்நாட்டுப் போர் தேவையற்றதாகும். இந்தக் கூட்டாட்சிகளில் அரசுரிமையானது, அதனை கூட்டாட்சி அரசாங்கமோ, அதன்

அங்கங்களோ பிரயோகித்தாலும் அது மன்னருக்கே உரியது; கூட்டாட்சியைப் பராமரிப்பதோ அதனை உடைப்பதோ மன்னரையும் நாடாளுமன்றத்தையும் சார்ந்தது. நாடாளுமன்றத்தின் ஒப்புதலின்றி, கூட்டாட்சியோ அல்லது அதன் பகுதிகளோ, பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. முடிவு ஏற்படின், அது மன்னரது அரசுரிமை திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டு, அது மறுபங்கீட்டுக்கு உட்படுத்தப்படுகிறது; அதனைச் செய்ய மன்னருக்குச் சுதந்திரம் உண்டு. முறிவு சட்டரீதியாகவும் இருக்கலாம்; அது சட்டத்திற்குப் புறம்பான வழிகளில் ஏற்படுகிறதென்றாலும் கூட, அது கலகக்கார பகுதிகளுக்கு அரசுரிமை அளிக்கலாம்; ஏனெனில் அதுவும் மன்னருக்குக் கட்டுப்பட்டதே. இந்தியக் கூட்டாட்சியும் பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களை மட்டுமே கொண்டுள்ளதெனில், இந்தியக் கூட்டாட்சியின் நிலையும் அவ்வாறே இருக்கும். பிரிவினைப் பிரச்சினையே எழக் காரணமில்லை. மாகாணங்களை எங்கு வைப்பது சிறந்தது என்று மன்னராட்சி கருதுகிறதோ, அந்த நிலையிலேயே அவை நீடிக்கக் கோரப்படும். இந்தியக் கூட்டாட்சியின் நிலை மாறியுள்ளது. இந்திய சமஸ்தானங்களின் நுழைவு, எல்லாச் சூழ்நிலைகளின் கீழும், எல்லாக் காலத்திற்குமானதல்ல. அவற்றின் நுழைவு சில விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ்தான். அவ்வாறிருக்கும் போது, இந்தியக் கூட்டாட்சி ஒரு நிலையான ஒன்றியமாக இருக்க முடியாது. விவாகரத்துக்கான விதிமுறைகள் முன்கூட்டியே தீர்வு செய்யப்பட்டாலொழிய, இந்திய சமஸ்தானங்கள், இந்திய மாகாணங்களுடன் மண ஒப்பந்தத்தில் இறங்காது. நிலைமை அவ்வாறுதான் உள்ளது. அதனால்தான் இந்தியக் கூட்டாட்சி ஒரு கூட்டு அமைப்பேயன்றி, ஓர் ஒன்றியம் அல்ல.

2) கூட்டாட்சி அரசாங்கத்துடன் பகுதிகளின் உறவுமுறை

ஒவ்வொரு தனித்தனி பகுதியும் ஏறக்குறைய சமமான அரசியல் உரிமைகளைக் கொண்டிருக்க வேண்டும் என்பது கூட்டாட்சிகளின் ஒரு பொதுவான பண்பாகும். பல்வேறு பகுதிகளிடையே சம அந்தஸ்து என்பது ஓர் அவசியத் தேவை. அவற்றின் அந்தஸ்தை ஏறுமாறாக்குவது சில பகுதிகள் ஆதிக்கம் பெற்ற பங்காளிகளாகும் சக்தியை அவற்றுக்கு அளிப்பதாகும். ஒரு கூட்டாட்சியில் ஆதிக்கப்பங்காளிகள் இருப்பது, டிஸ்ஸி குறிப்பிட்டிருப்பதைப் போன்று, இரண்டு ஆபத்துக்களைக் கொண்டதாகும். முதற்கண், கூட்டாட்சி சமத்துவத்துக்கு அநேகமாக ஒவ்வாத முறையில் ஆதிக்கப் பங்காளிகள் அதிகாரத்தைப் பிரயோகிக்கலாம். இரண்டாவதாக, அது கூட்டாட்சியினுள், ஆதிக்க பகுதிகள், கீழ்ப்பட்ட பகுதிகள் என்ற இணைப்புக்களையும் மற்றும் எதிரெதிர்மாறான இணைப்புக்களையும் தோற்றுவிக்கக்கூடும். இத்தகைய ஆரோக்கிய மற்ற நிலவரங்களைத் தடுப்பதற்கு எல்லாக் கூட்டாட்சிகளுமே,

சமத்துவ அந்தஸ்து என்ற கோட்பாட்டின்படி செயலாற்றுகின்றன. இந்தியக் கூட்டாட்சியில் எந்த அளவுக்கு இந்தக் கோட்பாடு நிலவுகிறது?

அ) சட்டமியற்றும் விஷயத்தில்

சட்டமியற்றும் நோக்கங்களுக்காக, இத்துறை மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது என்பதையும், கூட்டாட்சிப் பட்டியல், ஒத்தியங்கு பட்டியல், மாகாணப் பட்டியல் என்று அவை அழைக்கப்படுகிறதென்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

கூட்டாட்சிப் பட்டியலில், சட்டமியற்றுவதற்கான பொருள்களாக 59 இனங்கள் அடங்கியுள்ளன. ஒத்தியங்கு பட்டியலில் 36 இனங்கள் உள்ளன.

இந்த இருபட்டியல்களுமே மாகாணங்களைக் கட்டுப்படுத்தும் என்பதை முதலில் குறிப்பிட வேண்டும். இந்த இரு பட்டியல்களிலுமுள்ள விஷயங்களைப் பொறுத்தவரை அவை எவற்றையேனும் தேர்ந்தெடுத்துக் கொள்வது இயலாது; அவற்றைப் பொறுத்தமட்டில், கூட்டாட்சியின் அதிகாரத்திற்கு அவை தங்களை உட்படுத்திக் கொள்ளுகின்றன. இவ்விரு பட்டியல்களிலிருந்தும் விலகி நிற்க மாகாணங்களுக்கு எந்தச் சுதந்திரமும் கிடையாது. கூட்டாட்சி அரசின் நிலை முற்றிலும் வேறுபட்டது. கூட்டாட்சி அரசு, ஒத்தியங்கு பட்டியலிலிருந்து முற்றிலும் விலகி நிற்கலாம். பிரிவு 6 (2) ன்படி ஒத்தியங்கு பட்டியலில் சேர்க்கப்பட்ட விஷயங்களைப் பொறுத்து, அதில் சேர்ந்துகொள்ள, எந்த இந்திய சமஸ்தான ஆட்சியாளரும் ஒப்புக் கொள்வதற்கு ஆட்சேபம் கிடையாது. ஆனால் செய்ய வேண்டுமென்ற கட்டாயம் ஏதும் கிடையாது. அத்தகைய ஒப்புதல், அவை கூட்டாட்சியில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கான முன்னுரிமை நிபந்தனை அல்ல.

கூட்டாட்சிப் பட்டியலைப் பொறுத்து, அந்தப் பட்டியலில் கண்டுள்ளவற்றில் கூட்டாட்சியின் சட்டமியற்றும் அதிகாரத்திற்கு சமஸ்தானாதிபதி கட்டுப்படுவது கடமையென்பதில் சந்தேகமில்லை; ஆனால் இணைவுப் பத்திரத்தில் அவரால் குறிப்பிடப்பட்ட விஷயங்களைப் பொறுத்தமட்டில்தான் அவர் கூட்டாட்சிக்கு உட்படுகிறார். ஏற்கனவே நான் கூறியது போன்று கூட்டாட்சிப் பட்டியலில் 59 இனங்கள் உள்ளன. கூட்டாட்சியில் நுழைவதற்கு முன் நிபந்தனையாக, அந்த எல்லா இனங்களையும் சமஸ்தானாதிபதி ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற கட்டாயமில்லை. அவர் ஏதேனும் சிலவற்றை மட்டுமே ஏற்றுக் கொள்ளலாம்; அல்லது அனைத்தையுமே ஏற்றுக் கொள்ளலாம். மேலும் ஒரு ஆட்சியாளர் ஒரு இனத்தையும் மற்றொருவர் வேறொன்றையும் ஏற்றுக் கொள்ளலாம். கூட்டாட்சியில் நுழைய எண்ணும் ஒவ்வொரு சமஸ்தானாதிபதியும் ஒரு சில இனங்களை ஏற்றுக் கொண்டேயாக வேண்டும் என்று எந்த ஒரு நியதியும் அரசியல் சட்டத்தில்

விதிக்கப்படவில்லை. எனவே, கூட்டாட்சியின் சட்ட அதிகாரத்தைப் பொறுத்த வரை, அது பிரிட்டிஷ் இந்தியாவையும், மாகாணங்களையும் ஒரே சீராக, முழுமையாகப் பார்க்கும்போது, அது வெவ்வேறு சமஸ்தானங்களை வெவ்வேறு அளவிலேயே தொட்டுச் செல்கிறது. ஒரு பொருள் குறித்து ஒரு சமஸ்தானாதிபதி கூட்டாட்சிச் சட்டத்தை ஏற்றுக்கொண்ட போதிலும், கூட்டாட்சிப் பட்டியலிலுள்ள 59 இனங்களையும் ஏற்றுக் கொள்ளும் மற்றொரு சமஸ்தானாதிபதியைப் போன்றே அவரும் கூட்டாட்சியின் சமமான அங்கத்தினரேயாவார்.

மாகாணப் பட்டியல் என்பது மாகாணங்களின் சட்டமியற்றலுக்கே பிரத்தியேகமாக உட்பட்டது. அதற்கு இணையாக கூட்டாட்சியில் இணைந்துள்ள சமஸ்தானங்களுக்கென ஒரு சமஸ்தானப் பட்டியல் ஆணையில் தரப்படவில்லை. அவ்வாறு கொடுக்க முடியாது. ஆனால் சமஷ்டிக்குச் சமஸ்தானத்தால் விட்டுக் கொடுக்கப்படாத எல்லா விஷயங்களுமே அதில் அடங்கும் என்று கூறுப்படலாம். இப்பொழுது மாகாணச் சட்டசபையில் பிரத்தியேக அதிகாரத்தைப் பற்றிக் கூறப் போனால், ஒரு அவசரகால நிகழ்ச்சியின் போது, ஒரு யுத்தத்தின் மூலமாகவோ அல்லது உள்நாட்டுக் கலவரங்களாலோ இந்தியாவின் பந்தோபஸ்து அச்சுறுத்தப்படுகிறது என்பதால், ஒரு தீவிர அவசர நிலை ஏற்பட்டுள்ளதென்று பிரிவு 102-ன் கீழ், தனது சொந்தத் தீர்வின்படி கவர்னர் ஜெனரல் பிரகடனம் செய்தால், மாகாணப் பட்டியலில் கண்டுள்ள எந்தப் பொருள் புற்றியும், ஒரு மாகாணத்திற்கோ அதன் பகுதிக்கோ, சட்டமியற்றுவதற்குக் கூட்டாட்சி சட்டசபைக்கு அதிகாரம் உண்டு. இது போன்றதொரு விதி இந்திய சமஸ்தானங்களைப் பொறுத்துக் கிடையாது. ஒரு மாகாணப் பிராந்தியத்தில் தோன்றுவதைப் போன்றே, ஒரு சமஸ்தானத்திலும் இந்தியாவை அச்சுறுத்தும் ஒரு அபாய நிலை தோன்றக்கூடும். ஆக, அவசரகால நிலையின்போது ஒரு மாகாணத்தில் தலையிட்டு அதற்கென சட்டங்களை கூட்டாட்சி சட்டசபை இயற்றும்போது அதே சூழ்நிலைகளில் அது கூட்டாட்சியில் இணைந்த சமஸ்தானங்களில் தலையிட்டு சட்டங்கள் இயற்ற முடியாது.

ஆ) நிறைவேற்றத்துறை (Executive)) விஷயத்தில்

நிறைவேற்றத் துறையைப் பொறுத்தமட்டில், சமஸ்தானங்களும் மாகாணங்களும் ஒரே அடிப்படையில் அமையவில்லை. கூட்டாட்சியின் நிறைவேற்றத்துறை அதிகாரத்தின் எல்லைகளை பகுதி 8 வரையறுக்கிறது; அது பகுதி-7 ன்படி மன்னரது சார்பில் கவர்னர் ஜெனரலால் பிரயோகிக்கப்படும் உப பிரிவு (1) உப-விதிக்கூறு (அ) ன்படி கூட்டாட்சி சட்டசபை, எத்துறைகளில் சட்டங்கள் இயற்ற அதிகாரம் உள்ளதோ, அத்துறைகளுக்குக் கூட்டாட்சி நிறைவேற்றத் துறையின் அதிகாரமும் விரிந்து நிற்கும்; ஆனால்

இந்த விதிக்கூறு, மாகாணங்களுக்குப் பொருந்துவதைப் போன்று சமஸ்தானங்களுக்குப் பொருந்தாது. மாகாணங்களைப் பொறுத்த அளவில், கூட்டாட்சிப் பட்டியலில் அடங்கியுள்ள எல்லா விஷயங்களிலும் அதற்கு அதிகாரம் உண்டு. ஒத்தியங்கு பட்டிய லில் அடங்கிய சில விஷயங்களிலும் குறிப்பிட்ட சில வரம்புகளுக் குட்பட்டு, அதற்குப் பிரத்தியேக அதிகாரம் உண்டு; ஆனால் சமஸ்தானங்களைப் பொறுத்து, அது பெரிதும் மாறுபட்டது. ஒத்தியங்கு பட்டியலில் கண்டுள்ள விஷயங்களில் சமஸ்தானங் களைப் பொறுத்தவரை, கூட்டாட்சிக்கு எந்த நிறைவேற்றத் துறை அதிகாரமும் கிடையாது; மேலும் கூட்டாட்சி சட்டமியற்றுப் பட்டியலில் அடங்கிய விஷயங்களைப் பொறுத்தும் கூட்டாட் சிக்குப் பிரத்தியேக அதிகாரமும் இல்லை. 8-வது பகுதியின் உப விதிக்கூறு 2 மிக முக்கியமானது; அது கூறுவதாவது;

''சமஸ்தானாதிபதியின் நிறைவேற்றத்துறை அதிகாரத்தைத் தவிர்த்து, கூட்டாட்சியின் நிறைவேற்றத்துறை அதிகாரத்தைப் பிரயோகிப்பதை ஒரு கூட்டாட்சிச் சட்டம் அனுமதித்தால் தவிர, அந்த சமஸ்தானத்தின் சட்டமியற்றும் அதிகாரத்தைக் கூட்டாட்சி சட்டசபை பெற்றுள்ள விஷயங்கள் குறித்து, இந்தப் பகுதியில் கூறப்பட்டது எவ்வாறிருந்தாலும் கூட்டாட்சியில் இணைந்துள்ள சமஸ்தானாதிபதியின் நிறைவேற்றத்துறை அதிகாரமே தொடர்ந்து அந்த சமஸ்தானத்தில் பிரயோகிக்கப்படும்.''

இந்த உப பகுதியின் பொருள், தெளிவான வார்த்தைகளில் கூறப்போனால், இதுதான்: ஒரு மாகாணத்தைப் பொறுத்தவரை, சட்டமியற்றும் அதிகாரத்தைக் கூட்டாட்சி பெற்றுள்ள எல்லா விஷயங்களிலும், அதன் நிறைவேற்றத்துறை அதிகாரம் செல்லு படியாகிறது. சமஸ்தானத்தைப் பொறுத்தமட்டில், நிலைமை வேறு விதமானது. ஒரு பொருள் பற்றி சட்டமியற்றும் உரிமையைக் கூட்டாட்சிச் சட்டசபை பெற்றுள்ளது என்ற எதார்த்தம் மட்டுமே அந்தப் பொருள் குறித்து சமஸ்தானத்தின் மீது நிறைவேற்றத்துறை அதிகாரத்தை கூட்டாட்சிக்குத் தந்துவிடவில்லை. கூட்டாட்சி நிறை வேற்றும் ஒரு சட்டத்தின் விளைவாக அத்தகைய நிறைவேற்றத் துறை அதிகாரம் தரப்படக்கூடும். கூட்டாட்சிச் சட்டசபையில் சமஸ்தானங்களுக்கு மிகப் பெரும் பிரதிநிதித்துவம் உள்ளதால், அத்தகையதொரு சட்டத்தை நிறைவேற்றுவது சாத்தியமா என்பதே பிரச்சினைக்குரியதாகும். கோட்பாட்டு ரீதியாக அதன் பின் விளைவுகள் எவ்வாறிருப்பினும், கூட்டாட்சியின் நிறைவேற்றத் துறை அதிகாரம், அதில் சேர்ந்துள்ள சமஸ்தானத்தில் செல்லத் தக்கதல்ல. மாகாணங்களைப் பொறுத்த அளவில் கூட்டாட்சி, சட்டமியற்றுவதோடு அதனை நிறைவேற்றவும் முடியும்; கூட்டாட்சி சமஸ்தானங்களைப் பொறுத்தவரை கூட்டாட்சி சட்டமியற்றலாம், ஆனால் அதை நிறைவேற்ற முடியாது என்பதே நிலை. அதன் நிறைவேற்றம் சமஸ்தானத்திடமே உள்ளது.

இ) நிர்வாகத்துறை விஷயத்தில்

நிர்வாகத் துறைக் கண்ணோட்டத்தில் நீங்கள் அரசியல் சட்டத்தை ஆராய முற்பட்டால், அதில் கூட்டாட்சி அரசாங்கம், மாகாண அரசாங்கங்கள், சமஸ்தான அரசாங்கங்கள் ஆகிய வற்றிற்கு வழிகாட்டுதலுக்கான விதிகள் அடங்கிய சில பகுதி களைக் காணலாம். தத்தமக்கு உள்ள நிறைவேற்ற அதிகாரத்தை எப்படிப் பிரயோகிப்பது என்பதை அவர்களுக்கு எடுத்துரைப் பதே அப்பகுதிகளின் நோக்கமாகும். 122, 126, 128 ஆகிய வையே அப்பகுதிகள்.

பகுதி 122, கூட்டாட்சி அரசாங்கம் சம்பந்தப்பட்டது. அது கீழ்வருமாறு கூறுகிறது:

122(1) அந்தந்த மாகாணம் அல்லது சமஸ்தானத்துக்குப் பொருந்தக் கூடிய, கூட்டாட்சிச் சட்ட விதிகளுக்கு மதிப்பும் மரியாதையும் பெறத்தக்க வகையில், ஒவ்வொரு மாகாணமும், கூட்டாட்சியில் இணைந்த சமஸ்தானமும் தனது நிறைவேற்ற அதிகாரத்தைப் பிரயோகிக்க வேண்டும்.

(2) எந்த மாகாணம் சம்பந்தமாகவும் கூட்டாட்சிச் சட்டவிதி கள் என்று இப்பகுதியில் உபவிதிக் கூறு (1)ல் குறிப்பிடப்படுவது அந்த மாகாணத்தில் நடைமுறையிலுள்ள எந்த இந்தியச் சட்டத் தையும் உள்ளடக்கியதாகும்.

(3) சட்டத்தின் இந்தப் பகுதியில் கண்டுள்ள இதர எந்த வாசகங்களுக்கும் பங்கம் இல்லாத வகையில், எந்த மாகாணத் திலும் அல்லது கூட்டாட்சி சமஸ்தானத்திலும் கூட்டாட்சியின் நிறைவேற்றத்துறை அதிகாரத்தைப் பிரயோகிக்கும்போது, அந்த மாகாணம் அல்லது சமஸ்தானத்தின் நலன்களுக்கு மதிப்பளிக்கப் பட வேண்டும்.

பிரிவு 126 மாகாண அரசாங்கங்கள் சம்பந்தப்பட்டது. அது கூறுவதாவது:

"126(1) ஒவ்வொரு மாகாணத்தின் நிறைவேற்ற அதிகாரமும் கூட்டாட்சியின் நிறைவேற்ற அதிகாரப் பிரயோகத்திற்குத் தடை யின்றியோ, பங்கம் இன்றியோ பிரயோகிக்கப்பட வேண்டும்; கூட்டாட்சி அரசாங்கத்திற்கு அவசியமானதாகத் தோன்றும் வழி காட்டல்களை மாகாணத்திற்கு வழங்குவதும் கூட்டாட்சி நிறை வேற்ற அதிகாரமாக விரிவடையும்.

பிரிவு 128 சமஸ்தானங்கள் சம்பந்தப்பட்டது. அது கீழ் வருமாறு கூறுகிறது:

"128(1) சமஸ்தானத்திற்குப் பொருந்தும் கூட்டாட்சிச் சட்டசபையின் சட்டத்தினால், சமஸ்தானத்தில் பிரயோகிக்கப் படுவதற்குரிய, கூட்டாட்சி நிறைவேற்றத்துறை அதிகாரப் பிரயோ கத்திற்குத் தடங்கலோ, பங்கமோ ஏற்படாத வகையில் ஒவ்வொரு

கூட்டாட்சியிலுள்ள சமஸ்தானத்தின் நிறைவேற்றத் துறை அதிகாரம் பிரயோகிக்கப்படும்.

(2) கூட்டாட்சியிலுள்ள சமஸ்தானாதிபதி, எவ்வகையிலும் முந்திய உபபிரிவின் கீழ் கண்டுள்ள தனது கடமைகளை நிறைவேற்றத் தவறியதாக கவர்னர் ஜெனரலுக்குத் தோன்றினால், அவர், தனது சொந்த விருப்பத்தின்படி, சமஸ்தானாதிபதியால் செய்யப்பட்ட முறையீட்டை நன்கு கவனத்தில் கொண்ட பின்னர், அவர் பொருத்தமானதென்று எண்ணும் கட்டளைகளைச் சமஸ்தானாதிபதிக்குப் பிறப்பிக்கலாம்.

கூட்டாட்சியின் நிறைவேற்ற அதிகாரம், அது பிரயோகப் படுத்தப்படும் முறையைப் பொறுத்து, ஒரு சமஸ்தானத்தில் பிரயோகப்படுத்தக் கூடியதா என்ற கேள்வி இப்பிரிவின் கீழ்—எழும் பட்சத்தில், அந்தக் கேள்வியை—கூட்டாட்சி அல்லது சமஸ்தானாதிபதியின் வேண்டுகோளின்படி—கூட்டாட்சி நீதிமன்றத்தின் தீர்மானத்திற்கு இந்த சட்டத்தின் கீழ் அந்த நீதிமன்றத்திற்குள்ள வரம்புரிமையின்படி—விட்டு விடலாம்.''

இந்த அமைப்புகள் தங்களது நிறைவேற்ற அதிகாரப் பிரயோகத்தின்போது, முரண்பாட்டிற்கான சாத்தியப்பாடு ஏதேனும் இருந்தால், இந்தப் பிரிவுகள் அனைத்தும் மிகப் பயனுள்ளதாக விருக்கும். ஆனால் இவையனைத்தும் பெரிதும் தேவையற்றனவே; ஏனெனில், பொதுவாகப் பார்க்கும் போது, நிறைவேற்றத் துறையில் முரண்பாடு ஏற்படாது; அத்தகைய நிறைவேற்றத் துறை அதிகாரத்தை நிர்வாகச் செயல்முறை தொடரும்போது மட்டும் அத்தகைய முரண்பாடு எழக்கூடும். நிர்வாகம், நிறைவேற்றத் துறை அதிகாரத்திலிருந்து விலகியிருந்தால், எந்தவித மோதலும் சாத்தியமல்ல; எனவே இந்தப் பிரிவுகளில் அடங்கியுள்ள எச்சரிக்கைகள் பெரிதும் தேவையற்றவையே.

இப்பொழுது, கூட்டாட்சி அரசியல் சட்டத்தில் கூட்டாட்சி அரசாங்கம், தனது முழு நிர்வாக அதிகாரமனைத்தையும் இழந்து, செயலாக்கத்திற்கான உந்துவிசை ஏதுமற்ற ஒரு கூடாக மட்டுமே ஆவது சாத்தியமே. கூட்டாட்சிச் சட்டசபை இயற்றும் ஒரு குறிப்பிட்ட சட்டத்தின் நிர்வாகம் கூட்டாட்சி நிறைவேற்றத் துறைக்குப் பதிலாக, மாகாண அரசாங்கங்கள் மற்றும் இந்திய சமஸ்தானங்களாகிய பகுதிகளிடமே ஒப்படைக்கப்படுவதற்கு கவர்னர் ஜெனரல் வழி வகுக்கலாம் என்று அரசியல் சட்டம் கூறுகிறது. பிரிவு 124ன் விதிமுறைகளிலிருந்து இது தெளிவாகிறது.

''124(1) இந்தச் சட்டத்திலுள்ளது எவ்வாறிருந்த போதிலும் கவர்னர் ஜெனரல், ஒரு மாகாண அரசாங்கம் அல்லது கூட்டாட்சியிலுள்ள சமஸ்தானாதிபதியின் இசைவுடன், கூட்டாட்சி நிறைவேற்றக் குழுவின் அதிகாரத்துக்குட்பட்ட எந்த விஷயம் தொடர்பாகவும் நிர்வாகப் பணிகளைச் சில வரையறைகளுடன் அந்தந்த

அரசாங்கத்திடமோ, சமஸ்தானாதிபதிகளிடமோ அல்லது அவற்றின் முறையான அதிகாரிகளிடமோ ஒப்படைக்கலாம்.

2) ஒரு மாகாணச் சட்டசபைக்குச் சட்டமியற்றும் அதிகாரம் இல்லாத ஒரு பொருள் பற்றியதாக இருந்தாலும், கூட்டாட்சி சட்ட சபையின் ஆணைப்படி, ஒரு மாகாணத்திற்கோ அல்லது அதன் அதிகாரிகளுக்கோ அதிகாரங்கள் வழங்கப்படலாம்; அவர்கள் மீது கடமைகளும் சுமத்தப்படலாம்.

3) கூட்டாட்சியிலுள்ள சமஸ்தானத்திற்கு விரிவுறும் கூட்டாட்சி சட்டசபையின் ஓர் ஆணையானது, அந்த சமஸ்தானாதிபதி அதற்கென நியமிக்கும் அதிகாரிகளுக்கு அதிகாரங்களை வழங்கி, அவர்கள் மீது கடமைகளையும் சுமத்தலாம்.

4) இந்தப் பிரிவின் தகுதியினால், எந்த மாகாணத்தின் அல்லது சமஸ்தானத்தின் அல்லது அவற்றைச் சேர்ந்த அதிகாரிகள் அல்லது நிர்வாகிகளுக்கு அதிகாரமும், கடமைகளும் வழங்கவோ, சுமத்தவோ படுகிறதோ, அந்த மாகாணத்திற்கும் அல்லது சமஸ்தானத்திற்கும் பரஸ்பரம் ஒப்புக் கொள்ளும் தொகையைக் கூட்டாட்சி கொடுக்க வேண்டும்; இந்த ஒப்பந்தம் மீறப்பட்டால் இந்தியப் பிரதான நீதிபதியால் நியமிக்கப்படும் நடுவரது தீர்மானத்தின்படி, அந்த மாகாணத்திற்கோ, சமஸ்தானத்திற்கோ, அதிகாரங்களையும் கடமைகளையும் பிரயோகித்தது குறித்து, நிர்வாகத்திற்கான உபரித் தொகையை கூட்டாட்சி வழங்க வேண்டும்.

சமஸ்தானங்களும் மாகாணங்களும் கூட்டாக, கூட்டாட்சியின் எல்லா நிர்வாக அதிகாரங்களையும் விட்டுவிட்டு, கூட்டாட்சி சபையை ஒரு சட்டமியற்றும் குழுவாக மட்டுமே ஆக்கிவிடுவதும் சாத்தியமே.

அதைக் காட்டிலும் ஒரு தடுமாற்ற நிலையை பிரிவு 125 தோற்றுவிக்கிறது. அது பின்வருமாறு:

''125(1) இந்த ஆணையில் உள்ள விஷயங்கள் எவ்வாறிருப்பினும், இணைவுப் பத்திரத்தின் வாயிலாக வழிவகை செய்யப்பட்டிருந்தால் கூட்டாட்சியின் எந்தச் சட்டமும் ஒரு சமஸ்தானத்திற்குப் பொருந்துவதாக இருக்கும்போது, அந்த சமஸ்தானத்தில் அதனை நிர்வகிக்கும் அதிகாரம் குறித்து, கவர்னர் ஜெனரலுக்கும், கூட்டாட்சியிலுள்ள சமஸ்தானாதிபதிக்குமிடையே அவரது அதிகாரிகள் நிர்வாகப் பொறுப்பேற்பது குறித்து ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்படலாம்.

(2) இந்தப் பிரிவின் கீழ் செய்து கொள்ளப்படும் ஒப்பந்தம், சில காப்பு வாசகங்களைக் கொண்டதாக இருக்கும்; அவை அந்த ஒப்பந்தம் சம்பந்தப்பட்ட சட்ட நிர்வாகம், கூட்டாட்சி அரசாங்கத்தின் கொள்கைக்கு ஏற்ப நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதைக் கவர்னர் ஜெனரல், தணிக்கையின் மூலமாகவோ அல்லது பிற

வழிகளிலோ, தனது விருப்பாற்றல் மூலம் திருப்தி செய்து கொள்ள வழிவகுக்கிறது: அவர் அவ்வாறு திருப்தியுறாவிட்டால், அவர், தனது விருப்பாற்றறலின்படி பொருத்தமெனக் கருதும் கட்டளைகளைச் சமஸ்தானாதிபதிக்கு இடலாம்.''

3) இந்தப் பிரிவின் கீழ் செய்யப்படும் எந்த ஒப்பந்தத்தையும் எல்லா நீதிமன்றங்களும், சட்ட ரீதியாக கவனத்தில் கொள்ளும்.

இந்தப் பிரிவின் பொருள் என்னவெனில், கூட்டாட்சிச் சட்டங்களின் நிர்வாகம், கூட்டாட்சி அமைப்புகளால் அல்லாது, சமஸ்தான அமைப்புகளின் மூலமே நிறைவேற்றப்பட வேண்டு மென்று, தனது இணைவுப் பத்திரத்தின் மூலம் வற்புறுத்த லாம்; அவ்வாறு அது வற்புறுத்தினால் ஒரு சமஸ்தானத்தில் கூட்டாட்சி சபைக்கு எந்த நிர்வாக அதிகாரமும் இருக்காது. ஒரு சட்டத்தின் அனுகூலம். அதன் நிர்வாகத்துறையைப் பொருத்ததே யாகும். ஒரு நிர்வாகத்துறை திறமையற்றதாகவும், ஊழல் நிறைந்த தாகவும் இருந்தால் ஒரு சட்டம் பயனேதுமற்றதாகி விடும். கூட்டாட்சி அரசாங்கத்தின் நிர்வாக அதிகாரங்களை அதனிட மிருந்து பறிப்பதானது, உண்மையில் அதனை முடமாக்குவதாகும். கூட்டாட்சி அரசாங்கத்திற்குத் தங்களது பிராந்தியத்தில் எவ்வித நிர்வாக அதிகாரங்களும் கிடையாது என்று கூட்டாட்சியின் சில பகுதிகள் கூற அனுமதியளிக்கும் எந்தக் கூட்டாட்சியும் இருந்த தில்லை. இந்தியக் கூட்டாட்சி ஒரு விதி விலக்கு. மாகாணங் களுக்கும் சமஸ்தானங்களுக்கும் இந்த விஷயத்தில் மாறுபாடு நிலவு வதோடு மட்டுமின்றி, கூட்டாட்சி அரசாங்கம் தனது நிறைவேற்ற அதிகாரத்தைப் பிரயோகிக்கும் விஷயத்திலும், அவை கண் காணிப்பு மற்றும் கட்டளைகள் குறித்த பொறுப்பிலும் வேறுபடு கின்றன. பிரிவு 126-ஐ பிரிவு 128-டோடு ஒப்பிட்டால் அந்த வேறுபாடு மிகத் தெளிவாகும்.

ஒவ்வொரு மாகாணத்தின் நிறைவேற்றத் துறையின் அதிகார மும் கூட்டாட்சியின் நிறைவேற்றத்துறையின் அதிகாரப் பிரயோ கத்தைத் தடுக்காமலோ அதற்குப் பங்கமில்லாத வகையிலோ பிரயோகப்படுத்தப்பட வேண்டும் என்றும், அந்த நோக்கத்துடன் தேவைப்படுவதாகத் தோன்றும் கட்டளைகளைக் கூட்டாட்சி அரசாங்கம் மாகாணங்களுக்கு அந்த அரசாங்கத்தின் நிறைவேற் றக் குழு அளிக்க வேண்டும் என்றும் பிரிவு 126 கூறுகிறது. கூட்டாட்சியிலுள்ள சமஸ்தானங்கள் குறித்த அதேபோன்றதொரு விதியைப் பிரிவு 128 எடுத்துரைக்கிறது. ஆனால் இந்த இரு பிரிவுகளுக்குமிடையே முக்கியமான வேறுபாடு உள்ளது. குறிப் பிட்ட நோக்கத்திற்குத் தேவையென்று கூட்டாட்சி அரசாங்கத் திற்குத் தோன்றும் கட்டளைகளைக் கூட்டாட்சியின் நிறைவேற்றக் குழு அளிக்கும் என்று பிரிவு 126 உரைக்கிறது. ஆனால் பிரிவு 128 அத்தகைய அதிகாரத்தைத் தரவில்லை. அதன் பொருள், கூட்டாட்சியின் நிறைவேற்றக் குழு அதிகாரப் பிரயோகத்தைத்

தடுத்து அதற்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் சமஸ்தான நிறை வேற்றக் குழு அதிகாரப் பிரயோகம் செய்வதைத் தடைசெய்யக் கட்டளையிடும் இயல்பான நிறைவேற்ற அதிகாரம் கூட்டாட்சிக்கு இல்லை என்பதேயாகும். அது ஒரு மிக முக்கியமான வேறு பாடாகும். அத்தகைய அதிகாரத்தைக் கூட்டாட்சிக்குக் கொடுப் பதற்குப் பதிலாக, கவர்னர்-ஜெனரலுக்குத் தரப்பட்டுள்ளது; அவரோ, கூட்டாட்சி அரசாங்கத்திலிருந்து சட்டத்தின்கீழ் வேறுபட்டவர்; அப்படிப்பட்ட கவர்னர் ஜெனரலுக்கே அவர் சரி யென்று எண்ணும் கட்டளைகளை சமஷ்தானாதிபதிக்கு வழங்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு வேறுபாடும் கவனத் தில் எடுத்துக் கொள்ளக்கூடியதே. ஒரு மாகாண கவர்னருக்குப் பிரிவு 126-ன் கீழ் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டால், அவற்றை நிறைவேற்ற அவர் கட்டுப்பட்டவர். கவர்னர்-ஜெனரல் இடும் கட்டளைகளின் அவசியத்தையோ, அதற்கு அவருக்குள்ள திற னையோ குறித்துக் கேள்வி எழுப்பக் கவர்னருக்கு உரிமை கிடை யாது. எனினும் சமஸ்தானாதிபதியைப் பொறுத்து நிலை முற்றி லும் மாறுபட்டது. அவர் அத்தகைய கட்டளைகளைத் தட்டிக் கேட்க லாம்; கூட்டாட்சி நீதிமன்றத் தீர்ப்புக்கு எடுத்துச் செல்லலாம். ஏனெனில், பிரிவு 128ன் துணைப் பிரிவு 2-ல் தரப்பட்டுள்ள காப்பு வாசகத்தின்படி, இந்தப் பிரிவின் கீழ், ஏதேனும் ஒரு விஷயத்தில் கூட்டாட்சியின் நிறைவேற்றக் குழு அதிகாரம், ஒரு சமஸ்தானத்தில் செயல்படுத்தப்பட முடியுமா அல்லது எந்த அளவுக்கு செயல்படுத்தப்பட முடியும் என்ற பிரச்சினையை, கூட்டாட்சியோ அல்லது சமஸ்தானாதிபதியோ தீர்ப்புக்காக கூட்டாட்சி நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லலாம்.

3) நிதி விஷயம் பற்றி

நிதிப் பிரச்சினை குறித்து, மாகாணங்களுக்கும் சமஸ்தானங் களுக்குமிடையே வெளிப்படையான ஏற்றத்தாழ்வுகள் உள்ளன. மாகாணங்களுக்கும் சமஸ்தானங்களுக்குமான, கூட்டாட்சி வரி விதிக்கும் அதிகாரக் குழுவை எடுத்துக் கொள்ளலாம். வரி விதிப் பின் மூலம் பெறப்படுவது வரி விதிப்பிலிருந்து அல்லாது பெறப் படுவது என்ற இரண்டு பிரதான தலைப்புகளின் கீழ்வரும் மூலா தாரங்களிலிருந்து கூட்டாட்சிக்கு வருவாய் கிடைக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. வரி விதிப்பிலிருந்து அல்லாது பெறப்படும் வருவாய் ஆறு தலைப்புகளில் அடங்கும். அவை:

1. கூட்டாட்சிப் பட்டியலில் அடங்கியுள்ள விஷயங்களுக்கான கட்டணம்.
2. தபால் சேமிப்பு வங்கி உட்பட, தபால்துறையிலிருந்து கிடைக்கக்கூடிய ஆதாயம் (அவ்வாறு கிடைக்கப்பெற்றால்)

3. கூட்டாட்சி இரயில்வேத்துறை செயல்பாட்டின் மூலம் (ஏதேனும் இருந்தால்) கிடைக்கும் ஆதாயம்.
4. நாணயச் சாலை மற்றும் செலாவணிச் செயல்முறைகளின் மூலம் (ஏதேனும் இருந்தால்) கிடைக்கும் ஆதாயம்.
5. ரிசர்வ் வங்கி போன்ற, இதர எந்தக் கூட்டாட்சி நிறுவனத் திடமிருந்தும் (ஏதேனும் இருந்தால்) கிடைக்கும் ஆதாயம்.
6. கூட்டாட்சியிலுள்ள அல்லது அதில் சேராத சமஸ்தானங் களிலிருந்து மன்னராட்சிக்கு நேரடியாகக் கிடைக்கும் பங்குப் பணம்.

இந்திய அரசாங்கச் சட்டத்தின் கீழ், வரிவிதிப்பிலிருந்து பெறப்படும் வருவாயை, இரண்டு தலைப்புகளில்—சாதாரண வரிவிதிப்பு மற்றும் அசாதாரண வரி விதிப்பு—பிரித்துக் கூற லாம். சாதாரண வரி விதிப்பில் கீழ்க்கண்ட மூலாதாரங்கள் அடங்கும்:

1. சுங்கத் தீர்வை
2. ஏற்றுமதித் தீர்வை
3. உள்நாட்டுப் பொருள்களின் மீதான தீர்வை
4. உப்பு
5. கார்ப்பரேஷன வரி
6. விவசாயம் நீங்கலாக, இதர வருமான வரி
7. சொத்து வரிகள்; அதாவது, தனிப்பட்டவர்களது ஆஸ்தி களின் அல்லது சொத்துக்களின் மூலதன மதிப்பீட்டின் மீது விதிக்கப்படும் வரிகள்

அசாதாரண வருமானத்தைக் கீழ்வரும் தலைப்புகளில் பிரிக்க லாம்.

1. வருமான வரியின் மீதான உபரி வரி
2. வாரிசு வரிகளின் மீதான உபரி வரி
3. ரயில் அல்லது விமானம் மூலம் கொண்டு செல்லப்படும் பயணிகள் அல்லது சரக்குகளின் மீது விதிக்கப்படும் வரி களின் மீதான உபரி வரி, மற்றும் ரயில்வே சரக்குகளின் மீதான எல்லா வரிகளும்.
4. பத்திரத் தீர்வை போன்றவற்றின் மீதான உபரி வரி.

இப்பொழுது, சாதாரண தலைப்பிலோ அல்லது அசாதார ணத் தலைப்பிலோ ஆன எந்த வரி விதிப்பையும் மாகாணங்கள் ஏற்க வேண்டுமென்னும்போது, அது சமஸ்தானங்களைப் பொறுத்து அவ்வாறல்ல. உதாரணமாக, 6 மற்றும் 7 என்ற தலைப்புகளில் காணப்படும் சாதாரண வரியை, சாதாரண காலங்களில், சமஸ் தானங்கள் செலுத்த வேண்டியதில்லை; அதேபோது மாகாணங் கள் அதற்கு உட்பட்டவை.

அசாதாரண வரிவிதிப்பைப் பொறுத்தவரை, நிதி நிலைமை கடுமையாக உள்ள காலத்திலும் கூட, சமஸ்தானங்கள், அந்த இனத்தில் 2, 3, 4, என்ற தலைப்புகளில் காணப்படும் வரிகளை செலுத்தக் கடமைப் பட்டவை அல்ல; தலைப்பு 1-ன் கீழுள்ள வரியை அவை செலுத்த நேரிடும்போதும் மற்றவகை சிக்கனங்கள் செய்யப் பட்டிருப்பதாகச் சான்றளிக்கப்பட வேண்டும்.

சமஸ்தானங்களுக்கும், மாகாணங்களுக்குமிடையே, நிதிநிலைக் கண்ணோட்டத்திலிருந்து மற்றுமொரு வேறுபாடு உள்ளது. மாகாண அரசாங்கங்களுக்கான வரிவிதிப்புத் துறைகள், சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளன. அதில் குறிப்பிடப்பட்டவற்றைத் தவிர, வேறு வகைகளில் ஒரு மாகாண அரசாங்கம் வருவாய் திரட்ட முடியாது. ஆனால் சமஸ்தானங்களைப் பொறுத்து அவ்வாறல்ல. வரிவிதிப்பு அமைப்புகுறித்து, கூட்டமைப்பிலுள்ள சமஸ்தானங்களுக்கான அதிகாரம் இந்திய அரசாங்கச் சட்டத்தில் வரையறுக்கப்படவில்லை. உள்ளாட்சி நிர்வாகத்திற்காக, வருவாய் திரட்டுவதற்கு அவை எந்த வரிவிதிப்பு மூலாதாரத்தையும் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்; எந்தக் கூட்டாட்சி அரசாங்கத்தின் ஓர் அங்கமாக ஒரு சமஸ்தானம் நிகழ்கிறதோ, அதே கூட்டாட்சி அரசாங்கத்தின் அங்கமாக உள்ள அண்டை மாகாணத்திலிருந்து, தனது பிராந்தியத்தினுள் கொண்டுவரப்படும் பொருள்களுக்கும் சமஸ்தானங்கள் சுங்கத்தீர்வையை விதிக்க முடியும். இது இந்தியக் கூட்டாட்சியின் ஒரு மிக அசாதாரணமான அம்சமாகும்; அதன் மிக இழிவான அம்சங்களில் ஒன்றும் ஆகும். கூட்டாட்சி அமைப்பின் விளைவுகளில் ஒன்று, அதுவே அதன் முதல் நிலை நோக்கமாக இல்லாவிடினும்கூட கூட்டாட்சிப் பிராந்தியத்தினுள் வணிக, வர்த்தகத்திற்கான சுதந்திரம், கூட்டாட்சியின் ஓர் பகுதி, மாநிலங்களுக்கிடையேயான வாணிபத்தைத் தடுக்கும் நோக்குடன், சுங்கத் தீர்வைகளை விதிக்க அல்லது இதர தடைகளை எழுப்ப அனுமதிக்கும் ஒரு கூட்டாட்சியை வரலாறு கண்டதில்லை. இதற்கு விதிவிலக்காக அமைந்துள்ளது இந்தியக் கூட்டாட்சி அமைப்பு. இன்று, மக்களுக்கு அறிமுகமாகியுள்ள, இதரக் கூட்டாட்சி அமைப்புகளிலிருந்து, மிகத் தெளிவான மாறுபாட்டுடன் இந்தியக் கூட்டாட்சி அமைப்பு உள்ளது என்பதை எடுத்துக் காட்டும் அம்சம் இது.

கூட்டாட்சி அமைப்பிலுள்ள பிராந்தியம் பலவாறாகப் பிரிந்து பல்வேறு அலகுகளின் கீழிருந்தாலும், அவை தனியொரு பிராந்தியமாக அமைந்துள்ளது என்பது ஒரு கூட்டாட்சி அரசியல் சட்டத்தின் குண விசேஷங்களுள் ஒன்று. எப்படியாயினும், சுங்கத் தீர்வை சம்பந்தப்பட்டவரை பிராந்தியம், தனியொரு பகுதியாகவே கருதப்படுகிறது. ஒரு பகுதி, மற்றொன்றுக்கெதிராக சுங்கத் தடைகளை விதித்து, வர்த்தகத்தைத் தடுப்பதைத் தடைசெய்வதற்கான அதிகாரங்களை, ஒவ்வொரு கூட்டாட்சி அரசியல் சட்டமும் கொண்டுள்ளது.

ஒரு மாநில எல்லையிலிருந்து மற்றொரு மாநிலத்திற்குப் பண்டங்களின் ஏற்றுமதியையோ இறக்குமதியையோ தடுப்பதையும் எல்லைகளின் உள்ளேயும் வெளியேயும் செல்லும் பண்டங்களுக்கு இறக்குமுதி, ஏற்றுமதித் தீர்வை விதிப்பதையும் அமெரிக்க அரசியல் சட்டத்தின் இரண்டாவது விதியின் 9-ஆவது பிரிவு தடை செய்கிறது. ஒன்றிய மாநிலங்களிடையேயான வணிக, வர்த்தகத்தை ஒழுங்குபடுத்தும் அதிகாரத்தை, விதி 2-ன் பிரிவு 8(3) கூட்டாட்சி அரசாங்கத்திற்கு வழங்கியுள்ளது.

ஆஸ்திரேலியாவில், ''மாநிலங்களிடையேயான வணிகமும், வர்த்தகமும் — அது உள்நாட்டுப் போக்குவரத்தின் மூலமோ அல்லது கடல் போக்குவரத்து மூலமோ — முற்றிலும் சுதந்திரமாக இருக்கும்'' என்ற அரசியல் சட்டத்தின் 92-வது பிரிவில் பொதிந்துள்ள அடிப்படை உத்தரவாதத்தை மீறாத வகையில், மாநிலங்களும், கூட்டாட்சி அரசாங்கமும், தமது முறைப்படுத்தும் அதிகாரத்தைப் பிரயோகிக்க வேண்டுமென்று அரசியல் சட்டத்தின் 92-வது பிரிவில் கண்டுள்ளது.

''எந்த ஒரு மாகாணத்தில் வளர்க்கப்படும், உற்பத்தியாகும் அல்லது தயாரிக்கப்படும் எல்லாப் பண்டங்களும், ஒன்றியத்திலிருந்து, இதர மாகாணங்கள் ஒவ்வொன்றுக்கும் செல்ல சுதந்திரமாக அனுமதிக்கப்படும்'' என்று கனடாவில் 121-வது பிரிவு வகுத்துள்ளது.

இந்திய அரசியல் சட்டத்தில், கூட்டாட்சியினுள் வர்த்தக, வணிக சுதந்திரம் குறித்த வாசகம் 297-வது பிரிவில் அடங்கியுள்ளது. அது கீழ்வருமாறு கூறுகிறது.

''297(1) எந்த மாகாணச் சட்டசபைக்கும் அல்லது அரசாங்கத்திற்கும் —

அ) மாகாணத்தினுள் நடைபெறும் வர்த்தகமும், வணிகமும் குறித்து மாகாண சட்டமியற்றும் பட்டியலில் பதிவாகியுள்ளது என்ற தகுதியாலும் அல்லது பண்டங்களின் உற்பத்தி வழங்கீடு மற்றும் விநியோகம் குறித்து அந்தப் பட்டியலில் பதிவாகியுள்ளது என்ற தகுதியாலும், எந்த வகையான அல்லது தரமான பொருள்களையும் அந்த மாகாணத்தினுள் நுழைவதையோ அல்லது அங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படுவதையோ தடை செய்யவும் வரம்பு கட்டவும் ஆன எந்தச் சட்டத்தையும் இயற்றவோ அல்லது அதற்குரிய எந்த நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கவோ ஆன அதிகாரம் கிடையாது; அல்லது,

ஆ) இச்சட்டத்தில் கண்டுள்ள எந்தத்தகுதியானாலும், அந்த மாகாணத்தில் தயாரிக்கப்பட்ட அல்லது உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களுக்கும் அவ்வாறு உற்பத்தி செய்யப்படாத அல்லது தயாரிக்கப்படாத அதே போன்ற பொருள்

களுக்கும், முதலில் கூறப்பட்டதற்குச் சாதகமான பாகு பாடுகளைக் காட்டும் வகையிலும், அல்லது மாகாணத் திற்கு வெளியே தயாரிக்கப்பட்ட அல்லது உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் குறித்து, ஒரு பிராந்தியத்தில் தயாரிக்கப்பட்ட அல்லது உற்பத்தி செய்யப்பட்ட பொருள் களுக்கும் வேறொரு பிராந்தியத்தில் தயாரிக்கப்பட்ட அல்லது உற்பத்தி செய்யப்பட்ட அதே மாதிரியான பொருள்களுக்குமிடையே பாகுபாடுகளைக் காட்டும் வகையிலும், எந்த வரியோ, தீர்வையோ, சுங்கமோ விதிக்கும் அதிகாரம் கிடையாது.

2) இதனை மீறி எந்தச் சட்டமியற்றப்பட்டாலும் அது மீறுதல் என்ற அளவில் செல்லாததாகும்.''

ஆக, வணிக, வர்த்தக சுதந்திரம் என்பது மாகாணங்களுக்குள் மட்டுமே அடங்கியது என்பதை இந்தப் பிரிவின் வாசகங்கள் தெளிவாக்குகின்றன. அதன் பொருள், மாகாணங்களிலிருந்து செல்லும் பொருட்களை சமஸ்தானங்கள் அறவே தடுக்கலாம் அல்லது அதற்குத் தீர்வை விதிக்கலாம் என்பதேயாகும். கூட்டாட்சி ஒன்றியத்தின் அடிப்படைக் கருத்துக்கு இது பெரிதும் விரோத மானது. கூட்டாட்சியின் ஒரு பகுதியை மற்றொன்றுடன் வணிக யுத்தம் நடத்த அனுமதிப்பது கூட்டாட்சி அமைப்பினை மறுப்பதே அன்றி வேறல்ல.

4) கூட்டாட்சியின் கீழ் மக்களின் உறவு முறை

இந்தப் பிரச்சினையில் நான் புகு முன்னர் சில குறிப்பிட்ட வேறுபாடுகளைச் சுட்டிக்காட்டி நிலைமையைத் தெளிவுபடுத்தவது அவசியமாகிறது. ''அரசு'' மற்றும் ''சமுதாயம்'' என்ற இரு சொற்களிடையே ஏதோ முரண்பாடு இருப்பது போல, அடிக்கடி காட்டப்படுகிறது. ஆனால் ஒரு அரசுக்கும் ஒரு சமுதாயத்திற்கு மிடையே, அடிப்படைத் தன்மையில் எவ்வித வித்தியாசமும் இல்லை. அரசின் முழு நிறைவான ஆட்சித் திறன், சட்ட இசை வின் மூலம் செயல்படும் போது சமுதாயத்தின் ஆட்சித் திறன் அமுலாக்கத்திற்கு அது மத, மற்றும் சமூக இசைவினைச் சார்ந் துள்ளது என்பது உண்மையே. எனினும், இரண்டுக்குமே கட்டா யப்படுத்தும் முழு நிறை திறன் உண்டு என்பது தெளிவு. அவ்வாறிருக்க, அரசுக்கும், சமுதாயத்திற்குமிடையே எந்த முரண் பாடும் கிடையாது. இரண்டாவதாக, சமுதாயத்தை உருவாக்கும் நபர்கள்தான் அரசின் அங்கத்தினர்களாக விளங்கும் நபர் கள். இங்கும்கூட, அரசுக்கும் சமுதாயத்திற்கும் எந்த வேறுபாடும் இல்லை.

என்றாலும், ஒரு வேறுபாடு உள்ளது; ஆனால் அது மற்றொரு வகைப்பட்டது. சமுதாயத்தின் அங்கத்தினராக, அதில் குடியிருக்கும்

ஒவ்வொரு நபரும், அரசின் அங்கத்தினராக இருக்க வேண்டும் என்ற அவசியமிலலை. அரசின் எல்லைகளுக்குள் குடியிருப்ப வர்களே, அரசுக்கு உரியவர்கள் என்ற அவசியமில்லை. அரசுக்கு உரியவர்களுக்கும் அல்லாதோருக்குமிடையேயுள்ள வேறுபாடு, மிகவும் முக்கியமானது; அதற்கு முக்கியமான விளைவுகள் இருப்பதால் அதனை மறந்துவிடக் கூடாது. அரசுக்கு உரிய வர்கள் அதன் அங்கத்தினர்கள்; அங்கத்தினர் நிலையின் பயன் களைப் பெற்றவர்கள்; முழுமையான உரிமைகளும், கடமை களுமே அந்தப் பயன்கள்; அவற்றை அவர்கள் அரசுக்கு எதிராக வும் கொண்டுள்ளார்கள். கடமையின் புறமிருந்து, அந்த உற வினைக் குடிமகன் என்ற பதத்தால் குறிப்பிடலாம்; உரிமைகளின் புறமிருந்து, சுதந்திரக் குடியுரிமையாளர் என்று குறிப்பிடலாம். அரசுக்கு உரியவர்களாக இல்லாமல், அதில் குடியிருப்பர்கள் அங்கத்தினர் நிலையின் பயன்களை ஏதும் பெறுவதில்லையாத லால், அதன் பொருள் அவர்கள் அந்நியர்கள், குடிமக்கள் அல்லர் என்ற விளைவில் பொதிந்துள்ளதே அந்த வித்தியாசம்.

கோட்பாட்டு ரீதியாக ஓர் அரசின் குடிமக்களிடமிருந்து அந்நியர்களை வேறுபடுத்தும் பணி எளிமையானதாக அநேகமாக ஒரு யாந்திரீகமான பணியாகத் தோன்றலாம். இது ஓர் ஒருமை அரசைப் பொறுத்தவரை, குறிப்பாக உண்மையே. இங்கு ஓர் எளிய கேள்வி எழுகிறது. எந்தவொரு நபருக்கும், மற்றும் எல்லா அன்னிய அரசுகளுக்கும் இந்த அரசுக்கும் என்ன உறவு இருக்கும்? ஒரு கூட்டாட்சி அரசில், ஒவ்வொரு தனி மனிதனும் இரட்டை உறவு முறையைக் கொண்டிருக்கும் காரணத்தால், இந்த விஷயம் சிக்க லாகிறது. ஒருபுறம், மொத்தமான கூட்டாட்சி அரசுடன் அவன் குறிப்பிட்ட உறவுகளைக் கொண்டுள்ளான்; மறுபுறம், அவன் எங்கு வசிக்கிறானோ, அந்த மாநிலத்துடன் சில உறவுகளைக் கொண்டிருக்கிறான். எனவே ஒரு கூட்டாட்சி அரசிலுள்ள ஒரு நபரின் அந்தஸ்தை வரையறுப்பதற்கான முயற்சியை மேற்கொள் ளும் தருணத்தில், ஒன்றல்ல, பல. கேள்விகளுக்கு விடை காண வேண்டும்; எந்தவொரு நபரும் மற்றும் எல்லா அன்னிய அரசுகளுக் கும் எதிராக, கூட்டாட்சி அரசுடன் இந்த நபருக்கான உறவு என்ன? அவன் வசிக்கும் அரசுடன் அந்த நபரின் உறவு என்ன? மேலும், ஒரு மாநில அரசின் குடிமகனாக இருந்து கொண்டு, கூட்டாட்சி அரசின் குடிமகனாக இல்லாமலிருத்தல் சாத்தியமா?

கனடாவும் ஆஸ்திரேலியாவும் கூட்டாட்சிகளான போது இத்தகைய கேள்விகள் எழவில்லை. ஏனெனில், அந்தந்த பகுதி களில் குடியிருந்த நபர்கள் இயற்கையாகவே பிரிட்டனில் பிறந்த குடிமக்கள் — கூட்டாட்சி தோன்றிய போது அந்த அந்தஸ்து அவர் களிடம் எஞ்சியிருந்தது. கூட்டாட்சியின் பின்னர், குடியுரிமைக் கான அதிகாரம் அதனிடம் தரப்பட்டது. அதன் விளைவாக, கூட்டாட்சியினால் குடியுரிமை வழங்கப்பட்ட ஒவ்வொருவரும்,

கூட்டாட்சியின் குடிமக்களாயினர்; அதன் காணரமாக, கூட்டாட்சி யிலுள்ள ஒவ்வொரு பகுதியில் வாழ்பவர்களும் கூட்டாட்சிக் குடி மக்களாயினர்.

இந்தக் கேள்விகள் அமெரிக்கா, சுவிட்சர்லாந்து, ஜெர்மனி ஆகிய நாடுகளில் எழுந்தன; ஏனெனில், கூட்டாட்சிக்கு முன்னர், அவற்றின் பகுதிகள் அனைத்தும் அந்நிய அரசுகள்; மற்றும் குடிமக்களும் அயல் மக்களே. ஆனால், இந்த எல்லா நிகழ்வு களிலும், கூட்டாட்சியின் ஒரு பகுதியாக ஒரு பொதுவான குடிமை நிலை நிறுவப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஓர் பகுதியின் குடிமை நிலை, அத்துடன் கூட்டாட்சியின் குடிமை நிலையை யும் தன்னுட் கொண்டது என்று ஏற்றுக் கொள்ளும்படி ஒரு விதி கொண்டுவரப்பட்டது.

இந்தியக் கூட்டாட்சியின் விஷயம் அமெரிக்கா, ஜெர்மனி, சுவிட்சர்லாந்து ஆகியவற்றைப் போன்றதே. இந்திய சமஸ்தானத் தின் குடிமகன், பிரிட்டிஷ் இந்தியாவில், மற்றும் இதர எந்த இந்திய சமஸ்தானத்திலும் அன்னியன் ஆனான். பிரிட்டிஷ் இந்திய மாகாணத்தின் ஒரு குடிமகன், ஒவ்வொரு இந்திய சமஸ் தானத்திலும் அன்னியனே.

இது பற்றி இந்தியக் கூட்டாட்சி என்ன செய்கிறது? கூட்டாட்சி யின் உறுப்பினர்களான எல்லா பகுதிகளுக்கும் ஒரு பொதுவான குடி உரிமையை உருவாக்குகிறதா? 'இல்லை' என்பதுதான் அதற் கான பதில். கூட்டாட்சிக்கு முன்னர் இருந்ததைப் போன்றே, கூட்டாட்சிக்குப் பின்னரும் அது ஒரு கூட்டாட்சி அரசாக இருந்த போதிலும் ஒரு பிரிட்டிஷ் இந்தியக் குடிமகன், ஒவ்வொரு இந்திய சமஸ்தானத்திலும் தொடர்ந்து அன்னியனாகவே இருக்கிறான். அதே போன்று கூட்டாட்சியிலுள்ள இந்திய சமஸ்தானத்துக் குடிமகன் ஒருவன், கூட்டாட்சிக்கு முன்னர் இருந்ததைப் போன்றே கூட்டாட்சிக்குப் பின்னரும், ஒவ்வொரு பிரிட்டிஷ் இந்திய மாகா ணத்திலும் அன்னியனாகவே இருக்கிறான். பொதுவான தேசிய இனம் ஒன்றில்லை. கூட்டாட்சியிலுள்ள சமஸ்தானத்தின் ஆட்சி யாளரே அந்த சமஸ்தானத்தை ஆள்பவராக இருப்பார்; அவரது குடிமக்கள் அவரது குடிமக்களாகவே இருப்பர்; கூட்டாட்சி மாகா ணங்களின் ஆட்சியாளராக இருக்கும் மன்னர், மாகாணங்களின் ஆட்சியாளராக இருப்பார்; அவரது குடிமக்களும் அவரது குடி மக்களாகவே இருப்பர் என்பதே இந்தக் கூட்டாட்சியின் மொத்தக் கோட்பாடாக உள்ளது.

குடிமை நிலையிலுள்ள வேறுபாடு இரண்டு திட்டவட்டமான வழிகளில் வெளிப்பாடடைகிறது.

முதலில் பணிபுரியும் உரிமை பற்றிய விஷயத்தில் அது வெளிப்படுகிறது. மன்னரின் கீழ் கூட்டாட்சி அமைக்கப்பட்டுள்ள தால், மன்னரின் குடிமக்களாக இருக்கும் நபர்களே அதன்கீழ்

பணிபுரிய முடியும். இதனை 262-ஆவது பிரிவு அங்கீகரிக்கிறது. இது நிச்சயமாக, சமஸ்தானக் குடிமக்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும். குடிமையுரிமை வேறுபாட்டின் இயல்பான விளை வினால் எழுந்துள்ள இந்த அநீதியை அகற்றுவதற்கு, இந்திய சமஸ்தானத்து குடிமக்கள், கூட்டாட்சியின் கீழ் பணிபுரியத் தகுதியானவர்கள் என்று பிரகடனப்படுத்துவதற்கு, பிரிட்டிஷ் அயல்துறை அமைச்சருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது, இது ஓர் ஒழுங்கற்ற விவகார நிலையாகும்; இந்திய சமஸ்தானக் குடி மக்களுக்க இழைக்கப்பட்ட அநீதி குறைக்கப்பட்டதென்றாலும்கூட, இந்திய சமஸ்தானங்களில் பிரிட்டிஷ் இந்தியர்களுக்கு வேலை வாய்ப்புக்கான உரிமை குறித்த அநீதி தொடர்கிறது. ஏனெனில், இந்திய சமஸ்தானங்களின் கீழ் பிரிட்டிஷ் இந்தியர்கள் வேலை வாய்ப்புப் பெறத் தகுதியுள்ளவர்கள் என்று இந்திய சமஸ்தானங் கள் பிரகடனப்படுத்தக் கோரப்படவில்லை. கூட்டாட்சி என்ற நிலையிலும் கூட, இத்தகைய ஒழுங்கற்ற நிலைமை நீடிக்கிறது என்பது, இந்தக் கூட்டாட்சியானது ஒரு தடுமாற்றப் போக்கி லுள்ளது என்பதையே காட்டுகிறது.

இரண்டாவதாக, நான்காவது அட்டவணையின்படி சட்டசபை உறுப்பினர்களுக்குத் தரப்பட்டுள்ள உறுதிமொழியைப் பொறுத் தும், குடிமையுரிமையிலுள்ள வேறுபாடு தன்னையே வெளிக் காட்டிக் கொள்கிறது.

பிரிட்டிஷ் குடிமகனாக இருக்கும் ஓர் அங்கத்தினர் எடுத்துக் கொள்ளும் உறுதிமொழி கீழ் வருமாறு:

''.... ஆகிய நான், இந்தச் சபையின் (அல்லது சட்டசபை) உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதால் (அல்லது நியமிக்கப் பட்டிருப்பதால், அல்லது அமர்த்தப்பட்டிருப்பதால்) நான் இந்தியா வின் அரசரான மாட்சிமை தங்கிய மன்னருக்கும், அவரது வாரிசு களுக்கும், அவர் வழிவந்தோருக்கும் விசுவாசமாகவும், கடப்பா டுடனும் இருப்பேன் என்றும், நான் புரிய வேண்டிய கடமையை விசுவாசமுடன் ஆற்றுவேன் என்றும் பயபக்தியுடன் உறுதி கூறு கிறேன்.''

இந்திய சமஸ்தானாதிபதியின் குடிமகனாக இருக்கும் ஒரு நபர் எடுத்துக் கொள்ள வேண்டிய உறுதிமொழி வருமாறு:

''.... ஆகிய நான், இந்தக் குழுவின் (அல்லது சட்டசபை) உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதால் (அல்லது நியமிக்கப் பட்டிருப்பதால் அல்லது அமர்த்தப்பட்டிருப்பதால்) நான் எனது ... சமஸ்தானாதிபதியின் பெயர்க்கும், அவரது வாரிசுகளுக் கும், வழிவந்தோருக்கும் தவிர, இந்தக் குழுவின், (அல்லது சட்ட சபை) உறுப்பினர் என்ற தகுதியில் மாட்சிமை தங்கிய மன்னருக்கு விசுவாசமாகவும், கடப்பாடுடையவனாகவும் இருப்பேன் என்றும், நான் புரிய வேண்டிய கடமையை விசுவாசமுடன் ஆற்றுவேன் என்றும் பயபக்தியுடன் உறுதி கூறுகிறேன்.''

இந்திய சமஸ்தானத்தின் குடிமகன் இரட்டைக் கடப்பாடுடைய வனாகிறான் என்பது உறுதிமொழி வாசகத்திலிருந்து மிகத் தெளி வாகிறது. அவர் தனது சமஸ்தானாதிபதிக்கும், மன்னருக்கும் கடப்பாடுடையவர். மேலெழுந்தவாரியாகப் பார்க்கப்போனால், அமெரிக்காவிலிருப்பதைவிட இது பெரிதும் வேறுபட்டதல்ல என்று தோன்றக்கூடும். அமெரிக்காவில் ஒரு தனி நபர், ஒன்றியத் தின் அதே நேரத்தில் அவரது மாநிலத்தின் குடிமகனுமாவார்; அவர் இரு சக்திகளுக்கும் கடப்பாடு தெரிவிக்கிறார். அவர் தனக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டுமென்று ஆணையிட ஒவ் வொரு சக்திக்கும் உரிமையுண்டு. ஆனால் முரண்பாடு ஏற்படின், யாருக்குப் பணிவது என்ற கேள்வியை எழுப்பினால், அப் பொழுது இரண்டுக்குமிடையேயுள்ள வேறுபாடு புலனாகும். இந்தப் பிரச்சினை குறித்து பிரைஸ் கூறுவது இதுதான்:

''அரசுக்குரிய விஷயங்களில், அரசுக்குக் கீழ்ப்படிய வைப்பதற்கு அதற்குள்ள உரிமை பரந்தது. முதல் தோற்றத்திலேயே ஒவ்வொரு மாநிலச் சட்டமும், தகுதியுள்ள அரசு அதிகாரக் குழுவின் ஒவ்வோர் ஆணையும் குடிமக்களைக் கட்டுப்படுத்துகிறது; அதே போது, தேசிய அரசாங்கத்திற்கு ஒரு வரையறைக்குட்பட்ட அதிகாரமே உள்ளது; அது சில குறிப்பிட்ட நோக்கங்களுடன் அல்லது குறிப்பிட்ட விஷயங்களில் மட்டுமே சட்டமியற்றவோ அல்லது அதிகாரம் செலுத்தவோ முடியும். ஆனால், அதற்குரிய அதிகார வரம்பினுள், அதன் மேலாண்மை, மாநில அரசினை விட உயர்ந்தது; மாநில அரசுக்குக் கீழ்ப்படியாத அபாய நிலை யிலும், தேசிய அரசாங்கத்திற்குப் பணிய வேண்டும்.

''ஒரு மாநிலச் சட்டசபை அல்லது மாநில நிறைவேற்றக் குழு வின் ஒரு சட்டம், அரசியல் சட்டத்திற்கோ அல்லது அதன் கீழ் தேசிய அரசாங்கத்தால் நிறைவேற்றப்பட்ட சட்டத்திற்கோ முரண் பாடாயிருப்பின், அரசியல் சட்டத்திற்கு எதிராக சட்டபூர்வமாகச் செயல்பட முடியாத மாநில அரசாங்கத்தின் ஒரு செயலல்ல; மாறாக அந்த அரசாங்கத்தின் சார்பாகப் போலியாகச் செயல் படுவதாகப் பாவனை செய்து கொண்ட நபர்களின் செயலே என்பதால், சட்டக் கார்ணங்களால் அது செல்லாததாகிறது. மாநில மேலாண்மையின் உத்தரவுகளைப் பெற்றுள்ள காரணத் தால் கூட்டாட்சி மேலாண்மைக்குக் கீழ்ப்படிய மறுப்பவர்கள், அந்தக் காரணத்தால், ஒன்றியத்திற்கு எதிரான கலகக்காரர்கள்; அவர்கள் அதிகாரத்தைக் கொண்டு கட்டாயப்படுத்தப்பட வேண்டி யவர்கள், அத்தகைய கிளர்ச்சிக்காரர்களுக்கு எதிரான வலுக் கட்டாயம், மாநில அரசுக்கு எதிராக மேற்கொள்ளப்படுவது அல்ல; ஆனால் தவறிழைத்தவர்கள் கூட்டாக இருந்தாலும் தனிப் பட்டவர்களுக்கு எதிரானதே. ஒரு மாநில அரசு பிரிந்து செல்லவும் முடியாது; கிளர்ச்சி செய்யவும் முடியாது. அதே போன்று, அதனை வலுக்கட்டாயப்படுத்தவும் முடியாது.''

கடப்பாடு மோதல் ஏற்படும்போது, ஒன்றிய அரசாங்கம் மேற்கொள்ளக் கூடிய நிலையை இந்தியாவின் கூட்டாட்சி அரசாங்கம் எடுக்க முடியுமா? முடியாது என்பதில் சந்தேகமில்லை; அதற்கான எளிய காரணம், மன்னருக்குக் கடப்பாடுடன் இருப்பது, சமஸ்தானாதிபதியின் கடப்பாட்டைக் காப்பாற்றுகிறது. அது ஒரு அவக்கேடான, இல்லையெனில் ஆபத்தான நிலைமையாகும்.

5) கூட்டாட்சி அமைப்பின் வலிமை

தேசம் முழுவதன் பெயரால், அதன் ஒன்றுபட்ட விருப்பத்துடன் பேசிச் செயல்படும் ஒரு அரசாங்கம் நாட்டிலிருந்தால், சந்தேகமின்றி, அதுவே பெறத்தக்க, மிக வலுவான அரசாங்கமாக இருக்கும்; அவசரகால நிலையின்போது, அத்தகையதொரு வலுவான அரசாங்கத்தையே செயல்பாட்டிற்குச் சார்ந்திருக்க முடியும். எந்த ஒரு நாட்டில், தனித்தனி அதிகார மையங்களைக் கொண்ட, பற்பல அரசாங்கங்கள் இருக்கின்றனவோ, அவை, தனித்தனியேயான ஸ்தாபன ரீதியான அரசியல் அமைப்புகள் கொண்டவையாகவும், அவ்வமைப்புகளின் ஊடே நாட்டு வலிமையின் பல்வேறு இழைகள் பாய்ந்து செல்ல, மைய அரசாங்கத்தின் விருப்பத்திற்கெதிராக அத்தகைய அமைப்புகளின் எதிர்ப்பு, தனிப்பட்ட நபர்களின் எதிர்ப்பைக் காட்டிலும் பெரிதும் ஆற்றல் வாய்ந்ததாகவும் இருந்திடும்; ஏனெனில் அத்தகைய அமைப்புகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு அரசாங்கம், வருவாய், இராணுவம், அவர்களை ஐக்கியப்படுத்துவதற்கு குறுகிய நாட்டுப்பற்று இருப்பதால், அத்தகைய நாட்டின் அரசியல் அமைப்பின் திறன் மிகப் பலவீனமானதாக இருக்கும். முதலில் கூறப்பட்டது ஒருமை அரசாங்க அமைப்பு நிலவுவது; இரண்டாவது கூறப்பட்டது கூட்டாட்சி அரசாங்க அமைப்பு முறை நிலவுவது.

இந்தியா ஒரு கூட்டாட்சியாக இருக்கின்ற காரணத்தினாலேயே, கூட்டாட்சி அரசாங்க அமைப்பின் எல்லா பலவீனங்களையும் பெற்றுள்ளது. ஆனால், இதர கூட்டாட்சிகளில் காணப்படாத, தனது சொந்த கூடுதலான பலவீனங்களையும் இந்தியக் கூட்டாட்சி கொண்டுள்ளது. அந்தபலவீனங்கள் இந்தியாவை முற்றிலும் வலிமை இழக்குமாறு செய்யக்கூடும். இந்தியக் கூட்டாட்சியை, அமெரிக்கக் கூட்டாட்சியுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். பிரைஸ் (Bryce) கூறுகிறார்:

''ஒவ்வொரு மாநிலக் குடிமக்களின் மீதும், தேசிய அரசாங்கத்தின் மேலாண்மை நேரடியாகவும், உடனடியாகவும் உள்ளது; மாநில ஸ்தாபனங்களின் மூலமாக அது செலுத்தப்படுவதில்லை; மாநில அரசாங்கத்தின் ஒத்துழைப்பும் அதற்குத் தேவைப்படுவதில்லை. பெருவாரியான காரியங்களில், தேசிய அரசாங்கம், மாநிலங்களை உதாசீனம் செய்கிறது; குடிமக்கள் அனைவரும்

அதன் சட்டங்களினால் சமத்துவமாகப் பிணைக்கப்பட்டவர்கள் என்றே அது கருதுகிறது. கூட்டாட்சி நீதிமன்றங்கள், வருவாய்த் துறை அதிகாரிகள், தபால் நிலையம் போன்றவை எந்த மாநில அதிகாரிகளிடமிருந்தும் உதவியைப் பெறுவதில்லை; அவை நேரடியாக வாஷிங்டனையே சார்ந்துள்ளன.... கூட்டாட்சி வழி முறைகளில், ஸ்தல சுய அரசாங்கத்திற்கு இடமில்லை... கூட்டாட்சி அதிகாரத் துறை— அது நிறைவேற்றத் துறையாயினும், நீதித்துறை யாயினும் தனது சொந்த அதிகாரிகளின் மூலம், அவர்கள் மாநில அதிகாரிகளிலிருந்து முற்றிலும் சுதந்திரமானவர்களாகவும், தனிப் பட்டவர்களாகவும் உள்ளனர்—மாநிலக் குடிமகனுடன் நேரடி யாகச் செயல்படுகிறது. உதாரணமாக, கூட்டாட்சியின் மறைமுக வரிகள், நாட்டிலும் கடலோரப் பகுதி முழுவதிலும் கூட்டாட்சி சுங்கத்துறையினால் விதிக்கப்பட்டு, வாஷிங்டனிலுள்ள நிதித்துறை ஆணையின் பேரில் கூட்டாட்சி தண்டல்காரர்களால் வசூலிக்கப் படுகிறது. கூட்டாட்சி நீதிமன்றங்களின் தீர்ப்புக்கள், அமெரிக்க மார்ஷல்களால் நிறைவேற்றப்படுகின்றன; அவர்கள் நாடு முழு வதும் பரவியிருப்பதோடு, அவர்களுக்கு உதவியாளர்களும் தரப் பட்டுள்ளனர். இந்த ஏற்பாடு மிக உயர்ந்த முக்கியத்துவம் வாய்ந் தது; ஏனெனில், எங்கணும் உள்ள மக்களின் மீது மத்திய, தேசிய அரசாங்கம் கண்காணிப்பைக் கொள்ள முடிகிறது; அதன் சட்டங் களும், முறையாக ஏற்படுத்தப்பட்ட அதிகாரக் குழுக்களின் ஆணைகளும், எல்லா மாநிலங்களிலும் மனப்பூர்வமாக, விசுவாச முடன் செயல்படுத்தப்படுகின்றனவா என்பதையும், செயல்படுத்தப் படும் சட்டங்களுக்கு அனைத்துமக்களின் ஆதரவு உள்ளதா அல்லது வெறுக்கப்படுகிறதா என்பதையும் கண்காணிப்பது சாத்திய மாகிறது. மனித உடலில் நரம்புகளைப் போன்று, ஒன்றியம் முழுவதும், தேசிய அரசாங்கத்தின் எந்திரக் கருவிகள் பின்னிப் பரவிக் கிடக்கின்றன; ஒவ்வொரு நுனியும், மத்திய நிறைவேற்றக் குழுவுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டுள்ளது.''

இவற்றில் ஒன்றைக்கூட, இந்தியக் கூட்டாட்சியால் உறுதிப் படுத்த முடியாது. அது ஒரு சார்பு அரசாங்கம், மக்களுடன் அதன் உறவு நேரடியானதல்ல.

அமெரிக்காவில், மாநிலங்கள், மாநிலங்கள் என்ற தகுதியில் மத்திய அரசாங்கத்தில் எந்த இடமும் பெறுவதில்லை. கூட்டாட்சி சட்டசபைக்கு மாநிலங்கள் தமது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக் கின்றன என்ற போதும், மையத்தின் அரசியல் செயல்முறை மாநில வழிகளின் மூலம் நடைபெறுவதில்லை. மாநிலங்கள், தொகுதிகளாக இணைவதில்லை; தமது மாநில ஸ்தாபனங்களின் மூலம், அவை அதிகாரபூர்வ வழியில் ஒன்று சேர்வது அங்கு வழக்கமல்ல. இதைப்பார்க்க இந்தியக் கூட்டாட்சி எவ்வளவு வேறு பட்டது! சமஸ்தானங்களுக்குச் சமஸ்தானங்கள் என்ற முறையில் சட்டபூர்வ அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது; சட்டத்திலிருந்து

அவற்றிற்கு, சட்டபூர்வமாக விதிவிலக்குகளும், காப்புரிமைகளும் அளிக்கப்பட்டுள்ளன. இந்த விதிவிலக்குகளுக்கும், காப்புரிமை களுக்கும் ஆதரவாகவும், எதிராகவும் சமஸ்தானங்களிலும், மாகா ணங்களிலும் ஒன்றிணைந்த செயல் நடவடிக்கைகளும், எதிர் நடவடிக்கைகளும் தோன்றுவதற்கான பெரும் சாத்தியப்பாடுகள் உள்ளன. இந்தியக் கூட்டாட்சிக்கு மிகக் குறைந்த வலிமையே இருக்கும் என்ற எண்ணம் ஏற்பட இது மற்றுமொரு காரண மாகும்.

6

கூட்டாட்சி அமைப்பின் அனுகூலங்கள்

கூட்டாட்சி அமைப்பின் ஆதரவாளர்கள், அந்த அமைப்பை ஏற்றுக் கொள்வதற்குச் சாதகமான மூன்று ஆதாரங்களை வற்புறுத்துகின்றனர். அது இந்தியாவை ஐக்கியப்படுத்த உதவும் என்பது முதலாவது ஆதாரம். சமஸ்தான இந்தியாவின் மீது, பிரிட்டிஷ் இந்தியா செல்வாக்கினைச் செலுத்தி, சமஸ்தான இந்தியாவில் நிலவிவரும் எதேச்சாதிகார ஆட்சியை, பிரிட்டிஷ் இந்தியாவில் உள்ள ஜனநாயக ஆட்சிக்குப் படிப்படியாக மாற்ற முடியும் என்பது இரண்டாவது ஆதாரம், மூன்றாவதாக, கூட் டாட்சி அமைப்பு என்பது, பொறுப்புள்ள அரசாங்கம் என்று அழைக்கப்படுவதைத் தன்னுட் கொண்டதொரு அமைப்பாகும்.

கூட்டாட்சி அமைப்புக்குச் சாதகமாக வலியுறுத்தப்படும் இந்த மூன்று வாதங்களும் மிக முனைப்புடன் முன் வைக்கப்படுகின் றன. அவற்றை வலியுறுத்தும் நபர்களின் தனிச் செல்வாக்கும் மிக உயர்ந்தது; எனவே அவற்றில் அடங்கியுள்ள உட்பொருளைப் பரிசீலிப்பது அவசியமாகிறது.

1. கூட்டாட்சியும், இந்தியாவின் ஒருமைப்பாடும்

அரசாங்கத்தின் பொதுவான அமைப்பின் சாதகங்கள் பெரி தும் மெய்யானதே. எல்லோருக்குமுரிய பொதுவான சட்ட அமைப்பும், பொதுவான நிர்வாக அமைப்பும் ஒருமைப்பாட் டுணர்வும் நல்ல வாழ்க்கைக்கான சில அவசியத் தேவைகளே. ஆனால் அவையனைத்தும், அரசாங்கத்தின் பொதுவான அமைப் பின் கீழ் பொதுவான வாழ்விலிருந்து கிடைக்கும் பயன்களாகும். இதர விஷயங்கள் சமமாக இருக்கையில் இந்தியா முழுவதற்கு மான அரசாங்கத்தின் பொதுவானதொரு அமைப்பாக, ஒரு கூட்டாட்சி வரவேற்கத்தக்கதே. ஆனால், 1935 இந்திய அரசாங் கச் சட்டத்தில் இந்தியா என்றழைக்கப்படும் மொத்தப் பிராந்தி யத்தையும், ஒரே அரசாங்க அமைப்பின் கீழ் கூட்டாட்சி ஐக்கியப் படுத்துகிறதா? இது ஒரு அகில இந்தியக் கூட்டாட்சியா?

இந்தக் கூட்டாட்சி பிரிட்டிஷ் இந்தியாவை உள்ளடக்கியது என்பது என்னவோ உண்மைதான்; மாகாணங்கள், கூட்டாட்சியின் பகுதிகள் என்று பிரகடனப்படுத்தும்போது, அதன் பொருள், கூட்டாட்சியில் பிரிட்டிஷ் இந்தியாவும் அடங்கியுள்ளது என்பதே. ஏனெனில், கூட்டாட்சியின் பகுதிகளாகப் பிரகடனப்படுத்தப் பட்டுள்ள மாகாணங்களே, இந்தியர்களின் இந்தியா என்றழைக்கப் படுவதை உருவாக்குகிறது. இந்தியர்களின் இந்தியா என்பது சிறு நிலப்பரப்பு அல்ல. பரப்பு மற்றும் மக்கட் தொகை பற்றிக் கீழே தரப்பட்டுள்ள விவரங்கள், பிரிட்டிஷ் இந்தியாவையும் இந்த இந்தியர்களின் இந்தியாவையும் குறித்த ஒப்பு நோக்கு எண்ணத் தைத் தரக்கூடும்.

	பரப்பளவு (சதுர மைல்களில்) (1931)	மக்கட் தொகை (1931)
பர்மா, ஏடன் நீங்கலாக பிரிட்டிஷ் இந்தியா	8,62,630	2,56,859,787
இந்திய சமஸ்தானங்கள்	7,12,508	81,310,845

இந்தியர்களின் இந்தியா என்பது மக்கட்தொகையில் 39 சத விகிதத்தையும் இந்தியா முழுவதிலுமாக 31 சதவிகிதமும் என்று இதிலிருந்து காணலாம்.

இந்தக் கூட்டாட்சியின் கீழ் இந்தியர்களின் இந்தியா எவ்வளவு சேர்க்கப்பட உள்ளது?

இது ஒரு அகில இந்தியக் கூட்டாட்சி என்று பேசப்படுவதால், கூட்டாட்சியினுள் இந்தப் பரப்பின் ஒவ்வோர் அங்குலமும் அடங் கும் என்றும் அது கூட்டாட்சி அரசாங்கத்தின் மேலாண்மைக்கு உட்பட்டதாக இருக்கும் என்றும் பலரும் கூறமுற்படுவர். சமஸ் தானங்களின் இணைவு குறித்து பிரிவு 6(1)ன் வாசகம், அத்தகைய தொரு தோற்றத்தை உருவாக்குகிறது என்பதில் சந்தேகமில்லை. ஒரு சமஸ்தானாதிபதி, கூட்டாட்சியில் சேருவதற்கான தனது விருப்பத்தைத் தெரிவிப்பதையும், அதன் மூலம் ஒவ்வொரு சமஸ் தானமும் கூட்டாட்சியில் இணையத் தகுதி வாய்ந்தது என்றும் இந்தப் பிரிவு பேசுகிறது. இது உண்மையாக இருந்தால், சந்தேக மன்னியில் கூட்டாட்சி காலப்போக்கில் ஒரு அகில இந்தியக் கூட்டாட்சியாகக்கூடும். ஆனால் இந்த எண்ணம் தவறு, பிரிவு 6(1) ஐ ஆணையின் அட்டவணை 1-உடன் சேர்த்துப் பார்த்தால், அத்தகைய எண்ணம் ஏற்பட முடியாது. அட்டவணை-1 என்பது சமஸ்தானாதிபதிகளுக்கான இடப்பட்டியல் அடங்கியது மட்டுமே என்று கருதப்பட்டது. அது அட்டவணையை அரைகுறையாகப்

படித்ததன் விளைவே. அந்த அட்டவணை அதைக் காட்டிலும் அதிகமாகவே செய்கிறது. அது இடப்பட்டியலை மட்டுமே தர வில்லை; ஆனால், அது கூட்டாட்சியில் இணைவதற்குத் தகுதி பெற்ற சமஸ்தானங்களைக் கணக்கிடவும் செய்கிறது; அதன்மூலம், கூட்டாட்சியில் விரும்பி சேரக்கூடிய சமஸ்தானங்களின் உயர்ந்த பட்ச எண்ணிக்கையும் நிர்ணயிக்கிறது வேறு வார்த்தைகளில் கூறப்போனால், ஒவ்வொரு சமஸ்தானமும், கூட்டாட்சியில் சேர முடியாது. கணக்கிடப்பட்டவை மட்டுமே சேர முடியும். அட்ட வணை-1-ல் தரப்பட்டுள்ள இடப்பட்டியலின் முக்கியத்துவம் அதுவே.

கூட்டாட்சியில் சேரக்கூடிய சமஸ்தானங்களின் மொத்த எண் ணிக்கை என்ன? அட்டவணை 1, அதனை 147 என்று வரம்பு கட்டுகிறது. அட்டவணை நிர்ணயித்துள்ள இந்த வரம்பின் காரண மாக பற்பல கேள்விகள் எழுகின்றன. அதிகாரபூர்வ எண்ணிக்கை யின்படி, இந்தியாவில் மொத்தம் 627 சமஸ்தானங்கள் உள்ளன. அதன்பொருள், 480 சமஸ்தானங்கள் கூட்டாட்சிக்கு வெளியே யிருக்கும் என்றும், கூட்டாட்சியின் பகுதியாக அவை என்றும் ஆக முடியாது என்பதேயாகும். இதனை ஒரு அகில இந்தியக் கூட் டாட்சி என்றழைக்க முடியுமா? அது ஒரு அகில இந்தியக் கூட் டாட்சியாக இருக்க வேண்டுமானால், ஏன் அந்த சமஸ்தானங்கள் தனித்து விடப்பட்டுள்ளன. தனித்துவிடப்பட்ட இந்த சமஸ்தானங் களின் நிலை என்ன? அரசுரிமை பெற்ற சமஸ்தானங்களாக அவை அல்ல என்றால், அவை ஏன் கூட்டாட்சியில் சேர அனு மதிக்கப்படுகின்றன? அவை அரசுரிமை பெற்ற சமஸ்தானங்கள் அல்லவென்றால், அவற்றின் அரசுரிமை மன்னரிடம் உள்ளது என்றால், அந்தப் பிராந்தியங்களைப் பொருத்து அவற்றின் அரசுரிமையை ஏன் மன்னர் கூட்டாட்சிக்கு மாற்றவில்லை? தனித்துவிடப்பட்ட சமஸ்தானங்களின் இறுதிக்கதி என்ன? அவை சில இந்திய சமஸ்தானங்களுடன் இணைக்கப்படுமா, அல்லது சில இந்திய மாகாணங்களுடன் இணைக்கப்படுமா? இதையெல்லாம் நான் கூறுவதற்குக் காரணம், முதலில் இது ஒரு அகில இந்தியக் கூட்டாட்சி அல்ல என்பதைக் காட்டுவதற்கும், இரண்டாவதாக, சில இந்திய சமஸ்தானங்கள், தனித்துவிடப்பட்ட சமஸ்தானங் களைத் தங்களுடன் இணைத்துக் கொள்வதறகாகத் திட்டமிடு வதை, உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்பதற் காகவும் தான்.

இரண்டாவதாக ஒரு கேள்வியும் எழுப்பப்படக்கூடும். இந்தக் கூட்டாட்சி பிரிட்டிஷ் இந்திய மக்களையும், இந்திய சமஸ்தான மக்களையும் ஒரே தேசிய இனமாக ஐக்கியப்படுத்துவதற்கு உதவுமா?

ஒரு கூட்டாட்சி என்பது பலவும் சேர்ந்ததொரு அமைப்பாகும். அதனுள், சிறிய அரசியல் குழுமங்களைச் கொண்ட பகுதிகள்

உள்ளன. அந்த பகுதிகளுக்கெல்லாம் மேலாக, கூட்டாட்சி என்றழைக்கப்படும் பெரியதொரு அரசியல் குழுமம் உள்ளது. இந்தப் பல்வேறு அரசியல் குழுமங்களும் வெறும் அரசியல் சங்கங்களாகவே இருந்து விடுமா அல்லது இறுதியாக ஒரு தேசிய இனம் உருவாவதற்கு இட்டுச்செல்லும் ஒரு பொதுவான சமூகக் கட்டுமானமாக வளர்ச்சியடையுமா என்பது அவற்றின் கூட்டு எத்தகைய வடிவெடுக்கும் என்பதைப் பொறுத்ததேயாகும். பிரைஸ் சுட்டிக் காட்டியுள்ளதைப் போன்று—

''ஒரு பெரிய அரசியல் குழுமத்தில், சிறிய குழுமங்கள் இருக்கும் போது, சிறியவைக்கும், பெரியவைக்குமான உறவு வழக்கமாக, கீழ்க்கண்ட இரண்டு வகைகளில் ஏதேனும் ஒரு வகையில் வெளிப்படுகிறது: கூட்டிணைவு என்பது ஒரு வகை; அதில், பல அரசியல் அமைப்புக்கள் — அவை மன்னராட்சியாயினும் அல்லது குடியரசுகளாயினும் சில குறிப்பிட்ட நோக்கங்களுக்காக, விசேஷமாக பொதுவான பாதுகாப்பு எனும் நோக்கத்திற்காக, ஒன்று இணைந்து, தனியொரு அமைப்பாக உருக்கொள்கிறது. அத்தகைய, பலதரப்பட்ட குழு அல்லது கூட்டிணைவின் உறுப்பினர்கள் குழுமங்களேயன்றி, தனிப்பட்டவர்கள் அல்லர். அது குழுமங்களின் ஒரு கூட்டுத்தொகுதியாகத்தான் அமைவுருகிறது; எனவே, அதற்கிணக்கமாக உள்ள குழுமங்கள் தங்களுக்குள் பிரிந்து விட்டால் கூட்டிணைவும் மறைந்த விடுகிறது. மேலும், அது அந்தக் குழுமங்களுடன் மட்டுமே தொடர்பு கொண்டு, அவற்றின் மீது மட்டுமே செயல்படுகிறது. தனிப்பட்ட நபருடன் அதற்கு ஆக வேண்டியது ஏதுமில்லை; தனிநபர் மீது வரி விதிக்கவோ அல்லது நிர்ணயிக்கவோ அல்லது அவனுக்காகச் சட்டமியற்றவோ அதற்கு உரிமையில்லை; ஏனெனில் இந்த எல்லா விஷயங்களிலும் அவனது கடப்பாடு அவனது சொந்தக் குழுமத்திற்கே உரியதாகும்.

''இரண்டாவது வகையில், சிறிய குழுமங்கள் என்பவை, நாம் தேசிய இனம் என்று அழைக்கும் அந்தப் பெரிய குழுமத்தின் உப-பிரிவுகளே. நிர்வாக நோக்கங்களுக்காக மட்டுமே அவை உருவாக்கப்படுகின்றன; அல்லது எவ்வாறாயினும் அவை அமைவுருகின்றன. அவை கொண்டுள்ள அதிகாரங்கள், தேசத்தால் அவற்றிற்குத் தரப்பட்டவை; அதன் விருப்பப்படி அந்த அதிகாரங்கள் ஒதுக்கித் தள்ளப்படக் கூடும். தேசம் தனது சொந்த அதிகாரிகளைக் கொண்டு நேரடியாக, குழுமங்களின் மீது மட்டுமின்றி, ஒவ்வொரு தனிப்பட்ட பிரஜையின் மீதும் செயல்படுகிறது; இந்தக் குழுமங்களிலிருந்து தேசம் சுதந்திரமாக இருப்பதால் அது எல்லாக் குழுமங்களும் மறைய நேரிடினும் தொடர்ந்து நீடிக்கும்....''

முன்னர் கூறப்பட்டது ஒரு மகா சமஷ்டி (Confederation) என்ற அரசாங்க அமைப்பாகும். பின்னர் கூறப்பட்டது ஒருமை அமைப்பு (Unitary form) அரசாங்கமாகும். ஒரு கூட்டாட்சி

அல்லது சமஷ்டி அரசாங்கம் (Federation) இவை இரண்டிற்கும் இடைப்பட்டது. எனினும், நாட்டுப்பற்று ஒருமை அரசாங்கத் துடன் மட்டுமே ஒத்துப்போவது என்றும், கூட்டாட்சி அரசாங்க அமைப்புடன் அது ஒத்துப்போவதில்லை என்றும் கருதிவிடக் கூடாது. ஒரு தேசம் இருப்பதாக நாம் காணும்போது, ஒரு தேசத்தைக் கொணரவும் முடியும் என்பதை மனத்திலிருத்திக் கொள்ள வேண்டும். ஒரு கூட்டாட்சி அரசாங்கத்தின் தொடக்கத் தில் தேசம் இல்லாதிருக்கலாம்; அது பலதரப்பட்ட குழுமங்களின் ஒரு தொகுப்பாக இருக்கலாம். ஆனால், ஒரு கூட்டாட்சி அரசாங்கத்தின் கீழும் இறுதியில் ஒரு தேசத்தைப் பெறுவது சாத்தியமே. இதற்கு ஒரு முனைப்பான எடுத்துக்காட்டு அமெரிக்கா. சுவையானதும், அதேபோது அறிவுறுத்தக் கூடியதுமான ஒரு கதையை திரு. பிரைஸ் கூறுகிறார். அந்தக் கதையை நான் அவரது வார்த்தைகளிலேயே தருகிறேன்:

''சில ஆண்டுகளுக்கு முன்னர், அமெரிக்க புராடெஸ்டெண்ட் திருச்சபை ஆட்சிக்குட்பட்ட மாதாகோயில், தனது மூவாண்டு விழாவில், வழிபாட்டு வாசகச் சுவடியைத் திருத்துவதில் ஈடுபட் டிருந்தது, அப்போது மக்களனைவருக்கும் சிறிய வாக்கியத்தில் ஒரு வழிபாட்டுத் துதியைப் புகுத்துவது விரும்பத்தக்கது என்று கருதப் பட்டது. ஒரு சிறப்பு வாய்ந்த நியூ இங்கிலாந்துப் பதிரியார் ''ஓ தேவனே, எமது தேசத்தை ஆசிர்வதியும்'' என்ற வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளலாம் என முன்மொழிந்தார். அந்தச் சமயத்தில் உடனடியாக அந்த வாக்கியம் ஒப்புக் கொள்ளப்பட்டு விட் டது. மறுதினம் அது மறு ஆலோசனைக்காகக் கொண்டுவரப் பட்ட போது, பொதுக் குழுவில் ''தேசம்'' என்ற வார்த்தைக்குப் பல எதிர்ப்புக்கள் எழுப்பப்பட்டன; தேசிய ஐக்கியத்தை அது மிகத் திட்டவட்டமாக அங்கீகரிக்கிறது என்று ஆட்சேபக்குரல் எழுப்பப்பட்டதால் அது கைவிடப்பட்டது; அதற்குப் பதிலாக, ''ஓ, தேவனே ஐக்கிய அரசுகளை ஆசிர்வதியும்'' என்ற வரி ஏற்றுக் கொள்ப்பட்டது. ஆண்டவனைத் துதிக்கும் இந்த வாசகம் எவ்வாறிருந்தாலும், மாநிலங்கள் என்ற கருத்திற்கு எதிராக தேசம் என்ற கருத்தை ஊக்குவிப்பதற்கான தயக்கம் எவ்வாறிருப்பினும், அமெரிக்க அரசாங்கம் ஒரு கூட்டாட்சி அமைப்பே என்றிருப்பி னும், அது ஒரு தேசம்தான்; இந்தச் சொல்லின் சமூகப் பொரு ளில் அது ஒரு தேசம் என்பது மறுக்கப்பட முடியாதது.''

அமெரிக்காவில் இது எவ்வாறு நிகழ்ந்தது? கூட்டாட்சித் திட்டத்தின் கீழ் இது இந்தியாவிலும் நிகழும் என்று நாம் நம்பிக்கை யுறலாமா? அமெரிக்காவில் இது எவ்வாறு நிகழ்ந்தது என்பதை பிரைஸ் விளக்குகிறார். அவர் சுட்டிக் காட்டுவதைப் போன்று, அமெரிக்காவில், ''மத்திய அல்லது தேசிய அரசாங்கம் ஒரு வெறும் கூட்டிணைவு அல்ல, ஏனெனில் நாம் மாநிலங்கள் என்றழைக்கும், உறுப்புக் குழுமங்களை அது முற்றிலும் கவர்ந்

திருக்கவில்லை. அதுவே ஒரு சம உரிமைப் பொதுக் குழுவாகவும், சம உரிமைப் பொதுக் குழுக்களின் ஒன்றியமாகவும் உள்ளது; ஏனெனில், அது நேரடியாக ஒவ்வொரு குடிமகனின் கீழ்ப் படிதலையும் பெற்று, அவன் மீது உடனடியாக, நீதிமன்றங்களின் மூலமும் நிறைவேற்றக் குழு அதிகாரிகள் மூலமும் செயல்படு கிறது. ''அது அவன் மீது வரிவிதிக்க முடியும்; அவனுக்காகச் சட்டமியற்ற முடியும்; அவனை எடை போட முடியும். சுருங்கக் கூறின், அமெரிக்கர்களை ஒரு தேசமாக உருவாக்கியதற்குப் பெருமளவுக்கு ஏன் — முழுமையாகவே பொறுப்பானது அரசாங் கத்தின் நடைமுறைப் போக்கேயாகும்; அமெரிக்க அரசாங் கத்தின் கூட்டாட்சி அமைப்பில், தேசிய அரசாங்கத்திற்கும் தனி நபருக்குமிடையே நேரடித் தொடர்பு இருப்பதன் காரணத்தால், இது சாத்தியமாகியுள்ளது.

இந்திய கூட்டாட்சித் திட்டத்தின் கீழ் இது சாத்தியமா? இதற் கான எனது பதில் அது சாத்தியமில்லை என்பதே. இந்திய சமஸ் தானத்து மக்கள் அந்தந்த சமஸ்தானத்தின் குடிமக்களாக இருக்கின் றனர். கூட்டாட்சி அரசாங்கம் அவர்களிடம் நேரடித் தொடர்பு கொள்ள முடியாது. ஒவ்வொன்றும் சமஸ்தானத்தின் மூலமே செய்யப்பட வேண்டும். இரண்டிற்குமிடையே எந்தத் தொடர்பும் இல்லை; வரிவிதிப்பு நோக்கங்களுக்குக்கூட தொடர்பு கிடையாது. சமஸ்தான மக்கள், இத்தகையதொரு செல்வாக்கினின்றும் அகற்றப் பட்டு, தேசிய அரசாங்கம் ஒன்று இருப்பதையே உணர இயலாத வர்களாக ஆக்கப்பட்டிருக்கும்போது, இந்திய சமஸ்தான மக்க ளிடம், அவர்கள் தேசிய அரசாங்கத்துக்குரியவர்கள் என்ற உணர்வு எவ்வாறு உருவாக முடியும்? இந்திய ஐக்கிய அரசுகள் என்பது ஐக்கிய அமெரிக்க அரசுகள் என்பதன் வெறும் பூச்சாகத் தான் இருக்க முடியும் என்றே நான் அஞ்சுகிறேன். இந்தச் சமஸ் தானங்களிலிருந்து ஒரு தேசத்தை உருவாக்கும் ஆற்றல் அதற்கு இல்லை; ஒரு வேளை, திட்டத்தை வடிவமைத்தவர்களுக்கு அந்த நோக்கம் எதுவும் இருக்கவில்லை போலும்!

2) யதேச்சாதிகார ஆட்சிகளை ஜனநாயகத்தன்மை பெறச்செய்தல்

கூட்டாட்சித் திட்டத்தினால் கிடைக்கும் நன்மை என்று இன்னொன்றையும் அதன் ஆதரவாளர்கள் குறிப்பிடுகிறார்கள். அது பிரிட்டிஷ் இந்தியாவின் புதிய ஜனநாயக ஆட்சிகளையும் இந்திய சமஸ்தானங்களின் பழமையான யதேச்சாதிகார ஆட்சி களையும் ஒரே அரசியல் கட்டமைப்பின்கீழ் கொண்டு வருகிறது என்றும், அதன் மூலம் அந்த இரண்டுக்குமிடையே தொடர்பு களை ஏற்படுத்தி, பிரிட்டிஷ் இந்தியாவின் ஜனநாயகம் இந்திய

சமஸ்தானங்களின் யதேச்சாதிகார ஆட்சிகளை ஜனநாயகத்தன்மை பெறச்செய்கிறது என்றும் இவர்கள் கூறுகிறார்கள். இந்த வாதத்தைப் பரிசீலனை செய்து இதில் எவ்வளவு வலிமை இருக்கிறது என்பதைக் காண்பதற்கு இந்திய சமஸ்தானங்களும் பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களும் நிலவியல் அமைப்பில் ஒன்றையொன்று தொட்டவையாக அடுத்தடுத்து அமைத்துள்ளவை என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். அவற்றுக்கிடையே எப்போதும் வழக்கமாகத் தொடர்புகள் இருந்து வருகின்றன. பிரிட்டிஷ் இந்தியாவின் மக்களும் இந்திய சமஸ்தானங்களின் மக்களும் இனத்தாலும், மொழியாலும், பண்பாட்டாலும் ஒரே முழுமையின் பகுதிகளே ஆவார்கள். இவ்வளவு தொடர்ப்புகள் இருந்தும், இனம், மதம், மொழி, பண்பாடு ஆகிய ஒற்றுமைகள் இருந்தும், இந்திய சமஸ்தானங்களில் உள்ள ஆட்சி முறைகளில் பிரிட்டிஷ் இந்தியா எந்த வகையிலும் மாறுதல் உண்டாக்க முடியவில்லை. மாறாக, பிரிட்டிஷ் இந்தியா யதேச்சாதிகாரத்திலிருந்து ஜனநாயகத்துக்கு முன்னேறியுள்ள போதிலும் இந்திய சமஸ்தானங்களில் பழைய ஆட்சி முறைகள் ஏந்த மாற்றமும் இல்லாமல் அப்படியே நீடிக்கின்றன. எனவே பிரிட்டிஷ் இந்தியா, இந்திய சமஸ்தானங்கள் மீது சட்டசபை மூலமாகவும் நிர்வாக அமைப்பின் மூலமாகவும் செல்வாக்குச் செலுத்துவதற்குச் சட்டத்திலேயே விசேஷ ஏற்பாடு எதுவும் இருந்தாலன்றி, இந்த வாதத்தில் வலிமை இருக்க முடியாது. சட்டத்தில் அம்மாதிரி ஏதாவது இருக்கிறதா? இது சம்பந்தமாகச் சட்டத்தின் 34(1) பிரிவைப் பார்க்க வேண்டும். பட்ஜெட் மதிப்பீடுகள் பற்றி சட்டசபையில் விவாதிப்பது, வாக்களிப்பது பற்றியது இந்தப்பிரிவு.

இந்தப் பிரிவை ஆராய்ந்து பார்த்தால், பிரிவு 33, உட்பிரிவு (3)-இல் பாரா(ஏ), பாரா (எஃப்) ஆகியவை சம்பந்தப்பட்ட மதிப்பீடுகளைக் கூட்டாட்சி சட்டமன்றம் விவாதிக்கக்கூட முடியாது என்பது தெளிவாகும். இவற்றில் பாரா (ஏ), கவர்னர்-ஜெனரலின் சம்பளம், அலவன்சுகள், அவரது அலுவலகம் சம்பந்தப்பட்ட மற்ற செலவுகள் பற்றியது. இதற்கு மதிப்பீடு கவர்னர் ஜெனரல் நிர்வாக சபை உத்தரவின்படி செய்யப்பட வேண்டும். பாரா (எஃப்), பிரிட்டிஷ் மன்னர், இந்திய சமஸ்தானங்கள் சம்பந்தமாக தமது பொறுப்புகளை நிறைவேற்றுவது தொடர்பான செலவுகளுக்கு இந்தச் சட்டத்தின்படி கூட்டாட்சியின் வருவாயிலிருந்து கொடுக்கப்பட வேண்டிய தொகைகள் பற்றியது. இதனுடன் சம்பந்தப்பட்ட மற்றொரு சட்டப்பிரிவு, 38-ஆவது பிரிவாகும். இந்தப் பிரிவு, கூட்டாட்சி சட்டமன்றம் தனது அலுவல்களை நடத்துவதற்கான விதிகளை வகுத்துக் கொள்வது பற்றியது. சட்டமன்றம் தனக்குரிய விதிகளை வகுத்துக் கொள்ள இந்தப் பிரிவு அனுமதிப்பதுடன் பின்வரும் விஷயங்களில் விதிகள் வகுப்பதற்குக் கவர்னர் ஜெனரலுக்கு அனுமதியளிக்கிறது:

(ஸி) எந்தவொரு இந்திய சமஸ்தானத்தைப்பற்றிய எந்த விஷயத்தையும் விவாதிப்பதை அல்லது அதுபற்றிக் கேள்விகள் கேட்பதைத் தடை செய்வதற்கு; எந்த விஷயத்திலாவது அந்த சமஸ்தானத்துக்காகச் சட்டம் இயற்றுவதற்குக் கூட்டாட்சிச் சட்ட மன்றத்துக்கு அதிகாரம் இருந்தாலன்றி, அல்லது, அந்த விஷயம் கூட்டாட்சியின் நலன்களைப் பாதிப்பதாகவோ அல்லது பிரிட்டிஷ் பிரஜை ஒருவரைப் பாதிப்பதாகவோ இருக்கிறது என்று கவர்னர் ஜெனரல் கருதி, அந்த விஷயம் பற்றி விவாதிப்பதற்கோ, கேள்வி கேட்பதற்கோ அனுமதி அளித்திருந்தாலன்றி, இவ்வாறு தடைசெய்யலாம்.

(டி) பின்வரும் விஷயங்களைத் தடைசெய்வதற்கு:

(1) மாட்சிமை பொருந்திய மன்னர் அல்லது கவர்னர் ஜெனரலுக்கும் எந்தவொரு வெளிநாடு அல்லது அரசருக்கும் இடையிலான உறவுகள் பற்றி விவாதித்தல் அல்லது கேள்வி கேட்டல்; அல்லது

(2) பழங்குடி மக்கள் பகுதி அல்லது விலக்குப்பெற்ற பகுதி சம்பந்தமாக, செலவு மதிப்பீடுகள் தொடர்பாக அல்லாமல் விவாதித்தல் அல்லது கேள்வி கேட்டல்; அல்லது

(3) எந்தவொரு இந்திய சமஸ்தானத்தின் அதிபதியின் அல்லது சமஸ்தானத்தின் ஆளும் குடும்பத்தின் உறுப்பினரின் சொந்த நடத்தை பற்றி விவாதிப்பது அல்லது கேள்விகேட்பது.

இவ்வாறு கவர்னர்-ஜெனரல் செய்யும் எந்த விதியாவது, சட்டமன்றம் செய்த விதிகளுடன் முரண்படுவதாக இருந்தால், கவர்னர் ஜெனரல் செய்த விதியே செல்லுபடியாகும் என்றும் இந்தப் பிரிவு கூறுகிறது.

இதனுடன் தொடர்புள்ள மற்றொரு பிரிவு, 40-ஆவது பிரிவு ஆகும். இந்தப்பிரிவு பின்வருமாறு கூறுகிறது:

''கூட்டாட்சி நீதிமன்றத்தின் அல்லது ஒரு உயர்நீதிமன்றத்தின் எந்த நீதிபதியும் தமது கடமைகளை நிறைவேற்றும் வகையில் செய்யும் செயல்கள் சம்பந்தமாக கூட்டாட்சிச் சட்டமன்றத்தில் விவாதம் எதுவும் நடத்தக்கூடாது. உயர்நீதிமன்றம் என்பது குறிப்பிடப்படுவதில், இந்தச் சட்டத்தின் பகுதி 9-இன் கீழ் உயர்நீதிமன்றமாகக் கருதப்படும் எந்த நீதிமன்றமும் அடங்கியதாகும்.''
இதே மாதிரியான ஷரத்துக்கள் மாகாண சட்டசபைகளின் அமைப்பு சம்பந்தமாக சட்டத்தில் உள்ள பகுதிகளிலும் இடம் பெற்றுள்ளன. பிரிவு 84, பிரிவு 38-ஐப் போன்றதாகும். மாகாண சட்டசபையின் உறுப்பினர் எவரும், எந்தவொரு இந்திய

சமஸ்தானத்தின் அதிபதி சம்பந்தமாகக் கேள்வி கேட்பதை இந்தப் பிரிவு தடைசெய்கிறது. அதேபோல பிரிவு 86, பிரிவு 40-ஐப் போன்றதாகும்.

ஒரு சட்டமன்றம், நிர்வாகத்தின் நடத்தையில் தனது செல்வாக்கைச் செலுத்துவதற்கு உள்ள இரண்டு முக்கியமான வழிகள், சபையில் விவாதிப்பதும் கேள்வி கேட்பதுமே ஆகும். பட்ஜெட் பற்றி சட்டமன்றத்தில் விவாதிப்பதற்குத் தத்துவரீதியான அடிப்படை இதுதான்: மக்களின் குறைகள் களையப்பட்டாலன்றி நிர்வாக அமைப்புக்கு நிதி வழங்கப்படக்கூடாது. ஜனநாயகத்தின் கொள்கை முழக்கமும், நிதி வழங்கப்படுவதற்குமுன் குறைகளை நீக்குக என்பதாகவே உள்ளது. பட்ஜெட் பற்றிய விவாதம்தான் மக்களின் குறைகளை நிர்வாகத்துக்கு எடுத்துக் கூறுவதற்கான ஒரே வாய்ப்பாகும். எனவே இது மிகவும் மதிப்பு மிக்க ஒரு உரிமையாகும். பிரிவு 34-ஐப் பார்த்தால் சட்ட மன்றத்தில் மக்களின் குறைகளை வெளியிடுவது தடை செய்யப்பட்டிருப்பது தெரிகிறது. அதேபோல கேள்வி கேட்டு விசாரிப்பதும் வினாக்கள் எழுப்புவதும் நியாயமான உரிமையாகும்; ஆனால் அதுவும் மறுக்கப்படுகிறது. நீதிபதிகளின் நடத்தைபற்றி முறைப்படி தீர்மானம் கொண்டு வந்து விமர்சனம் செய்வதற்குச் சட்டமன்றத்துக்கு எப்போதும் உரிமை உண்டு: ஆனால் அதுவும் விலக்கப்பட்டிருக்கிறது. கூட்டாட்சிச் சட்டமன்றம் இந்திய சமஸ்தானங்களின் உள் நிர்வாகத்தில் செல்வாக்குச் செலுத்துவதற்கு என்ன வழி இருக்கிறது என்று காண்பதே கடினமாக உள்ளது. பிரிட்டிஷ் இந்தியாவின் பிரதிநிதிகள் சமஸ்தானங்களின் உள்நிர்வாகம் பற்றிக் கேள்வி கேட்பதோ தீர்மானம் கொண்டு வருவதோ தடை செய்யப்பட்டுள்ளது. அது மட்டுமின்றி அவற்றின் சீர்கேடான நிர்வாகத்தால் பாதிக்கப்படுவோரான சமஸ்தான மக்களின் பிரதிநிதிகளும் தடைக்கு உள்ளாகியிருக்கிறார்கள்.

இந்த நிலைமையை, கூட்டாட்சியில் இணைந்த சமஸ்தானங்கள் பிரிட்டிஷ் இந்தியாமீது எவ்வளவு செல்வாக்குச் செலுத்த முடியும் என்பதனுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

முதலாவதாக, கூட்டாட்சியில் இணைந்த சமஸ்தானங்களின் பிரதிநிதிகள் கூட்டாட்சிச் சட்டமன்றத்தில் எந்தக் கேள்வியும் கேட்பது பற்றியோ எந்த விஷயத்தையும் எழுப்புவது பற்றியோ எந்தவிதமான கட்டுப்படுத்தலும் இல்லை. ஒரு கேள்வி அல்லது விஷயம் பிரிட்டிஷ் இந்தியாவின் உள்நிர்வாகம் பற்றியதாக இருந்தாலும் அதைக் கேட்பதற்கோ எழுப்புவதற்கோ சமஸ்தானங்களின் பிரதிநிதிகளுக்குத் தடை எதுவும் இல்லை.

இரண்டாவதாக, கூட்டாட்சி அரசாங்கத்தின் நிதி பிரேரணைகள் பற்றி விவாதிப்பதற்கோ வாக்கு அளிப்பதற்கோ கூட்டாட்சியில் இணைந்த சமஸ்தானங்களின் பிரதிநிதிகளுக்குக் கட்டுப்படுத்தல் எதுவும் கிடையாது. ஒரு நிதிபிரேரணை பிரிட்டிஷ்

இந்தியாவுக்கு மட்டுமே சம்பந்தமுள்ளது, சமஸ்தானங்களுக்குச் சம்பந்தமில்லாதது என்றாலும்கூட அதனால் அவர்களுக்குச் சட்டத்தின் தடை எதுவும் இல்லை.

மூன்றாவதாக, சட்டம் இயற்றும் விஷயத்தில், கூட்டாட்சிச் சட்டமன்றத்தில் கொண்டுவரப்படும் எந்தச் சட்டத்தின் மீதும் வாக்கு அளிப்பதற்குக் கூட்டாட்சியில் இணைந்த சமஸ்தானங்களின் பிரதிநிதிகளுக்கு உரிமை இருக்கிறது. கூட்டாட்சியின் சட்டம் இயற்றும் அதிகாரங்கள் செல்லத்தக்க விஷயங்கள் பற்றி இரண்டு பட்டியல்கள்—கூட்டாட்சியின் பட்டியல், பொது அதிகாரப்பட்டியல் ஆகியவை உள்ளன. கூட்டாட்சிப் பட்டியல் மாகாணங்களை முற்றிலுமாகக் கட்டுப்படுத்தும். ஆனால் கூட்டாட்சியில் இணைந்த ஒரு சமஸ்தானத்தை அது முற்றிலுமாகக் கட்டுப்படுத்தவில்லை. அதே போல பொது அதிகாரப்பட்டியலுக்கும் மாகாணங்கள் முற்றிலுமாகக் கட்டுப்பட்டுள்ளன. ஆனால் ஒரு சமஸ்தானம் அதனால் கட்டுப்படுத்தப்படாமலே இருக்க முடியும். இருப்பினும் இந்த இரண்டு பட்டியல்களில் எந்தப் பட்டியலிலும் உள்ள விஷயங்கள் பற்றிய எந்தச் சட்டத்தின் மீதும் வாக்கு அளிப்பதற்குச் சமஸ்தானங்களின் பிரதிநிதிகளுக்கு உரிமை இருக்கிறது. வேறுவிதமாகச் சொன்னால் கூட்டாட்சித் திட்டம், பிரிட்டிஷ் இந்தியாவுக்குச் சட்டமியற்றுவதற்குச் சமஸ்தானங்களுக்கு உரிமை அளிக்கிறது. ஆனால் இரண்டு பட்டியல்களிலும் உள்ள விஷயங்களில் எந்த அளவிற்குத் தங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ள சமஸ்தானங்கள் விரும்புகின்றனவோ அதற்குமேல் சமஸ்தானங்களுக்குச் சட்டமியற்றுவதற்குப் பிரிட்டிஷ் இந்தியாவுக்கு உரிமை அளிக்கப்படவில்லை.

இவ்வாறு பிரிட்டிஷ் இந்தியா மீது சமஸ்தானங்களுக்கு இருக்கும் சட்டம் இயற்றும் செல்வாக்கு சிறியதாகவோ முக்கியமற்றதாகவோ இல்லை. பொதுப்பட்டியலை மட்டும் எடுத்துக் கொண்டால், அதில் 36 விஷயங்கள் இருக்கின்றன. இவற்றில், குற்றச் சட்டம், குற்றச்சட்டம் மற்றும் சிவில் சட்டம் பற்றிய நடைமுறை, தொழில்கள், பத்திரிகைகள், புத்தகங்கள், அச்சகங்கள் முதலான விஷயங்கள் அடங்கியுள்ளன. இவையெல்லாம் முக்கியமான விஷயங்களாகும். மாகாணங்களின் மக்களின் சுதந்திரங்கள் சம்பந்தப்பட்ட விஷயங்கன் இவை. பொதுப் பட்டியலில் உள்ள எல்லா விஷயங்கள் சம்பந்தப்பட்ட சட்டங்கள் பற்றிய விவாதங்களில் கலந்து கொள்ளவும் வாக்கு அளிக்கவும் இந்திய சமஸ்தானங்களுக்கு உரிமை இருப்பதால், மாகாணங்களில் உள்ள பிரிட்டிஷ் இந்தியர்களின் உரிமைகள், சலுகைகள், சுதந்திரங்கள் சம்பந்தமாகச் சட்டம் இயற்றுவதற்கு இந்திய சமஸ்தானங்களுக்கு உரிமை இருக்கும்.

மேலும், சட்டம் இயற்றும் விஷயத்தில், பொதுப்பட்டியல் சம்பந்தப்பட்ட மட்டில், சமஸ்தானங்கள் கடமைப் பொறுப்பு

எதையும் ஏற்காமலே அதிகாரத்தை மட்டும் பெற்றிருக்கின்றன. சட்டம் இயற்றும் போது, தங்கள் விஷயத்தில் அது எவ்வாறு பாதிக்கும் என்பதுபற்றி சமஸ்தானங்கள் கவலைப்பட வேண்டிய தில்லை; ஏனென்றால் அவர்கள் இயற்றும் சட்டம் அவர்களைக் கட்டுப்படுத்தாது. எனவே அவை தாங்கள் விரும்பும் அளவுக்குப் பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்ள முடியும்.

பிரிட்டிஷ் இந்தியாவில் நிர்வாகத்திலும் சட்டம் இயற்றுவதி லும் செல்வாக்குச் செலுத்தும் உரிமை மட்டுமே சமஸ்தானங் களுக்கு இருப்பதாக கூறுவது உள்ளதைக் குறைத்துக் கூறுவதாகும். உண்மையில் சமஸ்தானங்கள் பிரிட்டிஷ் இந்தியாவின் மீது ஆதிக் கம் கொண்டவையாக இருக்க முடியும். கூட்டாட்சியில் பதவியில் உள்ள ஒரு அரசாங்கத்தை, பிரிட்டிஷ் இந்தியாவின் பிரதிநிதிகள் இந்தியாவுக்கு மட்டும் சம்பந்தம் உள்ள ஒரு பிரச்சினையில் பெரும்பான்மை வாக்குகளால் தோற்கடித்திருந்தாலும் சமஸ் தானங்கள் அந்த அரசாங்கத்தைப் பதவியில் நீடிக்கச் செய்ய முடியும். ஏனென்றால் சட்டமன்றத்தில் கொண்டு வரப்படும் ஒரு தீர்மானம் சமஸ்தானங்கள் சம்பந்தப்பட்டதாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், நம்பிக்கையின்மைத் தீர்மானம் உள்ளிட்ட எல்லாத் தீர்மானங்களின் மீதும் வாக்கு அளிப்பதற்குச் சமஸ் தானங்களுக்கு உரிமை கொடுக்கப்பட்டுள்ளது. இது பிரிட்டிஷ் இந்தியாவின் மீது சமஸ்தானங்களுக்கு அதிகாரம் அளிப்பதாக இல்லை என்றால் வேறு எதுதான் அவ்வாறு அளிக்கும் என்று தெரியவில்லை.

பிரிட்டிஷ் இந்தியாவின் உள்விவகாரங்கள் பற்றிய விவாதங் களில் சமஸ்தானங்கள் பங்கு பெறலாம் என்றும், ஆனால் சமஸ் தானங்களின் உள் விவகாரங்கள் பற்றிய விவாதங்களில் பிரிட் டிஷ் இந்தியா பங்குபெற முடியாது என்றும் கூறுவது அநியாய மும் பொருத்தமற்றதும் ஆகும். எனவே இந்தக் குறையை நீக்கு வதற்காகப் பிரிட்டிஷ் இந்தியாவின் உள் விவகாரங்கள் சம்பந்தப் பட்டவை அல்லாத விஷயங்களில் மட்டும் சமஸ்தானங்கள் விவாதத்தில் பங்கு பெறவும் வாக்கு அளிக்கவும் முடியும் என்று கட்டுப்பாடு செய்ய உத்தேசிக்கப்பட்டது. ஆனால் சமஸ்தான அதிபதிகளும் அவர்களின் பிரதிநிதிகளும் இம்மாதிரியான வேறு பாடுகள் விதிப்பதை எப்போதும் எதிர்த்து வந்திருக்கிறார்கள். அமைச்சரவையின் விதியைத் தீர்மானிக்கக்கூடிய எந்த விஷயத்தை யும் தீர்மானிப்பதில் தங்களுக்கு உரிமை இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்கள். சமஸ்தான அதிபதிகளின் இந்தக் கருத்து அரசியல் சட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு பிரிட்டிஷ் இந்தியா வின் கருத்து தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது.

இந்த ஒப்பீடுகளிலிருந்து, பிரிட்டிஷ் இந்தியாவின் விவகாரங் களைக் கட்டுப்படுத்துவதற்குச் சமஸ்தானங்கள் சட்டப்படி அதிகா ரம் பெற்றுள்ளன என்பதையும், அதே சட்டம் சமஸ்தானங்கள்

மீது பிரிட்டிஷ் இந்தியா எந்தவித செல்வாக்கும் செலுத்த முடியா மல் தடுக்கிறது என்பதும் தெரியவருகிறது. இதுதான் உண்மை நிலை என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். வேறுவிதமாகச் சொன்னால் கூட்டாட்சித் திட்டம் இந்திய சமஸ் தானங்களின் ஆட்சியில் ஜனநாயகத்தன்மை ஏற்படுத்தக் கூடிய எந்தச் செயலையும் பிரிட்டிஷ் இந்தியா மேற்கொள்வதற்கு உதவ வில்லை என்பது மட்டுமின்றி அதற்கு இடையூறாகவும் இருக்கிறது. மாறாக இந்திய சமஸ்தானங்கள் பிரிட்டிஷ் இந்தியாவில் ஜனநாய கத்தை அழித்துவிடுவதற்கு அது உதவுகிறது.

3) கூட்டாட்சியும் பொறுப்பும்

பொறுப்பு என்ப்து பற்றிக் கூறப்படும் வாதத்தை இப்போது பரிசீலினை செய்வோம். பிரிட்டிஷ் இந்தியாவைப் பொறுத்த மட்டில் மற்ற இரண்டு வாதங்களையும் விட இது அதிக முக்கியத் துவம் உள்ளதாக இருப்பால், இதை மிக கவனமாக ஆராய வேண் டும்.

கூட்டாட்சியில் ஓரளவுக்குப் பொறுப்பு இருக்கிறது என்பதை மறுக்க முடியாது. இந்தப் பொறுப்பு எந்த அளவுக்கு உள்ளது உண்மையிலேயே பொறுப்பு என்று கூறத்தக்க அளவில் அது இருக்கிறதா என்பதுதான் கேள்வி.

இந்தக் கூட்டாட்சியில் எவ்வளவு பொறுப்பு இருக்கிறது என்று கேட்போம். இதற்கு விடையளிப்பதற்கு, பிரிவு 9, பிரிவு 11 ஆகிய இரண்டையும் சேர்த்துப் படிக்க வேண்டும். அப்போது தான் இந்தப் பொறுப்பின் அளவு பற்றிச் சரியான கருத்து கிடைக் கும். இந்த இரண்டு பிரிவுகளின்படி அரசாங்க அதிகாரம் இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகிறது. ஒரு வகையின்கீழ் நான்கு விஷயங் கள் குறிப்பிடப்படுகின்றன. (1) பாதுகாப்பு, (2) திருச்சபை சம்பந்தப் பட்ட விஷயங்கள், (3) வெளி உறவு, (4) பழங்குடி பகுதி களின் நிர்வாகம் ஆகியவை இந்த நான்கு விஷயங்கள். கூட்டாட்சி யின் நிர்வாக அதிகாரத்துக்குட்பட்ட மற்ற விஷயங்கள் இரண்டாவது வகையின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த இரண்டு வகைகளுக் கும் நிர்வாக அதிகாரம் கவர்னர் ஜெனரலிடம் அளிக்கப்பட் டுள்ளது. ஆனால் அரசாங்கத்தின் அதிகாரம் எவ்வாறு செலுத்தப் படும் என்பதில் இந்த இரண்டுக்கும் இடையே வேறுபாடு செய்யப் பட்டுள்ளது. முதல் வகையின் கீழ்வரும் நான்கு விஷயங்களில் இந்தச் சட்டத்தின்படி கவர்னர் ஜெனரலின் உசிதப்படி அரசாங்க அதிகாரம் செயல்படும். இரண்டாவது வகையில் சேர்க்கப்பட் டுள்ளவையான மற்ற விஷயங்களில் கவர்னர் ஜெனரல் அமைச் சர்களின் ஆலோசனைப்படி செயல்பட்டு அரசாங்க அதிகாரம் செயல்படுத்தப்படும். முதல் வகையைச் சேர்ந்த நான்கு விஷயங்

களில் அரசாங்கம் சட்டமன்றத்திற்குப் பதில் கூறவேண்டிய பொறுப்புள்ள நிலையில் இல்லை. ஏனென்றால் அந்த விஷயங் களில் அரசாங்க அதிகாரத்தைச் செலுத்தும் கவர்னர் ஜெனரலை சட்டமன்றம் நீக்கமுடியாது. மற்ற விஷயங்களில் அரசாங்கம் சட்ட மன்றத்துக்குப் பதில் கூறப் பொறுப்புள்ளதாக இருக்கிறது. ஏனென்றால் அரசாங்க அதிகாரத்தைச் செயல்படுத்துவதில் ஆலோசனை கூறும் அமைச்சர்களைச் சட்டமன்றம் நீக்க முடியும். எனவே கூட்டாட்சித் திட்டப்படி அரசாங்கத்தின் பொறுப்பு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே உள்ளது. நாட்டுக்குச் சமூக, அரசியல், நிதி கண்ணோட்டத்திலிருந்து மிகுந்த முக்கியத்துவம் பெற்ற பாதுகாப்பு, வெளி உறவுகள் ஆகிய விஷயங்களில் அரசாங்கம் பொறுப்பு உள்ளதாக இல்லை. இந்தத் திட்டம் மாண்டேகு-செம்ஸ்ஃபோர்டு சீர்திருத்தங்களில் அடிப்படையாக இருந்த ஒதுக்கப்பட்ட விஷயங்கள், மாற்றப்பட்ட விஷயங்கள் என்ற இரட்டை ஆட்சிமுறையுடன் நெருங்கிய ஒப்புமை உள்ள தாக இருக்கிறது. அந்த முறை, 1919-ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டத்தின்படி மாகாண அரசியலமைப்பில் இணைத் துக் கொள்ளப்பட்டது. அந்தச் சட்டத்தில் மாகாண அரசியலமைப் பில் வகைசெய்யப்பட்ட பொறுப்பு முறையை அப்படியே கூட் டாட்சி அரசியலமைப்பில் கொண்டுவருவதாகவே 1935-ஆம் ஆண்டுச் சட்டம் அமைந்திருக்கிறது.

இது உண்மையான பொறுப்பு ஆகுமா? இல்லை என்பதே பதில், இதற்கு என்ன காரணம் என்பதைக் கூறுகின்றேன். முதலா வதாக, அமைச்சர்கள் பொறுப்புடன் செயல்படுவதற்கான களம் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதுடன், அவர்கள் சுயேச்சையாகச் செயல் படவும் இடம் இல்லை. இதைப் புரிந்துகொள்ளுவதற்கு, பொறுப் பளிக்கப்பட்டிருக்கும் துறையில் அமைச்சர்களுக்கு விதிக்கப் பட்டுள்ள சில கட்டுப்பாடுகளைக் கவனிக்க வேண்டும்.

முதலாவதாக உள்ள சில கட்டுப்பாடுகள் கவர்னர் ஜெனர லின் விசேஷ பொறுப்புகள் என்று கூறப்படும் விஷயங்களி லிருந்து உருவாகின்றன.

அடுத்தபடியாக, மாற்றப்பட்ட விஷயங்களில் அரசாங்கத்தின் அதிகாரத்தைச் செலுத்தும்போது அமைச்சர்களுக்கு வேறுசில கட்டுப்பாடுகள் உள்ளன. இதைப்புரிந்து கொள்ளுவதற்கு, இந்தக் கூட்டாட்சி அரசியலமைப்பின் ஒரு விசேஷ அம்சத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். இந்த அரசியலமைப்புச் சட்டம், அரசாங்கத் தின் அதிகாரம் என்ற நோக்கிலிருந்த விஷயங்களைப் பாகுபாடு செய்திருக்கிறது. இந்தப் பாகுபாட்டின் விளைவாக அதிகார விஷயங்கள் இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. சுருக்க மாக இவற்றை மாற்றப்பட்ட விஷயங்கள் என்றும் ஒதுக்கப்பட்ட விஷயங்கள் என்றும் குறிப்பிடலாம். அரசியலமைப்புச் சட்டம்

இத்துடன் நிற்காமல், மாற்றப்பட்ட விஷயங்கள் என்ற வகையை மேலும் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கிறது: (1) அமைச்சர்களின் அரசாங்க அதிகாரத்துடன் நிர்வாகக் கட்டுப்பாடும் இணைந்திருக்கும் விஷயங்கள், (2) அமைச்சர்களின் அரசாங்க அதிகாரத்துடன் நிர்வாகக்கட்டுப்பாடு இணைந்திராத விஷயங்கள். அமைச்சர்களின் அரசாங்க அதிகாரத்தின் கீழ் இரயில்வேக்கள் வருகின்றன. ஆனால் இரயில்வேக்கள் மீது எந்த வித நிர்வாகக் கட்டுப்பாடும் செலுத்துவதற்கு அமைச்சர்களுக்கு உரிமை இல்லை. இரயில்வே ஆணையம் என்ற அமைப்புதான் இரயில்வேக்கள் மீது நிர்வாகக் கட்டுப்பாடு செலுத்தும் உரிமையைப் பெற்றுள்ளது. நிர்வாகக் கட்டுப்பாடு இணைந்த அரசாங்க அதிகாரம், நிர்வாகக் கட்டுப்பாடு இல்லாத அரசாங்க அதிகாரம் என்பது உண்மையில் வித்தியாசம் எதுவும் இல்லாமல் வேறுபடுத்திக் கூறப்படுவதல்ல. இரண்டுக்கும் இடையில் உண்மையிலேயே பெரும் வித்தியாசம் இருக்கிறது. இரயில்வேக்கள் விஷயத்தில் இந்த வித்தியாசம் சட்டத்தின் பிரிவு 181, ஷரத்து (2)-இல் தெளிவாக்கப்பட்டுள்ளது. கொள்கை வகுத்துக் கொடுக்கும் அதிகாரத்துக்கும், செயல்படும் அதிகாரத்துக்கும் இடையில் உள்ள வேறுபாடுதான் இங்கே இடம் பெற்றிருக்கிறது. இந்தக் கூட்டாட்சி அமைப்பை ஆதரித்துப் பேசுவோர்தான், கொள்கை வகுக்கும் அதிகாரமும், செயல்படும் அதிகாரமும் தனித்தனியாகப் பிரிக்கப்படும்போது உண்மையான பொறுப்பு இருக்க முடியுமா என்று கூறவேண்டும்.

கூட்டாட்சித் திட்டத்தில் அளிக்கப்படும் பொறுப்பு சம்பந்தமாக இரண்டு விஷயங்கள் தெளிவாகின்றன. முதலாவது இந்தப் பொறுப்பு ஒரு மட்டான வரம்புக்கு உட்பட்டது. இரண்டாவதாக அது உண்மையானதல்ல; ஏனென்றால் கவர்னர் ஜெனரலின் விசேஷப் பொறுப்புக்களாலும், மாற்றப்பட்ட விஷயங்களில் அடங்கிய இரயில்வே போன்ற சில விஷயங்களில் அமைச்சர்களுக்குச் செயல்படும் அதிகாரம் விலக்கப்பட்டிருப்பதாலும் அது பல்வேறு கட்டுப்பாடுகளால் பிணைக்கப்பட்டிருக்கிறது.

கூட்டாட்சித் திட்டத்தில் கூறப்படும் பொறுப்புமுறை, 1919-ஆம் ஆண்டு சட்டத்தின்படி கொண்டுவரப்பட்ட இரட்டை ஆட்சி முறை போல உள்ளது என்று நான் கூறியிருக்கிறேன். ஆயினும் இந்த இரண்டையும் ஒப்பிட்டுப்பார்த்தால் கூட்டாட்சித் திட்டத்தில் இரட்டை ஆட்சிமுறையை விடக் குறைவான பொறுப்பே அளிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இரட்டை ஆட்சியில் இல்லாத இரண்டு அம்சங்கள் கூட்டாட்சித் திட்டத்தில் புகுத்தப்பட்டுள்ளன; இரட்டை ஆட்சிமுறையில் இருந்த ஒரு அம்சம் கூட்டாட்சித் திட்டத்தில் இல்லை. இவ்வாறு புதிதாகச் சேர்க்கப்பட்ட இரண்டு அம்சங்களும், முன்பு இருந்து இப்போது இல்லாமல் போயிருக்கும் ஒரு அம்சமும் காரணமாக கூட்டாட்சித் திட்டத்தின் இரட்டை ஆட்சி, மாகாணங்களின் இரட்டை ஆட்சியைவிட மோசமாகியிருக்கிறது.

புதிதாகச் சேர்க்கப்படடிருக்கும் இரண்டு அம்சங்களில் ஒன்று, மாற்றப்பட்ட விஷயங்கள் சம்பந்தமாக கவர்னர் ஜெனரலின் விசேஷ பொறுப்பு என்ற தத்துவம்; இரண்டாவது, மாற்றப்பட்ட விஷயங்கள் சம்பந்தமாக அரசாங்க அதிகாரம் நிர்வாகக் கட்டுப் பாட்டு அதிகாரத்திலிருந்து பிரிக்கப்பட்டிருப்பது. இந்த இரண்டு அம்சங்களும் மாகாணங்களின் இரட்டை ஆட்சிமுறையில் இருக்க வில்லை.

கவர்னர் ஜெனரலின் விசேஷப் பொறுப்பு என்று கூறப் படுவது உண்மையில் ‘வீட்டோ’ அதிகாரத்தின் (Veto Power) மறு பெயரே என்றும், அமைச்சர்கள் செய்யும் முடிவுகளைக் கவர்னர் ஜெனரல் ரத்து செய்ய இடம் தரும் இந்த அதிகாரத்தைப்போல் இங்கிலாந்தின் அரசியலமைப்பிலும்கூட, மன்னருக்கு இந்த அதிகாரம் இருக்கிறது என்றும் கூறலாம். மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் கவர்னர் ஜெனரலின் விசேஷப் பொறுப்புகள் பற்றிய இந்தக் கருத்து சரியானதாகத் தோன்றுகிறது. ஆனால் உண்மை யில் மன்னர் தமது ‘வீட்டோ’ அதிகாரத்தைப் பயன்படுத்தக்கூடிய நிலைமைகள், சூழ்நிலைகள் பற்றிய தவறான கருத்து இதற்கு அடிப்படையாக இருப்பதைக் காணலாம்.

எனக்குத் தெரிந்த வரையில், பொறுப்பான அரசாங்க அமைப்பு முறையில், மன்னருக்கும் அவரது அமைச்சர்களுக்கும் இடையி லான உறவை, மெக்காலே (Macaulay)யை விடச் சிறப்பாக வேறு யாரும் விளக்கவில்லை. அவருடைய மொழியில் சொன் னால்—

> ‘‘இங்கிலாந்தில், மன்னரின் செயலுக்குப் பொறுப்பு ஏற்கும் அமைச்சர் ஒருவர் இருந்தாலன்றி மன்னர் தமது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்த முடியாது. அவ்வாறு பொறுப் பேற்கும் அமைச்சர் யாரும் இல்லை என்றால், மன்னர் விட்டுக்கொடுக்க வேண்டும், அல்லது போராட வேண்டும், அல்லது பதவி துறக்க வேண்டும்’’.

கவர்னர் ஜெனரலின் நிலை இதைப் போன்றதல்ல. அவர் விட்டுக் கொடுக்க வேண்டியதில்லை. தமது செயலுக்குப் பொறுப்பு ஏற்க அமைச்சர் ஒருவர் இல்லையென்றாலும் அவர் செயல்பட முடியும். மன்னரின் ‘வீட்டோ’ அதிகாரத்துக்கும் கவர்னர் ஜெனரலின் ‘வீட்டோ’ அதிகாரத்துக்கும் இடையில் உள்ள வித்தியாசம் இது தான். இதில் முக்கியமாக கவனிக்க வேண்டியது, இந்த ‘வீட்டோ’ அதிகாரம் மாற்றப்பட்ட விஷயங்களில் பயன்படுத்தக் கூடியதாக இருப்பதாகும். மாகாணங்களின் இரட்டை ஆட்சி முறையில் மாற்றப்பட்ட விஷயங்களில் கவர்னருக்கு இந்த ‘வீட்டோ’ அதிகா ரம் கிடையாது. வேறுவிதமாகச் சொன்னால் கவர்னருக்கு விசேஷ பொறுப்புகள் ஏதும் இல்லை. மாற்றப்பட்ட விஷயங்களில்கூட அமைச்சர்களின் முடிவுகளைக் கவர்னர் ரத்து செய்ய முடியும்

என்றால் அமைச்சர்களின் பொறுப்பு என்பதில் என்ன பொருள் இருக்கிறது என்பதே கேள்வி. பொருள் ஏதும் இருப்பதாக எனக் குத் தோன்றவில்லை.

புதிதாகப் புகுத்தப்பட்டிருக்கும் மற்றொரு அம்சம் அரசாங்க அதிகாரமும் நிர்வாகக் கட்டுப்பாடும் தனித்தனியாகப் பிரிக்கப் பட்டிருப்பதாகும். மாகாணங்களின் இரட்டை ஆட்சி அரசிய லமைப்பு முறையில் இவ்வாறு பிரிக்கப்படவில்லை. அந்த முறை யின் கீழ் ஒரு விஷயம் மாற்றப்பட்டது என்றால் அது சம்பந்த மான அரசாங்க அதிகாரம், நிர்வாகக் கட்டுப்பாடு ஆகிய இரண் டுமே அமைச்சர்களுக்கு மாற்றப்பட்டன. ஒரு அமைச்சர் கட்டளை கள் மட்டும் வெளியிட முடியும், ஆனால் அவற்றின்படி எடுக்கப் படும் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முடியாது என்றால் அமைச்சரின் பொறுப்பு என்று கூறுவதற்கு அதில் என்ன இருக் கிறது என்று நீங்கள் உங்களைக் கேட்டுக் கொள்ளலாம். ஒன்றும் இல்லை என்றே எனக்குத் தோன்றுகிறது.

மாகாணங்களின் இரட்டை ஆட்சி அரசியலமைப்பில் இடம் பெற்றிருந்து, கூட்டாட்சி அரசியலமைப்பில் இடம்பெறாமலுள்ள அம்சம் ஒதுக்கப்பட்ட விஷயங்களுக்கு நிதி அளிப்பது பற்றியது. இது சம்பந்தமாக 1919-ஆம் ஆண்டு சட்டத்தின் 72-டி பிரிவை யும் இப்போதைய சட்டத்தின் 33-ஆவது, 34-ஆவது பிரிவுகளை யும் ஒப்பிட்டுப் பார்க்கலாம். 72-டி பிரிவின் உட்பிரிவு (2) பின் வருமாறு கூறுகிறது:

''மாகாணத்தின் ஆண்டுச் செலவு, வருவாய் பற்றிய மதிப் பீடுகள் ஒவ்வொரு ஆண்டும் அறிக்கை வடிவில் சட்ட சபையின் முன் வைக்கப்படும். மாகாண வருவாய்களையும் மற்ற நிதிகளை யும் செலவுகளுக்கு ஒதுக்கீடு செய்வதற்கு அரசாங்கத்தின் யோசனை கள் ஒவ்வொரு ஆண்டும் செலவுக் கோரிக்கைகள் வடிவில் சட்ட சபையின் வாக்கெடுப்புக்கு வைக்கப்படும். சட்டசபை ஒரு கோரிக் கைக்கு ஒப்புதல் அளிக்கலாம் அல்லது ஒப்புதல் அளிக்க மறுக்க லாம் அல்லது கோரிக்கையில் அடங்கிய செலவினம் எதை யேனும் குறைத்துக் கோரிக்கையின் தொகையைக் குறைக்கலாம்.'' இத்துடன் இப்போதைய 1935-ஆம் ஆண்டு சட்டத்தின் 34-ஆவது பிரிவை ஒப்பிட்டுப் பாருங்கள். இந்தப் பிரிவின் உட்பிரிவு (1) பின்வருமாறு கூறுகிறது:

> ''கூட்டாட்சியின் வருவாய்களிலிருந்து செலவிட வேண்டிய தில் இந்தச் செலவு பற்றிய மதிப்பீடுகள் சட்டமன்றத்தின் வாக்கெடுப்புக்கு சமர்ப்பிக்கப்படமாட்டா; ஆனால் இந்த உட்பிரிவில் கூறப்பட்டுள்ள எதுவும், 33-ஆம் பிரிவின் உட்பிரிவு (3) -இல் பாரா (ஏ) அல்லது பாரா (எஃப்)-இல் குறிப்பிடப்பட்ட செலவுகள் சம்பந்தமான மதிப்பீடுகள் தவிர, இந்த மதிப்பீடுகளில் எதையும் பற்றிச் சட்டமன்றத்தின் இருசபைகளில் எந்த ஒன்றிலும் விவாதிப்பதைத் தடைசெய் வதாகப் பொருள் கொள்ளக் கூடாது.''

பிரிவு 33-இன்படி கூட்டாட்சியின் வருவாயிலிருந்து செலவிடுவதற்குரிய இனங்களில் ஒதுக்கப்பட்ட விஷயங்கள் சம்பந்தப்பட்ட செலவுகளும் அடங்கியுள்ளன. இரண்டு சட்டங்களின் ஷரத்துக்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, பழைய சட்டத்தின் 72-டி பிரிவின்படி, நிதி அனுமதிப்பது சம்பந்தமாக சட்டசபையின் அதிகாரங்களில் மாற்றப்பட்ட விஷயங்களுக்கும் ஒதுக்கப்பட்ட விஷயங்களுக்குமிடையே வேறுபாடுகள் எதுவும் காட்டப்படவில்லை என்பது தெளிவாகிறது. ஒதுக்கப்பட்ட விஷயங்கள் சம்பந்தமான செலவுகள் பற்றி சட்டசபையில் விவாதிக்க அனுமதிக்கப்பட்டது மட்டுமின்றி வாக்கெடுப்புக்கும் உட்பட்டிருந்தன. புதிய சட்டத்தின் 34-ஆவது பிரிவின்படி கூட்டாட்சிச் சட்டமன்றம் ஒதுக்கப்பட்ட விஷயங்கள் சம்பந்தமான செலவுகள் பற்றி விவாதிக்க முடியுமே தவிர அவற்றின் மீது வாக்கு அளிக்க முடியாது. இது ஒரு முக்கியமான வித்தியாசமாகும். பழைய அரசியலமைப்பின்படி ஒதுக்கப்பட்ட விஷயங்கள்கூட சட்டமன்றத்தின் நிதி அதிகாரங்களுக்கு உட்படுத்தப்பட்டன. புதிய அரசியலமைப்பில் அவை கூட்டாட்சிச் சட்டமன்றத்தின் நிதி அதிகாரங்களுக்கு உட்படவில்லை. மாகாண அரசியலமைப்பில், ஒதுக்கப்பட்ட விஷயங்கள் சம்பந்தமாக சட்டசபையின் வாக்கு முடிவு இறுதியானதல்ல என்பது உண்மைதான். பிரிவு 72-டி-யின் கீழ் உள்ள ஒரு நிபந்தனை ஷரத்தின்படி ''இத்தகைய நிதி செலவுக் கோரிக்கை எதுவும் ஒதுக்கப்பட்ட விஷயங்கள் சம்பந்தப்பட்டதாயிருந்தால், அந்த விஷயத்தில் தமது பொறுப்பை நிறைவேற்றுவதற்கு அந்தச் செலவு அவசியமானது என்று கவர்னர் சான்றுரை அளித்திருந்தால் (சட்ட மன்றம்) அந்தச் செலவுகளுக்கு அனுமதி மறுத்திருந்தாலும், தொகையைக் குறைத்திருந்தாலும் கூட, அனுமதி அளிக்கப்பட்டது போலவே 'கருதி'' செயல்பட கவர்னருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. 1935-ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டத்தில் ஒதுக்கப்பட்ட விஷயங்களுக்கான தொகை 42 கோடி ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பதும் உண்மையே. ஆயினும் பழைய அரசியலமைப்பில், ஒதுக்கப்பட்ட விஷயங்கள் சட்டமன்றத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டிருந்தன, ஆனால் புதிய அரசியலமைப்பில் அத்தகைய கட்டுப்பாட்டுக்கு உட்படவில்லை என்ற வித்தியாசம் இருக்கிறது. இது ஒன்றும் சிறிய வித்தியாசம் அல்ல. அரசாங்கம் பொறுப்புள்ளதாக இருக்குமாறு நிர்ப்பந்திப்பதற்கு மிகவும் சக்திவாய்ந்த வழியாயிருப்பது நிதி வழங்கும் அதிகாரமே. கவர்னர் சான்றுரை அளிக்க அதிகாரம் அளிக்கப்பட்டிருப்பது, ஒதுக்கப்பட்ட விஷயங்களில் சட்டமன்றத்துக்கு உள்ள அதிகாரத்தை அகற்றியிருக்கலாம். ஆயினும் அது சட்டமன்றத்தின் செல்வாக்கை முற்றிலுமாக அழித்துவிடவில்லை. இப்போதைய அரசியலமைப்பில் ஒதுக்கப்பட்ட விஷயங்களில் சட்டமன்றத்துக்குக் கட்டுப்பாட்டு அதிகாரம் எதுவும் இல்லை என்பது மட்டுமின்றி, அவற்றில் எவ்விதமான

செல்வாக்கும் செலுத்துவதற்கும் இடம் இல்லை. எனவே பழைய மாகாண அரசியலமைப்பின் இரட்டை ஆட்சியில், இந்தக் கூட்டாட்சியின் இரட்டை ஆட்சியில் உள்ளதைவிட அதிகப் பொறுப்பு அளிக்கப்பட்டிருந்தது என்பதில் சந்தேகமில்லை.

நிர்வாகம், சட்டமன்றத்துக்குப் பதில்கூறும் பொறுப்புப் பெற்றதல்ல என்பது, கூட்டாட்சித்திட்டத்தில் நிர்வாகம்தான் மேலதிகாரம் பெற்றது என்று வேறுவிதமாகக் கூறுவதேயாகும். நிர்வாகம் இவ்வாறு மேலதிகாரம் பெற்றிருப்பதைப் பலவழிகளில் நிலைநிறுத்தலாம். சட்டமன்றத்தின் அதிகாரங்களைக் குறைப்பதன் மூலம் அதை நிலைநிறுத்தலாம் அல்லது சட்டமன்றம் எப்போதும் நிர்வாகத்தின் ஏவலுக்குக் காத்திருக்கும் வகையில் அதன் உறுப்பினர் அமைப்பு இருக்குமாறு திட்டமிட்டு அமைப்பதன் மூலம் அதை நிலைநிறுத்தலாம்.

கூட்டாட்சித் திட்டத்தில் இந்த இரண்டு வழிகளும் பின்பற்றப்படுகின்றன. முதலாவதாக, அது கூட்டாட்சிச் சட்டமன்றத்தின் அதிகாரங்களை மட்டுப்படுத்துகிறது. கூட்டாட்சித் திட்டம் சட்டமன்றத்தின் நிதி அதிகாரங்களை எவ்வளவு தூரம் கட்டுப்படுத்துகிறது என்பதை நான் ஏற்கெனவே விவரித்திருக்கிறேன். கூட்டாட்சி வருவாயிலிருந்து கட்டாயமாகக் கொடுக்க வேண்டியது என்று அறிவிக்கப்படும் எந்தச் செலவுக்கும் நிதிவழங்க மறுப்பதற்குக் கூட்டாட்சிச் சட்டமன்றத்துக்கு அதிகாரம் கிடையாது.

கூட்டாட்சித் திட்டம் கூட்டாட்சிச் சட்டமன்றத்தின் அதிகாரங்களைக் குறைக்கவும் செய்கிறது. இவ்வாறு குறைக்கும் கட்டுப்பாடுகள் 108-ஆவது பிரிவில் குறிப்படப்பட்டுள்ளன. அதில் பின்வருமாறு கூறுப்பட்டுள்ளது:

> ''108(1) கவர்னர் ஜெனரல் தமது உசிதப்படி முன்னதாகவே அனுமதி கொடுத்திருந்தாலன்றி, கூட்டாட்சிச் சட்டமன்றத்தின் இரண்டு சபைகளில் எதிலும் பின்வரும் தன்மையுள்ள எந்த மசோதாவோ, திருத்தமோ அறிமுகம் செய்யவோ பிரேரணை செய்யவோ படாது—
>
> **(A)** பிரிட்டிஷ் பார்லிமெண்டில் இயற்றப்பட்டு பிரிட்டிஷ் இந்தியாவில் செல்லுபடியாகுமாறு உள்ள எந்தச் சட்டத்தையும் ரத்து செய்வதாக, திருத்துவதாக அல்லது அதற்குப் பொருந்தாததாக இருத்தல்; அல்லது
>
> **(B)** கவர்னர் ஜெனரல் அல்லது கவர்னரின் சட்டம் அல்லது கவர்னர் ஜெனரல் அல்லது கவர்னர் பிரகடனம் செய்த அவசரச் சட்டம் எதையும் ரத்து செய்வதாகவோ, திருத்துவதாகவோ அல்லது அவற்றுக்குப் பொருந்தாததாகவோ இருத்தல்; அல்லது

(C) கவர்னர் ஜெனரல் இந்தச் சட்டத்தின்படி அல்லது இதன்கீழ், தமது உசிதப்ப்டி செயல்பட வேண்டிய எந்த வொரு விஷயம் பற்றியதாக இருத்தல்; அல்லது

(D) எந்தவொரு போலீஸ்படை சம்பந்தமான எந்தச் சட்டத் தையும் ரத்து செய்வதாக, திருத்துவதாக அல்லது பாதிப் பதாக இருத்தல்; அல்லது

(E) ஐரோப்பிய பிரிட்டிஷ் பிரஜைகள் சம்பந்தப்பட்டுள்ள குற்ற வழக்குகளின் நடைமுறைகளைப் பாதிப்பதாக இருத்தல்; அல்லது

(F) பிரிட்டிஷ் இந்தியாவில் வசிக்காதவர்கள் மீது பிரிட்டிஷ் இந்தியாவில் வசிப்பவர்கள் மீது விதிக்கப்படுவதைவிடக் கூடுதலாக வரிவிதித்தல்; அல்லது முற்றிலுமாக பிரிட் டிஷ் இந்தியாவில் கட்டுப்படுத்தப்படுபவை அல்லாத கம்பெனிகள் மீது அவ்வாறு கட்டுப்படுத்தப்படும் கம்பெனிகளைவிட அதிகமாக வரி விதித்தல்; அல்லது

(G) யுனைட்டட் கிங்கடமில் வரிவிதிக்கப்படும் அல்லது வரி விதிப்புக்குரிய வருமானத்தின் மீது கூட்டாட்சி விதிக்கும் எந்த வரிகளிலிருந்தும் நிவாரணம் அளிப்பதைப் பாதித் தல்.

(H) கவர்னர் ஜெனரல் தமது உசிதப்படி முன்னதாகவே அனுமதி அளித்தாலன்றி, மாகாண சட்டமன்றத்தின் சபை எதிலும் பின்வரும் தன்மையுள்ள எந்த மசோ தாவோ திருத்தமோ அறிமுகம் செய்யவோ பிரேரணை செய்யவோ்படாது—

A) பிரிட்டிஷ் பார்லிமெண்டில் இயற்றப்பட்டு பிரிட் டிஷ் இந்தியாவில் செல்லுபடியாகுமாறு உள்ள எந்தச் சட்டத்தையும் ரத்து செய்தல், திருத்தம் செய் தல் அல்லது அதற்குப் பொருந்தாமலிருத்தல்; அல்லது

B) கவர்னர் ஜெனரலின் சட்டம் அல்லது அவர் தமது உசிதப்படி பிரகடனம் செய்த அவசரச் சட்டத்தை ரத்து செய்தல், திருத்தம் செய்தல், அல்லது அவற் றுக்குப் பொருந்தாமலிருத்தல்; அல்லது

C) கவர்னர்ஜெனரல் இந்தச் சட்டத்தின்படி அல்லது இதன்கீழ் செயல்பட வேண்டிய எந்த விஷயமும் சம்பந்தப்பட்டதாக இருத்தல்

D) ஐரோப்பிய பிரிட்டிஷ் பிரஜைகள் சம்பந்தப்பட் டுள்ள குற்ற வழக்குகளின் நடைமுறைகளைப் பாதிப் பதாக இருத்தல்; மாகாணத்தின் கவர்னர் தமது உசிதப்படி முன்னதாகவே அனுமதி கொடுத்தாலன்றி

பின்வரும் தன்மையுள்ள எந்த ஒரு மசோதா அல்லது திருத்தம் அறிமுகப்படுத்தவோ பிரேரணை செய்யவோ படாது.

அ) கவர்னரின் ஒரு சட்டம் அல்லது அவர் பிரகடனம் செய்த அவசரச் சட்டத்தை ரத்து செய்தல், திருத்துதல் அல்லது பாதித்தல்;

ஆ) எந்த ஒரு போலீஸ் படை சம்பந்தப்பட்ட எந்தச் சட்டத்தையும் ரத்து செய்தல், திருத்துதல் அல்லது பாதித்தல்.

3) இந்தப் பிரிவில் கூறப்பட்டுள்ள எதுவும் எந்தவொரு மசோதாவையும் அறிமுகம் செய்வதற்கு அல்லது திருத்தத்தைப் பிரேரணை செய்வதற்குக் கவர்னர் ஜெனரல் அல்லது கவர்னரின் முன் அனுமதி பெற வேண்டும் என்று விதித்து அந்தச் சட்டத்தில் உள்ள வேறு எந்த ஷரத்தையும் பாதிக்காது''.

நிர்வாகத்தின் மேலதிகாரத்தை நிலை நிறுத்துவதற்காகக் கூட்டாட்சிச் சட்டமன்றத்தின் அதிகாரத்தைக் குறைப்பதோடு கூட்டாட்சித் திட்டம் நின்றுவிடவில்லை. கூட்டாட்சிச் சட்ட மன்றம் எப்போதும் நிர்வாகத்தின் ஏவலுக்கு இணங்கும் வகையில் அதன் உறுப்பினர் அமைப்பு இருக்கிறது. கூட்டாட்சிச் சட்ட மன்றத்தின் உறுப்பினர் அமைப்பு உண்மையில் எப்படி இருக்கிறது என்பதை மனத்தில் கொள்ளவேண்டும். சட்டப்பேரவையில் 375 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இவர்களில் 125 பேர் இந்திய சமஸ்தானங்களையும் 250 பேர் பிரிட்டிஷ் இந்தியாவையும் சேர்ந்த உறுப்பினர்கள். கௌன்சில் ஆஃப் ஸ்டேட் என்ற மேல்சபையின் உறுப்பினர்கள் எண்ணிக்கை 260. இதில் 104 உறுப்பினர்கள் சமஸ்தானங்களுக்கும் 156 பேர் பிரிட்டிஷ் இந்தியாவுக்கும் ஒதுக்கப்பட்டிருக்கிறார்கள். சமஸ்தானத்துக்கு ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு உறுப்பினர்களைச் சமஸ்தான அதிபதிகள் நியமனம் செய்வார்கள். பிரிட்டிஷ் இந்தியாவுக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் தேர்தல் மூலம் நிரப்பப்படும். எனவே கூட்டாட்சிச் சட்டமன்றம் ஒரு பகுதி தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும் ஒரு பகுதி நியமனம் செய்யப்பட்டதாகவும், ஒரே மாதிரியான தன்மையற்றதாக இருக்கிறது.

இங்கே முதல் கேள்வியாக எழுவது, கூட்டாட்சிச் சட்டமன்றத்தில் சமஸ்தான அதிபதிகளால் நியமிக்கப்பட்டவர்கள் எவ்வாறு நடந்து கொள்வார்கள் என்பதே, அவர்கள் கூட்டாட்சியின் நிர்வாகத்திடம் சுயேச்சையாக நடந்து கொள்வார்களா அல்லது அதற்குப் பணிந்து செல்வோராக நடந்து கொள்வார்களா? இதை முன்கூட்டியே சொல்வது கடினம். ஆயினும் இந்த நியமனங்களில் செயல்படக்கூடிய சில செல்வாக்குகளைக் குறிப்பிடலாம்.

பிரிட்டிஷ் அரசாங்கம் தனக்கு இந்திய சமஸ்தானங்கள் மீது உயர் அதிகார உரிமை இருப்பதாகக் கூறிக்கொள்வது மறுக்கப்படாத உண்மை. இந்த ''உயர் அதிகாரம்'' என்பது பல அம்சங்களை உள்ளடக்கிய சொல். பிரிட்டிஷ் மன்னர், இந்திய அரசாங்கத்தின் அரசியல் இலாகா மூலம் சமஸ்தானங்கள் மீது செலுத்தக்கூடிய உரிமைகளை அது குறிப்பிடுகிறது. இந்த உரிமைகளில் ஒன்று, அரசியல் இலாகா இந்திய சமஸ்தான அதிபதிகள் சில நியமனங் களைச் செய்வதில் ஆலோசனை கூறத் தனக்கு இருப்பதாக கூறும் உரிமை. ''ஆலோசனை'' என்று கூறப்படுவது கட்டளை என்ப தற்கு ராஜதந்திர ரீதியில் கூறப்படும் சொல் என்பது நன்கு தெரிந் ததே. சட்டமன்றத்தில் இந்த இடங்களை நிரப்புவது பற்றி ஆலோ சனை கூறவும் அரசியல் இலாகா உரிமை கொண்டாடும் என்ப தில் சந்தேகமில்லை. இவ்வாறு நடந்தால், விளைவு என்னவா யிருக்கும்? சமஸ்தான அதிபதிகளின் பிரதிநிதிகள் மொத்தமாக அரசு சார்பான ஒரு தொகுதியாக இருப்பார்கள். அவர்களின் விசுவாசம் மக்களிடமோ, சமஸ்தான அதிபதிகளிடமோகூட இல்லாமல் இந்திய அரசாங்கத்தின் அரசியல் இலாகாவிடமே இருக்கும். மேலும் இரண்டு விஷயங்களைக் கவனிக்க வேண்டும். முதலாவதாக, பிரிட்டிஷ் மன்னரின் உயர் அதிகாரம் கூட்டாட்சி அரசாங்கத்துக்கு வெளியே உள்ள விஷயம். எனவே சமஸ்தான அதிபதிகளின் பிரதிநிதிகளின் நியமனம் பற்றி ஆலோசனை கூறக் கூட்டாட்சியின் அமைச்சர்களுக்கு உரிமை எதுவும் இராது; இந்த நியமனங்களை விமர்சிப்பதற்குச் சட்டமன்றத்துக்கு உரிமை இராது. அவர்கள் கவர்னர்ஜெனரலின் கட்டுப்பாட்டில் இல்லா மல் அவர் ராஜப்பிரதிநிதியாக வைஸ்ராய் என்ற முறையில் செயல்படும் கட்டுப்பாட்டுக்குள் இருப்பார்கள். இரண்டாவதாக, சமஸ்தான அதிபதிகளின் இந்தப் பிரதிநிதிகள் தொகுதி அளவில் சிறியதல்ல, கீழ்ச்சபையில் 187 இடங்களைப் பெற்று ஒரு கட்சி பெரும்பான்மை பலம்பெற்றுவிடும். அதேபோல மேல்சபையில் ஒரு கட்சிக்கு 130 இடங்கள் இருந்தால் அது பெரும்பான்மை பலம் பெற்று விடும். கீழ்ச்சபையில் சமஸ்தான அதிபதிகளுக்கு 127 இடங்கள் இருக்கின்றன. இவர்கள் பெரும்பான்மை பலம் பெறு வதற்கு இன்னும் 62பேர் கொண்ட ஒரு குழுவின் ஆதரவுதான் தேவை. மேல்சபையில் இவர்களின் எண்ணிக்கை 104. பெரும் பான்மை பலம்பெறுவதற்கு இன்னும் 26 தேவை. இவ்வளவு பெரிய பலம் நிர்வாகம் பயன்படுத்திக் கொள்வதற்குத் தயாராக இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு சட்டமன்றம் எப்படிச் சுதந்திர மானதாக இருக்கமுடியும்? இந்த பலத்தை வைத்து ஒதுக்கப்பட்ட பாதிப் பகுதி மாற்றப்பட்ட மறுபாதியைக் கட்டுப்படுத்த முடியும்.

பிரிட்டிஷ் இந்தியாவின் பிரதிநிதிகள் எவ்வாறு நடந்து கொள் வார்கள்? நான் நிச்சயமாக எதுவும் கூறமுடியாது. ஆனால் சில சமஸ்தானங்களில் முறையான பட்ஜெட் என்பதோ சுயேச்சை யான கணக்குத் தணிக்கை என்பதோ கிடையாது என்பதை

நினைவில் வைக்க வேண்டும். சமஸ்தான அதிபதிகள் பிரிட்டிஷ் இந்தியப் பிரதிநிதிகளின் ஆதரவை விலைக்கு வாங்குவது கடின மாயிராது. அரசியல் என்பது அழுக்கு நிறைந்த விளையாட்டு. பிரிட்டிஷ் இந்தியாவின் அரசியல்வாதிகள் அனைவரும் ஊழலுக்கு அப்பாற்பட்டவர்கள் என்று கூற முடியாது. வெளியில் தெரிந்து விடாமல் விலைக்கு வாங்க வழி இருக்கும் போது அந்த அபாயம் உண்மையிலேயே இருக்கிறது.

கூட்டாட்சித்திட்டத்தை எந்தவிதமாக வேண்டுமானாலும் பாருங்கள்; பொறுப்பு சம்பந்தமாக அதில் உள்ள ஷரத்துக்களை எப்படி வேண்டுமானாலும் ஆராய்ந்து பாருங்கள். உண்மையான பொறுப்பு என்பது அதில் இடம்பெறவில்லை என்பதை நீங்கள் காண்பீர்கள்.

7

கூட்டாட்சித் திட்டத்தின் கொடிய தீமை

அகில இந்தியக் கூட்டாட்சி அமைப்புக்கான இந்தத் திட்டம் குறைகள் நிறைந்தது என்பதை ஏற்காதவர்கள் யாரும் இல்லை. ஆனால் இந்தத் திட்டம் சம்பந்தமாக நாம் என்ன செய்ய வேண்டும் என்பதில்தான் கருத்து வேறுபாடு வருகிறது. இந்தக் கேள்விக்கு இந்தியர்கள் அவ்வப்போது தெரிவித்துள்ள பதில்களிலிருந்து கூட்டாட்சி பற்றி இரண்டு முற்றிலும் மாறுபட்ட கருத்துக்கள் இருப்பது தெரிகிறது. இந்தத் திட்டம் மோசமானதாயிருந்தாலும் நாம் அதை ஏற்றுச் செயல்படுத்தி, அதிலிருந்து கிடைக்கும் அள வுக்கு நன்மை பெற வேண்டும் என்று ஒருசாரார் நினைக்கிறார் கள். மற்றொரு சாரார் இதை நாம் ஏற்பதற்கு முன் கூட்டாட்சி அரசியலமைப்பில் சில மாறுதல்கள் செய்தாக வேண்டும் என்று கருதுகிறார்கள். காங்கிரஸ், லிபரல் ஃபெடரேஷன் ஆகிய இரண் டுமே இந்தப் பிரச்சினையில் ஒரே கருத்தைக் கொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது. கூட்டாட்சியை ஏற்பதற்கு முன் அதில் சில மாறுதல்கள் செய்வது அவசியம் என்று அந்த இரண்டுமே அறிவித் துள்ளன.

இந்தக் கூட்டாட்சி மிகப் பெரும்பாலான இந்தியர்களுக்கு ஏற்புடையதாக இல்லை என்பது பற்றிக் கேள்வி எதுவும் இல்லை. அரசியலமைப்பில் எந்த வகைகளில் மாற்றம் செய்ய வேண்டும் என்பதே இப்போது உள்ள கேள்வி. என்ன மாறுதல்கள் வேண் டும் என்று நாம் கோர வேண்டும்? இந்தப் பிரச்சினை பற்றிக் காங்கிரஸும் லிபரல் ஃபெடரேஷனும் இயற்றியுள்ள தீர்மானங் களை ஆரம்பமாக வைத்து இதைப் பரிசீலிக்கலாம். காங்கிரஸ், ஹரிபுராவில் 1938-இல் நடந்த தனது மாநாட்டில் பின்வருமாறு தீர்மானம் இயற்றியது:

''காங்கிரஸ் புதிய அரசியலமைப்பை நிராகரித்து விட்டது. இந்திய மக்கள் ஏற்கக்கூடிய அரசியலமைப்பானது சுதந்திரத்தை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என்றும், அதை இந்திய மக்கள்தான், எந்த ஒரு அந்நிய அதிகாரத்தின் குறுக்கீடும் இல்லாமல், ஒரு அரசியல் நிர்ணய சபையின் மூலம் வரைய முடியும் என்றும் அது அறிவித்திருக்கிறது. இந்த நிராகரிப்பைக் கைவிடாமல், அதேசமயம், நாட்டின் சுதந்திரப் போராட்டத்தை வலுப்படுத்தும் நோக்கத்துடன் மாகாணங்களில் காங்கிரஸ் அமைச்சரவைகள் அமைப்பதை அனுமதித்திருக்கிறது. ஆனால், உத்தேசிக்கப்பட்டுள்ள கூட்டாட்சி சம்பந்தமாக, தற்காலிகமாகவோ, ஒரு குறிப்பிட்ட காலத்துக்கோ கூட இம்மாதிரி நோக்கத்துக்கு இடமில்லை. இந்தக் கூட்டாட்சியை இந்தியாவின் மீது சுமத்துவது இந்தியாவுக்குப் பெரும் தீங்கு செய்யும்; ஏகாதிபத்திய ஆதிக்கத்தின்கீழ் அதைப் பிணைத்து வைத்திருக்கும் கட்டுப்பாடுகள் இறுக்கமடையும். கூட்டாட்சித் திட்டம் அரசாங்கத்தின் மிக முக்கியமான செயல் துறைகளைப் பொறுப்பாட்சியிலிருந்து விலக்கி வைக்கிறது.

கூட்டாட்சி என்ற கருத்தைக் காங்கிரஸ் எதிர்க்கவில்லை. ஆனால் உண்மையான கூட்டாட்சியில் பொறுப்பு இருப்பதோடு கூட, அதிலுள்ள உறுப்புகள் சுயேச்சையானவையாகவும், அநேகமாக ஒரே மாதிரியான சுதந்திரத்தையும் சிவில் உரிமைகளையும் பெற்றவையாகவும் இருக்க வேண்டும். ஜனநாயக நடைமுறையான தேர்தல் மூலம் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும். கூட்டாட்சியில் பங்குபெறும் இந்திய சமஸ்தானங்கள், மாகாணங்களில் உள்ளதற்குக் கிட்டத்தட்ட சமமான முறையில் பிரதிநிதித்துவ அமைப்புகளையும் பொறுப்புள்ள அரசாங்கத்தையும் சிவில் உரிமைகளையும் அமைப்பதுடன் கூட்டாட்சிச் சட்டசபைகளுக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதிலும் மாகாணங்களில் உள்ள முறையைப் பின்பற்ற வேண்டும். இல்லையென்றால், இப்போது உத்தேசிக்கப்பட்டுள்ள வடிவில் அமையும் கூட்டாட்சி இந்தியாவின் ஒற்றுமையை வளர்ப்பதற்குப் பதிலாக, பிரிவினைப் போக்குகளுக்கு ஊக்கமளித்து, சமஸ்தானங்கள் உள்ளேயும் வெளியேயும் போராட்டங்களில் ஈடுபடும் நிலையை ஏற்படுத்தும்.

எனவே காங்கிரஸ் இந்தக் கூட்டாட்சித் திட்டத்துக்குத் தனது கண்டனத்தை மீண்டும் வலியுறுத்துகிறது. அது அமலுக்கு வராமல் தடுக்கும்படி மாகாண, உள்ளூர் காங்கிரஸ் கமிட்டிகளையும் மக்களையும் மாகாண அரசாங்கங்களையும் அமைச்சரவைகளையும் கேட்டுக் கொள்கிறது. மக்களின் கருத்து இவ்வாறு அறிவிக்கப்பட்ட பின்பும் கூட்டாட்சியைத் திணிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டால், அதை எல்லா வழிகளிலும் எதிர்க்க வேண்டும். மாகாண அரசாங்கங்களும் அமைச்சரவைகளும் இதில் ஒத்துழைக்க மறுக்க வேண்டும். இப்படிப்பட்ட நிலைமை ஏற்படுமானால், என்ன

நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதற்கு அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கு அதிகாரமும் கட்டளையும் அளிக்கப் படுகின்றன.''

தேசிய லிபரல் ஃபெடரேஷன் பம்பாயில் நடைபெற்ற தனது மாநாட்டில் இயற்றப்பட்ட தீர்மானம் பின்வருமாறு அமைந் துள்ளது:

''1935-ஆம் வருட இந்திய அரசியல் சட்டத்தில் அறிவிக்கப் பட்டுள்ள அரசியலமைப்பு, குறிப்பாக மத்திய ஆட்சியின் அமைப்பு முற்றிலும் அதிருப்தியளிக்கிறது என்றும் பலவிதங்களில் பிற்போக் கானதாக உள்ளது என்றும் தனது கருத்தைத் தேசிய லிபரல் ஃபெடரேஷன் மீண்டும் வலியுறுத்துகிறது. இந்தியாவுக்குக் கூட் டாட்சி முறை அரசாங்கம்தான் இயல்பாகப் பொருந்துவதான குறிக்கோள் என்பதைத் தேசிய லிபரல் ஃபெடரேஷன் ஏற்கிறது; ஆனால் இந்தச் சட்டத்தில் கூறுப்பட்டுள்ள கூட்டாட்சியின் வடிவத்தில் பலமாறுதல்கள் செய்யப்பட வேண்டும் என்று ஃபெட ரேஷன் கருதுகிறது. குறிப்பாக, (அ) சமஸ்தான அதிபதிகளின் நிலைமையைத் தெளிவுபடுத்தி, சமஸ்தானங்களின் பிரதிநிதி களைத் தேர்ந்தெடுப்பதற்குச் சமஸ்தானங்களின் மக்களுக்கு உரிமை அளிப்பது, (ஆ) நீதிக் கொள்கை சம்பந்தமான பாது காப்பு ஷரத்துக்களையும் வர்த்தகப் பாரபட்சத்தையும் விலக்குவது, (இ) கூட்டாட்சிச் சட்டமன்றத்துக்கும் மாகாணங்கள் நேரடியாகப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பது, (ஈ) இந்தியா, நியாயமான ஒரு கால அளவுக்குள் டொமினியன்* அந்தஸ்து பெற வழிசெய்வது ஆகிய விஷயங்கள் இந்த மாறுதல்களில் இடம்பெற வேண்டும்.

மத்தியில் பொறுப்புள்ள அரசாங்கம் இல்லாமல் மாகாணங் களில் மட்டும் பொறுப்புள்ள அரசாங்கங்கள் இருக்கக் கூடிய நிலை பொருத்தமற்றது. அரசியலமைப்பின் கூட்டாட்சி ஏற்பாடு பொதுவாக ஏற்கத்தக்கதாக அமையும் வகையில் உடனடியாக மாறுதல் செய்ய வேண்டும் என்று பார்லிமெண்டைத் தேசிய லிபரல் ஃபெடரேஷன் கேட்டுக் கொள்கிறது.

கூட்டாட்சி அரசியலமைப்பு வெற்றிகரமாகச் செயல்படு வதற்கு இந்த மாறுதல்கள் இன்றியமையாதவை என்று ஃபெட ரேஷன் கூறுகிறது.

காங்கிரஸும், லிபரல் ஃபெடரேஷனும் கோரியிருக்கும் மாறு தல்களைச் செய்வது, கூட்டாட்சிக்கு இப்போதிருக்கும் எதிர்ப்பை மாற்றி அதை ஏற்கச் செய்வதற்குப் போதுமானதாயிருக்குமா? இந்தத் தீர்மானங்களில் கோரப்பட்டிருக்கும் மாறுதல்களைச் செய் வதனால் மட்டும் என்னுடைய கருத்து மாறிவிடாது. பிரிட்டிஷ் பார்லிமெண்ட் இந்தக் கூட்டாட்சித் திட்டத்தில் உள்ள பல அம்சங்களில் உடனடியாக மாறுதல் செய்யத் தயாராயிருக்கிறதா

* குடியேற்ற நாட்டு அந்தஸ்து.

என்பது மிகவும் முக்கியமில்லாத விஷயம் என்பது என் கருத்து. இந்தத் தீர்மானங்களில் அடங்கியுள்ள ஒவ்வொரு கோரிக்கையும் பிரிட்டிஷ் பார்லிமெண்ட் ஏற்றாலும் என்னுடைய கருத்தின்படி ஆட்சேபம் நீங்கிவிடாது. அடிப்படையான விஷயமாக நான் கருது வது என்னவென்றால், இந்தியா இறுதியாகத் தனது குறிக்கோளை எட்டிவிடும் வகையில் இந்தத் திட்டம் பரிணாமம் அடைய முடி யுமா என்பதே. இந்தக் கண்ணோட்டத்துடனேயே இந்தத் திட்டத் தைப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று உங்களையும் இதில் அக்கறையுள்ள ஒவ்வொருவரையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தியாவின் அரசியல் பரிணாமத்தின் குறிக்கோள் என்ன? இதைப் பற்றி குறிப்பிட்ட, தெளிவான கருத்து இருப்பதாகத் தோன்றவில்லை. இந்திய மக்களின் அரசியல் ஆவல்களைப் பிரதி பலிப்பதாகக் கூறும் காங்கிரஸ் நல்ல அரசாங்கமே தனது குறிக் கோள் என்று தொடங்கியது: அடுத்து சுயாட்சி அல்லது பொறுப் பாட்சியே குறிக்கோள் என்றது; அதிலிருந்து முன்னேறி டொமினி யன் அந்தஸ்தும், அதற்கும் பின் சுதந்திரமும் குறிக்கோள் என்று கூறியது. அந்த நிலையில் காங்கிரஸ் சுயபரிசோதனை மனப் பான்மையுடன் சிறிதுகாலம் நின்றுவிட்டது. பின்பு சிறிது காலம் ஊசலாட்டம் காணப்பட்டது. இப்போது மீண்டும் டொமினியன் அந்தஸ்தைக் குறிக்கோளாகக் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. காங்கிரஸின் கருத்துப்படி இதுதான் இந்தியாவின் குறிக்கோள் என்று எண்ணுவது மிகவும் தவறாகாது. இப்போது கேள்வி, இந்தக் கூட்டாட்சித் திட்டம் காலப்போக்கில் டொமினியன் அந்தஸ்தாக மலரக்கூடுமா என்பதே.

டொமினியன் அந்தஸ்து என்பது பிரிட்டிஷ் பார்லிமெண்ட் கொடுத்து விடக்கூடிய கொடையாக அதன் கைகளில் உள்ள விஷயம் என்று பல இந்தியர்கள் நினைக்கிறார்கள். அதைக் கொடுப்பதென்று பிரிட்டிஷ் பார்லிமெண்ட் முடிவு செய்தால் அதற்குக் குறுக்கே எதுவும் நிற்கப்போவதில்லை என்பது அவர் களின் எண்ணம். பிரிட்டிஷ் பார்லிமெண்ட் அதைக் கொடுக்க மறுத்துவிட்டதால் இந்தியா டொமினியன் அந்தஸ்தைப் பெறு வதற்கு நம்பிக்கை இல்லை என்று அவர்கள் கூறுகிறார்கள். இதற்கு ஆதரவாக, டொமினியன் அந்தஸ்துதான் இந்தியாவின் குறிக்கோள் என்று அறிவிக்கும் முன்னுரையை 1935-ஆம் ஆண்டு சட்டத்தில் சேர்க்க பார்லிமெண்ட் மறுத்துவிட்டதை அவர் கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

இத்தகைய முன்னுரை வேண்டும் என்ற கோரிக்கை மிகவும் பொருத்தமானது. 1929-இல் லார்டு இர்வின், பிரிட்டிஷ் பார்லி மெண்டில் உள்ள எல்லாக் கட்சிகளின் சம்மதத்துடன் இந்தியா வின் அரசியல் பரிணாமத்தின் குறிக்கோள் டொமினியன் அந்தஸ்துதான் என்று அறிவித்தார். எனவே இந்தியர்கள் கேட்டது ஒன்றும் புதிதல்ல. கவர்னர் ஜெனரல் மற்றும் வைஸ்ராய் இதை

அதிகாரபூர்வமாக அறிவித்திருக்கிறார். ஆனால் பிரிட்டிஷ் அரசாங்கம் இத்தகைய முன்னுரையைச் சேர்க்க மறுத்தது. இது ஒரு விசித்திரமான செயல். அதைவிட விசித்திரம் அதற்குக் கூறப்பட்ட காரணங்கள்.

இவ்வாறு மறுக்கப்பட்டதற்குக் கூறப்பட்ட முதல் காரணம் முன்னுரை கூறுவது பயனற்றது, அதற்குச் செயல்படுத்தப்படும் சக்தி கிடையாது என்பது. இதற்கு பதில் கூறுவது எளிது. பார்லிமெண்டின் சட்டங்கள் எல்லாவற்றுக்கும் முன்னுரைகள் உண்டு. அந்தச் சட்டத்தை இயற்றுவதில் பார்லிமெண்டின் நோக்கமும் பயனும் முன்னுரையில் கூறப்பட்டன. அதற்குச் சட்டத்தின் வலு கிடையாது என்பது உண்மை. ஆயினும் முன்னுரை பயனற்றது என்று நீதிமன்றங்கள் கூறியதில்லை. மாறாக, சட்டத்தின் ஏதாவது ஒரு பிரிவின் சொல் அமைப்புப் பற்றிச் சந்தேகம் ஏதும் ஏற்பட்டால், நீதி மன்றங்கள் சட்டத்தின் நோக்கத்தைப் புரிந்து கொள்வதற்கு முன்னுரையை வழிகாட்டியாகக் கொள்கின்றன. அதன் துணையுடன் சந்தேகமான வாக்கிய அமைப்புகளுக்குப் பொருள் நிர்ணயம் செய்திருக்கின்றன. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் இந்த வாதம் தோற்றுப் போனதால் அது வேறொரு நிலையை எடுத்தது. 1919-ஆம் வருட சட்டத்தை ரத்து செய்து விட்டு, அதன் முன்னுரையை மட்டும் வைத்துக் கொண்டது. இதுவும் ஒரு விசித்திரமாகும். முதலாவதாக, முன்னுரை பயனற்றது என்றால், 1919-ஆம் ஆண்டு சட்டத்தின் முன்னுரையை மட்டும் பாதுகாத்து வைத்துக் கொள்ளத் தேவை இல்லை. இரண்டாவதாக, 1919-ஆம் ஆண்டு சட்டத்துக்கு முன்னுரை தேவைப்பட்டது என்றால், 1935-ஆம் ஆண்டின் இந்தச் சட்டத்துக்கும் புதிதாக முன்னுரை இயற்றியிருக்க வேண்டும். ஆனால் பிரிட்டிஷ் அரசாங்கம் அவ்வாறு செய்ய விரும்பவில்லை. மாறாக உடம்பிலிருந்து தனியாக வெட்டியெடுக்கப்பட்ட தலையைக் கொண்டுவரும் விநோத வேலையைச் செய்தது. இப்போது, தலை ரத்து செய்யப்பட்ட 1919-ஆம் ஆண்டு சட்டத்திலும், உடம்பு இப்போதைய 1935-ஆம் ஆண்டு சட்டத்திலும் இருக்கின்றன. மூன்றாவதாக, இந்திய மக்கள் கேட்டது டொமினியன் அந்தஸ்தை வாக்களிக்கும் முன்னுரை. லார்டு இர்வினின் அறிவிப்பில் கூறப்பட்டிருந்தது அதுதான். 1919-ஆம் ஆண்டுச் சட்டத்தின் முன்னுரை பொறுப்புள்ள அரசாங்கம் பற்றித்தான் பேசுகிறது. டொமினியன் அந்தஸ்து பற்றி அது பேசவில்லை. எனவே அந்த முன்னுரையை வைத்துக் கொண்டதானது, மிகக் குறைவாகச் சொல்லுவதென்றால் மிகவும் மடத்தனமான செயல்.

டொமினியன் அந்தஸ்தைக் குறிக்கோளாகக் கூறும் முன்னுரையை இயற்ற பிரிட்டிஷ் பார்லிமெண்ட் மறுத்தது ஏன்? இந்தக் கோரிக்கையை ஏற்பதற்குப் பதில் பார்லிமெண்ட் அங்கும் இங்குமாக வாதங்கள் தேடி ஓடியது ஏன்? இதற்குச் சாதாரண

மாகக் கூறப்படும் விளக்கம் வழக்கமான ஒன்று—வெள்ளைக் காரனின் துரோகம்! என்னுடைய கருத்து வேறு. பிரிட்டிஷ் அரசாங்கம் ஒரு முன்னுரை இயற்றுவதன் மூலம் டொமினியன் அந்தஸ்தை வாக்கூறுதியளிக்க விரும்பவில்லை என்பதற்குக் காரணம், அதை நிறைவேற்றுவது தனது சக்திக்கு அப்பாற்பட்டது என்பதை உணர்ந்ததேயாகும். பிரிட்டிஷ் பார்லிமெண்ட் நேர்மை இல்லாமல் செயல்படவில்லை. மாறாக நேர்மையுடன் செயல் பட்டது. அதனால்தான், செயல்படுத்த முடியாதது என்று தனக் குத் தெரிந்திருந்த ஒரு முன்னுரையை இயற்ற மறுத்தது. இதற்கு இல்லாமல் போனது தைரியம்தான். கூட்டாட்சித் திட்டத்தில் டொமினியன் அந்தஸ்துக்கு இடமில்லை என்பதை இந்திய மக்க ளிடம் வெளிப்படையாகக் கூறும் தைரியம் பார்லிமெண்டுக்கு இல்லாமல் போயிற்று.

கூட்டாட்சித் திட்டத்தில் இந்தியா டொமினியன் அந்தஸ்து பெற முடியாது என்பதற்கு என்ன காரணம்? அந்தத் திட்டத்தில் பொறுப்புள்ள அரசாங்கம் அமைவது முடியாது என்பதே காரணம். டொமினியன் அந்தஸ்தை அடைவதற்கு இந்தியா முதலில் பொறுப்புள்ள அரசாங்கத்தை அடைய வேண்டும். பொறுப்புள்ள அரசாங்கத்தை அடைவதற்கு ஒதுக்கப்பட்ட விஷயங்கள் மாற்றப் பட்டவையாக வேண்டும். இதுதான் டொமினியன் அந்தஸ்தை அடையும் பரிணாமத்தில் முதல்நிலையாகும்.

ஒதுக்கப்பட்ட விஷயங்கள் மாற்றப்பட்டவை ஆக முடியாது என்று நான் கூறுவதற்கு என்ன காரணம் என்று அறிய உங்களில் சிலர் விரும்பலாம். மாகாணங்களுக்கான திட்டத்திலும் ஒதுக்கப் பட்ட விஷயங்கள் என்று இருந்தது இவர்களுக்கு நினைவிருக்கும். ஒரு 20 ஆண்டுக்காலத்தில் மாகாணங்களில் ஒதுக்கப்பட்ட விஷ யங்கள் மாற்றப்பட்ட விஷயங்கள் ஆகிவிட்டதைப் பார்க்கும் போது கூட்டாட்சியிலும் அவ்வாறு நடப்பதில் என்ன இடையூறு இருக்கும் என்று இவர்கள் கேட்கலாம். இது ஒரு முக்கியமான கேள்வி என்பதால் இதற்கு என்னுடைய காரணங்களைக் கூறு கிறேன். முதலாவதாக, மாகாணங்களை உதாரணமாகக் கூறியது சரியல்ல. ஏனென்றால் மாகாணங்களுக்கான திட்டத்தில் ஒதுக்கப் பட்ட விஷயங்கள், மாற்றப் பட்ட விஷயங்கள் என்ற வேறுபாடு நிர்வாகத் திறமையின் தேவைகளை அடிப்படையாகக் கொண் டிருந்தது. ஆனால் கூட்டாட்சித் திட்டத்தில் இந்த வேறுபாடு நிர்வாகத் திறமையின் தேவைக்காக அன்றி சட்ட ரீதியான அவசியத்துக்காகச் செய்யப்பட்டுள்ளது என்பதற்கு நிரூபணம் தேவையில்லை. சைமன் கமிஷன் மத்திய அரசாங்கத்தில் இரட்டை ஆட்சிமுறையைப் பரிந்துரை செய்யாததற்கான காரணங்களில் ஒன்று நிர்வாக ரீதியாக, ஒதுக்கப்பட்டவை என்றும் மாற்றப் பட்டவை என்றும் பிரிப்பது எல்லாவற்றின் திறமையையும் பாதிக் காமல் இராது என்பதாகும். சைமன் கமிஷன் பற்றி இந்திய

அரசாங்கம் அனுப்பிய குறிப்பு இந்தக் கருத்தை முற்றிலுமாக ஒப்புக் கொண்டது. எனவே, இந்தப் பாகுபாடு நிர்வாக அடிப் படையில் அமைந்ததல்ல; சட்ட ரீதியான தேவையின் விளைவு அது. இந்த அடிப்படையான வித்தியாசத்தை ஒருபோதும் மறந்து விடக் கூடாது.

இந்தச் சட்டரீதியான தேவை எவ்வாறு ஏற்படுகிறது? சில விஷயங்களை ஒதுக்கப்பட்டவை என்று கருத வேண்டிய அவசியம் இந்திய சமஸ்தானங்கள் கூட்டாட்சியில் சேர்க்கப்படுவதன் காரண மாக ஏற்படுகிறது.

இவ்வாறு சில விஷயங்களை ஒதுக்கப்பட்டவை என்று வைக் கும் படியாக இந்திய சமஸ்தானங்களின் நிலைப்பாட்டில் என்ன இருக்கிறது? இதற்கு பதில் கூறுவதற்கு, இந்திய அரசாங்கச் சட்டத் தின் 180-ஆவது பிரிவை உங்களுக்குச் சுட்டிக்காட்ட வேண்டும். அந்தப் பிரிவு கூறுவது:

> ''இந்தச் சட்டத்தின் 3-ஆவது பகுதி செயல்படத் தொடங்கு வதற்கு முன் ஸெக்ரட்டரி ஆஃப் ஸ்டேட்டால் (இந்திய விவ காரங்களுக்கான பிரிட்டிஷ் அமைச்சர்), அல்லது அவரது சார் பில் மன்னருக்கும் இந்திய சமஸ்தானங்களுக்கும் இடையிலான உறவு தொடர்பாக செய்து கொண்ட எந்த ஒப்பந்தமும் இந்தச் சட்டத்தின் 3-ஆவது பகுதி செயல்படத் தொடங்குவது முதல் மன்னரின் சார்பில் செய்துகொண்ட ஒப்பந்தங்களைப் போல் செயல்படுத்தப்படும். அந்த ஒப்பந்தங்களில் செக்ரட் டரி ஆஃப் ஸ்டேட் பற்றிக் குறிப்பிடப்படும் இடங்களில் இவ்வாறே பொருள் கொள்ளப்படும்.''

சட்டத்தின் இந்தப் பிரிவு இந்திய சமஸ்தான அதிபதிகள் தங்கள் சமஸ்தானங்களின் உடன்படிக்கைகள் பிரிட்டிஷ் மன்ன ருடன் செய்து கொள்ளப்பட்டவையே அன்றி, இந்திய அரசாங்கத் துடன் செய்த கொள்ளப்பட்டவை அல்ல என்று பட்லர் கமிட்டி (Butler Committee) யின் முன் கூறி, அந்தக் கமிட்டி ஏற்றுக் கொண்ட வாதத்துக்குச் சட்டவடிவம் கொடுக்கிறது. அடுத்தபடி, இந்தத் தத்துவத்திலிருந்து என்ன விளைவு வருகிறது என்பதாகும். இந்த விளைவு மிக முக்கியமானது; ஆயினும் துரதிர்ஷ்டவசமாக இது உரிய கவனம் செலுத்தாமல் விடப்பட்டுள்ளது. இந்திய சமஸ் தானங்களின் உடன்படிக்கை உறவுகள் இங்கிலாந்து மன்னருடன் உள்ளவை என்பதால், இந்த உடன்படிக்கைகளின்படியான கடமைப் பொறுப்பை நிறைவேற்றுவது மன்னரின் பொறுப்பாகும் என்று சமஸ்தான அதிபதிகள் எப்போதும் கூறிவந்திருக்கிறார்கள். இந்தக் கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்குத் தயாரான நிலையில் இங்கிலாந்து மன்னர் எப்போதும் இருக்க வேண் டும்.

இது என்ன கடமைப் பொறுப்பு? சமஸ்தான அதிபதிகளை உள்நாட்டுக் கிளர்ச்சியிலிருந்தும் வெளிநாட்டு ஆக்கிரமிப்பி

லிருந்தும் பாதுகாப்பதாக இங்கிலாந்து மன்னர் இந்த உடன் படிக்கைகளின்படி பொறுப்பேற்றிருக்கிறார்.

இந்தக் கட்மைப் பொறுப்பை மன்னர் எப்படி நிறைவேற்ற முடியும்? வெளி உறவு, ராணுவம் ஆகியவற்றைத் தம்முடைய தனிப்பட்ட கட்டுப்பாட்டின் கீழ் ஒதுக்கப்பட்ட விஷயங்களாக வைப்பதுதான் இதற்கு ஒரே வழி என்று வாதிக்கப்படுகிறது.

ஒதுக்கப்பட்ட விஷயங்கள் எனப் பிரித்து வைப்பதற்குக் காரணம் சட்டரீதியான அவசியம் என்று நான் கூறுவது ஏன் என்பதை இப்போது நீங்கள் புரிந்து கொள்ள முடியும். இங்கிலாந்து மன்னரின் உடன்படிக்கை மூலமான கடமைப் பொறுப்புகள் காரணமாக இந்த சட்டரீதியான அவசியம் ஏற்படுகிறது. இந்த உடன்படிக்கை உறவுகள் அடிப்படை நீடிக்கும் வரை—பிரிவு 180 அவை நீடிப்பதாகக் கூறுகிறது—ஒதுக்கப்பட்ட விஷயங்கள் மாற்றப்பட்டவை ஆக முடியாது. இப்படி ஆக முடியாத காரணத்தால் பொறுப்புள்ள அரசாங்கம் என்பதற்கோ, அதையும் விட டொமினியன் அந்தஸ்து என்பதற்கோ வாய்ப்பு இல்லை.

அரசியலமைப்பைப் பற்றி நான் கூறிய இந்த ஆய்விலிருந்தும் இறுதிக் குறிக்கோள் பற்றிய கண்ணோட்டத்திலிருந்தும் பார்த்தால், இந்த அரசியலமைப்பு மாற்றத்துக்கிடமின்றித் தீர்மானிக்கப் பட்ட இறுக்கமான அரசியலமைப்பு என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். அதை மாற்ற முடியாது, எனவே அதில் முன்னேற்றம் ஏற்பட முடியாது. அடிப்படையிலேயே நோயுற்றுள்ள இந்த அரசியல் சாசனத்தை ஏற்க வேண்டுமா என்பதை இந்திய மக்கள்தான் சிந்திக்க வேண்டும்.

நமது குறிக்கோளைக் கருத்தில் கொண்டு அரசியலமைப்பை இவ்வாறு விரிவாக ஆய்வுக்குட்படுத்துவதில் உங்களைக் களைப் படையச் செய்ததற்கு நான் மன்னிப்புக் கேட்க வேண்டும். ஆனால் இந்த விஷயத்தில் சிலர் கொண்டிருக்கும் மனப்பான்மைதான் நான் இவ்வளவு விரிவாக இதை ஆய்வு செய்ததற்குக் காரணம் என்று தான் நான் சமாதானம் கூற முடியும். எந்த அரசியலமைப்பும் குறைகளற்றது அல்ல என்பதை நான் அறிவேன். குறைகள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் குறைகள் என்பதற்கும், உள்ளேயே அமைந்து, தோன்றும்போதே கூடவே ஏற்பட்டுள்ள குறைபாடுகளுக்கும் இடையே வேறுபாடு உண்டு. குறைகளை நீக்கி விடலாம். ஆனால் தோன்றும்போதே உடன் சேர்ந்து வந்துள்ள குறைபாடுகளைச் சரிசெய்ய முடியாது. காங்கிரஸின் தீர்மானத்திலும் லிபரல் ஃபெடரேஷனின் தீர்மானத்திலும் தெரிவிக்கப் பட்டுள்ள கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டாலும் குறைகள் நீக்கப் படலாம், ஆனால் உடனமைந்த குறைபாடுகளைப் போக்க முடியுமா? உடனமைந்த குறைபாடுகள் இல்லை என்ற உறுதி இருந்தால் சில குறைகள் இருப்பதை நான் பொருட்படுத்த மாட்டேன். அரசியலமைப்பில் உள்ள மிகப் பெரிய குறைபாடு, அது

டொமினியன் அந்தஸ்துக்கு வழி அமைக்காது என்பதே. காங்கிரஸோ, லிபரல் பெடரேஷனோ இந்தக் குறைபாடு இருப்பதை உணர்ந்ததாகத் தோன்றவில்லை. அவர்களின் கோரிக்கைகள் இந்தியாவின் அரசியல் குறிக்கோளுக்குச் சம்பந்தமில்லாதவையாக உள்ளன. அவர்கள் அதைக் குறிப்பிடக்கூட இல்லை. காங்கிரஸ் காரர்கள் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றும் ஆசையினால், பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கெதிரான அவர்களது கோரிக்கைகளில் இது சம்பந்தமாக ஒரு அறிவிப்பு வெளியிட வேண்டும் என்ற கோரிக்கை இல்லாமலிருப்பது வியப்புக்குரியது. ஆயினும் காங்கிரஸ் மறந்து விட்டாலும் இந்திய மக்கள் மறக்க முடியாது. மறக்கக் கூடாது. மறந்து விடுவது உயிராபத்தாக முடியும். ஒரு தனி மனிதனைப் போலவே ஒரு மக்களும், பயணத்தில் ஒரு கட்டம் முடியும் போது பயணமே முடிந்து வீடுவந்துவிட்டதாக நினைப்பதும், ஒரு பாதை வீட்டுக்கு இட்டுச் செல்லும் பாதையா அல்லவா என்று தெரியாமலே அதில் பயணம் செய்வதும் தவறான வழியில் சென்று பள்ளத்தில் விழுந்துவிடக் காரணமாகிவிடும்.

என்னை நீங்கள் தவறாகப் புரிந்து கொள்ளக்கூடாது. நான் பொறுமையில்லாத லட்சியவாதி அல்ல. படிப்படியாக முன்னேற விரும்பி, தவணை முறையில் பெற்றுக் கொள்ளத் தயாராயிருப்பவரை நான் கண்டனம் செய்யவில்லை. ஆயினும் அவர் ஒரு ரூபாய் பெற்றுக் கொள்ள உரிமை இருக்கும் போது ஒரு அணாவை மட்டும் கேட்பதும், ஒரு பைசா கிடைத்தாலே பெரும் வெற்றியாகக் கொண்டாடுவதும் பரிதாபத்துக்குரியது. நாம் படிப்படியாகத் தான் முன்னேற வேண்டும் என்பது சூழ்நிலையின் கட்டாயமானால் நாம் பிரத்தியட்ச ரீதியாக நடந்து கொள்ளத் தவறக் கூடாது. ஒரு தவணையை மட்டும் பெற்றுக் கொள்ளும் போது அதை நன்றாகப் பரிசீலனை செய்து நமது முழுக் கோரிக்கை ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். இல்லையென்றால் அந்த நிமிடத்தில் நல்லதாகத் தோன்றுவது அதைவிட நல்லது கிடைக்காமல் தடுக்கும் எதிரியாகி விடுவது உண்டு.

இந்தியா எப்படி டொமினியன் அந்தஸ்தைப் பெற முடியும் என்று உங்களில் சிலர் கேட்கலாம். கூட்டாட்சியில் சேரும் சமஸ்தான அதிபதிகள் அதற்கு இணங்கினால்தான் பெற முடியும் என்பதே என் பதில். அவர்கள் இந்தியா டொமினியன் அந்தஸ்து பெறுவதை எதிர்த்தால் அதைப் பெற முடியாது. கூட்டாட்சித் திட்டம் இந்தியாவின் அரசியல் பரிணாமத்தின் சூத்திரக்கயிற்றைச் சமஸ்தான அதிபதிகளின் கைகளில் கொடுத்திருக்கிறது. இந்தியாவின் விதி சமஸ்தான அதிபதிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது.

வருங்காலத்தைப் பற்றிய இந்தக் கருத்து உங்களில் பலருக்கு விசித்திரமாகப் படலாம். பார்லிமெண்டின் மேலதிகாரம் பற்றி டைஸி கூறிய கருத்து நம்மில் ஆழ்ந்து ஊறியிருக்கிறது. பார்லி

மெண்ட் எல்லாவற்றிலும் மேலதிகாரம் கொண்டது என்றும், ஆணைப் பெண்ணாகவோ, பெண்ணை ஆணாகவோ மாற்று வதைத் தவிர வேறு எதையும் பார்லிமெண்டால் செய்ய முடியும் என்றும் அவரிடமிருந்து நாம் கற்றிருக்கிறோம். பிரிட்டிஷ் பார்லி மெண்ட் இவ்வாறு மேலதிகாரம் பெற்றதனால் சமஸ்தான அதிபதிகள் எப்படி அதன் விருப்பத்துக்குக் குறுக்கே நிற்க முடியும் என்று கேட்பது இயல்பேயாகும். பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கு இந்தியக் கூட்டாட்சியின் மீது மேலதிகாரம் இல்லை என்று சொன் னால் அதை நீங்கள் ஏற்பது கடினமாயிருக்கும். இந்திய அரசாங் கச் சட்டத்தில் இடம்பெற்றிருக்கும் கூட்டாட்சி அரசியல் அமைப்பை மாற்றுவதற்கு அதற்குள்ள அதிகாரத்துக்குக் கண்டிப்பாக வரம்பு கட்டப்பட்டிருக்கிறது.

இந்திய சட்டமன்றங்களுக்கு அரசியலமைப்புச் சட்டமியற்றும் அதிகாரம் இந்தச் சட்டத்தில் கொடுக்கப்படவில்லை என்பது பற்றி இந்திய அரசியல்வாதிகள் வருத்தமும் கோபமும் தெரிவித் திருக்கிறார்கள்.

இந்திய அரசாங்கச் சட்டத்தின்படி கூட்டாட்சிச் சட்டத்தை மாற்றுவதற்கோ திருத்துவதற்கோ எந்த அதிகாரமும் கிடையாது. ஒன்றே ஒன்றுதான் சட்டத்தின் 308-ஆவது பிரிவுப்படி அனு மதிக்கப்படுகிறது. கூட்டாட்சிச் சட்டசபையோ மாகாண சட்ட சபையோ, அரசியலமைப்புச் சட்டத்தில் ஏதேனும் திருத்தம் செய் வதற்குப் பரிந்துரை செய்து தீர்மானம் இயற்றலாம். அந்தத் தீர்மா னத்தை ஸெக்ரட்டரி ஆஃப் ஸ்டேட் (இந்திய விவகாரங்களுக்கான பிரிட்டிஷ் அமைச்சர்) கட்டாயமாக பார்லிமெண்டின் இருசபை கள் முன்பும் வைக்க வேண்டும். அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜெர்மன் ஃபெடரேஷன், சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளின் அரசியல் சாசனங்களில் உள்ள ஷரத்துக்களுக்கு முரண்பட்டது இது. இந்திய சட்ட மன்றங்கள் எல்லாப் பிரிவுகளுக்கும் நலன் களுக்கும் முழுமையாகப் பிரதிநிதித்துவம் பெற்றிருக்கும் போது சில குறிப்பிட்ட வரம்புகளுக்குள் அரசியலமைப்புச் சட்டம் இயற் றும் அதிகாரத்தை அவற்றுக்கு கொடுக்காமலிருக்கக் காரணம் எதுவும் இல்லை. ஆனால் அது கொடுக்கப்படவில்லை. இந்திய சட்டமன்றங்கள் அரசியலமைப்பில், வாக்குரிமை சம்பந்தமாகக் கூட எந்த மாறுதலும் செய்ய முடியாது. ஒதுக்கப்பட்ட விஷயங் களை மாற்றப்பட்ட விஷயங்களாக மாற்றுவது நிச்சயமாக முடி யாது. அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றும் அதிகாரம் பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கு மட்டுமே இருக்கிறது. ஆனால் பிரிட்டிஷ் பார்லிமெண்ட் கூட, கூட்டாட்சி அரசியலமைப்பை மாற்ற முடியாது என்பதை மிகச் சிலரே உணர்ந்திருக்கிறார்கள். இந்த உண்மையை எவ்வளவு விரைவில் உணருகிறோமோ, அந்த அள வுக்கு நல்லது.

இந்தக் கண்ணோட்டத்தில் இரண்டாவது செடியூல்டின் முக்கி யத்துவத்தை மிகைப்படுத்த முடியாது. இதில் உரியபடி கவனம்

செலுத்தவில்லை என்பது வருந்தத்தக்கது. இரண்டாவது ஷெடியூல் ஒரு சாசனம் மட்டும் அல்ல; அரசியலமைப்பு செல்லக்கூடிய பாதையைக் காட்டும் படமாகவும் அமைந்திருக்கிறது. இந்த ஷெடியூல் முழுவதுமே கவனமாகப் பரிசீலனை செய்யத் தகுந்தது. இரண்டாவது ஷெடியூல் என்ன கூறுகிறது? இந்திய அரசாங்கச் சட்டத்தின் சில ஷரத்துக்களில் பார்லிமெண்ட் திருத்தம் செய்யலாம் என்றும், வேறு சில ஷரத்துக்களில் பார்லிமெண்ட் திருத்தம் செய்ய முடியாது என்றும் இந்த ஷெடியூல் குறிப்பிடுகிறது. பார்லிமெண்ட் உயர் அதிகாரம் பெற்றதல்ல என்றும், அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றுவதற்கு அதன் அதிகாரம் ஒரு வரம்புக்கு உட்பட்டது என்றும் வேறுவிதமாகச் சொல்லுவதாகும் இது.

பார்லிமெண்ட் திருத்தம் செய்யக்கூடாது என்று இரண்டாவது ஷெடியூல் குறிப்பிடும் ஷரத்துக்களை பார்லிமெண்ட் திருத்தினால் என்ன நடக்கும்? இவ்வாறு திருத்தச் சட்டம் இயற்றப்பட்டால் கூட்டாட்சியில் சமஸ்தானங்கள் இணைந்ததை அது பாதிக்கும் என்று இரண்டாவது ஷெடியூல் கூறுகிறது. அதாவது சமஸ்தானங்களின் இணைப்பு ஒப்பந்தங்களின் கட்டுப்படுத்தும் தன்மை பாதிக்கப்படும். வேறுவிதமாகச் சொன்னால், இந்தச் சட்டத்தில் பார்லிமெண்ட் திருத்தம் செய்யக் கூடாது என்று குறிப்பிடப் பட்டுள்ள ஷரத்துக்களைத் திருத்தினால், சமஸ்தான அதிபதிகள் கூட்டாட்சியிலிருந்து பிரிந்து செல்லும் உரிமையைப் பெற்று விடுவர். சில பிரபல வழக்கறிஞர்கள் வேறுவிதமாகக் கருத்துக் கூறியிருப்பது எனக்குத் தெரியும். சமஸ்தான அதிபதிகள் கூட்டாட்சியில் இணைந்துவிட்டால், மீண்டும் வெளியேற முடியாது என்பது அவர்கள் கருத்து. என்னுடைய கருத்து முற்றிலும் ஆதாரமற்றதல்ல.

நான் கூறியது போன்ற விளக்கத்தையே ஸொலிஸிட்டர்-ஜெனரலும் ஸெக்ரட்டரி ஆஃப் ஸ்டேட்டும் காமன்ஸ் சபையில் இந்திய அரசாங்கச் சட்டத்தின் மீது விவாதம் நடந்த போது கூறியிருக்கிறார்கள். ஸொலிஸிட்டர்-ஜெனரல் கூறினார்:

> ''சில வரையறைக்குட்பட்ட சமஷ்டியில் சேர சமஸ்தானங்கள் இணங்க மாட்டா. கூட்டாட்சியின் கட்டமைப்பை நாம் பின்பு முற்றிலுமாக மாற்ற முடியாது. இந்த ஷரத்தின் நோக்கம், அடிப்படையானவை என்றோ, சமஸ்தானங்களின் இணைப்பு ஒப்பந்தங்களை பாதிப்பவை என்றோ கருதப்படாமல், மாற்றம் செய்யக் கூடிய விஷயங்கள் எவை என்பதைக் குறிப்பிடுவதேயாகும்.... ''அடிப்படையான விஷயங்களில் கட்டமைப்பில் மாற்றம் செய்யப்பட்டால், சமஸ்தானங்கள் 'நாங்கள் இணைந்து கொண்ட கூட்டாட்சி இதுவல்ல' என்று கூறிவிட உரிமை இருக்கும்.''

ஸெக்ரட்டரி ஆஃப் ஸ்டேட் கூறினார்:

> ''மசோதாவில் சமஸ்தானங்கள் சம்பந்தப்பட்டவையான பகுதிகளில் நீங்கள் மாற்றம் செய்தால், அவை கூட்டாட்சியில்

என்ன நிபந்தனைகளின் கீழ் இணைந்தனவோ அந்த நிபந்தனைகள் மாற்றப்பட்டுவிடும். அப்போது சமஸ்தான அதிபதிகள் தங்களுடைய இணைப்பு ஒப்பந்தங்கள் மாற்றப்பட்டுவிட்டன என்று கூறக்கூடிய ஒரு நிலைமையாகும். சமஸ்தான அதிபதிகள் கூட்டாட்சியில் இணைவதற்குச் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் என்று சொல்லத்தக்கதாக உள்ள மசோதாவின் பகுதி எதையும் நாம் திருத்த முடியாது என்பதே இதன் பொருள். அவர்களின் இணைப்பு ஒப்பந்தங்களுக்கு அடிப்படையான விஷயங்களை பாதிக்கக் கூடிய எந்த மாற்றத்தையும் செய்தால், சமஸ்தான அதிபதிகளுக்கும் பார்லிமெண்டுக்கும் இடையிலான ஒப்பந்தம் உடைக்கப்பட்டு விட்டதாகும்; சமஸ்தான அதிபதிகள் சுயேச்சை பெற்று விடுகிறார்கள்.''

''இந்த மசோதாவின் பொதுவான அமைப்பின்படி சமஸ்தானங்கள் கூட்டாட்சியில் இணையுமாறு கேட்கப்படும் போது, அதன் சில அம்சங்களையாவது நிச்சயமான வடிவில் தெரிந்து கொள்ள அவற்றுக்கு உரிமை உண்டு என்பதை எல்லோரும் ஏற்பார்கள். ஒரு சமஸ்தானத்திடம் இந்த மாதம் ''நீங்கள் கூட்டாட்சியில் இணைவீர்களா என்று கேட்டுவிட்டு அடுத்த மாதம் இந்தச் சபை அந்த சமஸ்தானம் இணைந்ததாகக் கருதப்படும் கூட்டாட்சியில் சில அடிப்படையான விஷயங்களில் மாற்றம் செய்துவிட முடியும் என்பது அர்த்தமற்றதாகும். எனவே இது போன்ற ஒரு ஷெடியூல் அவசியமாகிறது. இந்த மசோதாவில், சமஸ்தானங்கள் தாம் இணைந்து கொண்டது அரசியலமைப்பு மாற்றப்பட்டுவிட்டதாகக் கருதாதவகையில் என்னென்ன விஷயங்களில் மாற்றம் செய்யலாம் என்று பிரித்துக் காட்டும் ஏற்பாடு இது. சட்டத்தில் எந்த ஷரத்துக்களில் மாற்றம் செய்வது சமஸ்தானங்களின் இணைப்பு ஒப்பந்தம் செல்லுபடியாகும் நிலையை பாதிக்காது என்று எடுத்துக் கூறுவது இதன் நோக்கம்.''

''மசோதாவில் எந்தப் பகுதிகளில் திருத்தம் செய்வது சமஸ்தானத்தின் இணைப்பு ஒப்பந்தம் செல்லுபடியாவதைப் பாதிக்காது என்று குறிப்பிட்டுக் கூறப்படுகிறது. அதேபோல மறுபுறம் எந்த விஷயங்களில் மாற்றம் செய்வது இணைப்பு ஒப்பந்தம் செல்லுபடியாவதை பாதிக்கும் என்று குறிப்பிட்டுக் கூறப்படுகிறது. சமஸ்தான அதிபதிகள் தங்களின் சம்மதம் இல்லாமல் மாற்றப்படக் கூடாது என்று கோர உரிமையுள்ள விஷயங்கள் எவை என்பதைக் குறிப்பிடுவதில் மிகவும் கவனமாகச் செயல்பட வேண்டியுள்ளது.. இப்போதுள்ள நிலையைப் பெரிதும் மாற்றி விடாத சிறிய திருத்தங்கள் செய்யப்படலாம். அப்போது சமஸ்தான அதிபதிகள் ஆட்சேபம் எழுப்பி 'இது எங்களுடைய இணைப்பு ஒப்பந்தத்தைப் பாதிப்பதாகும் என நாங்கள் எங்கள் உரிமையை வலியுறுத்தப் போகிறோம்'' என்று கூறினால் அது

நியாயமற்றதாகும். அதிகார சமநிலை என்று கூறக்கூடிய நிலையை உண்மையிலேயே பாதிக்கும் விஷயம், நிர்வாகக் கட்டுப்பாட்டில் ஒதுக்கப்பட்ட விஷயங்கள் பிரச்சினை, கவர்னர் ஜெனரல் தமது உசிதப்படி செயல்படக் கூடிய விஷயங்கள், சமஸ்தானங்கள் இணையப்போகும் கூட்டாட்சியின் கட்டமைப்புக்கு அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்கள் ஆகியவற்றில் சமஸ்தானங் களின் சம்மதம் இல்லாமல் திருத்தம் செய்யக் கூடாது என்பது சரியானதே.

''கவர்னர் ஜெனரலின் விசேஷ அதிகாரங்கள் என்ற பகுதி முழுவதும் கூட்டாட்சியின் முக்கியமான அம்சங்களில் ஒன்று. சமஸ்தானங்கள் 'அது ஒரு மாற்றம்' என்றோ, 'அதில் மாறுதல் செய்யப்பட்டு விட்டது' என்றோ கூறக்கூடிய ஒரு பகுதி அது. ஆனால் அது இந்தியாவின் அபிவிருத்தியை நிரந்தரமாகத் தடுத்து விடாது. இந்த விஷயங்கள் சமஸ்தானங்களுடன் பேச்சு நடத்தித் தீர்மானிக்க வேண்டியவை. ஏனென்றால் சமஸ்தானங்கள் இணைந்து கொண்டபோது இருந்த கூட்டாட்சியாக இல்லாமல் அதிலிருந்து வேறுபட்ட வடிவிலான ஒரு கூட்டாட்சியை உருவாக் கக் கூடிய விஷயங்கள் இவை.''

எனவே, இரண்டாவது ஷெடியூலின்படி, சமஸ்தானங்களின் இணைப்பு ஒப்பந்தத்தை பாதிப்பவையாகக் கூறப்படும் விஷயங் களில் பார்லிமெண்ட் மாற்றம் செய்தால் என்ன ஆகும் என்ற கேள்விக்கு விடை சமஸ்தான அதிபதிகள் கூட்டாட்சியிலிருந்து வெளியேறிவிட உரிமை பெற்று விடுவார்கள் என்பதாகும். வேறு விதமாகச் சொன்னால் அத்தகைய மாற்றங்கள் கூட்டாட்சியை உடைத்துவிடும்.

இணைப்பு ஒப்பந்தத்தை பாதிக்காமல் செய்ய முடியாதவை யான மாறுதல்கள் என்ன? இரண்டாவது ஷெட்யூலில் இவ்வாறு குறிப்பிடப்படும் சில விஷயங்களைச் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். பின்வரும் விஷயங்களில் அரசியலமைப்பில் மாற்றம் செய்ய முடியாது என்று இரண்டாவது ஷெடியூல் குறிப்பிடுகிறது: (1) கூட்டாட்சியின் நிர்வாக அதிகாரத்தை கவர்னர் ஜெனரல் செயல்படுத்துவது; (2) கவர்னர் ஜெனரலின் பணிகள் என்ன என்பது பற்றிய வரையறை; (3) கூட்டாட்சியின் நிர்வாக அதிகா ரம்; (4) அமைச்சரவையின் பணிகள், அமைச்சர்களைத் தெரிந் தெடுத்தல், அமைச்சர்களின் பதவிக்காலம்; (5) கவர்னர் ஜென ரல், ஒரு விஷயத்தில் தாம் தமது உசிதப்படி செயல்பட முடியுமா என்பதை அவரே தீர்மானிக்கும் அதிகாரம்; (6) வெளி உறவுகள், பாதுகாப்பு ஆகியவற்றில் கவர்னர் ஜெனரலின் பணி; (7) இந்தியா வின் அல்லது அதன் ஒரு பகுதியின் அமைதி சம்பந்தமாக கவர்னர் ஜெனரலின் விசேஷப் பொறுப்புகள்; (8) கூட்டாட்சி அரசாங்கத் தின் நிதிநிலை உறுதிப்பாடு; (9) இந்திய சமஸ்தானங்களின் உரிமை களும், சமஸ்தான அதிபதிகளின் உரிமைகளும் கௌரவமும்;

(10) இந்தச் சட்டத்தின் கீழ் அவர் தமது உசிதப்படி அல்லது தமது தனிப்பட்ட முடிவின்படி தமது பொறுப்பைச் செயல்படுத்துவது; (11) கவர்னர் ஜெனரலுக்கு மன்னர் அளித்த கட்டளைப் பத்திரம் (12) கூட்டாட்சி அரசாங்கத்தின் செயல்பாடுகளை கவர்னர் ஜெனரல் தமது உசிதப்படி நடத்துவதற்கான விதிகளை வகுப் பதை செக்ரட்டரி ஆஃப் ஸ்டேட் மேற்பார்வையிடுதல்.

இரண்டாவது ஷெடியூல் அரசியலமைப்பில் செய்யக் கூடா தவை என்று பல விஷயங்களை விரிவாகத் தொகுத்துத் தருகிறது. அவற்றில் சிலவற்றை மட்டுமே நான் குறிப்பிட்டேன். ஆயினும் அரசியலமைப்பில் மாற்றங்கள் செய்வதற்கு பார்லிமெண்டுக்கு உள்ள அதிகாரம் எவ்வளவு தூரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதை என்பதைக் காட்டுவதற்கு இவை போதுமானவை.

பார்லிமெண்டின் அதிகாரம் ஏன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது? இதைப் புரிந்து கொள்வதற்கு பார்லிமெண்டின் துல்லிதமான அதிகார வரம்புகளைக் கவனிக்க வேண்டும். சட்டத்தின்படி மன்ன ரின் ஆட்சி அதிகாரத்துக்கு உட்பட்ட நாடுகளுக்குத்தான் பார்லி மெண்ட் சட்டம் இயற்ற முடியும். சமஸ்தானங்கள் மன்னரின் ஆட்சி அதிகாரத்துக்கு உட்பட்டவை அல்ல. இவற்றில் எதுவும், மிகச் சிறியதுகூட, பார்லிமெண்டின் சட்டமியற்றும் அதிகாரத் துக்கு உட்பட்டவை அல்ல. சமஸ்தானங்களின் இந்த நிலையை இந்திய அரசாங்கச் சட்டம் மாற்றிவிடவில்லை. கூட்டாட்சி அமைப்பு ஏற்பட்ட பிறகும், அதற்கு முன்பு இருந்தபடியே சமஸ் தானங்கள் வெளிநாடுகளாகவே உள்ளன. இவ்வாறு கூட்டாட்சி யின் பகுதிகளான வெவ்வேறு சமஸ்தானங்கள் ஒன்றுக்கொன்று வெளிநாடாக இருப்பது இந்தியக் கூட்டாட்சியின் மிகத் தனித் தன்மையான அம்சமாகும். இந்தச் சட்டம் சமஸ்தானங்களை மன்னரின் ஆட்சிக்குட்பட்டவையாகச் செய்யாததால் அவற்றுக்குச் சட்டமியற்றுவதற்குப் பார்லிமெண்டுக்கு உரிமை இல்லை. சமஸ் தானங்களின் இணைப்பு ஒப்பந்தங்கள் மூலமாகத்தான் பார்லி மெண்டுக்கு அவற்றின்மீது அதிகாரம் கிடைக்கிறது. எனவே இந்த ஒப்பந்தங்களின்படி சமஸ்தானங்கள் நாடாளுமன்றத்துக்கு மாற் றிக் கொடுத்துள்ள விஷயங்களில் மட்டுமே அதற்கு அதிகாரம் உண்டு. பிரிவி கவுன்ஸிலின் (Privy Council) வார்த்தைகளில் சொன்னால், ஆற்றின் நீரோட்டம் அதன் உற்பத்தி ஸ்தானத்தை விட உயரமாகச் செல்ல முடியாதது போல, இணைப்பு ஒப்பந்தங் களின்படி கொடுக்கப்பட்டதைவிட அதிகமாக பார்லிமெண்டுக்கு அதிகாரம் இருக்க முடியாது. அரசியலமைப்பில் திருத்தம் செய் வதற்கு பார்லிமெண்டின் அதிகாரம் மட்டுப்பட்டதாக இருப்பது ஏன் என்பதற்குக் காரணம் இதுதான்.

இதுவரை கூறியதிலிருந்து மாற்றம் செய்வதற்குப் பார்லிமெண் டுக்கு உள்ள அதிகாரம் இணைப்பு ஒப்பந்தங்களின் மூலம் மட்டுப் படுத்தப்பட்டுள்ளது என்றும் அதற்கு மேல் எந்த அதிகாரமும்

செலுத்துவதற்குச் சமஸ்தான அதிபதிகளின் முன் அனுமதி தேவை என்பதும் தெரிகிறது. சட்டத்தின் ஷரத்துக்களின்படி வருகின்ற சட்டரீதியான விளைவு என்ற முறையில் இது அதிர்ச்சியளிப் பதாக இல்லை. ஆனால், பார்லிமெண்ட் மாற்றம் செய்ய முடி யாத விஷயங்களில் பாதுகாப்பு, வெளியுறவு ஆகியவற்றை ஒதுக்கப்பட்ட பட்டியலிலிருந்து மாற்றப்பட்ட பட்டியலுக்குக் கொண்டு வருவதும் ஒன்று என்பதையும், சமஸ்தான அதிபதிகள் இதற்கென்று குறிப்பிட்டு அதிகாரம் அளிக்கச் சம்மதித்தாலன்றி பார்லிமெண்ட்டுக்கு அந்த அதிகாரம் இல்லை என்பதையும் எண்ணிப் பாருங்கள், அப்போது இந்தக் கூட்டாட்சியின் விளைவு கள் எவ்வளவு மோசமாயிருக்கும் என்பதை உணர முடியும். கூட்டாட்சி அமைந்தால், அதிகாரம் பார்லிமெண்டிடமிருந்து சமஸ்தான அதிபதிகளின் கைகளுக்குச் சென்று விட்டதாகப் பொருளாகும். இந்தக் கூட்டாட்சி அவர்களை, கதிப்போக்கைத் தீர்மானிப்பவர்கள் ஆக்கி விடுகிறது. அவர்களுடைய சம்மதம் இல்லாமல் இந்தியா அரசியல் முன்னேற்றம் அடைய முடியாது.

இந்தக் கூட்டாட்சியின் வேறு விளைவுகளையும் கவனிக்க வேண்டும். ஒன்றை மட்டும் குறிப்பிடுகிறேன். இந்தக் கூட்டாட் சியை ஒப்புக் கொண்டால் பிரிட்டிஷ் இந்திய மக்கள் மாறுதலுக் காக நடத்தும் போராட்டம் பலவீனமடையும். இதுவரை, இந்திய மக்களுக்கும் பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கும் இடையிலான போராட்டத்தில் பார்லிமெண்ட் பலவீன நிலையில் இருந்து வரு கிறது. மாறுதல் கோருவதற்கு மக்களுக்குள்ள உரிமைகளை எதிர்க்க வேண்டும் என்ற தனது விருப்பத்தைத் தவிர பார்லி மெண்டிடம் எதுவும் இல்லை. கூட்டாட்சி ஏற்பட்ட பிறகு இந்த நிலை நிச்சயமாக மாறிவிடும். இந்திய மக்கள் பலவீன நிலையை யும் பார்லிமெண்ட் பலமான நிலையையும் அடைந்து விடுவார் கள். கூட்டாட்சி ஏற்பட்டபின் பார்லிமெண்ட் மாறுதலை அனு மதிக்கத் தான் தயாராயிருப்பதாகவும், ஆனால் அதற்குத் தனது அதிகாரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்றும் கூற முடியும். மாறு தல் கேட்பதற்கு முன் இந்தியர்கள் சமஸ்தான அதிபதிகளின் சம்மதத்தைப் பெற வேண்டும் என்று கூற முடியும்.

இந்தியர்கள் கூட்டாட்சியை ஏற்றுக் கொண்டு, அதனால் ஏற்படவுள்ள விளைவுகளையும் ஒப்புக் கொண்டுவிட்டால் இதற்கு அவர்கள் என்ன பதில் கூற முடியும்?

8

கூட்டாட்சியின் விதி ஆட்சி

இந்திய சமஸ்தானங்களை நாம் என்ன செய்வது? அடிக்கடி கேட்கப்படும் கேள்வி இது. குடியரசுக் கொள்கையில் நம்பிக்கை

கொண்ட சிலர் அவற்றை முற்றிலுமாக ஒழித்துவிட வேண்டும் என்கிறார்கள். அரசாங்கம் என்ன வடிவில் இருக்க வேண்டும் என்பது பற்றிக் கவலைப்படாதவர்கள் இந்தக் கருத்தை நிராகரிப்பார்கள். ஆனால் அவர்களும் கூட, எது மிகச் சிறப்பாகச் செயல்படுகிறதோ, அதுவே சிறப்பானது என்பதை ஏற்கத்தான் வேண்டும். இந்திய சமஸ்தானங்கள் மிகச் சிறப்பாகச் செயல்படுவதாகக் கூற முடியுமா? இதற்கு 'ஆம்' என்று உறுதியாகக் கூறக் கூடியவர்கள் யாரும் இருப்பதாக நான் நினைக்கவில்லை; எல்லா சமஸ்தானங்களுக்கும் இது பொருந்தும். சமஸ்தானங்களின் உள் நிர்வாகம், மோசமான பரிபாலனத்துக்கும், தவறான நிர்வாகத்துக்கும் மறுபெயராக இருக்கிறது. இந்தக் குற்றச்சாட்டிற்கு உட்படாத சமஸ்தானங்கள் மிகச் சிலவே.

சமஸ்தானங்களில் ஏன் இப்படி மோசமான ஆட்சியும் தவறான நிர்வாகமும் இருக்க வேண்டும் என்று மக்கள் எப்போதும் கேட்கிறார்கள். தனிநபர்களின் விருப்பப்படி ஆட்சி நடப்பதே இதற்குக் காரணம் என்பது இதற்கு வழக்கமாகக் கூறப்படும் பதில். தனிநபர் ஆட்சியை மாற்றி மக்களின் அரசாங்கம் அமைக்க வேண்டும் என்பதே எல்லா இடங்களிலும் உள்ள கோரிக்கை. இந்தக் கோரிக்கை எவ்வளவு தூரம் பலனளிக்கும் என்பது பற்றி எனக்கு மிகுந்த சந்தேகம் இருக்கிறது. பெரும்பாலான இடங்களில் மக்களின் அரசாங்கம் அமைவதனால் மட்டும் சமஸ்தான மக்களின் அவலங்களுக்குத் தீர்வு ஆகிவிடாது. சமஸ்தானங்களில் காணப்படும் கேடுகளுக்கு அவற்றின் அதிகாரிகளது தவறான நிர்வாகத்தைப் போலவே, ஆதார வளங்கள் பற்றாக்குறையும் காரணமாக உள்ளது என்று நான் நிச்சயமாகக் கருதுகிறேன். இந்திய சமஸ்தானங்களின் ஆதார வளங்கள் எவ்வளவு குறைவாக உள்ளன என்பது பலருக்குத் தெரியாது.

உங்களுக்கு இதுபற்றிச் சில விவரங்கள் கூறுகிறேன். மொத்தம் உள்ள 627 சமஸ்தானங்களில் 10 மட்டுமே ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ளவை. இந்தப் பத்து சமஸ்தானங்ளில் ஐந்தின் வருமானம் சுமார் ஒரு கோடி ரூபாய் மட்டுமே; மூன்று சமஸ்தானங்களின் வருமானம் 2 கோடி முதல் 2¼ கோடி ரூபாய் வரை உள்ளது. ஒன்றின் வருமானம் சுமார் 3¼ கோடி ரூபாய். ஒரே சமஸ்தானம் மட்டுமே சுமார் 8 கோடி ரூபாய் வருமானம் பெறுகிறது. ஒன்பது சமஸ்தானங்களின் வருமானம் ஒருகோடிக்கும் 50 லட்சத்திற்கும் இடையேயும், பன்னிரண்டின் வருமானம் 50 லட்சத்துக்கும் 25 லட்சத்திற்கும் இடையேயும் உள்ளது. முப்பது சமஸ்தானங்கள் 25 லட்சத்துக்கும் 10 லட்சத்துக்கும் இடைப்பட்ட வருமானம் பெறுகின்றன. மீதமுள்ள 566 சமஸ்தானங்களின் வருமானம் 10 லட்சம் ரூபாய்க்கும் குறைவு. ஆனால் இவை எவ்வளவு சிறியவை என்பது இதிலிருந்து தெரியாது. சில உதாரணங்கள் தரலாம். இந்த 566

சமஸ்தானங்களில் ஒன்று ரூ. 500 வருமானமும் 206 பேர் மக்கள் தொகையும் கொண்டது. மற்றொன்றின் வருமானம் ரூ. 165, மக்கள் தொகை 125; இன்னொன்றின் வருமானம் ரூ. 136, மக்கள் தொகை 239. மற்றும் ஒன்று ரூ. 128 வருமானமும், மக்கள் தொகை 147-ம் கொண்டது. இன்னொன்று ரூ. 80 வருமானமும் மக்கள் தொகை 27-ம் கொண்டது. இந்த சமஸ்தானங்கள் ஒவ்வொன்றும் சுயாட்சி பெற்றவை. ரூ. 80 வருமானமும் மக்கள் தொகை 27-ம் கொண்ட சமஸ்தானமும் இதிலடங்கும்!

இந்த சமஸ்தானங்கள் சுயாட்சி கொண்டவை என்றால், இவை ஒவ்வொன்றும் தன்னுடைய மக்களுக்கு சட்டம், ஒழுங்கு சம்மந்தப்பட்ட எல்லா சேவைகளையும், வருவாய்ப் பிரிவு, நிர்வாகம், நீதித்துறை போன்ற அனைத்தையும் அளிக்கும் பொறுப்பை ஏற்க வேண்டும். மேலும் மக்களின் நல்வாழ்வு சம்பந்தப்பட்ட கல்வி, சுகாதாரம், சாலை வசதி முதலானவற்றை வழங்க வேண்டும். பம்பாயில் உள்ள நாம் 12 கோடி ரூபாய் வருமானம் இருந்தும் நிர்வாகத்தில் நாகரிகத்துக்கு ஏற்ற ஒரு தரத்தைப் பராமரிக்க முடியவில்லை. இதேபோல அதிக வருமானம் உள்ள மற்ற மாகாணங்களிலும் இதே சிரம நிலைதான் காணப்படுகிறது. அப்படியானால் சில நூறு ரூபாய் வருமானமும் சில ஆயிரம் மக்கள் தொகையும் கொண்ட சின்னஞ்சிறு சமஸ்தானங்கள் நாகரிக மனிதனுக்கு அரசாங்கம் முழு அளவில் அளிக்க வேண்டிய எந்த சேவைகளையும் எப்படி அளிக்க முடியும்? மிகுந்த நல்லெண்ணமும், சிறந்த லட்சியமும் கொண்ட சமஸ்தான அதிபதியாக இருந்தாலும் கூட இது அறவே இயலாத காரியம்.

இந்திய சமஸ்தானங்களின் நிலப்பரப்பு முழுவதையும் சீரமைப்புச் செய்வதுதான் இதற்கு ஒரே வழி. ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பும், குறிப்பிட்ட வருமானமும் அடிப்படை அளவுகளாக வைத்துக் கொண்டு இவற்றை ஒன்றாகச் சேர்த்து ஒரு புதிய மாகாணமாக அமைக்க வேண்டும். இதில் சேர்க்கப்படும் சமஸ்தானங்களின் அதிபதிகளுக்குப் பென்ஷன் கொடுத்து நீக்கம் செய்துவிட வேண்டும். நிலப்பரப்பும் வருமானமும் போதிய அளவு இருந்து, தகுந்த அளவில் நிர்வாகத் தரத்தைப் பராமரிக்கத் திறன் உள்ளவையாகக் கருதும் சமஸ்தானங்களை மட்டுமே அப்படியே வைத்துக் கொள்ளலாம். இந்தச் சோதனையில் தேற முடியாத சமஸ்தானங்கள் போய்விட வேண்டியதே. வேறு வழி இல்லை. என்ன செய்யலாம் என்பதற்காக மட்டும் இதைக் கூற வில்லை. இதைச் செய்ய வேண்டியது நமது கடமை, புனிதமான கடமை என்று கூறுகிறேன்.

சமஸ்தான அதிபதிகள் தமது சமஸ்தானத்தில் ஆட்சி செய்வதற்கு உள்ள பரம்பரை உரிமை பற்றிச் சிலர் என்ன நினைப்பார்கள் என்பதை நான் அறிவேன். ஆனால் நான் கேட்கிறேன், எது முக்கியம், சமஸ்தான அதிபதியின் உரிமையா, மக்களின்

நல்வாழ்வா? சமஸ்தானங்களின் மிக நல்ல நண்பர்கள்கூட மக்களின் நல்வாழ்வைவிட சமஸ்தான அதிபதியின் உரிமைதான் அதிக முக்கியமானது என்று சொல்ல மாட்டார்கள். இரண்டுக்கும் இடையே போராட்டம் வந்தால் எது விட்டுக் கொடுக்க வேண்டும்? இங்கேயும், சமஸ்தானங்களின் மிக நல்ல நண்பர்கள்கூட சமஸ்தான அதிபதிகளின் உரிமையைப் பாதுகாப்பதற்காக மக்களின் நல்வாழ்வைப் பலியிட வேண்டும் என்று கூறமாட்டார்கள்.

இந்திய சமஸ்தானங்களை சீரமைப்புச் செய்வது அரசியல் பிரச்சினை அல்ல. இது முற்றிலும் நிர்வாகம் சம்பந்தப்பட்ட பிரச்சினை என்பதே என் கருத்து. இது தவிர்க்க முடியாத பிரச்சினையும் கூட. இதை எதிர்கொண்டு சமாளிக்காமலிருப்பது சமஸ்தானங்களின் கோடிக்கணக்கான மக்களைத் துன்பங்கள் நிறைந்த வாழ்க்கையில் பாதுகாப்பற்ற நிலையில் உழன்று கொண்டிருக்க விடுவதாகும். நான் சொல்லும் வழி ஒன்றும் புரட்சிகரமானது அல்ல. ஒரு சமஸ்தான அதிபதிக்கு பென்ஷன் கொடுத்து நீக்கிவிட்டு அவரது சமஸ்தானப் பகுதியை எடுத்துக் கொள்வது முற்றிலும் சட்டப்படியான செயலே. நிலம் கையகப்படுத்தல் சட்டத்தின் கீழ் பொதுக் காரியங்களுக்காக தனியார் உரிமைகளையும் உடைமைகளையும் அரசாங்கம் எடுத்துக் கொள்வது நமக்குத் தெரிந்ததே.

துரதிர்ஷ்டவசமாக, இந்திய சமஸ்தானங்களின் பிரச்சினையை இதுவரை இந்தக் கண்ணோட்டத்தில் பார்த்துச் சமாளிக்கவில்லை. உங்கள் முன் நான் வைக்க விரும்பும் கேள்வி—மிக முக்கியமான கேள்வி இதுதான்: ''கூட்டாட்சி அமைக்கப்பட்ட பிறகு இந்தப் பிரச்சினையை இந்தவிதமாகத்தான் தீர்க்க முடியுமா?'' முடியாது என்று நான் சொல்லுகிறேன். ஏன் என்று நீங்கள் கேட்கலாம். எப்படி இந்த முடிவு வருகிறது?

கூட்டாட்சியில் சேருவது சம்பந்தமாக மாகாணங்களும் சமஸ்தானங்களும் வெவ்வேறு நிலைகளில் உள்ளன என்று நான் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறேன். மாகாணங்களுக்கு வேறு வழி கிடையாது. அவை கூட்டாட்சியில் இணைவதற்குச் சம்மதித்துத் தான் ஆக வேண்டும். ஆனால் சமஸ்தானங்கள் தங்கள் விருப்பப்படிச் செய்யலாம். கூட்டாட்சியில் சேரலாம் அல்லது சேர மறுக்கலாம். இது மாகாணங்கள், சமஸ்தானங்கள் ஆகியவற்றின் கண்ணோட்டத்திலிருந்து காணும் நிலை. கூட்டாட்சியின் கண்ணோட்டத்திலிருந்து காணும் நிலை என்ன? சமஸ்தானங்களைச் சேர்த்துக் கொள்வதில் கூட்டாட்சி தன் விருப்பப்படி செய்ய முடியுமா? ஒரு சமஸ்தானத்தை சேர்த்துக் கொள்ள முடியாது என்று கூட்டாட்சி மறுக்க முடியுமா? முடியாது. அவ்வாறு மறுப்பதற்கு கூட்டாட்சிக்கு உரிமை இல்லை. கூட்டாட்சியில் சேருவதற்கு சமஸ்தானம் உரிமை பெற்றிருக்கிறது. ஆனால் சேர்த்துக் கொள்ள மறுப்பதற்கு, முதல் 20 ஆண்டுகளுக்காவது, கூட்டாட்சிக்கு உரிமை இல்லை. இதுதான் நிலைமை. இனி, கூட்டாட்சிக்குள் ஒரு

சமஸ்தானத்தைச் சேர்த்துக் கொள்வது என்பதன் பொருள் என்ன? அவ்வாறு சேர்ப்பது அந்த சமஸ்தானத்தின் அரசுரிமை அந்தஸ்தை அங்கீகரிப்பதாகும் என்றால் அதன் அழிக்க முடியாத தன்மையை ஒப்புக் கொள்வதாகும். அதாவது அதன் பிரதேச ஒருமைப்பாட்டை அங்கீகரித்து, உள்நிர்வாகம் சம்பந்தமாக அதன் உரிமைக்கு உத்தரவாதம் அளிப்பதாகும். மக்கள் தொகை 27, வருமானம் ரூ. 80 உள்ள சமஸ்தானத்துக்குக் கூட இது பொருந்தும். ஒரு சமஸ்தானத்தைக் கூட்டாட்சியில் சேர்த்துக் கொள்வதற்கு இவ்வாறு பொருள் இருப்பதனால், கூட்டாட்சி அமைக்கப் பட்ட பிறகு இந்திய சமஸ்தானங்களைச் சீரமைப்பது முடியாது என்று நான் கூறுவது முற்றிலும் நியாயமானதே. இந்திய சமஸ் தானங்களின் மக்கள் என்றென்றும் தவறான ஆட்சியிலும் சீர் கெட்ட நிர்வாகத்திலும் உழலும் கொடுமைக்கு உள்ளாவார்கள்.

பிரிட்டிஷ் இந்தியா இந்த விஷயத்தில் இப்போது ஏதேனும் செய்ய முடியுமா? எதுவும் செய்யும் நிலையில் இல்லை என்பது என் கருத்து. பிரிட்டிஷ் இந்தியா தனக்கு பொறுப்புள்ள ஆட்சி யைப் பெற முடிந்திருந்தால் எந்த சமஸ்தானத்தை, என்ன நிபந் தனையின் பேரில் சேர்ப்பது என்று தன்னுடைய விருப்பப்படிக் கூற முடியும். சமஸ்தானங்களைப் போதிய அளவு பெரிய பரப் பளவு கொண்டவையாகச் சீரமைப்பதை ஒரு நிபந்தனையாக வைக்க முடியும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக பிரிட்டிஷ் இந்தியா வுக்குப் பொறுப்புள்ள அரசாங்கம் இல்லை. உண்மையில், மத்தி யில் பொறுப்புள்ள அரசாங்கத்தை அமைப்பதற்கு அதன் உரிமை மறுக்கப்பட்டு, சமஸ்தானங்கள் சேருகின்றனவா என்பதைப் பொறுத்து அமையும் விஷயமாக வைக்கப்பட்டுள்ளது. ''சமஸ் தானங்கள் இல்லையானால், பொறுப்புள்ள அரசாங்கமும் இல்லை'' என்பது இப்போது பிரிட்டிஷ் இந்தியாவின் கதி ஆகி விட்டது. நிலைமை இப்படி இருப்பதனால் பிரிட்டிஷ் இந்தியா வில் பொறுப்புள்ள அரசாங்கம் இருந்தால் சமஸ்தானங்களுக்கு எப்படி நிபந்தனை விதிக்க முடியுமோ அப்படி இப்போது விதிக்க முடியாது. அதனால்தான் பிரிட்டிஷ் இந்திய மக்கள் பிரிட்டிஷ் இந்தியாவை மட்டும் கொண்ட கூட்டாட்சியையும், பொறுப்புள்ள அரசாங்கத்தையும் கோர வேண்டும் என்று நான் எப்போதும் கூறி வந்திருக்கிறேன். இதை அடைந்துவிட்டால், சுதந்திரத்தையும் நல் லாட்சியையும் அடிப்படையாகக் கொண்டு அகில இந்தியக் கூட் டாட்சியை அமைப்பது சாத்தியமாகி விடும். ஆனால் கூட்டாட்சி அமலுக்கு வந்துவிட்டால் இந்த வாய்ப்பு இல்லாமல் போகும்.

கூட்டாட்சித் திட்டத்தின் சில குறைபாடுகளை நான் முன்பே குறிப்பிட்டேன். இப்போது நான் சுட்டிக்காட்டியிருப்பது பெரும் குறைபாடு மட்டும் அல்ல. கூட்டாட்சியில் பொதிந்துள்ள விதியின் ஆட்சி அது. சமஸ்தானங்களின் மக்களைப் பொறுத்தமட்டில் அது விதியின் கட்டளையாகிறது. கூட்டாட்சி அமலுக்கு வந்துவிட்டால்

அவர்கள் பின்பு ஒருபோதும் தப்பித்துக் கொள்ள முடியாத விதி அது.

சமஸ்தானங்களின் பிரச்சினை தீர்வு காணக்கூடியதே என்று நான் நம்புகிறேன். சமஸ்தானங்களின் மேலதிகார ஆட்சி விரும்பினால் அதைத் தீர்க்க முடியும். நான் கூறியுள்ள வழியில் அல்லது வேறு ஏதேனும் வழியில் மக்களின் நல்வாழ்வுக்கு இணக்கமான முறையில் தீர்வுகாண முடியும். மேலதிகாரம் என்பது இந்து மதத்தில் உள்ள திரிமூர்த்தி போன்றது. சமஸ்தானங்களை அது உருவாக்கியதால் பிர்மாவாக உள்ளது. அவற்றை அதுவே பாதுகாப்பதனால் விஷ்ணுவாக இருக்கிறது. அவற்றை அழிக்கும் சக்தி பெற்றிருப்பதால் சிவன் ஆகிறது. மேலதிகாரம் சமஸ்தானங்கள் விஷயத்தில் இந்த எல்லாக் காரியங்களையும் செய்திருக்கிறது. ஒரு சமயத்தில் அது சிவனாகச் செயல்பட்டிருக்கிறது. இப்போது விஷ்ணுவாகச் செயல்பட்டு வருகிறது. சமஸ்தானங்கள் சம்பந்தமாக அது விஷ்ணு பாத்திரத்தை ஏற்பது மக்களின் நன்மையைப் பொறுத்தமட்டில் மிகக் கொடுமையான செயலாகும். பிரிட்டிஷ் இந்தியா இதற்கு உடன்பட்டுத் துணை போக வேண்டுமா என்பதை நீங்கள் சிந்திக்க வேண்டும்.

9

சமஸ்தானங்கள் இல்லாத கூட்டாட்சி

கூட்டாட்சிக்கு ஆதரவாக வேறொரு கண்ணோட்டத்திலிருந்து வாதம் கூறப்படுகிறது. இந்த வாதத்தை இப்போது ஆராய்வோம்.

அரசியலமைப்புச் சட்டம் சுயாட்சியுள்ள மாகாணங்களை உருவாக்குகிறது என்று வாதிக்கப்படுகிறது. மாகாணங்களின் சுயாட்சி என்றால் சுதந்திரமாகும். இது பிரிட்டிஷ் இந்தியாவின் ஒற்றுமையைச் சீர்குலைப்பதாகும். இது நேராமல் தடுக்க வேண்டும். மாகாணங்கள் ஒன்று சேர்ந்து இருக்கச் செய்வதற்கும் அதன் மூலம் சென்ற நூறு ஆண்டுகளில் பிரிட்டிஷ் நிர்வாகத்தின் விளைவாக உருவாக்கப்பட்டுள்ள ஒற்றுமையைப் பாதுகாப்பதற்கும் பிணைப்புச் சக்தி ஒன்று அவசியமாகும் என்று கூறப்படுகிறது.

இந்த வாதத்தின் பொருள், சுயாட்சியுள்ள மாகாணங்கள் அமைவதானால் மத்திய அரசாங்கம் ஒன்றை அமைப்பது அவசியமாகிறது என்பதாக இருக்குமானால் இது முற்றிலும் சரியான வாதமே. இதை எல்லோரும் ஏற்பார்கள் என்று நான் நிச்சயமாகக் கருதுகிறேன். வட்டமேஜை மாநாடுகள் எல்லாவற்றிலும், மத்திய அரசாங்கம் ஒன்று அமைப்பதை எதிர்த்த ஒரே பிரதிநிதி காலஞ்சென்ற ஸர் முகமது இக்பால் மட்டுமே. மற்ற எல்லாப் பிரதிநிதிகளும் சாதி, மத வேறுபாடு இல்லாமல் அவருடைய கருத்துக்கு மாறுபட்டிருந்தார்கள். சுயாட்சியுள்ள மாகாணங்கள்

அமைக்கப்படும்போது மத்திய அரசாங்கம் ஒன்றை அமைப்பது முற்றிலும் அவசியமானது என்றும், அது இல்லையென்றால், சுயாட்சி என்பது அராஜகமாக முடியும் என்றும் அவர்கள் வலியுறுத்தினார்கள்.

ஆனால் இந்த வாதம் தன்னுடைய நியாயமான வரம்பை மீறிச் செல்கிறது. பிரிட்டிஷ் இந்தியாவுக்கு ஒரு மத்திய அரசாங்கம் தேவை என்பதை நியாயப்படுத்தும் வாதம், இந்தியா முழுவதற்கும் ஒரு மத்திய அரசாங்கம் வேண்டும் என்று கூறுவதற்குப் பயன் படுத்தப்படுகிறது. இப்போது நீங்கள் பரிசீலிக்க வேண்டிய கேள்வி இதுதான்: பிரிட்டிஷ் இந்தியாவில் சுயாட்சியுள்ள மாகாணங்கள் அமைக்கப்படுவதனால் இந்திய சமஸ்தானங்கள் உள்ளிட்ட இந்தியா முழுவதற்கும் மத்திய அரசாங்கம் ஒன்றை அமைப்பது சரியாகுமா? இதற்கு அவசியமில்லை என்பதே என்னுடைய கருத்து.

பிரிட்டிஷ் இந்தியாவில் சுயாட்சியுள்ள மாகாணங்கள் அமைக்கப்படும் போது இரண்டு விஷயங்கள் அவசியமாகும்: (1) பிரிட்டிஷ் இந்தியாவுக்கு ஒரு மத்திய அரசாங்கம் இருக்க வேண்டும், (2) இந்த மத்திய அரசாங்கம் ஒற்றை ஆட்சி அரசாங்கமாக இல்லாமல் கூட்டாட்சி அரசாங்கமாக இருக்க வேண்டும். கூட்டாட்சி என்பதன் சாராம்சம், சட்டமியற்றும் அதிகாரத்தையும் நிர்வாக அதிகாரத்தையும் மத்திய அரசாங்கத்துக்கும் கூட்டாட்சியின் தனி உறுப்புகளுக்கும் இடையே சட்டத்தின் மூலம் பகிர்ந்து கொடுப்பதாகும். உறுப்புகளின் அதிகாரங்களும் மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்களும் வரையறை செய்யப்பட்டு எல்லைகள் நிர்ணயிக்கப்படுகின்றன. ஒன்று, மற்றதன் அதிகார வரம்புக்குள் நுழையக் கூடாது. மாகாணங்களின் சுயாட்சி என்றால் அவற்றின் அதிகாரங்கள் வரையறை செய்யப்பட்டு அவற்றிடம் ஒப்படைக்கப் படுகின்றன என்று பொருள். மாகாண சுயாட்சி உண்மையானதாக இருக்க வேண்டுமானால் மத்திய அரசாங்கத்தின் அதிகாரம் வரம்புக்குட்பட்டதாக இருக்க வேண்டும். இல்லையென்றால் அது மாகாணங்களின் அதிகார வரம்பினுள் அத்துமீறி நுழையக் கூடிய நிலையில் இருக்கும். சுருக்கமாகச் சொன்னால் சுயாட்சி என்று கூறும்போது அதிகாரங்கள் சட்டப்படி வரையறை செய்யப்பட்டு எல்லை குறிக்கப்படுகின்றது. இரண்டு அரசியல் கூட்டமைப்புகளுக்கிடையே அதிகாரங்கள் இவ்வாறு வரையறை செய்யப்பட்டு எல்லைகள் குறிக்கப்படும்போது அங்கே கூட்டாட்சி ஒன்று கட்டாயம் இருக்க வேண்டும். மாகாண சுயாட்சி காரணமாகத் தேவைப் படுவதெல்லாம், பிரிட்டிஷ் இந்தியாவுக்கான மத்திய அரசாங்கம் கூட்டாட்சி வடிவில் இருக்க வேண்டும் என்பதுதான் என்று நான் கூறியதன் காரணத்தை இப்போது நீங்கள் புரிந்து கொள்வீர்கள். அகில இந்திய கூட்டாட்சிக்கு அவசியம் இல்லை. சமஸ்தானங்களையும் இதில் கொண்டுவர வேண்டிய தேவை என்ன என்பதற்கு

இன்னமும் பதில் கிடைக்கவில்லை. பிரிட்டிஷ் இந்திய கூட்டாட்சி அல்லாமல் அகில இந்திய கூட்டாட்சி வேண்டும் என்பவர்கள் தான் இதற்கு பதில் தரவேண்டும்.

நான் கூறியபடி பிரிட்டிஷ் இந்தியாவின் மத்திய அரசாங்கம் கூட்டாட்சி வடிவில் இருக்க வேண்டும் என்பதுதான் அவசியம். இதை அரசியலமைப்புச் சட்டம் அங்கீகரித்திருக்கிறது.

1935-ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டம் இரண்டு வெவ்வேறு கூட்டாட்சிகளை அமைக்கிறது என்பதைப் பலர் கவனிக்கவில்லையென்று தோன்றுகிறது. ஒன்று, பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களின் கூட்டாட்சி, மற்றது பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களையும் இந்திய சமஸ்தானங்களையும் கொண்ட கூட்டாட்சி, இவ்வளவு முக்கியமான ஒரு அம்சத்தை இத்தனை பேர் கவனிக்காமல் விட்டிருப்பது ஆச்சரியமே. இந்திய அரசாங் கச் சட்டம் இரண்டு கூட்டாட்சிகளை அமைக்கிறது என்பதில் கருத்து வேறுபாட்டுக்கு இடமே இல்லை. இதில் சந்தேகம் இருப் பவர்கள் பகுதி III பகுதி XIII, ஆகியவற்றை ஒன்றாகவும், பகுதி II, பகுதி III ஆகியவற்றை ஒன்றாகவும் வாசிக்க வேண்டும். பகுதி II, பகுதி III ஆகியவை அகில இந்தியக் கூட்டாட்சி ஒன்று இருப்பதைக் காட்டுகின்றன. அந்தக் கூட்டாட்சியின் அமைப்பு முறையை அவை கூறுகின்றன. பகுதி II பகுதி XIII ஆகியவை சமஸ்தானங்கள் சேராத பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களை மட்டும் கொண்ட கூட்டாட்சி இருப்பதைக் காட்டுகின்றன; இந்தக் கூட்டாட்சியின் அமைப்பு முறையை இவை கூறுகின்றன. பகுதி XIII மாறுதல் காலத்துக்கான ஏற்பாடுகள் பற்றியது என்றாலும் அதில் கூறப்பட்டுள்ள பிரிட்டிஷ் இந்தியத் திட்டம் கூட்டாட்சி அல்ல என்று ஆகி விடாது. ஏனென்றால் சட்டம் என்பது ஒரு குறிப்பிட்ட காலத்துக்குரியதானாலும், எல்லாக் காலத்துக்கும் உரியதானாலும், சட்டமே.

இந்தச் சட்டம் பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களின் கூட்டாட்சி ஒன்றையும், அகில இந்தியக் கூட்டாட்சி ஒன்றையும் அமைக்கிறது என்பதை மறுக்க முடியாது. இந்த இரண்டு கூட்டாட்சிகளுக்கும் இடையே என்ன வித்தியாசம்? கூட்டாட்சியின் சட்டமியற்றும் அதிகாரத்தில் வித்தியாசம் இருக்கிறதா? வித்தியாசம் இல்லை. பிரிட்டிஷ் இந்தியக் கூட்டாட்சியாக இருந்தாலும், அகில இந்தியக் கூட்டாட்சியாக இருந்தாலும் கூட்டாட்சி சட்டமியற்றக் கூடிய விஷயங்களின் பட்டியல் ஒன்றுதான். அதேபோல, கூட்டாட்சி யும் மாநிலங்களும் சட்டமியற்றக்கூடிய பொது விஷயங்கள் பட்டியலும் ஒன்றுதான்.

நிதி அதிகாரங்களில் ஏதேனும் வித்தியாசம் இருக்கிறதா? இங்கேயும் வித்தியாசம் ஏதும் இல்லை.

அகில இந்தியக் கூட்டாட்சியானாலும், பிரிட்டிஷ் இந்தியக் கூட்டாட்சியுானாலும் வரிவிதிக்கும் அதிகாரம் ஒரேமாதிரிதான் இருக்கும்.

கூட்டாட்சியின் நீதித்துறை அமைப்பில் ஏதாவது மாற்றம் இருக்கிறதா? ஒன்றும் இல்லை. அகில இந்தியக் கூட்டாட்சி யானாலும் பிரிட்டிஷ் இந்தியக் கூட்டாட்சியானலும், கூட்டாட்சி நீதிமன்றம் அவசியம்தான்.

அப்படியானால் இந்த இரண்டு கூட்டாட்சிகளுக்கும் இடையே என்னதான் வித்தியாசம் இருக்கிறது? இதைக் கண்டுபிடிப்பதற்கு 313-ஆவது பிரிவையும் 8-ஆவது பிரிவையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கும்போது பிரிட்டிஷ் இந்தியக் கூட்டாட்சியானால் அதன் நிர்வாக அதிகாரம் நிர்வாக சபையில் அமர்ந்த கவர்னர் ஜெனரலிடம் இருக்கிறது என்பதையும் அகில இந்தியக் கூட்டாட்சியானால் நிர்வாக அதிகாரம், மாற்றப்பட்ட விஷயங்களில் சட்டமன்றத்துக்குப் பொறுப்புள்ள அமைச்சர் களின் ஆலோசனையின்படி செயல்படும் கவர்னர் ஜெனரலிடம் இருக்கிறது என்பதையும் காணலாம். வேறுவிதமாகக் கூறினால், பிரிட்டிஷ் இந்தியக் கூட்டாட்சி மட்டும் இருந்து அகில இந்தியக் கூட்டாட்சி இல்லையென்றால் மத்திய அரசாங்கத்தில் பொறுப் பான நிர்வாகம் இல்லை.

இதன் பொருள் பிரிட்டிஷ் இந்தியாவுக்குப் பொறுப்பாட்சி அளிப்பதற்குக் கூட்டாட்சியில் சமஸ்தானங்கள் சேருவது முன் நிபந்தனையாக வைக்கப்படுகிறது என்பதே. சமஸ்தானங்கள் சேரு வது ஏன் இவ்வளவு அவசியமாகிறது என்று நீங்கள் கேட்கலாம்.

எல்லாக் கூட்டாட்சிகளும் அவற்றின் உறுப்புகளின் ஒருமைப் பாட்டுக்கும் பாதுகாப்புக்கும் வெளியிலிருந்து ஏதேனும் அபாயம் இருப்பதன் காரணமாகவே உருவாகியுள்ளன. வட அமெரிக்கா வின் மாநிலங்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தங்களைத் தனது ஆட்சிக்கு உட்படுத்திவிடும் என்ற அச்சத்தின் காரணமாகவே கூட் டாட்சியாக இணைந்தன. கனடாவின் மாகாணங்கள் அமெரிக்க ஐக்கிய மாநிலங்கள் தங்கள் மீது படையெடுக்கலாம் அல்லது தங்களுடன் ஒன்று சேர்த்துக் கொள்ளலாம் என்ற அபாயம் காரண மாகவே கூட்டாட்சியாக உருவாயின. ஆஸ்திரேலியாவில் இருந்த குடியேற்றப் பகுதிகள், ஜப்பானின் படையெடுப்பு அபாயம் காரணமாகக் கூட்டாட்சியாயின. இந்தியக் கூட்டாட்சி அமை வதற்குக் காரணமாக இம்மாதிரியான சூழ்நிலை எதுவும் இல்லை என்பது வெளிப்படை. பிரிட்டிஷ் இந்தியா மீதும் இந்திய சமஸ் தானங்கள் மீதும் பாய்வதற்கு இந்திய எல்லையில் புதிதாக எந்த நாடும் காத்துக் கொண்டிருக்கவில்லை. பிரிட்டிஷ் இந்தியாவுக்கும் இந்திய சமஸ்தானங்களுக்கும் இடையே சமாதானத்தைப் பாதுகாப் பதற்கும் கூட்டாட்சியின் அவசியம் ஏற்படவில்லை. பிரிட்டிஷ் இந்தியா பிரிட்டிஷ் மன்னரின் இறையாண்மையின் கீழும், இந்திய சமஸ்தானங்கள் அவரது மேலதிகாரத்தின் கீழும் உள்ளன என்ப தும் முக்கிய வித்தியாசம் அல்ல. வெளிஉறவுகள் விஷயத்தில்—

போர், அமைதி என்பவை உட்பட—இரண்டுமே பிரிட்டிஷ் மன்னர் என்ற ஒரே அதிகாரத்தின் கீழ் உள்ளவையே. இதனால் தான் அவற்றினிடையே அமைதி நிலவுகிறது. இவை ஒன்றுடன் ஒன்று போரில் ஈடுபடமாட்டா, ஈடுபட முடியாது என்பதற்கும் இதுதான் காரணம். வெளிநாட்டு ஆக்கிரமிப்பைத் தடுப்பதோ, உள்நாட்டு அமைதியைப் பாதுகாப்பதோ, அகில இந்தியக் கூட்டாட்சி அமைவதன் நோக்கமாக இருக்க முடியாது. அப்படி யானால் கூட்டாட்சியில் சேரும்படி சமஸ்தானங்களை அழைப் பதற்கு என்ன காரணம்? மத்தியில் பொறுப்பாட்சி அளிப்பதற்கு இது முன் நிபந்தனையாக வைக்கப்படுவது ஏன்? பச்சையாகச் சொல்வதென்றால், பிரிட்டனின் ஏகாதிபத்திய நலன்களைப் பாதுகாப்பதற்கும், பிரிட்டிஷ் இந்தியாவில் உயர்ந்தெழுந்து வரும் ஜனநாயக அலையை அடக்குவதற்கும் சமஸ்தான அதிபதிகளின் ஆதரவைப் பயன்படுத்திக் கொள்வதே இதன் நோக்கம். வேறு ஏதாவது விளக்கம் இருக்க முடியுமானால் அதைக் கூற விரும்பு வேன். ஆனால் அப்படி ஒன்றும் இல்லை. பிரிட்டிஷ் ஏகாதிபத்தி யத்தின் நலன்களைப் பாதுகாப்பதற்காகவே சமஸ்தான அதிபதி கள் கூட்டாட்சியில் சேர அழைக்கப்படுகிறார்கள் என்பதில் கேள்விக்கு இடமேயில்லை. இந்தியாவுக்கான செக்ரட்டரி ஆஃப் ஸ்டேட் (இந்திய விவகாரங்களுக்கான அமைச்சர்) பார்லிமெண் டில் இந்திய அரசாங்கச் சட்டத்தின் மீதான விவாதத்தில் பேசுகை யில் இதைத் தெளிவாகவே கூறினார். ‘‘இந்திய மத்திய அரசாங் கத்தில், ஸ்திரத்தன்மையைக் காக்க உதவுவதும், ஏகாதிபத்தியத் துடன் ஒட்டுதல் உணர்வு கொண்டதுமான ஒரு சக்தியாக சமஸ் தான மன்னர்கள் சேருவதை நாம் அனைவரும் வரவேற்க வேண் டும்’’ என்று அவர் கூறினார். பிரிட்டிஷ் இந்தியாவில் ஜனநாய கத்தை ஒடுக்குவது நோக்கமாக இல்லாமற் போனாலும், கூட்டாட்சி யில் சமஸ்தான அதிபதிகள் சேருவதன் விளைவு அதுவாகத்தான் இருக்கும்.

சமஸ்தானங்கள் கூட்டாட்சியில் சேருவதற்கு எவ்வளவு பெரிய விலை கொடுக்கப்பட்டிருக்கிறது! முன்பு நான் சொன்னதை இங்கே மீண்டும் கூற விரும்பவில்லை. சமஸ்தான அதிபதிகளுக் குச் சாதகமாக பிரதிநிதித்துவம், வரிவிதிப்பு, நிர்வாகம், சட்ட மியற்றல் முதலானவற்றில் என்னென்ன சலுகைகள் வழங்கப்பட் டுள்ளன என்று நான் கூறியதை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். கூட்டாட்சியில் சேரத் தூண்டுவதற்காக சமஸ்தான மன்னர் களுக்கு பிரிட்டிஷ் இந்தியா என்னென்ன நன்மைகளை வழங்கி யிருக்கிறது, என்னென்ன உரிமைகளை விட்டுக் கொடுத்திருக் கிறது, அவர்களுக்கு எத்தகைய சட்டப் பாதுகாப்புகள் அளிக்கப் பட்டுள்ளன என்பது தெளிவாகும். இதற்கெல்லாம் மாற்றாக பிரிட்டிஷ் இந்தியாவுக்கு என்ன கிடைத்தது?

அரசியலமைப்புச் சட்டம் முழுமையான பொறுப்புள்ள அரசாங்கத்தைத் தந்திருந்தால், பிரிட்டிஷ் இந்தியா இவ்வாறு

கொடுத்த விலைக்கு ஓரளவு ஈடுசெய்வதாக இருக்கும். ஆனால் பிரிட்டிஷ் இந்தியாவுக்கு அப்படிச் சொல்லத் தகுதியுள்ள எதுவும் கிடைக்கவில்லை. பிரிட்டிஷ் இந்தியாவுக்குக் கிடைத்திருப்பது பொறுப்பாட்சியை இரண்டு பாதியாகப் பிரித்த ஒரு பாதியாகும். அந்தப் பாதியையும் பல்வேறு நிபந்தைனகளும் கட்டுப்பாடுகளும் வெட்டிச் சிதைத்திருக்கின்றன. பிரிட்டிஷ் இந்தியாவுக்கு மத்திய அரசாங்கத்தில் தனது தியாகங்களுக்கு ஈடுசெய்யும் அளவில் பொறுப்பாட்சி கிடைக்கவில்லை என்பது மட்டுமின்றி, தனது சொந்த முறையில், சமஸ்தான அதிபதிகளைச் சாராமல் டொமினியன் அந்தஸ்து கோரும் உரிமையையும் இழந்துவிட்டது. அகில இந்தியக் கூட்டாட்சி என்ற அமைப்பினால் பிரிட்டிஷ் இந்தியா எவ்வளவு இழப்புக்கு உள்ளாகியிருக்கிறது, இன்னும் எவ்வளவு இழப்புகளை ஏற்க வேண்டியிருக்கும் என்பதைப் பலர் அறிந்து கொள்ளவில்லை. புதிய அரசியலமைப்புச் சட்டம் பிரிட்டிஷ் இந்திய மக்களின் போராட்டத்தின் பலனாக வந்திருக்கிறது. பிரிட்டிஷ் இந்திய மக்களின் கிளர்ச்சியும் அவர்கள் ஏற்ற இன்னல்களும் தான் இந்த அரசியலமைப்புச் சட்டத்தைக் கொண்டுவரும் கட்டாயத்தை உருவாக்கின. பிரிட்டிஷ் இந்திய மக்கள் தங்களுக்கு என்ன உரிமை வேண்டும் என்று கோரினார்கள்? நான் ஏற்கனவே கூறியது போல, அவர்களது முதல் கோரிக்கை பிரிட்டிஷ் இந்தியாவில் நல்ல அரசாங்கம் வேண்டும் என்பது. அடுத்து அவர்கள் சுயாட்சி, அதாவது, பிரிட்டிஷ் இந்தியாவுக்கு, பொறுப்பான அரசாங்கம் வேண்டும் என்று கோரினார்கள். கடைசியாக அவர்கள் பிரிட்டிஷ் இந்தியாவுக்கு டொமினியன் அந்தஸ்து கோரினார்கள். இந்தக் கோரிக்கைகள் ஒவ்வொன்றையும் பிரிட்டிஷ் பார்லிமெண்ட் ஏற்றுக் கொண்டது. 1917-ல் பிரிட்டிஷ் பார்லிமெண்ட் பொறுப்பான அரசாங்கம் சம்பந்தப்பட்ட கோரிக்கையை ஏற்றது. 1929-இல் ஆங்கில நாடு டொமினியன் அந்தஸ்து என்ற குறிக்கோளை ஒப்புக் கொண்டது. ஒவ்வொரு முறையும் இந்தக் கோரிக்கை வைக்கப்பட்டபோது, பிரிட்டிஷ் இந்தியாவின் மக்களின் பெயராலேயே வைக்கப்பட்டது. ஒவ்வொரு முறையும் பிரிட்டிஷ் இந்திய மக்கள் சம்பந்தமாகவே அது ஏற்கப்பட்டது. இப்போது கூட்டாட்சியின் விளைவாக பிரிட்டிஷ் இந்தியாவின் நிலை எப்படி இருக்கப்போகிறது? கூட்டாட்சித் திட்டத்தில் சமஸ்தான அதிபதிகள் சேர்ந்தாலன்றி பிரிட்டிஷ் இந்தியாவுக்கு எவ்விதமான பொறுப்பாட்சியும் கிடைக்காது என்பதே இப்போது ஏற்பட்டுள்ள நிலை. அதாவது, பிரிட்டிஷ் இந்தியா தனக்கென, தனது சொந்தப் பெயரால், சமஸ்தான அதிபதிகளைச் சாராமல், பொறுப்பாட்சி கோரும் உரிமையை இழந்து விட்டது. இந்த உரிமை ஒரு கோரிக்கையாக வைக்கப்பட்டு, அது ஒப்புக் கொள்ளப்பட்டதால் கிடைத்த உரிமை. எனவே அது உறுதி செய்யப்பட்ட ஓர் உரிமை. பிரிட்டிஷ் இந்தியா தனது குறிக்கோளை அடைவதற்குச் சமஸ்தானங்களின் விருப்பங்களைச் சார்ந்து நிற்கும் நிலையில் வைக்கப்பட்டதால் இந்த உரிமை இழக்கப்பட்டது. கூட்டாட்சியின் இரண்டு

பகுதிகளில் பிரிட்டிஷ் இந்தியா முற்போக்கான பகுதியாகும்; சமஸ்தானங்கள் முற்போக்கு இல்லாத பகுதியாகும். முற்போக் கான பகுதி, முற்போக்கு இல்லாத பகுதி என்ற ரதத்தில் கட்டப் பட்டு அதனுடைய பாதையும் வீதியும் அதைச் சார்ந்து இருக்கும் படி வைக்கப்பட்டிருப்பதுதான் கூட்டாட்சியின் மிகவும் சோக மான அம்சமாகும்.

இந்தச் சோகமான நிலை ஏற்பட்டதற்கு உங்களுடைய சொந்த தேசியத் தலைவர்களைத்தான் நீங்கள் பழி கூற வேண்டும். என்னுடைய அதிர்ஷ்டம் நான் உங்களுடைய தேசியத் தலைவர் களில் ஒருவன் அல்ல. நான் அடைந்துள்ள மிக உயர்ந்த நிலை தீண்டாதாரின் ஒரு தலைவர் என்பதே. இந்த நிலைகூட எனக்கு மறுக்கப்படுவதைக் காண்கிறேன். மகாத்மா காந்தியின் இடது கரமான தக்கர் பாபா (Thakkar-Bapa) — அவரை இடது கரம் என்பதற்குக் காரணம், வலதுகரமாக வல்லப்பாய் பட்டேல் இருப்பதுதான் — நான் மஹார்களுக்கு மட்டும்தான் தலைவர் என்று மிகச் சமீப நாட்களில் கூறினார். பம்பாய் மாகாணத்தின் தீண்டாதாரின் தலைவர் என்றுகூட அவர் என்னை ஒப்புக் கொள்ளவில்லை. தக்கர் பாபா இவ்வாறு கூறியதற்குக் காரணம் துவேஷமா அல்லது உண்மையிடம் கொண்ட அன்பா என்பது குறித்து நான் கவலைப்படவில்லை; தேசிய தலைவராவது எனது வாழ்க்கைக் குறிக்கோளும் அல்ல. மாறாக, உங்களுடைய தேசியத் தலைவர்களால் இந்த நாட்டுக்கு எவ்வளவு பெரிய கேடு நேர்ந்துள்ளது என்பதைப் பார்க்கும்போது அந்தப் பெருமைமிக்க கூட்டத்தில் சேர்ந்தவனாக நான் கருதப்படாததை அறிய, பெரும் நிம்மதியாக இருக்கிறது. உங்கள் தேசியத் தலைவர்களில் சிலர் அரசியலமைப்புச் சட்டமியற்றும் பணிக்குச் சிறிதும் தயார் செய்து கொள்ளவில்லை. பல்வேறு அரசியலமைப்புச் சட்டங்களைப் பார்த்து ஒப்பாய்வு செய்து கொள்ளாமல் அவர்கள் வட்டமேஜை மாநாட்டுக்குச் சென்றார்கள். தங்கள் முன் பிரச்சினைகள் வைக்கப் பட்ட போது அவர்கள் தீர்வு எதையும் யோசனையாகக் கூற முடிய வில்லை. இந்தப் பிரச்சினையைக் கையாளும் திறன் பெற்றிருந்த மற்றவர்கள் கூட்டாட்சி என்ற அடங்காத ஆர்வம் கொண்ட சிறு குழந்தைகளைப் போலிருந்தார்கள். இந்த ஆர்வத்தின் காரண மாக, தாங்கள் உருவாக்குவது உண்மையிலேயே கூட்டாட்சி தானா, அல்லது கூட்டாட்சி என்ற பெயரில் செய்யப்படும் மோசடியா என்பதைப் பற்றிக் கவலைப்படவில்லை. தவறான தலைமைதான் இந்த அவல நிலைக்குக் காரணம். தவறான பாதையைத் தொடராமல் திரும்பிச் சென்றுவிட முடியுமா, ஏற்கெனவே ஏற்பட்ட பின்னடைவை மாற்றி முன்னே செல்ல முடியுமா என்று தெரியவில்லை. ஆயினும் பிரிட்டிஷ் இந்தியா வின் மக்கள் தாங்கள் எதை இழந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்வது நல்லதுதான். அவர்கள் தங்களுக்கென ஒரு கூட்டாட்சியைப் பெற்றிருக்கிறார்கள். அந்தக் கூட்டாட்சி பொறுப்

புள்ளதாக இருக்க வேண்டும் என்று கேட்க அவர்களுக்கு உரிமை உண்டு.

பிரிட்டிஷ் இந்தியாவை மட்டும் கொண்ட கூட்டாட்சி விரும்பத் தக்கது என்பதற்கு மற்றொரு காரணம் இருக்கிறது. பிரிட்டிஷ் இந்தியாவையும் சமஸ்தானங்களையும் கொண்ட கூட்டாட்சி இணக்கமான முறையில் செயல்பட முடியாது. இந்த இரண்டுக்கும் இடையே மோதலை ஏற்படுத்தக் கூடிய அம்சங்கள் இரண்டு இருக்கின்றன. முதலாவது அம்சம், பிரிட்டிஷ் இந்தியாவின் பிரதிநிதிகளின் நிலைமைக்கும் சமஸ்தானங்களின் பிரதிநிதிகளின் நிலைமைக்கும் இடையில் உள்ள வித்தியாசம். பிரிட்டிஷ் இந்தியாவின் பிரதிநிதி சுதந்திரமாகச் செயல்படக் கூடியவராக இருப்பார். சமஸ்தானங்களின் பிரதிநிதி அரசியல் இலாகாவிற்குக் கட்டுப்பட்டவராக இருப்பார். கூட்டாட்சிச் சட்டமன்றத்தின் இந்த இரண்டு பிரிவு பிரதிநிதிகளும் இரண்டு வெவ்வேறு ஆதாரங்களிலிருந்து கட்டளை பெற்றவர்கள். பிரிட்டிஷ் இந்தியப் பிரதிநிதிகள் அமைச்சர்களின் அதிகாரத்தை விரிவுபடுத்த முயலுவார்கள். ஆனால் சமஸ்தானங்களின் பிரதிநிதிகள் அமைச்சர்களின் அதிகாரத்துக்கு ஆதரவளிக்காமல் கவர்னர் ஜெனரலுக்கு ஆதரவாக செயல்படுவார்கள், அவ்வாறு செயல்பட வைக்கப்படுவார்கள் என்பது நிச்சயம். இந்த மோதல் தவிர்க்க முடியாதது. இதனால் பிரிட்டிஷ் இந்தியாவுக்குச் சமஸ்தானங்களிடம் மனக்கசப்பு ஏற்படும். மாகாணங்களில் கடைசியாக இருந்த ஆட்சிகளில் இவ்வாறுதான் நடந்தது. பழைய மாகாண சட்டசபைகளில் நியமன உறுப்பினர்கள் பற்றி, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் உணர்வுகள் நிச்சயமாக நேசமற்றவையாக இருந்தன. கூட்டாட்சி சட்டமன்றத்திலும் இதே அனுபவம்தான் மீண்டும் ஏற்படும். இவ்வாறு ஏற்படுவது மிகவும் இயல்பானதே. சபையின் ஒரு பிரிவு உறுப்பினர்கள் தங்களின் விருப்பங்கள் நிறைவேறாமல் தடுப்பதற்காகவே மற்றொரு பிரிவு உறுப்பினர்கள் கொண்டுவரப்பட்டிருக்கிறார்கள் என்றும், அவர்கள் சட்டமன்றத்தின் கட்டுப்பாட்டுக்கு வெளியே உள்ள ஒரு சக்தியின் கருவியாகச் செயல்படுகிறார்கள் என்றும் நினைக்கும் போது இப்படித்தான் நடக்கும். இது இணக்கமின்மையை ஏற்படுத்தும் ஒரு அம்சம். இரண்டாவது அம்சம், கூட்டாட்சியில் பிரிட்டிஷ் இந்தியாவின் நிலைக்கும் சமஸ்தானங்களின் நிலைக்கும் இடையில் உள்ள ஏற்றத்தாழ்வு. சட்டத்தின் முன் எல்லோரும் சமம் என்பது மிகவும் மதிப்புமிக்க தத்துவம். ஆனால் எல்லோரும் அதை மதிப்பது ஒரே காரணத்துக்காக அல்ல. பெரும்பாலானவர்கள் அதை ஒரு லட்சியம் என்ற அளவில் மதிக்கிறார்கள். இது ஏன் மிக முக்கியமானது என்பதைப் பலர் உணரவில்லை. சட்டத்தின் முன் எல்லோரும் சமம் என்றால், ஒரே மாதிரியாக பாதிக்கப்படுபவர்கள் ஒருவருக்கொருவர் ஆதரவாக ஒன்றுபட்டுச் செயல்படும் கட்டாயம் ஏற்படுகிறது. சமத்துவம் இல்லாமல், சிலருக்குச் சலுகை

களும் சிலருக்குச் சுமைகளும் அளிக்கப்படுகின்றன என்றால், சலுகை பெறுவோர், சுமை பெறுவோருடன் சேர்ந்து சமத்துவத் துக்காகப் போராட மாட்டார்கள். உண்மையில் அவர்களுக்கு எதிராகவே செயல்படுவார்கள். ஒரு சர்வாதிகாரி, பழைய காலத் தில் மன்னர்கள் செய்ததைப்போல ஒரு சிலருடைய பற்களை ஒவ் வொன்றாகப் பிடுங்கலாம்; இது மற்றவர்களிடையே எதிர்ப்பை ஏற்படுத்தும் என்ற அவசியம் இல்லை. மாறாக மற்றவர்களும் கூட அவருடைய செயலில் சேர்ந்துகொள்ளக்கூடும். ஆனால் சர்வாதி காரி கேட்கிற அளவுக்கு எல்லோரும் பணம் கொடுக்க வேண்டும் என்றும், அவ்வாறு கொடுக்காதவர்களின் பற்கள் பிடுங்கப்படும் என்றும் ஒரு சட்டம் இயற்றப்பட்டால், எல்லோரும் அதை எதிர்த்து எழுவார்கள். கூட்டாட்சியில் பிரிட்டிஷ் இந்தியாவுக்கும் சமஸ்தானங்களுக்கும் இடையே சமத்துவம் இல்லை. பிரிட்டிஷ் இந்தியாவுக்கு இல்லாத பல நன்மைகளும் பல விதிவிலக்குகளும் சமஸ்தானங்களுக்கு இருக்கின்றன. குறிப்பாக வரி விதிப்பில் சமஸ்தானங்களுக்கு இவ்வாறு நன்மைகளும் விலக்குகளும் கிடைக் கின்றன. வரிச்சுமையை யார் முதலில் தாங்கவேண்டும் என்பதில் பிரிட்டிஷ் இந்தியப் பிரதிநிதிகளுக்கும் சமஸ்தானங்களின் பிரதி நிதிகளுக்கும் இடையே மிகுந்த கசப்புணர்வு கட்டாயம் ஏற்படும். ஒருவருடைய சட்டைப்பை தொடப்படும்போது தேசபக்தி மறைந்து விடுகிறது. சமஸ்தானங்களின் பிரதிநிதிகள் தங்களுடைய நிதி நலன்களைக் காப்பாற்றிக்கொள்வதில் அக்கறை காட்டுவார்களே தவிர, நிர்வாகம் சட்டமன்றத்துக்குப் பொறுப்புள்ளதாக இருக்கச் செய்வதற்கு ஒன்றுபட்டுச் செயல்படுவதில் ஆர்வம் காட்ட மாட்டார்கள்.

பிரிட்டிஷ் இந்தியாவையும் இந்திய சமஸ்தானங்களையும் கூட்டாட்சியில் ஒரே கட்டமைப்பின் கீழ் கொண்டு வந்ததன் விளைவாக அவை ஒன்றுடன் ஒன்று சச்சரவிடுவதாக இருந்தால் அவ்வாறு கொண்டு வருவதால் என்ன பயன்?

பிரிட்டிஷ் இந்தியாவிலும் இந்திய சமஸ்தானங்களிலும் உள்ள ஆட்சி முறைகளும் அவற்றுக்கு அடிப்படையான கொள்கைகளும் முற்றிலும் வேறுபட்டவை. இரண்டும் தத்தமது தனி வழிகளில் தொடர்ந்து பரிணாமம் அடைவதாக இருந்தால் இரண்டுக்கும் இடையே இந்த வேறுபாடு காரணமாக விரோதம் ஏற்பட வேண்டி யதில்லை. சமஸ்தானங்களில் உள்ள ஆட்சிமுறைகள். பிரிட்டிஷ் இந்தியா சம்பந்தப்பட்ட விஷயங்களைத் தீர்மானிப்பதில் ஒரு அம்சமாக இடம் பெறாதவரை, அந்த ஆட்சிமுறைகள் எவ்வளவு தூரம் காலத்துக்கொவ்வாத பழமைகளாக இருந்த போதிலும், அவற்றைப் பிரிட்டிஷ் இந்தியா சகித்துக்கொள்ளலாம். ஆனால் கூட்டாட்சி அவற்றை அத்தகைய அம்சமாக இடம்பெறச் செய் கிறது. பிரிட்டிஷ் இந்தியா அவற்றை அலட்சியம் செய்ய முடியாது. உண்மையில், கூட்டாட்சி உருவானால், பிரிட்டிஷ் இந்தியா

தன்னுடைய சொந்த நலனைக் கருதியாவது, சமஸ்தானங்களில் உள்ள ஆட்சிமுறைகளை மாற்றுவதற்கு ஒரு இயக்கம் தொடங்க வேண்டியிருக்கும்.

கூட்டாட்சியின் காரணமாகத் தவிர்க்க முடியாமல் ஏற்படும் விளைவுகள் இவை. சமஸ்தானங்கள் மிகுந்த ஆவலுடன் எதிர் பார்க்கும் பலன் இதுதானா? இது அவை சிந்திக்க வேண்டிய கேள்வி.

இவ்வாறான விளைவுகளையெல்லாம் பிரிட்டிஷ் இந்தியா வரவேற்கிறதா? என்னைப் பொறுத்தமட்டில் நான் வரவேற்க மாட்டேன். இவ்வளவு விரிவான போர்முனையில் போர் நடத்த முடியாது. சமஸ்தானங்கள் மிகப்பெரிய எண்ணிக்கையில் இருப்பதால் ஒருமுகப்பட்ட தாக்குதல் நடத்த முடியாது. சமஸ்தானங்கள் கூட்டாட்சிக் கட்டமைப்பின் ஒரு பகுதியாக இருப்பதால் அவற்றின் மீது தாக்குதல் நடத்தி அதை அரசியலமைப்புச் சட்டப்படியான செயல் என்று நியாயப்படுத்த முடியாது. இரண்டாவதாக, எதற்காக இந்தத் தொல்லைக்கு உள்ளாக வேண்டும்? சில சமயங்களில் ஒருவர் சொத்து வாங்குவதாக நினைத்து வாங்குவது வழக்கு விவகாரம்தான் என்று ஆகிவிடுகிறது. பிரிட்டிஷ் இந்தியா இந்தக் கூட்டாட்சியை ஒப்புக் கொள்வது தொல்லையை விலைக்கு வாங்குவது போன்றது. மூன்றாவதாக இந்த அரசியலமைப்புச் சட்டம், டொமினியன் அந்தஸ்து இப்போதைக்கு மட்டும் இல்லை என்பதற்காக அன்றி இனி வருங்காலத்திலும் இல்லை என்று விளக்கி வைத்து விடுகிறது.

எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும் மிகச் சிறந்த வழியாகக் காணப்படுவது இதுதான்: சமஸ்தானங்கள் இருப்பது போல இருக்கட்டும் என்று விட்டுவிட்டு, பிரிட்டிஷ் இந்தியா தன்னுடைய பரிணாமப் பாதையில் முன்னேறி, தனக்கென கூட்டாட்சியை அடைய வேண்டும்.

10

கூட்டாட்சிபற்றி பல்வேறு நோக்குகள்

இந்தக் கூட்டாட்சியைப் பல்வேறு மக்கள் பல்வேறு கோணங்களிலிருந்து பார்க்கிறார்கள். சமஸ்தான மன்னர்களின் பார்வைக் கோணம் என்று ஒன்று இருக்கிறது. இந்துக்கள், முஸ்லீம்கள், காங்கிரஸ் ஆகியோர் அதைப் பார்க்கும் கோணங்கள் இருக்கின்றன. வியாபாரிகளும் வர்த்தகரும் அதைப் பார்க்கும் கோணங்களும் இருக்கின்றன. இந்த ஒவ்வொருவரும் எந்தக் கோணத்திலிருந்து பார்க்கிறார்கள் என்பது அவரவர்களின் தனிப்பட்ட நலன்களைப் பொறுத்து உள்ளது.

இந்தக் கூட்டாட்சியில் சமஸ்தான அதிபர்களின் நலன்கள் என்ன? இவர்களின் நோக்கத்தைப் புரிந்து கொள்வதற்குப் பட்லர் கமிட்டியின் காலத்துக்குச் செல்ல வேண்டும். மேலதிகார அரசு என்ற தத்துவத்தின் கீழ் தாங்கள் செய்து கொண்ட உடன் படிக்கைப்படி உள்ள உரிமைகளை இந்திய அரசாங்கத்தின் அரசியல் இலாகா மீறி நடந்து வருவதாக இவர்கள் புகார் கூறிவந்தார்கள். தங்களுக்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும் இடையில் உள்ள உடன்படிக்கைப்படி சமஸ்தானங்கள் மீது என்ன உரிமைகள் உண்டோ அதற்குமேல் அதிகமாக அரசியல் இலாகாவுக்கு உரிமைகள் கிடையாது என்று அவர்கள். வற்புறுத்தி வந்தார்கள். ஆனால் அரசியல் இலாகா, உடன்படிக்கைப் படியான உரிமைகள் தவிர, பிரிட்டிஷ் மக்களுக்கு அரசியல் நடைமுறைகள் வழக்கங்கள் படியான உரிமைகளும் உண்டு என்று கூறியது. இந்தத் தாவாவை ஆராய்ந்து தீர்ப்புக்கூறுவதற்குப் பட்லர் கமிட்டியை நியமிக்க செக்ரட்டரி ஆஃப் ஸ்டேட் (இந்திய விவகாரங்கள் அமைச்சர்) சம்மதித்தார். இந்தக் கமிட்டி தங்களுடைய வாதத்தை ஏற்று உடன்படிக்கைப் படியான உரிமைகள் மட்டுமே மேலதிகார அரசுக்கு உண்டு என்று முடிவு கூறும் என்று சமஸ்தான அதிபதிகள் நம்பினார்கள். ஆனால் அவர்களுக்கு ஏமாற்றமே கிடைத்தது. மேலதிகார அரசுக்கு மேலதிகாரம் உண்டு, அதை வரையறை செய்வதோ, எல்லை நிர்ணயிப்பதோ முடியாது என்று பட்லர் கமிட்டி தனது அறிக்கையில் கூறிவிட்டது. இதன் படி சமஸ்தான அதிபர்கள் இந்திய அரசாங்கத்தின் அரசியல் இலாகாவுக்கு முற்றிலுமாக அடங்கி நடக்க வேண்டியவர்கள் என்று ஆகிவிட்டது. இப்படிப்பட்ட ஒரு நிலையிலிருந்து தப்பிப்பதற்குச் சமஸ்தான அதிபர்கள் வழிதேடிக் கொண்டிருந்தார்கள். அரசியல் இலாகாவின் கொடுங்கோல் பிடியிலிருந்து விடுபடுவதற்கு ஒரே வழி கூட்டாட்சிதான் என்று அவர்கள் கண்டார்கள். இது மிகவும் சரியானதே. ஏனென்றால், கூட்டாட்சியின் அதிகாரம் எந்த அளவுக்குச் செல்லுகிறதோ அந்த அளவுக்கு அரசியல் இலாகாவின் அதிகாரம் மறைந்துபோகும். கூட்டாட்சியின் அதிகாரம் கூட்டாட்சிச் சட்டமன்றத்தின் மூலமும், கூட்டாட்சி நிர்வாக அமைப்பின் மூலமும் செலுத்தப்படும். இந்த இரண்டிலும் சமஸ்தான அதிபர்களுக்குப் போதிய செல்வாக்கு இருக்கும். எனவே அவர்கள் கூட்டாட்சியை ஏற்க விரும்பினார்கள். தங்கள் பிரச்சினைக்குத் தீர்வாகக் கூட்டாட்சியை ஏற்பதில் அவர்களுக்கு இரண்டு அனுகூலங்கள் இருந்தன. முதலாவதாக கூட்டாட்சியின் மூலம் சமஸ்தானங்களுக்கு உள் நிர்வாகத்தில் சுயாட்சி உறுதி செய்யப்படும். இவ்வாறு உறுதி செய்யப்பட வேண்டும் என்பதில் அவர்கள் மிக ஆவலாக இருந்தார்கள். கூட்டாட்சியில் இணையும் உறுப்புகள் ஒரு மத்திய அரசாங்கத்துக்குத் தாங்களே மனம் ஒப்பி விட்டுக் கொடுக்கும் அதிகாரங்கள் தவிர மற்ற எல்லா அதிகாரங்களும் உறுப்புகளிடமே இருக்கும் என்பது கூட்டாட்சியின்

சாராம்சம். இவ்வாறு விட்டுக்கொடுக்கும் அதிகாரங்களைச் செயல் படுத்துவதிலும் உறுப்புகளுக்குப் பங்கு இருக்கும். இரண்டாவது அனுகூலம், கூட்டாட்சியின் அதிகாரம் எந்த அளவுக்கு இருக் கிறதோ அந்த அளவுக்கு பிரிட்டிஷ் மன்னரின் மேலதிகாரம் மறைந்துபோகும். எனவே இதில் சமஸ்தான அதிபதிகளின் நோக்கம் சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டதே. இந்திய அரசாங்கத்தின் அரசியல் இலாகாவின் அதிகாரத்திலிருந்து முடிந்த அளவுக்கு விடுதலை பெறுவதே அந்த நோக்கம். இது சமஸ்தான அதிபதிகளின் முக்கியமான நலன்களில் ஒன்று. அவர்கள் பாதுகாக்க விரும்பிய மற்றொரு நலன் தங்களுடைய சிவில், ராணுவ ஆட்சி அதிகாரங்களை முடிந்த அளவுக்குப் பாதுகாப்பதாகும். கூட்டாட்சி தங்கள் மீது அதிகமாக அழுத்தி விடாமல் இருக்க வேண்டும் என்பதற்காக அதை முடிந்த அள வுக்கு மெலியச் செய்ய விரும்பினார்கள். மேலதிகாரத்திலிருந்து தப்பிக்க விரும்பினார்கள். இரண்டாவதாக, கூட்டாட்சியின் அதிகாரத்துக்குத் தங்களை அதிகமாகக் கட்டுப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. இரண்டு நோக்கங்களை மனத்தில் வைத்தே அவர்கள் கூட்டாட்சியைப் பார்த்தார்கள். ஒன்று, மேலதிகாரத் தின் பிடியிலிருந்து தப்பிப்பதற்கு இது எவ்வளவு தூரம் உதவு கிறது என்பது. இரண்டு, கூட்டாட்சியினால் தங்களுடைய இறை யாண்மையிலும் உள்நாட்டு ஆட்சி உரிமையிலும் எந்த அளவுக்கு விட்டுக் கொடுக்க வேண்டியிருக்கும் என்பது. தப்பிக்கும் அனு கூலம் அதிகமாகக் கிடைக்க வேண்டும் என்றும், விட்டுக் கொடுப் பது குறைந்த அளவில் இருக்க வேண்டும் என்றும் அவர்கள் விரும்பினார்கள்.

முஸ்லீம்கள், தாங்கள் ஒரு சிறுபான்மையினர் என்ற நலனைக் கருத்தில் வைத்துக் கூட்டாட்சியைப் பார்த்தார்கள். இது ஒன்றி லேயே கவனம் வைத்திருந்ததால் அவர்களின் பார்வை மிகவும் குறுகிப்போய் கூட்டாட்சியின் வேறு எந்த அம்சத்திலும் கவனம் செலுத்தவில்லை. இந்து பெரும்பான்மையிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு அவர்களுக்கு ஒரே வழிதான் தெரிந் திருந்தது. தங்களுக்குத் தனியாக இட ஒதுக்கீடும், தனித்தொகுதியும் பிரதிநிதித்தவத்தில் தொகைக்குத் தகுந்த அளவில் இடம்பெறு வதற்கான சிறப்பு ஏற்பாடும் (Weightage) கோருவதே அந்தவழி. 1930-இல் சிறுபான்மையினரின் நலன்களைப் பாதுகாப்பதற்கு மேலும் அதிகத் திறன்கொண்ட மற்றொரு வழியை அவர்கள் கண்டுபிடித்தார்கள். முஸ்லீம்கள் பெரும்பான்மையாகவும் இந்துக் கள் சிறுபான்மையாகவும் இருக்கும் வகையில் புதிய மாகாணங் களை உருவாக்குவது இந்த வழி. இந்துக்கள் பெரும்பான்மை யாகவும் முஸ்லீம்கள் சிறுபான்மையாகவும் உள்ள மாகாணங் களுக்கு ஈடுகட்டும் ஏற்பாடாக இந்தப் புதிய வழியைக் கண்டார் கள். முஸ்லீம்கள் சிறுபான்மையாக உள்ள மாகாணங்களில் இந்துக்களின் நன்னடத்தையை உறுதிசெய்வதற்கு இந்தப் புதிய

மாகாணங்களின் இந்து சிறுபான்மையினரைப் பிணையாக வைக்க முடியும் என்று அவர்கள் கருதினார்கள். முஸ்லீம் பெரும் பான்மை கொண்ட மாகாணங்களை உருவாக்கி, அவை பலமும் அதிகாரமும் பெறச் செய்வதில் அவர்கள் தீவிரமாக அக்கறை காட்டினார்கள். இந்த நோக்கத்துடன் அவர்கள் சிந்துவைத் தனி மாகாணமாகப் பிரிக்க வேண்டும் என்றும், வடமேற்கு எல்லை மாகாணத்துக்குப் பொறுப்பாட்சி அரசாங்கம் அளிக்க வேண்டும் என்றும் கோரினார்கள். இதன் மூலம் நான்கு மாகாணங்களில் முஸ்லீம்கள் பெரும்பான்மை பெறுவார்கள். மாகாணங்கள் பலம் பெற்றவையாக இருக்கச் செய்வதற்காக அவர்கள் மத்திய அரசாங் கம் பலவீனமாக இருக்க வேண்டும் என்று விரும்பினார்கள். இதற்கு ஒரு வழியாக அவர்கள் எஞ்சிய அதிகாரங்கள் மாகாணங் களுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்றும், மத்திய அரசாங்கத் தில் இந்துக்களின் பிரதிநிதித்துவத்தைக் குறைப்பதற்காக முஸ்லீம் களுக்கு பிரிட்டிஷ் இந்தியாவுக்கு நிர்ணயிக்கப்பட்ட இடங்களில் 1/3 கொடுக்கப்படுவது மட்டுமின்றி, சமஸ்தான அதிபதிகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட மொத்த இடங்களிலும் முஸ்லீம்களுக்கு இதே போல இடங்கள் கொடுக்க வேண்டும் என்றும் கோரினார்கள்.

இந்து மகாசபையின் சார்பாக உள்ள இந்துக்கள் ஒரே ஒரு விஷயத்தில்தான் கருத்துச் செலுத்தினார்கள். முஸ்லீம்களின் அச்சுறுத்தல் என்று அவர்கள் குறிப்பிட்ட நிலைமையை எதிர் கொள்வது எப்படி? கூட்டாட்சியில் சமஸ்தானங்கள் சேருவது இந்துக்களின் பலத்தை அதிகரிக்கும் என்று அவர்கள் கருதினார் கள். அவர்களுக்கு மற்ற எதுவும் முக்கியமாகத் தோன்றவில்லை. எப்படியாவது கூட்டாட்சி அமைய வேண்டும் என்பதே அவர் களின் கருத்து.

அடுத்ததாக இந்திய வர்த்தக சமூகத்தின் கருத்து கவனிக்கத் தக்கதாகும். இந்தியா போன்ற ஒரு பெரிய நாட்டில் வர்த்தக சமூகம் மிகச் சிறியதாகவே உள்ளது. ஆயினும் இந்தச் சமூகத்தின் கருத்து வேறு எந்தச் சமூகத்தின் கருத்தையும் விட அதிகமாகவே எடுபடுகிறது என்பதில் சந்தேகமில்லை. இந்த சமூகம் காங்கிர ஸுக்குப் பின்பலமாக இருந்து வந்திருக்கிறது. காங்கிரஸுக்குப் போராட்டச் சாதன, நிதிவசதிகள் கொடுத்து வருவதும் இவர்கள் தாம். குழல் ஊதுபவன் தனக்குப் பணம் கொடுத்தவன் கூறும் ராகத்தைத்தான் இசைக்க வேண்டும் என்பது இந்தச் சமூகத்துக்குத் தெரியும். வர்த்தக சமூகம் முக்கியமாக அக்கறை காட்டுவது வர்த்தகத்தில் பாரபட்சம் என்று கூறப்படும் நிலையைப் போக்கு வதிலும் செலாவணி மாற்று விகிதத்தைக் குறைப்பதிலுமே ஆகும். இது மிகவும் குறுகிய ஒரு பார்வையாகும். இந்திய வர்த்தக சமூகம் வர்த்தகத்தில் ஐரோப்பியர்கள் பெற்றிருக்கும் இடத்திலிருந்து அவர்களை அகற்றிவிட்டு அந்த இடத்தைத் தான் கைப்பற்ற வேண்டும் என்பதில் முனைப்பாக இருக்கிறது. இதைத் தேசிய

வாதத்தின் பெயரால் செய்வதாக அந்தச் சமூகம் கூறுகிறது. செலாவணி மாற்ற விகிதத்தைக் குறைத்து வெளிநாட்டு வர்த்தகத்தில் லாபம் ஈட்டுவது அதன் நோக்கம். இதையும் தேசிய வாதத்தின் பெயரால் செய்வதாகவே அது கூறுகிறது. தங்களுக்கு லாபம் தேடுவதைத் தவிர வர்த்தகர்களுக்கு வேறு எந்த நோக்கமும் இல்லை.

காங்கிரஸைப் பற்றி நான் என்ன சொல்வது? அதனுடைய கருத்து என்ன? வட்டமேஜை மாநாட்டில் காங்கிரஸின் கருத்து இந்தியாவில் உள்ள ஒரே கட்சி காங்கிரஸ்தான் என்பதும், வேறு யாரும் பொருட்படுத்தப்பட வேண்டியவர்கள் அல்ல என்பதும், பிரிட்டிஷார் காங்கிரஸுடன் மட்டுமே பேசி முடிவு செய்ய வேண்டும் என்பதும் ஆகும். இவ்வாறு நான் கூறுவது மிகைப் படுத்தியோ திரித்தோ கூறுவதல்ல. வட்டமேஜை மாநாட்டில் திரு. காந்தியின் பல்லவி இதுதான். இந்தியாவின் சர்வாதிகாரம் பெற்ற தலைவர் என்ற தம்முடைய நிலையைப் பிரிட்டிஷார் அங்கீகரிக்கச் செய்ய வேண்டும் என்பதிலேயே அவரது நாட்டம் இருந்ததால், யாருடன் உடன்பாடு செய்யப்பட வேண்டும் என்பதல்ல முக்கிய பிரச்சினை, மாறாக உடன்பாட்டின் ஷரத்துக்கள் என்ன என்பதே முக்கிய பிரச்சினை என்பதை அவர் முற்றிலுமாக மறந்து விட்டார். உடன்பாட்டின் ஷரத்துக்கள் விஷயத்திலும் திரு. காந்தி போதிய அக்கறை காட்டவில்லை. அவர் லண்டனுக்குச் சென்ற போது அங்கே தாம் சந்திப்பவர்கள் தம்மிடம் ஆலோசனை கேட்கவும் ஆசிபெறவும் வரமாட்டார்கள் என்பதையும், அவர்கள் தம்மை ஒரு வழக்கறிஞர் சாட்சிக் கூண்டில் உள்ள ஒரு சாட்சியை நடத்துவது போல நடத்தவார்கள் என்பதையும் மறந்துவிட்டார். தாம் ஒரு அரசியல் மாநாட்டுக்குச் செல்கிறோம் என்பதையும் அவர் மறந்து விட்டார். ஒரு வைஷ்ணவ ஆலயத்துக்குப் போகிறவர் போல் நார்ஸி மேத்தாவின் பாடல்களைப் பாடிக்கொண்டு சென்றார். இந்த விஷயம் முழுவதையும் பற்றி நான் சிந்திக்கும் போது, எந்த நாடாவது தேசிய உடன்பாடு ஒன்றைப் பேசி முடிப்பதற்கு திரு. காந்தியைக் காட்டிலும் தகுதியற்ற ஒரு பிரதிநிதியை அனுப்பியிருக்க முடியுமா என்று ஆச்சரியப்படுகிறேன். சுதந்திரத்தின் அடிப்படையில் பேச்சு நடத்தச் சென்ற இந்தியாவின் தூதர் மாகாண சுயாட்சியுடன் திரும்பிவரத் தயாராயிருந்தார் என்பதைப் பார்க்கும்போது அவர் எவ்வளவு தூரம் தகுதியில்லாதவராயிருந்தார் என்பதை உணரலாம். வட்ட மேஜை மாநாட்டில் திரு. காந்தியால் இந்தியாவின் நலன்களுக்கு ஏற்படுத்தியதை விட அதிகமான கேட்டை வேறு யாரும் ஏற்படுத்தியதில்லை. அவரைப் பற்றி அதிகம் பேசாமலிருப்பதே நல்லது.

ஒவ்வொரு விதமான நலன்களைக் கொண்டவர்களும் இப்படிப் பட்ட கூட்டாட்சித் திட்டத்தால் எவ்வளவு தூரம் திருப்தியடை

கிறார்கள் என்று நான் கூறுவதற்கில்லை. ஆனால், இந்தக் கூட்டாட்சித் திட்டத்தை நாம் என்ன செய்வது என்பதைத் தீர்மானிப்பதில் நாம் கவனிக்க வேண்டிய கருத்துக்கள் இவை மட்டும் தானா என்று யாரும் கேட்கலாம். நிச்சயமாக வேறு கருத்துக்கள் இருக்கின்றன என்று நான் கூறுகிறேன். சுதந்திர மனிதனின் கருத்து இருக்கிறது. ஏழை மனிதனின் கருத்து இருக்கிறது. இவர்கள் கூட்டாட்சியைப் பற்றி என்ன சொல்கிறார்கள்? கூட்டாட்சி இவர்களெல்லாம் இருப்பதைக் கருத்தில் கொண்டதாகத் தெரியவில்லை. ஆயினும் இவர்கள் இதில் மிக அதிகமாக சம்பந்தப்பட்டவர்கள். கூட்டாட்சி அரசியலமைப்பு தனது சுதந்திரத்துக்கு அச்சுறுத்தலாக இராது என்று சுதந்திர மனிதன் நம்ப முடியுமா? ஏழை மனிதன் பழைய மதிப்புகள் மறுபரிசீலனை செய்யப்படும் என்றும், சுயநல உரிமைகள் மாற்றப்படும் என்றும் நினைக்க முடியுமா? கூட்டாட்சி நடைமுறைக்கு வந்தால் அது சுதந்திர மனிதனுக்கு நிரந்தரமான அச்சுறுத்தலாகவும், ஏழை மனிதனின் முன்னேற்றத்துக்குத் தடையாகவும் இருக்கும் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை. நீங்கள் சமஸ்தான அதிபதிகளின் தன்னிச்சை அதிகாரத்துக்கு உட்படுத்தப்படும்போது அங்கே என்ன சுதந்திரம் இருக்க முடியும்? சுயநல உரிமைகளைப் பெற்றுள்ளவர்கள் பலத்துடன் இடம் பெற்றிருக்கும் சட்டமன்ற மேல்சபைகள் உருவாக்கப் பட்டு, சொத்துரிமைகள் சம்பந்தமாக எந்தச் சட்டமும் சட்ட சபையில் கொண்டுவரப்படுவதற்கு முன்பும், சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட பின்பும் அரசாங்கத்தின் அனுமதியைப் பெற வேண்டும் என்று விதிக்கப்படும்போது என்ன பொருளாதார மேம்பாடு ஏற்பட முடியும்?

11

முடிவுரை

நான் அதிக நேரம் பேசிவிட்டேன் என்று நினைக்கிறேன். இதில் குற்றம் முற்றிலுமாக என்னையே சார்ந்ததல்ல. எடுத்துக் கொண்ட விஷயம் மிகப் பரந்தது. ஆதலால் இந்த உரையும் நீண்டதாகிவிட்டது.

இந்த உரையை மிகவும் சுருக்கிவிடக் கூடாது என்று நான் நினைத்ததற்கு வேறொரு காரணமும் இருந்தது என்பதை நான் ஒப்புக் கொள்ள வேண்டும். இன்று நாம் பழைய காலகட்டம் ஒன்று முடிந்து புதிய காலகட்டம் ஒன்று தொடங்குகிற தருணத்தில் நிற்கிறோம். பழைய காலகட்டம் ரானடே, சாவர்க்கர், திலகர், கோகலே, வாச்சா, ஸர் ஃபிரோஸ்ஷா மேத்தா, சுரேந்திரநாத் பானர்ஜி ஆகியோரின் காலம். புதிய காலகட்டம் திரு. காந்தியின் காலம். இந்தத் தலைமுறை காந்தி தலைமுறை என்று கூறப்படுகிறது. பழைய காலகட்டத்தைப் பற்றியும் புதிய காலகட்டத்தைப்

பற்றியும் ஓரளவு நான் அறிந்திருப்பதால், இந்த இரண்டுக்கும் இடையே தெளிவான சில வித்தியாசங்கள் இருப்பதை நான் காண்கிறேன். தலைமையின் இயல்பில் ஆழ்ந்த மாறுதல் ஏற்பட்டுள்ளது. ரானடேயின் காலத்தில் தலைவர்கள் இந்தியாவை நவீனப்படுத்தப் பாடுபட்டார்கள். காந்தியின் காலத்தில் தலைவர்கள் இந்தியாவைப் பழைமையின் உயிருள்ள உதாரணமாக்கிக் கொண்டிருக்கிறார்கள். ரானடேயின் காலத்தில் தலைவர்கள் தங்களுடைய சிந்தனைகளையும் செயல்களையும் திருத்திக் கொள்வதற்கு அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டார்கள். இப்போதைய காலத்தின் தலைவர்கள் தங்களுடைய உள்மனக் குரலை வழிகாட்டியாகக் கொள்கிறார்கள். இவர்களுடைய மனப்போக்கில் மட்டுமின்றி, வெளித்தோற்றத்தைப் பற்றிய கருத்திலும் மாற்றம் இருக்கிறது. பழைய காலத்தின் தலைவர்கள் நன்கு உடையணிந்து கொள்வதில் கவனம் செலுத்தினார்கள். ஆனால் இந்தக் காலத்தின் தலைவர்கள் அரை ஆடை அணிவதில் பெருமைப் படுகிறார்கள். காந்தி காலத்தின் தலைவர்களுக்கு இந்த வித்தியாசங்களெல்லாம் தெரியும். ஆனால் அவர்கள் தங்கள் கருத்துக்களைப் பற்றியும் தோற்றத்தைப் பற்றியும் வெட்கப்படுவதற்குப் பதிலாக, காந்தியின் இந்தியா, ரானடேயின் இந்தியாவை விட உயர்ந்தது என்று கூறிக் கொண்டிருக்கிறார்கள். காந்தியின் காலம் கிளர்ச்சியும் எதிர்பார்த்தல்களும் நிறைந்த காலமாக உள்ளது என்றும் ரானடேயின் காலம் அப்படி அல்ல என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

ரானடேயின் காலத்திலும் காந்தியின் காலத்திலும் வாழ்ந்துள்ளவர்கள் இந்த இரண்டுக்கும் இடையே இந்த வித்தியாசம் இருப்பதை ஒப்புக் கொள்வார்கள். அதே சமயம் ரானடேயின் இந்தியா கிளர்ச்சி குறைந்ததாக இருந்தாலும் நேர்மையில் மிகுந்ததாக இருந்தது என்றும், எதிர்பார்த்தல் குறைவாக இருந்தாலும் அறிவுத்தெளிவில் மிகுந்ததாக இருந்தது என்றும் இவர்கள் சுட்டிக் காட்ட முடியும். ரானடேயின் காலத்தில் ஆண்களும் பெண்களும் தங்கள் வாழ்க்கையின் உண்மைகளைத் தீவிரமாக ஆராய்ந்து பரிசீலனை செய்தார்கள். அதைவிட முக்கியமாக, பழமைப் பற்றாளர்களின் எதிர்ப்புக்கு அஞ்சாமல், தங்கள் ஆய்வின் மூலம் தாங்கள் கண்ட உண்மைகளுக்கு ஏற்ற முறையில் தங்கள் வாழ்க்கைகளையும் தங்கள் பண்பையும் அமைத்துக் கொள்ள முயன்றார்கள். ரானடேயின் காலத்தில், இப்போது காந்தியின் காலத்தில் இருப்பதைப் போல அரசியல்வாதிக்கும் கல்வியில் ஈடுபட்டவருக்கும் இடையே பொருந்தாமை இருக்கவில்லை. ரானடேயின் காலத்தில் கற்பதில் ஈடுபடாத அரசியல்வாதி பொறுக்க முடியாத தொல்லையாகக் கருதப்பட்டார். காந்தியின் காலத்தில், கற்பதில் ஈடுபடுவது கேவலமாகக் கருதப்படவில்லை என்றாலும், அது அரசியல்வாதிக்கு வேண்டிய அவசியத் தகுதியாகக் கருதப்படவில்லை.

இந்தக் காந்தி காலம் இந்தியாவின் இருண்டகாலம் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை. மக்கள் தங்கள் லட்சியங்களை வருங் காலத்தில் காண்பதற்கு பதிலாகப் பழமைக்குத் திரும்பிக் கொண் டிருக்கும் காலம் இது. மக்கள் சொந்தமாகச் சிந்தனை செய்வதை நிறுத்திவிட்ட காலம் இது. சிந்தனை செய்வதை நிறுத்தி விட்ட தைப் போலவே அவர்கள் படிப்பதையும், வாழ்க்கையின் உண்மை களை ஆராய்வதையும் நிறுத்தி விட்டார்கள். கல்வியும் அனுபவமும் காட்டும் பாதையைப் பின்பற்ற மறுத்து, யோகிகளும் பெருமைப் பித்துக் கொண்டவர்களும் கூறும் இருண்ட பாதைகளில் தட்டித் தடுமாறிச் செல்ல விரும்பும் அறியாமை நிறைந்த ஜனநாயகத்தின் வருங்காலத்தை நினைத்துப் பார்க்கவே வருத்தமாயிருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு காலகட்டத்தைப் பற்றிப் பேசும் போது கூட்டாட்சித் திட்டத்தை விவரிப்பது மட்டும் போதாது என்று நான் கருதினேன். கூட்டாட்சி அமலுக்கு வந்தால் என்னென்ன அபாயங்கள் ஏற்படும் என்பதைத் தெளிவுபடுத்துவதற்கு முழுமை யாகவும் பல்வேறு விஷயங்களைக் குறிப்பிட்டுச் சுட்டிக்காட்டியும் விளக்க வேண்டியது அவசியமாகிறது. இந்த உரையைத் தயாரிக் கும் போது இந்த நோக்கத்தை மனத்தில் கொண்டிருந்தேன். எனது முயற்சி வெற்றியா, தோல்வியா என்பதை நீங்கள்தான் கூற வேண்டும். இந்த உரையில் விரிவு இருப்பது போல ஆழம் இல்லை என்று தோன்றினால், எனக்குத் தெரிந்த அளவில் என்னுடைய கடமையைச் செய்ய முயன்றிருக்கிறேன் என்பதே இதற்கு எனது பதிலாகும்.

கூட்டாட்சி முறை அரசாங்கத்தை நான் எதிர்க்கவில்லை. ஒற்றை முறை அரசாங்கத்தையே நான் அதிகம் விரும்புகிறேன் என்பதை ஒப்புக்கொள்கிறேன். இந்தியாவுக்கு இதுதான் தேவைப் படுகிறது என்று நினைக்கிறேன். ஆனால் மாகாண சுயாட்சி இருக்கும் என்றால் கூட்டாட்சி முறை அரசாங்கம் தவிர்க்க முடியாதது என்பதை நான் உணர்கிறேன். ஆயினும் இந்திய அரசாங்கச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள கூட்டாட்சித் திட்டம் எனக்கு மிக பயங்கரமாகத் தோன்றுகிறது. அது எனக்கு ஏன் பிடிக்கவில்லை என்பதற்குத் தகுந்த காரணங்களை நான் கூறி யிருப்பதாகக் கருதுகிறேன். இவற்றை எல்லோரும் பரிசீலித்து அவரவர் சொந்தமான முடிவுகள் எடுக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அதே சமயம் மாகாண சுயாட்சி என்பது வேறு, மத்திய கூட்டாட்சித் திட்டம் வேறு என்பதையும் நாம் உணர வேண்டும். கவர்னர்கள் தங்களுக்கு விசேஷ பொறுப்புகளின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்துவதில்லை என்று உறுதியளிப்பார்கள் என்று கூறப்படுகிறது. அதைப்போல கவர்னர் ஜெனரலும் உறுதியளித்தால் கூட்டாட்சியை ஏற்கலாம் என்று நினைப்பவர்களுக்கு நான் இரண்டு விஷயங்களைக் குறிப் பிட விரும்புகிறேன். முதலாவதாக, கவர்னர் ஜெனரல் இம்மாதிரி உறுதிமொழி அளிக்க முடியாது. ஏனென்றால், அவர் அந்த

அதிகாரங்களை பிரிட்டிஷ் மன்னரின் நலன்களுக்காக மட்டு மின்றி சமஸ்தானங்களின் நலன்களுக்காகவும் பயன்படுத்து கிறார். இரண்டாவதாக, அவர் அப்படியே வாக்குறுதி அளித்தாலும் அது கூட்டாட்சித் திட்டத்தின் தன்மையை மாற்றி விடாது. சமஸ்தானங்களின் பிரதிநிதிகளை நியமனம் செய் வதற்குப் பதிலாக தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்குமாறு மாற்றினால் கூட்டாட்சியை எதிர்ப்பதற்கான காரணம் குறைந்துவிடும் என்று சிலர் நினைக்கலாம். ஆனால் இது, திட்டத்தின் விவரங்களில் ஒரு அம்சமேயன்றி, அடிப்படை விஷயம் அல்ல. எது அடிப்படை யானது, எது அடிப்படையானதல்ல என்பதை நாம் கவனிக்க வேண்டும். இந்த விஷயத்தில் தவறோ குழப்பமோ இருக்கக் கூடாது. இந்த இரண்டும் நம்மிடம் நிறையவே இருந்துள்ளன; இனியும் வேண்டாம். உண்மையான பிரச்சினை பொறுப்பாட் சியை விரிவுபடுத்துவதும் வளரச் செய்வதுமேயாகும். இது முடி யுமா? இதுதான் முக்கியமான பிரச்சினை. மாகாண சுயாட்சி யைப் பிடித்துக் கொண்டு, மத்தியில் பொறுப்பாட்சி விஷயத்தை ஊசலாட விடுவது பயனற்றது. மத்தியில் உண்மையான பொறுப் பாட்சி இல்லாமல் மாகாண சுயாட்சி மட்டும் இருந்தால் அது உள்ளீடற்ற வெறும் ஓடுதான் என்று நான் உறுதியாகக் கருது கிறேன்.

நம்முடைய கருத்து ஏற்கப்படச் செய்வதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை விவாதிக்க இது இடமல்ல. இந்தக் கூட்டாட்சித் திட்டத்தின் அபாயங்களை நீங்கள் சரியாகத் தெரிந்து கொள்ள இந்த உரை உதவியிருந்தால் அதுவே போதும். ■

3

சமூகத் தடையும் அதைத் தீர்க்கும் வழியும்

பம்பாயில் 1945, மே 6-ம் தேதி நடைபெற்ற
அகில இந்திய ஷெடியூல்டு வகுப்பினர்
மாநாட்டில் ஆற்றிய உரை

வெளியீடு: 1945

சமூகத் தடையும் அதைத் தீர்க்கும் வழியும்

தலைவர் அவர்களே,

அகில இந்திய செடியூல்டு வகுப்பினர் பெடரேஷனின் ஆண்டு விழா நிகழ்ச்சியில் உரை நிகழ்த்த என்னை அன்புடன் அழைத்தமைக்கு நான் மிகவும் நன்றிக்கடன் பட்டுள்ளேன். செடியூல்டு வகுப்பினர் மாபெரும் எண்ணிக்கையில் இங்கு அணி திரண்டிருப்பது கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். பெடரேஷன் நிறுவப்பட்டு மிகக் குறைந்த காலமே ஆகிறது என்பதைக் கணக்கில் கொண்டால், எல்லாச் சான்றுகளின்படி, அதன் வளர்ச்சி மகத்தானது என்று தோன்றுகிறது. இந்தியா முழுவதிலும் உள்ள செடியூல்டு வகுப்பினர் அனைவரும் பெடரேஷனின் பின்னே அணி திரண்டுள்ளனர் என்பதும், தங்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் ஒரே ஸ்தாபனமாக பெடரேஷனை உருவாக்க வேண்டுமென உறுதிப்பூண்டுள்ளனர் என்பதும் மறுக்க முடியாததாகும். நமது ஸ்தாபனம் எதிர்நோக்கிய அளவிடற்கரிய இடையூறுகளை முழுவதுமாக்க் கணித்தால்தான், மிகக் குறுகிய காலத்தில் பெடரேஷன் அடைந்துள்ள வளர்ச்சியை முழுமையாக மதிப்பீடு செய்ய முடியும். பொய்யான பசப்பு வார்த்தைகள் மூலமும், பொய்யான வாக்குறுதிகள் மூலமும் பொய்யான பிரச்சாரத்தின் மூலமும் நம் மக்களைச் சிக்க வைக்கும் மற்ற அரசியல் கட்சிகளின் இடைத்தரகர்கள் உள்ளனர். நம் மக்கள் அறியாமையில் உழல்கின்றனர். நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த காலத்தின் நெருக்கடியான தன்மையை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. தங்களின் அரசியல் இலட்சியங்களை அடைவதற்கு நமது ஸ்தாபனத்தின் முக்கியத்துவத்தை அவர்கள் உணரவில்லை. நம் கையில் போதிய துணை வளங்கள் இல்லை என்பது துயரத்திற்குரியதாகும். நம்மிடம் பணம் இல்லை; பத்திரிகைகள் இல்லை. மிக இரக்கமற்ற கொடுங்கோன்மைக்கும் அடக்குமுறைக்கும் தினம் தினம் இந்தியா முழுவதிலும் உட்படுத்தப்படுகிறார்கள் நம் மக்கள்; இவை பத்திரிகைகளில் வெளிவருவதேயில்லை. சமூக, அரசியல் பிரச்சினைகள் பற்றிய நமது கருத்துகள் வெளிவராதபடி ஒரு திட்டமிட்ட சதி மூலம் பத்திரிகைகள் முழுமுனைப்புடன் இருட்டடிப்புச் செய்கின்றன. நமது மக்களுக்கு உதவியளிப்பதற்கு, விளக்கிப் பிரசாரம் செய்து அவர்களை ஸ்தாபன ரீதியாகத் திரட்டுவதற்குத் தேவையான ஒரு அமைப்பு தொடர்ந்து செயலாற்றுவதற்கான நிதி நம்மிடம் இல்லை.

நாம் எதிர்த்துச் சமாளிக்க வேண்டிய தடங்கல், சிரமங்கள் இவை. இந்த ஸ்தாபனத்தைக் கட்டி வளர்க்க விடாப்பிடியாகவும்

சுயநலமற்றும் நம் ஊழியர்கள் தங்களை ஈடுபடுத்திக் கொண்டது தான், இந்த கஷ்டங்களையும் சமாளித்து நமது பெடரேஷன் இந்த அளவில் வளர்ச்சி பெற்றதற்கு முற்றிலும் காரணமாகும். பம்பாய் நகர செடியூல்டு வகுப்பினர் பெடரேஷன் தலைவர் திரு. கண்பத் மஹாதேவ் ஜாதவ் ஆற்றிய அரும் பணிக்காக, அன்னாரைப் பாராட்டுவதற்கு நீங்கள் அனுமதிப்பீர்கள் என நான் உறுதியாக நம்புகிறேன். பணிகளைத் திட்டமிட்டு செயல்படுத்த போற்றற் குரிய ஆற்றலை அவர் பெற்றிருக்கிறார் என்பது எல்லோருக்கும் தெரியும். இந்த விழாவின் வெற்றிக்கு மிகப் பெருமளவு காரணம் அவருடைய முயற்சிகளும் அவரது சகாக்களின் முயற்சிகளுமே யாகும்.

சாதாரணமாக, இத்தகைய விழா நிகழ்ச்சிகளில், ஷெடியூல்டு வகுப்பினரின் சமூக, அரசியல் பிரச்சினைகள் பற்றி நான் பேசியிருப்பேன். நமது மக்களும் அதைத்தான் எதிர்பார்ப்பர். ஒரு குறிப்பிட்ட சாரார் மட்டுமே சம்பந்தப்பட்ட ஒரு பொருள் பற்றிய விவாதத்தில் நான் ஈடுபடப் போவதில்லை. அதற்குப் பதிலாக, பொதுப்படையான பரந்த அளவில் ஈர்ப்புப் பெறக் கூடிய ஒரு பொருள் பற்றி, அதாவது இந்தியாவின் எதிர்கால அரசியல் அமைப்புச் சட்டத்தின் பொதுக் கோட்பாடுகள், வடிவம் பற்றி பேச விழைகிறேன்.

என் முடிவின் காரணங்களை விளக்கிக் கூற வேண்டியது அவசியமாகும். செடியூல்டு வகுப்பினரின் இயக்கத்திற்குத் தலைமை யேற்று அதன் அன்றாடப் பிரச்சினைகளைச் சமாளிக்கும் பொறுப்பு தற்பொழுது என் தோள்கள் மீது இல்லை. நான் வசிக்கும் பதவியின் காரணமாக, அதிலிருந்து நான் விடுபட்டிருக் கிறேன்; அதை எடுத்துக் கொள்ளும் விருப்பமும் எனக்கில்லை. செடியூல்டு வகுப்பினருக்கு மட்டும் சம்பந்தப்பட்ட, அதாவது ஒரு பிரிவு மக்கள் மட்டும் சம்பந்தப்பட்ட பொருள் பற்றி நான் எடுத் துக் கொள்ளாததற்கு இது ஒரு காரணம்.

செடியூல்டு வகுப்பினர் சுயநலக்காரரர்கள் என்றும் தங்களைப் பற்றி மட்டுமே அக்கறை கொண்டவர்கள் என்றும் அடிக்கடி குற்றம் சாட்டப்படுகின்றனர். நாட்டின் அரசியல் பிரச்சினையின் தீர்வுக்கு ஆக்கபூர்வமான ஆலோசனைகள் அவர்களிடம் இல்லை என்றும் கூறப்படுகிறது. இந்தக் குற்றச்சாட்டு முற்றிலும் தவறான தாகும்; அது உண்மையெனில், தீண்டப்படாதார் மட்டுமே அந்தக் குற்றச்சாட்டிற்கு உட்பட்டவராகமாட்டார்கள். இந்தியா வில் மிகப்பெரும்பான்மை மக்கள் ஆக்கபூர்வமான ஆலோசனை களை வழங்குவதில்லை. ஆக்கபூர்வமாகச் சிந்திக்கக் கூடியவர்கள் இல்லை என்பது இதற்குக் காரணமல்ல. ஆக்கபூர்வமான சிந்த னைகள் அனைத்தும் அடைபட்டுக் கிடப்பதற்குக் காரணம் என்ன? பொதுவாக காங்கிரசிலிருந்து வெளிப்படும் யோசனைகளைத் தவிர வேறெதுவும் மதிக்கப்படவோ, ஏற்றுக் கொள்ளப்படவோ

கூடாது என்கிற நீண்டகாலத் தொடர்ந்த பிரசாரம் மக்கள் மனங்களில் ஆழப்பதிய வைக்கப்பட்டுள்ளதே அதற்குக் காரணமாகும். இந்த நாட்டின் ஆக்கபூர்வமான எல்லாச் சிந்தனையையும் இது தான் சாகடித்துவிட்டது. நாட்டின் பொதுவான அரசியல் முன்னேற்றத்திற்கான ஆக்கபூர்வமான ஆலோசனைகளை — அவற்றை நாடு பரிசீலிக்கத் தயார் என்றால் — முன் வைக்கும் ஆற்றலை செடியூல்டு வகுப்பினர் பெற்றுள்ளனர் என்பதை ஐயமுற எடுத்துக்காட்டுவதன் மூலம் அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு மறுக்கப்பட வேண்டும். பொதுவான அக்கறையுள்ள இந்தப் பொருளை இந்த சந்தர்ப்பத்தில் நான் ஏன் எடுத்துக் கொண்டேன் என்பதற்கு இரண்டாவது காரணம் மேற்சொன்ன தாகும்.

2

அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கும் பொறுப்பு

அரசியல் அமைப்பு சம்பந்தமாக என் மனதிலுள்ள ஆலோசனை களைத் திட்டவட்டமாக முன் வைக்கும் முன், இரண்டு அடிப் படையான கேள்விகளை எழுப்ப விரும்புகிறேன். முதலாவது, இந்தியாவுக்கு ஒரு அரசியல் அமைப்புச் சட்டத்தை யார் உரு வாக்க வேண்டும்? இந்தக் கேள்வியை எழுப்பவேண்டிய அவசியம் என்ன? முட்டுக்கட்டை நிலைக்குத் தீர்வுகண்டு இந்தியாவுக்குப் பிரிட்டிஷ் அரசு ஒரு அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்க வேண்டுமென்று கணிசமான மக்கள் நம்பிக் கொண்டிருக்கிறார் கள். அவர்கள் அவ்வாறு வெளிப்படையாகக் கூறாவிடினும் கூட அத்தகைய எண்ணம் முற்றிலும் தவறானது என்பதை அம்பலப் படுத்த வேண்டும். பிரிட்டிஷ் அரசால் உருவாக்கப்பட்டு இந்தியர் கள் மீது திணிக்கப்பட்ட ஒரு அரசியல் அமைப்புச் சட்டம் கடந்த காலத்தில் போதுமானதாக இருந்திருக்கலாம். ஆனால் இந்தியர் கள் தொடர்ந்து ஆரவாரத்துடன் கோரிக் கொண்டிருக்கும் எதிர் கால அரசியல் சட்டத்தின் தன்மையை மனதில் கொண்டால், திணிக்கப்படும் ஒரு அரசியல் சட்டம் பயனற்றது என்பது தெளி வாகும்.

முந்தைய அரசியல் அமைப்புச் சட்டங்களுக்கும் எதிர்கால இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திற்கும் இடையே அடிப்படை யான வேறுபாடு உள்ளது; இந்தியாவின் அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்க பிரிட்டிஷாரை இன்னமும் எதிர்பார்ப்பவர் கள் இந்த வேறுபாட்டை உணர்ந்து கொள்ளவில்லை எனத் தோன்றுகிறது. வேறுபாடு என்னவெனில் முந்திய அரசியலமைப் புச் சட்டங்கள், நிர்வாக முறிவு எழுவதைச் சமாளிக்க விதிக்கூறு வகுத்தன. எதிர்கால இந்திய அரசியல் சட்டத்தில் அத்தகைய

முறிவு நிலை (breakdown) குறித்து விதிப்பிரிவு இருக்க முடியாது. முறிவு நிலை பற்றிய விதிக்கூறுகளை இந்திய மக்கள் எதிர்த்து இகழ்ந்துரைக்கின்றனர்; (இப்பொழுது இருக்கும் அத்தகைய பிரிவு 1935-ஆம் ஆண்டில் இந்திய அரசு சட்டத்தின் அபகீர்த்தியான 93-ஆவது பிரிவாகும்). அதற்குக் காரணம், அச்சட்டத்தில் அத்தகைய பிரிவு எதற்காக, எவ்வாறு இடம்பெற்றது என்பதை அறிந்திலர். அவர்கள் ஒரு சமுதாயத்தின் அரசியல் வாழ்வை முறைப்படுத்தும் இரு அடிப்படை அம்சங்களைப் புரிந்து கொண்டால் அதன் முக்கியத்துவம் தெளிவாகும். முதலாவது அம்சம், அரசுச் சமுதாயத்திற்குச் சட்டமும் ஒழுங்கும் மருந்தாகும்; அரசுச் சமுதாயம் நோய்வாய்ப் பட்டால், இந்த மருந்து கொடுக்கப்பட வேண்டும். இந்த அம்சம் மிக முக்கியமானது; இதைக் (மருந்தைக்) கொடுக்கத் தவறிவிட்டால், சமுதாயத்திற்கும், நாகரிகத்திற்கும் எதிராக இழைக்கப்படும் குற்றம் என்று கருதப்படும். இரண்டாவது அம்சம்; எந்த அரசாங்கத்திற்கும் ஆட்சி செய்வதில் ஏகபோக உரிமை கிடையாது என்றபோதிலும், ஆட்சி செய்வதற்கு—அதாவது சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்துவதற்கு—ஒரு அரசாங்கம் அவசியம்; அதாவது அதைக் காட்டிலும் மேம்பட்ட அரசு அதன் இடத்தை ஏற்கும்வரை நிர்வாக நிலைகுலைவைச் சமாளிப்பதற்கான விதிமுறை இவ்விரு நோக்கங்களுக்கும் பயன்படுகிறது. எனவே மக்களுக்கு அமைதியும் சாந்தியும் அளிக்க இவ்விதிப் பிரிவு முக்கியத்துவம் பெறுகிறது. நாட்டை வன்முறையிலிருந்து காப்பாற்றக்கூடிய ஒரே ஒரு கருவி இதுதான். அரசியல் அமைப்பு ரீதியான அரசாங்கம் தோல்வியுறும்போது, நிர்வாகம் நிலை பெறுவதற்காகவேனும் முறிவைப் பற்றிய சட்டப்பிரிவு அவசியமாகிறது.

சென்ற காலத்தில், அரசியல் அமைப்பின் கீழ் இயங்கும் அரசாங்கத்திற்கும், அது தோல்வியுறும்போது அதன் இடத்தை ஏற்க சட்டத்தின்படி அமையும் அரசாங்கத்திற்கும் இடையே உள்ள வேறுபாடு ஒரு நடைமுறைப்படுத்தக் கூடியதொன்றே. இது ஏன் சாத்தியமெனில், இந்தியர்களுக்கு அரசியல் அமைப்பு அரசு அமைக்கும் உரிமையைச் சட்டப்படி அரசாங்கம் அமைக்கும் உரிமையைப் பிரிட்டிஷ் அரசு வழங்கிய அதேசமயம், அரசியல் அமைப்பு அரசாங்கம் தோல்வியுற்றால் அரசாட்சி செய்யும் உரிமையைத் தனக்கே வைத்துக் கொண்டது. எதிர்கால இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் இத்தகைய வேறுபாட்டிற்கு, இடமளிக்க முடியாது. அரசியல் அமைப்பு அரசாங்கத்தை அடையும் உரிமையை இந்தியர்களுக்கு வழங்கும் பிரிட்டிஷ் அரசு, அந்த அரசு இயங்குவதில் நிலைகுலைவு உரிமையையும் பிரிட்டிஷாரே வைத்துக் கொள்வது சாத்தியமாகாது. காரணம் மிக தெளிவானது. முன்பு உருவாக்கப்பட்ட இந்திய அரசியல் அமைப்புச் சட்டங்கள் இந்தியாவை ஒரு டொமினியனாக்கக் கருதவில்லை. இனி இந்தியா ஒரு டொமினியனாக இருக்கும் என்ற ஊகத்தின்

அடிப்படையில் எதிர்கால அரசியல் அமைப்புச் சட்டம் உருவாக்கப் படும். முறிவு நிலை பற்றிய சட்டப் பிரிவு அல்லது அரசியல் அமைப்புப்படி உருவாகும் அரசாங்கம் நிலைகுலையும்போது, ஆதிக்க அரசு அதன் இடத்தை ஏற்கக்கூடும் என்பதை டொமினி யன் அந்தஸ்து பெறாத நாட்டின் விஷயத்தில் ஒப்பீடு செய்ய முடியும். ஆனால் ஒரு டொமினியனைப் பொறுத்தவரை இவ்விரு நிலைகளை ஒத்திணைக்க முடியாது. டொமினியன் அல்லது ஒரு சுதந்திர நாட்டைப் பொறுத்தவரையும் கூட ஒரு அரசியல் அமைப் புச் சட்டப்படி இயங்கும் அரசாங்கமா அல்லது ஆட்சியை எதிர்த்த மக்கள் எழுச்சியா என்ற இரண்டில் ஒன்று தான் சாத்தியம்.

இதன் பொருள் என்ன? ஒரு இந்திய டொமனியனுக்குக் கான அரசியல் அமைப்புச் சட்டம் வரையப்படும்போது 'நாட்டில் நிலைகுலைவு ஏற்படும் சாத்தியபாடு உண்டு' என்ற அடிப்படை யில் இயற்ற முடியாது. இதை வேறுவிதமாகச் சொல்வதென்றால், 1) உருவாக்கப்படும் அரசியல் அமைப்புச் சட்டம் எல்லோருடைய கீழ்படிதல் மட்டுமின்றி, அவர்களது நன்மதிப்பையும் பெரும் வகையில் அமைய வேண்டும்; எல்லோரும், அனைவரும், இந்திய அரசியல் வாழ்வில் உள்ள அனைத்து முக்கிய அடிப்படைக் கூறு களும், அரசியலமைப்புச் சட்டத்திற்கு ஆதரவும் காப்பும் அளிக்க வேண்டும். அரசியல் அமைப்புச் சட்டம் இந்தியர்களால் இந்தியர் களுக்காக, இந்தியர்களின் மனமார்ந்த ஒப்புதலைப் பெற்று உருவாக்கப்பட்டால்தான் இது கைகூடும். அரசியல் அமைப்புச் சட்டம் பிரிட்டிஷ் சர்க்காரால் திணிக்கப்படுமானால், அதை ஒரு பிரிவினர் ஏற்றுக் கொண்டும் மற்றொரு பிரிவினர் எதிர்ப்பும் தெரிவித்தால், அரசியல் சட்டத்திற்கு விரோதமான பிரிவுகள் ஆட்சிகள் எழும்; அவை அரசியல் அமைப்புச் சட்டத்தை அமு லாக்குவதற்குப் பதிலாக அதைத் தகர்ப்பதற்கான சக்தியாக அமைந்துவிடும். அத்தகைய அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு ஆதரவும் காப்பும் அளிக்க வேண்டும். அரசியல் அமைப்புச்சட்டம் எதிரான கட்சி, அதை அழிப்பதுதான் தனது ஒ்ரே கடமை என்று கருதி, அதனை அமுல்படுத்திவரும் கட்சிக்கு எதிராக தென் அமெரிக்கப் பாணியில்''பறைசாற்றும்'' பணியில் ஈடுபடக் கூடும்.

அரசியல் அமைப்புச் சட்டத்தை அமுலாக்க பிரிட்டிஷார் இங்கு இருக்கப்போவதில்லையாதலால், அச்சட்டத்தை அவர்கள் தயாரிப்பது பயனற்றதாகும். சக்திவாய்ந்த ஒரு பிரிவினர் அல்லது அத்தகைய பிரிவுகள் ஒருங்கிணைந்து மற்ற பிரிவினர் மீது தங்கள் அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திணித்தாலும் அதே விளைவே ஏற்படும். எனவே இந்தியர்கள் டொமினியன் அந்தஸ்தை விரும் பினால் தங்களுக்காக ஓர் அரசியல் அமைப்புச் சட்டத்தை உரு வாக்கும் பொறுப்பிலிருந்து அவர்கள் தப்பிக்க இயலாது என்பதே எனது உறுதியான கருத்தாகும். தப்பிக்க முடியாத நிலைமை இது.

3

அரசியல் நிர்ணய சபை

நான் எழுப்ப விரும்பும் இரண்டாவது கேள்வி, ஒரு அரசியல் அமைப்புச் சட்டத்தை இயற்றும் பணியை நிறைவேற்ற ஒரு அரசியல் நிர்ணய சபை இருக்க வேண்டுமா? அரசியல் நிர்ணய சபை என்பது எல்லோருடைய உதடுகளிலிருந்தும் வருகிறது. காங்கிரஸ் மந்திரி சபைகள் ராஜிநாமா செய்வதற்கு முன், மாகாண காங்கிரஸ் கட்சிகள் தங்கள் தீர்மானங்களில் இந்தியர்கள் கொண்ட அரசியல் நிர்ணயசபையால் இந்தியாவுக்கு அரசியல் அமைப்புச் சட்டம் இயற்றப்படவேண்டும் எனக் கோரின. கிரிப்ஸ் இன் ஆலோசனைகளில் (Cripps Proposals) அரசியல் நிர்ணய சபை சேர்க்கப்பட்டிருந்தது. சாப்ரு (Sapru) கமிட்டியும் அதையே சொல்லிற்று.

அரசியல் நிர்ணயசபைக்கான ஆலோசனைகளை முற்றிலுமாக எதிர்க்கின்றேன் என்று நான் கூறியாக வேண்டும். அது நிச்சயமாகத் தேவையற்றது. அது ஆபத்தான திட்டம் என்று நான் கருதுகிறேன். அது இந்நாட்டை ஒரு உள் நாட்டு போருக்கு இட்டுச் செல்லலாம். முதலாவதாக, ஒரு அரசியல் நிர்ணய சபை அவசியம் தானா என்றே எனக்குத் தோன்றவில்லை. அமெரிக்க அரசியல் அமைப்புச் சட்டத்தின் தந்தையர்கள், அதை இயற்றிய போது இருந்த நிலையில் இந்தியர்கள் இன்று இல்லை. ஒரு சுதந்திர மக்களுக்கான அரசியல் அமைப்புச் சட்டத்திற்குப் பொருந்துகிற கருத்துக்களை அவர்கள் வளாக்க வேண்டியிருந்தது, முன்மாதிரியாக் எடுத்துக் கொள்ள எந்த அரசியல் அமைப்பின் வரைவும் அவர்களிடம் இல்லை. ஆனால், இந்தியர்களைப் பொறுத்தவரை நிலைமை அவ்வாறு இல்லை. அரசியல் அமைப்பு பற்றிய கருத்துக்களும் வடிவங்களும் இவர்கள் முன் உள்ளன. மேலும், மாறுபாடுடைய முன்மாதிரிகள் மிகக் குறைவு. தேர்ந்தெடுப்பதற்கு இரண்டு அல்லது மூன்று முன் வரைவுகள் உள்ளன. மூன்றாவதாக, இந்தியர்களிடையே பெரிய கருத்து வேறுபாடுகளைத் தோற்றுவிக்கக் கூடிய எந்த பெரிய, அரசியல் அமைப்பு சார்ந்த பிரச்சினைகளும் இருப்பதற்கில்லை. எதிர்கால இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் கூட்டாட்சி (federal) அமைப்பைக் கொண்டதாக இருக்க வேண்டுமென்பதும் ஒப்புக் கொள்ளப் பட்டுள்ளது. எந்தெந்த துறைகள் (Subjects) மையத்திற்குப் போக வேண்டும் எவை மாநிலங்களுக்கு என்பதுவும் கிட்டத்தட்ட முடிவு செய்யப்பட்டுள்ளன. மையத்திற்கும் மாநிலங்களுக்குமிடையே நிதிப்பிரிவினை பற்றியும் எந்தச் சண்டை சச்சரவும் இல்லை. வாக்குரிமைபற்றியும் நீதித்துறை, சட்டசபை மற்றும் நிர்வாகம் இவற்றிடையே நிலவ வேண்டிய உறவுகள் பற்றியும் சச்சரவு இல்லை. சர்ச்சைக்குரிய தீர்வு காணப்படாத முனைப்பான

விஷயம், மீதமுள்ள (ஒதுக்கப்படாத) அதிகாரங்கள் பற்றியது; அதாவது அவை மத்திய அரசிடம் இருக்க வேண்டுமா அல்லது மாநிலங்களிடம் இருக்க வேண்டுமா என்பது. ஆனால் இது கவலைப்பட வேண்டிய விஷயமல்ல. உண்மையில் இன்றைய இந்திய அரசுச்சட்டத்தில் கண்டுள்ள வழிவகைகளைச் சிறந்த சமரசமாக ஏற்றுக் கொள்ளலாம்.

அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்க ஓர் அரசியல் நிர்ணய சபை தேவை என்று எனக்குத் தோன்றவில்லை. 1935 இந்திய அரசுச் சட்டத்தில் இந்தியாவின் அரசியல் அமைப்புச் சட்டம் பெருமளவு வரையப்பட்டுள்ளது. அதையே மீண்டும் செய்வதற்கு ஒரு அரசியல் நிர்ணய சபையை நியமிப்பது ஒரு மிகையான, தேவையற்ற செயல் என்றே தோன்றுகிறது. தேவையானது என்னவெனில், 1935 இந்திய அரசுச் சட்டத்தில் உள்ள டொமினியன் அந்தஸ்திற்கு முரண்பாடான பகுதிகளை நீக்க வேண்டியது மட்டுமே.

அரசியல் நிர்ணயசபைக்கு அளிக்கக் கூடிய ஒரே பணி, வகுப்புப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண்பதாகும். ஆனால் அரசியல் நிர்ணயசபை பணிகளுக்கான வரையறைகள் எதுவாக இருப்பினும், வகுப்புப் பிரச்சினை அவற்றில் இடம்பெறக் கூடாது என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன். அரசியல் நிர்ணய சபை எவ்வாறு அமைய வேண்டும் என்பதுபற்றி சாப்ரு கமிட்டியின் யோசனைகளைக் கவனியுங்கள். உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 160 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மாநிலச் சட்ட மன்றங்களின் உறுப்பினர்களைக் கொண்ட கூட்டு வாக்காளர் தொகுதியினால் விகிதப் பிரதிநிதித்துவ அடிப்படையில் தேர்தல் நடைபெறும். சபைக்கு வந்து வோட்டளித்தவர்களில் முக்கால்வாசி பேர் ஒப்புதல் பெற்றது என்கிற அடிப்படையில் முடிவு எடுக்கப் படும். இந்த அரசியல் நிர்ணய சபையைச் சிறுபான்மையினர் ஓர் நம்பகமான அமைப்பாக ஏற்று அதன் பாரபட்சமற்ற தன்மையில் முழு நம்பிக்கை வைக்க முடியுமா? இக்கேள்விக்குரிய விடையோடு மேலும் இரு கேள்விகளுக்கு ஒருவர் என்ன விடை அளிக்கக் கூடும் என்பதைப் பொறுத்தே இருக்கும். அக்கேள்விகளாவன: இச் சபைக்கு சிறுபான்மை வகுப்பின் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப் படுபவர்கள், அதன் உண்மைப் பிரதிநிதிகளாக இருப்பர் என்று உத்திரவாதம் அளிக்க முடியுமா? இரண்டாவதாக, ஒரு குறிப் பிட்ட சிறுபான்மையினரின் உரிமைக் கோரிக்கைகள் பற்றிய சபையின் முடிவு அந்தச் சிறுபான்மையினர் மீது திணிக்கப்பட மாட்டாது என்று சபை உத்திரவாதம் செய்ய முடியுமா? இந்த இரு கேள்விகள் ஒவ்வொன்றைக் குறித்தும் சிறுபான்மையினர் அச்சங் கொள்ளத் தேவையில்லை என்று என்னால் கூறமுடியாது.

இந்தக் கேள்விகளை எடுத்துக் கொள்வதற்குமுன், கிரிப்ஸின் அரசியல் நிர்ணய சபைக்கும் சாப்ரு அரசியல் நிர்ணய சபைக்கும்

இடையே உள்ள வேறுபாடுகள் எவை என்பதைச் சுட்டிக் காட்டு கிறேன்.

1. சாப்ரு கமிட்டி அரசியல் நிர்ணய சபைக்கு ஒதுக்கியுள்ள மொத்த எண்ணிக்கை 160 உறுப்பினர். சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் எண்ணிக்கை எதையும் நிர்ணயிக்கவில்லை. மாநிலச் சட்ட மன்றங்களின் மொத்த எண்ணிக்கையில் 10 சதவிகிதத்தினர் கொண்டதாக அரசியல் நிர்ணயசபை இருக்கலாம் என்பது அவரது யோசனையில் அடங்கி யுள்ளது. அதன்படி மொத்த எண்ணிக்கை 158 ஆகும்; வித்தியாசம் இரண்டேயாகும்.

2. சாப்ரு கமிட்டியின்படி, அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல், விகிதப் பிரதிநிதித்துவ அடிப்படையில் கூட்டு வாக்காளர் தொகுதி முறைப்படி நடைபெறும். அரசியல் நிர்ணய சபையின் கூட்டமைவைப் பொறுத்தவரை சாப்ரு திட்டத்திற்கும் கிரிப்ஸ் திட்டத்திற்கும் வித்தியாசம் ஏது மில்லை.

3. கிரிப்ஸ் திட்டத்தின் கீழ், வகுப்புவாரி ஒதுக்கீடு இல்லை. சாப்ரு திட்டம் குறிப்பிட்ட வகுப்பினர்களுக்கு விகிதா சாரப்படி இடங்களை நிர்ணயித்து ஒதுக்கீடு செய்வதால், அது கிரிப்ஸ் திட்டத்திலிருந்து வேறுபடுகிறது. இந்த வேறு பாடு பெயரளவில் மட்டுமே. கிரிப்ஸ் திட்டம் எண்ணிக் கையை நிர்ணயிக்காவிட்டாலும், விகிதப் பிரதிநிதித்துவ முறைப்படியான ஒதுக்கீட்டில் முடிந்திருக்கும். இரண்டு திட்டங்களின்படி பிரதிநிதத்துவப் பங்கீடு வித்தியாசத்தைக் கீழ்கண்ட அட்டவணையில் காணலாம்:

வகுப்புகளும் நலன்களும்	அரசியல் நிர்ணய சபையில் இடங்களின் பங்கீடு	
	கிரிப்ஸ் திட்டத்தின் கீழ்	சாப்ரு திட்டத்தின் கீழ்
இந்துக்கள்	77	51
முஸ்லிம்கள்	50	51
ஷெடியூல்டு வகுப்பினர்	15	20
சீக்கியர்	3	8
இந்திய கிறிஸ்துவர்	2	7
ஆங்கிலோ-இந்தியர்	1	2
ஐரோப்பியர்கள்	6	1
மலைவாழ் பழங்குடியினர்	2	3

1	2	3
சிறப்புக் குழுவினர்	...	16
மற்றவர்கள்	2	1
	158	160

அரசியல் நிர்ணய சபையின் கலவையில் ஒவ்வொரு வகுப்பினருக்கான எண்ணிக்கையை மட்டும் சாப்ரு கமிட்டி நிர்ணயிக்கவில்லை; ஆனால், இந்துக்களோடு முஸ்லிம்களுக்குச் சமத்துவம் அறிவித்துள்ளது, இந்த மாறுபாட்டிற்குக் கமிட்டி கூறும் வாதம், இந்தச் சலுகையைக் கணக்கில் கொண்டு, அரசியல் நிர்ணய சபைத் தேர்தலுக்குக் கூட்டு வாக்காளர் தொகுதி அடிப்படையை அது கோரியுள்ளது என்பதாகும். இதில், கிரிப்ஸின் ஆலோசனைகளை இக்கமிட்டி முற்றிலும் த்வறாக புரிந்து கொண்டுள்ளது என்றே கூற வேண்டும். கூட்டு-வாக்காளர் தொகுதி கிரிப்ஸின் திட்டங்களில் அடங்கியுள்ளது. அதன் ஒரு பிரிவு கூறுகிறது:-

''மாகாணசட்ட சபைகளில் கீழ் சபைகளின் உறுப்பினர்கள் ஒரு வர்க்காளர் குழுவாக (electoral college) அமைவர்''. கூட்டுத் தேர்தல் தொகுதியடிப்படையில் தேர்தல் நடைபெறும் என்பதை இது வேறு முறையில் கூறுவதேயாகும். ஒரு சாராருக்கு அள்ளிக் கொடுத்துவிட்டு, அதன் காரணமாய் மற்ற வகுப்பினர் இடரில் மாட்டப்படுகின்றனர்.

4. கிரிப்ஸ் திட்டப்படி, சபைக்கு வந்திருந்து வோட்டுப் போடுபவரின் பெரும்பான்மை வாக்கு அடிப்படையில் முடிவு செய்யப்படும். சாப்ரு திட்டத்தின்படி, ஆஜராகி ஓட்டுப் போடுபவர்களில் நான்கில் மூன்று என்ற பெரும்பான்மை அடிப்படையில் முடிவு எடுக்கப்படும்.

இப்பொழுது பழைய கேள்விகளுக்குத் திரும்புவோம். முதல் கேள்வியைப் பொறுத்தவரை, நிலைமை எவ்வாறு உள்ளது? இது பற்றி ஒருவர் கருத்துத் தெரிவிப்பதற்கு, மாநில சட்டசபைகளில் இடங்களின் எண்ணிக்கை வகுப்புவாரியாக எவ்வாறு பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை முதலில் தெரிந்து கொள்வது அவசியம். பின்வரும் அட்டவணை நிலைமையைத் தொகுத்துக் கூறுகிறது:

மாநில சட்ட சபைகளில் வகுப்பினர்க்களுக்கு பிரித்து கொடுத்துள்ள இடங்கள்*

வகுப்பினர்	பொது	பெண்கள்	பல்கலைக்கழகம்	தொழிற்சங்கங்கள்	வாணிகம்	நிலக்கிழார்கள்	மொத்தம்
1	2	3	4	5	6	7	8
1. இந்துக்கள்	651	26	7	33	31	22	770
2. முஸ்லிம்கள்	482	10	1	5	6	13	517
3. செடியூல்டு வகுப்பினர்	151	...	...	...	...	...	151
4. இந்திய, கிருஸ்தவர்கள்	20	1	...	...	...	...	21
5. ஆங்கிலோ-இந்தியர்	11	1	...	...	...	...	12
6. சீக்கியர்கள்	34	1	...	...	...	1	36
7. ஐரோப்பியர்கள்	26	...	...	...	19	1	46
8. பழங்குடியினர்	24	...	...	...	...	...	24
மொத்தம்	1,399	39	8	38	56	37	1,577

சாப்ரு திட்டத்தில் இடம்பெறும்—ஆனால் கிரிப்ஸ் திட்டத்தில் இடம்பெறாத—வகுப்புவாரி ஒதுக்கீட்டிற்கு ஏதேனும் மதிப்பு இருக்கிறதா? ஒரு வகுப்பு மற்ற வகுப்பினரின் அங்கத்தினர்களின் தேர்தலில் எந்த அளவு செல்வாக்கை பிரயோகிக்க முடியும் என்பதை அது பொறுத்தது. இது பற்றி சாத்தியக் கூறுகள் என்ன? மேலும் ஒரு அட்டவணையைத் தருகிறேன்.

* 1. பல்கலைக் கழகங்கள்; (2) தொழிற்சங்கங்கள் (3) வியாபாரிகள் (4) நிலச் சுவான் தார்—இவற்றிற்கு இடங்கள் எவ்வாறு வினியோகிக்கப்பட்டுள்ளன என்பதற்குச் சரியான புள்ளி விவரங்கள் இல்லை. வகுப்பினரிடையே அவை எவ்வாறு ஒப்பீடு முறையில் பிரிக்க முடியும் என்பது ஊகத்தின் அடிப்படையில்தான்.

இடங்கள் அடிப்படையில் வாக்குகளின் எண்ணிக்கை

வகுப்புகள்	அரசியல் நிர்ணய சபைக்கு ஓட்டு போடுபவர்கள்	அரசியல் நிர்ணய சபையில் இடங் களின் கோட்டா	கோட்டாவைத் தேர்ந்தெடுக்க தேவைப்படும் ஓட்டுக்கள்	தேவைக்கு அதிக மான ஓட்டர் கள் தேவைக்கு குறைவான ஓட்டர்கள்
1. இந்துக்கள்	778	51	561	+ 217
2. முஸ்லீம்கள்	561	51	517	+ 44
3. செடியூல்ட் வகுப்பினர்	151	20	220	− 69
4. இந்திய கிருஸ்தவர்கள்	21	7	77	− 56
5. சீக்கியர்கள்	36	8	88	− 52
6. ஐரோப்பியர்கள்	46	1	11	+ 35

அட்டவணையிலிருந்து கீழ்க்கண்ட முடிவுகள் பெறப்படு கின்றன:

1) மொத்த ஓட்டுகள் 1577 என்றும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கை 160 என்றும் உள்ள தால் விகிதாசார முறைப்படியான பிரதிநிதித்துவத்தின் பங்கீடு தோராயமாக 10 + 1 = 11 ஆகும்.

2) பங்கீட்டை 11 என்று எடுத்துக்கொண்டால் இந்துக்கள் 217 ஓட்டுக்களையும், முஸ்லீம்கள் 44ஐயும், ஐரோப்பியர் கள் 35-ஐயும், (தேவைக்கு அதிகமாக உள்ளவை) கொடுத்து உதவலாம். அதே சமயம் செடியூல்டு வகுப்பினருக்கு 69 ஓட்டுகளும், இந்திய கிறிஸ்துவர்களுக்கு 56 ஓட்டுகளும் சீக்கியர்களுக்கு 52 ஓட்டுகளும் குறைவாக உள்ளன.

இதையே வேறு முறையில் பார்த்தால்:

1) தங்களுக்குள்ள 217 அதிகப்படியான வோட்டுக்களைக் கொண்டு இந்துக்கள் அவர்களைச் சார்ந்து நிற்கும் இந்துக் கள் அல்லாதவர்கள் 20 பேரைத் தேர்ந்தெடுக்கலாம். முஸ்லீம்கள் தங்களிடமுள்ள 44 அதிகப்படியான வோட்டு மூலம் தங்களைச் சார்ந்து நிற்கக் கூடிய முஸ்லீம் அல்லாத வர்கள் 4 பேரைத் தேர்ந்தெடுக்கலாம். ஐரோப்பியர்கள் தங்களிடம் அதிகப்படியாக உள்ள 35 வோட்டைக் கொண்டு அவர்களைச் சார்ந்திருக்கும் ஐரோப்பியரல்லாத வர் 3 பேரைத் தேர்ந்தெடுக்கலாம்.

2) ஷெடியூல்டு வகுப்பினருக்கு 69 வோட்டுகள் குறைவாக உள்ளன. அவர்கள் தங்கள் வோட்டு பலத்தில் 13 உறுப்பினர்களையே தேர்ந்தெடுக்க முடியும்; 7 இடங்களுக்கு அவர்கள் இந்துக்கள், முஸ்லீம்கள். ஐரோப்பியர்களை எதிர்பார்க்க வேண்டும். 56 ஓட்டுகள் குறைவாக உள்ள இந்திய கிறிஸ்துவர்கள், தங்கள் பலத்தில் 2 இடங்களுக்கே தேர்ந்தெடுக்க முடியும். மீதியுள்ள 5 இடங்களுக்கு இந்துக்கள், முஸ்லீம்கள் அல்லது ஐரோப்பியர்களை நம்பியிருக்க வேண்டும். அதுபோலவே 52 வோட்டுகள் குறைவாக உள்ள சீக்கியர்கள் அவர்கள் வோட்டுகளில் 3 இடங்களுக்கு மட்டுமே தேர்ந்தெடுக்க முடியும். மீதியுள்ள 5 இடங்களுக்கு இந்துக்கள், முஸ்லீம்கள் அல்லது ஐரோப்பியர்களை எதிர்பார்க்க வேண்டும்.

இதுதான் நிலை. சிறிய மைனாரிட்டியினருக்கு ஒதுக்கப்பட்டுள்ள அதிகப்படியான பிரதிநிதித்துவத்துவம் ஒரு கண் துடைப்பே. அவர்களின் பிரதிநிதித்துவம் மற்றவர்களைச் சார்ந்திருக்கிறது; அதை எந்த அர்த்தத்திலும் உண்மையான பிரதிநிதித்துவம் என்று கூறமுடியாது.

இப்போது, இரண்டாவது கேள்வியை எடுத்துக் கொள்கிறேன். அரசியல் நிர்ணய சபையில் முடிவுகள் எடுப்பது பற்றி சாப்ரு கமிட்டி கொடுத்துள்ள விதி ஒரு பாதுகாப்பான விதியா? சாதாரண மெஜாரிட்டி என்ற விதியைக் கிரிப்ஸ் திட்டம் முன் வைத்தது. அது அபத்தமான ஆலோசனை. நல்லறிவுடைய எந்த மனிதனும் அந்த யோசனையை முன் வைத்திருக்க முடியாது. அரசியல் அமைப்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைச் சாதாரண பெரும்பான்மை முடிவுக்கு விடப்பட்ட எந்த நிகழ்ச்சியையும் நான் கேள்விப்பட்டதில்லை.

பெரும்பான்மை விதியை முன் வைத்ததற்குக் கிரிப்ஸ் திட்டம் கொடுத்த சமாதானம் என்னவெனில், சிறுபான்மையினரின் நலனைப் பாதுகாப்பதற்கு மேலும் வழி வகுக்கப்படப் போவதாகக் கூறியதுதான். பிரிட்டிஷ் மன்னராட்சிக்கும் இந்திய அரசியல் நிர்ணய சபைக்கும் இடையே, பிரிட்டிஷ் பார்லிமெண்ட் தன்னுடைய ஆதிபத்திய உரிமையைக் கைவிட்டு இந்தியாவைச் சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்துவதற்கு முன்பு, செய்து கொள்ளப்படவிருந்த ஒப்பந்தம் மூலம் இந்தப் பாதுகாப்பு அளிக்கப்படுவதாக இருந்தது. (இந்திய) அரசியல் அமைப்புச் சட்டத்தையும் புறக்கணித்து மேலாண்மை அதிகாரம் பெறக் கூடியதாக அந்த ஒப்பந்தம் அமையக்கூடியதாக இருந்தால் அதற்கு அர்த்தம் உண்டு. ஆனால் இந்த ஆலோசனை சாத்தியமே அல்ல. காரணம், கிரிப்ஸ் திட்டப்படி, இந்தியா தனதுவிருப்பப்படி, ஒரு டொமினியனாகவோ அல்லது ஒரு சுதந்திர நாடாகவோ ஆகும் உரிமை பெற்றிருந்தது. இந்தியா ஒரு டொமினியனாக மாறியதும் முன்

சொன்ன ஒப்பந்தமானது, அரசியல் அமைப்புச் சட்டத்தை மீற முடியாதபடி ஆக்கும் சட்டத்தை இயற்றுவதற்குத் தேவையான எல்லா சட்ட ரீதியான அதிகாரத்தையும் அது பெற்றதாகிவிடும். அவ்வாறாயின் ஒப்பந்தத்தின் மதிப்பு ஒரு நாட்காட்டியின் மதிப்பை விட மேற்பட்டதாகாது. வேண்டுமானால், சிறுபான்மையினரின் உறுப்பினர்கள் அதை ஒரு காலண்டரைப் போல 'தங்கள் வீட்டுச் சுவர்களில் தொங்கவிடலாம். அயர்லாந்து ஒப்பந்தத்திற்கும் இக்கதியே ஏற்பட்டது. அயர்லாந்து ஒரு டொமினியனாக ஆகாதவரை அவ்வொப்பந்தம் அந்நாட்டின் அரசியல் அமைப்பின் மீது மேலாண்மை உரிமை பெற்றதாக இருந்தது. ஆனால் அயர்லாந்து ஒரு டொமினியனாக மாறியவுடன் சுதந்திர அயர்லாந்தின் பார்லிமெண்ட் ஒரு எளிமையான சட்டத்தை இயற்றி பழைய ஒப்பந்தத்தின் மேலாண்மை உரிமையை ரத்து செய்து விட்டது. பிரிட்டிஷ் பார்லிமெண்ட்டும் வாளாவிருந்தது. ஏனெனில், அயர்லாந்து டொமினியனாக ஆகிவிட்டதால், தன்னால் ஒன்றும் செய்ய முடியாது என்பதை அது அறியும். சிறந்த அறிஞரான அவர் (கிரிப்ஸ்), சிறுபான்மை வகுப்பினருக்கு உறுதியளிப்பதற்கான இத்தகைய அர்த்தமற்ற நிபந்தனையை ஏன் முன் வைத்தார் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

சாப்ரு யோசனைகளில் உள்ள முன் காப்புகள் அடங்கிய பகுதி ஒரு முன்னேற்றம் போலத் தோற்றமளிக்கிறது. உண்மையில் அது முன்னேற்றமா? இல்லவே இல்லை. 160இல், 4இல் 3 பெரும்பான்மை என்றால் ஒரு கருத்து ஏற்றுக் கொள்ள 120 உறுப்பினர்களின் ஆதரவு கிடைக்க வேண்டும். இது ஒரு மேம்பாடு என்று ஏற்றுக்கொள்வதற்கு முன்னால், இந்த 120 பேர் கொண்ட கூட்டணி எவ்வாறு அமைய முடியும் என்பது பற்றி ஒருவர் தெரிந்திருக்க வேண்டும். இந்துக்களும் முஸ்லீம்களும் இணைந்தால் அவர்களின் எண்ணிக்கை 102 ஆகும். 120 ஆவதற்கு 18 பேர்கள்தான் தேவை. விசேஷ இடங்களில் பெரும்பான்மையும் மற்றவர்களிடமிருந்து சிலவும் இந்த கூட்டணிக்குச் சுலபமாகக் கிடைக்கலாம். இம்மாதிரி நடந்தால், சபையின் முடிவு செடியூல்டு வகுப்பினர், சீக்கியர் இந்திய கிறிஸ்தவர்கள் போன்றோர் மீது திணிக்கப்படுவதாகும் என்பது தெளிவு. அதுபோல, முஸ்லீம்கள் தனிமைப்படுத்தப்பட்டால், முடிவு ஒரு கூட்டு முடிவாக இருக்காது; அதற்குப் பதிலாக, முஸ்லீம் அல்லாதவர்களால் முஸ்லீம்கள் மீது திணிக்கப்படும் ஒன்றாகும். இவ்வாறு சில வகுப்பினர்கள் மற்றவர்களுக்கு முட்டுக்கட்டை போட அல்லது அவர்களைத் தந்திரத்தால் முடக்கும் நோக்கத்துடன் வரிசைமாறி மாறி இணையும் சாத்தியக் கூறுகளைச் சாப்ரு கமிட்டி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். நான்கில் மூன்று பெரும்பான்மை என்று வரும்போது, அதில் மற்ற பகுதியினரில் 50 சதவிகிதத்தினராவது இருக்க

வேண்டும் என்பதைச் சாப்ரு கமிட்டி சேர்த்திருக்குமானால் ஏதோ கொஞ்சம் பாதுகாப்பாவது இருந்திருக்கும்.

ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் அரசியல் அமைப்புச் சட்டத்தை இயற்றுவதில் கையாளப்பட்ட வழிமுறைகளைப் பின்பற்றி, சாப்ரு கமிட்டி மேலும் ஒரு நிபந்தனையைச் சேர்த்திருக்கலாம். அதாவது, சபை முடிவெடுக்கையில் அதனில் வகுப்பினரின் சம்பந்தப்பட்ட பகுதி, சபைக்கு வெளியிலுள்ள அச்சிறுபான்மை சமூகத்தினரின் பிரதிநிதிகளால் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற விதியைச் சேர்த்திருக்கலாம். சாப்ரு கமிட்டி வகுத்துள்ள அரசியல் நிர்ணய சபைக்கான திட்டத்தில், இத்தகைய பாதுகாப்பு விதிகள் எதுவும் இடம் பெறவில்லை. இதனால் அரசியல் நிர்ணய சபை ஒரு சூழ்ச்சி வலையாக ஆகிவிட்டது.

அரசியல் நிர்ணய சபைக்கான திட்டத்திற்கு எதிரான வாதங்கள் மேலும் பல உள்ளன. அதில் ஒன்றைக் கூறுகிறேன். இது என்னைப் பெரிதும் கவர்ந்தது என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். ஸ்விட்சர்லாந்துக்கும் இங்கிலாந்துக்கும் இடையே ஏற்பட்ட இணைப்பைப் பற்றிய வரலாற்றைப் படித்த போது, ஸ்காட்லாந்து பார்லிமெண்டின் சம்மதத்தைப் பெறுவதற்காகக் கையாளப்பட்ட லஞ்சம், கைக்கூலி பற்றி படித்து நான் அதிர்ச்சியடைந்தேன். ஸ்காட்லாந்து பார்லிமெண்ட் முழுவதுமே விலைபேசி வாங்கப்பட்டது. இந்திய அரசியல் நிர்ணயசபையில், குறிப்பிட்ட பிரிவினர் விரும்பும் முடிவுக்கு ஆதரவு தேட லஞ்சம், கைக்கூலி கொடுப்பது ஆகியவை கையாளப்படுத்தப்படுவதற்கான வாய்ப்புகள் உண்மையில் உள்ளன. அவற்றின் விளைவுகளை ஒதுக்கிவிட முடியாது. அவ்வாறு நடைபெற்றால், அரசியல் நிர்ணய சபை கேலிக்கூத்தாகவே ஆக்கப்படுவதோடு, அச்சபையின் முடிவுகளைக் கட்டாயத்துடன் அமல்செய்ய முற்படும் எந்த முயற்சியும் உள்நாட்டுப் போரில் தான் கொண்டு விடும்.

எனவே அரசியல் அமைப்பு சபைக்கான திட்டம் நன்மை பயக்காது, ஆபத்தானது, மேற்கொள்ளக் கூடாதது என்பதே என்னுடைய தீர்க்கமான கருத்தாகும்.

4

ஒரு புதிய அணுகுமுறையின் அவசியம்

அரசியல் நிர்ணயசபை சரியான பாதை இல்லையெனில், மாற்றுவழி என்ன என்று என்னைக் கேட்கலாம். அத்தகைய கேள்விக்கணைகள் என்னை நோக்கிவரும் என்பதை நான் அறிவேன். வகுப்புப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது கடினமாகி விட்டதன் காரணம் அது தீர்க்கப்பட முடியாத ஒன்று என்பதாலல்ல, அரசியல் நிர்ணய சபை என்கிற சாதனத்தை இதுவரை

நாம் பயன்படுத்தாததாலும் அல்ல என்பதே. என் உறுதியான எண்ணம் அணுகுமுறை அடிப்படையிலேயே தவறாக இருப்பது தான் தீர்வு காண இயலாமைக்குக் காரணம் என்பேன். இன்றைய அணுகுமுறையிலுள்ள குறைபாடு என்னவெனில், மூலக் கோட்பாடுகளுக்கு பதிலாக் செயல்முறைகளிலிருந்து துவங்குவதுதான். கோட்பாடு ஏதும் இன்மையே கோட்பாடாக இருந்து வருகிறது! செயல்முறைகள் தான் தொடர்கின்றன. ஒரு செயல்முறை தோற்றால், மற்றொன்று முயற்சிக்கப்படுகிறது. இப்படி ஒரு முறையிலிருந்து மற்றொன்றுக்குத் தாவுவது வகுப்புப் பிரச்சினையை திகைக்க வைக்கும் புதிராக ஆக்கி விட்டது. எந்தக் கோட்பாடும் இல்லையாதலால் ஒரு குறிப்பிட்ட செயல்முறை ஏன் தோற்றது என்பதைக் கூற வழிகாட்டுதல் எதுவும் இல்லை. கோட்பாடு ஏதும் இல்லாததால் எந்த புது செயல்முறையும் வெற்றிபெறும் என்று உறுதியளிக்க முடியாது.

வகுப்பு பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எடுக்கப்படும் முயற்சிகள், ஒன்று அடாவடிக்காரனுக்குப் பணிந்து போகும் ஒரு கோழையின் திட்டமாகவோ அல்லது அடாவடிக்காரன் எளியவர் மீது அதிகார ஆணையிடுவதாகவோ இருக்கிறது. ஒரு வகுப்பு எப்பொழுது பலமுள்ளதாக வளர்ந்து சில அரசியல் அனுகூலங்கள் கோருகிறதோ, அப்பொழுதெல்லாம் அதன் நல்லெண்ணத்தைச் சம்பாதிப்பதற்காக ச்லுகைகள் அளிக்கப்படுகின்றன. அதன் கோரிக்கைகளை நடுநிலை நோக்கோடு பரிசீலிப்பதில்லை. அதன் தகுதி பற்றிச் சரியாகக் கணிப்பதில்லை. இதன் விளைவாக கோரிக்கைகளுக்கும் எல்லை இல்லை; சலுகைகளுக்கும் எல்லையில்லை. ஒரு சிறுபான்மை சமூகம் தனக்குத் தனித் தொகுதி வேண்டுமென்ற கோரிக்கையிலிருந்து இது ஆரம்பிக்கிறது. அது வழங்கப்பட்டது. அடுத்த இன்னொரு வகுப்புக்கு அதிகப் பிரதிநிதித்துவம் கோருகிறது; அது சிறுபான்மை வகுப்பாகவோ அல்லது பெரும்பான்மை வகுப்பாகவோ இருக்கலாம். அதுவும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. மக்கள் தொகை எண்ணிக்கையின் அடிப்படையில் தனி பிரதிநிதித்துவம் கோரப்படுகிறது. அதுவும் அளிக்கப்படுகிறது. அடுத்து பிரதிநிதித்துவத்தின் மதிப்பை (Weightage in representation), உயர்த்த வேண்டுமென்று கேட்கப்படுகிறது. அதுவும் ஒத்துக்கொள்ளப்படுகிறது. அதைத் தொடர்ந்து மற்ற சிறுபான்மையினரைக் காட்டிலும் பெரும்பான்மையினருக்கு அதிகப் பிரதிநிதித்துவம் சட்டபூர்வமாக உத்திரவாதம் அளிக்கப் பட வேண்டும் என்று மற்றொரு கோரிக்கை. இதுவும் வழங்கப்படுகிறது. மற்றொரு வகுப்பின் பெரும்பான்மை ஆட்சியை பொறுக்க முடியாது; எனவே மற்ற சிறுபான்மைகள் மீது பெரும்பான்மை ஆட்சி செய்யும் அதன் உரிமைக்குப் பங்கமில்லாமல், சட்டத்தை மீறும் வகுப்பின் பெரும்பான்மை, சமநிலைக்குக் குறைக்கப்பட வேண்டும் என்ற தொடர் கோரிக்கையும் எழுகிறது. தொடர்ந்து திருப்திப்படுத்தும் கொள்கை போன்று அபத்தமானது

எதுவும் இருக்க முடியாது. எல்லையற்ற கோரிக்கையும் அதைத் தொடர்ந்து முடிவற்ற திருப்திப்படுத்துவதும் தான் இக்கொள்கை. இப்படி ஒன்றையடுத்து ஒன்றை திருப்தி செய்து கொண்டே போகும் கொள்கையைப் போன்று அபத்தமானது வேறெதும் இருக்க முடியாது. முடிவற்ற கோரிக்கைகளும் தொடர்ந்து அவற்றை முடிவின்றி திருப்திப்படுத்துவதும்தான் இக்கொள்கை. வெளிப்படையாகச் சொல்வதென்றால், இத்தகைய நடைமுறைத் திறனைக் கையாளும் வகுப்பை நான் குறைகூற மாட்டேன். இதில் அது ஈடுபடுவதற்குக் காரணம் கேட்பதால் பலன் உண்டு, கோரிக் கைக்கு எல்லை வகுக்கக் கோட்பாடுகள் இல்லை, முறைப்படி மேன்மேலும் கேட்டுக் கொண்டே இருக்கலாம். அவை கேட்டவை கிடைக்கும் என்பது தான். மற்றோர் புறம், ஒரு சமூகம் பொரு ளாதார ரீதியில் ஏழ்மையில் வாழ்கிறது. சமூக ரீதியில் இழிவுப் படுத்தப்படுகிறது. கல்வித்துறையில் பின்தங்கியுள்ளது, சுரண்டப் படுகிறது, வெட்கமற்ற முறையில் கழிவிரக்கமின்றி சிறுமைக்கும் கொடுமைக்கும் ஆளாக்கப்படுகறது; மேனிலை வகுப்பால் புறக் கணிக்கப்படுகிறது, அரசாங்கம் பொறுப்பேற்பதில்லை. அச் சமூகத்திற்கு எவ்வித பாதுகாப்போ நீதி, நியாயம், சமசந்தர்ப்பம் கிடைக்குமென்ற உத்தரவாதமோ கிடையாது. உங்களுக்கென்று தனிப் பாதுகாப்பு ஏதும் கிடையாது என அச்சமூகத்தினர் கூறப்படுகிறார்கள். பாதுகாப்பு கேட்பதில் நியாயம் இல்லை என்பதால் அல்ல. ஒடுக்கப்பட்ட சமூகத்தினர் தங்கள் கோரிக்கை களுக்குப் பின்பலமாக. அரசியல் ரீதியாக இணைந்து உருவாக வில்லை என்பதால் அவர்களைப் பொய் சொல்லி சமாளித்து ஏமாற்றி விடலாம் என்பதே உரிமை வழங்கப்பட்டுள்ள அடாவடி வகுப்பின் தற்போதைய எண்ணம்.

இந்த பாரபட்ச நடத்தைக்குக் காரணம் வகுப்புப் பிரச்சினை யில் சம்பந்தப்பட்ட அனைவரும் அதிகாரபூர்வமாகக் குறிப்பிட்ட கோட்பாடுகளையொட்டியே செயல்பட வேண்டும் என்கிற கோட் பாடு பிணைப்பு இல்லாமற் போனதுதான். கோட்பாடுகள் இல்லாதிருப்பது மற்றொரு தீய விளைவையும் ஏற்படுத்துகிறது. பொது மக்களின் கருத்துக்கு இடமே இல்லாத நிலையை ஏற்படுத்தி விட்டது. மக்களுக்கு வழிமுறைகளை மட்டுமே மக்கள் காண் கிறார்கள். ஒரு வழிமுறை தோற்றுவிட்டது. அதனால் வேறொரு வழியில் முயற்சி செய்கிறார்கள் என்றே மக்கள் நினைக்கிறார் கள். ஒரு வழிமுறை தோற்றது ஏன்? வெற்றி பெறக்கூடும் என்று மற்றொரு வழி முறை ஏன் முன் வைக்கப்படுகிறது என்பது மக்களுக்குத் தெரியாது. இதன் விளைவு என்ன? அசைக்க முடி யாத பிடிவாதமானவர்களை அறிவுபூர்வமாக, சிந்திக்கவும் நியா யத்தை ஏற்கும்படி நிர்ப்பந்தம் செய்வதற்காகவும் மக்கள் திரட்டப் படுவதற்குப் பதிலாக, வகுப்புப் பிரச்சினைகள் விவாதிக்கப்படும் பொழுதெல்லாம் அதை வேடிக்கை காட்சியாகப் பார்த்துக் கொண்டிருக்கும் நிலையில் மக்கள் வைக்கப்பட்டுள்ளனர்.

எனவே வகுப்புப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான எனது அணுகுமுறை கீழ்க்கண்ட இரண்டு அடிப்படைகளை ஆதாரமாகக் கொண்டது:

1) வகுப்புப் பிரச்சினையைத் தீர்க்க முற்படும்பொழுது, இறுதியான தீர்ப்பை நிர்ணயிப்பதற்குக் கைக்கொள்ள வேண்டிய வழிகாட்டிக் கோட்பாடுகள் எவை என்பதை வரையறுக்க வேண்டியது அத்தியாவசியமாகும்.

2) வழிகாட்டும் கோட்பாடுகள் எவையாயினும், சம்பந்தப் பட்ட எல்லாத் தரப்பினர் விஷயத்திலும் அச்சமோ பாரபட்சமோ இன்றி ஒரே மாதிரியாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

5

வகுப்புப் பிரச்சினையின் தீர்வுக்கான ஆலோசனைகள்

சில அடிப்படை விஷயங்கள் பற்றி எனது நிலையைத் தெளிவு படுத்திவிட்டேன். எடுத்துக்கொண்ட பொருள் பற்றி இப்போது தொடர்கிறேன்.

வகுப்புப் பிரச்சினை மூன்று வினாக்களை எழுப்புகிறது.

அ) சட்டசபையில் பிரதிநிதித்துவம் பற்றிய வினா.

ஆ) நிர்வாகத்தில் பிரதிநித்துவம் குறித்த வினா.

இ) பொது (அரசு)ப் பணிகளில் பிரதிநிதித்துவம் பற்றிய வினா.

அ) பொது (அரசு)ப் பணிகளில் பிரதிநிதித்துவம்

கடைசிக் கேள்வியை முதலில் எடுத்துக் கொள்ளலாம். இதைப் பற்றிக் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. பொது (அரசு)ப் பணிகளில் எல்லா வகுப்பினரும் குறிப்பிட்ட விகிதாசாரப்படி பிரதிநிதித்துவம் பெற வேண்டும்; எந்த ஒரு வகுப்பும் ஏகபோக உரிமை பெற அனுமதிக்கக்கூடாது என்ற கோட்பாட்டை இந்திய அரசாங்கம் ஏற்றுள்ளது. இந்திய அரசின் 1934, 1943 ஆண்டு களின் தீர்மானங்களில் இந்தக் கோட்பாடு உள்ளடங்கியுள்ளது. இதை அமல்செய்வதற்கான விதிகளும் வரையப்பட்டுள்ளன. இந்த விதிகளுக்குப் புறம்பாகச் செய்யப்படும் எந்த நியமனமும் செல்லத்தக்கதல்ல என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. தேவைப் படுவதெல்லாம் இந்த நிர்வாக நடைமுறையைச் சட்டரீதியாகக் கட்டாயமாக்க வேண்டியதுதான். இந்திய அரசு சட்டத்தில் ஒரு சட்ட இணைப்பை சேர்த்துக் கொள்வதன் மூலம் இதைச் செய்ய முடியும்; இத்தீர்மானங்களில் கண்டுள்ள நிபந்தனைகளையும் பல்வேறு மாகாணங்களுக்கான இத்தகைய நிபந்தனைகளையும்

சட்ட இணைப்பில் சேர்த்துக் கொண்டு அரசியல் அமைப்புச் சட்டத்தின் அங்கமாக அதை ஆக்கலாம்

(ஆ) ஆட்சிக் குழுவில் பிரதிநிதித்துவம்

இக்கேள்வி மூன்று விஷயங்களை எழுப்புகிறது.

1) ஆட்சிக் குழுவில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தின் பங்கு என்ன?
2) ஆட்சிக் குழுவின் இயல்பு.
3) ஆட்சிக் குழுவில் இடங்களை நிரப்பும் முறை.

(i) பிரதிநிதித்துவத்தின் எண்ணிக்கை

இந்தக் கேள்விக்குத் தீர்வு காண கடைப்பிடிக்க வேண்டிய கோட்பாடு யாதெனில் இந்துக்கள், முஸ்லிம்கள், செடியூல்டு வகுப்பினருக்கு ஆட்சிக் குழுவில் அளிக்கப்படும் பிரதிநிதித்துவம், சட்டசபையில் அவர்களுக்கு இருக்கும் பிரதிநிதித்துவத்திற்கு ஏற்றாற் போல் அமைய வேண்டும்.

சீக்கியர்கள், இந்தியக் கிறிஸ்தவர்கள், ஆங்கிலோ-இந்தியர் ஆகிய மைனாரிட்டிகளைப் பொறுத்தவரை, சட்டசபையில் அவர்களுக்கிருக்கும் எண்ணிக்கையின் விகிதாசாரப்படி ஆட்சிக் குழுவில் இடமளிப்பது கடினம். காரணம், சட்டசபையில் அவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருப்பது தான். அவர்களுக்கு விகிதாசார பிரதிநிதித்துவம் கொடுக்கப்படுவதென்றால் ஆட்சிக் குழு நம்பமுடியாத அளவு விரிவாக்கப்பட வேண்டிவரும். சாத்தியம் எது எனில் அமைச்சரவையில் ஒன்று அல்லது இரண்டு இடம் ஒதுக்கப்படுவதே. புதிய அரசியல் அமைப்புச் சட்டம் அமலுக்கு வரும்போது ஏற்படுத்த வேண்டிய பார்லிமெண்டரிச் செயலாளர்கள் நியமனத்தில் அவர்களுக்கு நியாயமான பங்கு கிடைக்கும் என்ற நடைமுறை மரபை ஏற்படுத்துவதாகும்.

(ii) ஆட்சிக் குழுவின் இயல்பு

ஆட்சிக் குழுவை அமைப்பதில், கீழ்க்கண்ட கோட்பாடுகளை கடைப்பிடிக்க வேண்டுமென நான் யோசனை கூறுகிறேன்.

1) இந்தியா போன்ற ஒரு நாட்டில் பெரும்பான்மையினருக்கும் சிறுபான்மையருக்கும் சமூகத்தினர்களுக்குமிடையே தொடர்ந்து முரண்பாடு இருந்து வருவதையும் அதன் விளைவாக சிறுபான்மையினருக்கு எதிராக பெரும்பான்மையினர் பாரபட்சம் காட்டும் அபாயம் எப்பொழுதும் இருக்கிறது என்பதையும் ஒப்புக் கொள்ள வேண்டும். இதன் காரணமாக, ஆட்சிக்குழுவின் அதிகாரம் சட்டசபையின் அதிகாரத்தைவிட அதிக முக்கியத்துவம் பெறுகிறது.

2) மேலே (1)ல் குறிப்பிட்டதைக் கருத்தில் கொண்டால், தேர்தலில் பெரும்பான்மை பெறும் கட்சி பெரும்பான்மையின் நம்பிக்கைக்கு அதுவே பாத்திரமானது. ஆகவே அரசாங்கம் அமைக்க அதற்கே தகுதி உண்டு என்ற முறை இந்தியச் சூழ்நிலையில் பொருந்தாது. இந்தியாவில் பெரும்பான்மை என்பது வகுப்பு அடிப்படையிலான பெரும்பான்மையேயன்றி, ஒரு அரசியல் பெரும்பான்மையல்ல. இத்தகைய வேறுபாடு காரணமாக, இங்கிலாந்தில் உள்ள சாத்தியக்கூறு இந்தியாவின் நிலைமையில் சாத்தியமாகாது,

3) சட்டசபையில் உள்ள பெரும்பான்மைக் கட்சியின் கமிட்டியாக ஆட்சிக் குழு இருக்கக் கூடாது. பெரும்பான்மையினரிடமிருந்து மட்டுமல்ல சபையில் உள்ள சிறுபான்மையினரின் நம்பிக்கையையும் பெரும் முறையில் நிர்வாகக் குழு அமைக்கப்பட வேண்டும்.

4) ஆட்சிக் குழு ஒரு சட்டசபைக்குரிய தன்மைகொண்டதாக இருக்கக் கூடாது, அதாவது சட்டசபையின் காலம் முடியும் வரை ஆட்சிக் குழுவை நீட்டிக்கலாகாது.

5) ஆட்சிக் குழு ஒரு விதத்தில் சட்டசபைக்குரிய தன்மை கொண்டதாகவும் இருக்க வேண்டும்; அதாவது, ஆட்சிக் குழு உறுப்பினர்கள், சட்டசபை உறுப்பினர்கள் மத்தியிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவர். சட்டசபையில் அமரவும் பேசவும், வோட்டளிக்கவும் கேள்விகளுக்குப் பதிலளிக்கவும் உரிமை பெற்றிருப்பர்.

(iii) இடங்களை நிரப்பும் முறை

இது விஷயத்தில், கீழ்கண்ட கோட்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமென்று நான் ஆலோசனை கூறுகிறேன்.

1) அரசாங்கத்தின் ஆட்சிக் குழு தலைவர் என்ற முறையில் பிரதம மந்திரி சபை முழுவதின் நம்பிக்கையைப் பெற்றவராக இருக்க வேண்டும்.

2) அமைச்சரவையில் ஒரு குறிப்பிட்ட சிறுபான்மையினரின் பிரதிநிதிகளாக இருப்போர் சட்டசபையில் அவ்வகுப்பு உறுப்பினர்களின் நம்பிக்கையைப் பெற்றவராக இருக்க வேண்டும்.

3) (அமைச்சரவையின் ஒரு உறுப்பினரை) லஞ்சம் அல்லது தேசத் துரோகக் குற்றம் சாட்டப்பட்டுச் சபையில் விசாரணை, நடந்து நிரூபணமானாலன்றி அமைச்சரவை உறுப்பினர் எவரும் நீக்கப்படலாகாது.

இம்மூலக் கோட்பாடுகள் வாயிலாக எழும் என் கருத்து யாதெனில், பிரதம மந்திரியும் பெரும்பான்மை வகுப்பைச் சார்ந்த அமைச்சரவை அங்கத்தினர்களும் முழுச் சபையால் ஒற்றை

மாற்று வாக்கு முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் அமைச்சரவையில் வெவ்வேறு சிறுபான்மையினருக்கான அங்கத்தினர்கள் சபையிலுள்ள அந்தந்த சிறுபான்மை வகுப்பினரின் உறுப்பினர்களால் ஒற்றை மாற்று வாக்குமூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

(இ) சட்டசபையில் பிரதிநிதித்துவம்

இதுவே மிகத் தொல்லைவாய்ந்த கேள்வி. மற்ற எல்லாக் கேள்விகளும் இக்கேள்விக்குத் தீர்வு காண்பதில் தொக்கி நிற்கின்றன. இக்கேள்வி இரு விஷயங்களை எழுப்புகிறது:

1) பிரதிநிதித்துவத்தின் எண்ணிக்கை

2) வாக்காளர் தன்மை

1) பிரதிநிதித்துவத்தின் எண்ணிக்கை

முதலில் எனது ஆலோசனைகளை முன் வைக்கிறேன். பின்பு அவை எந்தக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டவை என்பதை விளக்குவேன். ஆலோசனைகள் கீழ்க்கண்ட அட்டவணைகளில் திட்டவட்டமாகக் கொடுக்கப்பட்டுள்ளன; பிரிட்டிஷ் இந்தியாவில் மத்திய சட்டசபையில் பல்வேறு வகுப்புகளுக்கான பிரதிநிதித்துவத்தின் அளவு என்ன, அதேபோல் மாகாண சட்டசபைகளில் உள்ளது என்ன என்பது பற்றியும் இவை எடுத்துக் காட்டும்.

சட்டசபைகளில் பிரதிநிதிகளின் விகிதாசாரம் பற்றிய கருத்து

குறிப்பு: இந்த அட்டவணைகளில் உள்ள மக்கள் தொகையின் சதவிகிதம் மக்கள் கணக்கெடுப்பு புள்ளி விவரங்களிலிருந்து மாறுபடுகின்றது. காரணம், பழங்குடி மக்களின் தொகை, மக்கள் கணக்கெடுப்பு புள்ளிவிவரங்களிலிருந்து கழித்தபின் கொடுக்கப்பட்டுள்ளது.

1. மத்திய சட்டசபை

வகுப்பு	மொத்த ஜனத் தொகையில் சதவிகிதம்	பிரதிநிதித்துவ சதவிகிதம்
இந்துக்கள்	54.68	40
முஸ்லீம்கள்	28.50	32
ஷெடியூல்டு வகுப்பினர்	14.30	20

1	2	3
இந்தியக் கிறிஸ்தவர்கள்	1.16	3
சீக்கியர்கள்	1.49	4
ஆங்கிலோ-இந்தியர்கள்	0.05	1

2. பம்பாய்

வகுப்பு	மொத்த ஜனத் தொகையில் சதவிகிதம்	பிரதிநிதித்துவ சதவிகிதம்
இந்துக்கள்	76.42	40
முஸ்லீம்கள்	9.98	28
ஷெடியூல்டு வகுப்பினர்	9.64	28
இந்தியக் கிறிஸ்தவர்கள்	1.75	2
ஆங்கிலோ-இந்தியர்	0.07	1
பார்ஸிகள்	0.44	1

3. சென்னை

வகுப்பு	மொத்த ஜனத்தொகையின் சதவிகிதம்	பிரதிநிதித்துவ சதவிகிதம்
இந்துக்கள்	71.20	40
ஷெடியூல்டு வகுப்பினர்	16.53	30
முஸ்லீம்கள்	7.98	24
இந்தியக் கிறிஸ்தவர்கள்	4.10	5
ஆங்கிலோ-இந்தியர்கள்	0.06	1

4. வங்காளம்

வகுப்பு	மொத்த ஜனத்தொகையின் சதவிகிதம்	பிரதிநிதித்துவ சதவிகிதம்
முஸ்லீம்கள்	56.50	40
இந்துக்கள்	30.03	33

1	2	3
ஷெடியூல்டு வகுப்பினர்	12.63	25
இந்தியக் கிறிஸ்தவர்கள்	0.19	1
ஆங்கிலோ-இந்தியர்கள்	0.05	1

5. ஐக்கிய மாகாணங்கள்

வகுப்பு	மொத்த ஜனத்தொகையின் சதவிகிதம்	பிரதிநிதித்தவ சதவிகிதம்
இந்துக்கள்	62.29	40
ஷெடியூல்டு வகுப்பினர்	21.40	29
முஸ்லீம்கள்	15.30	29
இந்தியக் கிறிஸ்தவர்கள்	0.24	1
ஆங்கிலோ-இந்தியர்கள்	0.03	1

6. பஞ்சாப்

வகுப்பு	மொத்த ஜனத்தொகையின் சதவிகிதம்	பிரதிநிதித்துவ சதவிகிதம்
முஸ்லீம்கள்	57.06	40
இந்துக்கள்	22.17	28
சீக்கியர்கள்	13.22	21
ஷெடியூல்டு வகுப்பினர்	4.39	9
இந்தியக் கிறிஸ்தவர்கள்	1.71	2

7. மத்திய மாகாணம், பீரார்

வகுப்பு	மொத்த ஜனத்தொகையின் சதவிகிதம்	பிரதிநிதித்துவ சதவிகிதம்
இந்துக்கள்	72.20	40
ஷெடியூல்டு வகுப்பினர்	20.23	34

1	2	3
முஸ்லீம்கள்	5.70	25
இந்தியக் கிறிஸ்தவர்கள்	0.36	1

8. பீஹார்

வகுப்பு	மொத்த ஜனத்தொகையின் சதவிகிதம்	பிரதிநிதித்துவ சதவிகிதம்
இந்துக்கள்	70.76	40
முஸ்லீம்கள்	15.05	30
ஷெடியூல்டு வகுப்பினர்	13.80	28
இந்தியக் கிறிஸ்தவர்கள்	1.71	2

9. அஸ்ஸாம்

வகுப்பு	மொத்த ஜனத்தொகையின் சதவிகிதம்	பிரதிநிதித்துவ சதவிகிதம்
இந்துக்கள்	45.60	40
முஸ்லீம்கள்	44.59	39
ஷெடியூல்டு வகுப்பினர்	8.76	19
இந்தியக் கிறிஸ்தவர்கள்	0.48	2

10. ஒரிஸ்ஸா

வகுப்பு	மொத்த ஜனத்தொகையின் சதவிகிதம்	பிரதிநிதித்துவ சதவிகிதம்
இந்துக்கள்	70.80	40
ஷெடியூல்டு வகுப்பினர்	17.66	36
முஸ்லீம்கள்	..07	22
இந்தியக் கிறிஸ்தவர்கள்	0.37	2

11. சிந்து

வகுப்பு	மொத்த ஜனத்தொகையின் சதவிகிதம்	பிரதிநிதித்துவ சதவிகிதம்
இந்துக்கள்	23.08	40
முஸ்லீம்கள்	71.30	40
ஷெடியூல்டு வகுப்பினர்	4.26	19
இந்தியக் கிறிஸ்தவர்	0.29	1

6

சிறுபான்மை வகுப்பினர் மீது தாக்கம்

பல்வேறு சிறுபான்மை வகுப்பினர்களுக்கு 1935-ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்தில் வகுக்கப்பட்ட பிரதிநிதித்துவத்திற்கும் முன்வைக்கப்பட்டுள்ள திட்டத்தில் வகுக்கப்பட்டவற்றிற்கு மிடையே உள்ள மாற்றங்களைப் பின்வருமாறு அட்டவணைப் படுத்துவது விரும்பத்தக்கது:

முஸ்லீம்கள் மீது தாக்கம்

சட்டசபை	மக்கள்தொகையின் விகிதாச்சாரம்	பிரதிநிதித்துவ விகிதாச்சாரம்	
		1935 இந்திய அரசாங்கச் சட்டத்தின் கீழ்	முன்வைக்கப் பட்டுள்ள திட்டத்தின்படி
மத்திய சபை	28.50	32.00	32
சென்னை	8.00	13.49	24
பம்பாய்	10.00	17.40	28
ஐக்கிய மாகாணம்	15.30	28.95	29
மத்திய மாகாணம்	5.70	12.50	25

	2	3	4
பீஹார்	15.00	26.32	28
அஸ்ஸாம்	44.60	31.48	38
ஒரிஸ்ஸா	2.00	6.66	22

செடியூல்டு வகுப்பினர் மீது தாக்கம்

சட்டசபை	ஜனத்தொகை விகிதாச்சாரம்	பிரதிநிதித்துவ விகிதாச்சாரம்	
		1935 இந்திய அரசாங்கச் சட்டத்தின் கீழ்	முன் வைக்கப் பட்டுள்ள திட்டத்தின்படி
மத்தியசபை	14.30	7.60	20
சென்னை	16.50	13,90	30
பம்பாய்	9.60	8.50	28
வங்காளம்	12.60	12.00	25
ஐக்கிய மாகாணம்	21.40	8.70	29
பஞ்சாப்	4.40	4.50	9
மத்திய மாகாணம்	20.20	17.80	34
பீஹார்	13.80	9.80	28
அஸ்ஸாம்	8.70	6.50	20
ஒரிஸ்ஸா	17.60	10.00	36
சிந்து	4.20		19

இந்தியக் கிறிஸ்தவர் மீது தாக்கம்

சட்டசபை	ஜனத்தொகை விகிதாச்சாரம்	பிரதிநிதித்துவ விகிதாச்சாரம்	
		1935 இந்திய அரசாங்கச் சட்டத்தின் கீழ்	முன் வைக்கப் பட்டுள்ள திட்டத்தின்படி
மத்தியசபை	1.16	3.00	3
சென்னை	4.10	4.20	5
பம்பாய்	1.70	1.70	2

1	2	3	4
வங்காளம்	0.19	0.80	1
ஐக்கிய மாகாணம்	0.24	0.90	1
பஞ்சாப்	1.70	1.14	2
மத்திய மாகாணம்	0.35	—	1
பீஹார்	1.70	0.66	2
அஸ்ஸாம்	0.48	0.90	2
ஒரிஸ்ஸா	0.37	0.16	2
சிந்து	0.29	—	1

சீக்கியர்கள் மீது தாக்கம்

சட்டசபை	ஜனத்தொகை விகிதாச்சாரம்	பிரதிநிதித்துவ விகிதாச்சாரம்	
		1935 இந்திய அரசாங்கச் சட்டத்தின் கீழ்	முன் வைக்கப்பட்ட திட்டத்தின்கீழ்
மத்திய சபை	1.50	2.40	4
பஞ்சாப்	13.20	18.29	21

இந்துக்கள் மீது தாக்கம்

சட்டசபை	ஜனத்தொகை விகிதாச்சாரம்	பிரதிநிதித்துவ விகிதாச்சாரம்	
		1935 இந்திய அரசாங்கச் சட்டத்தின் கீழ்	முன் வைக்கப்பட்ட திட்டத்தின் கீழ்
வங்காளம்	30.00	20.00	33
பஞ்சாப்	22.10	20.00	28
சிந்து	23.80	31.60	40

7

ஆலோசனைகளின் அடிப்படைக் கோட்பாடுகள்

இந்தப் பங்கீடு எந்தக் கோட்பாடுகளையொட்டி முன்வைக்கப் பட்டுள்ளன என்பதை இப்போது எடுத்துக் கூற விழைகிறேன்; அவைகளாவன.

1) பெரும்பான்மை ஆட்சி, தத்துவ ரீதியில் ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இல்லை, நடைமுறையில் நியாயமற்றது. ஒரு பெரும்பான்மைச் சமூகத்திற்கு ஓரளவு (relative) பெரும் பான்மைப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படலாம். ஆனால் அறுதிப் பெரும்பான்மையை (obsolute majority) அது கோர முடியாது.

2) ஒப்பீட்டு அடிப்படையில் ஓரளவு பெரும்பான்மை பிரதி நிதித்துவம் சட்டசபையில் கொடுக்கப்படும் போது, அதன் எண்ணிக்கை சிறிய சிறுபான்மை வகுப்பினரின் உதவி யுடன் தனது ஆட்சி அமைப்பதைச் சாத்தியமாக்குமளவுக்கு இருக்கக் கூடாது.

3) சபையில் இடப் பங்கீடு செய்கையில், பெரும்பான்மை வகுப்பும் ஒரு பெரிய சிறுபான்மை வகுப்பும் இணைந்து, மற்ற சிறுபான்மை வகுப்புகளின் நலனுக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் கூட்டணி அமைய முடியாதவாறு இருத்தல் வேண்டும்.

4) அனைத்துச் சிறுபான்மை வகுப்பினரும் இணைந்து பெரும் பான்மையைச் சார்ந்திராமல் அவர்களே ஆட்சி அமைக்க முடியும் என்ற அடிப்படையில் இடங்கள் பங்கீடு செய்யப் பட வேண்டும்.

5) பெரும்பான்மையிடமிருந்து எடுக்கப்பட்ட உபரி இடங்களின் எண்ணிக்கை சிறுபான்மை வகுப்புக்களிடையே பிரித்துக் கொடுக்கப்பட வேண்டும். இவ்வாறு வினியோ கிக்கும் போது, சமூக, பொருளாதார, கல்வி நிலைகளில் மேம்பாடு அடைந்துள்ள பெரிதான சிறுபான்மைக்கு இடங்களைக் குறைந்த எண்ணிக்கையில் ஒதுக்கியும், சமூக நிலைகளில் தாழ்ந்துள்ள சிறிய சிறுபான்மை வகுப் பினர்க்கு அதிக இடங்களையும் ஒதுக்கியும் நேர்மாறான விகிதத்தில் பங்கீடு செய்ய வேண்டும்.

இத்தகைய பிரதிநிதித்தவமே சமநிலை உள்ளதாகும் என்பேன். இவ்வாறாயின், எண்ணிக்கையின் காரணமாக எந்த ஒரு வகுப்பும் மற்றவை மீது ஆதிக்கம் செலுத்தமுடியாத நிலையில் நிற்கும். இதன் மூலமே இந்துப் பெரும்பான்மை பற்றிய முஸ்லீம் ஆட்சே பணையும், முஸ்லீம் பெரும்பான்மை பற்றிய இந்துக்கள் மற்றும்

சீக்கியர்களின் ஆட்சேபணையும் மத்திய, மாகாண சட்டசபைகளில் அறவே அகல வாய்ப்புண்டு.

8

வாக்காளர் தொகுதியின் தன்மை

வாக்காளர் தொகுதியைப் பொறுத்தவரை கீழ்க்கண்ட வரையறைகள் ஏற்பட வேண்டும்:

1) கூட்டுத்தொகுதி அல்லது தனித் தொகுதி என்பது குறிப்பிட்ட ஒரு நோக்கத்தை அடைவதற்கான சாதனம் மட்டுமே, மூலக் கோட்பாடு அல்ல.

2) நோக்கம் யாதெனில், பெயரளவிலன்றி உண்மையிலேயே தனது பிரதிநிதிகளாக இருக்கக் கூடியவர்களை, சட்ட சபைக்கு ஒரு சிறுபான்மை வகுப்பு தேர்ந்தெடுப்பதற்கு உதவும் முறையில் இருக்க வேண்டும் என்பதே.

3) தனித்தொகுதி சிறுபான்மையினரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் தவிர வேறு எவரும் அவர்களின் பிரதிநிதிகளாக இருக்க முடியாது என்ற உத்திரவாதம் அளிக்கிறது என்றாலும் சிறுபான்மை வகுப்புகளுக்கு அதே அளவு பாதுகாப்பு அளிக்கத்தக்க கூட்டுத் தொகுதி முறையையும் புறக்கணிக்கலாகாது.

4) சிறுபான்மை வகுப்புகளுக்கு இரட்டை வோட்டுரிமையளித்தும், அதேசமயம் சிறுபான்மையினரின் வோட்டுக்கள் குறிப்பிட்ட குறைந்த பட்ச சதவிகிதத்திலாவது பெற வேண்டுமென வழிவகுக்கும் நான்கு உறுப்பினர் கொண்ட தேர்தல் தொகுதியை ஒரு மாற்று சாத்தியமாகப் பரிசீலிக்கலாம்.

9

எடுத்துக்கொள்ளப்படாத பொருள்கள்

(i) விசேஷ பாதுகாப்புப் பற்றிய கேள்வி

சில குறிப்பிட்ட சிறுபான்மை வகுப்புகள் முன் வைக்கும் வேறு சில கோரிக்கைகள் வருமாறு:

1) சிறுபான்மையினரின் நிலைமையை விரித்துரைக்க சட்ட ரீதியாக அதிகாரி ஒருவரை நியமிக்க ஏற்பாடு.

2) கல்விக்கு அரசு உதவியளிக்க சட்ட ரீதியான உத்திரவாதம்.

3) நில ஒப்பந்தங்களுக்குச் சட்டபூர்வமாக வழிவகுத்தல். ஆனால் இது ஓர் வகுப்புப் பிரச்சினை அல்ல என்பதால் இது பற்றி விவரிக்க விரும்பவில்லை.

(ii) ஆதிவாசிகள்

ஆதிவாசிகளின் எண்ணிக்கை சீக்கியர், ஆங்கிலோ இந்தியர், இந்தியக் கிறிஸ்தவர், பார்ஸிகள் ஆகியோரைவிட அதிக்மாக இருந்தாலும் அவர்கள் என் திட்டத்தில் இடம்பெறவில்லை என்பது தெளிவு. இவர்களை ஏன் சேர்க்கவில்லை என்பதற்கான காரணங்களை நான் குறிப்பிட வேண்டும். தங்களுக்குக் கிடைக்கக் கூடிய அரசியல் வாய்ப்புகளை நன்கு பயன்படுத்தக் கூடிய அளவுக்கு ஆதி குடியினரின் அரசியல் உணர்வு வளரவில்லை; ஒரு பெரும்பான்மையினர் அல்லது ஒரு சிறுபான்மை வகுப்பின ரின் கைப்பாவையாகச் சுலபத்தில் ஆகிவிடக் கூடும். இது அவர் களுக்கு எந்தவித நன்மையையும் விளைவிக்காததோடு மற்ற வகுப் பினரிடையே நிலவ வேண்டிய சமநிலையையும் பாதிக்கலாம். அவர்கள் வளர்ச்சிக்கு இன்றைய கட்டத்தில் இந்த பிற்பட்ட வகுப்பினருக்கு உகந்த வகையில் செய்யக் கூடியது என்னவெனில், ''ஒதுக்கப்பட்ட பிரதேசங்கள் (excluded areas) என்று கூறப்படும் இடங்களை நிர்வகிக்க தென்னாப்பிரிக்காவில் உள்ளது போன்று சட்ட அதிகாரம் பெற்ற கமிஷன் ஒன்றை நியமிப்பது தான். இத்தகைய ''ஒதுக்கப்பட்ட பிரதேசங்கள்'' கொண்ட ஒவ்வொரு மாகாணமும் இந்த பிரதேசங்களை நிர்வகிக்க ஒரு குறிப்பிட்ட தொகையைக் கட்டாயமாக வழங்க வகை செய்ய வேண்டும்.

(iii) இந்திய சமஸ்தானங்கள்

எனது ஆலோசனைகளில் இந்திய சமஸ்தானங்கள் இடம்பெற வில்லை என்பதைக் கவனத்திலிருத்துவீர்கள். இந்திய சமஸ்தானங் களைக் கீழ்க்கண்ட நிபந்தனைகள் அடிப்படையில் சேர்த்துக் கொள்வதை நான் எதிர்க்க மாட்டேன்:

1) ஆட்சியுரிமையைப் பிரிட்டிஷ் இந்தியாவுக்கும் இந்திய சமஸ்தானங்களுக்குமிடையே இரு கூறாகப் பங்குபோடு வதை முற்றிலும் கைவிட வேண்டும்.

2) பிரிட்டிஷ் இந்தியாவை இந்திய சமஸ்தானங்களிலிருந்து பிரிக்கிற சட்ட ரீதியான, அரசியல் எல்லைகள் குறையும்; பிரிட்டிஷ் இந்தியா அல்லது இந்திய சமஸ்தானங்கள் என்ற தனித்தனி அமைப்புகள் இருக்கமாட்டா; அவற்றின் இடத் தில் இந்தியா என்ற ஒரு அமைப்பே இருக்கும்.

3) இந்த இணைப்புக்கான ஷரத்துக்கள் மற்றும் நிபந்தனை கள், ஒரு முழுமையான கட்டுப்பாடற்ற டொமினியன் அதிகாரத்தை இந்தியா பெறுவதற்காகத் தடை செய்ய

மாட்டா. இந்திய சமஸ்தானங்களும் பிரிட்டிஷ் இந்தியாவும் ஒருங்கிணைத்தற்கான என் திட்டமொன்றில் இந்த இலக்கு களை அடைவதற்கான சாத்தியக் கூறுகளை விளக்கி யுள்ளேன். அத்திட்ட விபரங்களை இங்கு கூறி உரையை மிகவும் நீண்டதாக ஆக்க விரும்பவில்லை. தற்போதைக்கு, இந்திய சமஸ்தானங்களோடு சிக்கலுறாமல் தனது லட்சி யத்தை நோக்கி பிரிட்டிஷ் இந்தியா நடை போடட்டும்.

10

இந்த யோசனைகளின் நோக்கில் பாகிஸ்தான்

எனது யோசனைகளை ஒரு ஐக்கிய இந்தியாவுக்காகவே பாகிஸ் தான் நல்கக் கூடியதைவிட அதிகப் பாதுகாப்பானது என முஸ்லீம் கள் உணர்ந்து பாகிஸ்தானுக்குப் பதிலாக இவற்றை ஏற்பார்கள் என்ற நம்பிக்கையில் முன் வைக்கிறேன். நான் பாகிஸ்தானுக்கு எதிரியல்ல. அது சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாட்டை ஆதாரமாகக் கொண்டது. இதை ஆட்சேபிப்பதற்குக் காலம் மிகவும் கடந்து விட்டது என்பதே என் எண்ணம். அக்கோட் பாடின் அனுகூலத்தை அவர்களுக்குக் கொடுக்கத் தயார், ஒரு நிபந்தனையோடு. அந்தப் பிரதேசத்தில் வாழும் முஸ்லீம் அல்லாத வர்களுக்கும் அதே கோட்பாட்டின் அனுகூலத்தை முஸ்லீம்கள் மறுக்க மாட்டார்கள் என்பதே, அந்த நிபந்தனை. மேலும், ஒரு நல்ல பாதுகாப்புத் திட்டத்தை முஸ்லீம்களின் கவனத்திற்குக் கொண்டு வர எனக்கு உரிமை உண்டு என நான் நம்புகிறேன். எனது திட்டம், பாகிஸ்தான் திட்டத்தைவிட சிறந்தது என்றேன். எனது திட்டத்தின் சாதகங்களை விளக்குகிறேன். அவையாவன:

(i) என் பிரேரணையால், பாகிஸ்தான் கோரிக்கையின் அடிப்படையில் ஒரு சமயத்தினரின் பெரும்பான்மை என் கிற அபாயம் அகற்றப்படுகிறது.

(ii) என் பிரேரணையின் கீழ், முஸ்லீம்கள் இப்பொழுது பெற்று வரும் சலுகைகள் பாதிக்கப்படவில்லை.

(iii) பாகிஸ்தானின் கீழ் வராத மாகாணங்களிலுள்ள முஸ்லீம் களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதன் மூலம் அம் மாகாணங்களில் அவர்களின் நிலைமை மிகவும் பலமடை கிறது: பாகிஸ்தான் உருவானால் அவர்களுக்கு இந்நிலை கிட்டாமற் போகலாம்; இன்றுள்ளதைவிட மேலும் சக்தி யற்ற நிலை ஏற்படக் கூடும்.

11

இந்துக்களுக்கு ஒரு வார்த்தை

வகுப்புப் பிரச்சினை மீதான இடர்பாடுகளுக்கு முக்கிய காரணம், பெரும்பான்மை ஆட்சி புனிதமானது என்றும் எப்படியாகிலும் அது பாதுகாக்கப்பட வேண்டுமென்றும் இந்துக்கள் வலியுறுத்துவது தான். வேறு ஒரு ஆட்சிமுறை இருப்பதை இந்துக்கள் உணர்ந்திருப்பதாகத் தெரியவில்லை. தனி நபர்கள் மற்றும் தேசங்களுக்குமிடையே எழும் முக்கிய தகராறுகள் அந்த முறையால் தீர்த்து வைக்கப்படுகின்றன. ஒருமித்து முடிவு செய்வது என்பது தான் அந்த முறை. இதனைப் பரிசீலிக்கும் சிரமத்தை இந்து ஒருவர் எடுத்துக் கொண்டால், இது ஒரு கற்பனையல்ல, உண்மையானதே என்பதைத் தெரிந்து கொள்வார். ஜுரிகள் முறையை அவர்கள் எடுத்துக் கொள்ளட்டும். ஜுரி விசாரணையில் உள்ள கோட்பாடு ஏகோபித்த கருத்துக்கள், ஜுரி ஒரு மனதாக முடிவு வழங்கினால் மட்டுமே அந்த முடிவு நீதிபதியைக் கட்டுப்படுத்தும். உதாரணமாக, சர்வதேச சங்கத்தை (League of Nations) எடுத்துக் கொள்வோம். அதன் முடிவுகள் எவ்வாறு எடுக்கப்பட்டன? அதன் விதிமுறை ஒருமித்த முடிவாகும். சட்ட சபையிலும் நிர்வாகக் குழுவிலும் முடிவுகள் ஒருமனதானதாக இருக்கும் என்ற கோட்பாட்டை இந்துக்கள் ஏற்றுக் கொண்டால், இந்தியாவில் வகுப்புப் பிரச்சினை என்ற ஒன்றே இருக்காது.

அரசியல் அமைப்புச் சட்டத்தில் சிறுபான்மை வகுப்பினருக்குப் பாதுகாப்பை வழங்கத் தயாரில்லை என்றால் ஒருமனதான முடிவு என்ற விதியை ஏற்றுக் கொள்வீரா என்று ஒரு இந்துவைக் கேளுங்கள். துரதிருஷ்டவசமாக, இவ்விரண்டில் எதையும் அவர் ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை என்பதே தெரியவரும்.

பெரும்பான்மை ஆட்சி என்பதைப் பொறுத்தவரை, எவ்விதக் கட்டுப்பாட்டையும் இந்து ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை. அவர் விரும்பும் பெரும்பான்மை, வரம்பற்ற பெரும்பான்மை; ஓரளவு இணைந்த பெரும்பான்மையுடன் அவர் திருப்தியடையமாட்டார். வரம்பற்ற பெரும்பான்மை ஆட்சியை வற்புறுத்துவது, அரசியல் சித்தாந்திகள் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு நியாயமான யோசனையா? வரையறையற்ற பெரும்பான்மை ஆட்சி என்று இந்து வலியுறுத்திக் கொண்டிருப்பதற்கு அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியல் அமைப்புச் சட்டம்கூட ஆதரவாக இல்லை என்பது அவர்களுக்குத் தெரியாது.

இது குறித்து அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்புச் சட்டத்தை மேற்கோள்காட்ட விரும்புகிறேன். அடிப்படை உரிமைகளை உள்ளடக்கிய பிரிவை எடுத்துக் கொள்ளுங்கள். அந்தப் பிரிவின் பொருள் யாது? அடிப்படை உரிமைகள் அதிமுக்கியத்துவம்

வாய்ந்தவை என்பதால் அவற்றில் தலையிட சாதாரண பெரும் பான்மை மட்டும் போதாது. அதிலிருந்தே மற்றொரு மேற்கோளை யும் எடுத்துக் கொள்ளுங்கள். அமெரிக்க மன்றத்தில் நான்கில் மூன்று பங்கு ஆதரவு பெற்று நிறைவேறி, பின்னர், மாநிலங் களாலும் ஊர்ஜிதம் செய்யப்பட்டால்தான் அரசியலமைப்புச் சட்டத்தின் எப்பகுதியையும் திருத்த முடியும் என அரசியலமைப்பு விதித்துள்ளது. இது எதைக் காட்டுகிறது? சில குறிப்பிட்ட விஷயங்களில் வெறும் பெரும்பான்மை என்கிற விதி, தகுதி அல்ல என்பதை ஐக்கிய அமெரிக்க அரசியல் சாசனம் அங்கீ கரிக்கிறது என்பதை இது எடுத்துக் காட்டுகிறது.

இவ்வழக்குகள் யாவும் இந்துக்கள் பலர் அறிந்தவையே; இருந் தும் சரியான படிப்பினை கற்றாரில்லை. கற்றிருந்தால், பெரும் பான்மை ஆட்சி என்ற விதி தாம் எண்ணுவது போல் ஒரு புனித மான கோட்பாடல்ல என்பதை உணர்ந்திருப்பர். பெரும்பான்மை ஆட்சி என்பது ஒரு கோட்பாடாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை; ஒரு விதியாகப் பொறுத்துக் கொள்ளப்படுகிறது. ஏன் அவ்வாறு பொறுத்துக் கொள்ளப்படுகிறது என்பதையும் கூறி விடுகிறேன். அதற்கு இரு காரணங்கள் உண்டு: (1) பெரும்பான்மை என்பது எப்பொழுதும் அரசியல் பெரும்பான்மை என்பதாலும், (2) சிறு பான்மையின் கருத்தை, அரசியல் பெரும்பான்மையின் முடிவு பெருமளவு ஏற்று உட்கொள்வதாலும், அந்த முடிவுக்கு எதிராக கிளர்ச்சி செய்வதில் சிறுபான்மையினர் அக்கறை கொள்வ தில்லை.

இந்தியாவிலோ பெரும்பான்மை என்பது அரசியல் ரீதியாக உருவாகும் பெரும்பான்மை அல்ல. இந்தியாவில் பெரும்பான்மை பிறவியிலேயே அமைவது; உருவாக்கப்பட்டதல்ல. வகுப்புவாத வாரியான பெரும்பான்மைக்கும் அரசியல் பெரும்பான்மைக்கும் உள்ள வித்தியாசம் இதுவே. அரசியல் பெரும்பான்மை என்பது ஒரே நிலையானதோ நிரந்தரமானதோ அல்ல. அப்பெரும் பான்மை எப்பொழுதும் உருவாக்கப்படுகிறது, மாற்றம் பெறு கிறது, மீண்டும் உருவாகிறது. ஆனால் ஒரு வகுப்புவாதப் பெரும் பான்மை நிரந்தரமானது; அதன் நோக்கு நிலையானதாகவே இருக்கும். இதை அழிக்கத்தான் முடியுமே தவிர அதனைத் திருத்த முடியாது. அரசியல் பெரும்பான்மையே ஆட்சேபணைக்குரியதாக இருக்கையில், வகுப்புவாரிப் பெரும்பான்மைக்கான ஆட்சேபணை கள் எத்துணை தவிர்க்க முடியாதவை?

1930-இல் திரு. ஜின்னா தமது 14 அம்சக் கோரிக்கைகளை வரையறுத்த போது, பெரும்பான்மைக் கோட்பாட்டை ஜின்னா ஏன் வலியுறுத்தினார் என்று இந்துக்கள் அவரைக் கேட்கலாம்; விசேஷ இடம் ஒதுக்கும் போது, ஒரு பெரும்பான்மையைச் சிறு பான்மையாகவோ, சரிசமமாகவோ குறைக்க முடியாதபடி பார்த் துக் கொள்ள வேண்டும் என்ற அளவிற்கு அவரது 14 அம்சங்களில்

ஒன்று அறுதியிட்டது. இப்போது முஸ்லீம் மாகாணங்களில் முஸ்லீம் பெரும்பான்மைக்கு ஆதரவாக இருக்கும் ஜின்னா, மத்திய ஆட்சியில் இந்துப் பெரும்பான்மைக்கு ஏன் எதிர்ப்புத் தெரிவிக்கிறார் என்று அவரிடம் கேட்பதற்கு இந்துக்களுக்கு உரிமையுண்டு. இம் மாதிரிக் கேள்விகள், ஜின்னாவின் நிலை முன்னுக்குப்பின் முரண்பட்டவை என்பதையே எடுத்துக் காட்டு கின்றன என இந்துக்கள் உணர வேண்டும். பெரும்பான்மை ஆட்சி என்ற கோட்பாட்டை வலியுறுத்துவதாக ஆகாது.

அரசியலில், பெரும்பான்மை ஆட்சி என்ற கோட்பாட்டைக் கைவிடுவதால், வாழ்க்கையின் மற்ற துறைகளில் இந்துக்களை அது அதிகம் பாதிக்காது. சமூக வாழ்வில் அவர்கள் பெரும்பான்மை யினராகவே இருப்பர். வியாபாரத்திலும் தொழிலிலும் அவர் களுக்கு இப்போதுள்ள ஏகபோக உரிமைகள் இருந்து வரும். சொத்துரிமையிலும் அவர்களது ஏகபோகம் தொடரும். ஒருமித்த தீர்மானம் என்கிற கோட்பாட்டை இந்துக்கள் ஏற்க வேண்டும் என்பது பிரேரணை அல்ல. பெரும்பான்மைக் கோட்பாட்டைக் கைவிடும்படியும் அவர்களைக் கேட்டுக் கொள்வதும் என் நோக் கம் அன்று. அவர்களை நான் கேட்பதெல்லாம் ஒரு ஏறத்தாழ பெரும்பான்மையோடு (relative majority) திருப்தியடையுங் களேன் என்பது தான். இதை அவர்கள் ஏற்பது அவ்வளவு கடினமா?

இத்தகைய தியாகம் எதுவும் செய்யாமல், இந்திய சுதந்திரத் திற்குச் சிறுபான்மை வகுப்பினர் முட்டுக்கட்டை போடுகிறார்கள் என்று வெளியுலகிற்குக் காட்டிக் கொள்ள இந்துப் பெரும்பான் மைக்கு எவ்வித நியாயமும் கிடையாது. இந்தப் பொய்ப் பிரசாரம் பயனளிக்காது. ஏனெனில், சிறுபான்மையினர் அப்படி ஏதும் செய்யவில்லை. அவர்களுக்குப் போதுமான பாதுகாப்பு அளிக்கப் பட்டால், சுதந்திரத்தையும் அவர்களுக்கு ஏற்படக் கூடிய இடர் களையும் ஏற்கத் தயாராக இருக்கிறார்கள். சிறுபான்மையினரின் இந்த நல்லெண்ணத்தை நன்றியுடன் நோக்க வேண்டும். அயர்லாந் தில் தேசியவாதிகளின் தலைவர் திரு. ரெட்மாண்ட் (Redmond) அல்ஸ்டர் மாகாணத் தலைவர் கர்சனிடம் (Carson) ஓர் சமயம் கூறினார்: ''ஐக்கிய அயர்லாந்துக்கு ஒப்புக் கொள்ளுங்கள். எந்தப் பாதுகாப்பையும் கோருங்கள். உங்களுக்கு அவை அளிக்கப் படும். ''அதை ஏற்க மறுத்த கர்சன் இவ்வாறு பதிலளித்தாராம்: ''உங்கள் பாதுகாப்புக்களை உடைப்பில் போடுங்கள். உங்களால் ஆளப்படுவதை நாங்கள் விரும்பவில்லை.'' இந்தியாவிலுள்ள சிறுபான்மையினர் இப்படிக் கூறினாரில்லை. பாதுகாப்புகளோடு திருப்தியடைய தயாராகவிருக்கிறார்கள். நான் இந்துக்களைக் கேட் கிறேன்,'' இது ஓர் வரப்பிரசாதமல்லவா உங்களுக்கு?'' என்று நிச்சயமாக என்பதே என் தீர்மானம்.

12

முடிவுகள்

வகுப்புப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு எனக்குத் தோன்றிய ஆலோசனைகள் இவை. அகில இந்திய செடியூல்டு வகுப்பினர் சம்மேளனத்தை இவை கட்டுப்படுத்தா. என்னைக் கூட இவை கட்டுப்படுத்தா. இவற்றை முன் வைப்பது ஒரு புது மார்க்கத்தைக் காணும் முயற்சியேயன்றி வேறல்ல. உள்ளபடியான என் ஆலோசனையைக் காட்டிலும் மூலக் கோட்பாட்டையே நான் வலியுறுத்துவேன். கோட்பாடுகள் ஒப்புக் கொள்ளப்பட்டால், வகுப்பு பிரச்சினைக்குத் தீர்வு காண்பது சென்ற காலத்தில் இருந்ததைப் போல் அவ்வளவு சிக்கல் நிறைந்ததாக இருக்காது.

இந்தியாவில் உள்ள முட்டுக்கட்டை நிலையைத் தீர்க்கும் பிரச்சினை சுலபமானதல்ல. 1867-ஆம் ஆண்டில் தோன்றிய ஜெர்மன் நேசக் கூட்டமைப்புக்கு (Confederation) முன்பு அந்நாடு இருந்த நிலை பற்றி, ''தெய்வ ஆணையால் விளைந்த குழப்பம்'', என்று ஒரு வரலாற்று ஆசிரியர் வர்ணித்துள்ளதைப் படித்தது ஞாபகம் வருகிறது. ஜெர்மனியைப் பொருத்த வரை கூறியுள்ளது உண்மையோ இல்லையோ, இந்தியாவில் நிலவும் நிலைமை மிகத் துல்லியமாக வர்ணிப்பதற்கு அது மிக பொருத்தமாக உள்ளது என்று எனக்குத் தோன்றுகிறது. ஜெர்மன் தன் குழப்ப நிலையிலிருந்து ஒரே கட்டத்திலில்லாவிடினும் அடுத்தடுத்துப் பல கட்டங்களில் வெளிவந்து மகாயுத்தத்திற்குச் சற்று முன்பாக, மனதால் ஒன்றுபட்டு, கண்ணோட்டத்தில் ஒன்றுபட்டு, பொதுவான எதிர்காலம் என்ற நம்பிக்கையில் ஒன்றுபட்ட மக்களாக அந்நாடு உருவாயிற்று. குழப்பத்திலிருந்து வெளிவந்து ஒழுங்கை உண்டாக்குவதில் இந்தியா இதுவரை வெற்றிபெறவில்லை. இதைச் சாதிப்பதற்கு இந்தியாவிற்கு வாய்ப்புகள் இல்லாமற்போயின என்பதாலல்ல. உண்மையில் பல சந்தர்ப்பங்கள் வந்தன. இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டம் ஒன்றை உருவாக்கித் தரும்படி இந்தியர்களுக்கு 1927-இல் லார்ட் பிகன் ஹெட் சவால் விட்ட போது முதல் சந்தர்ப்பம் வந்தது. அந்த சவால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்க ஒரு குழு அமைக்கப்பட்டது; ''நேரு அரசியல் அமைப்புத் திட்டம்'' என்ற பெயரில் ஒன்று தயாரிக்கப்பட்டது. எனினும் இந்தியர்களால் அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை; எவ்வித இரக்கமுமின்றி குழி தோண்டிப் புதைக்கப்பட்டது. வட்ட மேஜை மாநாட்டில் அவர்கள் 1930-இல் கலந்து கொண்ட போது, இந்தியர்களுக்கு இரண்டாவது சந்தர்ப்பம் கிட்டியது. இங்கேயும் மீண்டும் தங்களுக்கென ஒரு அரசியல் அமைப்புச் சட்டத்தை வடிக்க இந்தியர்கள் தவறிவிட்டனர். சமீபத்தில் செய்யப்பட்ட மூன்றாவது முயற்சி சாப்ரு கமிட்டி. இந்த கமிட்டியின் ஆலோசனைகளும் பயனற்றுப்போயின.

மற்றுமொரு முயற்சியை மேற்கொள்வதற்கு உற்சாகமோ, நம்பிக்கையோ இல்லை. விதிப்படி நடக்கும் என்ற எண்ணம், எந்த முயற்சியும் தோல்வியில் முடியுமாதலால் எம்முயற்சியும் வேண்டாம் என்று கூறும் நிலையை ஏற்படுத்தியுள்ளது. அதே சமயத்தில், இந்தியர் எவரும் இவ்வளவு மனச்சோர்வடைய வேண்டியதில்லை என நான் நினைக்கிறேன்; இந்தியாவிலுள்ள முட்டுக்கட்டை நிலை, ஒரு செத்த நாய் போன்று நாற்றமடிக்கும் நிலைக்குப் போகிறதை அனுமதிக்கிற, நாட்டில் நடக்கும் அரசியல் குழப்பச் சண்டைகளைப் பார்த்துக் கொண்டிருப்பதைத் தவிர எதுவும் செய்யப் போவதில்லை என்று கூறுகிற சொரணையற்ற நிலைக்கு எந்த இந்தியனும் தன்னைத் தாழ்த்திக் கொள்ள வேண்டியதில்லை. சென்ற காலத் தோல்விகள் யாரையும் சோர்வடையச் செய்ய வேண்டியதில்லை. அவை என்னை சோர்வடையச் செய்ய வில்லை. வகுப்புப் பிரச்சினைக்குத் தீர்வு காணச் செய்யப்பட்ட முயற்சிகள் எல்லாம் தோற்றுவிட்ட போதிலும், அந்தத் தோல்வி களுக்குக் காரணம். இந்தியர்களின் இயல்பான உள்ளார்ந்த குறை யினால் அல்ல என்று நினைக்கிறேன். அவற்றிற்குக் காரணம் தவறான கண்ணோட்டம் தான். எனது ஆலோசனைகளை உணர்ச்சிவசப்படாமல் நடுநிலையிலிருந்து பரிசீலித்தால், அவை ஏற்றுக் கொள்ளக் கூடியவையே என்று நான் உறுதியாக நம்பு கிறேன். அவை ஒரு புதிய கண்ணோட்டத்தைப் பிரதிபலிக்கின் றன; எனவே எனது நாட்டு மக்களுக்கு நான் அவற்றைச் சிபாரிசு செய்கிறேன்.

முடிக்கும் முன் என்னை விமர்சிப்பவர்களுக்கு ஒரு எச்சரிக்கை. என்னுடைய ஆலோசனைகளில் சில அம்சங்களுக்குத் திருத்தங்கள் கொடுப்பது அவர்களுக்குச் சாத்தியமாகலாம்; ஆனால் அவற்றை நிராகரிப்பது சுலபமல்ல. அவர்கள் இவற்றை நிராகரிப்பார் களெனில், அவர்கள் செய்ய வேண்டிய முதல் காரியம், எந்த கோட்பாடுகளின் அடிப்படையில் அவை தயாரிக்கப்பட்டனவோ அந்தக் கோட்பாடுகளையே மறுப்பது தான். ◉

4

மாநிலங்களும் சிறுபான்மையினரும்

அவர்தம் உரிமைகள் யாவை சுதந்திர இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் அவற்றைப் பெறுவது எவ்வாறு

அகில இந்திய ஷெட்யூல்டு வகுப்பினர் பெடரேஷன் சார்பாக ஷெட்யூல்டு வகுப்பாரின் நலன்கள், பாதுகாப்பு பற்றி அரசியல் நிர்ணய சபைக்கு அளித்த கோரிக்கை மனு

வெளியீடு: 1947

மாநிலங்களும் சிறுபான்மையினரும்

முன்னுரை

ஒரு அரசியல் நிர்ணயசபை வாயிலாக இந்தியாவின் அரசிய லமைப்பு உருப்பெறுவது உறுதியானதைத் தொடர்ந்து, அந்த அரசியல் நிர்ணய சபையிடம் (Constituent Assembly) அகில இந்திய ஷெட்யூல்டு வகுப்பாரின் பெடரேஷனின் செயற்குழு அதன் சார்பில் ஷெட்யூல்டு வகுப்பினரின் பாதுகாப்பை விழையும் கோரிக்கை மனு ஒன்றைத் தயார் செய்து அளிக்கும் பொறுப்பை எனக்களித்து அதை நான் மிக மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டேன். அம்முயற்சியின் விளைவே இந்த வெளியீடு.

இந்தக் கோரிக்கை மனு, அடிப்படை உரிமைகள், சிறுபான்மை யோரின் உரிமைகள், மற்றும் ஷெட்யூல்டு வகுப்பாரின் பாது காப்பு ஆகியவற்றை வரையறுக்கின்றது. 'ஷெட்யூல்டு வகுப்பினர் சிறுபான்மையினர் இல்லை' என்று, அசுரபலம் பொருந்திய இந்துப் பெரும்பான்மையினர் புதிதாகக் கூறும் கருத்துக்கு, ஷெட் யூல்டு சாதியினரை அடிபணிய வைக்க வற்புறுத்தப்படுகிறது. பெரும்பான்மைச் சார்புள்ளவர்கள், சிறுபான்மை மக்கள் பாது காப்பின் பொருள்பற்றியோ எல்லை பற்றியோ கவலைப்பட வில்லை. ''ஷெட்யூல்டு சாதியினர் சிறுபான்மையினர் அல்லர்'' என்ற கருத்து ஏற்படுத்தும் இருபொருள் குழப்பத்தை விருப்பு வெறுப்பின்றி நோக்குவோர் அறிவார்கள். ''சிறுபான்மை மக்கள்'' என்ற பொருளுக்கு ஷெடியூல்டு சாதியினர் அதிகப் பொருத்தமானவர்கள் என்பதுடன், பொதுவாக எந்தக் குடிமக னுக்கும் எந்தச் சிறுபான்மை மக்களுக்கும் வழங்கப்படும் பாது காப்பு ஷெட்யூல்டு சாதிமக்களுக்கு போதுமானது அல்ல என்றும் விளக்கமளித்துள்ளேன். இதை வேறு வகையில் கூறுமிடத்து, ஒரு சாதாரண குடிமகனுக்கோ, சிறுபான்மை மக்களுக்கோ சமூகத் திலும் பொருளாதாரத்திலும் கல்வியிலும் உள்ள தகுநிலைமையை விட ஷெட்யூல்டு வகுப்பு மக்களின் தகுநிலை மோசமாயுள்ளதால் பெரும்பான்மை மக்களின் கொடுங்கோன்மை, சமூக ஒதுக்கம் ஆகியவற்றிலிருந்தும் பாதுகாத்துக் கொள்ள ஒரு சிறப்புக் காப் புரிமை இம்மக்களுக்கு மிக அவசியமாகிறது. மற்றொரு கருத்தின் படி, ஷெட்யூல்டு வகுப்பினர் வேறு; சிறுபான்மையினர் வேறு; ஆகவே சிறுபான்மை மக்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பை ஷெட்யூல்டு வகுப்பினர் கோர முடியாது. இந்த விளக்கம் அபத்தமானது. அறிவுள்ள மனிதன் இந்த கொடூர வரையறை யைப் பாராட்ட வேண்டியது இல்லை. ஷெட்யூல்டு வகுப்பினர் இந்த வரையறையைப் புறக்கணிப்பார்களே எனில், அவர்கள்

மன்னிப்புக்குரியவர்கள். ஷெட்யூல்டு சாதிகள், 'ஒரு சிறுபான்மைப் பிரிவு அல்ல' என்ற பொதுக் கருத்துக்கு எதிராக என் பொருள் விளக்கத்தை ஏற்பவர்கள், எல்லாக் குடிமக்களுக்கும் உள்ள அடிப்படை உரிமைகளின் ஆதாயம், சிறுபான்மை மக்கள் பாதுகாப்புரிமைகளின் ஆதாயம் ஆகியவற்றுக்கு மேலாகச் சிறப்புக் காப்புரிமைகளை ஷெட்யூல்டு வகுப்பினர் பெறவேண்டும் என்ற என் கோரிக்கையில் உள்ள நியாயத்தை ஏற்பார்கள்.

இந்த கோரிக்கை மனு அரசியல் நிர்ணய சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்ற கருத்தில் உருவாக்கப்பட்டுள்ளது; மக்களுக்கு வழங்கும் அறிக்கையாக அல்ல. ஆனால் எனது தட்டெழுத்துப் பிரதிகளைப் படித்த எனது இந்து நண்பர்கள் இதைப் பலரும் படித்துப் பயனுறப் பொது அறிக்கையாக வழங்க வேண்டுமென்று என்னை வற்புறுத்தினார்கள். இது அரசியல் நிர்ணயசபைக் குழுவினர் கவனிக்க வேண்டியது என்றாலும்கூட, இப்படி இதைப் பலதரப்பட்ட மக்களும் அறியநேர்வதால் ஒழுங்கு முறைக்குப் பங்கம் வந்துவிடாது என்றுணர்ந்து நானும் அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றுகிறேன்.

இக்கோரிக்கை மனுவைப் பொதுப்படையாகச் சொல்வதைவிட அரசியலமைப்பின் நகல் ஷரத்துக்களாக (articles) வரைந்துள்ளேன். துல்லியமாகக் கருத்தைச் சொல்ல இந்த அணுகுமுறை நல்ல பயன்தரும் என்று உறுதியாக நம்புகிறேன். ஷெட்யூல்டு சாதிக்கூட்டமைப்பின் செயற்குழுவின் நன்மைக்காக நான் அளித்த சில விளக்கக் குறிப்புகளையும் வேறு புள்ளிவிவரங்களையும், பொது வாசகர்களுக்கு உதவும் என்பதால், இக்கோரிக்கை மனுவுடன் அவற்றையும் அச்சிட்டு இணைத்துள்ளேன்.

அரசியல் நிர்ணயசபை எதிர்நோக்க வேண்டியுள்ள பல்வேறு பிரச்சினைகளில் இரண்டு விஷயங்கள் மிகக் கடினமானவை. ஒன்று, சிறுபான்மையினர் பிரச்சினை; இரண்டு, இந்திய மாநிலங்களின் பிரச்சினை. இந்திய மாநிலப் பிரச்சினை குறித்த ஆய்வு மாணாக்கன் என்ற முறையில் இதைப்பற்றி எனக்குச் சில தெளிவான, உறுதியான கருத்துக்கள் உண்டு. அரசியல் நிர்ணயசபை, மாநில அமைப்புக்குழு (States Committee) உறுப்பினராக என்னைத் தேர்ந்தெடுக்கும் என்பது எனது நம்பிக்கை. ஆயின் இப்பணிக்கு என்னிலும் சிறந்தவர்களை அரசியல் நிர்ணயசபை கண்டு பிடித்திருக்கிறது. நான் இந்தத் திருக்கூட்டத்துக்கு அந்நியன் என்பதற்காக விலக்கப்பட்டதால் எனக்குக் கவலை இல்லை. ஆனால் மாநில அமைப்புக் குழுவின் பரிசீலனைக்கு என் கருத்துக்களை வைக்கும் ஒரு சந்தர்ப்பத்தை இழந்துவிட்டதில் எனக்கு வருத்தமுண்டு. எனவே, நல்லதோர் மாற்றுவழியை நான் தேர்ந்தெடுத்தேன். அதாவது குடிமக்கள், சிறுபான்மையினர் மற்றும் ஷெட்யூல்டு வகுப்பினர் உரிமைகளுடன் இக்கருத்துக்களையும் இந்த வெளியீட்டில் இணைத்துள்ளேன். இதன் மூலம் பரந்த

அளவில் பொதுமக்கள் பார்வைக்கு இது செல்வதால் இந்த வெளி யீடு பலருக்கும் பயனுள்ளதாகவும் மதிப்புமிக்கதாகவும் அமையும் என்று நம்புகிறேன்.

பி. ஆர். அம்பேத்கர்

ராஜகிருஹா
தாதர், பம்பாய்-14
15-03-1947

இந்திய ஐக்கிய மாநிலங்களின் அரசியலமைப்பு: நகல் முகப்புரை

மாகாணங்களாகவும் (Provinces) மைய நிர்வாகப் பகுதிகளாக வும் சுதேச சமஸ்தானங்களாகவும் அமைந்துள்ள பிரிட்டிஷ் இந்தியாவின் மக்களாகிய நாங்கள் இப்போதைவிடச் சிறந்த ஒரு கூட்டமைப்பை உருவாக்குவதற்காக, சட்டமன்ற, செயலாட்சி (Executive), நிர்வாக நோக்கங்களுக்கு ஏற்ப 'இந்திய ஐக்கிய மாநிலங்களின் அரசியலமைப்பு' என்ற பெயரில் ஒரு அரசியல் சமுதாயமாக (Body Politics) ஒருங்கிணையவும், இவ்வாறு உருப் பெறும் யூனியன் பிரிக்க முடியாதது என்றும் ஆணையிடுகிறோம்.

இத்துடன் மேலும் கொள்ளப்படும் கருத்துக்களாவன:

(1) இன்று நமக்கும் நாளை நமது சந்ததிகளுக்கும் இந்திய ஐக்கிய மாநிலங்கள் முற்றிலுமாக சுய ஆட்சிக்கும் (Self Government) நல்லாட்சிக்கும் வழிசெய்தல்.

(2) ஒவ்வொரு குடிமகனுக்கும் உயிர்வாழும் உரிமை, சுதந்திர உரிமை, மகிழ்ச்சி வாழ்வு, பேச்சு சுதந்திரம், மத வழி பாட்டு சுதந்திரம் ஆகியவற்றை நிலை நிறுத்துதல்.

(3) ஒடுக்கப்பட்ட மக்கள் வர்க்கத்திற்கு நல்வாய்ப்புகளை நல்கி சமூக, அரசியல், பொருளாதார ஏற்றத் தாழ்வு களை அகற்றுதல்.

(4) ஒவ்வொரு குடிமகனுக்கும் வறுமையிலிருந்து விடுதலை யுடன் பயத்திலிருந்து விடுதலையும் வழங்குதல்.

(5) மற்றும், உள்நாட்டுக் குழப்பத்திலிருந்தும் அந்நியத் தாக்கு தலிலிருந்தும் காப்பாற்றுவதற்காகவும் இந்திய ஐக்கிய மாநிலங்களின் அரசியலமைப்பை ஸ்தாபிக்கிறோம்.

நகல் ஷரத்து 1

விவரமான பகுப்புகள்

ஷரத்து 1, பிரிவு 1—யூனியனுக்குள் இந்திய மாநிலங்களை ஏற்றுக் கொள்ளுதல்:

கூறு 1. தகுதிபெறும் இந்திய மாநிலங்களும் யூனியனுக்குள் அவற்றின் ஏற்பும்.

கூறு 2. யூனியனுக்குள் நுழையாத ஆனால் தகுதிவாய்ந்த மாநிலங்களுக்கும் தகுதிபெறாத மாநிலங்களுக்கும் இடையே உள்ள உறவு.

கூறு 3. தகுதி பெறாத மாநிலங்களை தகுந்த முறையில் மறு சீரமைப்பு செய்து இந்திய யூனியனில் நுழைவதற்குத் தகுதியுள்ள மாநிலங்களாக ஆக்குவதில் இந்திய ஐக்கிய மாநிலங்களின் அமைப்புக்கு அதிகாரம்.

கூறு 4. யூனியனுக்குள் அடங்கும் புது மாநிலங்களின் உரு வாக்கம்.

ஷரத்து 1, பிரிவு 2—இந்திய ஐக்கிய மாநிலங்களும் புதிய பிரதேசங்களும்:

கூறு 1. யூனியனுக்குள் அந்நிய ராஜ்யங்களை இணைத்தல்.

கூறு 2. புதிய பிரதேசங்களைக் கைப்பற்றி, அவற்றை யூனிய னில் இணையாத இந்தியப் பகுதிகளாக வைத்துக் கொள்ளுதல்.

ஷரத்து 1—பிரிவு 1

யூனியனுக்குள் இந்திய மாநிலங்களை ஏற்றல்

கூறு 1

இந்திய ஐக்கிய மாநிலங்கள் அரசியலமைப்பின் கீழ் யூனியன் ச்சட்டமன்றம் விதிக்கும் நிபந்தனைகளை ஏற்று விண்ணப்பிக்கும் தகுதிவாய்ந்த மாநிலங்களை யூனியனில் சேர அனுமதிக்கலாம்.

* இந்த நோக்கத்திற்காக தகுதியுள்ள இந்திய மாநிலங்களின் பட்டியல் தயாரிக்க வேண்டும். 'தகுதிவாய்ந்த ஒரு மாநிலத்தின் லட்சணங்கள் வருமாறு: யூனியன் சட்டமன்றம் நிர்ணயிக்கும் சரியான நிலப்பரப்பையும், தன்னுடைய மக்கள் கண்ணியமாய் வாழ்வதற்கு ஏற்ற இயற்கை வளங்களையும், சுயாட்சிக்குப் போதிய வருவாய் மற்றும் மக்கள் தொகையும், வெளி ஆக்கிர மிப்பைத் தடுக்கவும் உள்நாட்டுக் கலவரங்களை ஒடுக்கிச் சட்டம்-ஒழுங்கைப் பராமரிக்கவும் வேண்டிய ஆற்றலையும், ஒரு நவீன அரசுக்கு உரிய நிர்வாகத் தரங்களையும் மக்கள் நல்வாழ்வு வசதி களையும் அது பெற்றிருக்க வேண்டும்.

கூறு 2

யூனியனுக்குள் நுழையாத ஆனால் மாநிலத் தகுதி கொண்ட இந்திய மாநிலங்கள் மற்றும் தகுதிபெறாமல் இந்திய ஐக்கிய மாநி லங்களின் இணைப்பில் அடங்கும் பிரதேசங்கள் என்று யூனியன் சட்டமன்றம் வரையறுத்துள்ள பிரதேசங்கள் எப்போதும் இந்திய ஐக்கிய மாநில அரசியலமைப்புக்குரிய பகுதிகளாக விளங்கும்.

கூறு 3

தகுதிபெறாத இந்திய மாநிலப்பிரதேச எல்லைகளை உகந்த நிர்வாகக் கூறுகளாக்கி யூனியனில் அனுமதிக்கும் பொருட்டு சீர்திருத்தவும், மாற்றியமைக்கவும், மறுவினியோகம் செய்யவும், ஒன்று சேர்த்துக் கொள்ளவும் இந்திய ஐக்கிய மாநில அரசுக்கு அதிகாரம் உண்டு.

கூறு 4

யூனியனுக்குள் அடங்கிய மாநிலமாக ஒரு மாநிலம் அனு மதிக்கப்பட்ட பிறகு, அதற்குள் ஒரு புதிய மாநிலத்தை உருவாக்க இயலாது என்பதுடன், ஒரு புதிய மாநிலத்துடன் இரண்டு அல்லது பல மாநிலங்களையோ மாநிலப் பகுதிகளையோ சம்பந்தப்பட்ட மாநில சட்டமன்ற ஒப்புதல் மற்றும் யூனியன் சட்டமன்ற ஒப்புதல் (நாடாளுமன்றம்) இல்லாமல் இணைத்துப் புதிய மாநிலமாக உருவாக்கவும் முடியாது.

---

* விளக்கங்களுக்குப்பின் இணைப்புப் பகுதிகளைக் காண்க.

ஷரத்து 1 — பிரிவு 2

கூறு 1

இந்தியாவின் இயல்பான பிரதேசம் எதையும் இந்திய ஐக்கிய மாநிலங்கள் யூனியனில் சேர்த்துக் கொள்ளலாம். நிலப்பகுதி களையும் இந்தியாவின் இயல்பான பகுதிகளாக ஆக்கிக் கொள்ள லாம் என்பதுடன், இந்திய எல்லைக்கு அப்பால் உள்ள நிலப் பகுதிகளையும் பரஸ்பரம் பேசி ஒப்புக் கொள்ளும் நிபந்தனை களின்படி சேர்த்துக் கொள்ளலாம். இவ்வாறு செய்யப்படும் ஒப்பந்தங்களை இந்திய ஐக்கிய மாநிலங்களின் அரசியலமைப் புடன் ஒத்திசைந்து செய்ய வேண்டும். அத்துடன் இவ்வாறு இணையும் அனுமதி பெற இந்திய ஐக்கிய மாநிலங்களில் பாதிக் கும் மேற்பட்ட மாநில சட்டசபைகளில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.

கூறு 2

இந்திய ஐக்கிய மாநில யூனியன் வேறு பிரதேசங்களைக் கைப்பற்றலாம். அப்பகுதிகள் யூனியனுடன் இணைப்பில்லாத பிரதேசமாக மதிக்கப்படலாம். இணைப்பில்லாத இப்பிரதேசங் களின் மீது இந்திய ஐக்கிய மாநிலங்களின் அரசியலமைப்பின் ஷரத்துக்களை யூனியன் சட்டமன்றத்தின் அனுமதியுடன்தான் அமல் நடத்த முடியும்.

நகல் ஷரத்து 2

விவரமான பகுப்புகள்

ஷரத்து 2, பிரிவு 1—குடிமக்களின் அடிப்படை உரிமைகள்

ஷரத்து 2, பிரிவு 2—அடிப்படை உரிமைகளுக்கு ஆபத்து வரும் போது பரிகாரங்கள்:

கூறு 1—நீதிமன்றப் பாதுகாப்பு

கூறு 2—சமத்துவமின்மைக்கு எதிரான பாதுகாப்பு

கூறு 3—பாரபட்சத்துக்கு எதிரான பாதுகாப்பு

கூறு 4—பொருளாதாரச் சுரண்டலுக்கு எதிரான பாதுகாப்பு

ஷரத்து 2, பிரிவு 3—சிறுபான்மை மக்களின் பாதுகாப்புக்கு வழிவகை காணுதல்:

கூறு 1—வகுப்புவாத சக்திகளுக்கு எதிரான பாதுகாப்பு

கூறு 2—சமூக மற்றும் அதிகாரக் கொடுங்கோன்மைக்கு எதிரான பாதுகாப்பு

கூறு 3—சமூக ஒதுக்கத்திற்கு (Social Boycott) எதிரான பாதுகாப்பு

கூறு 4—பொதுக் காரியங்களுக்கு பணம் செலவிடும் போது சிறுபான்மையினர் நலனையும் பேணுவதில் அரசுக்கு உரிய அதிகாரமும் கடமையும்.

ஷரத்து 2, பிரிவு 4—ஷெட்யூல்டு சாதியினரின் பாதுகாப்புகள்

பாகம் 1.—உத்தரவாதங்கள்:

கூறு 1—சட்டமன்றத்திலும் உள்ளாட்சி மன்றங்களிலும் பிரதிநிதித்துவ உரிமை

கூறு 2—செயலாட்சிக் குழுவில் (Executive) பிரதிநிதித்துவம்

கூறு 3—அரசுப் பணித்துறையில் (Services) பிரதிநிதித்துவம்

பாகம் 2—சிறப்புப் பொறுப்புகள்:

கூறு 1—உயர்கல்விக்காக

கூறு 2—தனி குடியிருப்புக்களுக்காக

பாகம் 3—பாதுகாப்புக்குரிய ஒப்புதல்களும் திருத்தங்களும்:

கூறு 1—அரசியலமைப்பில் இடம்பெறவேண்டிய உத்தரவாதங்கள்

கூறு 2—பாதுகாப்புகள் குறித்த சட்டத்திருத்தங்கள்

பாகம் 4—இந்திய மாநிலங்களில் ஷெட்யூல்டு சாதியினரின் பாதுகாப்பு

பாகம் 5—விளக்கம்

ஷரத்து 2 — பிரிவு 1

குடிமக்களின் அடிப்படை உரிமைகள்

இந்திய ஐக்கிய மாநிலங்களின் அரசியலமைப்பு பின்வரும் குடிமக்கள் அடிப்படை உரிமைகளை அங்கீகரிக்கும்:

1. இம்மண்ணில் பிறந்தவர்கள் அல்லது இம்மண்ணின் குடியுரிமையை ஏற்ற அந்நியர்கள் (Naturalised) எல்லோரும் இந்திய ஐக்கிய மாநிலக் குடிமக்களாவர். இக்குடிமக்கள் இந்திய மாநிலங்களில் வாழ்பவர்கள். அந்தஸ்து பிறப்பு, தனி நபர், குடும்பம், மதம் அல்லது மதமரபு—பழக்க வழக்கம் ஆகியவை காரணமாக எவருக்கும் சலுகையோ உரிமை மறுப்போ இருக்காது;

2. எந்த ஒரு மாநிலமும் குடிமக்களின் உரிமைச் சலுகைகளையோ பாதுகாப்புகளையோ ஒடுக்கும் வகையில் சட்டத்தையோ மரபையோ இயற்றவோ அமுலாக்கவோ கூடாது. சட்டதிட்டங்களுக்குட்பட்ட வழியில் அல்லாமல் ஒரு மாநிலம் எந்த ஒரு குடிமகனின் உயிரையோ, சுதந்திரத்தையோ, சொத்தையோ பறிக்க முடியாது. அவ்வாறே சட்டத்தின் முன் எல்லோரும் சமம் என்ற முறையில் சட்டத்தின் பாதுகாப்பையும் ஒரு குடிமகனுக்கு மறுக்க முடியாது.

3. சட்டத்தின் முன் எல்லாக் குடிமக்களும் சமம். எல்லாக் குடிமக்களும் சமமான குடியுரிமைகளைக் கொண்டுள்ளனர். எந்த நாளிலிருந்து இந்த அரசியலமைப்பு செயலாற்றத் தொடங்குகிறதோ அந்த நாளிலிருந்து குடிமக்கள்மீது விதிக்கப்பட்ட எல்லா விதமான அபராதம், வில்லங்கம், வேற்றுமை காணுதல் சம்பந்தமான நடைமுறைச் சட்டங்கள், கட்டுப்பாடுகள், ஆணைகள், மரபுகள் சட்ட விளக்கங்கள் எல்லாமே காலாவதியாகின்றன.

4. சத்திரம்-சாவடி, கல்வி நிலையங்கள், சாலைகள், ஏரி, குளம், கிணறுகள், மற்றும் வேறு நீர் நிலைகள், மண்ணிலும் விண்ணிலும் புனலிலும் உள்ள போக்குவரத்து சாதனங்கள், திரை அரங்குகள் போன்ற மனமகிழ் மன்றங்கள், பொது உறைவிடங்கள் எவையெனினும் அவை யார் பெயரில் இருப்பினும் பொது மக்கள் உபயோகத்திற்கென்று அரசே நிர்வகித்தாலும் சரி, உரிமம் (Licence) வழங்கப்பட்டிருந்தாலும் சரி, சமூக அந்தஸ்தைப் பாராட்டாமல் எல்லாப் பிரிவு மக்களுக்கும் மேற்கூறிய பொது இடங்களில் எல்லா நலன்களையும் சலுகைகளையும் வசதிகளையும் அனுபவித்து இன்புற உரிமைகளை மறுப்பவர் யாராக இருந்தாலும் சட்டப்படி குற்றவாளியாவார்.

5. பொதுமக்களுக்காகப் பொது நிர்வாகத்தின் கீழ் பராமரிக்கப்படும் எல்லா நிறுவன அமைப்புகளின் வசதிகள் யாவிலும் எல்லாக் குடிமக்களுக்கும் சம உரிமை உண்டு.

6. ஒருவரது மதம், சாதி, சமயக் கோட்பாடுகள், பால் அல்லது சமூக அந்தஸ்தைக் காரணம் காட்டி பொதுப் பதவியிலிருந்தோ, வர்த்தக-தொழில் உரிமையிலிருந்தோ எந்தக் குடிமகனையும் தகுதி நீக்கம் செய்ய முடியாது.

7. i) இந்தியாவின் எந்தப் பகுதிகளிலும் ஒரு குடிமகன் வசிப்பதற்கு உரிமை உண்டு. பொது ஆணை அல்லது நன்னடத்தை போன்ற தகுந்த காரணங்கள் இல்லாமல் எந்த ஒரு சட்டமும் அக்குடி உரிமையை ஒடுக்க முடியாது.

ii) இந்தியாவின் எந்தப் பகுதிகளிலும் ஒரு குடிமகன் குடிபெயர்ந்து நிலையாகத் தங்கி வாழும் உரிமையும் உண்டு. அவ்வாறு குடிபெயர்ந்து வாழும்போது முதலில் அவன் வாழ்ந்த மாநிலத்தின் குடிஉரிமைச் சான்றிதழைக் கொடுக்க வேண்டியிருக்கும். இவ்வாறு குடிபெயர்ந்து தங்கிவாழும் உரிமையை திட்டவட்டமான காரணங்கள் (இக்கூறின் துணைக் கூறு (iv) குறிப்பிட்ட வண்ணம்) இல்லாதவரை, மறுக்க முடியாது.

(iii) இவ்வாறு குடிபெயர்ந்து வாழ விரும்பும் ஒரு குடிமகனுக்கென்று கூடுதலான வரிக்கட்டணங்களை ஒரு மாநிலம் விதிக்க இயலாது. ஒரு மாநிலம் தன்னுடைய குடிமகனுக்கு விதிக்கும் அதே வரிகளைத்தான் குடிபெயர்ந்த மக்களுக்கும் விதிக்க முடியும். மையத்திலுள்ள யூனியன் சட்டமன்றம், சட்டரீதியாக நிர்ணயிக்கும் அதிகபட்சத் தீர்வையையே இத்தகைய குடியேற்றங்களுக்கு விதிக்கலாம்.

(iv) ஒரு மாநிலம் அடியில் கண்ட காரணங்களுக்காக குடியேற்ற அனுமதியை மறுக்கலாம் அல்லது திரும்பப் பெறலாம்:

அ) தொடர்ந்து பழக்கத்திற்கு ஆளாகிவிட்ட குற்றவாளிகள்;

ஆ) ஒரு குறிப்பிட்ட மாநிலத்தில் குடியேறும் நோக்கம் அம்மாநிலத்தின் வகுப்புச் சமன் நிலையைக் குலைப்பதாக இருந்தால்;

இ) இவ்வாறு குடியேற்றம் கோரும் மக்கள் சுய வருவாய் உள்ளவர்களாகவோ மாநிலத்தின் பொது அறநிதிக்குச் சுமையாக இருக்க மாட்டார்கள் என்றோ மாநிலம் மனநிறைவு பெறும் வழியில் நிரூபிக்க இயலாத நிலை.

ஈ) தேவையான வசதிகளைக் கோரிய பிறகும் தாம் பிறந்த மாநிலத்தினால் உதவி மறுக்கப்பட்ட வர்கள்.

(v) விண்ணப்பம் கோரும் குடியேற்ற அனுமதி நிபந் தனைக்குரியது. உடலில் உழைக்கும் தெம்பு இருந் தும் பிறந்து வளர்ந்த மாநிலத்தில் பொது அறநிதி உதவியை நிலையாகப் பெற்று வருவோராக இருக் கக் கூடாது. வேலையில்லாத் திண்டாட்டத்தைச் சமாளிக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

(vi) மாநிலத்திலிருந்து வெளியேற்ற, யூனியன் அரசின் ஒப்புதல் வேண்டும்.

(vii) குடியேற்றத்திற்கும் குடியிருப்புக்கும் உள்ள வேற் றுமைகளை யூனியன் சட்டமன்றம் வரையறுக்க வேண் டும். அதேசமயம், குடியிருக்கும் மக்களுக்குரிய அரசி யல் மற்றும் சிவில் உரிமை உறவுகளையும் அறுதி யிட்டுக் கூற வேண்டும்.

8. இந்தியாவின் எந்தப் பகுதியிலும் ஒரு சமூகத்திற்கு எதிராக அடக்குமுறை அட்டூழியங்களுடன், உள்ளூர்க் கலவரம், வன்முறை ஆகியவற்றிலிருந்து பாதுகாப்புக்குரிய உத்திரவாதத்தை யூனியன் அரசு வழங்க வேண்டும்.

9. ஒரு மனிதனிடம் பலாத்காரமாக வேலை வாங்குவதோ கட்டாய அடிமை நிலைக்குட்படுத்துவதோ குற்றம்.

10. ஒரு மனிதனின் உயிர், உடைமைகள், வீடு, அத்தாட்சிப் பத்திரங்கள் ஆகியவை குடிமக்கள் உரிமைப் பாதுகாப்பில் அடங்குவன. காரண காரியம் இல்லாமல் வீட்டில் நுழைந்து தேடு வதோ பறிமுதல் செய்வதோ சட்டப்படி குற்றம். எதுவும் சந்தேகப் படும்படியான காரணம் இருந்து உகந்த வாக்குப் பிரமாணம் அல்லது உறுதிமொழி இல்லாமல் பிடி ஆணை (warrant) வழங்க இயலாது. அவ்வாறு வழங்கும் போது திட்டவட்டமாகத் தேடும் இடம், நபர்கள், பொருட்கள் எவற்றையெல்லாம் கைப்பற்ற வேண்டும் என்ற விவரங்களைக் குறிப்பிட வேண்டும்.

11. ஒரு மனிதன் வாக்குரிமையை எக்காரணம் கொண்டும் மறுக்கவோ ஒடுக்கவோ முடியாது—போதிய வயதின்மை, சிறை வாசம், சித்தசுவாதீனமின்மை ஆகிய காரணங்களைத் தவிர.

12. பொது அமைதிக்கும் சமூக ஒழுக்கத்திற்கும் ஊறு நேராத வரையில், பேச்சு-எழுத்து சுதந்திரத்திற்கும், பத்திரிகை சுதந்திரத் திற்கும் சங்கம் சேரும், கூட்டம் நடத்தும் சுதந்திரத்துக்கும் தடை விதித்து சட்டம் கொண்டு வருவதற்கில்லை.

13. தண்டனை பெற்றதற்காக ஒருவருடைய சிவில் உரிமை களைப் பறிக்கவோ, கடந்த காலத்தை உள்ளடக்கியோ சட்டங்கள் இயற்றக் கூடாது.

14. ஒவ்வொரு இந்தியக் குடிமகனுக்கும் மனச்சாட்சிச் சுதந் திரத்தை அரசு பாதுகாக்க வேண்டும்—பொது அமைதிக்கும் நன்னடத்தைக்கும் ஊறுநேரா வண்ணம் தனது மதத்தைப் பின் பற்றவும் பிரசாரம் செய்யவும் மதம் மாற்றவும் உள்ள உரிமையை யும் பாதுகாக்க வேண்டும்.

15. ஒருவரைக் கட்டாயத்தின் பேரில் எந்த மதச் சங்கத்திலும் உறுப்பினராக்குதல், குறிப்பிட்ட மதபோதனையை போதித்தல், உள்ளாக்குதல், மதக்காரியம் செய்ய வைத்தல் ஆகியவை கூடாது. குழந்தைகளுக்கு 16 வயது நிரம்பும் வரையில் பெற்றோர்களோ பாதுகாவலரோ மேற்கூறிய நிபந்தனைகளுக்கு உட்பட்டு குறிப் பிட்ட மதபோதனையை நிர்ணயிக்கலாம்.

16. ஒருவருடைய சாதி, கோட்பாடு அல்லது மதத்தைக் கார ணம் காட்டி அபராதம் விதிப்பதையும், சாதி, கோட்பாடு, மத அடிப்படையில் ஒருவர் குடிமகனுக்கு உரிய கடமையை நிறை வேற்ற மறுப்பதையும் அனுமதிப்பதற்கில்லை.

17. அரசு எந்த மதத்தையும் அரசாங்க மதமாக அங்கீகாரம் வழங்க முடியாது.

18. ஒரு குறிப்பிட்ட மதத்தைப் பின்பற்றுவோர் தமக்குள் சங்கம் அமைத்துக் கொள்ள உரிமை பெற்றோராவர். அவர்கள் விரும்பினால் அவர்களுடைய விதிமுறைப்படி அச்சங்கத்தை அங்கீ கரிக்கச் சட்டம் இயற்றும்படி அரசினிடம் கோரலாம்.

19. எல்லா மத அமைப்புகளும் நாட்டின் பொதுவான சட்ட எல்லைக்குட்பட்டு சுய நிர்வாகம் செய்து கொள்ளவும் கட்டுப் பாடுகள் வகிக்கவும் உரிமை கொண்டவை.

20. மத அமைப்புகள் தங்கள் உறுப்பினர்களிடமிருந்து நன் கொடை வசூலித்துக் கொள்ளலாம். அவற்றின் அமைப்பு விதிகள் (Law of incorporation) அனுமதிக்கும் போது, விருப்பமுள்ளவர்கள் நன்கொடை வழங்கத் தடை இல்லை. ஒரு மதச் சமூகத்தின் உறுப் பினராயில்லாத எவரையும் அந்த மதச் சமூகச் செலவுக்காக வரி செலுத்துமாறு கட்டாயப்படுத்த முடியாது.

21. இப்பிரிவில் வரும் எல்லாக் குற்றங்களும் நீதிமன்ற ஆட்சி எல்லைகளுக்குட்பட்டவை. சட்டப் பிரிவுகளாக இவற்றுக்கு வடிவம் கொடுத்து யூனியன் சட்டமன்றம் சட்டங்கள் இயற்று வதுடன் குற்றங்கள் என்று முடிவான செயல்களுக்கு உரிய தண்டனைகளையும் குறிப்பிட வேண்டும்.

ஷரத்து 2 — பிரிவு 2

அடிப்படை உரிமைகள் தாக்குதலுக்குள்ளாவதற்கு எதிரான பரிகாரங்கள்

கூறு 1

1) இந்தியாவின் நீதித்துறை அதிகாரம் உச்ச நீதிமன்றத்திடம் (Supreme Court) வழங்கப்படும்.

2) மற்ற எல்லா நீதிமன்றங்களையும் அவற்றின் அதிகாரிகளையும் — அவை தன்னுடைய அப்பீல் அல்லது மறு விசாரணை அதிகாரத்துக்கு உட்பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும் — மேற்பார்வையிடும் அதிகாரம் உச்சநீதிமன்றத்துக்கு உண்டு.

3) பாதிக்கப்பட்டவர் மனுச் செய்தால், ஒரு நபரை ஆஜர் செய்யும்படியும், கீழ் நீதிமன்ற ஆவணங்களை ஆஜர் செய்யும்படியும், நீதிமன்றம் அல்லது அதிகாரிகளின் அதிகாரத்துக்குத் தடைவிதிக்கவும், கீழ்மன்றத்துக்குக் கட்டளையிடவும், இத்யாதி பேராணைகளை (Writs) பிறப்பிக்கும் விசேஷ அதிகாரங்கள் உச்சநீதிமன்றத்துக்கு உண்டு; நாடு முழுதிலும் இவை செல்லுபடியாகும்.

4) கலகம் அல்லது படையெடுப்பின் போது, பொது பந்தோபஸ்துக்காக நிறுத்தி வைக்கப்பட்டாலொழிய, மற்றபடி இவ்வாறு 'ரிட்' மனு செய்யும் உரிமையை மறுக்க முடியாது.

கூறு 2

யூனியன், மாநிலங்களின் சட்டமன்றங்களும் அரசுகளும் செலுத்தக் கூடிய அதிகாரத்துக்குப் பின்வரும் வரம்புகள் உண்டு:

இந்தியாவில் உள்ள எந்தச் சட்டமன்றமாயினும் செயலாட்சியாயினும் குடிமக்களின் பின்கண்ட உரிமைகளை மீறும் வழியில் சட்டம் இயற்றவோ, ஆணை பிறப்பிக்கவோ விதிமுறைகளை வகுக்கவோ, கட்டுப்படுத்தவோ தகுதி படைத்தவை அல்ல.

1) ஒப்பந்தங்களைச் செய்தல் — செயலாக்குதல், வழக்குத் தொடுத்தல், ஒப்பந்தக்காரர்களாக இருத்தல், சாட்சி வழங்கல், நிலச் சொத்தாயினும் தனிச் சொத்தாயினும் வாரிசு உரிமையாகப் பெறுதல், வாங்குதல், விற்றல், குத்தகைக்கு விடுதல், வைத்திருத்தல், கொடுத்தல்.

2) ஆட்சித் துறையிலும் ராணுவத்திலும் வேலைபெறும் தகுதி, எல்லாக் கல்வி நிறுவனங்களிலும் நுழைவுத் தகுதி — எல்லாப் பிரிவு மக்களுக்கும் போதிய பிரதிநிதித்துவம் அளிப்பதற்காக மாத்திரம் இதற்கு வரையறைகளை விதிக்கலாம்.

3) எல்லோருக்கும் பொதுவான கட்டுப்பாடு, நிபந்தனைகளுக்குட்பட்டு, இன, நிற, வர்க்க, சாதிபேதம் இல்லாமல் எல்லோருக்கும் சமமாக சத்திரம்-சாவடி, கல்வி நிலையங்கள், ஏரி, குளம்,

கிணறுகள், ஆறுகள், மண்ணிலும் விண்ணிலும் நீரிலும் உள்ள போக்குவரத்துகள், திரை அரங்குகள் போன்ற மனமகிழ்மன்றங்கள், பொது உறைவிடங்கள் போன்றவற்றைப் பயன்படுத்துவதற்கும் சமஉரிமை உண்டு.

4) பொது மக்களுக்காகவோ ஒரு குறிப்பிட்ட மதத்தினருக் காகவோ அமைத்து, அல்லது உரிமம் பெற்றுப் பராமரிக்கப் படும் மத அல்லது அறக்கட்டளைகளில் பங்குபெறுவதற்குச் சம உரிமை.

5) பழக்கவழக்கங்கள் அல்லது மதரீதியான மரபுகள் காரண மாக, குறிப்பிட்ட சிலரை ஒதுக்காமல், எல்லோருக்கும் சமமாக உயிர்-உடைமைகளைப் பாதுகாக்கவும், தண்டனை அல்லது இம்சையைத் தவிர்க்கவும் சட்டப்படி சம உரிமை.

கூறு 3

1) அரசு நிர்வாக அதிகாரிகளாயினும் சரி, தொழில் கூடங் களில் தனிப்பட்ட முதலாளிகளாயினும் சரி, குடிமக்களை இன, கோட்பாடு, சமூக அந்தஸ்து காரணமாகப் பாரபட்சமாக நடத்து வது குற்றமாகக் கருதப்பட வேண்டும். இந்த வழக்குகளை விசா ரிக்க ஒரு தனி நீதிமன்றத்தை அமைக்க வேண்டும்.

2) இதற்கான சட்டத்தை இயற்றும் உரிமையும் கடமையும் யூனியன் சட்டமன்றத்துக்கு உண்டு.

கூறு 4

யூனியனுக்குச் சட்டபூர்வமாக பின்வரும் அதிகாரங்கள் உண்டு:

1) கேந்திரமாக உள்ள தொழில்களை அரசு அல்லது அரசுக் கார்ப்பரேஷன்கள் உடைமை உரிமையுடன் நிர்வகிக்கலாம்.

2) கேந்திரமாக இல்லாவிடினும் அடிப்படையானவையாக உள்ள தொழில்களை அரசு அல்லது அரசுக் கார்ப்பரேஷன்கள் உடைமை உரிமையுடன் நிர்வகிக்கலாம்.

3) இன்ஷூரன்ஸ் அரசின் ஏகபோகமாக மாறவேண்டும். வயதுவந்த குடிமகனின் சம்பளத்தை அடிப்படையாக வைத்து சட்டமன்றம் இன்ஷூரன்ஸ் தொகையை நிர்ணயித்து, ஆயுள் இன்ஷூரன்ஸ் பாலிசியைக் கட்டாயமாக்க வேண்டும்.

4) வேளாண்மையை அரசுத் துறை தொழிலாக்க வேண்டும்.

5) இவ்வாறு அரசுடைமையாக்கப்படும் தொழில்கள், இன்ஷூ ரன்ஸ், விவசாய நிலம் ஆகியவற்றில், உரிமை உள்ளவர்களுக்கு, அவர்களுடைய உரிமைக்கு ஏற்ற இழப்பீட்டைக் கடன் பத்திரங் களாக அரசு வழங்க வேண்டும். அவசர நிலைமை, வருங்காலச் சாத்தியக்கூறு, அல்லது கட்டாயக் கையகப்படுத்துதலைக் காரண மாகக் காட்டி இந்தச் சொத்துக்களின் மதிப்பை உயர்த்திக் கணக் கிடக் கூடாது.

6) எப்போது, எவ்வாறு அக்கடன் பத்திரங்களை வைத்திருப்பவர்கள் ரொக்கம் பெற வேண்டும் என்பதை அரசு நிர்ணயம் செய்யும்.

7) இக்கடன் பத்திரத்தை மாற்றிக் கொள்ளலாம். வாரிசுகள் உரிமை பெறலாம். இக்கடன் பத்திரத்திற்குரியவர்களோ, மாற்றம் பெற்றவர்களோ, வாரிசுதாரரோ அரசு கைப்பற்றிய நிலத்தின் மீது உரிமையோ, தொழில் நிறுவன பங்கு உரிமையோ கோர முடியாது; வேறு எவ்வகையிலும் கூற உரிமைகோர முடியாது.

8) கடன் பத்திரம் வைத்துள்ளவர் அக்கடன் பத்திர மதிப்புக்குரிய வட்டியைப் பெறக்கடவர். பொருத்தமான வழியில், சட்டப்படி பெறவேண்டிய வட்டியை ரொக்கமாகவோ பொருளாகவோ பெற அரசு நிர்ணயம் செய்யும்.

9) வேளாண்மைத் தொழில் பின்வரும் அடிப்படையில் உருவாக்கம் செய்யப்படும்:

i) இவ்வாறு பெறப்பட்ட நிலத்தை நல்ல அளவுள்ள பண்ணைகளாக அரசு பிரிக்கும். கிராமத்தில் வாழும் குடும்பங்கள் குடிவாரக்காரர்களாக இப்பண்ணைகளில் பயிர்செய்ய அரசு, பின்வரும் நிபந்தனைகள் பேரில், குத்தகைக்கு விடும்:

அ) ஒரு கூட்டுப் பண்ணையாக (Collective Farm) அதில் பயிர் செய்யப்படும்;

ஆ) அரசாங்கம் வழங்கும் விதிமுறை ஆணைப்படி பண்ணைகளில் பயிர் செய்யப்படும்;

இ) ஒரு பண்ணைக்கு விதிக்கப்படும் வரிகளைக் கட்டியது போக எஞ்சும் விளைபொருள்களை அரசாங்க ஆணைப்படி குடிவாரிகள் பகிர்ந்து கொள்வர்;

ii) கிராம மக்களுக்குக் குடிவார முறையில் நிலம் பங்கிடப்படும் முறையில் சாதி-மத வேற்றுமையோ, நிலப்பிரபு, குடிவாரி, நிலமற்ற தொழிலாளி என்ற பாகுபாடோ இருக்கமாட்டா.

iii) கூட்டுப்பண்ணை விவசாயத்திற்குரிய பாசனவசதி, உழவு மாடுகள், கருவிகள், எரு, விதை ஆகியவற்றுக்கு வேண்டிய நிதி வசதியை அளிப்பது அரசின் பொறுப்பு.

iv) அரசு பெறும் உரிமைகளாவன:

அ) பண்ணை விளைபொருள்கள் மீது விதிக்கப்படும் வரி விவரங்களாவன:

1) நில வரியாக ஒரு பங்கு;

2) கடன் பத்திரம் பெற்றுள்ளோருக்கு வழங்க வேண்டிய ஒரு பங்கு;

3) பண்ணையில் பயன்படுத்தப்படும் எந்திரங்களுக்கு ஈடாக ஒரு பங்கு; மற்றும்

ஆ) அரசு விதிக்கும் நிபந்தனைகளை மீறும் குடிவாரிகளுக்கு விதிக்கப்படும் அபராதம். அரசு வழங்கும் ஆதாரங்களை நல்லவிதமாகப் பயன்படுத்தாமல் வேண்டுமென்றே புறக்கணிக்கும் போதும், கூட்டுப் பண்ணை விவசாயத் திட்டத்திற்கு எதிராகச் செயல்படும் போதும் குடிவார நிபந்தனைகள் மீறப் பட்டாலும் இவ்வாறு அபராதம் விதிக்கப்படும்.

10) இந்தக் கூட்டுப்பண்ணை விவசாயத் திட்டம் எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவாகச் செயல்படத் தொடங்க வேண்டும். இந்த அரசியலமைப்பு நடைமுறைக்கு வரும் நாளிலிருந்து அதிகப்பட்சம் பத்தாவது ஆண்டுக்குள் இது நடைமுறைக்கு வரவேண்டும்.

ஷரத்து 2 — பிரிவு 3

சிறுபான்மை மக்களின் பாதுகாப்புக்குரிய ஏற்பாடுகள்

இந்திய ஐக்கிய மாநில அரசியலமைப்பு வழங்க வேண்டியவை:

கூறு 1

1) நிர்வாகக் குழுவை (அரசை) சட்டமன்றப் பதவிக் காலம் முடியுமுன் நீக்கக் கூடாது.

2) சட்டமன்ற உறுப்பினர்களாக இல்லாத நிர்வாகக் குழு உறுப்பினர்களும் சட்டமன்றத்தில் அமரவும், பேசவும், வாக்கு வழங்கவும், கேள்விக்கு பதில் வழங்கவும் உரிமை பெற வேண்டும்.

3) ஒற்றை மாற்றுமுறை வாக்கு (Single Transferable Vote) மூலம் மொத்த அவையினால் பிரதமர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

4) அமைச்சரவைக் குழுவில் (Cabinet) உள்ள பல்வேறு சிறுபான்மைப் பிரதிநிதிகள் அவர்கள் சார்ந்த சிறுபான்மை சமூகத்தின் மூலம் ஒற்றை மாற்றுமுறை வாக்கெடுப்பின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

5) நிர்வாகக் குழுவின் பெரும்பான்மைச் சமூகப் பிரதிநிதிகள் மொத்தச் சபையினராலும் ஒற்றை மாற்றுமுறை வாக்கு மூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

6) அமைச்சரவை உறுப்பினர், கண்டனத் தீர்மானம் (Censure motion) காரணமாகப் பதவியை ராஜினாமா செய்ய வேண்டும். மற்றபடி லஞ்ச ஊழல் அல்லது தேசத்துரோக நடவடிக்கை காரணமாகச் சட்டமன்றம் விசாரித்துத் தண்டித்தால் ஒழிய அவரை நீக்க முடியாது.

கூறு 2

1) சிறுபான்மையினர் விவகாரத்திற்கென்று தனிப்பட்ட அரசு அலுவலர் நியமனமாவார். அவர் சிறுபான்மை விவகாரக் கண்காணிப்பு அலுவலர் என்று அழைக்கப்படுவார்.

2) அவரின் அதிகாரத் தகுநிலை 1935 இந்திய அரசுச் சட்டம் 166-ஆம் பிரிவின்படி நியாயமான தலைமைத் தணிக்கை அலுவலருக்கு (Auditor General) நிகராக விளங்கும். ஒரு உச்சநீதிமன்ற நீதிபதிக்கு என்ன அடிப்படையோ அதே விதத்தில்தான் இவரைப் பதவியிலிருந்து நீக்கலாம்.

3) யூனியன் மற்றும் மாநில அரசுகளோ பொதுமக்களோ சிறுபான்மையினரை எப்படி மதித்து நடக்கின்றனர் என்ற விவரங்களையும், அரசுகள் மற்றும் அலுவலர்கள் வகுப்புவாத வெறுப்பு

காரணமாக சிறுபான்மையினரின் பாதுகாப்புக்கு எதிரான அத்து மீறிய செயல்பாடுகளையும் கண்காணித்து, விவரமான ஆண்டறிக்கையை இக்கண்காணிப்பு அலுவலர் சமர்ப்பிக்க வேண்டியது கடமையாகும்.

4) இக்கண்காணிப்பு அலுவலர் சமர்ப்பிக்கும் ஆண்டறிக்கை யூனியன் மற்றும் மாநில சட்டமன்றங்களில் விவாதத்திற்கும் பரிசீலனைக்கும் வைக்கப்படும். இவ்வறிக்கையை அவையினர் பரிசீலிக்க யூனியன் — மாநில அரசுகள் அவகாசம் அளிக்க வேண்டும்.

கூறு 3

சமூக பகிஷ்காரம் (Social Boycott), சமூக பகிஷ்காரத்தை தூண்டுதல் அல்லது அச்சுறுத்தல் யாவும் பின்வரும் வரையறையின் படி குற்றங்களாக அறிவிக்கப்படுகின்றன.

i) சமூக பகிஷ்காரம்—விளக்கம்: ஒரு மனிதன் அடுத்தவரை சமூக பகிஷ்காரம் செய்ததாக எப்போது கருதப்படுமெனில்—

அ) வீடு அல்லது நிலத்தில் குடியிருக்கவோ, பயன்படுத்தவோ, கிரயம் பேசவோ மறுத்தல்; ஒருவர் மற்றவரோடு கொள்ளும் தொழிலுறவின்படி வேலைக்கு ஆள் அமர்த்திக் கொள்வதிலும் வியாபாரம் செய்து கொள்வதிலும் ஒரு பணியை வழங்குவதிலிருந்தும் மற்றவர்களிடம் பெற்றுக் கொள்வதிலிருந்தும் ஆகிய விஷயங்களில், சாதாரணமாக எல்லோருக்கும் என்ன உரிமைகள் உண்டோ அவற்றை மறுதலிப்பது சமூக பகிஷ்காரமாகும், அத்துடன்,

ஆ) அரசியல் சாசனத்தில் உள்ள குடியுரிமைகள் அல்லது அடிப்படை உரிமைகளுக்கு முரணாக, சமூக மரபுகள் காரணமாக, ஒருவருடன் இத்தகைய சமூக-உத்தியோக-வர்த்தக உறவு கொள்ள மறுப்பது, அல்லது

இ) ஒரு மனிதன் சட்டப்படி தன் உரிமைகளைச் செயலாற்றும் போது எவ்வகையிலும் இன்னொருவரைக் காயப்படுத்துதல், எரிச்சலூட்டுதல் அல்லது தீங்கிழைத்தல் ஆகியவையும் சமூக பகிஷ்காரக் குற்றமே

ii) *சமூக பகிஷ்காரத்திற்குரிய குற்றம்:*

இன்னொருவரின் உடல், மனம், புகழ், தொழில் அல்லது ஜீவனாபோயத்துக்கு ஊறுவிளைவிக்கும் விதத்தில் ஒருவர் சட்ட பூர்வமாகச் செயல்புரிவது, அல்லது செயல்புரியாமை, அல்லது மற்றொருவரை அவ்வாறு நடக்கச் செய்வது சமூக பகிஷ்காரக் குற்றமாகும்.

இருப்பினும் இப்பிரிவின்படி குற்றம் சுமத்தப்பட்ட நபர் இத்தகைய சமூக பகிஷ்காரக் குற்றத்தைத் தூண்டிவிட்டதாகவோ

துணை போனதாகவோ, பலருடன் கூடி சதி செய்ததாகவோ நீதி மன்றம் திருப்தியடையாவிட்டால் அது குற்றமாகக் கருதப்பட மாட்டாது.

iii) *சமூக பகிஷ்காரக் குற்றத்தைத் தூண்டுவதும் வளர்ப்பதும்—*

யாராயிருந்தாலும்—

அ) வெளிப்படையான பகிஷ்காரத் திட்டத்தை அறிவிப்பது, அல்லது பிரசுரித்து வினியோகிப்பது,

ஆ) சமூக பகிஷ்காரத்தைத் தூண்டும் எண்ணத்தோடு அல்லது அத்தகைய நம்பிக்கையில் வதந்திகளை, அறிக்கைகளை, பிரசுரங்களை உருவாக்குதல், வெளியிடுதல், துண்டுப் பிரசுரமாக வினியோகித்தல்.

இ) இதர வழிகளிலும்கூட ஒரு நபரை அல்லது ஒரு சமூகப் பிரிவை சமூக பகிஷ்காரத்திற்கு பலியாகும் முறையில் தூண்டுவது சமூக பகிஷ்காரத்தைத் தூண்டும் குற்றமாகவும் வளர்க்கும் குற்றமாகவும் கருதப்படும்.

விளக்கம்: ஒருவர் அல்லது ஒரு பிரிவினரைப் பெயர் குறிப்பிடாமல், ஆனால் அவர்கள் பாதிக்கப்படும் விதத்தில் நடந்து கொள்வது சமூக பகிஷ்காரக் குற்றமே.

iv) *சமூக பகிஷ்காரம் செய்யப்போவதாக அச்சுறுத்தும் குற்றம்:*

யாராக இருப்பினும், ஒரு நபர் சட்டப்படி வழங்கப்பட்ட உரிமையின் பேரில் எடுத்த நடவடிக்கை/செயலின் விளைவும் அல்லது சட்டப்படி வழங்கப்பட்ட உரிமையின் பேரில் கைவிட்ட நடவடிக்கை/செயல் விளைவும் அல்லது ஒருவனுக்கு விளைவை ஏற்படுத்தும் நோக்கில் சட்டத்திற்கு உட்படாமல் எடுக்கும் நடவடிக்கை/செயல் அல்லது சட்டப்படி கைவிட வேண்டிய நடவடிக்கை/செயல் விளைவால் பாதிக்கப்படுவோர் அச்சுறுத்தலுக்கு ஆளாகின்றனர். ஒருவரை சமூக ஒதுக்கத்திற்கு அச்சுறுத்துவதும் அவ்வாறு அச்சுறுத்துவோரை ஆதரிப்பதும் சமூக பகிஷ்காரத்திற்கு அச்சுறுத்தல் குற்றமிழைப்போராகக் கருதப்படுவர்.

விதி விலக்கு: சமூக பகிஷ்காரம் எப்போது நிகழ்வதில்லை?

i) உள்நோக்கமில்லாமல் உண்மையான தொழில் தகராறில் செயல்புரிதல்.

ii) சாதாரண வியாபாரப் போட்டியில் ஒரு செயலைப் புரிதல்.

2) இக்குற்றங்கள் எல்லாம் வாதியின் பிராது இல்லாமலே காவலர் நடவடிக்கை எடுக்கக் கூடிய (Cognizable) சட்டக் குற்றங்களாகும். யூனியன் மற்றும் மாநில சட்டமன்றம் உகந்தச் சட்ட

மியற்றி மேற்படி குற்றங்களுக்குரிய தண்டனைகளைத் தீர்மானிக்க வேண்டும்.

கூறு 4

எந்த நோக்கத்திற்காகவும் மைய—மாகாண அரசுகள் மானியத் தொகை வழங்க அதிகாரம் உண்டு எனினும் ஒருவரைச் சமூக பகிஷ்காரத்துக்கு உள்ளாக்குவதாகப் பயமுறுத்தும் விதத்தில், இன்னொருவர் சட்டபூர்வமாகச் செயல்புரிவதோ செயல்புரியாமையோ, அல்லது முதல் நபரைச் சட்டபூர்வமாக அல்லாமல் செயல்புரிய நிர்ப்பந்திக்க முற்படுவதோ, சமூக பகிஷ்கார அச்சுறுத்தல் குற்றமாகும். வேறு நோக்கத்துக்காக மானியம் ஒதுக்கப்பட்டது என்ற காரணத்துக்காக இந்த அதிகாரத்தைக் குறைக்கவோ நீக்கவோ கூடாது.

ஷரத்து 2 — பிரிவு 4

ஷெட்யூல்டு வகுப்பினருக்குப் பாதுகாப்புகள்

பாகம் 1 — உத்திரவாதங்கள்

இந்திய ஐக்கிய மாநிலங்களின் அரசியலமைப்பு ஷெட்யூல்டு வகுப்பினருக்குப் பின்வரும் உரிமைகளை வழங்கி உத்திரவாதங்களை அளிக்கிறது:

கூறு 1

சட்டமன்றங்களில் பிரதிநிதித்துவ உரிமை

i) *பிரதிநிதித்துவப் பங்கு:* அ) i) யூனியன் மற்றும் மாநில சட்டமன்றங்களிலும், கூட்டுப் பிரதேசங்கள் இருந்தால் அவற்றின் சட்டமன்றத்திலும், மொத்த மக்கள்தொகையில் ஷெட்யூல்டு சாதியினரின் விகிதத்துக்குச் சமமாக, குறைந்தபட்சம், பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டும். அதேசமயம் வேறு எந்த சிறுபான்மை மக்கள் தொகை விகிதாச்சாரக் கணக்கு அடிப்படைக்கு மேல் பிரதிநிதித்துவம் கோர அனுமதி இல்லை.

ii) சிந்து மற்றும் வடமேற்கு எல்லை மாகாணங்களிலும் ஷெட்யூல்டு சாதியினருக்கு உரித்தான பிரதிநிதித்துவப் பங்கு வழங்கப்படும்.

iii) ஒரு வகுப்பின் அதிகமான பெரும்பான்மையைக் குறைப்பது அவசியமானால் மற்றச் சாதியினருக்கு அந்தப் பெரும்பான்மையிலிருந்து சலுகைப் பங்கு அளிக்க வேண்டுமே தவிர, வேறு எந்தச் சிறுபான்மையினரின் பங்கையும் குறைக்கக் கூடாது.

iv) மொத்தப் பெரும்பான்மையிலிருந்து எடுக்கப்படும் பிரதிநிதித்துவ ஈடுவிகிதம் குறிப்பிட்ட ஒரு வகுப்புக்கு மட்டும் கிடைக்கக் கூடாது. அந்தப் பங்கை எல்லாச் சிறுபான்மை வகுப்புகளுக்கும் சமமாகவோ, அல்லது அவற்றின் —

(1) பொருளாதார நிலை

(2) சமூகத் தகுநிலை மற்றும்

(3) கல்வி வளர்ச்சி — ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு அதிகம் பின்தங்கிய வகுப்புகளுக்கு அதிக விகிதத்தில் பங்கு அளிக்க வேண்டும்.

(ஆ) இவைதவிர வேறு எந்தச் சிறப்பு நலக் குழுக்களுக்கும் பிரதிநிதித்துவம் இல்லை. அப்படி விசேஷ பிரதிநிதித்துவம் தருவது என்றால் அந்தந்த வகுப்பின் பங்கிலிருந்தே அளிக்க வேண்டும்.

(2) தேர்தல் முறை:

(அ) சட்டமன்ற அவைகளுக்கு

(அ) புனா ஒப்பந்த அடிப்படையில் அறிமுகமான தேர்தல் முறை ரத்தாகும்.

(ஆ) அது வதித்த இடத்தில் தனி வாக்காளர் தொகுதிகள் (Separate Electorates) இடம்பெறும்.

(இ) வாக்குரிமை இனி வயது வந்தோர் வாக்குரிமையாக இருக்கும்.

(ஈ) வேட்பாளர் அனைவர்க்குரிய வாக்குகளையும் வாக்காளர் ஒருவருக்கே வாக்காளர் அளிக்க இடந்தரும் தேர்தல் முறை (Cumulative Voting System) இருக்கும்.

(ஆ) உள்ளாட்சி மன்றங்களுக்கு

நகராட்சி மற்றும் உள்ளாட்சி மன்றங்களுக்குரிய தேர்தல் முறையில் யூனியன் மற்றும் மாநில சட்டமன்றத் தேர்தல் நடைமுறைகளில் எந்த அளவுக்கு பிரதிநிதித்துவம் வழங்கப்படுகிறதோ அதே கொள்கை பொருந்தும்.

கூறு 2

(1) யூனியன், மாநில, மற்றும் பிரதேசக் குழுவின் நிர்வாகப் பிரிவில், மொத்த மக்கள்தொகையில் ஷெட்யூல்டு சாதியினரின் விகிதத்துக்குச் சமமாக அவர்களுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டும். ஆனால் எந்தச் சிறுபான்மை வகுப்புக்கும் அதன் மக்கள் தொகை விகிதத்துக்கு அதிகமாகப் பிரதிநிதித்துவம் அளிக்கக் கூடாது.

ii) ஒரு வகுப்பின் அளவு மீறிய பிரதிநிதித்துவத்தைக் குறைப்பது என்றால் பெரும்பான்மை வகுப்பின் பிரதிநிதித்துவத்திலிருந்து குறைக்க வேண்டுமே தவிர சிறுபான்மை வகுப்புகளின் பங்கைக் குறைக்கக் கூடாது.

iii) ஒரு குறிப்பிட்ட வகுப்புக்கு ஒதுக்காமல், எல்லாச் சிறுபான்மை வகுப்புகளுக்கும் சமமாகவோ, அவற்றின்

1) பொருளாதார நிலை

2) சமூகத் தகுதி நிலை (Social status)

3) கல்வி வளர்ச்சி—ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு, அதிகம் பின்தங்கியவர்களுக்கு அதிகப்பங்கு அளிக்க வேண்டும்.

கூறு 3

பணித்துறைகளில் பிரதிநிதித்துவ உரிமைகள்

அ) அரசுப் பணிகளில் (Services) ஷெட்யூல்டு வகுப்பினர் பெற வேண்டிய பிரதிநிதித்துவப் பங்கு பின்வருமாறு:

i) *யூனியன் பணிகளில்:* பிரிட்டிஷ் இந்தியா அல்லது இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் அவர்களின் மக்கள் தொகை விகிதாச்சாரப்படி.

ii) மாநிலம் மற்றும் பிரதேசக் குழுக்களின் பணிகளில் (Group Services): அந்த மாநிலம் அல்லது யூனியனில் அவர்களுடைய மக்கள் தொகை விகிதாசாரப்படி.

iii) நகராட்சி உள்ளாட்சிமன்றப் பணிகளில்: குறிப்பிடும் நகராட்சி உள்ளாட்சிக்குட்பட்ட மக்கள் தொகையில் இவர்கள் விகிதாசாரத்தை அனுசரித்து

எந்தச் சிறுபான்மை வகுப்புக்கும், மக்கள் தொகையில் அதன் விகிதாசாரத்துக்கு அதிகமாகப் பணிகளில் பிரதிநிதித்துவம் கூடாது.

ஆ) குறைந்தபட்சக் கல்வித் தகுதி, வயது, போன்ற காரணங் களைத் தவிர மற்றபடி பணிகளில் அவர்களுடைய பிரதிநிதித்துவ உரிமைகளைக் குறைக்க முடியாது.

இ) பணிகளில் நுழைவதற்கான விதிமுறை, நிபந்தனைகள் சம்பந்தப்பட்ட வரை 1942, 1945 ஆண்டுகளில் இந்திய அரசு வகுத்த தீர்மானங்களின்படி ஷெட்யூல்டு சாதியினர் பெற்றுவரும் சலுகைகளைக் குறைக்கக் கூடாது.

(ஈ) காலியாகும் பதவிகளை இட்டு நிரப்பும் வழிமுறையானது 1942, 1945 ஆண்டுகளில் இந்திய அரசு வகுத்த தீர்மானங் களின்படி இருக்க வேண்டும்.

(உ) அரசுப்பணி ஆணையம் (Public Service Commission) அல்லது காலியாகும் இடங்களை இட்டு நிரப்பும் குழுவில் குறைந்த பட்சம் ஷெட்யூல்டு சாதிப் பிரிவைச் சேர்ந்த ஒரு நபர் பிரதிநிதித் துவம் பெற வேண்டும்.

பாகம் II — சிறப்புப் பொறுப்புகள்

இந்திய ஐக்கிய மாநிலங்கள் ஷெட்யூல்டு வகுப்பினரின் மேம் பாட்டுக்குப் பின்வரும் சிறப்புப் பொறுப்புகளை ஏற்க வேண்டி யுள்ளது:

கூறு 1

1) யூனியன் மற்றும் மாநில அரசாங்கங்கள் ஷெட்யூல்டு வகுப்புகளின் உயர் கல்விக்கான செலவுப் பொறுப்பை மேற் கொண்டு, ஆண்டு வரவு செலவுத் திட்டங்களைச் சமர்ப்பிக்கும் போது போதிய நிதி ஆதாரங்களை ஒதுக்க வேண்டும். மாநிலம் மற்றும் யூனியன் கல்வி வரவு செலவுத் திட்டங்களில் இத்தகைய உள்பிரிவு முதல் செலவினமாக இடம்பெற வேண்டும்.

2) இந்தியாவில் உள்ள ஷெட்யூல்டு வகுப்பு மக்களின் உயர் நிலை மற்றும் கல்லூரிப் படிப்புகளுக்கான செலவுப் பொறுப்பு மாநில அரசுகளின் மீது விழுகிறது. பல்வேறு மாநில அரசுகளும் தங்களின் வரவு செலவுத் திட்டத்தில் இதற்கான ஒதுக்கீடுகளைச்

செய்ய வேண்டும். இந்நோக்கத்திற்கென்று செலவாகும் தொகை யானது மொத்த வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டில் மக்கள் தொகை அடிப்படையில் ஷெட்யூல்டு சாதிப் பிரிவினரின் விகிதத்திற்கு ஏற்ப அமைதல் வேண்டும்.

3) ஷெட்யூல்டு வகுப்பு மக்களின் வெளிநாட்டுக் கல்விக்குரிய செலவுப் பொறுப்பு யூனியன் அரசைச் சார்ந்துள்ளது. யூனியன் அரசு இதற்கென்று ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 10 லட்ச ரூபாய்கள் ஒதுக்க வேண்டும்.

4) மாநில அரசாங்கம் மக்களின் ஆரம்பக் கல்வி வளர்ச்சிக்கு ஒதுக்கும் செலவில் ஷெட்யூல்டு சாதியினருக்கு மக்கள் தொகை விகிதத்தில் கிடைக்கும் பங்கைக் குறைக்காமல் விசேஷ மானியங் களையும் அளிக்க வேண்டும்.

கூறு 2

1) யூனியன் ஆரசாங்கத்தின் அரசியலமைப்பில் பின்வரும் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்:

i) அரசுக்குச் சொந்தமான தரிசு நிலங்களை வசப்படுத்தி, அவற்றில் தனிக் கிராமங்களாக ஷெட்யூல்டு சாதியின ரைக் குடியமர்த்துவதற்காக, ஒரு செட்டில்மெண்டு ஆணைக் குழுவை, புதிய அரசியல் சாசனப்படி அமைக்க வேண்டும்.

ii) ஆண்டுதோறும் யூனியன் அரசு இத்தகைய நிலக் குடி யேற்றத்துக்காக ஐந்து கோடி ரூபாய் அளவில் நிதி ஒதுக்க வேண்டும்.

iii) விற்பனைக்கு வரும் நிலங்களை வாங்கி மேற்படி குடியேற்றத்துக்குப் பயன்படுத்த அந்த ஆணைக் குழு வுக்கு அதிகாரம் உண்டு.

2) மேற்படி ஆணைக் குழு தன் பணிகளைச் செய்ய யூனியன் அரசு தக்கபடி அவ்வப்போது தேவையான சட்டங்களை இயற்ற வேண்டும்.

பாகம் III — நலப் பாதுகாப்புகளுக்குரிய ஒப்புதலும் பாதுகாப்புகளுக்குரிய சட்டத் திருத்தமும்

கூறு 1

இந்திய ஐக்கிய மாநிலங்களின் அரசியலமைப்பு வழங்க வேண்டுவது—

2-வது ஷரத்து 4-வது பிரிவில் உள்ள பாதுகாப்புகள் இந்திய அரசியல் சாசனத்தில், அதன் ஒரு பாகமாக, இடம்பெற வேண் டும்.

கூறு 2

ஷெட்யூல்டு வகுப்பு மக்கள் நலனுக்கான ஷரத்துக்களை அடியில் கண்ட முறையில் அல்லது வேறு எக்காரணம் கொண்டும் மாற்றவோ, திருத்தவோ, நீக்கவோ இயலாது.

ஷெட்யூல்டு வகுப்பினரின் நலன் விழையும் ஷரத்து எதையும் திருத்தவோ வழக்கொழிக்கவோ வேண்டுமெனில் யூனியன் சட்ட மன்றத்தின் சார்ந்த மக்களவையில் கீழ்க்கண்ட முறையில் தீர்மானம் கொண்டுவர வேண்டும்:

i) சட்டத்தைத் திருத்துவதற்கோ நீக்குவதற்கோ முன்வைக்கப் படும் எந்தப் பிரேரணையையும் ஒரு தீர்மான வடிவில் யூனியன் சட்டமன்றத்தின் மக்களவையில் கொண்டு வரலாம்.

ii) அத்தகைய தீர்மானம் கொண்டுவருவது என்றால்,

அ) புதிய அரசியலமைப்பு செயலாகத் தொடங்கிய நாளிலிருந்து 25 ஆண்டுகள் கடந்திருக்க வேண்டும். மேலும்

ஆ) அப்படிப்பட்ட தீர்மானம் கொண்டுவரும் யோசனை இருக்கும் பட்சத்தில் அவைக்கு ஆறுமாத முன் அறிவிப்பு வழங்க வேண்டும்.

iii) அத்தகைய தீர்மானம் நிறைவேறும் பட்சத்தில் சட்ட மன்றம் கலைக்கப்பட்டு புதிய தேர்தலை நடத்த வேண்டும்.

iv) அவ்வாறு புதிய தேர்தலுக்குப் பின் யூனியன் சட்ட மன்றத்தின் அதே பேரவையில் முன் மொழிந்து நிறைவேற்றப்பட்ட பழைய தீர்மானத்தை மீண்டும் கொண்டு வர வேண்டும்.

v) இப்படி மீண்டும் முன் மொழியப்படும் தீர்மானம் மக்களவையில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பலத்துடனும் தனித் தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மொத்த ஷெட்யூல்டு சாதி உறுப்பினர்களிலும் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பலத்துடனும் நிறைவேறினாலொழிய அத்தீர்மானம் செல்லத்தக்கதல்ல என்று கருதப்படும்.

பாகம் IV — இந்திய சமஸ்தானங்களில் ஷெட்யூல்டு சாதியினரின் பாதுகாப்பு

இந்திய ஐக்கிய மாநிலங்களின் அரசியலமைப்பு ஒரு யூனியனுக்குள் கீழ்க்கண்ட நிபந்தனையின் பேரில் இந்திய சமஸ்தானங்களை இணைத்துக் கொள்கிறது:

''இந்திய ஐக்கிய மாநிலங்களின் அரசியலமைப்பு பிரிவு IV ஷரத்து II-ல் ஷெட்யூல்டு வகுப்பு மக்கள் தொடர்பான உள்

பிரிவுகள் யாவும் இந்திய சமஸ்தானங்களுக்கும் விரிவாக்கப்பட வேண்டும். இந்த முன் நிபந்தனைப்படியே இந்திய சமஸ்தானங்கள் யூனியனுக்குள் இணைய முடியும்.''

பாகம் V — பொருள் விளக்கம்

I. 1935-ம் வருஷ இந்திய அரசுச் சட்டப்படி 1936-ல் இந்திய அரசு ஆணையில் 'ஷெட்யூல்டு சாதிகள்' என்பதற்குக் குறிப்பிட்ட விளக்கத்தின்படி அச்சாதியினர் ஒரு சிறுபான்மை வகுப்பாகக் கருதப்பட வேண்டும்.

II. ஷரத்து II பிரிவுகளின் நோக்கத்திற்காக ஒரு மாநிலத்தில் ஒரு சாதி ஷெட்யூல்டு சாதியாகக் கருதப்படுமெனில் அதே சாதி யூனியனுக்குட்பட்ட இதர மாநிலங்களிலும் ஷெட்யூல்டு சாதியாகவே கருதப்படும். ◉

இணைப்பு 1

விளக்கக் குறிப்புகள்

தோற்றுவாய்

அரசியல் சாசனத்தின் குறிக்கோள்கள் பற்றி 1947 ஜனவரி 22, புதனன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு சாசனரீதியான உருவமும் அமைப்பும் வழங்கும் விதத்தில், சாசனத்தின் 'தோற்றுவாய்' உள்ளது.

ஷரத்து I — பிரிவு I

கூறுகள் 1 முதல் 4 வரை

சுமார் 600-க்கும் அதிகமான இந்திய சமஸ்தானங்களை ஒருங்கிணைத்து ஒரே யூனியனுக்குள் அடக்குவது பல கடினமான பிரச்சினைகளைத் தோற்றுவிக்கிறது. இவற்றில் மிகவும் முக்கியமானது யூனியனுக்குள் அவற்றின் நுழைவு அனுமதி. சமஸ்தானங்கள் எல்லாம் தம்மை இறையாண்மை அரசுகளாக, (Sovereign States) கருதிக் கொள்ளும் அதே சமயம் யூனியனில் சேர்த்துக் கொள்ளவும் கோருகின்றன. சமஸ்தானம் ஒவ்வொன்றும் நிலப்பரப்பு, மக்கள்தொகை, வருவாய், வளங்கள் ஆகிய அடிப்படையில் வேறுபட்ட பிரிவுகளில் அடங்குவதாயுள்ளன. யூனியனுக்குள் இணைந்து கொள்ளும் ஒரு சமஸ்தானம் சுயமாகவே தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் நிர்வாகப் பொறுப்பை ஏற்க வேண்டும்; தனது எல்லைகளில் அமைதி காக்க வேண்டும்; தன் மக்களின் பொருளாதார முன்னேற்றம் கருதி போதிய வளங்களைப் பெற்றதாயிருக்க வேண்டும். அப்படி அமைந்திருந்திராவிட்டால் ஒரு யூனியன் அரசின் கீழ் மிகவும் சிறிய பலவீனமான சமஸ்தானங்கள் இணையும்போது மைய அரசுக்கு சுமைகளாகிவிடும். ஒரு அவசரநிலை (Emergency) ஏற்படும் போது இத்தகைய பலவீனமான சமஸ்தானங்களால் அமைதியைப் பராமரிக்க முடியாது. ஆகவே தகுதியற்ற முறையில் எல்லா சமஸ்தானங்களையும் யூனியனில் சேர்ப்பது இந்தியப் பாதுகாப்பின் எதிர்காலத்திற்கு நிகழக்கூடிய ஆபத்தாகிவிடும். ஆகவே அதற்கு முன் யூனியனுக்குள் இணைய விரும்பும் சமஸ்தானங்கள் சுயச்சார்புள்ள முறையில் அமைதி காக்கும் நிர்வாகத் திறமையைப் பெற்றிருக்க வேண்டும். இந்த ஆபத்தைத் தடுத்து நிறுத்த அரசியலமைப்பு ஷரத்துகள் இந்திய சமஸ்தானங்களை இரண்டு விதமாகப் பிரிக்கின்றன: (1) தகுதிபெறும் இந்திய சமஸ்தானங்கள் (2) தகுதியில்லாத இந்திய சமஸ்தானங்கள். இந்திய யூனியனுக்குள் இணைவதற்குத் தகுதியுள்ள சமஸ்தானங்களின் பட்டியல் தயாரிப்பது முதல் வேலை. தகுதியுள்ள ஒரு இந்திய சமஸ்தானத்தை யூனியனுக்குள் இணைத்துக் கொள்ளும் முன் இந்திய ஐக்கிய மாகாணங்களின் அரசியலமைப்பு வகுத்து வைத்துள்ள கொள்கைகளுக்கு இணங்க, யூனியன் சட்ட

மன்றம் இயற்றும் சட்டத்தின்படி தகுந்த அரசைக் கொண்டதாக அது இருக்க வேண்டும். பின்னர் தகுதியுள்ள சமஸ்தானங்களை இணைத்துக் கொள்வதற்கான சட்டத்தை யூனியன் சட்டமன்றம் நிறைவேற்றும். தகுதியில்லாத சமஸ்தானங்களின் பிரதேசம் ஐக்கிய மாநிலங்கள் பிரதேசமாகக் கருதப்பட்டு, தகுந்த பரப்புகள் கொண்ட மாநிலங்களாக மாற்றி அமைக்கப்படும். அது வரை, அவற்றின் சமஸ்தானாதிபதிகளே, யூனியன் அரசின் மேற்பார்வை யில் அவற்றை தொடர்ந்து நிர்வகிப்பர். சமஸ்தானங்களும் மாநிலங் களும் இன்னமும் யூனியன் அமைப்புக்குள் ஒன்றி இணையவில்லை. என்றாலும் இந்தச் சட்டப்படி, பிரிட்டிஷ் இந்திய மாகாணங் களாக (Provinces) இருந்தாலும் சரி, சமஸ்தானங்களாக இருந் தாலும் சரி, அவை ஒருங்கிணைந்த இந்தியாவின் பூமியாகவே இருக்கும். கூறு 4 வழங்குவது எதுவெனில், யூனியனுக்குள் ஒரு மாநிலம் இணைந்த பிறகு அதன் ஒருமைப்பாடு காப்பாற்றப்பட வேண்டும். 4-வது கூறில் உள்ள விதிகளை மீறி அம்மாநிலத்தைப் பிரிவினை செய்யக் கூடாது.

ஷரத்து I — பிரிவு II

கூறுகள் 1, 2

எல்லையில் உள்ளவையும் யூனியனில் இணைய விரும்பு பவையுமான சுதந்திர அரசுகளை இந்திய யூனியனில் இணைத்துக் கொள்ள 1-வது கூறு அனுமதிக்கிறது.

புதிய பிரதேசத்தைக் கைப்பற்றி அதைத் தன்னுடன் இணைத் துக் கொள்ளவோ, தனிப்பிரதேசமாக மதிக்கவோ இந்திய யூனியனை 2-வது கூறு அனுமதிக்கிறது.

ஷரத்து II — பிரிவு I

ஒரு அரசியலமைப்பின் கீழ் மக்களின் அடிப்படை உரிமை களைச் சேர்ப்பதில் உள்ள நியாயத்திற்கு விளக்கம் தேவை யில்லை. புதியதிலும் சரி பழையதிலும் சரி, எல்லா அரசியல் அமைப்புகளிலும் அடிப்படை உரிமைகள் உள்ளன. பல்வேறு நாடுகளின், குறிப்பாக இந்தியாவை ஓரளவு ஒத்திருக்கும் நாடு களின் அரசியல் அமைப்புகளில் உள்ள அடிப்படை உரிமை களைப் பின்பற்றி நமது அடிப்படை உரிமைகள் வகுக்கப்பட்டுள் ளன.

ஷரத்து II — பிரிவு II

கூறு 1

உரிமைகளுடன் பரிகாரங்களும் சேர்ந்திருந்தால்தான் உரிமைகள் உண்மையாக விளங்கும். ஒரு மனிதனின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்ட நிலையில், அம்மனிதனுக்கு அவ்வுரிமையை மீட்டுக் கொள்ளும் சட்டப் பரிகாரம் இல்லாதபோது, அந்த

உரிமைகளினால் எந்தப் பயனும் இல்லை. ஆகவே இதன் விளைவாக, ஒரு அரசியலமைப்பு உரிமைப் பாதுகாப்பு வழங்கும் போது சட்டமன்றங்களும் செயலாட்சிகளும் (நிர்வாகக் குழுக்கள்) உரிமை மீறல்களைச் செய்யாமல் பாதுகாக்கும் அதிகாரம் நீதித்துறைக்கும் நீதிமன்றங்களுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. இதற்கு மேல் இக்கூறு எதுவும் வழங்கவில்லை. இக்கூறு, செயலாட்சிக் கொடுங்கோன்மைக்கு எதிராக நீதித்துறைக்கு ஆய்வு விசாரணை அதிகாரங்களை (Powers of Inquestions) வழங்கி செயலாட்சி அதிகாரத் துஷ்பிரயோகத்திற்கு எதிரான பாதுகாப்பை வழங்குகிறது. இந்த அதிகாரம் நீதிப்பேராணை (Issue of writs) வடிவில் உள்ளது. இந்திய அரசின் இந்த அதிகாரங்களை மாநில உயர்நீதிமன்றங்கள் வைத்துள்ளன. இந்த அதிகாரங்கள் தனி உரிமைச் சான்றிதழ்களாக அமைந்துள்ளன. இருப்பினும் இந்த அதிகாரங்களுக்கு இரண்டு வரையறைகள் உள்ளன. முதலாவதாக இந்த தனி உரிமைச் சான்றிதழ் அதிகாரங்களைக் கொண்ட உயர்நீதி மன்றங்கள் மாநிலத் தலைமையிடங்களில் மட்டுமே அமைந்துள்ளன; எல்லா ஊர்களிலும் இல்லை. இரண்டாவதாக இந்த அதிகாரங்கள் இந்தியச் சட்டமன்றச் சட்டங்களுக்குக் கட்டுப்பட்டவை. மூன்றாவதாக, 1935-ம் வருஷ இந்திய அரசுச் சட்டத்தினால் வழங்கப்பட்ட இந்த அதிகாரங்கள் குறைவானவை; பாதிக்கப்பட்ட மனிதனுக்கு இவை நிறைவான பாதுகாப்பை வழங்கா. எனினும் இக்கூறு இரண்டு குறிக்கோள்களை சாதித்துள்ளது: (1) ஆங்கிலேய சட்டத்தில் சொல்லப்படும் தனிச்சிறப்புள்ள பேராணை (Writs) அதிகாரம் முழுமையாக நீதித்துறைக்கு வழங்கப்பட்டுள்ளது. (2) சட்டமன்றங்கள் எவ்வகையிலும் மேற்படி நீதித்துறை அதிகாரத்தைத் தடுக்க இயலாதபடி ஒரு பாதுகாப்பு.

கூறு 2

இந்தியா போன்ற ஒரு நாட்டில் பெரும்பாலோர் வகுப்புணர்வு கொண்டுள்ளதால் அதிகாரத்தில் உள்ளவர்கள் தாம் ஒரு வகுப்பைச் சார்ந்தவர்கள் என்ற உணர்வுக்கு அப்பால் எல்லோரையும் சமமாகவே நடத்துவார்கள் என்று எதிர்பார்ப்பது சிரமம். இந்தியாவில் உள்ள தீண்டாதார் தப்ப முடியாத தலைவிதியாக ஒருதலைப்பட்சமாக நடத்தப்படுகின்றனர். சென்னை அரசாங்கத்தின் வருவாய்த்துறை வாரியத்தின் விசாரணை (Proceedings) எண் 723, தேதி 5.11.1892-ன்படி ஷெட்யூல்டு சாதி மக்கள் இந்து அதிகாரிகளால் எப்படியெல்லாம் பாரபட்சமாக நடத்தப்பட்டனர் என்பதற்கு உதாரணம் வருமாறு:

''134. சில அடக்குமுறை வடிவங்கள் இந்நேரத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. பணிந்து செல்லாத பறையர்களுக்கு அவர்களின் எஜமானர்கள் தண்டனை வழங்க—

(1) கிராமப்பஞ்சாயத்திலோ, குற்றவியல் நீதிமன்றங்களிலோ பொய் வழக்குகளைக் கொண்டு வருதல்.

(2) அரசாங்கத்தினிடம் மனு செய்து பறைச்சேரியைச் சூழ்ந்துள்ள தரிசு நிலங்களை ஆக்கிரமிப்பு செய்து பறையர்களின் ஆடு மாடுகளை முடக்கி வைத்தல், மற்றும் அவர்கள் கோவிலுக்குச் செல்லும் வழிக்குத் தடை போடுதல்.

(3) பறைச்சேரிக்கு எதிராக அரசுக் கணக்கில் பொய்யாக மிராசுகளின் பெயரை எழுதி வைத்தல்.

(4) அவர்கள் வசித்துவந்த குடிசைகளை இடித்துக் குடியிருப்பு உரிமையை மறுத்தல்.

(5) காலங்காலமாக இருந்து வரும் குடிவார உரிமையை மறுத்தல்.

(6) பறையர்களின் நிலத்தில் புகுந்து அறுவடை செய்தல். மீறி எதிர்ப்போர் மீது திருட்டு மற்றும் கலக வழக்கைப் போடுதல்.

(7) ஏமாற்றிப் பத்திரங்களில் ஒப்பம் வாங்கிப் பின்னர் அவர்களை அதோகதி ஆக்குதல்.

(8) அவர்களின் நிலத்திற்குப் பாயும் நீரை திசை திருப்பி விடுதல்.

(9) சட்டப்படியான முன் அறிவிப்பு இல்லாமல், குத்தகை பாக்கி என்று கூறிச் சொத்தை எழுதி வாங்குதல்.''

''135. மேற்கூறிய சமூகக் கொடுமைகளைத் தீர்த்து வைக்க சிவில் நீதிமன்றங்களும் குற்றவியல்/கிரிமினல் நீதி மன்றங்களும் உள்ளன என்பது உண்மைதான். ஆனால் இந்தியாவில் இப்படிப்பட்ட சேரிவாழ் கிராம ஏழைகள் நீதிமன்றங்கள் அருகே வரத் துணிவதில்லை. முதலில் நீதிமன்றத்துக்குச் செல்ல தைரியம் வேண்டும். தைரியம் இருந்தால் போதாது. வக்கீலுக்குக் கொடுக்கப் பணம் வேண்டும். வழக்கு, பின்னர் மேல் முறையீடுகள் என்று தொடர்ந்து செல்லும் காலம் வரை, வாழ்வதற்கு வசதி வேண்டும். அதற்கு மேலும், கீழ்மட்ட மன்றங்களில் நீதிப்பொறுப்பை ஏற்கும் அரசாங்க அதிகாரிகள் ஊழலுக்கு இரையாகலாம். அல்லது நிலக்காரர்கள் மற்றும் செல்வந்தர் வர்க்கத்தை ஆதரிக்கலாம்.

''136. அதிகாரிகள் மீது மேற்கூறிய நிலஉடைமை செல்வந்தர் வர்க்கம் கொண்டிருக்கும் செல்வாக்கு மிக அதிகம். உள்ளூர் அதிகாரிகள் என்றால் நெருக்கம் பலமாக இருக்கும். ஐரோப்பிய அதிகாரிகள் மீதும் அவர்கள் செல்வாக்கு பெரிதே. எந்த அலுவலகத்தை எடுத்துக் கொண்டாலும் கால் முதல் தலை வரை அவர்களின் பிரதிநிதிகளே உள்ளனர். அவர்களின் நன்மைக்கான எந்த ஒரு திட்டமும் வீணானதில்லை; தொடக்கத்திலிருந்து எல்லாக் கட்டங்களிலும் அவர்களின் செல்வாக்கு செயலாற்றும்.''

பஞ்சாப் நில பராதீனச் சட்டம் (Land Alienation Act) தீண்டாதாருக்கு எதிரான சட்டமன்றப் பாரபட்சத்துக்கு மற்றொரு எடுத்துக்காட்டு.

இது போன்ற பாரபட்சமான நடத்தைக்கு வேறுபல சிறு பான்மை சமூகங்களும் பெரும்பான்மை சமூகத்தினரிடம் ஆளாகியிருக்கலாம். சட்டம், விதிமுறை, ஒழுங்குமுறை உத்தரவுகள் போன்றவற்றின் நன்மைகள் எல்லாக் குடிமக்களுக்கும் சமமாகக் கிட்ட வேண்டும் என்ற ஷரத்து மிக அவசியமாகிறது. 1886லும், பின்னர் 1875 மார்ச் 1 ஆம் தேதியும் கறுப்பர்களுக்கு எதிரான பாரபட்ச நடவடிக்கைகளை எதிர்த்து அமெரிக்க ஐக்கிய நாடுகளின் காங்கிரஸ் நிறைவேற்றிய சட்டத்திலிருந்து நமது 2 ஆவது கூறின் உள்பிரிவுகள் இரவலாகப் பெறப்பட்டவை.

கூறு 3

பாரபட்சம் காட்டுதல் மற்றொரு தீமை. அடிப்படை உரிமைகள் அர்த்தமுள்ளதாயிருக்க வேண்டுமெனில் இத்தீமையிலிருந்து பாதுகாப்பு வேண்டும். இந்தியா போன்ற ஒரு நாட்டில் ஏராளமான அளவில் பாரபட்சம் காட்டப்படுவதால் அடிப்படை உரிமைகள் அர்த்தமற்றவைகளாகத் தோன்றும். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் காங்கிரஸ், இதுபோல் கறுப்பர்களுக்கெதிரான பாரபட்சத்தை ஒழிப்பதற்காக இயற்றிய சட்டத்தைப் பின்பற்றி நமது 3-வது கூறில் பரிகாரம் உள்ளது.

கூறு 4

தனியார் துறையை அடியோடு தடுக்காமல், அதேசமயம் செல்வத்தை நியாயமாக வினியோகிக்கும் விதத்தில் உற்பத்தித் திறனைப் பெருக்கி, மக்களின் பொருளாதார வாழ்வை மேம்படுத்தும் பொறுப்பை அரசுக்கு இந்த 4-வது கூறு வழங்குகிறது. இதில் குறிப்பிட்டுள்ள திட்டம் விவசாயத்தை அரசுடைமை ஆக்கிக் கூட்டுப் பண்ணை முறையைக் கையாள்வும், தொழில்துறையில் ஒருவகை அரசுச் சோஷலிச முறையைப் புகுத்தவும் வழிசெய்கிறது. அத்தகைய சூழ்நிலையில் வேளாண்மைக்கும் தொழில்களுக்கும் தேவையான மூலதனங்களை வழங்கும் பொறுப்பு முழுக்க முழுக்க அரசையே சாரும். இத்துறைகளுக்குப் போதிய மூலதனம் வழங்க இயலாத போது உற்பத்தி உயராது. இவ்வாறே இன்சூரன்ஸ் (ஆயுள்காப்பு) தொழிலையும் நாட்டுடைமையாக்க உத்தேசிக்கப்படுகிறது. அதில் இரண்டு வகைப் பயன்கள் ஏற்படும். தனியாரைவிட தேசியமயமாக்கப்பட்ட இன்சூரன்ஸ் காப்புறுதித் தொழில் தனி மனிதனுக்கு அதிகப் பாதுகாப்பானது. இரண்டாவதாக, அரசைப் பொறுத்த வரையில் நல்ல நிதி ஆதாரமாகவும் விளங்குகிறது. இன்சூரன்ஸ் பணத்துக்கு அரசே ஜாமீன் ஏற்கிறது. அத்துடன் பொருளாதாரத் திட்டங்களுக்கு வேண்டிய பணத்தையும் அரசு பெற ஏதுவாகிறது. இல்லாவிட்டால் திட்டச் செலவுகளுக்காகக் கூடுதல் வட்டி கொடுத்து வெளி மார்க்கெட்டில் நிதி திரட்ட வேண்டிவரும். தொழில் துறை

யில் இந்தியா வேகமாக வளர்ச்சி பெற அரசுச் சோஷலிசம் அவசியமாகும். வேகமான வளர்ச்சியை தனியார் தொழில் துறை யால் வழங்க முடியாது. அப்படியே முடியும் என்றாலும், ஐரோப் பாவில் வளர்ந்த தனியார் முதலாளித்துவம் (Private Capitalism) உருவாக்கிய பொருளாதார ஏற்றத் தாழ்வு இங்கும் கூர்மையாகும். இந்நிலை உருவாகாமல் இந்தியர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். துண்டு நிலங்களை இணைக்கும் திட்டமும் குடிவாரச் சட்டங்களும் பயனளிக்கவில்லை. இவை விவசாயத்தை வளப் படுத்தமாட்டா. துண்டு நில இணைப்போ குத்தகை உரிமைப் பாதுகாப்போ நிலமற்ற ஏழைகளாக வாழும் ஆறு கோடி தீண்டா தாருக்கு உண்டான பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கா. இக்கூறில் முன்மொழிந்த கூட்டுப் பண்ணை விவசாயமே அவர்களுக்கு நன்மை பயக்கும். இதில் நாட்டமுடைய நபர்களிடமிருந்து சொத்து அபகரிப்பு (Expropriation) என்ற பேச்சுக்கே இடமில்லை என்ப தால், இதை ஆட்சேபிக்க முடியாது.

இத்திட்டத்தில் இரு முக்கிய அம்சங்கள் உண்டு. பொருளா தார வாழ்க்கையின் முக்கியத் துறைகளில் அரசுச் சோஷலிசம் முன்மொழியப்பட்டுள்ளது. இரண்டாவது சிறப்பு அம்சம், அரசு சோஷலிசம் சட்டமன்றக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டது அல்ல. அரசியலமைப்புச் சட்டத்தினால் அரசு சோஷலிசம் அமையப் பெறுவதால், அதை சட்டமன்றத்தின் சட்டங்களோ, செயலாட்சி (நிர்வாக)த் துறை ஆணைகளோ மாற்றியமைக்க இயலாது.

அரசியலமைப்புச் சட்ட அறிஞர்கள் உடனேயே ஒரு எதிர்ப் பைக் கிளப்புவார்கள்: இத்திட்டம், வழக்கமான அடிப்படை உரிமைகளின் வரம்பை மீறுவது ஆகாதா? என்னுடைய பதில், ''இல்லை'' என்பதே. அவ்வாறு வரம்பு மீறப்படுவதாகத் தோன்று மானால், அதன் காரணம் அடிப்படை உரிமைகள் பற்றிய ஒரு பொதுக் கருத்து குறுகலாக இருப்பதுதான். அப்படியே குறுகிய பொதுக் கருத்தை வைத்துப் பார்க்கும் போது கூட, அரசிய லமைப்புச் சட்டம் என்றால் அது முழுக்கவும் அடிப்படை உரிமை களைப் பற்றியதுதான் என்று கூட நியாயம் கற்பிக்கலாம். ஒரு சமூகத்தின் பொருளாதாரக் கட்டமைப்பை சட்டத்தின் வாயிலாக வரையறுக்க வேண்டிய நோக்கம் என்ன? மற்றவர்கள் பறிக்காத படி, தனிமனிதனின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதுதான் அந்த நோக்கம்; அடிப்படை உரிமை ஷரத்துகளின் நோக்கமும் அதுவே. தனி மனித உரிமைக்கும் பொருளாதாரக் கட்டமைப்பின் உரு வமைப்புக்கும் உள்ள தொடர்பு எல்லோருக்கும் தெளிவாக

இல்லாமலிருக்கலாம். இருப்பினும் கூட இத்தொடர்பு உண்மை யானது. கீழ்க்கண்ட கருத்துக்களை மனத்தில் இருத்திப் பார்க்கும் போது இது நன்கு தெளிவாகும்.

அரசியல் ஜனநாயகம் என்பது நான்கு தூண்களின்மீது நிற்கிறது. அவை அடியில் கண்ட கருத்துரைகளாக உருவாக்கம் பெற்றுள்ளன :

1) தனி மனிதனே முதன்மையானவை.
2) தனி மனிதன் சில இயல்பான உரிமைகளைப் பெற்றுள்ளான். அரசியலமைப்பு அவ்வுரிமைகளைப் பாதுகாக்கின்றது.
3) ஒரு சலுகை பெறுவதற்காகத் தனிமனித உரிமை எதையும் பறிக்கக் கூடாது.
4) மற்றவர்களை ஆளும் அதிகாரங்களைச் சில தனிமனிதர்களிடம் அரசு ஒப்படைக்கக் கூடாது.

தனியார் முயற்சியையும் லாபநோக்கத்தையும் அடிப்படையாகக் கொண்ட பொருளாதார முறையானது ஜனநாயகத்தின் மேற்சொன்ன இரு தூண்களைத் தகர்க்கிறது. எவ்வளவு பேர் தங்களுடைய பிழைப்புக்காக அரசியலமைப்பு உரிமைகளை விட்டுக் கொடுக்க வேண்டியுள்ளது? எவ்வளவு பேர் தனிப்பட்ட தொழிலதிபர்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்டு வாழ வேண்டியுள்ளது?

வேலையில்லாமல் தவிக்கும் மக்களிடம் அடிப்படை உரிமைகளைப் பற்றிக் கேட்டுப் பாருங்கள். அவை அவர்களுக்கு ஏதும் பயனாயுள்ளனவா? வேலையின்றித் தவிக்கும் ஒரு நபரிடம் ஏதோ ஒரு வேலை, திட்டமான சம்பளம் இல்லை, பணி நேரங்களும் உறுதி இல்லை, தொழிற் சங்கத்திலும் சேரத் தடை. இந்த வேலை வேண்டுமா? அல்லது பேச்சுரிமை, சங்கம் சேரும் உரிமை, மத உரிமை வேண்டுமா? என்று கேட்டால் அவர் முந்தியதையே தேர்ந்தெடுப்பார். வேறு எப்படி இருக்க முடியும்? பட்டினிக்குரிய பயம், வீடிழக்கும் பயம், மிச்சம் மீதியுள்ள சேமிப்பையும் இழக்கும் பயம், குழந்தைகளின் படிப்பை நிறுத்தும் பயம், பிச்சை எடுக்கும் பயம், தன் பூதஉடலைப் பொதுச் செலவில் எரிக்கவோ புதைக்கவோ வேண்டியிருக்கும் என்ற பயம் ஆகிய் பல காரணங்கள் அடிப்படை உரிமைகளை அவனால் விரும்பித் தேர்ந்தெடுக்கக் குறுக்கே நிற்கின்றன. ஆகவே, மக்கள் வேலையுடன் உயிர்வாழ்வதற்கான அடிப்படை உரிமைகளை வேறு வழியில்லாமல் விட்டுக் கொடுக்கத் தயாராயுள்ளனர்.

சரி, வேலையில் உள்ளவர்களின் நிலை என்ன? அரசியலமைப்புச் சட்ட வழக்குரைஞர்களின் கருத்துப்படி, மக்களின் சுதந்திரத்துக்கு அடிப்படை உரிமைகளின் சட்டத்திற்கு மேல்

எதுவும் தேவை இல்லை. அவர்கள் வாதிடுவது எதுவெனில், அரசு — பொருளாதாரம் மற்றும் சமூகம் குறித்த — தனியார் விவகாரங்களில் தலையிடாதபோது எஞ்சுவது தனியார் சுதந்திரமே. தனியார் சுதந்திரத்தை விரிவாக்குவதும் அரசுத் தலையீட்டைக் குறைப்பதும் அவசியம் என்பது அவர்கள் கருத்து. தனியார் விவகாரங்களில் அரசு தலையிடுவது தவிர்க்கப்படும் போது எஞ்சுவது தனிமனித சுதந்திரமே. ஆனால் இந்த விஷயம் இத்துடன் முடிவதில்லை. மேலும் ஒரு வினாவுக்கு விடை தெரிய வேண்டும். இந்தத் தனிமனித சுதந்திரம் யாருக்காக? நிலப் பிரபு தன் குத்தகையை உயர்த்தவா? முதலாளி வேலை நேரங்களைக் கூட்டி கூலியைக் குறைப்பதற்கா? இதற்குத்தான் என்பது தெளிவாகிறது. இதில் வேறு வகையான மாற்றம் இருக்க முடியாது. ஒரு பொருளாதார அமைப்பில் மாபெரும் தொழிலாளர் படை வேலையில் அமர்த்தப்படுகிறது. மலைபோல் சரக்குகளின் உற்பத்தி குவிகிறது. யாராவது விதிமுறையை வகுத்தால்தான் தொழிலாளர்கள் ஓய்ச்சல் ஒழிவின்றி உழைத்துத் தொழில் சக்கரம் சுழன்று கொண்டேயுள்ளது. இதை அரசு செய்ய முடியாவிட்டால் தனியார் செய்கின்றனர். இல்லா விட்டால் வாழ்வின் இயக்கம் சாத்தியம் இல்லை. இதை வேறு வகையில் குறிப்பிடுவதானால், அரசின் கட்டுப்பாடு இல்லாத தனிமனித சுதந்திரத்தின் மறுபெயர் தனி முதலாளிகளின் சர்வாதிகாரம் என்பதே.

இவ்வாறு நிகழ்வதை எப்படித் தடுத்து நிறுத்துவது? வேலையில்லாமல் உள்ளோரும் சரி, வேலையில் உள்ளவர்களும் சரி, உயிர், சுதந்திரம், மகிழ்ச்சி முதலிய அடிப்படை உரிமைகளைப் பறிகொடுக்காமல் அவர்களைக் காப்பாற்றுவது எப்படி? அரசியல் துறையில் அரசுக் கட்டுப்பாடுகளைக் குறைப்பதுவும், பொருளாதாரத் துறையில் சக்தி குறைந்தவர்கள்மீது சக்தியுள்ளவர்கள் ஆதிக்கம் செலுத்துவதைச் சட்டமன்றத்தின் மூலம் தடுப்பதும்தான் இதற்குப் பரிகாரம்; ஜனநாயக நாடுகளில் இவ்வாறு செய்யப் படுகிறது. ஆனால் இது பயனளிக்காது. சட்டமன்றத்தின் அதிகாரத்தை நலிந்தவர்களால் பயன்படுத்த இயலாது. வயதுவந்தோர் வோட்டுரிமை முறையில்கூட சட்டமன்றங்களும் அரசுகளும் வலியார்களின் ஆதிக்கத்தில் இருப்பதால், நலிந்தோரின் சுதந்திரத்தை அவை பாதுகாப்பது சந்தேகமே. நாம் கூறும் திட்டம் இதற்கு மாறானது. அரசு எதேச்சாதிகாரமாகக் கட்டுப்பாடுகள் விதிப்பதைத் தடுப்பதுடன், பொருளாதாரத்தில் வலியாரின் ஆதிக்கத்தைக் குறைப்பதன் மூலம் அவர்கள் நலிந்தோரை அடக்கியாளாமல் தடுப்பதற்கும் இத்திட்டம் முற்படுகிறது. ஆகவே நலிந்தோரின் உரிமைகளை வலியவர்கள் பறிக்காமல் தடுப்பதற்கான இரு வழிகளில் நம்முடைய வழியே அதிகப் பயனுள்ளது என்பது தெளிவு. ஆகவே அரசியல் சாசனத்தின் வழக்கமான நோக்கத்துக்கு இது முரணானது என்று அரசியல் சட்ட வழக்கறிஞர்கள்கூட ஆட்சேபிக்க முடியாது.

இதுவரை இந்தத் திட்டத்தை நாம் தனி நபர் உரிமைப் பாது காப்புக்குரிய கருவி என்ற கண்ணோட்டத்தில் உற்று நோக்கி னோம். இத்திட்டத்தில் பொருந்திய மற்றொரு அம்சத்தையும் நாம் கவனிக்க வேண்டியுள்ளது. ஒரு நாடாளுமன்ற ஜனநாயகத்தை ஒழிக்காமல், அதை வலிமைப்படுத்தி, அதேசமயம் அரசுச் சோஷ லிசத்தை உருவாக்கும் திட்டம் இது. அரசுச் சோஷலிசத்தை எதிர்ப்பவர்களும், அதன் நண்பர்களும்கூட, நாட்டின் அரசிய லமைப்புச் சட்டத்தின் ஒரு அம்சமாக அரசு சோஷலிசத்தை உரு வாக்கியது ஏன் என்று வினவக் கூடும். ஏன் இதை சட்டமன்றம் செல்லும் இயல்பான கதியில் விட்டிருக்கக் கூடாது? சட்டத்தின் இயல்பான வழியில் இதை ஏன் உருவாக்கக் கூடாது என்ற கேள்வியைப் புரிந்து கொள்வது கடினம் அல்ல. திட்டமிட்ட ஒரு பொருளாதார அமைப்பு நடுவழியில் ஒத்திப்போடுதலுக்கோ புறக் கணித்தலுக்கோ ஆளாகக் கூடாது; அப்போதுதான் அது வெற்றி பெறமுடியும். இத்திட்டம் நீடித்து நிலைபெற வேண்டும். இது எப்படி நிலைபெற வேண்டும் என்ற கேள்விதான் முக்கியம். இந் நிலைப்பேற்றை நாடாளுமன்ற ஜனநாயக வடிவிலும் சரி, நாடாளு மன்ற ஜனநாயக முறையிலும் சரி பெற இயலாது என்பது தெளிவு. ஒரு நாடாளுமன்ற ஜனநாயக முறையின்கீழ் சட்ட மன்ற, மற்றும் செயலாட்சிக் கொள்கைகள் அந்த நேரத்திற்குரிய பெரும் பான்மையினர் கொள்கைகளே. நாடாளுமன்ற ஜனநாயக முறை யின்கீழ் ஒரு தேர்தலில் வெற்றி பெறும் பெரும்பான்மையினர், வேளாண்மையிலும் தொழிலிலும் அரசுச் சோஷலிசத்தை ஆதரிக்க லாம்; மறு தேர்தலில் வெற்றி பெறும் பெரும்பான்மையினர் ஆதரிக்காமல் போகலாம். அரசு சோஷலிசக் கருத்தை எதிர்ப் பவர்கள் வெற்றி பெறும் போது முன்பு வெற்றி பெற்ற சோஷ லிசச் சார்புள்ளவர்கள் தீட்டிய கொள்கைகளைச் சட்ட ரீதியாக அதிகாரத்தைப் பயன்படுத்திச் செயல்பட வைக்காமல் மாற்றலாம். இது திரும்பத் திரும்ப நிகழுமானால் அரசுச் சோஷலிசத் திட்டம் என்ன ஆவது? நமது பொருளாதாரக் கட்டமைப்பை அரசுச் சோஷலிச மாதிரியில் உருவாக்க விரும்புவோர், இப்படிப்பட்ட மிக அடிப்படையான நோக்கத்தை நிறைவேற்ற எளிய பெரும் பான்மைகளின் சாதாரணச் சட்ட திட்டங்களின்பால் விட்டுவிட முன்வர மாட்டார்கள். தவிரவும் இந்த எளிய பெரும்பான்மை யினரின் தேர்தல் வெற்றி தோல்விகள் ஒரு போதும் காரண காரிய அறிவால் உறுதியாவதும் இல்லை. இக்காரணங்களால் இந்த நோக்கம் கைகூட அரசியல் ஜனநாயகம் பொருந்திவரும் என்று தோன்றவில்லை.

சரி, இதற்கு மாற்றுவழி என்ன? மாற்றுவழி சர்வாதிகாரம் தான். ஒரு அரசு சோஷலிசத்திற்கான ஸ்திரத்தன்மையைச் சர்வாதி காரம் வழங்கும் என்பதில் ஐயம் இல்லை. அது மட்டும் அல்ல. அரசு சோஷலிசம் பலனைப பொழியவும் சர்வாதிகாரம் உகந்தது தான். இருப்பினும்கூட, சர்வாதிகாரத்திற்கு எதிராயுள்ள ஒரு

கருத்தையும் நாம் எதிர்கொள்ள வேண்டும். தனிநபர் சுதந்திரத்தில் நம்பிக்கை வைத்துள்ளவர்கள் சர்வாதிகாரத்தை வன்மையாக எதிர்ப்பார்கள். அத்துடன் ஒரு சுதந்திர சமூகத்திற்கு நாடாளுமன்ற ஜனநாயகமே பொருந்தி வரும், சர்வாதிகாரம் அல்ல என்று வாதமிடுவர். இதன் விளைவாக, தனிநபர் சுதந்திரம் வேண்டுவோர், நாடாளுமன்ற ஜனநாயக அரசாங்கத்தை விட்டுக் கொடுக்க விழையார். அரசு சோஷலிசத்தில் ஆர்வம் உள்ளவர்கள்கூட சர்வாதிகாரத்திற்காக நாடாளுமன்ற ஜனநாயத்தை மாற்றிக் கொள்ள விழையார். ஆகவே சர்வாதிகாரத்தைத் தவிர்த்து, நாடாளுமன்ற ஜனநாயகத்துடன் அரசுச் சோஷலிசத்தையும் பெறுவது எப்படி என்பதுதான் பிரச்சினை. இதன் தீர்வு எதுவெனில், அரசியல் அமைப்புச் சட்ட வழிமுறையின்படி அரசு சோஷலிசத்தை வலியுறுத்தி நாடாளுமன்ற ஜனநாயகத்தையும் வைத்துக் கொள்வதுதான். அவ்வாறு செய்வதன் மூலம் ஒரு நாடாளுமன்றப் பெரும்பான்மைச் சட்டத்தினால் அரசு சோஷலிசத்தை நிறுத்தி வைக்கவோ, திருத்தவோ, அகற்றவோ இயலாது. இவ்வாறு செய்வதன் மூலம் மூன்று குறிக்கோள்கள் நிறைவேறுகின்றன. அதாவது, சோஷலிசத்தை உருவாக்குதல்; நாடாளுமன்ற ஜனநாயகத்தை வைத்திருத்தல்; சர்வாதிகாரத்தைத் தவிர்த்தல்.

பொருளாதாரக் கட்டமைப்பை விட்டுவிட்டு சமுதாயத்தின் அரசியல் அமைப்பு வடிவத்தை மட்டுமே நிர்ணயிக்கும் குறிக்கோள் கொண்ட இப்போதைய அரசியல் சட்டங்களிலிருந்து விலகிச் செல்லும் வழிமுறையை இத் திட்டம் எடுத்துக்காட்டுகிறது.

இதன் விளைவு, அரசியல் கட்டமைப்பிலிருந்து வேறுபட்ட பொருளாதாரக் கட்டமைப்பின் தாக்குதல் அந்த அரசியல் கட்டமைப்பை முற்றிலும் செயலிழக்க வைக்கின்றது. நாடாளுமன்ற ஜனநாயகத்துடன், சர்வாதிகாரம் தவிர்த்த சோஷலிசத்தை விரும்புபவர்கள் இத்திட்டத்தை வரவேற்பார்கள்.

ஒரு மனிதன் — ஒரு மதிப்பு என்பது ஜனநாயகத்தின் ஆன்மா. துரதிருஷ்டவசமாக, ஜனநாயகம் தனது அரசியல் கட்டமைப்பில் மட்டுமே, ஒருவருக்கு ஒரு வோட்டு என்பதுடன் நின்றுவிட்டது. இவ்வாறே பொருளாதாரக் கட்டமைப்பையும் ஒருமைப் பண்புடன் வடிவமைக்க ஜனநாயகத்தின் ஆன்மா தவறி விட்டது. இது ஏன் நிகழ்ந்தது என்றால் அரசியலமைப்பின் வழக்குரைஞர்கள் பழைமைக் கோட்பாட்டில் ஊறித் திளைத்தவர்கள். இப்பழைமைக் கோட்பாட்டின்படி, மக்களுக்குக் கட்டுப்பட்ட அரசு, மக்களை அரசு அடக்கி ஆள்வதைத் தடுப்பது என்பது மாத்திரம் அரசியல் சாசனத்தில் இடம்பெற்றால் அதுவே தூய ஜனநாயகம். இதன் விளைவாக ஜனநாயக ரீதியானவை என்று கூறிக் கொள்ளும் நாடுகளின் அரசியலமைப்புச் சட்டங்கள் எல்லாமே வயது வந்தோர்

இதன் விளைவாக ஜனநாயக ரீதியானவை என்று கூறிக் கொள்ளும் நாடுகளின் அரசியலமைப்புச் சட்டங்கள் எல்லாமே வயது வந்தோர் வாக்குரிமை, அடிப்படை உரிமைகள் என்பதோடு முடிவுறுகின்றன. அதற்கு மேல் செல்வதில்லை. வேறு வகையில் கூறுமிடத்து, பழைமைக்கால அரசியலமைப்புச் சட்ட வழக்குரைஞர்கள் அரசியலமைப்புச் சட்டத்தின் அதிகார ஆளுகை சமூகத்தின் அரசியல் கட்டமைப்பை வகுத்துரைப்பதோடு நின்று விடுவதாகக் கருதினர்.

ஒரு மனிதன் ஒரு மதிப்பு என்ற கொள்கையில் ஜனநாயகம் வீற்றிருக்க வேண்டுமெனில், சமூகத்தின் பொருளாதாரக் கட்டமைப்பையும் சீர்திருத்துவதன் முக்கியத்துவத்தை அவர்கள் உணரத் தவறிவிட்டார்கள். அரசியலமைப்புச் சட்டத்தால் சமூகத்தின் அரசியல் கட்டமைப்பை மட்டும் அல்ல, பொருளியல் கட்டமைப்பையும் சேர்த்து துணிவுடன் வரையறுக்கும் காலம் வந்து விட்டது. இந்தியாவைப் போல் ஒரு புதிய அரசியலமைப்பை உருவாக்கும் நாடுகள் மற்ற நாடுகளின் தவற்றைச் செய்யக் கூடாது. இவ்விஷயத்தில், முன்னோர்களாயிருந்தவர்களின் அனுபவங்களால் லாபம் பெற வேண்டும்.

ஷரத்து II — பிரிவு III

கூறு 1

1919, 1935-ம் வருட இந்திய அரசுச் சட்டங்களின் முன் மாதிரியைப் பின்பற்றி மாகாணங்கள் மற்றும் மையத்தின் செயலாட்சி (நிர்வாக) முறை வகுக்கப்பட்டது. இதை பிரிட்டிஷ் மாதிரி அமைப்பு எனலாம். புறம்பான, அல்லது பிரிட்டிஷ் மாதிரியிலிருந்து வேறுபட்ட அமெரிக்க நிர்வாக அமைப்புக்கு சட்டமன்றத்துக்குக் கட்டுப்பட்ட நிர்வாக அமைப்பு என்று இதை அரசியல் சட்ட நிபுணர்கள் குறிப்பிடுவர். செயலாட்சி முறையை வகுத்தளிக்கும் போது மேற்படி இரு சட்டங்களையும் வைத்துக் கொள்ளலாமா? அல்லது புறக்கணிக்கலாமா? அப்படிப் புறக்கணித்தால், மாற்று வழி என்ன? இந்தப் பிரச்சினையில் ஒரு முடிவான கருத்தைக் கூறுவதற்கு முன்னால், பிரிட்டிஷ் செயலாட்சி முறை மாதிரியைப் பின்பற்றும் போது தோன்றக்கூடிய விளைவைப் பற்றியும் அறிவது அவசியம்.

பிரிட்டிஷ் அல்லது நாடாளுமன்றச் செயலாட்சியின் சிறப்பு அம்சங்கள் பின்வருமாறு:

1) சட்டமன்றத்தில் பெரும்பான்மை பலம் பெற்ற ஒரு கட்சியிடம் அரசாங்க அதிகாரத்தை அது வழங்குகிறது.

2) அப்பெரும்பான்மை பலம் பெற்ற ஒரு கட்சியானது மற்றக் கட்சிகளை அரசில் சேராமல் விலக்குகிறது.

3) அப்படி உருப்பெற்ற ஒரு அரசு, சட்டமன்றத்தில் பெரும் பான்மை பலம் உள்ளவரையில்தான் பதவியில் தொடர முடியும். அப்படிப்பட்ட பெரும்பான்மை பலத்தை இழந்து விட்ட பிறகு, அதே சட்டமன்றத்திலிருந்து உருப்பெறும் அடுத்த அரசுக்கோ, புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சட்டமன்றத்தின் அரசுக்கோ வழிவிட்டுப் பதவி விலக வேண்டும்.

இதன் விளைவாக, இந்த பிரிட்டிஷ் அமைப்பை இந்தியச் சூழ் நிலைக்குப் பொருத்திப் பார்க்கும்போது நிகழக் கூடியது வருமாறு:

(1) பிரிட்டிஷ் அரசாட்சி முறையில் பெரும்பான்மைக் கட்சி யின் அமைச்சரவைக் குழுவே ஆட்சியின் தளம். அந்தப் பெரும்பான்மை அரசியல் பெரும்பான்மை. இந்தியா விலோ அது ஆட்சிப் பெரும்பான்மை வகுப்புவாதப் பெரும் பான்மை. ஆகவே என்ன சமூக, அரசியல் செயல் திட்டம் வகுக்கப்பட்டாலும் கூட வகுப்புவாதப் பெரும்பான்மை கட்சியின் குணாம்சம் நீடிக்கும். இதை மாற்ற முடியாது. இவ்வாறு எடுத்துக்காட்டிய உண்மையை வைத்துப் பார்க்கும் போது, பிரிட்டிஷ் முறையை அப்படியே பின்பற்றுவது செயலாட்சி அதிகாரத்தை வகுப்புவாதப் பெரும்பான்மை (Communal majority)யிடம் எப்போதுமே வைத்திருப்ப தில் முடியும்.

(2) பிரிட்டிஷ் அரசு நிர்வாக முறையில் ஒரு பெரும்பான்மைக் கட்சி, தன் அமைச்சரவையில் சிறுபான்மைப் பிரதிநிதி களைச் சேர்க்க வேண்டியதில்லை. இதை இந்தியாவில் பின்பற்றினால் அதன் விளைவு என்ன? பெரும்பான்மை யினர் ஆளும் வர்க்கமாகவும் சிறுபான்மையினர் ஆளப் படும் இனமாகவும் இருப்பர். இதன் பொருளாவது சிறு பான்மையினருக்கு எது நன்மை என்பதை ஒரு வகுப்பு வாதப் பெரும்பான்மையே முடிவுசெய்து இச்சைப்படி தனது கருத்தையே செயலாக்கி ஆட்சி செய்யும். அத்தகைய ஆட்சி நிர்வாகத்தை ஜனநாயகம் என்று கருத முடியாது. அதை ஏகாதிபத்தியம் (imperialism) என்றே அழைக்க வேண்டும்.

மேற்படி சூழ்நிலையில் பிரிட்டிஷ் மாதிரியான செயலாட்சி அமைப்பை இங்கு அறிமுகப்படுத்தினால், பொதுவாகச் சிறு பான்மை மக்களுக்கும் குறிப்பாக தீண்டாதார்களுக்கும் உரித் தான உயிர், சுதந்திரம், மகிழ்ச்சி ஆகிய உரிமைகளுக்கும் பேரா பத்து ஏற்படும்.

தீண்டாதார் எதிர்நோக்க வேண்டிய பிரச்சினை வெல்ல முடியாததாகத் தோன்றுகிறது. தீண்டாதாரைச் சூழ்ந்துள்ள இந்துப் பெரும்பான்மை மக்கள் கூட்டம், அவர்களிடம் பகைமைப் பாராட்டுவதுடன், தாம் புரியும் கொடுஞ்செயல்களுக்காக வெட்கப்படுவதும் இல்லை. இந்த அநியாயங்கள் அன்றாட நிகழ்ச்சிகளாகி விட்டன. இவற்றின் பரிகாரங்களுக்கு அவர்கள் ஆட்சிக் கதவுகளைத் தட்ட வேண்டியுள்ளது. இந்த ஆட்சி நிர்வாகத்தின் குணம் என்ன? அமைப்பு என்ன? சுருக்கமாகச் சொல்வதானால், இந்த ஆட்சி நிர்வாகம் முற்றிலுமாக இந்துக்களின் கரங்களில் உள்ளது. இது அவர்களின் ஏகபோகம். மேல் முதல் கீழ்மட்டம் வரை அவர்களே வியாபித்துள்ளனர், கட்டுப்படுத்துகின்றனர். அவர்கள் ஆதிக்கம் இல்லாத துறைகளே இல்லை. காவல்துறையாகட்டும், நீதித்துறையாகட்டும், நிலவருவாய்த்துறையாகட்டும், உண்மையில் எந்த நிர்வாகத் துறையை எடுத்துக் கொண்டாலும் எங்கும் அவர்களே, எதிலும் அவர்களே. அடுத்தப்படியாக நாம் நினைவில் குறிக்க வேண்டிய விஷயம் எதுவெனில், இந்துக்கள் எவ்வாறு ஆட்சி நிர்வாகத்திற்கு வெளியே இருந்து செய்கின்றனரோ, அதே போல் உள்ளிருந்தபடியும் தீண்டாதாரிடம் பகைமையுடனும் சமூக விரோதத்துடனும் நடந்து கொள்கின்றனர். சமூக வேற்றுமையைப் பாராட்டுவதுடன், தீண்டாதாருக்கு நன்மை செய்யும் சட்டத்தின் ஆதாயங்களைக் கிடைக்கப் பெறாமல் ஆக்குவதுடன், கொடுங்கோன்மைக்கும் அநீதி அட்டூழியங்களுக்கும் எதிரான சட்டப் பாதுகாப்பையும் வழங்காமலிருத்தலே அவர்களுடைய நோக்கம். முடிவு எதுவெனில், இந்து மக்கள் தொகைக்கும் இந்துக்களால் நிரப்பப்பட்ட ஆட்சி நிர்வாகத்திற்கும் இடையில் அகப்பட்டுக் கொண்ட தீண்டாதார் மீது முந்தையவர்கள் அநீதி இழைக்கின்றனர்; பிந்தையவர்கள் இரையாகும் மக்களைக் காப்பாற்றுவதற்கு மாறாக அநீதி புரிவோரைக் காப்பாற்றுகிறார்கள்.

இத்தகைய பின்னணியில் தீண்டாதாருக்கு சுயராஜ்யம் வழங்கும் பொருள் என்ன? அவர்களுக்கு விளங்கும் ஒரு பொருள், இன்று சுதந்திர இந்தியாவில் சட்டமன்றமும் செயலாட்சியும் இந்துக்களின் கரங்களில் உள்ளன. இன்று இந்துக்கள் ஆட்சி நிர்வாகம் செய்கின்றனர். இத்தகைய சுயராஜ்யம் தீண்டாதாருக்கு மேலும் துன்பங்களையே விளைவிக்கும் என்று குறிப்பிடத் தேவையில்லை. சட்டமன்றத்துக்கும் அரசுக்கும் கட்டுப்படாத அதிகார வாக்கத்தினர் தீண்டாதார் மீது இஷ்டம்போல் அட்டூழியம் புரிவர் என்பதே இதன் விளைவு. அதாவது இந்துக்களும் இந்து மதமும் தீண்டாதார் மீது சுமத்தியுள்ள விதியின் கொடூரங்களிலிருந்து ஒரு சுயராஜ்யத்தின் கீழும் தப்புவதற்கு வழியில்லை.

சிறுபான்மையினருக்கும் ஷெட்யூல்டு சாதி மக்களுக்கும் நலன் விழையாத பிரிட்டிஷ் செயலாட்சி முறையின் அறிமுகத்திற்கு

எதிரான, சிறப்புக் கருத்துரைகள் இவை. பிரிட்டிஷ் அமைச்சரவை அமைப்பின் இந்திய அறிமுகத்திற்கு எதிராக ஒரு பொதுவான கருத்துரையையும் வழங்கலாம். பிரிட்டிஷ் மக்களுக்குப் பிரிட்டிஷ் அமைச்சரவை முறை நிலையான அரசை வழங்கி வருவது உண்மையே. அதையே நாம் பின்பற்றுவதன் மூலம் இந்தியாவில் ஒரு நிலையான அரசை ஏற்படுத்த இயலுமா? இதற்கான வாய்ப்பு மிகவும் அரிது. சாதி மதப்பூசல்கள் காரணமாக எண்ணிறந்த கட்சிகளும் அணிகளும் இந்திய சட்டமன்றங்களில் இடம்பெறுவதைத் தடுக்க முடியாது. இப்படி நிகழுமானால், இங்கிலாந்தைப் போல் ஒரு நாடாளுமன்ற செயலாட்சி முறை ஏற்படும்போது சட்டமன்றத்தில் எதிர்ப்பு ஓட்டு காரணமாக செயலாட்சி (அரசு) பதவி விலக நேரலாம். அப்போது நிலையான நாடாளுமன்றச் செயலாட்சிக்கு இடமில்லாமல் போகும். சட்டமன்றத்தில் இடம்பெறும் பல்வேறு அணிகள் அற்பக் காரணங்களுக்காக ஒன்று சேர்வதும் விட்டுப் பிரிவதும் சுலபமாகி குறுகிய கால இடைவெளியில் அரசுகளை வீழ்த்திக் கொண்டிருக்கும். இன்று நாம் காணக் கூடிய முக்கிய அரசியல் கட்சிகளின் கூட்டுப் பொறுப்புணர்வு தொடர்ந்து நீடிக்காது. இந்தியாவில் உள்ள பிரிட்டிஷாரின் பிரச்சினை தீரும் வரை ஒட்டிக் கொண்டிருக்கும் கட்சிகளின் கட்டுணர்வுகள் சிதைந்து போகும். தொடர்ந்து ஆட்சிக் கவிழ்ப்புகள் நிகழ்ந்து கொண்டிருந்தால் அது அராஜகம்—ஆட்சி இல்லாத குழப்பமே. இன்றுள்ள அரசியலமைப்புப் பிரிவு 93 இதற்குரிய பரிகாரத்தை வழங்குகிறது. ஆனால், சுதந்திர இந்தியாவில் அரசியலமைப்பின் இந்த 93-வது பிரிவு பொருந்தக் கூடியது அல்ல. ஆகவே 93-ம் பிரிவில் உகந்த மாற்றங்களைச் செய்ய வேண்டியது அவசியமாகும்.

ஆக எல்லாக் கருத்துரைகளையும் ஒருங்கிணைத்துப் பார்க்கும் போது, பிரிட்டிஷ் மாதிரியான செயலாட்சி இந்தியாவுக்கு முற்றிலும் பொருத்தமானது அல்ல என்பதில் ஐயம் இல்லை.

1-வது கூறில் மொழியப்படும் செயலாட்சி முறையின் வடிவமைப்பு பின்வரும் நோக்கங்களைக் கருத்தில் கொண்டுள்ளது:

i) சிறுபான்மையினர்களுக்கு வாய்ப்பு வழங்காமல் பெரும்பான்மையினர் ஒரு ஆட்சியை உருவாக்கத் தடைசெய்வது.

ii) ஆட்சி நிர்வாகத்தில் முழுக்கவும் பெரும்பான்மையினரே பங்கு கொண்டு பெரும்பான்மையினர் சிறுபான்மையினருக்குக் கொடுமைகள் புரிவதிலிருந்து தடுப்பது.

iii) சிறுபான்மையினரின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகாத சிறுபான்மைப் பிரதிநிதிகள் பெரும்பான்மைக் கட்சியால் அரசில் சேர்க்கப்படுவதைத் தடுப்பது.

iv) நன்மை அளிப்பதும் திறமை பொருந்தியதுமான ஒரு நிலையான அரசை ஏற்படுத்துவது.

இக்கூறு அமெரிக்க செயலாட்சி முறையை மாதிரியாகப் பின் பற்றி அதைக் குறிப்பாக சிறுபான்மையினரின் நலனைக் கருத்தில் கொண்டு இந்தியச் சூழ்நிலைக்கும் தேவைக்கும் ஏற்ப ஏற்றுள்ளது. இத்திட்டத்தில் பரிந்துரைத்துள்ள செயலாட்சி முறையை ஒரு பொறுப்புணர்வுள்ள அரசு முறைக்கு எதிரானது என்று கூறி மறுக்க முடியாது. பிரிட்டிஷ் பாணியிலான செயலாட்சியிலேயே பழக்கப்பட்டுப்போன இந்தியர்கள் ஜனநாயகத் தன்மையுள்ள பொறுப்புமிக்க அரசின் வடிவம் அது ஒன்றை விட்டால் வேறு இல்லை என்று கருதுகின்றனர். அமெரிக்க மாதிரியான செய லாட்சி அமைப்பு பிரிட்டிஷ் அமைப்புக்கு நிகராக நல்லதோர் பொறுப்புணர்வுள்ள ஜனநாயக அரசின் மாதிரியாகும். இத் திட்டத்தின்படி ஒரு நபர் அமைச்சராக வேண்டுமானால் சட்ட மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்ற தகுநிலை தேவையில்லை என்ற கருத்தை மறுத்துரைப்பதற்கில்லை. ஒருவர் அமைச்சராக வேண்டுமானால் அதற்கு முன் நிலையாக அவர் சட்டமன்ற உறுப்பினராக சட்டமன்றத் தொகுதியிலிருந்து மக்க ளால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற கொள்கை நூற் றாண்டுகளாக பிரிட்டிஷ் அரசியலமைப்பினால் முழுக்கவும் ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகிறது. அமைச்சராக நியமிக்கப்படும் நாடாளுமன்ற உறுப்பினர் அந்த நியமனத்திற்கு முன்பு தேர்தல் மூலம் தேர்வு பெற்றிருக்க வேண்டும். மிகவும் அண்மைக்காலத் தில்தான் இந்தக் கொள்கை கைவிடப்பட்டது. பொறுப்புள்ள ஒரு அரசாட்சியை வழங்குதல் என்ற கொள்கைக்கு முரணாக இத் திட்டம் இல்லை. அமெரிக்க மாதிரியின் திருந்திய உருவம் இது; ஏனெனில், நமது திட்டப்படி, அமைச்சர்கள் சட்டமன்றத்தில் அமர்ந்து பேசவும் ஓட்டளிக்கவும் உரிமை பெற்றிருப்பர்.

கூறு 2

இத்திட்டத்தில் கருத்து வேற்றுமை இருக்க முடியாது. சிறு பான்மையினருக்கு எதிராகப் பெரும்பான்மையினர் நிகழ்த்தும் கொடுஞ்செயலுக்கும் அடக்குமுறைக்கும் உள்ள நல்லதோர் பரிகா ரம் விசாரணை நடத்துவதும், விளம்பரமும் மற்றும் விவாதமுமே. சிறுபான்மையினர் நலனுக்காக இப்பாதுகாப்பு வழங்கப்படுகிறது. சாப்ரு குழுவால் பரிந்துரைக்கப்பட்ட திட்டத்திலும் இதுபோன்ற யோசனை உள்ளது.

சமூகப் பகிஷ்காரம் என்ற வாளைத் தீண்டாதார்களின் தலை மேல் மேல்சாதி இந்துக்கள் தொங்கவிட்டிருக்கின்றனர். இந்துக் களின் கரங்களில் உள்ள ஆயுதத்தின் பயங்கரத்தைத் தீண்டாதார்கள் அறிவர். ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் மனக்குறைகளைக் கண் டறியும்படி, 1928-இல் பம்பாய் அரசு நியமித்த குழுவின் அறிக்கை சமூகப் பகிஷ்காரத்தின் (Social Boycott) உருவங்கள், விளைவுகள் பற்றி நன்கு விவரிக்கின்றது. அதிலிருந்து பின்வரும்

சாராம்சம் தரப்பட்டுள்ளது. தீண்டாதார் மீது இந்துக்கள் நிகழ்த்தும் கொடுங்கோன்மையைப் பற்றி எல்லோரும் தெளிவாகப் புரிந்து கொள்ளும் முறையில் மிக எளிமையாக இந்தச் சூழ்நிலையை அது வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

அக்குழு கூறுவது:

''எல்லாவகையான பொது வசதி நிலையங்களிலும் (Public utilities) தீண்டாதாரின் உரிமைகளை நிலைநிறுத்தும் வண்ணம் எண்ணற்ற பரிகாரங்களை நாம் வழங்கியிருந்தும் கூட, அவ்வுரிமைகளை அவர்கள் நிலைநாட்டிக் கொள்வதில் உள்ள இடர்களை நினைக்கும் போது விடியலுக்குரிய காலம் நீண்டு செல்கிறது. முதல் இடர், பழைமைவாதிகளுடன் பகிரங்க மோதல் ஏற்படும் என்ற பயம். இதில் நாம் கவனிக்க வேண்டுவது, ஒவ்வொரு கிராமத்திலும் தீண்டாதார் சிறுபான்மையினராக இருக்கின்றனர்; இதற்கு மாறாக பழைமைவாதிகள் பெரும்பான்மையாக இருக்கின்றனர். தீண்டாதார் தம் உரிமைகளை நாடிப்போராடும் போது, பழைமைவாதப் பெரும்பான்மையினர் என்ன விலை கொடுத்தும் தங்கள் நலனையும் கௌரவத்தையும் காப்பாற்றிக் கொள்ளத் தவறுவது இல்லை. பழைமைவாதப் பெரும்பான்மையினர் வன்முறையில் ஈடுபட்டால் போலீசால் கைது செய்யப்படலாம் என்ற பயமே அவர்களை ஓரளவு தடுக்கிறது. அதையும் மீறி அவர்கள் வன்முறையில் ஈடுபடும் சம்பவங்கள் அரிதே.

''இரண்டாவதாகத் தோன்றும் இடர், தீண்டாதப் பிரிவினரின் இன்றுள்ள பொருளாதார நிலையிலிருந்து வெளிப்படுகிறது. இந்த ராஜதானியின் (Presidency) பெரும்பாலான பகுதிகளில் இத் தீண்டாதப் பிரிவினர் பொருளாதார சுதந்திரத்துடன் வாழவில்லை. சிலர் இப்பழமைவாதிகளின் நிலத்தில் நிரந்தரமில்லாத குத்தகையாளர்களாக உழுதுவருகின்றனர். சிலர் நிலமில்லாத விவசாயத் தொழிலாளர்களாக வேலை செய்யும்போது அவர்களுக்குப் படி அளக்கும் எசமானர்களாக இப்பழமைவாதிகள் விளங்குகின்றனர். இன்னும் வேறுசிலர் இந்தப் பழமைவாதி எசமானனுக்குக் குற்றவேல் புரிந்து வயிற்றைக் கழுவுபவராக உள்ளனர். இத்தகைய சூழலில் இப்பழமைவாதிகள் எப்படியெல்லாம் தம்முடைய பொருளாதார அதிகாரத்தை ஆயுதமாக வைத்து திண்டாதப் பிரிவினரை வஞ்சனைச் செய்கின்றனர் என்பன பற்றி நாங்கள் ஏராளமாகக் கேள்வியுற்றோம். உதாரணமாக, தீண்டாதாப் பிரிவினர் எவரேனும் தங்களின் உரிமையை மேற்கூறிய சூழலில் நிலைநாட்டத் தொடங்கும் போது, நிலத்திலிருந்து அவர்கள் வெளியேற்றப்படுகின்றனர். அவர்கள் கூலிகள் என்றால் எசமானர் வேலைக்கு அழைக்க மாட்டார். குற்றவேல் புரியும் கிராமப்பணியாள் என்றால் மரபுரீதியாக அவர் பெற

வேண்டிய பொருள் வருமானத்தையும் நிறுத்தி விடுவார். இந்த சமூக பகிஷ்காரப் பெரும்பாலும் திட்டமிடப்பட்ட சதியாகவே நிகழ்கிறது. தீண்டாதச் சாதியினர் எல்லோரும் செல்லும் பொது வீதியில் நடக்க அனுமதிக்கப்படுவதில்லை. அவர்களுக்குத் தேவை யான அத்தியாவசியப் பொருள்களை வாங்கிக் கொள்ள கிராமத் திலுள்ள கடைக்காரர் அனுமதிப்பதில்லை. சில சாட்சிகளின்படி மிகவும் அற்பமாகத் தோன்றும் ஒரு காரணம் கூட, அந்த மக் களைச் சமூக பகிஷ்காரம் செய்யத் தூண்டப்படலாம். பொதுக் கிணற்றில் தண்ணீர் எடுத்துவிட்டால் சமூக விலக்கத்திற்கு உள்ளா வது அடிக்கடி நிகழ்கிறது. அது தவிர இது மிகவும் கடுமையான சமூக விலக்க தண்டனைக்குரியது. தீண்டாதச் சாதியைச் சேர்ந்த ஒருவர் பூணூல் அணிந்து கொண்டது, சிறிது நிலம் வாங்கியது, நல்ல உடையோ ஆபரணமோ அணிந்து கொண்டது, மாப் பிள்ளையை ஜோராகக் குதிரையில் உட்காரவைத்து முக்கிய வீதிகளில் திருமண ஊர்வலம் நடத்தியது போன்ற சம்பவங்களுக் காக கடுமையான பகிஷ்காரத் தண்டனைக்கு உள்ளானார். இது போன்ற நிகழ்ச்சிகள் எத்தனையோ நடைபெற்றுள்ளன.

இது 1928-இல் உரைக்கப்பட்டது. இருப்பினும் இதைப் பழங் காலம் என்று நினைக்க முடியாது. பஞ்சாபில் கேரி ஜெஸ்ஸீரி லிருந்து தீண்டப்படாத வகுப்பினர் ரோத்தக் மாவட்டத்தின் துணை ஆணையருக்கு பிப்ரவரி, 1947-இல் விண்ணப்பித்துக் கொண்ட மனுவின் நகலை இப்போது வழங்குகிறேன். எனக்கும் ஒரு பிரதியை அனுப்பி வைத்திருந்தார்கள். அது வருமாறு:

அனுப்புனர்:

ஷெட்யூல்டு வகுப்பினர் (சாமார்)
கேரி ஜெஸ்ஸீர் கிராமம்,
ரோத்தக் வட்டம், மாவட்டம்.

பெறுநர்:

துணை ஆணையர்,
ரோத்தக் மாவட்டம்,
ரோத்தக்.

ஐயா,

கேரிஜெஸ்ஸீர் கிராமத்தைச் சேர்ந்த ஷெட்யூல்டு வகுப்பின ராகிய (சாமார்) நாங்கள் கொடுக்கும் பிராது எதுவெனில், இதே கிராமத்தைச் சேர்ந்த சாதி இந்துக்களாகிய ஜாட் பிரிவினர் எங்க ளுக்கு இழைத்துவரும் கொடுமைகளையும் இரக்கமற்ற நடத்தை களையும் ஐயா அவர்கள் கனிந்த உள்ளத்துடன் கவனித்து ஆவன செய்யுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

நான்கு மாதங்களுக்கு முன்பு இந்த கிராமத்தின் ஜாட்டுகள் சாவடியில் ஒன்று கூடி வயல் வேலைக்கு எங்களை அழைத்

தார்கள். கூலியாக ஒரு படி தானியம் தருவதாகக் கூறினார்கள். ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு அதில் ஒரு சேர்தான் தேறும். ஆனால் இதற்கு முன்பு அதே வேலைக்கு இரண்டு வேளை உணவுடன் எட்டணாவும் ஒரு தலைச்சுமை தானியமும் வழங்கப்பட்டன. நாங் களும் அக்கூலியை வழக்கமாகப் பெற்று வந்தோம். இப்போது இவர்கள் பேசிய கூலி எங்கள் வாய்க்கும் வயிறுக்கும் கட்டுப்படி ஆகாது என்பதால் அந்த வேலையைப் புறக்கணித்து விட்டோம். இதனால் வெகுண்டெழுந்த ஜாட்டுகள் எங்களைச் சமூக பகிஷ்காரம் செய்து விட்டார்கள். அவர்களாகவே ஒரு விதி வகுத்து அதன்படி எங்கள் ஆடு மாடுகளைக் காடுகளில் மேய்க்க தண்டம் கட்ட வேண்டும் என்று கூறினார்கள். இதற்கு ''பூச்சி'' என்று பெயர். இது அரசாங்கம் வசூலிக்கும் வரி அல்ல. எங்கள் ஆடு மாடுகளை ஊருக்குப் பொதுவான குளத்தில் நீர் பருகக் கூடாது என்று சட்டம் போட்டார்கள். துப்புரவுப் பணியாளர்களை நாங்கள் வசிக்கும் வீதிகளில் துப்புரவு வேலைகளைச் செய்ய விடாமல் தடை போட்டதால் குப்பைகள் பெருகி தூசியும் அழுக்கும் சுகாதாரத்திற்கும் நல்வாழ்வுக்கும் ஊறு செய்யும் அபாயம் காத் திருக்கிறது. எங்களை அவர்கள் அடித்துத் துன்புறுத்துவதுடன் எங்கள் மனைவியர், சகோதரிகள், பெண்கள் ஆகியோரிடம் தரக் குறைவாக நடந்து கொள்கின்றனர். நாங்கள் மிகவும் மோசமாக, சொல்லொணாத் துயரத்திற்கு ஆளாகி வருகிறோம். பள்ளிக்குச் செல்லும் எங்கள் பிள்ளைகளையும் ஈவு இரக்கம் இல்லாமல் நடு வழியில் மடக்கி அடித்து நொறுக்குகிறார்கள்.

நாங்கள் இது சம்பந்தமாக எல்லா விவரங்களையும் குறிப் பிட்டு அனுப்பியிருந்த விண்ணப்பத்தின்பேரில் இதுநாள் வரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

உங்களுடைய கனிந்த உள்ளத்திற்குத் தெரியப்படுத்தும் மேலும் ஒரு விவரம் எதுவெனில், இந்தப் பிரச்சினை குறித்து ரோத்தக் வட்டாட்சியரையும், காவல் கண்காணிப்பாளரையும் நாங்கள் அணுகினோம். அவர்கள் பெயரளவில் சிரத்தைதயில்லாமல் என் னவோ விசாரித்தார்கள். எங்கள் கருத்துப்படி மேற்படி அலுவலர் களுக்கு ஏழைகளாகவும் அப்பாவிகளாகவும் வாழ்ந்து வரும் எங்களின் துயரங்களைத் துடைப்பதில் கவனமே இல்லை.

ஆகவே எங்கள் மனுவை தயை கூர்ந்து நீங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு பல்வேறு வகைகளில் எங்களை அச்சுறுத்தி வரும் ஜாட்டுகளின் இரக்கமற்ற நடத்தைகளிலிருந்து எங்களை மீட்க ஏற்பாடுகள் செய்யுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள் கிறோம். உங்கள் வாசல் கதவைத் தட்டும் வழியைத் தவிர எங்க ளுக்கு வேறு வழி தோன்றவில்லை. மேன்மை பொருந்திய தாங்கள் உடனே தக்க நடவடிக்கை எடுத்து, மனிதனின் பிறப்புரிமையாகிய

கண்ணியத்தையும் அமைதி வாழ்வையும் வழங்கிடுமாறு வேண்டு கிறோம்.

இப்படிக்கு,
கீழ்ப்படிந்து
நடக்கும் சேவகர்கள்
ஷெட்யூல்டு வகுப்பு மக்கள் (சாமார்)
கேரிஜெஸ்ஸீர் கிராமம்.
ரோத்தக் வட்டம், மாவட்டம்
(கைநாட்டுகள்)

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

நகல் ஒன்று :

மேதகு டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்
வெஸ்ட்கோர்ட், புதுதில்லி,
கவனத்திற்கு அனுப்பப்படுகிறது.

1, பிப்ரவரி 1947-இல் இது பெறப்பட்டது.

இக்கடிதம் 1928-ல் என்ன உண்மையோ அதுதான் இன்றும் (1947இல்) உண்மை என்பதை எடுத்துக்காட்டுகிறது. பம்பாயில் எது உண்மையோ அதுவே மொத்த இந்தியாவுக்கும். தீண்டா தார் மீது சர்வசாதாரணமாக இந்துக்கள் புரியும் சமூக பகிஷ்காரம் பற்றிய சான்றாக அண்மையில் இந்தியா முழுவதும் நடந்த மாகாண சட்டசபைத் தேர்தல் நிகழ்ச்சிகளைச் சொல்லலாம். சமூக பகிஷ்காரம் என்பதை ஒரு கிரிமினல் குற்றமாக ஆக்கினா லொழிய இந்துக்களின் அடிமைகளாக வாழும் தீண்டாதாருக்கு விமோசனம் இல்லை. ஷெட்யூல்டு வகுப்பினரைத் தவிர வேறு சமூகங்களின் மீதும் சமூகவிலக்க ஆயுதம் தற்போது பிரயோகிக் கப்படுகிறது. ஆகவே, எல்லாச் சிறுபான்மையினரின் நலன் களுக்கும் இதிலிருந்து பாதுகாப்பு வேண்டும்.

சமூகவிலக்கத்திற்கு எதிரான பாதுகாப்பு குறித்தச் சட்ட உள் பிரிவுகள், பர்மா சமூகவிலக்க எதிர்ப்புச் சட்டம் 1922 (Anti-Boycott) Act, 1922)-இலிருந்து அப்படியே மாற்றமில்லாமல் எடுத் தாளப்பட்டுள்ளது.

கூறு 4

இந்த உள்பிரிவு இந்திய் அரசுச்சட்டம் 1935, பிரிவு 150-ல் ஏற்கனவேயே உள்ளது.

ஷரத்து II — பிரிவு IV

பாகம் 1 — கூறு 1

இந்தக் கூற்றில் எதுவும் புதுமை இல்லை. சட்டமன்றத்திலுள்ள பிரதிநிதித்துவ உரிமை புனா ஒப்பந்தத்தில் இடம்பெற்றுள்ளது.

இதன் தொடர்பாக மறுபரிசீலனைச் செய்ய வேண்டிய அம்சங்களாவன :

(1) பிரதிநிதித்துவ அளவு, (2) ஈடுவிகிதம், (3) வாக்காளர் தொகுதி அமைப்பு.

(1) பிரதிநிதித்துவ அளவு

ஷெட்யூல்டு சாதிப்பிரிவினருக்காக எந்த அளவில் பிரதிநிதித்துவம் அளிக்கவேண்டும் என்பது புனா ஒப்பந்தம் கூறு 1-இல் வரையறுக்கப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தப்படி பின்வரும் பிரதிநிதித்துவங்களைக் கழித்தது போக எஞ்சுபவை என்று நிர்ணயமாகியுள்ளது. கழிக்க வேண்டியவை: (1) இதர வகுப்புகளின் பங்கு: (2) இதர வகுப்புகளுக்குரிய ஈடுவிகிதத்தைக் கணக்கிட்டு ஒதுக்கியது போக. (3) வேறு சிறப்பு நலன்களைக் காப்பதற்கு ஒதுக்கியது போக. ஷெட்யூல்டு சாதிப்பிரிவினருக்கு இறுதியாக வழங்கப்படும் இப்பிரதிநிதித்துவ அளவு மாபெரும் அநீதியாக அமைந்துள்ளது. ஈட்டுவிகிதக் கணக்கினாலும் சிறப்பு நலன் விழையும் ஒதுக்கீடுகள் காரணமாகவும் இழப்பு ஏற்பட்டுள்ளது. சிறப்பு நல ஒதுக்கீடுகளை ஷெட்யூல்டு சாதிக்கென்று ஒதுக்கப்படும் அளவிலிருந்து கழித்தல் கூடாது. புனா ஒப்பந்தத்திற்கு முன்பு வகுப்புவாதத் தீர்வு (Communal Award) அத்தகைய ஒதுக் கீடுகளை முடிவுசெய்துள்ளது. அதனால் அப்போது இந்த அநீதி சரிசெய்யப்படவில்லை.

(2) ஈடுவிகிதம் (Weightage)

மற்றுமோர் அநீதியினாலும் ஷெட்யூல்டு சாதியினர் பாதிப்புக்கு ஆளாகி வருகின்றனர். அது அவர்கள் பெற வேண்டிய ஈடுவிகிதம் பற்றியது.

ஈடுரிமைப் பங்கீட்டில் இரண்டு கருத்து வேற்றுமைகள் உண்டு. முதலாவதாக, பெரும்பான்மைக்கும் சிறுபான்மைக்கும் இடையே உள்ள சர்ச்சை. இரண்டாவதாக சிறுபான்மை வகுப்புகள் பலவற்றில் ஒவ்வொன்றும் பெறவேண்டிய ஈடுவிகிதம் பற்றியது.

முதல் கருத்து வேற்றுமை ஈடுவிகிதம் குறித்த கொள்கையைப் பற்றியது. பெரும்பான்மையினர் வற்புறுத்துவது, எக்காரணம் கொண்டும் சிறுபான்மையினரின் பங்கு உரிமை மொத்த மக்கள் தொகைக் கணக்கில் சிறுபான்மை மக்கள் விகித்திற்கு மேல் அதிகமாக இருத்தல் கூடாது. இந்த விதியைப பெரும்பான்மையினர் வலியுறுத்திப் பேசுவது ஏனென்று புரியவில்லை. பெரும்பான்மையினர் மொத்த மக்கள்தொகையில் தங்களின் பங்கு விகிதத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் அணுகுதலின் நோக்கம் என்றென்றும் பெரும்பான்மையினரே பெரும்பான்மையினராக விளங்க வேண்டும் என்பதுதானா? அல்லது, சிறுபான்மையினர் தங்களின் பங்குரிமை ஈடுவிகிதம் பற்றிய சிந்தை இல்லாது தொடர்ந்து

சிறுபான்மையினராகவே நீடித்துப் பெரும்பான்மையினரின் விருப் பங்களை நிறைவேற்றிக் கொண்டே வாழவேண்டும் என்ற உத் தேசமா? முதல் கருத்தை எடுத்துக்கொண்டால், பெரும்பான்மை குறித்த அடிப்படை வரையறைக்கே அது முற்றிலும் முரணாயுள் ளது. இதைச் சரியாகப் புரிந்து கொள்வதனால், பெரும்பான்மை யினரின் முடிவின்படி அவர்கள் வழங்குவதைக் கொண்டு சிறு பான்மையினர் சமாதானம் அடைய வேண்டும். பெரும்பான்மையினரின் நோக்கம் இதுவாக இருக்க முடியாது. அறநோக்கில் இதை கவனித்தால் பெரும்பான்மையினரின் கருத்து. இரண்டாவது அம்சத்திற்குப் பொருந்தலாமே தவிர முதலாவது அம்சத்திற்கு அல்ல. அரசியல் பெரும்பான்மை இல்லாதவர்கள் தங்கள் வகுப்புவாதப் பெரும்பான்மை காரணமாக அரசியலிலும் ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்பதும், சிறுபான்மையினர் சிறுபான்மையினராகவே இருக்க வேண்டும் என்பதும் இந்த வாதத்தின் பொருள். ஆனால், தோல்விக்கும் படுதோல்விக்கும் இடையே வித்தியாசம் உண்டு. கிரிக்கெட் ஆட்டம் தெரிந்தவர் களுக்கு ஒரு அணி சில ஓட்டங்களில் தோற்பதற்கும், சில விக்கெட்டுகளில் தோற்பதற்கும், ஒரு ஆட்டத்தையே (Innings) தோற்பதற்கும் நிறைய வித்தியாசம் உள்ளதை அறிவார்கள். சில ஓட்டங்களில் தோற்கும் மனநிலையைவிட ஒரு ஆட்டத்தையே தோற்ற மனநிலை அதிக விரக்தியுடையது. அரசியல் வாழ்வில் சிறுபான்மையினர் மனநிலை கிரிக்கெட்டில் முழு ஆட்டமும் தோற்ற அணியின் விரக்தியைப் போல ஆகிவிடும். என்ன விலை கொடுத்தாலும் இதைத் தடுத்து நிறுத்தியாக வேண்டும். இந்தக் கோணத்தில் இப்பிரச்சினையைக் கவனிக்கும் போது, மக்கள் தொகை விகிதாச்சாரம் — பிரதிநிதித்துவம் என்று பெரும்பான்மை யினர் வலியுறுத்தும் விதி தவறானது. சிறுபான்மையினருக்குத் தேவையானது அதிகப் பிரதிநிதித்துவம் அல்ல. உறுதியான பயன் தரும் பிரதிநிதித்துவமே.

பயன் பிரதிநிதித்துவம் என்றால் என்ன? பெரும்பான்மையின ரால் அமிழ்த்தப்படாத அளவுக்குச் சிறுபான்மையினர் பிரதிநிதித் துவம் பெற்றால்தான் அது பயனளிக்கும். ஒரு சிறுபான்மை வகுப்பு, அல்லது சிறுபான்மை வகுப்புக்களின் கூட்டணி, போதிய மக்கள் தொகையுடன் இருந்தால் அவற்றின் பிரதிநிதித்துவம் பயனுள்ள அளவுக்கு அதிகமாக இருக்கும். ஆனால் ஒரு சிறுபான் மைப் பிரிவு அல்லது சிறுபான்மைக் கூட்டின் மக்கள்தொகை குறைவாக இருந்தால் பயனுள்ள பிரதிநிதித்துவம் உருப்பெறாது. இதுபோன்ற நிகழ்ச்சிகளும் உண்டு. ஆகவே மக்கள் தொகை விகிதாச்சாரத்தை இதுபோன்ற சந்தர்ப்பங்களில் வலியுறுத்தி னால், சிறுபான்மையினரின் பாதுகாப்பு என்பது கேலிக்கூத்தாகி விடும். ஏனென்றால் சிறுபான்மைப் பிரதிநிதித்துவம் வாயி லாகவே சிறுபான்மையினர் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டி யுள்ளது. ஆகவே இப்பிரதிநிதித்துவம் சட்டப்படியான உரிமை

யாகும். இதுபோன்ற நிகழ்ச்சிகளில், அதாவது சிறுபான்மைப் பிரிவினரின் மக்கள் தொகை மிகவும் குறைவாக உள்ள போது குறைத்துக் கொள்வதுதான் உதவக் கூடிய ஈடுவிகித அளவுகோல் (Weightage) பெரும்பான்மைக்குச் சேர வேண்டிய பங்கிலிருந்து கொள்ளுதல் ஆகும். இது நலம் விழையும் பிரதிநிதித்துவக் கொள் கைக்கு மிகவும் அத்தியாவசியமான ஒன்று என்பதால் நேர்மைக் கும் நியாயத்திற்கும் கட்டுப்பட்டுப் பெரும்பான்மையினர் இதில் விட்டுக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் ஈடுவிகிதக் கொள் கையில் சிக்கல் இல்லாமல் சுமூகம் ஏற்படும். இவ்வழியில் செல் லும்போது, கருத்து வேற்றுமைகள் குறையும். ஈடுவிகிதப் பரிமா ணத்தை எப்படி நிர்ணயம் செய்வது? இதை ஒரு கொள்கையாக அல்லாமல் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் இதற்கு விடைகாண முடியும்.

(3) வாக்காளர் தொகுதிகள்

தேர்தல் முறையில் ஷெட்யூல்டு சாதியினருக்கு ஒதுக்க வேண் டிய இடங்களைப் பற்றி புனா ஒப்பந்தத்தின் (2), (3) மற்றும் (4) கூறுகள் வரையறுத்துள்ளன. இருவிதமான தேர்தல்கள் வழங்கப் பட்டுள்ளன: (1) தொடக்கநிலைத் தேர்தல் (2) இறுதித் தேர்தல், தொடக்க நிலைத் தேர்தலில் (Primary Election) ஷெட்யூல்டு வகுப்பினர் தங்கள் வாக்காளர் தொகுதிகள் மூலம் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பது. இது தகுதிக்குரிய தேர்தலே தவிர இறுதித் தேர்தல் வேறு. இறுதித் தேர்தலுக்கு ஷெட்யூல்டு சாதியைச் சேர்ந்தவர் யார் நிற்க வேண்டும் என்ற முடிவைத் தொடக்கநிலை தேர்தல் உறுதி செய்யும். இறுதித் தேர்தல் கூட்டு வாக்காளர் தொகுதியில் நிகழும். இதில் ஷெட்யூல்டு சாதிகளுடன் இந்துக்களும் ஓட்டுப்போட வருவார்கள்.

2. புனா ஒப்பந்தத்தின் 5வது கூறு இத்தகைய தொடக்க நிலைத் தேர்தலின் காலவரம்பை பத்து ஆண்டுகளுக்கு நீடித் திருக்கிறது. இதன் பொருள், 1947-ஆம் ஆண்டுக்குப் பின்னர் எந்தத் தேர்தலும் ஒருங்கிணைந்த வாக்காளர் ஓட்டெடுப்பு முறை யில்தான் நிகழும். ஒதுக்கப்பட்ட தொகுதிகள் தனியாக இருக்கும்.

3. இந்துக்களே ஒப்புக் கொண்டாலும் கூட, இந்த இரு தேர்தல் முறையை நீட்டிக் கொள்ள ஷெட்யூல்டு சாதியினருக்கு விருப்ப மில்லை. அவ்வாறு நீட்டிக் கொள்வதற்கு இரண்டு மறுப்புகள் உண்டு. இதன் மூலம் ஷெட்யூல்டு வகுப்பு மக்களுக்குப் பிடித்த மான ஒருவரைத் தங்கள் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ள முடியவில்லை. இணைப்பு 3-இல் குறிப்பிட்டுள்ளபடி தொடக்கநிலைத் தேர்தலில் முதலாவதாக வந்த வேட்பாளர் இறுதித் தேர்தலில் வெற்றி பெறவில்லை. தொடக்கநிலைத் தேர்த லில் கடைசியாக வந்தவர் இறுதித் தேர்தலில் வெற்றி பெற்றார். இரண்டாவதாக, தொடக்கநிலைத் தேர்தல் என்பது கற்பனையே

தவிர நிஜம் அல்ல. (a fiction and not a fact) கடந்த தேர்தலில் ஷெட்யூல்டு வகுப்பினர்களுக்கு 151 இடங்கள் ஒதுக்கப்பட்டன. அவற்றில் 43 இடங்களில் மட்டுமே தொடக்கநிலை தேர்தல் நிகழ்ந்தது. ஏனென்றால் ஷெட்யூல்டு வகுப்பினரால் ஒரே சமயத்தில் இரண்டு வகையான தேர்தல் செலவுச் சுமைகளை ஏற்க முடியாது. ஆகவே தொடக்கநிலைத் தேர்தலை நிலை நிறுத்திக் கொள்வது உபயோகமற்றது என்பதுடன் மோசமானதும் கூட.

4. புனா ஒப்பந்தப்படி இனி அமலுக்கு வரும் கூட்டுத்தொகுதி மற்றும் ரிசர்வ் இடங்கள் என்ற முறை இன்னமும் மோசமானது. இது ஊகமாகச் சொல்லப்படுவதல்ல. கடந்த தேர்தலில் ஷெட்யூல்டு சாதிமக்கள் கூட்டுத் தொகுதிகளின் வாக்குச் சாவடிகளுக்கு வந்து ஓட்டுக்களைப் போடவில்லை என்பது நிரூபணம். இணைப்பு 3-இல் உள்ள புள்ளி விவரங்களைக் கவனித்தால், இந்து ஓட்டுக்களால் தான் ஷெட்யூல்டு வகுப்பு வேட்பாளர்கள் வென்றுள்ளனர். ஆனால் இலட்சியம் எதுவெனில், அவர்கள் ஷெட்யூல்டு சாதி ஓட்டுக்களால் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். வெற்றி பெற்ற ஷெட்யூல்டு வகுப்பு வேட்பாளர்கள் தொடக்க நிலைத் தேர்தல்களில் தோற்றவர்கள் என்பது இன்னும் மோசமானது. இது எவ்வாறு ஷெட்யூல்டு சாதி மக்கள் ஓட்டுப் போடும் உரிமையை இழந்தனர் என்பதற்கு ஆதாரமாக விளங்கும். இதற்குரிய முக்கியக் காரணம், எல்லா வாக்காளர் தொகுதிகளிலும் ஓட்டளிக்க வந்தவர்களின் எண்ணிக்கையில் உள்ள ஏற்றத் தாழ்வுதான். ஓட்டளிக்க வந்த இந்துக்கள் எவ்வளவு, ஷெட்யூல்டு சாதியினர் எவ்வளவு, என்று எடுத்துக் காட்டும் இணைப்பு 3 வழங்கும் புள்ளி விவரங்களில் இது புலனாகும். சைமன் கமிஷன் குறிப்பிட்டபடி ஒரு தொகுதியில் சிறுபான்மையினரின் எண்ணிக்கை சொற்பமாக இருந்தால் இட ஒதுக்கல் முறை பயனளிப்பதில்லை. ஷெட்யூல்டு சாதியினரின் கதி இதுவே. எண்ணிக்கை வித்தியாசத்தைப் புறக்கணிக்க முடியாது. இது வயது வந்தோர் வாக்குரிமைக்கும் பொருந்தும். இவ்வாறு நிலைமை உள்ளபோது, எல்லோருக்கும் புரிந்து கொள்ளும் வகையில் மிகவும் தெளிவான முறையை உருவாக்கி, ஷெட்யூல்டு சாதிமக்களின் உண்மையான பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காக;

(1) தொடக்கநிலைத் தேர்தல் தேவை இல்லாமல் கூடுதல் சுமையாக விளங்குகிறது; இதை ஒழிக்க வேண்டும்.

(2) அதற்குப் பதில் தனித் தொகுதிகளை அமைப்பது.

5. இந்துக்களுக்கும் ஷெட்யூல்டு வகுப்பினருக்கும் அரசியல் அடிப்படையில் ஒருவருக்கொருவர் கசப்புணர்வை ஏற்படுத்தும் பிரச்சினைகளில் தனித்தொகுதியும் ஒன்று. தனித்தொகுதிகளுக்குரிய கோரிக்கை ஷெட்யூல்டு சாதியினர் எப்போதும் வலியுறுத்துகின்றனர். இந்தக் கோரிக்கையை இந்துக்கள் சளைக்காமல் எதிர்த்த

வாறு உள்ளனர். இப்பிரச்னைக்குத் தீர்வு காண இயலாவிட்டால் இந்துக்களுக்கும் ஷெட்யூல்டு சாதிமக்களுக்கும் இடையே அமைதியும் இணக்கமும் தோன்ற வழி இல்லை என்பதால்—யார் சரி, யார் தவறு, இது குறித்த எதிர்ப்பு அறிவார்த்தமானதா, வெறுப்புணர்வில் எழுந்ததா என்பதையெல்லாம் முடிவு செய்ய வேண்டும்.

6. ஷெட்யூல்டு வகுப்பினருக்காக தனித்தொகுதிகள் இடம் பெறக் கூடாது என்ற கருத்தின் அடிப்படைகள் :

(1) ஷெட்யூல்டு வகுப்பினர் சிறுபான்மையினர் அல்லர்.

(2) ஷெட்யூல்டு வகுப்பினரும் இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் தாம் என்பதால் அவர்களுக்குத் தனித்தொகுதிகள் இருக்கக் கூடாது.

(3) தனித்தொகுதிகள் தீண்டாமையை நிலைப்படுத்தும்.

(4) தனித்தொகுதிகள் தேசவிரோதமானவை.

(5) பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தனித் தொகுதிகள் கோரும் சமூகத்தின் மீது செல்வாக்கைப் பதித்து நாட்டு நலன்களைக் கெடுக்கும்.

7. இந்த வாதங்கள் ஏற்புடையனவா?

(1) ஷெட்யூல்டு வகுப்பினர் சிறுபான்மையினர் அல்லர் என்று கொள்ளும் வாதம், 'சிறுபான்மை' என்ற சொல்லின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளாததன் விளைவுதான். சிறுபான்மைத் தகுதிக்கு மதம் பிரிந்திருக்க வேண்டும் என்பது மட்டும் சரியான சோதனை ஆகாது. இது சரியான அளவுகோல் ஆகாது. ஒரு சமூகப் பிரிவு சிறுபான்மையா இல்லையா என்று சோதனை செய்ய சமூக வேற்றுமையே சரியான அளவை. திரு. காந்தி கூட மதத்தைவிட சமூக வேற்றுமையே சரியான அளவை என்று தேர்ந்தெடுத்தார். இந்த சோதனையைத் தொடர்ந்து, ஹரிஜன் பத்திரிகையில் திரு. காந்தி ''பெரும்பான்மைக் கற்பனை'' என்ற தலைப்பில் 21.10.1939 அன்று வழங்கியுள்ள ஆசிரியர் உரையில் (Editorial), இந்தியாவில் உண்மையான சிறுபான்மையினர் ஷெட்யூல்டு சாதியினரே என்று கருத்துத் தெரிவித்துள்ளார்.

(2) ஷெட்யூல்டு வகுப்பினர் இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் என்பதினால் தனித்தொகுதிகளைக் கோரமுடியாது என்று வைக்கப்படும் வாதமும் மேற் சொன்னது போன்றதே. அரசியலமைப்பின் பாதுகாப்புக்கு மத இணைப்பை ஒரு நிர்ணயக் கூறாகக் கொள்ளும்போது, அம்மத இணைப்பு மிகவும் கடுமையான சமூக வேற்றுமையையும் ஏற்றத் தாழ்வையும் துணையாகக் கொண்டிருக்கிறது. தனித்

தொகுதிகளுக்கு மதரீதியான வேற்றுமை அடிப்படை என்ற கருத்தில் தனித் தகுதிகள் வழங்கப்பட்டுள்ளன. எனினும் இது சரியான அடிப்படை அல்ல. இஸ்லாமியர் களுக்கு அவர்கள் இந்துக்களிடமிருந்து மத ரீதியாக வேறு படுவதால் தனித் தொகுதிகள் வழங்கப்படவில்லை. அவர் களுக்கு தனித் தொகுதிகள் வழங்கப்படுவது ஏனெனில், மிகவும் அடிப்படையான விஷய்ம் எது வெனில் இந்துக் களுக்கும், இஸ்லாமியர்களுக்கும் இடையே நிலவும் சமூக வேற்றுமைதான். இந்தக் கருத்தைச் சற்று வேறுவிதமாகச் சொல்வதானால், தொகுதிகளின் தன்மை மதத்தை வைத்து நிர்ணயிக்கப்படுவதில்லை. ஆனால் சமூகக் காரணங்களை வைத்துத்தான் நிர்ணயமாகிறது. தொகுதி களின் தன்மையை நிர்ணயம் செய்ய சமூக வேற்றுமை காரணமே தவிர மதத்தின் இணைப்போ மதத்தின் வேற்றுமையோ அல்ல என்ற உண்மைக்கு இந்தியாவில் வாழும் கிறிஸ்துவர்களின் சார்பாக இந்திய அரசுச் சட்டம் (1935) எடுத்துரைப்பதை நல்ல உதாரணமாகக் கொள்ளலாம். கிறிஸ்துவ சமூகம் மூன்று பிரிவுகளைக் கொண்டது — ஐரோப்பியர்கள், ஆங்கிலோ—இந்தியர் கள், இந்தியக் கிறிஸ்தவர்கள். இவர்கள் மூவருமே ஒரே மதத்தைச் சார்ந்திருந்தாலும், ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனித் தொகுதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இது எடுத்துக் காட்டுவது எதை எனில், மத இணக்கத்திற்கு மாறாக சமூக வேற்றுமையே நிர்ணய அடிப்படை ஆகும்.

(3) தனித்தொகுதி கோருவது ஜாதி இந்துக்களுக்கும் ஷெட் யூல்டு வகுப்பினருக்கும் இடையே ஒற்றுமை உணர்வைத் தடுக்கும் என்ற வாதமும் குழப்பம் நிறைந்தது. ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் நிகழ்கிறது. சரி, அப் படியே தனித் தொகுதிகளுக்கு மாறாக கூட்டுத்தொகுதி அடிப்படையில் தேர்தல் நிகழ்வதாகக் கொள்வோம். அப் போது மட்டும் ஹிந்துக்களுக்கும் ஷெட்யூல்டு சாதிப் பிரிவினர்களுக்கும் இடையே ஒற்றுமை ஏற்பட்டுவிடுமா? ஐந்தாண்டுக்கு ஒரு தடவை ஒரு நாள் மட்டும் ஒற்றுமை வேஷம் போட்டு விட்டு மிச்சப் பொழுதெல்லாம் தனித்து வாழும் ஒரு வாழ்க்கைதான் ஒற்றுமையின் இலக்கணமா? இவ்வாறே தனித் தொகுதிகள் அடிப்படையில் தேர்தல் நிகழ்வதாகக் கொள்வோம். ஐந்தாண்டுகளில் ஒரு நாள் பிரிந்து வாக்குகளை வழங்குவதனால் எந்த அளவில் ஏற்கனவே பெரிதாயுள்ள சமூக வேற்றுமை மேலும் விரிச லாகும் சாத்தியம் ஏற்படும்? ஐந்தாண்டுக்கு ஒரு முறை ஒன்று கூடி ஓட்டு வழங்குவதால் மட்டும் இந்த ஒற்றுமை யைப் பெற்றுவிட முடியுமா? இன்னமும் சற்றுத் தெளி வாகக் குறிப்பிடுவது எனில், தனித் தொகுதிகளை

அமைப்பதனால் இந்துக்களுடன் கொள்ளும் கலப்புத் திருமணத்திற்கும், சமபந்தி போஜனத்திற்கும் தடையா வந்துவிடும்? ஆகவே தனித் தொகுதி அமைப்பதினால் இரு சமூகத்தாருக்கும் இடையே ஒற்றுமை பாதிக்கப்படும் என்று வாதம் புரிவதில் பொருள் இல்லை

(4) தனித்தொகுதி கேட்பது தேசவிரோத உணர்வுக்கு இடம் வகுக்கிறது என்ற வாதம் அனுபவ பூர்வமானதாயில்லை. சீக்கியர்களை யாரும் தேசவிரோதிகளாக எண்ண மாட்டார்கள். 1909-ஆம் ஆண்டிலிருந்து இஸ்லாமியர்களுக்கு தனித்தொகுதிகள் வழங்கப்படுகின்றன. திரு. ஜின்னா தனித் தொகுதிகள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர். இருப்பினும் 1935 வரையில் இந்திய தேசியத்தின் போதகர்ராக விளங்கியவர் திரு. ஜின்னா. இந்திய கிறிஸ்தவர்களுக்கும் தனித்தொகுதிகள் வழங்கப்பட்டன. அவர்கள் காங்கிரஸ் சார்பாக தேர்ந்தெடுக்கப்படாவிட்டாலும் கூட, அவர்களில் பலர் காங்கிரசுடன் ஏதும் காழ்ப்புணர்வு கொள்ளவில்லை. ஆகவே, தேசியமோ தேசவிரோதமோ எதுவானாலும் அதற்கும் தேர்தல் முறைக்கும் சம்பந்தம் இல்லை என்பது தெளிவு.

(5) இந்த வாதத்தில் வேகம் இல்லை. இது தப்பித்துக் கொள்ளும் மனப்பான்மையே அல்லாமல் வேறெதுவும் இல்லை. அப்படியே இருப்பினும்கூட, சுதந்திர இந்தியாவில் தனித் தொகுதிகள் அமைவதற்கு எதிரான அந்த அடிப்படை மறைந்து விடும்.

8. தனித்தொகுதிகள் அமைவதற்கு எதிராக வாதம் புரிபவர்கள், தர்க்க ரீதியாகவோ அனுபவ ரீதியாகவோ ஆராய்ந்து காரண காரியங்களுடன் விவாதத்தை முன் வைக்காததன் காரணம், அவர்களுடைய அணுகுமுறையின் அடிப்படையே தவறாக உள்ளது தான். முக்கியமாக இரண்டு அம்சங்களில் இத்தவறை எடுத்துக் காட்டலாம்:

(1) முதற்கண், தொகுதிகள் இயங்கும் முறைக்கும் மதரீதியான அல்லது வகுப்பு ரீதியான இணக்கத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்பதை அவர்கள் உணரவில்லை. சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்த உண்மையான பிரதிநிதியை சட்டம்ன்றத்திற்கு அனுப்பும் கேந்திரமே அது. சிறுபான்மைப் பிரிவின் பாதுகாப்புக்கு வித்தான ஒரு கருவியாக அது விளங்குவதைத் தொடர்ந்து ஒரு தொகுதி தனி நிலையில் இருக்க வேண்டுமா கூட்டாக இருக்க வேண்டுமா என்ற முடிவைச் சிறுபான்மையினரே தீர்மானிக்க வேண்டும்.

(2) தனித்தொகுதிகளுக்காகப் பெரும்பான்மையினர் விடும் கோரிக்கைக்கும் சிறுபான்மையினர் விடும் கோரிக்கைக்கும்

உள்ள வித்தியாசத்தை அவர்கள் உணரத் தவறுகின்றனர். தனித்தொகுதிகளைக் கேட்பதற்குப் பெரும்பான்மையின ருக்கு எந்த விதமான உரிமையும் இல்லை. இதன் கார ணம் மிகத் தெளிவு. பெரும்பான்மையினர் தமக்கென்று தனித்தொகுதிகள் கேட்கும் உரிமையின் பொருள், சிறு பான்மையினரின் ஒப்புதல் இல்லாமல் சிறுபான்மையின ரின் நலன்களை மிதித்த வண்ணம் பெரும்பான்மை சமூ கத்தின் அரசை நிறுவும் உரிமையே. ஆளப்படுவோரின் ஒப்புதலைப் பெற்று ஒரு அரசாங்கம் உருப்பெற வேண் டும் என்று நன்கு வகுத்து அமையப்பெற்ற ஒரு ஜனநாயக சித்தாந்தத்திற்கு இந்த உரிமை முரணாக உள்ளது. இதை எதிர்த்துத் தோற்றுவிக்கப்படும் ஒரு கொள்கையில், அதா வது சிறுபான்மைப் பிரிவினர் தங்களின் நலன் வேண்டி அதற்கு உகந்த தொகுதியை உருவாக்கிக் கொள்வதில் மேற்கூறிய தீய விளைவு இல்லை. ஏனென்றால், பெரும் பான்மை மக்களை ஆளும் சிறுபான்மை அரசு பற்றிய சாத்தியமே இங்கு ஏற்படவில்லை.

9. மொத்தப் பிரச்னைகளையும் குறித்த சரியான மனப் போக்கு பின்வரும் அடிப்படை உண்மைகளில் அடங்கும்:

(அ) தொகுதிமுறை ஏற்பாடு என்பது சிறுபான்மை மக்களின் பாதுகாப்புக் கருவியாகும். ஒரு தொகுதிமுறை ஏற்பாடு தனியாக இருக்க வேண்டுமா கூட்டாக இருக்க வேண்டுமா என்பதை சிறுபான்மை மக்களின் விருப்பத்தைப் பொறுத்து முடிவு செய்ய வேண்டும். ஒரு குறிப்பிட்ட தொகுதி மிகவும் விரிந்திருந்து பெரும்பான்மை மக்களின் செல் வாக்கை அதிகப் படுத்தக் கூடியதாக இருக்குமெனில் அதைக் கூட்டுத்தொகுதியாகவும், அதுவே சிறியதாக இருந்து அச்செல்வாக்கு குறைவாயுள்ளபோது சிறு பான்மை மக்கள் அமிழ்ந்துவிடக்கூடிய அச்சத்திலிருந்து மீளும் வழியில் தனித்தொகுதியாகவும் தேர்வு செய்து கொள்ளலாம்.

(ஆ) பெரும்பான்மை மக்கள் ஆட்சி செய்யும் நிலையில் உள்ள போது, தொகுதி முறையை எப்படி நிர்ணயம் செய்யலாம் என்பது பற்றிப் பேசும் அருகதை அவர்களுக்கு இல்லை. சிறுபான்மை மக்கள் கூட்டுத் தொகுதி வேண்டுமென்று விரும்பினால் பெரும்பான்மையினரும் கூட்டுத் தொகு தியை ஏற்க வேண்டும். சிறுபான்மை மக்கள் தனித் தொகுதியை விரும்பினால், அதைப் பெரும்பான்மை யினர் மறுக்கக் கூடாது. இதை வேறு வகையில் சொல்வ தானால், சிறுபான்மையினரின் முடிவைப் பெரும்பான் மையினர் ஏற்று மதித்து நடக்க வேண்டும்.

பாகம் 1 கூறு 2

இந்தக் கோரிக்கை புனா ஒப்பந்தத்தில் இல்லை என்பதுடன் அதுபற்றிய உள்பிரிவுகளையும் புனா ஒப்பந்தம் ஏற்கவில்லையென்று தோன்றலாம். இது சரியல்ல. உண்மையில் ஏன் இது குறித்த உள்பிரிவுகள் வழங்கப்படவில்லை என்றால், அதற்கு ஒரு அவசியம் ஏற்படவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவதாக, புனா ஒப்பந்தம் செய்யப்பட்ட காலகட்டத்தில், செயலாட்சியில் திட்டவட்டமாக வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ அளவு சட்டப்படி உறுதியாக வில்லை. இரண்டாவதாக, செயலாட்சியில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை ஆளுநர் மரபு ரீதியாகக் கவனிக்க வேண்டும் என்று விடப்பட்டது. செயலாட்சிக்குழுவில் ஷெட்யூல்டு சாதியினரின் பிரதிநிதித்துவத்தை நிர்ணயிக்க வேண்டும் என்று இப்போது, அனுபவ பூர்வமாக, கருதப்படுகிறது.

பாகம் 1 கூறு 3

இது புதிய கோரிக்கை அல்ல. புனன ஒப்பந்தத்தின் 8வது கூறு, ஷெட்யூல்டு சாதிப்பிரிவினருக்கு பொதுப்பணிகளில் நியாயமான பிரதிநிதித்துவங்களுக்கு உறுதி வழங்குகின்றது. ஆனால் இதன் அளவை வரையறை செய்யவில்லை. இந்திய அரசு, சட்டப் பூர்வமாக இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டுள்ளதுடன், செயலாட்சித் துறையில் பிரதிநிதித்துவம் தொடர்பான வரையறையையும் செய்துள்ளது. இதில் எஞ்சியுள்ள வேலையெல்லாம் அதற்குச் சட்டப்படியான ஓர் அடிப்படையை வழங்குவதுதான்.

பாகம் 2 கூறு 1

இது புதிய கோரிக்கை அல்ல. புனா ஒப்பந்தத்தின் 9வது கூறு, ஷெட்யூல்டு சாதிகளின் கல்விக்காக போதுமான தொகை ஒதுக்க வேண்டுமென்று உறுதியளிக்கிறது. ஆனால் எவ்வளவு தொகை என்பதை வரையறுத்துக் கூறவில்லை. அக்கோரிக்கைச் செய்ததெல்லாம் அரசு ஏற்கவேண்டிய செலவுப் பொறுப்பின் அளவையே. இதன் தொடர்பாக, இந்திய அரசுச் சட்டம், 1935 பிரிவு 83-ஐ குறிப்பிடலாம். அதில் ஆங்கிலோ-இந்தியர்களுக்கும் ஐரோப்பியர்களுக்கும் உரித்தான கல்விச் சலுகையும், அலிகர் இஸ்லாமியப் பல்கலைக்கழகம், காசி இந்துப்பல்கலைக்கழகம் ஆகியவற்றின் மானியங்களும் மைய அரசு வழங்கியுள்ளதை எடுத்துக்காட்டலாம்.

பாகம் 2 கூறு 2

இது புதிய கோரிக்கையே. சந்தர்ப்பச் சூழ்நிலைகளைக் கொண்டு இதற்கு நியாயம் கற்பிக்கலாம். இன்று இந்துக்கள் ஊரிலும் தீண்டாதார்கள் சேரியிலும் வாழ்கின்றனர். குறிக்கோள்

எதுவெனில், தீண்டாதவர்களை இந்துக்களின் அடிமைத் தளையிலிருந்து மீட்க வேண்டும். இன்றுள்ள அமைப்பு முறை நீடிக்கும்வரை தீண்டாதாரை இந்துக்களின் பிடியிலிருந்து விடுவிக்க முடியாது. தீண்டாமையையும் அகற்ற முடியாது. தீண்டாதார்களும் இந்துக்களும் ஒரே கிராமத்தில் வாழ்ந்தாலும் தீண்டாதார்கள் மீது வலை பின்னப்பட்டுள்ளது. அவர்கள் தீண்டாதவர்களாக அடையாளமாகின்றனர். ஆகவே, தீண்டாதார்கள் தீண்டாமையிலிருந்து விடுபடமுடியவில்லை. ஊர்வேறு, சேரி வேறு என்று பிரிக்கப்பட்ட கிராமப்பின்னல் உடைபட வேண்டுமென்று அவர்கள் கோருகின்றனர். சமூகத்தில் தனியாக ஒதுக்கப்பட்டவர்களுக்குப் புவி இயல் அடிப்படையில் தனிநிலப்பகுதி அளித்து தீண்டாதார் மட்டுமே வாழும் கிராமங்களில் அவர்களைக் குடியமர்த்த வேண்டும்; அப்போது மேலென்றும் கீழென்றும், தொடுவது தீட்டு என்றும் வேற்றுமைகளுக்கு இடமில்லாமல் போகும்.

இவ்வாறு தனிக்குடியேற்றங்கள் கோருவதற்கு இரண்டாவது காரணம், ஒரு கிராமத்தில் தீண்டாதாரின் பொருளாதார நிலை தான். அவர்களுடைய பரிதாப நிலையை எவரும் மறுக்க முடியாது. நிலமற்ற ஏழைகளே மிகுந்துள்ளனர். அவர்கள் எல்லோருமே அன்றாடம் காய்ச்சிகள். இந்துக்களிடம் வேலைக்குச் செல்ல வேண்டும். இந்துக்கள் வழங்கும் கூலியோ மிகவும் குறைவு. தீண்டாமை காரணமாக அதே கிராமத்தில் அவர்கள் வேறு ஒரு தொழிலைச் செய்ய முடியாது. அதற்கு இந்துக்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ஆகவே, தீண்டாதார் ஒரு சேரியில் வாழ்ந்து கொண்டு தங்களின் பிழைப்புக்கு அந்த கிராமத்து இந்துக்களிடம் அடங்கி ஒடுங்கி வாழும் காலம் வரை நல்ல வாழ்க்கைக்கு வழி இல்லை என்பது தெளிவு.

வறுமை, இழிவு ஆகியவற்றுக்கு மேல் இந்தப் பொருளாதார அடிமைத்தனம் மற்றொரு விளைவையும் உருவாக்கியுள்ளது. இந்து மதத்தின் அம்சமாக ஒரு வாழ்க்கைநெறி அமைந்துள்ளது. இந்த வாழ்க்கை நெறியில் ஹிந்துவுக்குப் பல சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. அதனால் தீண்டாதார் கேவலமான பல பணிகளைச் செய்யவேண்டியுள்ளது. இந்துக்கள் தம் மதத்தின் பெயரால் செய்யத் தூண்டும் பல்வேறு கேவலமான, மரியாதைக் குறைவான குற்றேவல்களை எதிர்த்து இந்தியா முழுவதுமே தீண்டாதார் போராட அணி திரண்டுள்ளனர். இதன் காரணமாக ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கிராமத்திலும் இந்துக்களுக்கும் தீண்டாதாருக்கும் போராட்டங்கள் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. இப்போராட்டங்களுக்கு ஓய்ச்சல் ஒழிவே இல்லை. இருப்பினும் கூட, இந்து மதவாதப் பத்திரிகை உலகம் இதற்குப் போதிய விளம்பரம் வழங்குவது இல்லை. ஏனென்றால் உலகத்தின் கண்களுக்கு இந்தியா பெறவேண்டிய சுதந்திரத்திற்கு

பங்கம் ஏற்படுமென்று அப்பத்திரிகைகள் கருதுகின்றன. தீண்டத் தகுந்தவர்களுக்கும் தீண்டாதவர்களுக்கும் இடையே கொடூர மான போராட்டங்கள் நிலவுவது நிதர்சனம். தீண்டாதார் தம் முடைய மானம், மரியாதைகளைக் காப்பாற்றிக் கொள்ள நிகழ்த் தும் போராட்டங்களில், இன்றுள்ள கிராமச் சூழ்நிலையின் கீழ், மிகவும் ஆதரவற்ற நிலையில் உள்ளனர். பொருளாதாரத் திலும் சமூக அந்தஸ்திலும் உயர்ந்து நிற்கும் இந்துக்களும், பொரு ளாதாரத்திலும் மக்கள்தொகை அடிப்படையில் எண்ணிக்கையில் குறைந்து அடித்தளத்தில் அயர்ந்து நிற்கும் தீண்டாதாரும் நிகழ்த் தும் சமனற்ற போராட்டம் இது. இதனால் மேலும் பல காரணங்களை முன்வைத்து தீண்டாதாரை அடக்கியாள்வதில் இந்துக்கள் வெற்றி பெறுகின்றனர். போலீஸ், குற்றவியல் நீதி பதிகள் ஆகியோர் மூலம் பாதுகாப்போ நியாயமோ தீண்டா தாருக்கு கிடைப்பதில்லை. காவலும் குற்றவியலும் தாங்கள் ஆற்ற வேண்டிய கடமையை விட தங்கள் வர்க்கத்தை காப் பாற்றிக் கொள்வதிலேயே ஆர்வம் காட்டுவது இயல்பு. ஆனால் எல்லாவற்றையும் விட இந்துக்களிடம் உள்ள மிக முக்கியமான ஆயுதம், பொருளாதார அதிகாரமே. அதை அவர்கள் தீண்டா தார் மீது ஏவிவிட்டு அடிமைப்படுத்துகின்றனர். நாம் குறிப் பிடும் திட்டம் தப்பியோடும் மனப்பான்மையாக எண்ணப்பட லாம். ஆனால் இத்திட்டம் இல்லாவிட்டால், அடிமைத்தனமே நீடிக்கும்.

பாகம் 3 கூறு 1

வகுப்புவாத அடிப்படையில் பெரும்பான்மையினரும் சிறு பான்மையினரும் ஒரு நாட்டில் வாழும்போது, தங்கள் பிரச்சினை களைத் தீர்த்துக் கொள்ள, அரசியல் அதிகாரத்தை அவர்கள் பகிர்ந்து கொள்ளும் உடன்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளாமல் எந்த நாடும் இயங்குவது இல்லை. தென் ஆப்பிரிக்காவிலும் கனடாவிலும் அத்தகைய உடன்பாடு உண்டு. கனடாவில் ஆங்கி லேயர்களும் பிரஞ்சுக்காரர்களும் அரசியலதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள அப்படிப்பட்ட உடன்பாடுகளில் கையெழுத்திட்டுள்ள னர். அது ஆவணக் குறிப்பாக உள்ளது. இது பற்றி ''கனடா டொமினியன் தோற்றம்'' என்ற நூலில் ஆசிரியர் திரு. பார்ரிட (Mr. Porrit) கூறுவது:

''இனம், மொழி, அரசுச் சலுகை வினியோகம் பற்றிய நீண்ட கால மரபுகள் காரணமாக ஒட்டவாவில் (கனடாவில்) ஒருவரே இரண்டு மூன்று பாராளுமன்றங்களின் சபாநாயகர் பதவியில் நீடித்திருக்கும் பிரிட்டிஷ் மரபு கையாளப்படுவதில்லை. ஒவ்வொரு புதிய நாடாளுமன்றத்துக்கும் புதிய சபாநாயகர் தெரிந்தெடுக்கப்

படுகிறார்'' மற்றும் ஒரு அரசியல் கட்சியே தொடர்ந்து இரண்டு அல்லது மூன்று நாடாளுமன்றங்களிலும் தொடர்ந்து அதிகாரம் வகிக்கும்போது, நீண்டகால மரபுப்படி ஒரு நாடாளுமன்றத்தின் சபாநாயகர் பதவி ஆங்கிலேயர் வசமிருந்தால் அடுத்ததில் பிரஞ்சு-கனடா இனத்தவர் அப்பதவியைப் பெற வேண்டும்.

''சபாநாயகர் பதவியையும் துணை சபாநாயகர் பதவியையும் ஒரே சமயத்தில் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களால் வகிக்க முடியாது. சபாநாயகர் பிரஞ்சு-கனடியராக இருந்தால் துணை சபாநாயகர், ஆங்கிலம்-பேசும் கனடியராக இருக்க வேண்டும். சபை விதியின்படி, ஒரு சபாநாயகருக்கு அம்மொழி தெரியா விட்டாலும், தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு அம்மொழி யில் முழு அறிவையும் நடைமுறை அறிவையும் பெற வேண்டும்.

சபை சார்ந்த எழுத்தர், உதவி எழுத்தர் பதவிகள், ஆயுத மேந்திய காவலர், துணைக் காவலர் பதவிகள் தேர்வு முறையில் இல்லாமல் நியமன முறையில் தரப்படும்போது இரு இனத்தாருக் கும் பகிர்ந்து வழங்கவேண்டுமென்பது மரபு.

நாடாளுமன்றம், செனட் (senate) அல்லது சபை தொடர் பான எல்லா முக்கியமான அல்லது முக்கியமற்ற அலுவலகப் பதவிகளை விதிமுறை அல்லது மரபின்படி பகிர்ந்து நியமிக்க வேண்டும். இரு சபைகளையும் சேர்ந்த கடைநிலை ஊழியர்களின் வருகைப் பதிவேட்டைக் கவனித்தால், பிரஞ்சு-கனடியர்களும் பிரிட்டிஷ் வம்சத்தில் வந்த கனடியர்களும் சம எண்ணிக்கையில் இருப்பதைக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு பதவிகளைப் பகிர்தல் மஹாசமஷ்டி (Confederation) உதயமாகும் முன்பே மரபாகவும் விதியாகவும் செயல் பட்டு வந்துள்ளது. ஒன்றுபட்ட மாகாணங்களைப் பின்னோக்கிப் பார்த்தால், அப்போது க்யூபெக்கிலும் ஒண்டேரியாவிலும் சட்ட மன்றத்திற்கு இதே அளவுள்ள உறுப்பினர்களை (இம்மரபின்படி) தேர்ந்தெடுத்து அனுப்பியுள்ளனர்.

மொத்த மக்கள் சபை உறுப்பினர்கள் 234-ல் இன்று க்யூபெக் 65 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புகிறது. ஆனால் மொத்த கனடா டொமினியனின் மக்கள் தொகையில் க்யூபெக் கின் பங்கு கால் விகிதத்திற்கும் குறைவே. டொமினியன் மொத்த வருவாயில் க்யூபெக்கின் பங்கு ஆறில் ஒரு விகிதத்திற்கும் குறைவு. இருப்பினும் மக்கள் சபையின் அலுவலகங்களில் க்யூபெக் சமமான பங்கைப் பெற்று வருகிறது. தன்னுடைய உரிமைகளையும், சலுகை களையும் காப்பாற்றிக் கொள்வதற்காக க்யூபெக் இந்தச் சமமான பங்கை விட்டுக் கொடுக்கத் தயாராயில்லை. பதவிக்கு வரும் ஒவ்வொரு அரசியல் கட்சியும் பிரஞ்சு-கனடா ஆதரவை எதிர் பார்த்து நிற்கும்போது, அவர்களின் இந்தச் சிறப்பான நாடாளு

மன்ற உரிமைப்பங்கை மறுக்கத் தயங்குகிறது. பிரஞ்சு-கனடா இனத்தவரின் நாடாளுமன்ற மரியாதை மரபுகளை ஆளும் அரசாங்கம் மறுக்க வேண்டுமானால் க்யூபெக் மக்களின் பாதுகாப் பைக் குறிக்கும் பிரிட்டிஷ் வட அமெரிக்கச் சட்டத்தை நீக் வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

மிகவும் துரதிருஷ்டவசமாக இந்தியாவின் சிறுபான்மையினர் விஷயத்திற்கு வரும்போது வளர்ந்துள்ள பெரும்பான்மை மக்கள் தங்கள் இச்சைப்படி சிறுபான்மையினரை அடக்கி புதிய ஒடுக்கும் சித்தாந்தத்தை இந்திய தேசியம் உருவாக்கியிருக்கிறது. சிறுபான் மையினர் ஆளும் உரிமையில் தங்கள் பங்குகளைக் கோரும்போது அதை வகுப்புவாதம் என்று சொல்லித் தட்டிக் கழிக்கின்றனர். எல்லா அதிகாரங்களையும் பெரும்பான்மை மக்கள் தமக்குரிய ஏகபோகமாகக் கொள்வதைத் தேசாபிமானம் என்று பெருமை கொள்கின்றனர். இத்தகைய பெரும்பான்மை அரசியல் சித்தாந் தத்தினால் சிறுபான்மை மக்களின் அரசியல் பங்குரிமை புறக் கணிக்கப்படுகிறது. ஆளுநர்களின் நெறிமுறைக் கட்டளைகள் கொண்ட 1935-ம் வருஷ இந்திய அரசுச்சட்டத்தைப் பின்பற்றி அமைச்சரவைக் குழுவில் இடம் உட்பட சிறுபான்மையினர் பெற வேண்டிய அரசியல் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளும் மரபு களும் விதிமுறைகளும் உருப்பெறுவது பெரும் பான்மையின் கடமை என்றாலும் கூட, அவ்வாறு நிகழாததால் ஷெட்யூல்டு சாதி மக்களின் உரிமைகளைக் காப்பாற்றிக் கொள்ள அரசியலமைப்புச் சட்டத்திற்குள் அவற்றைப் பதித்துக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

பாகம் 3 கூறு 2

இது புதிய கோரிக்கை அல்ல. இது புனா ஒப்பந்தத்தின் 6-வது கூறின் மறுவடிவம். இறுதியாக இரு வகுப்பினரும் ஒன்று கூடி வேறு முடிவு செய்யும் காலம் வரை, ஷெட்யூல்டு சாதி யினருக்குத் தனியாக ஒதுக்கப்பட்ட இடங்களைக் கொண்ட பிரதி நிதித்துவமுறை நீடிக்கும் என்று இவ்வொப்பந்தம் காணுகிறது. ஷெட்யூல்டு சாதி மக்களின் பாதுகாப்புக்குரிய ஒப்பந்தத்தை அவர்களின் ஒப்புதல் இல்லாமல் எப்படித் திருத்தலாம், எப்படி மாற்றியமைக்கலாம் என்பது பற்றிய பாதுகாப்பான முறை இல்லாததால், இந்த 2-வது கூறு இங்கு இடம் பெறுகிறது. இதே போன்ற குறிக்கோள்களுடைய ஏற்பாடுகள் ஆஸ்திரேலியா, அமெரிக்கா, தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளின் அரசியலமைப் பில் இடம்பெற்றுள்ளன.

இது போன்ற விஷயங்களில் முடிவு செய்யும் போது, இரண்டு கருத்துக்களை நினைவில் கொள்ளவேண்டும். இரு தரப்பாரும் ஒன்று கூடி எதிர்காலத்தில் இப்பாதுகாப்பு உரிமைகளை மாற்றும் சாத்தியத்தைப் புறக்கணிப்பது சரியல்ல என்பது ஒன்று, இரண்

டாவதாக, அவற்றின் மாற்றம் குறித்து இடைவிடாமல் போராடுவதும் விரும்பத்தக்கதல்ல. அரசியலமைப்பின் முகப்புரையில் வரையறுக்கப்பட்டுள்ள பொறுப்புகளை புதிய மைய மற்றும் மாநில சட்டமன்றங்கள் வெற்றிகரமாக நிறைவேற்றும்போது ஷெட்யூல்டு சாதிகளின் பாதுகாப்பு உரிமைகள் மாற்றுவதுபற்றிய மத, வர்க்க ரீதியாக எழக்கூடிய வாதங்கள் அச்சபைகளைப் பாதிக்கக்கூடாது. அதனால்தான் 25 ஆண்டுகளுக்கு ஷெட்யூல்டு சாதிமக்களின் பாதுகாப்பு உரிமைகளை மாற்றும் பேச்சுக்கே இடமில்லை என்ற உள்பிரிவு சேர்க்கப்படுகிறது.

பாகம் 4

இந்த உள்பிரிவின் நோக்கம், பிரிட்டிஷ் இந்தியச் சட்டத்தின் மூலம் ஷெட்யூல்டு சாதிமக்களுக்குக் கிடைத்துவந்த பாதுகாப்பு இந்திய சமஸ்தானங்களில் கிட்டுமா என்பதே. யூனியனுக்குள் சேரக்கோரும் எந்த சமஸ்தானமும் இப்பாதுகாப்புகள் அடங்கிய அரசியலமைப்பை ஏற்றுக்கொண்டாலொழிய அனுமதிக்கப்பட மாட்டாது என்று இந்த உள்பிரிவு கூறுகிறது.

பாகம் 5

பொருள் விளக்கம்

ஷெட்யூல்டு சாதிப்பிரிவினர் சிறுபான்மையினரா இல்லையா என்ற கேள்வி விவாதத்திற்குரியதாகி விட்டது. இவ்விவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதுதான் முதல் உள்பிரிவின நோக்கம். இந்தியாவிலுள்ள இதர சிறுபான்மையினருடன் ஒப்பிடும்போது, ஷெட்யூல்டு சாதிப்பிரிவினர் அதிக அளவில் பாதுகாப்புகளைப் பெறவேண்டிய நிலையில் உள்ளனர். குறைந்தபட்சம் அவர்களைச் சிறு பான்மையினராகவாவது ஒப்புக்கொள்ளப்பட வேண்டும்.

இரண்டாவது உள்பிரிவின் நோக்கமாவது மாநிலத் தடை நீக்குதல். ஒருவர் ஒரு மாநிலத்தில் ஷெட்யூல்டு சாதியாக ஒப்புக் கொள்ளப்பட்டாலும், இடம் மாறி வேறு மாநிலத்தில் குடியேறும் போது அரசியலமைப்பு வழங்கியுள்ள அரசியல் சலுகை உரிமை நலன்களை இழக்க எந்தக் காரணமும் இல்லை.

இணைப்பு 2
புனா ஒப்பந்த வாசகம்

(1) மாகாண சட்டசபைகளுக்குரிய பொதுத் தொகுதிகளிலிருந்து தீண்டாதார்' பிரிவினருக்காக மாநிலவாரியாக ஒதுக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

மதராஸ்	30
பம்பாய், சிந்துவுடன்	15
பஞ்சாப்	8
பீஹார், ஒரிஸ்ஸா	18
மத்திய மாகாணங்கள்	20
அசாம்	7
வங்காளம்	30
ஐக்கிய மாகாணங்கள் (ய. பி.)	20
	148

இப்புள்ளிவிவரங்கள், பிரதமர் அறிவித்த முடிவின்படி மாகாண சபைகளின் (Provincial Councils) மொத்த எண்ணிக்கையிலிருந்து பெறப்பட்டவை.

(2) மேற்கூறிய இடங்களுக்கான தேர்தல், கூட்டுத் தொகுதி (Joint Electorate) முறையில் பின்கண்ட நடைமுறையைப் பின் பற்ற வேண்டும்:

முதலில் தீண்டாதார் பிரிவினர்கள் யாவரும் தங்கள் பெயர்களை தொகுதிக்குரிய வாக்காளர் பட்டியலில் பதிவு செய்ய வேண்டும். இது ஒரு தேர்தல் குழுவாகும் (Electoral College). இக்குழு, அதாவது ஒரு தொகுதியில் பதிவு செய்துகொண்ட மொத்த நபர்களும் அடங்கியது—தீண்டாதார் பிரிவினர்களிடமிருந்து ஒற்றை ஓட்டு முறையில் மேற்கூறிய ஒவ்வொரு ஒதுக்கப்பட்ட இடங்களுக்கும் 4 நபர்களை கொண்ட வேட்பாளர் பட்டியலை (Panel) தெரிவு செய்து அந்நால்வரில் தொடக்க நிலைத் தேர்தல் மூலம் யார் அதிகம் வாக்குகளைப் பெறுகின்றவரோ அவரே பின்னர் பொதுத் தொகுதியில் வேட்பாளராக நிறுத்தப்படுவார்.

(3) மைய சட்டசபையிலும் தீண்டாதார் பிரிவினரின் பிரதிநிதித்துவம் இவ்வாறே கூட்டுத்தொகுதிகள் மற்றும் ஒதுக்கப்பட்ட இடங்களில் மேற்கூறிய கூறு (2)-இல் குறிப்பிட்டவண்ணம், மாகாண சட்டசபை பிரதிநிதித்துவத்திற்குரிய அதே முறைப்படி, தொடக்கநிலைத் தேர்தல் மூலம் நிகழும்.

(4) மைய சட்டசபையில் பிரிட்டிஷ் இந்தியாவின் மொத்த பொதுத்தொகுதிகளில் 18 சதத் தொகுதிகள் தீண்டாதார் பிரிவினர்களுக்காக இட ஒதுக்கீடு செய்யப்படும்.

(5) மைய மற்றும் மாகாண சட்டசபைகளுக்குரிய வேட்பாளர் பட்டியல் மற்றும் தொடக்கநிலைத் தேர்தல்முறை பத்து ஆண்டுகளுக்கு நீடிக்கும். கீழே உட்பிரிவு கூறு (6) தெரிவித்துள்ளபடி கூட்டுஒப்புதல் ஏற்பட்டால் அதற்கு முன்பாகவே அம்முறை நீக்கப்படலாம்.

(6) தீண்டாதார் பிரிவினரின் பிரதிநிதித்துவ முறைப்படி மாகாணம் மற்றும் மைய சட்டசபைகளுக்கு கூறு (1) மற்றும் (4)-இல் உள்ளபடியான இடஒதுக்கீடுகள், இதன் தொடர்பான வகுப்புப் பிரிவினர்கள் ஒருவர்க்கொருவர் பேசி முடிவு எடுத்து உடன்படும் வரையில் நீடிக்கும்.

(7) தீண்டாதார் பிரிவினர்களுக்காக மைய மற்றும் மாகாண சட்டசபைகளின் வாக்குரிமை லோதியன்குழு அறிக்கை (Lothian Committee Report) குறிப்பிட்டவாறு இருக்கும்.

(8) உள்ளாட்சித் தேர்தல்களிலும் சரி, அரசுப்பணித் துறை நியமனத்திலும் சரி, ஒருவரைத் தீண்டாதார் இனத்தவர் என்ற காரணத்தைச் சுட்டிக்காட்டித் தகுதியற்றவராக முடிவு செய்ய முடியாது. இத்துறைகளில் தீண்டாதாருக்குரிய நியாயமான பிரதிநிதித்துவங்களை வழங்க வேண்டும். அரசு நியமனங்களில் தேவையான கல்வித்தகுதிகளை நிர்ணயிக்கலாம்.

(9) ஒவ்வொரு மாகாணத்திலும் கல்விக்கான மானியத்தில் தீண்டாதார் பிரிவினரின் கல்வி வசதிகளுக்காகத் தேவையான பணத்தை முன்கூட்டியே ஒதுக்க வேண்டும்.

இணைப்பு 3

புனா ஒப்பந்தத்தின் குறைபாடுகள்

1. புனா ஒப்பந்தம் ஷெட்யூல்டு சாதியினர் தாம் விரும்பும் பிரதிநிதிகளைச் சட்டமன்றங்களுக்கு அனுப்புவதற்கு ஏற்ற வழிமுறையை இலட்சியமாகக் கொண்டு வகுத்தளித்துள்ளது என்றாலும், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள புள்ளி விவரத் தொடர்கள் இந்த இலட்சியம் செயலற்றதாகி விட்டதை உணர்த்துகின்றன. 1946 பிப்ரவரியில் கடைசியாக நடந்த தேர்தல் முடிவுகளின் புள்ளிவிவரங்களைத் தொகுத்து இத்தொடர் கீழே தரப்பட்டுள்ளது.

2. இப்புள்ளிவிவரங்கள் நான்கு தொடர் அட்டவணைகளாக வெளியிடப்பட்டுள்ளன: முதல் தொடர் அட்டவணைகள், இறுதித் தேர்தலில் வெற்றி பெற்ற சாதி இந்து வேட்பாளர்களும் ஷெட்யூல்டு வகுப்பு வேட்பாளர்களும் பெற்ற வாக்குகளை எடுத்துக்காட்டுகின்றன.

இரண்டாவது தொடர் அட்டவணைகள், இட ஒதுக்கீட்டை அடிப்படையாக வைத்து ஷெட்யூல்டு சாதி வேட்பாளர்கள் இறுதித்தேர்தலில் வென்ற நிகழ்ச்சிகள் எவ்வளவு, அப்படி இட ஒதுக்கீடு நன்மையைப் புறக்கணித்து விட்டு வென்ற நிகழ்ச்சிகள் எவ்வளவு என்ற விவரங்களை வழங்குகின்றன.

மூன்றாவது தொடர் அட்டவணைகள், ஷெட்யூல்டு வகுப்பினரின் மொத்த ஓட்டு எண்ணிக்கை எவ்வளவு, சாதி இந்துக்களின் ஓட்டு எண்ணிக்கை எவ்வளவு என்ற விவரங்களை எடுத்துக்காட்டுகின்றன.

நான்காவது அட்டவணைத் தொடர், இறுதித்தேர்தலில் வெற்றி பெற்ற ஷெட்யூல்டு வகுப்பு வேட்பாளர்கள் தொடக்கநிலைத் தேர்தலில் என்ன நிலையில் இருந்தனர் என்ற விவரங்களை வழங்குகிறது.

3. இப்புள்ளிவிவர அட்டவணைத் தொடர்களைக் கூர்ந்து கவனிக்கும் ஒருவர், பின்கண்ட முடிவுகளிலிருந்து தப்ப முடியாது:

i) இறுதித்தேர்தலில் வெற்றி பெற்ற ஷெட்யூல்டு வகுப்பு வேட்பாளர்களின் வெற்றிக்குக் காரணம் சாதி இந்து ஓட்டுகளே தவிர ஷெட்யூல்டு வகுப்பு ஓட்டுகளால் அல்ல. பெரும்பாலான வேட்பாளர்கள், சாதி இந்து வேட்பாளர்களைவிட அதிக ஓட்டு எண்ணிக்கை வித்தியாசத்தில் முன்னணியில் உள்ளனர், அல்லது சில இடங்களில் சமஅளவில் வாக்குகளைப் பெற்றுள்ளனர். (பார்க்க முதல் தொடர் அட்டவணைகள்).

இரண்டாவதாக, மிகவும் குறைந்த அளவில் சில தொகுதிகளில் மட்டுமே இட ஒதுக்கீடு காரணமாக ஷெட்யூல்டு வகுப்பு வேட்பாளர்கள் வெற்றிபெற்றுள்ளனர். (பார்க்க. இரண்டாவது தொடர் அட்டவணைகள்) இது மிகவும் எதிர்பாராத நிகழ்ச்சி. ஒவ்வொரு தொகுதியிலும் ஷெட்யூல்டு வகுப்பின் ஓட்டு எண்ணிக்கையையும் சாதி ஹிந்துக்களின் எண்ணிக்கையையும் ஒப்பிடும்போது (பார்க்க மூன்றாம் தொடர் அட்டவணை) ஷெட்யூல்டு வகுப்பு ஓட்டுகள் மிகவும் குறைவாக இருந்தும், ஷெட்யூல்டு சாதி மக்களின் ஓட்டு சிதறாமல் ஷெட்யூல்டு வகுப்பு வேட்பாளர்களுக்குச் சென்றிருந்தாலொழிய இந்த எதிர்பாராத நிகழ்ச்சிக்கு வழியில்லை. இறுதித் தேர்தலில் சாதி இந்து ஓட்டுகளே முடிவை நிர்ணயிக்க வல்லவை என்ற நிலை இருந்தாலும்கூட, ஷெட்யூல்டு சாதிவேட்பாளரின் வெற்றி ஓர் ஆக்கப்பூர்வமான நிரூபணம்.

ii) தொடக்கநிலைத் தேர்தல் முடிவையும் இறுதித் தேர்தல் முடிவையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது (பார்க்க: நான்காம் தொடர் அட்டவணைகள்) இறுதித் தேர்தலில் வெற்றிபெற்ற ஷெட்யூல்டு சாதி வேட்பாளர்கள் தொடக்க நிலைத்தேர்தலில் தோல்வியுற்றனர். (தொடக்கநிலைத் தேர்தல் முடிவை இறுதித்தேர்தல் முடிவாகவும், தொகுதியைத் தனித் தொகுதியாகவும் மாற்றிப்பார்க்க வேண்டும்.)

iii) இந்துக்களுக்கும் ஷெட்யூல்டு வகுப்பினருக்கும் இடையே உள்ள ஓட்டு ஏற்றத்தாழ்வானது, வயது வந்தோர் வாக்குரிமை இருப்பினும் தொடரக்கூடிய ஏற்றத் தாழ்வுதான். கூட்டுத்தொகுதி முறையில் ஷெட்யூல்டு வகுப்பினர் தங்களின் உண்மையான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க இது இடராயுள்ளது.

iv) தொடக்கநிலைத் தேர்தலில் தோல்வியுற்ற ஷெட்யூல்டு வகுப்பு வேட்பாளர் இறுதித்தேர்தலில் சாதி இந்து ஓட்டுக்களால் வெற்றிபெற்று பிரதிநிதித்துவம் பெறும்போது, அந்த நிகழ்ச்சி, ஷெட்யூல்டு வகுப்பினரின் விருப்பத்திற்கு மாறாக இருப்பதுடன் இந்த புனா ஒப்பந்தம், ஷெட்யூல்டு வகுப்பினர், தாம் விரும்பும் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமையைப் பறிப்பதாகவும் உள்ளது.

ஆகவே, இப்புனா ஒப்பந்தம் குறைபாடுள்ளது. காந்தியின் உண்ணாவிரத நிர்ப்பந்தம் காரணமாகவும், ஷெட்யூல்டு சாதி

யினரின் தேர்தலில் இந்துக்கள் தலையிடமாட்டார்கள் என்ற உறுதி அளிக்கப்பட்டதாலும்தான் இவ்வொப்பந்தம் ஏற்கப் பட்டது.

முதல் தொடர்கள்

வெற்றி பெற்ற ஹிந்து வேட்பாளர்கள் பெற்ற வாக்குகளுடன் ஒப்பிடும்போது

		பக்கம்
I.	சென்னை	*433*
II.	வங்காளம்	*433-34*
III.	பம்பாய்	*434*
IV.	ஐக்கிய மாகாணங்கள்	*435*
V.	மத்திய மாகாணங்கள்	*435*
VI.	அஸாம்	*436*
VII.	ஒரிஸ்ஸா	*436*

முதல் தொடர்கள்

1 சென்னை

தொகுதியின் பெயர்	இடங்கள்	வெற்றி பெற்ற ஹிந்து வேட்பாளர் பெற்ற வாக்குகள்	வெற்றி பெற்ற ஷெட்யூல்டு வகுப்பு வேட்பாளர்கள் பெற்ற வாக்குகள்
1	2	3	4
1. காகிநாடா	2	32,607	28,544
2. எல்லூர்	2	37,618	38,195
3. பந்தார்	2	69,319	70,931
4. ஓங்கோல்	2	50,906	49,992
5. ரேணிகுண்டா	2	17,406	18,125
6. கர்நூல்	2	32,756	32,294
7. செங்கல்பட்டு	2	13,865	15,129
8. திருவள்ளூர்	2	17,225	17,818
9. ராணிப்பேட்டை	2	21,249	21,059
10. திருவண்ணாமலை	2	31,476	32,132
11. திண்டிவனம்	2	25,626	25,442
12. சிதம்பரம்	2	15,272	14,874
13. தஞ்சாவூர்	2	26,904	16,133
14. மன்னார்குடி	2	29,932	30,116
15. அரியலூர்	2	22,656	20,520
16. சாத்தூர்	2	30,988	29,530
17. மலப்புரம்	2	28,229	28,085
18. நாமக்கல்	2	15,433	15,085

2 வங்காளம்

1	2	3	4	5
1. பர்த்வான் மையம்	2	42,858	33,903	...
2. பர்த்வான் வடமேற்கு	2	32,270	25,723	...
3. பீர்பம்	2	24,629	20,252	...
4. பங்குரா, மேற்கு	2	30,388	21,266	...
5. துர்க்ராம் — காட்டல்	2	40,900	19,060	...
6. ஹுக்ளி — வடகிழக்கு	2	26,132	18,768	...

1	2	3	4	5
7. ஹெளரா	2	40,608	36,099	...
8. 24 பர்கானா — தென் கிழக்கு	2	50,345	38,459	...
9. 24 பர்கானா — வடமேற்கு	2	45,339	48,272	...
10. நடியா	2	30,489	28,054	...
11. முர்ஷிதாபாத்	2	32,386	26,958	...
12. ஜெஸ்ஸூர்	2	38,665	41,434	...
13. குல்னா	3	79,218	57,724	44,043
14. மால்டா	2	32,728	12,796	...
15. தினஜ்பூர்	3	46,146	35,127	30,839
16. ஜல்பைகுரி — சிலிகுரி	3	30,950	26,109	13,829
17. ரங்பூர்	3	46,869	29,657	23,237
18. போக்ரா — பப்னா	2	43,249	31,515	...
19. டாக்கா, கிழக்கு	2	51,808	31,392	...
20. மைமன் சிங் மேற்கு	2	37,983	32,782	...
21. மைமன் சிங் கிழக்கு	2	43,678	32,207	...
22. ஃபரித்பூர்	2	70,115	51,450	29,503
23. பகர்குஞ்ச்	2	48,560	28,560	...
24. திப்பேரா	2	60,146	59,051	...

3 பம்பாய்

தொகுதியின் பெயர்கள்	இடங்கள்	வெற்றி பெற்ற இந்து வேட்பாளர்கள் பெற்ற வாக்குகள்			வெற்றி பெற்ற ஷெட்யூல்டு வகுப்பு வேட்பாளர்கள் பெற்ற வாக்குகள்
1	2	3	4	5	6
1. பம்பாய் (புறநகர்)	3	57,182	47,835	...	59,646
2. பம்பாய் (பைகுல்லா)	3	42,143	41,795	...	43,251
3. கைரா மாவட்டம்	4	68,044	63,422	57,394	69,807
4. சூரத் மாவட்டம்	4	40,232	39,985	39,610	39,849
5. தானா தெற்கு	3	30,581	27,587	...	11,630
6. அகமத் நகர் தெற்கு	3	25,747	20.948	...	20,908
7. கிழக்கு கான்டேஷ் கிழக்கு	4	38,721	34,349	33,960	36,136
8. நாசிக், மேற்கு	4	37,218	36,794	36,555	42,604

1	2	3	4	5	6
9. புனே, மேற்கு	3	23,758	23,454	...	24,709
10. சதாரா வடக்கு	4	44,315	42,727	41,474	43,961
11. ஷோலாப்பூர்—வடகிழக்கு	3	19,380	16,705	...	18,264
12. பெல்காம் வடக்கு	4	55,787	50,759	49,867	27,682
13. பிஜாப்பூர் வடக்கு	3	23,083	20,838	...	16,059
14. கொலாபா மாவட்டம்	4	41,012	38,864	35,633	17,676
15. ரத்னகிரி வடக்கு	4	13,640	10,985	10,372	11,734

4 ஐக்கிய மாகாணங்கள்

தொகுதியின் பெயர்	இடங்கள்	வெற்றி பெற்ற இந்து வேட்பாளர்கள் பெற்ற வாக்குகள்	வெற்றி பெற்ற ஷெட்யூல்டு வகுப்பு வேட்பாளர்கள் பெற்ற வாக்குகள்
1	2	3	4
1. லக்னோ நகர்	2	24,614	14,110
2. கான்பூர் நகர்	2	34,550	34,782
3. ஆக்ரா நகர்	2	17,446	16,343
4. அலகாபாத் நகர்	2	19,870	10,308
5. பதாம் மாவட்டம்	2	6,716	14,037
6. ஜலான் மாவட்டம்	2	21,692	15,363
7. பஸ்தி மாவட்டம்	2	14,450	15,447
8. அல்மோரா மாவட்டம்	2	36,371	20,605
9. ரை பரேலி மாவட்டம்	2	15,917	1,889
10. சீதாப்பூர் மாவட்டம்	2	28,665	20,204
11. கொண்டா மாவட்டம்	2	17,949	13,447

5 மத்திய மாகாணங்கள்

தொகுதியின் பெயர்	இடங்கள்	வெற்றி பெற்ற இந்து வேட்பாளர்கள் பெற்ற வாக்குகள்	வெற்றி பெற்ற ஷெட்யூல்டு வகுப்பு வேட்பாளர்கள் பெற்ற வாக்குகள்
1	2	3	4
1. நாக்பூர் நகர்	2	21,905	23,595
2. நாக்பூர் — உம்ரத்	2	8,330	7,847
3. ஹிப்கங்காட் — வார்தா	2	11,677	10,781

1	2	3	4
4. சந்த பிரம்ம புரி	2	10,208	8,144
5. சிந்த்வாரா சன்சாத்	2	16,365	6,190
6. சௌகார் — குரை	2	7,829	5,162
7. ரைப்பூர்	2	8,183	6,112
8. பலோடா பசார்	2	21,861	9,659
9. பிலாஸ்பூர்	2	13,109	6,030
10. முங்கெலி	2	9,600	6,418
11. தஞ்சீர்	2	11,914	7,419
12. த்ருக்	2	5,975	5,593
13. பந்தாரா — சகோலி	2	16,824	10,491
14. யவட்மால் — டரேஷா	2	10,915	4,719
15. எல்லிச்பூர்	2	16,298	4,592
16. சிக்லிமோகார்	2	16,397	2,748
17. அகோலா — பலப்பூர்	2	6,455	5,567

6 அசாம்

தொகுதியின் பெயர்	இடங்கள்	வெற்றி பெற்ற இந்து வேட்பாளர்கள் பெற்ற வாக்குகள்		வெற்றி பெற்ற ஷெட்யூல்டு வகுப்பு வேட்பாளர்கள் பெற்ற வாக்குகள்
1	2	3	4	5
1. காம்ரூப் — சார், தெற்கு	3	15,890	14,971	13,693
2. நௌகாங்	1	...	...	14,560
3. ஜோர்ஹாத் வடக்கு	2	17,429	...	5,809
4. ஹமிப்கஞ்ச்	2	10,985	...	9,770
5. கரீம்கஞ்ச்	2	12,562	...	11,676
6. சில்சார்	2	17,340	...	7,081

7 ஒரிஸ்ஸா

தொகுதியின் பெயர்	இடங்கள்	வெற்றி பெற்ற இந்து வேட்பாளர்கள் பெற்ற வாக்குகள்	வெற்றி பெற்ற ஷெட்யூல்டு வகுப்பு வேட்பாளர்கள் பெற்ற வாக்குகள்
1	2	3	4
1. கிழக்கு தஜ்பூர்	2	8,427	8,712
2. கிழக்கு பர்கார்	2	4,195	937

இரண்டாவது தொடர்கள்

ஷெட்யூல்டு வகுப்பு வேட்பாளர் தேர்தல் வெற்றிக்காகத் தேவைப்படும் தொகுதிகளின் இட ஒதுக்கீடு எண்ணிக்கை விவரங்கள்

மாகாணம்	ஷெட்யூல்டு வகுப்பு ஒதுக்கப் பட்ட தொகுதி களின் எண்ணிக்கை	சச்சரவுக்குரிய தொகுதிகளின் எண்ணிக்கை	ஹிந்து வேட்பாளர் மிகுந்து போட்டி யிடும் தொகுதிகள்	ஷெட்யூல்டு வகுப்பு மிகுந்து போட்டி யிடும் தொகுதிகள்	ஹிந்துக்கள் ஷெட்யூல்டு வகுப்பினர் இருவருமே மிகுந்து போட்டி அவசியம் தொகுதிகள்	ஷெட்யூல்டு வகுப்பு வேட் பாளர் வெற்றிக்கு இட ஒதுக் கீடு மிகவும் என்ற தொகுதிகள்
1	2	3	4	5	6	7
1. சென்னை	30	18	14	17	...	ஏதுமில்லை
2. வங்காளம்	30	24	19	24	19	ஏதுமில்லை
3. பம்பாய்	15	15	15	15	15	2
4. மத்திய மாகாணங்கள்	22	17	14	17	14	2
5. உத்தரப்பிரதேசம்	15	11	5	11	6	ஏதுமில்லை
6. அசாம்	...	...	...	...	...	2
7. ஒரிஸ்ஸா	...	2	...	2	...	ஏதுமில்லை
8. பஞ்சாப்	8	...	...	...	...	...

மூன்றாவது தொடர்கள்

ஷெட்யூல்டு வகுப்பினருக்கும் இந்து சாதியினருக்கும் உள்ள ஓட்டு வலிமை

1. சென்னை

தொகுதி	தொகுதியின் மொத்த வாக்கு எண்ணிக்கை	தொகுதியின் மொத்த ஷெட்யூல்டு வகுப்பு வாக்கு எண்ணிக்கை	விகிதாச்சார அளவு (2) இல் (3)
1	2	3	4
1. சென்னை நகர தெற்கு மையம்	26,922	4,082	1:6.6
2. ஸ்ரீ காகுளம்	90,496	8,070	1:11.2
3. அமலாபுரம்	95,954	28,282	1:3.4
4. காக்கிநாடா	86,932	17,616	1:4.9
5. எல்லூர்	88,249	16,835	1:5.24
6. ஒங்கோல்	1,10,152	11,233	1:9.8
7. கூடூர்	52,415	10,263	1:5.1
8. கடப்பா	92,572	10,842	1:8.5
9. ரேணுகுண்டா	74,952	11,896	1:6.3

1	2	3	4
10. பெல்லாரி	85,928	10,146	1:8.5
11 கர்நூல்	72,753	11,679	1:6.2
12. திருத்தணி	77,337	15,243	1:5.07
13. செங்கல்பட்டு	73,554	22,182	1:3.3
14. திருவள்ளூர்	81,814	21,287	1:3.8
15. ராணிப்பேட்டை	24,403	11,271	1:2.1
16. திருவண்ணாமலை	97,259	15,536	1:6.2
17. திண்டிவனம்	85,514	19,221	1:4.4
18. சிதம்பரம்	96,086	16,762	1:5.7
19. திருக்கோவிலூர்	1,02,482	21,733	1:4.7
20. தஞ்சாவூர்	99,496	13,198	1:7.5
21. மன்னார்குடி	69,579	11,547	1:5.8
22. அரியலூர்	1,13,630	16,772	1:6.7
23. பழனி	92,655	13,521	1:6.8
24. சாத்தூர்	84,169	8,033	1:10.5
25. கோவில்பட்டி	1,00,521	20,907	1:4.8
26. பொள்ளாச்சி	63,821	12,808	1:4.9
27. நாமக்கல்	51,860	11,407	1:4.5
28. கூந்தாப்பூர்	46,032	8,030	1:5.7
29. மலப்புரம்	70,346	10,808	1:6.5

2. பம்பாய்

தொகுதி 1	தொகுதியின் மொத்த வாக்கு எண்ணிக்கை 2	தொகுதியின் மொத்த ஷெட்யூல்டு வகுப்பு வாக்கு எண்ணிக்கை 3	விகிதாச்சார அளவு (2) இல் (3) 4
பொது நகரம்			
1. பம்பாய் நகர் வடக்கு பம்பாய் புறநகர் மாவட்டம்	1,67,002	34,266	1:4.8
2. பம்பாய் நகர் பைகுல்லா, பரேல்	1,52,991	28,520	1:5.3

1	2	3	4
பொது கிராமியம்			
3. கைரா மாவட்ட்ம்	1,39,508	7,318	1:19.06
4. சூரத் மாவட்டம்	85,670	4,765	1:18.8
5. தாணா தெற்கு	67,749	4,668	1:14.5
6. அகமத் நகர் (தெற்கு)	73,162	7,382	1:9.9
7. கிழக்கு காந்தேஷ்	91,377	10,109	1:9.35
8. நாசிக் மேற்கு	99,274	12,698	1:7.7
9. புனே மேற்கு	73,551	13,055	1:5.6
10. சதாரா வடக்கு	95,459	11,152	1:8.5
11. ஷோலாப்பூர், வடகிழக்கு	64,583	9,713	1:6.6
12. பெல்காம் வடக்கு	79,422	18,303	1:4.3
13. பீஜாப்பூர் வடக்கு	60,655	8,993	1:6.7
14. கொலாபா மாவட்டம்	1,03,828	5,001	1:20.7
15. ரத்னகிரி வடக்கு	32,606	3,529	1:9.2

3. வங்காளம்

தொகுதி 1	தொகுதியின் மொத்த வாக்கு எண்ணிக்கை 2	தொகுதியின் மொத்த ஷெட்யூல்டு வகுப்பு வாக்கு எண்ணிக்கை 3	விகிதாச்சார அளவு (2) இல் (3) 4
பொது கிராமியம்			
1. பர்த்வான் மையம்	74,306	24,610	1:3.01
2. பர்த்வான் வடமேற்கு	80,035	16,830	1:4.8
3. பீர்பம்	1,03,231	37,637	1:2.7
4. பங்குரா மேற்கு	84,128	25,487	1:3.3
5. மிதுனாப்பூர் மையம்	99,961	20,167	1:4.95
6. ஜர்காம்-காட்டல்	64,031	13,091	1:4.85
7. ஹுக்ளி (வடகிழக்கு)	67,697	20,318	1:3.33
8. ஹௌரா	1,03,346	22,990	1:4.5
9. 24 பர்கானா தென் மேற்கு	82,366	47,378	1:1.7

1	2	3	4
10. 24 பர்கானா வட கிழக்கு	85,477	30,607	1:2.78
11. நதியா	90,092	25,605	1:3.5
12. முர்ஷிதாபாத்	81,083	17,176	1:4.8
13. ஜெஸ்ஸீர்	1,21,760	55,052	1:2.2
14. குல்னா	1,45,335	76,848	1:1.87
15. மால்டா	73,664	29,010	1:2.54
16. தினாஜ்பூர்	1,48,804	1,18,454	1:1.25
17. ஜல்லைக்குரி-சிலிகுரி	78,552	65,679	1:1.2
18. ரங்க்பூர்	29,437	65,679	1:0.44
19. போக்ரா-பாப்னா	87,704	33,873	1:2.58
20. டாக்கா கிழக்கு	94,858	40,238	1:2.35
21. மைமன்சிங் மேற்கு	98,795	38,046	1:2.59
22. மைமன்சிங் கிழக்கு	68,360	29,588	1:2.3
23. ஃபரித்பூர்	1,72,683	96,319	1:1.7
24. பகர்கஞ்ச் தென் மேற்கு	78,796	49,014	1:1.6
25. திப்பரா	1,27,097	34,813	1:3.61

4. ஐக்கிய மாகாணங்கள்

தொகுதி 1	தொகுதியின் மொத்த வாக்கு எண்ணிக்கை 2	தொகுதியின் மொத்த ஷெட்யூல்டு வகுப்பு வாக்கு எண்ணிக்கை 3	விகிதாச்சார அளவு (2) இல் (3) 4
பொது நகரியம்			
1. லக்னோ நகர்	89,412	9,079	1:9.8
2. கான்பூர் நகர்	1,31,599	22,515	1:5.8
3. ஆக்ரா நகர்	47,505	10,105	1:4.7
4. அலஹாபாத்நகர்	55,379	6,854	1:8.07
பொது கிராமியம்			
5. சரண்பூர் மாவட்டம் தென்-கிழக்கு	47,773	7,256	1:6.5
6. புலந்த்ஷா மாவட்டம் தென்-கிழக்கு	49,699	7,506	1:6.6

1	2	3	4
7. ஆக்ரா மாவட்டம் வட-கிழக்கு	61,515	8,290	1:7.4
8. மணிப்புரி மாநிலம் வட-கிழக்கு	51,406	5,878	1:8.7
9. புதான் மாவட்டம் கிழக்கு	46,966	7,087	1:6.6
10. ஜலான் மாவட்டம்	68,815	14,611	1:4.7
11. மீர்சாப்பூர் மாவட்டம் வடக்கு	43,648	4,045	1:10.7
12. கோரக்பூர் மாவட்டம் வடக்கு	43,441	5,626	1:7.7
13. பஸ்தி மாவட்டம் (தெற்கு)	37,084	4,194	1:8.8
14. அசம்கார் மாவட்டம் (மேற்கு)	51,194	8,127	1:6.2
15. அல்மோரா மாவட்டம்	1,39,217	20,671	1:6.7
16. ரைபரேலி மாவட்டம் (வடகிழக்கு)	48,697	10,488	1:4.6
17. சீதாப்பூர் மாவட்டம் (வடகிழக்கு)	76,682	22,913	1:3.3
18. பைசாபாத் மாவட்டம் (கிழக்கு)	57,154	9,988	1:5.7
19. கோண்டா மாவட்டம் (வடகிழக்கு)	64,225	8,274	1:7.7
20. பாராபங்கி மாவட்டம் (வடக்கு)	68,285	16,303	1:4.18

5. மைய மாகாணங்கள்

1	2	3	4
பொது நகரியம்			
1. நாக்பூர் நகரம்	79,329	14,388	1:5.02
பொது கிராமியம்			
2. நாக்பூர் — உம்ரேர்	29,267	6,037	1:4.8
3. ஹிங்காங்காட்-வார்தா	35,201	4,011	1:9.02
4. சந்தா பிரம்மபுரி	30,132	5,229	1:5.7

1	2	3	4
5. சிந்த்வாரா-சவுசார்	37,942	3,914	1:9.7
6. ஜபல்புரே-பாதன்	20,587	1:18.6	1:17.5
7. சவுகார்-குன்ர	30,660	5,224	1:5.8
8. தமோ ஹட்டா	33,284	3,608	1:9.2
9. நரசிங்கப்பூர்-கதர்வாரா	35.781	2,019	1:17.6
10. ரைப்பூர்	33,053	11,041	1:2.9
11. பலோடா பசார்	46,943	15,636	1:3.06
12. பிலாஸ்பூர்	33,260	10,547	1:3.1
13. முங்கெலி	28,028	10,067	1:2.7
14. ஜஞ்சீர்	42,763	13,558	1:3.15
15. த்ருக்	34,883	8,942	1:3.19
16. பந்தாராசகோலி	47,047	10,399	1:4.5
17. எல்லிச்பூர்-தர்தப்பூர்-நெல்காட்	30,094	2,885	1:13.8
18. அகோலா-பேலாப்பூர்	25,912	3,233	1:9.81
19. யவட்மால்-தார்வா	20,327	2,020	1:10.06
20. சிக்லி-மேகார்	37,936	3,468	1:10.9

6. பீகார்

1	2	3	4
1. கிழக்கு பீகார்	35,631	4,618	1:7.7
2. தெற்கு கயா	49,363	10,360	1:4.7
3. நவாதா	41,432	7,684	1:5.3
4. கிழக்கு மத்திய ஷாஹாபாத்	41,707	5,984	1:6.9
5. மேற்கு கோபால்கஞ்ச்	33,395	3,415	1:9.7
6. வடக்கு பேட்டையா	25,760	2,831	1:9.09
7. கிழக்கு முசாபர்பூர் சதர்	27,271	3,133	1:8.7
8. தர்பங்கா சதர்	26,864	2,116	1:12.6
9. தென்-கிழக்கு சமஸ்திப்பூர்	37,291	2,672	1:13.9
10. தெற்கு சதர்-மாங்கீர்	54,229	6,465	1:8.5
11. மதிப்புரா	26,523	1,284	1:20.6
12. தென்-மேற்கு பூர்ணியா	44,232	2,938	1:15.05
13. கிரித்-காத்ரா	55,246	4,667	1:11.8
14. வட-கிழக்கு பலம்னு	23,072	4,237	1:5.3
15. மத்திய மான்பம்	39,626	5,617	1:7.05

7. அசாம்

1	2	3	4
1. நௌகாங்—வட கிழக்கு	26,618	3,569	1:7.2
2. காம்ரூப் சதர், தெற்கு	33,234	2,117	1:15.6
3. சில்சார்	38,647	4,201	1:9.2
4. கரீம்கஞ்ச்	25,791	10,132	1:2.5
5. ஜோஹாத், வடக்கு	26,733	1,360	1:19.6
6. ஜானம்கஞ்ச்	39,045	11,603	1:3.3
7. ஹபீப்கஞ்ச், வடக்கு	31,511	9,996	1:3.1

8. பஞ்சாப்

1	2	3	4
1. தெற்கு—கிழக்கு கர்கான்	37,815	6,049	1:6.2
2. கர்நால்—வடக்கு	31,967	5,120	1:6.2
3. அம்பாலா, சிம்லா	47,403	17,507	1:3.27
4. ஹோஷியார்பூர், மேற்கு	51,084	7,281	1:7.0
5. ஜலந்தர்	36,570	20,521	1:1.8
6. லூதியானா, பிரோஸ்பூர்	52,009	27,354	1:1.8
7. அமிர்தசரஸ், சியால்கோட்	38,046	10,328	1:3.68
8. லயல்பூர், ஜன்	32,703	7,602	1:4.2

நான்காவது தொடர் தொடக்க நிலைத் தேர்தலும் இறுதித் தேர்தலும் ஒப்பிடுதல்

1 சென்னை

	இறுதித் தேர்தலில் வெற்றி பெற்ற ஷெட்யூல்டு வகுப்பு வேட்பாளர்						
தொகுதி	பெயர்	கட்சி	பெற்ற வாக்குகள்	பொது தேர்தலில் பெற்ற வரிசை (Rank)	தொடக்க தனித் தொகுதியில் தேர்தலில் பெற்ற வரிசை	தொடக்க நிலை பெற்றவ வாக்குகள்	தொடக்க நிலை தேர்தலில் வெற்றி பெற்றவரின் வாக்கு வித்தியாச நிலை
1	2	3	4	5	6	7	8
1. அமலாபுரம்	பாண்டு லஷ்மணசாமி	காங்கிரஸ்	'8524	மூவரில் முதல் நிலை	3-வது (தோல்வி)	2683	...
2. காகிநாடா	பி. எஸ். மூர்த்தி	காங்கிரஸ்	28,544	நால்வரில் இரண்டு	4-வது (,,)	1411	...

1	2	3	4	5	6	7	8
3. பந்தார்	விமலா குரமையா	காங்கிரஸ்-	70,931	ஆறில் முதலாவது	2-வது ''	4914	...
4. கடுப்பா	ஸ்வர்ண நாகையா	''	...	... ...	1-வது	3482	முழுப் பெரும்பான்மை வெற்றி
5. ரேணுதண்டா	டி. கதிரப்பா	''	18,125	நால்வரில் முதல் (1 இந்து 2 ஷெட்-வென்று)	1-வது	2564	குறைந்த பெரும்பான்மை
6. திருவண்ணாமலை	ஆர். தங்கபாலு	''	32,132	ஐவரில் முதல் (2-இந்து 2 ஷெட்-வென்று)	1-வது	1960	'' ''
7. திண்டிவனம்	கே. குலசேகரதாஸ்	''	25,442	நால்வரில் இரண்டு (2 இந்துக்களை வென்று)	1-வது	2785	ஓட்டு சிதறியதால்
8. மன்னார்குடி	தியாகு வைக்காரர்	''	30,116	ஐவரில் முதல்வர் (5 இந்துக்களை வென்று)	1-வது	2895	'' ''
9. பொள்ளாச்சி	சி. கிருஷ்ண குடும்பன்	''		...	1-வது	2430	முழுப் பெரும்பான்மை
10. நாமக்கல்	எம். பி. பெரியசாமி	''	15,085	ஐவரில் இரண்டு	1-வது	2355	குறைந்த பெரும்பான்மை

II பம்பாய்

1	2	3	4	5	6	7	8
	இறுதி தேர்தலில் வெற்றி பெற்ற ஷெட்யூல்டு வகுப்பினர் நிலை						
1. பம்பாய் நகர் வடக்கு	சவ்லாராம் குண்டாஜி	காங்கிரஸ்	59,646	மூவரில் முதல் (2 இந்துவுக்கு மேல்)	2-வது (தோல்வி)	2038	...
2. பம்பாய் நகர் பைகுலா, பரேல்	என். எஸ். கஜ்ரோல்கர்	''	43,251	மூவரில் முதல் (2 பொது வேட்பாளருக்கு மேல்)	2-வது (தோல்வி)	2098	...
3. கிழக்கு கன்டேஷ் கிழக்கு	ஹிராலால் கல்யாணி	''	36,136	நால்வரில் இரண்டாவது	''	1147	...

III மைய மாகாணங்கள்

1	2	3	4	5	6	7	8
1. நாக்பூர்-உம்ரேர்	லாலோந்திர ராம்சந்திரா	காங்ரிரஸ்	7,847	இரண்டாவது	3-வது (தோல்வி)	112	...
2. ஹிங்கங்கட் வார்தா	சங்கர் விதால்	காங்கிரஸ்	10,781	''	4-வது ''	56	...
3. பந்த்ரா-சகோலி	ஹருண்ஜி இஸ்ராம்	''	10,491	''	3-வது ''	471	...
4. யவட்மால்-தார்வா	தாலத் லககஷ்மண்	''	4,719	''	3-வது ''	126	...

IV ஐக்கிய மாகாணங்கள்

1	2	3	4	5	6	7	8
1. ஆக்ரா நகர்	ராம்சந்த்	காங்கிரஸ்	16,343	2-வது	முதல்	836	சிறு பெரும்பான்மை சிதறிய வாக்கு
2. அலஹாபாத் நகர்	மதூரியா தின்	''	10,308	''	''	1701	'' ''
3. அல்மோரா	கௌசி ராம்	''	20,605	''	2-வது (தோல்வி)	937	... ...

V பஞ்சாப்

1	2			5	6	7	8
1. தென் கிழக்கு கர்கான்	பிரேம்சிங்	யூனியனிஸ்ட்	7,706	2-வது	முதல்	1,353	சிதறிய ஒட்டுகள்
2. கர்நால், வடக்கு	சுந்தர்	காங்கிரஸ்	3,136	2-வது	முதல்	519	சிறு பெரும்பான்மை
3. அம்பாலா-சிம்லா	பிரிதிவ் சிங் ஆஸாத்	"	10,503	2-வது	3-வது (தோல்வி)	1,392	...
4. ஹோஷியார்பூர்	மெஹார்சந்த	"	16,307	2-வது	3-வது "	641	...
5. ஜலந்தர் மேற்கு	குர்பந்தா சிங்	"	21,476	முதல்	முதல்	...	...
6. லூதியானா — ஃபெரோஸ்பூர்	மாறு ராம்	"	24,352	முதல்	4-வது (தோல்வி)	812	...
7. லாயல்பூர், ஜங்ண	ஹர்பஜ் ராம்	"	8,312	2-வது	2-வது (தோல்வி)	1,166	...

இணைப்பு 4

மக்கள்தொகை புள்ளி விவரம்

1941 மக்கள்தொகைக் கணக்குப்படி ஷெட்யூல்டு வகுப்பைச் சார்ந்த மக்கள் தொகை 48,793,180. இப்புள்ளி விவரத்தை சரியென்று ஒப்புக்கொள்ள முடியுமா? இது குறித்து உறுதியான முடிவுக்கு வருமுன் பின்வரும் விஷயங்களை நினைவில் கொள்ள வேண்டும்:

(1) 1931-ஆம் ஆண்டு மக்கள் தொகைப் புள்ளி விவரங்களுடன் ஒப்பிடும் போது 1941-ஆம் ஆண்டு மக்கள் தொகை குறைவாயுள்ளது.

(2) அதேசமயம் வேறு சாதி சமூகங்களின் மக்கள்தொகை இதே கால கட்டத்தில் 15 சதவிகிதம் உயர்ந்துள்ளது.

இப்படி ஷெட்யூல்டு வகுப்பு மக்கள்தொகை குறைந்து போனதற்கு எதுவும் சிறப்பான காரணங்கள் உண்டா? எந்த அடிப்படையில் ஷெட்யூல்டு வகுப்பைக் கணக்கிட்டார்கள்? அந்த அடிப்படை 1941-இல், 1931-இல் கணக்கிட்ட வழியிலிருந்து மாறிப் போய் விட்டது என்ற கேள்வியின் விடையில் எதுவும் முரண்பாடு இல்லை. 1931-ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்புக்கு ''தீண்டாதார்கள்'' என்று லோதீயன்குழு வழங்கிய வரையறை பின்பற்றப்பட்டது. 1941-இலும் அதே வரையறைதான் பின்பற்றப்பட்டது. ஆகவே, 1931-ஆம் ஆண்டு மதிப்பீடு மிகையானது என்பதால் 1941-இல் ஷெட்யூல்டு மக்கள்தொகை குறைந்து விட்டதாக முடிவு செய்ய முடியாது.

1941-இல் மக்கள்தொகைக் கணக்கெடுக்கும் போது ஆஜ்மீர்-மேர்வார் மற்றும் குவாலியர் ராஜ்யங்களில் ஷெட்யூல்டு வகுப்பு மக்களின் கணக்கு விட்டுப்போனது மெய்தான். அதைச் சேர்த்துக் கொண்டு பார்த்தால் 1931-ஆம் ஆண்டும் புள்ளிவிவரத்தில் மேற்படி ராஜ்யங்களில் உள்ள ஷெட்யூல்டு வகுப்பினர் தொகைக் கணக்கைச் சேர்த்துக்கொண்டு பார்த்தால்—அப்படியும்கூட 1941 கணக்குப்படி 49,538,145 தான் வருகிறது. அப்படியும் கூட 1931-ஐவிடக் குறைவாகத்தான் உள்ளது.

ஷெட்யூல்டு வகுப்பு மக்களின் மக்கள்தொகையின் குறைவுக்கும், இதர சாதி சமூகங்களின் மக்கள்தொகை உயர்வுக்கும் ஒரு பதிற்றாண்டில் (Decade) தோன்றும் வித்தியாசத்திற்கு சரியானபடி விளக்கத்தை வழங்க முடியாத நிலை. நேர்மை நோக்குள்ள இந்திய மக்கள்தொகை இயல் மாணவர்களுடைய மனத்தில், மக்கள்தொகை மரபியலுக்கு (Demography) பதிற்றாண்டுகள் செல்லச் செல்ல இந்திய மக்கள்தொகைக் கணக்கு உபயோகமாயிராது என்ற எண்ணத்தை உறுதிப்படுத்தும். இது ஒரு அரசியல் விவகாரமாகிவிட்டது. ஒவ்வொரு சாதி மக்களும் தம்முடைய

இணைப்பு 4

மக்கள்தொகை கணக்கு

அட்டவணை 1

1941 மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி பல்வேறு சாதி-மத சமூகங்களின் மக்கள்தொகைப் புள்ளிவிவரம்

மாகாணங்கள்	இந்துக்கள் 1	ஷெட்யூல்டு சாதிகள் 2	இஸ்லாமியர் கிறிஸ்தவர் 3	சீக்கியர் இந்தியர்	இந்திய 5	ஆங்கிலோ 6	பாரசீகர் 7
மாகாணங்கள்	150,890,146	39,920,807	79,398,503	4,165,097	3,245,706	1,13,936	1,01,968
ஆஜ்மீர்-மேர்வாரா	376,481	?	89,899	867	3,895	1,005	
அசாம்*	3,586,932	676,291	3,442,479	3.464	37,750	634	2
பலூசிஸ்தாஸ்	39,521	5,102	438,930	11,918	2,633	263	75
பெங்கால்	17,680,054	7,378,970	33,005,434	16,281	110,923	31,619	86,270
பீஹார்	22,173,890	4,340,379	4,716,314	13,213	24,693	5,963	547
ஒரிஸ்ஸா	5,594,535	1,238.171	146.301	232	26,584	789	13
பம்பாய்	14,700,242	1,855,148	1,920,368	6,044	338,812	14,034	43,467
சிந்த்	1,038,292	191,634	3,208,325	31,011	13,232	2,731	1,936
மத்திய மாகாணங்கள்/பீரார்	9,880,583	3,051,413	783,697	14,996	48,260	4,538	2,014
கூர்க்	105,013	25,740	14,730		3,309	80	12
தில்லி	444,532	122,693	304,971	16,157	10,494	3,408	284
சென்னை	34,731,330	8,068,492	8,896,452	418	2,001,082	28,661	369
வடமேற்கு எல்லை பிராந்தியம்	180,321		2,788,797	57,939	5,426	837	24
பஞ்சாப்	6,301,737	1;248,635	16,217,242	3,757,401	486,038	5,891	4,327
ஐக்கியமாகாணங்கள்	34,094,511	11,717,158	8,416,308	232,445	131,327	13,383	1,375
சமஸ்தானங்கள், எல்லைகள்	55,227,180	8,892,373	12,659,593	1,526,350	2,794,959	26,468	12,922
இந்தியா	206,117,326	48,813,180	92,058,096	5,691,447	6,040,665	140,422	114,490

*பழங்குடிகள் 6,484,996

பழங்குடிகள்

மாகாணங்கள்	16,713,256
சமஸ்தானங்கள், எல்லை	8,728,233
இந்தியா	25,441,489

அட்டவணை 2

சாதி சமூக மக்கள்தொகை வித்தியாசங்கள் 1931 நிலையை 1941 நிலையுடன் ஒப்பிடல்

சாதி/மதம்	மாகாணம் 1	சமஸ்தானம் எல்லை புறம் 2	சமஸ்தானம் மொத்தம் 3	4.	ஏற்றம் (+) (+) மாகாணம் எல்லை புறம் 5	அல்லது இறக்கம் (−) 6	7
இந்துக்கள்	139,319,979	50,335,391	189,654,370	150,890,146	55,227,180	206,117.326	+26,462,956
ஷெட்யூல்டு வகுப்பினர்	38,409,009	11,131,761	49,540,770	39,920,807	8,892,373	48,793,180	−747,590
இஸ்லாமியர்	67,020,443	10,657,102	77,677,545	79,398,503	12,659,598	92,058,096	+14,381,551
சீக்கியர்	3,220,997	1,114,774	4,335,771	4,165,097	1,526,350	5,691,447	+1,355,676
கிறிஸ்தவர்கள்	3,866,660	2,430,103	6,296,763	3,471,430	2,834,119	6,316,119	+19,786
பாரசீகர்கள்	96,549	13,203	109,752	101,968	12,922	114,890	+5,138

பகுதி 2

பொருளாதாரப் பிரச்சினைகள் குறித்து

5

இந்தியாவில் சிறு நிலவுடைமைகளும் அவற்றுக்கான தீர்வுகளும்

வெளியீடு: இந்தியப் பொருளாதாரச் சங்க சஞ்சிகை
தொகுதி 1, 1918

இந்தியாவில் சிறு நிலவுடைமைகளும் அவற்றுக்கான தீர்வுகளும்

1

வேளாண்மையின் முக்கியத்துவம்

வாழ்க்கை நடத்த மேற்கொள்ளும் பொருளாதார வழிமுறைகளைப் பற்றிய ஆய்வு எப்போதும் முக்கியமானதாகும். இவை பொதுவாகத் தொழில் முறைகளாகவோ பொருளாதாரச் சேவைப் பணிகளாகவோ அமைகின்றன. நாம் முதலில் தொழில் முறைகளை மட்டும் பார்ப்போம். அவற்றை முதன்மைத் தொழில்கள், துணைத் தொழில்கள் என இருவகைப் படுத்தலாம். முதன்மைத் தொழில்கள் நிலம், மண், நீர் போன்ற இயற்கைப் பொருள்களிலிருந்து பயன்படு பொருள்களைப் படைக்க உதவுகின்றன. இவை வேட்டையாடல், மீன் பிடித்தல், கால்நடை பராமரித்தல், மரம் வெட்டும் தொழில், சுரங்கம் அகழ்தல் போன்ற வடிவங்களில் அமைகின்றன. இந்த முதன்மை அல்லது பொருளாக்கத் தொழில்கள் இரு வழிகளில் அடிப்படையானவை. இத் தொழில்கள் 1) மனிதன் வாழப் பயன்படும் மூலப் பொருள்களைக் கனிவளங்களிலிருந்து பிரித்தெடுக்க உதவுகின்றன; 2) உற்பத்தித் தொழில் அல்லது துணைத் தொழில்களுக்கான கச்சாப் பொருள்களைப் பிரித்தெடுக்க உதவுகின்றன. அதாவது டாக்டர் ஃபிராங்கிளின் (Dr. Franklin) மொழியில் விளக்குவதானால் அவை உருமாற்றமடைந்த (metamorphosed) பொருட் பண்டங்களைத் தருகின்றன. தேசிய முக்கியத்துவத்தைக் கருதும் போதும் முதன்மைத் தொழில்களின் பங்கு மிகப் பெரியதாகும். முதன்மைத் தொழில்களுள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது வேளாண்மை அல்லது பண்ணைத் தொழிலே (farming). இந்த வேளாண்மை மிகப் பழமையான தொழில் மட்டுமல்ல, மற்ற முதன்மை, துணைத் தொழில்கள் யாவும் சார்ந்துள்ள அடிப்படைத் தொழிலாகும். இத் தொழில், உணவு படைக்கும் தொழில் என்று குறிப்பிடுதல் ஒன்றே, இதன் அடிப்படைப் பிரச்சினைகளில் நாம் ஆழ்ந்த கவனம் செலுத்த வேண்டிய தேவையை முன்னணிக்குக் கொண்டு வரப் போதுமானதாகும். வேளாண்மையையே முழுமையாக நம்பி வாழ வேண்டிய நிலையில் உள்ள இந்தியாவைப் போன்ற நாடுகளைக் கருதும் போது இத்தொழிலின் இன்றியமையாமையை மேலும் விவரிக்க வேண்டியதில்லை. வேளாண் விளைச்சலைச் சார்ந்த வேளாண் பொருளாதாரப் பிரச்சினைகளாவன; எதை விளைவிப்பது? அடிப்படை உற்பத்திக் காரணிகளை (factors of Production) எந்த

விகிதத்தில் பயன்படுத்துவது, சாகுபடிக்கு உகந்த நில அளவு, நில உடைமை முறை போன்றனவாகும். நிலத்தின் சாகுபடி அளவு விவசாயத்தின் உற்பத்தித் திறனைப் பாதிப்பதால் அது மட்டுமே இந்த ஆய்வில் விவரிக்கப்பட்டுள்ளது.

2

இந்தியாவில் சிறு நிலவுடைமைகள்

சில நாடுகள் பெருமளவில் சிறு உடைமைகள் கொண்ட நாடுகளாகவும், பிற நாடுகள் பெருநில உடைமைகள் வாய்ந்தன வாகவும் உள்ளன. ஆதம் ஸ்மித் (Adam Smith) கூற்றுப்படி, குடும்பத்தின் முதல் பிள்ளை மட்டும் நிலச் சொத்துரிமை பெறும் பாதுகாப்புச் சட்டத்தைப் (Law of Primogeniture) பின்பற்றிய தாலும், குறிப்பாக ராணுவ வாழ்க்கையின் கெடுபிடிகள் பெரு நில உடைமைகளைத் திரட்டவும் பாதுகாக்கவுமான வாய்ப்புகளை நல்கியதாலும் பெரும் நிலவுடைமைகள் பல நாடுகளில் அடிப் படைப் பொருளாதார முறையாக அமைந்து விட்டன. மாறாக, பெரும்பாலும் அமைதி நிலவும் நாட்டில், குடும்பத்தினர் அனை வரும் நிலத்தைப் பங்கீட்டில் பிரித்துக் கொள்ளும் சட்டத்தை ஏற்றுக் கொள்வதால் சிறுநில உடைமைகள் தோன்றுகின்றன. அவர் கூறுகிறார்:

‘‘அசையும் சொத்துக்கள் போல, நிலமும் வாழ்க்கையை நடத்த அத்தியாவசியமானதாகவும் இன்பம் நுகரவும் தேவைப்படும் பொருட் சாதனமாக கருதப்படும்போது, இயற்கையான சொத் துரிமைப் பங்கீட்டுச் சட்டம், குடும்பத்தில் சந்ததியினர் அனை வருக்கும் குடும்ப நிலத்தைச் சமமாகப் பிரித்தளிக்கிறது. ஏனெனில் தந்தைக்குத் தனது மக்கள் அனைவரது வாழ்க்கைப்பாடும் இன்ப நுகர்வும் சம அளவில் இருக்க வேண்டும் என்பது முக்கியமான தாகிறது. சிறுநில உடைமைகளுக்கு வழி வகுக்கிறது ஆனால் நிலம், வெறும் வாழ்க்கைக்கான சாதனம் மட்டுமன்று, அதிகாரம் மற்றும் பாதுகாப்பின் குறியீடாகக் கருதப்படும்போது பிரிக்கப் படாமல் தனியொருவருக்கே அடுத்த தலைமுறையிலும் உரிமை யாக்கப்படுகிறது. ஒழுங்கு வரைமுறையற்ற அக்காலங்களில் நிலம் பல துண்டுகளாகச் சிதறுகையில் ஒவ்வொரு சிறுதுண்டையும் அண்டை அயலார் பறிக்க வாய்ப்பிருந்தது. எனவே நிலம் முற்றிலு மாகச் சிதைந்து பாழ்பட்டது. ஆகவே, பெரு நில உடைமைகள் குடும்பத்தில் முதல் குழந்தைக்கு மட்டும் நிலச் சொத்துரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் உரிமை மாற்றம் செய்யப்பட்டன. [இது பெரு நில உடைமைகள் உருவாகிப் பாதுகாக்கப்பட வழி வகுத்தது].’’[1]

---

1 தேசங்களின் செல்வம் புத்தகம் III அதி II

எனவே, இங்கிலாந்து பெருநில உடைமை நாடு. புரட்சிக்குப் பிறகு பிரான்சு சிறு நில உடைமைகளின் நாடாயிற்று. ஹாலந்து, டென்மார்க் நாடுகளுக்கும் இது பொருந்தும். இந்தியாவைப் பற்றி எண்ணும்போது கீழ்க்காணும் பட்டியலில் உள்ள அளவு நில உடைமைகள் 1896-97-லும் 1900-01-லும் தனித்தனியாகவும் நேரடியாகவும் நிலவியதாக அறிகிறோம்.

சராசரி நில உடைமைப் பரப்பு ஏக்கரில் தரப்பட்டுள்ளது

ஆண்டு	அஸ்ஸாம்	பம்பாய்	மத்திய மாகாணங்கள்	சென்னை
1896-97	3.37	24.07	17	7
1900-01	3.02	23.90	48	7

பரோடா ராஜ்ஜியத்திலிருந்து மிக அண்மைக் காலத்தைச் சார்ந்த மிகச் சரியான விவரங்கள், ஆனால் குறுகிய பரப்பளவைச் சார்ந்தவை தாம், நமக்குக் கிடைத்துள்ளன.[2] கீழ்வரும் பட்டியலில் மேற்குறிப்பிட்ட மாநில நில உடைமைகளுக்கான புள்ளி விவரங்கள் பைகாக்களில் தரப்படுகின்றன.[3] (8 பைகா = 5 ஏக்கர்)

மாவட்டம்	மொத்த வேளாண்மை நிலம்	நில அளவைப் பிரிவு எண்.	விவசாயிகள் எண்ணிக்கை	விவசாயி சராசரி உடைமை	நில அளவைப் பிரிவில் உள்ள சராசரி பரப்பு
பரோடா	17,17,319	4,30,601	107,638	15-19-2	4
காடி	25,13,982	5,89,687	141,145	17-16-5	4¼
நவோசரி	10,46,176	2,16,748	52,652	19-17-8	4
அம்வேலி	9,72,040	55,635	17,214	36-9-7	3¼
மொத்தம்	82,49,517	12,92,671	318,649	17-10-10	3⅞

புனாவுக்கருகில் அமைந்த பிம்பாலா சௌதாகர் என்ற கிராமத்தின் சிறு நில உடைமைகள் குறித்து மேலும் விவரமாக டாக்டர் எச். எஸ். மான் என்பவரும் அவரது உடன் பணிபுரிந்த

2. பரோடா ராஜ்யத்தில் சிறிய — சிதறிக்கிடக்கும் நிலஉடைமைகளைத் திரட்டும் பொருட்டு அமைக்கப்பட்ட விசாரணைக்குழு அறிக்கை, 1917 சுருக்கமாக இனி ப.இ.அ.

3. மேலது பக். 3

ஆய்வாளர்களும் ஆய்வு நடத்தினர். கீழே உள்ள பட்டியலில் அந்தக் கிராமத்தின் நில உடைமையளவுகள் தரப்படுகின்றன.[4]

	20 ஏக்கர்களுக்கு மேல்	10 முதல் 20 ஏக்கர்கள் வரை	5 முதல் 10 ஏக்கர்கள் வரை	3 முதல் 5 ஏக்கர்கள் வரை	2 முதல் 3 ஏக்கர்கள் வரை	1 முதல் 2 ஏக்கர்கள் வரை	30 முதல் 40 குந்தாக்கள் வரை	20 முதல் 30 குந்தாக்கள் வரை	15 முதல் 20 குந்தாக்கள் வரை	10 முதல் 15 குந்தாக்கள் வரை	5 முதல் 10 குந்தாக்கள் வரை	5 குந்தாக்களுக்குக் கீழ்
ஒரே அளவு வயல் எண்ணிக்கை	1	7	21	25	67	164	75	136	71	57	59	25

(40 குந்தாக்கள் = 1 ஏக்கர்)

இந்தப் பட்டியலின் முகடு நில உடைமை (Modal holdings) 1 முதல் 2 ஏக்கர்களாகும். முகடு நில உடைமை என்பது ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சித் தொகுப்பின் உயர்ந்தபட்ச நிகழ்ச்சி அடுக்கமைந்த (Frequency) புள்ளி விவரச் சராசரியாகும்.

இந்தப் பட்டியலிலிருந்த பம்பாய் மாநில 25.9 ஏக்கரிலிருந்து பிம்பாலா சௌதாகர் கிராமத்தின் 1 முதல் 2 ஏக்கர் வரை சராசரி சிறு நில உடைமை வேறுபடுவதைக் காணலாம்.

நிகழ்ச்சியடுக்கு என்பது அந்நிகழ்ச்சி குறிப்பிட்ட புள்ளியில் எத்தனை தடவை நிகழ்கிறது என்ற எண்ணிக்கையைக் குறிக்கும்.

இந்தியாவில் இந்தச் சிறு நில உடைமையின் மிகச் சிறிய அளவுதான் வேளாண்மைத் துறை வளர்ச்சிக்குப் பெருமளவு குந்தகம் ஏற்படுத்துகிறது. சிறு நில உடைமைகளின் தீமைகள் ஐயத்திற்கிடமின்றிப் பலதரப்பட்டவை. இந்தச் சிறு நில உடைமையும் ஒரே இடத்தில் நிலச்சிதறாக இல்லாமல் செறிந்த உடைமையாக அமைந்தால் அவ்வளவு தீமை ஏதும் தராது. ஆனால் அவை அப்படி அமையவில்லை. துண்டு துண்டாகச் சிதறிய நில உடைமையாக அமைந்துள்ளன. ஒரு விவசாயியின் நில உடைமை வருமான வரிவிதிப்புப் பொறுத்தவரை ஓரிடத்தில் நிலையில் இருப்பதால் கருதப்படுகிறதே தவிர உண்மையில் அது பல பகுதி துண்டங்களாகக் கிராமம் முழுவதும் பலர் நிலங்களுக்கு இடை இடையே சிதறியுள்ள இந்த நிலங்கள் எந்த நிலையில் சிதறியுள்ளன என்பதை நிலப்படத்தில் தான் காட்ட முடியும். பண்ணையில் எத்தனை நிலச்சிதறல்கள் உள்ளன என அறிந்து படம் வரைந்து தர இயலாது என்பதால் இதோடு நாம் நிறைவடைய வேண்டியது தான். நிலச்சிதறல்கள் ஒவ்வொரு நில உடைமையும் சிதறியுள்ளது என்பதைத் தெளிவாகக் காட்டும். ஆனால் இந்தியாவில் அமைந்த

---

4. தக்காணக் கிராமத்தில் நிலமும் உழைப்பும், 1927 பக். 48

சிறு நில உடைமைகள் குறித்த இந்த வகைப் புள்ளிவிவரத்தை யாரும் தொகுக்கவில்லை. ஆனால் மாண்புறு திரு. ஜி. எஃப் கீட்டிங் (G. F. Keatings) 1916-ல் அரசிற்கு அனுப்பிய குறிப்பில்[5] பம்பாய் மாநிலத்தில் உள்ள மாவட்டங்களிலிருந்து திரட்டிய வகைமை நேர்வுகளில் (typical cases) இத்தகைய உடைமைச் சிதறல் அமைவு தொடர்பான விவரங்களைச் சமர்ப்பித்துள்ளார். தெளிவாகப் புரியும் முறையில் இவரது தகவல்கள் கீழ் உள்ள பட்டியலில் தொகுத்துத் தரப்படுகின்றன.

வகை I கி.-ஷிர்க்வான் வ.-ரத்னாகிரி மா-ரத்னாகிரி		வகை II கி.-பத்லாபூர் வ.-கல்யாண் மா-தானா		வகை VI கி.-காரா வ.-மாவல் மா-பூனா		வகை VII கி.-அல்தான் வ-கோர்சி மா-சூரத்		வகை IX துரத் மாவட்டம்		வகை X கைரா மாவட்டம்		வகை XII கி-லாகர்னா வ-கோர்கவான் மா-சதாரா	
பண்ணை உடைமையின் பரப்பு	தனிப் பகுதிகள் எண்ணிக்கை	பண்ணை உடைமையின் பரப்பு	தனிப் பகுதிகள் எண்ணிக்கை	பண்ணை உடைமையின் பரப்பு	தனிப் பகுதிகள் எண்ணிக்கை	பண்ணை உடைமையின் பரப்பு	தனிப் பகுதிகள் எண்ணிக்கை	பண்ணை உடைமையின் பரப்பு	தனிப் பகுதிகள் எண்ணிக்கை	பண்ணை உடைமையின் பரப்பு	தனிப் பகுதிகள் எண்ணிக்கை	பண்ணை உடைமையின் பரப்பு	தனிப் பகுதிகள் எண்ணிக்கை
ஏ.கு.		ஏ.கு.		ஏ.கு.		ஏ.கு.		ஏ.கு.		ஏ.கு.		ஏ கு	
3-34½	3	48-6	53	60-0	27	0	9	1-0	14	6213	27	33	6
0-33	2	67-0	38	2-27	8	85-0	8	13-0	18	65-34	23	23	7
0-20	3	1-9	6	2-31	5	26-9	8	22-0	20	36-16	16	36	3
1:14	5	6.30	8	16-6	7	...	...	3-6	4	7-9	5	22	10
1:30	5	24-0	17	2.35	6	...	...	5-0	7	5-26	5	...	...
1:10¾	4	...	...	...	...	...	...	1-26	9	13-16	6	...	...
6:33	9	...	...	...	...	...	...	0-26	9	28-4	15	...	...
3:29¾	7	...	...	...	...	...	...	...	...	12.10	8	...	...
2.:20½	2	...	...	...	...	...	...	...	...	12-7	3	...	...
3-35¾	3	...	...	...	...	...	...	...	...	5-26	5	...	...
...	...	....	...	...	...	...	...	...	...	5-34	5	...	...
...	...	...	...	...	...	...	...	...	...	3-39	3	...	...

(பட்டியல் அடிக்குறிப்பு: ஏ-ஏக்கர் கு-குந்தாக்கள் கி-கிராமம் வ-வட்டம் மா-மாவட்டம்)

இந்தச் சிறிய மற்றும் சிதறிய சிறு நிலங்கள் நமது இந்தத் தேசியத் தொழில் நிலைமை குறித்து ஆர்வத்தை உருவாக்கக் காரணமாகி விட்டன. இந்த உணர்ச்சி மிக்க சூழலை, ஒப்பீட்டுப் புள்ளிவிவரங்கள் மேலும் கிளறச் செய்துள்ளன. இந்தியப் பொருளாதார வாழ்க்கைக் குறித்த முக்கியமான, ஆனால், துயரந் தோய்ந்த இரு உண்மைகளாவன, (1) இந்தியா பேரளவில் ஒரு மாபெரும் வேளாண்மை நாடு; (2) இதன் வேளாண்மை உற்பத்தித் திறன் மிக மிகக் குறைந்தபட்சமானது, என்பனவாகும்.

---

5. சிறந்த இக்குறிப்புக்காக ஆசிரியர் நன்றி கூறுகிறார்.

(1) தொழில் புள்ளி விவரம்

நாடு	இங்கிலாந்தும் வேல்சும்	அயர்லாந்து	ஆஸ்திரியா	பெல்ஜியம்	பலிகேரியா	டென்மார்க்	பிரான்ஸ்	ஜெர்மனி	ஹாலந்து	ஹங்கேரி	இத்தாலி	ரஷ்யா	சுவிட்சர்லாந்து	இந்தியா	அமெரிக்கா
விவசாய மக்கள் தொகை சதவீதம்	15.3	44.7	60.9	20.7	82.5	48.2	42.7	35.2	30.7	69.7	59.4	58.3	30.9	71.5	33.3

(2) விளைச்சல்—ஏக்கர் ஒன்றுக்குப் பவுண்டுகள்

நாடு	பிரிட்டன்	கனடா	நியூசிலாந்து	ஆஸ்திரியா	எகிப்து	பிரான்ஸ்	ஜெர்மனி	ஹங்கேரி	ஜப்பான்	அமெரிக்கா	துருக்கி	இந்திய மாநிலங்கள்					
												உ. பி.		பஞ்சாப்	பம்பாய்	பர்மா	
கோதுமை	1973	1054	1722	1150	1634	1172	1796	1056	1176	..	1318	850	555	555	510	322	
மக்காச் சோளம்		3487	3191	1135	2059	1097	–	1489	1525	–	1372	1100	735	766	–	–	

இந்த இரு உண்மைகளும் மிகவும் துயரம் தருபவையாக அமைந்துள்ளதாய் ஒவ்வொரு நில உற்பத்தித் திறன் குறைவதற்கான காரணத்தை மக்களிடையே வினவ வைத்தது. எனவே நிலம் மேலும் சிதறுண்டு துண்டு துண்டாக போகாதபடி பார்த்துக் கொள்வதில் கவனஞ் செலுத்த வேண்டியதாயிற்று. நிலம் பெரிதாக்கவும் நிலச்சிதறல்கள் இன்று ஒன்று சேர்க்கவும் எடுக்கும் முயற்சியால் அதன் உடன் விளைவான உயர் உற்பத்தித் திறனும் உருவாகுமென எதிர்பார்க்கப்பட்டது.

3

சிறு நில உடைமைகளை ஒன்று திரட்டல் அல்லது செறியச் செய்தல்
(Consolidation)

சிறு நில உடைமைகளை ஒன்று திரட்டி ஒரே இடத்தில் அமையும்படி செய்வது நடைமுறைப் பிரச்சினை எனில், சிறு உடைமைகளைப் பேரளவாக்குதல் (enlargement) ஒரு கோட்பாட்டியலான (theoretical) பிரச்சினையாகும். மேலும் பின்னது, நிலவுடைமை அளவு குறித்த கோட்பாடுகள் வகுப்பது தொடர்பான விவாதத்துக்கு நம்மை இட்டு செல்லும். பேரளவாக்கல் பிரச்சினையைச்

சற்று தள்ளி வைத்துவிட்டு சிறு நில உடைமைகளை ஒன்று திரட்டி ஒருங்கிணைக்கும் பிரச்சினையை மட்டும் எடுத்துக் கொள்வோம். இதிலும் இரண்டு அடிப்படைத் தீர்வுகளை எதிர் நோக்கியுள்ளது. அவை (1) தற்போதுள்ள துண்டு துண்டான சிறு நிலஉடைமை களை எப்படி ஒன்று திரட்டி ஒரே இடத்தில் அமையும்படி செய் வது. (2) ஒரு முறை ஒன்றுபடுத்திய நிலத்தை மீண்டும் தவறாமல் அதே அளவில் நிலைநிறுத்துவது எப்படி என்பனவே. இப்போது இவையிரண்டையும் ஒன்றொன்றாக எடுத்துக் கொள்வோம். நிலவுடைமையைப் பிரிப்பது அல்லது பங்கீடு செய்வது, ஒவ் வொரு நில அளவை எண் நிலத்தையும் துண்டாடித்தான் செய்ய வேண்டும் என்பது இல்லை. ஆனால் நடைமுறையில் அப்படித் தான் நடைபெறுகிறது. காரணம், இறந்தவரின் மக்களில் ஒவ் வொருவரும் ஒவ்வொரு நில அளவை எண் புலத்திலும் தமக்கென ஒரு பகுதி கேட்பதேயாகும். மாறாக, அவர்கள் தனித்தனி முழு நில அளவை எண் பிரிவுகளைத் துண்டாடாமல் தமக்குள் கூடிய வரை பலவற்றிலும் பங்கு கிடைக்குமாறு ஒதுக்கிக் கொள்ளலாம். ஆனால் இப்படி நில அளவைப் புலம் வாரியாக ஒதுக்கிக் கொள் ளாமல், ஒவ்வொரு நில அளவைப் புலத்திலும் பங்கு கேட்டு எல்லாவற்றையும் துண்டாடிச் சிறதச் செய்கின்றனர். இந்தப் பங்கீடு, பங்கீட்டு நெறிமுறையின் நேர்மையை நிறைவு செய் தாலும், ஒரு காலத்தில் ஐரோப்பாவில் நடந்தது போலவே இந்திய வேளாண்துறை உற்பத்தித் திறனைப் பெரிதும் குறைத்து விடு கிறது. இது உரம், உழைப்பு, கால்நடைப் பயன்பாடு, வரப்பு, எல்லைக் கல்களில் அமையும் நிலப்பகுதி ஆகியவற்றை வீணடிக் கிறது. பயிர் விளைச்சலைப் பாதுகாத்தலைத் தொல்லை மிக்க தாக்கிக் கிணறுகளைச் சரியாகப் பயன்படுத்தாமலும் உழைப்பு குறைக்கும் கருவிகளைப் பயன்படுத்த வொட்டாமலும் செய்கிறது. பயிர்மாற்றம் செய்வதும் அரிதாகிறது. சாலை போடுவது, நீர்க் கால்வாய் அமைப்பது போன்ற கூடுதல் செலவுகளை ஏற்படுத்தி விளைச்சல் செலவை அதிகமாக்குகிறது. இதனால் உற்பத்தி அடக்க விலையைக் கூட்டி விடுகிறது. நிலத்தை ஒன்று திரட்டிப் புதிய பாத்திகள் அமைக்கும்போது (restripping) விவசாயப் பெரு மக்களுக்குத் துண்டு போடுவதால் ஏற்படும் மேற்கூறிய கேடுகளை எடுத்துரைக்க வேண்டும். ஒன்று திரட்டலின் போது பலமுறை களில் புதிய பாத்திகளை அமைக்கலாம். என்றாலும் அனைத்து முறைகளுமே நடைமுறைக் கேற்றனவாக அமைவதில்லை. விருப்பப் பரிமாற்றம் மூலம் நிலஉடைமையை ஒன்று சேர்ப்பது எளிது; ஆனால் இதனை நடைமுறைப்படுத்துவது கடினம். ஆனால் கட்டுப்படுத்திய நில விற்பனை உரிமை நன்கு உதவுகிறது. இந்த முறையில் உடமையாளர் விற்று விட்டதனால் அல்லது கடன் பாக்கி நிலுவைக்காக பறிமுதல் செய்த ஒரு நில அளவை எண்ணின் ஒரு பகுதி ஏலத்துக்கு விடப்படுகிறது. ஏனெனில் இத்தகையோரது நில விற்பனை உரிமை தவிர்க்கப்படுகிறது.

மேலும் நிலம் ஒன்று சேர்தலை விரைவுபடுத்த இந்தத் துண்டு நிலங்களுக்கு அருகில் உள்ள உழவர்களுக்கு அருகிலுள்ள துண்டு நிலங்களை முன் வந்து விற்கும் உரிமையை வழங்கலாம். இந்த முறைகளும் ஒன்று திரட்டுதலுக்கு வேண்டிய நிலையை ஓரளவே உருவாக்கும். துண்டாடலின் தீமை மிகப்பெரியது என்பதால் ஒரு ஒருங்கிணைந்த எளிய ஒன்று திரட்டும் முறையை உருவாக்க வேண்டும். விவசாயிகளில் மூன்றில் இரு பங்கினர் கிராமத்தின் பாதிக்கும் மேலான நில உடைமைகளைச் சொந்தமாகக் கொண்டிருந்தால் ஒன்று திரட்ட அவர்கள் அரசுக்கு விண்ணப்பத்தால் கிராம நிலப் பாத்திகளை மாற்றி அமைக்கக் கட்டாய ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது. இந்தக் கட்டாய மறுபாத்தியீட்டு முறையை இரு நெறிமுறைகளில் நிறைவேற்றலாம். அவை, (1) 'பொருளாதார அலகு' முறை. (2) 'மூல உடைமை உரிமை முறை' என்பனவாகும். இந்த இரு நெறிமுறைகளின் மேம்பாட்டைப் பற்றி பரோடா குழு கீழ்வருமாறு கருத்து தெரிவிக்கிறது.[6]

''முதல் கோட்பாட்டு முறையில் ஒவ்வொரு உடைமையின் மதிப்பும் கணக்கெடுக்கப்படுகிறது; பிறகு பழைய வரப்புகள் அழிக்கப்படுகின்றன. பின்னர் பொதுத்தேவைக்கான நிலங்கள் பிரித்து ஒதுக்கப்படுகின்றன. மிச்சமுள்ள நிலப்பகுதி பாத்தி போடப்படுகிறது. ஒரு குடும்பம் முழுதும் முழு நேர வேலை செய்தால் அவர்களுடைய பாதுகாப்புக்குத் தேவையான அளவு நிலப்பகுதி வட்டார மண்தன்மை, உழுதிறன் நிலைமைக்கேற்ப தனிப் பொருளாதார அலகாகப் பிரிக்கப்படுகிறது. புதிய வயல்களைப் பழைய சொந்தக்காரர்களுக்கே ஏலம் மூலம் விற்கலாம். விற்கும் போது நிலச் சொந்தக்காரர்கள் அதிக அளவில் நிலம் பெறும்படிப் பார்த்துக் கொள்ளுதல் மிகவும் முக்கியமானதாகும். விற்பனையில் பெற்ற பணத்தைச் செலவுக்கு ஒரு பங்கு ஒதுக்கிவிட்டு, இதற்கு அரசும் குறிப்பிட்ட பங்கு கொடையாகத் தந்து, மிச்சப் பணத்தைப் பழைய உடைமைச் சொந்தக்காரர்களுக்கு விகிதமுறையில் பிரித்துப் பங்கீடு செய்யலாம். மற்றொரு வழி, கிராமநிலங்கள் முழுவதையும் விலைக்கு வாங்கி, பிறகு புதிய பாத்தியிட்டு ஏலம் மூலம் விற்பதை, நகர மேம்பாட்டு அறக்கட்டளைகள் அல்லது அரசு புதிய சாலைகளை அமைக்க நகரங்களில் செயல்படுவது போலச் செயல்படுத்துவதாகும். இந்த வழியை வேளாண் நிலவளர்ச்சிக்கு நாம் பரிந்துரைக்க முடியாது. ஏனெனில், இம்முறை நிலப்பறிமுதலுக்கு வழிவகுத்துப் பல சிறுநில உடைமையாளர்களை அப்புறப்படுத்தி அவர்களைப் பலவித இன்னலுக்கு ஆளாக்கிவிடும்.''

''இரண்டாவது கோட்பாட்டு முறைப்படி மறுபாத்தியிட முடிவெடுத்ததும் ஒவ்வொரு விவசாயியின் பெயரையும் நில அளவை

6. ப. கு. அ. பக். 35.

யும் குறித்து, சந்தை நிலவரப்படி விலை மதிப்பிட்டு, வரிசைப் படுத்தி, ஒரு பட்டியல் தயாரிக்க வேண்டும். பிறகு மறுபாத்தி யிட்ட நிலம் ஒவ்வொரு விவசாயிக்கும் பழைய நில உடைமையின் அளவுக்கு மாற்று நிலம் பகிர்ந்தளிக்கப்படும். இதன் மதிப்பு கூடிய வரை பழைய நில உடைமைக்குச் சமமாக உள்ளபடி பார்த்துக் கொள்ளப்படும். அல்லது சம ஈட்டுத்தொகை காசாக வழங்கிச் சரிகட்டப்படும். இந்த முறையில் எல்லா உழவர்களுக்கும் நிலம் கிடைக்கும். பழைய சிதறிய துண்டு நிலங்களுக்குப் பதிலாக அதன் ஒட்டு மொத்த அளவுடைய ஒரே நிலம் கிடைக்கும். இதன்படி மிக சிறிதளவே நிலமுடையவர் சிலர் உழவராகத் தொடர்ந்து நீடிக்க முடியாது. அவர்கள் அவரது துண்டு நிலங்களை இழந்திட நேரிடும். ஆனால் அவர்களும் அவரது நிலத்துக்கேற்ற பண மதிப்பை ஈடாகப்பெறுவதால் நல்ல பலனை அடைகின்றனர் என்று கூறலாம்.''

பரோடா குழு இரண்டாம் முறையைச் சிறந்ததெனப் பரிந்துரைக்கிறது. ஏனெனில்,

''மிகச் சிறிய துண்டுநில உரிமையாளர்களைத் தவிர, பிற எல்லா உழவர்களும் உரிய நிலம் பெற இம்முறை வழிவகுக்கிறது. எனவே பெரும்பாலான உழவர்கள் நில நீக்கம் செய்யப்பட்டு நிலத்திலிருந்து துரத்தப்படுவதில்லை. இம்முறை மிகச் சிறிய செல்வாக்கற்ற உழவரும் நலமுறச் செய்கிறது. அவரது நிலையை மேம்படுத்திக் கொள்ள வாய்ப்பளிக்கிறது. ஒவ்வொருவரும் தமது பழைய சிதறுண்டு கிடந்த துண்டு நிலங்களுக்கு இணையான மதிப்புடைய, அதே அளவுடைய நிலப்பகுதியை ஈடாகப் பெறு கின்றனர். இங்ஙனம் பழைய நிலத்துண்டால் ஒழிந்து விவசாயி களின் நிலங்களின் நிலச் சிதறல் குறைக்கப்படுகிறது.[7]

நிலத்தின் சிதறல்களை ஒன்றாக்கம் பற்றிப் பேராசிரியர் எச். எஸ். ஜேவான்ஸ் (Prof. H. S. Jevons)[8] பின்வருமாறு கூறு கிறார் :

''கிராம நிலங்களை மேல் கூறியபடி ஒருங்கிணைத்து நிலச் சீரமைப்பு செய்யும்போது வழிகாட்டும் நெறிமுறைகளாகப் பின் வரும் கூறுபாடுகளைக் கருத்தில் கொள்ள வேண்டும். முதலில் எந்தவிதக் கட்டாயமும் திணிக்கப்படக் கூடாது. குறிப்பிட்ட பகுதி யில் வாழும் உழவர்களில் பாதிக்கு மேற்பட்டவர்கள் ஒப்புக் கொண்டாலொழிய எந்தவித மாற்றமும் அவர்கள் மீது வலுக் கட்டாயமாக நடைமுறைப் படுத்தக் கூடாது. இந்த நிலைமைகள் ஒரு பகுதியில் முழுமையாக நிறைவுற்றால்... அரசு சட்ட அடிப் படையில் பெரும்பான்மையின் முடிவைச் சிறுபான்மையினர்

7. ப. கு. அ. பக். 35

8. ஐக்கிய மாகாணங்களில் விவசாய நில உடைமைகளை ஒன்று திரட்ட 1918. பக். 45-46. பிரதி அனுப்பிய பேராசிரியர் ஜேவான்ஸூக்கு ஆசிரியர் நன்றி.

ஒப்புக் கொள்ள வைக்க ஆணை பிறப்பிக்க வேண்டும். இரண்டாவதாக... இந்த மறு சீரமைப்புச் செயல்பாட்டுச் செலவு, மிக மிக குறைந்த அளவில் அமையும்படி முடிந்தவரை பார்த்துக் கொள்ள வேண்டும். மூன்றாவதாக... தொடக்க நிலையில் சோதனை நிலைமையாக இந்தச் சீரமைப்பைச் செயல்படுத்தி, மின்சக்தியோடு ஒத்துழைத்துப் பல்வேறு மாற்ற திட்டங்களைச் சில ஆண்டுகளுக்கு வகுத்துக் கொடுத்து அதில் மிகச் சிறந்த திட்டத்தைத் தேர்ந்தெடுக்க உரிமையளித்த பிறகு அந்தச் சிறந்த சீரமைப்பு முறைக்குச் சட்ட வடிவம் அளிக்க வேண்டும். நான்காவதாக... சீரமைப்பு நிகழும் கிராமங்களில் நிலக்குத்தகைச் சட்டத்தில் மாற்றம் செயயும் போக்கை வழி முறைப்படுத்தத் தயாராக இருக்க வேண்டும். மேலும் முழுமையை உருவாக்கும் வகையில் ஐந்தாவதாக ஒரு கோட்பாட்டைக் கூற விழைகிறேன். மறு சீரமைப்பு சமமான முறையில் பகிர்வை நடைமுறைப்படுத்துவதோடு பழைய நிலஉழவு உரிமையை இழப்பவர்களுக்குப் போதுமான ஈட்டுத் தொகையை வழங்க வேண்டும்.''[9]

கட்டாயமாக ஒன்று திரட்டும் வழிமுறை பற்றிக் கூறும் போது பேரா. ஜேவான்ஸும், பரோடா குழுவும் நிலச்சிதறல்களை ஒன்றாக்குதல் தொடர்பான விண்ணப்பங்களைப் பெறவும், செயல்படுத்தவும், நில உரிமை மாற்றப் பிரச்சினைகளை விசாரித்து உரிய நீதி வழங்கவும் தனி அதிகாரம் வாய்ந்த ஆணையர்களை (Commissioners) அமர்த்த வேண்டும் எனப் பரிந்துரைப்பதோடு, ஒரு தனி உழவர் தனக்கு அநீதி ஏற்பட்டு விட்டதை நீதி மன்றத்தில் தாக்கீது செய்து நீதிபெறும் உரிமைக்கும் இடந்தர வழிவகுக்க வேண்டும் எனப் பரிந்துரைக்கின்றனர்.

இங்ஙனம் மறுசீரமைத்து நிலச்சிதறல்களை ஒருங்கிணைத்துப் பின்னர் சிதறாமல் காப்பது சட்டமன்றத்தினர் கடமையாகும். இந்து, முகம்மதிய சொத்து வாரிசுரிமைச் சட்டம்தான் நில உடைமையைச் சிதைக்கிறது என்பது அனைவரும் ஒப்புக் கொண்ட உண்மையாகும். ஒரு முஸ்லிம் அல்லது ஒரு இந்து இறந்து விட்டால் அவரது சொத்து அவரது வாரிசுகள் அனைவருக்கும் சமமாகப் பிரித்து உரிமையாக்கப்பட வேண்டும் எனச் சட்டம் சொல்கிறது. எனவே தற்போது சிதறல் இன்றி ஒன்று திரட்டிய நிலமும் இந்தச் சட்டத்தினால் சிதறுண்டு போகாமல் நிலைத்து

9. இந்த இரண்டு வாரிசுரிமை மாற்றச் சட்டமுறைகளைத் தவிர தந்தையின் விருப்பத்துக் கேற்ப தனது சட்டப்படியான வாரிசுகளுக்கு முறைப்படியான போதுமான நில உடைமைகளைப் பகிர்ந் தளிப்பதோடு வேறுயாருக்கு வேண்டுமானாலும் உரிமைப்படுத்தும் முறையும் உள்ளது. இத்தகையதொரு முறைப்படி ஜெர்மனியில் வாரிசுரிமைச் சட்டங்களால் நிலஉடைமைத் துண்டாடப்படுவதைத் தவிர்க்க ''அனர்பென்ரெக்ட்'' சட்டத்தைக் கொண்டு வந்தனர். இது ஒரு சிலவற்றில் பரோடா குழுவின் அறிக்கையையும் மறு சிலவற்றில் மாண்புமிகு திரு. கீட்டிங்ஸ் அறிவுரைகளையும் முன்முகமாகக் கொண்டிருந்தது. இதுபற்றி மேலும் விரிவாக என். ஜ. பியர்சன் அவர்கள் எழுதிய ''பொருளியல் நெறிமுறைகள்'', தொகுதி-2இல் பக். 286-90 ஆகியவற்றில் காண்க.

நிற்க முடியாது. சீரமைத்த நிலத்துக்கும் இந்தச் சட்டப் பாது காப்பை மாற்றாமல் நல்குவது வேண்டாமா என்பது சட்ட மன்றத்தினர் முடிவுக்கு விடப்படுகிறது.

ஆனால் நடப்பில் உள்ள சொத்து வாரிசுரிமைச் சட்டத்தை எப்படி மாற்றியமைப்பது? சமப்பங்கீட்டு உரிமைச்சட்டத்துக்குப் பதில் முழு முதல் வாரிசு மட்டும் நிலம் பெறும் சட்டத்தைக் கைக்கொள்ளலாமா?

பரோடா குழு பின்வருமாறு எண்ணுகிறது

''இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டியது இங்கு முக்கியமில்லை. அதைவிட முக்கியமானது என்னவென்றால் ஒரு குறிப்பிட்ட அளவுக்குக் கீழாக நிலம் சிதறுண்டு போகும்படி பிரித் தளிக்கக் கூடாது என்பதுதான். இந்த ஏற்பாடும் வேளாண் மையைச் சிறப்புடன் நடத்துவதற்காகவே. நாம் சட்டப்படியாக இறுதி செய்த நில அளவினும் கீழே போகாத வரை நில உடைமையைப் பிரித்தளிப்பதை மறுக்கப் போவதில்லை. ஆனால் ஒரு நிலத்தை மேலும் பிரிப்பது போதிய அளவுக்குக் குறைந்தால் (uneconomic) பொருளாதார ரீதியில் அனுகூலமாக இருக்காது எனவே பிற குடும்ப உறுப்பினர்கள் குடும்ப நிலத்தைத் துண் டாடும்படி வலுக் கட்டாயப்படுத்தாமல் பார்த்துக் கொள்வது சட்டத்தின் பணியாகும். இதைப் பிரிப்பதைக் காட்டிலும் ஒருவர் மேலாண்மையில் பொதுவில் பயிரிடலாம் அல்லது ஒருவருக்கு மட்டுமே உரிமையை ஒப்படைத்து விட்டு மற்றவர்கள் ஈட்டுத் தொகையைப் பெற்றுக்கொள்ளலாம்.[10]

வாரிசுகளுக்கிடையே அசையாச் சொத்தைப் பிரிக்காமல், எந்த வாரிசு அதிக ஈட்டுத் தொகையைத் தரத் தயாராக உள்ளாரோ அவரிடம் தருவது அல்லது எவரும் நல்ல ஈட்டுத்தொகையைத் தர முன்வராதபோது நல்ல ஈட்டுத்தொகை தரக்கூடிய வெளியாரிடம் விற்றுவிடும் உரிமையும் அந்த ஈட்டுத்தொகையை வாரிசுகள் சமமாகப் பகிர்ந்து கொள்ளும் முறையும் 1893 ஆண்டைய இந்தியப் பங்குப்பிரிவினைச் சட்டம் எண் 4 இன் கீழ் ஏற்கப் பட்டுள்ளன. சட்டம் கீழ்வருமாறு:

''பங்குப் பிரிவினைக்கான வழக்கில், இந்தச் சட்டம் நடை முறைக்கு வருவதற்கு முன்பாக, பங்குப் பிரிவினைக்கான தீர்ப்புரை (decree) வழங்கப்பட்டிருந்தால் தீர்ப்புரையில் தொடர்பு கொண்ட சொத்தின் தன்மை, வழக்கு மன்றத்தாலோ, பங்குதாரர் அல்லது வாரிசுகளில் ஒருவராலோ பலராலோ அல்லது வேறு சூழ்நிலை யாலோ, பிரிவினையை உகந்த நிறைவளிக்கும் வகையில் வசதிபடச் செய்ய முடியாதபடி அமைந்திருந்ததென்று கருதும்படி நேரும்போது அந்தச் சொத்தை விற்றுப் பங்குதாரர் அல்லது

10. ப. கு. அ. பக். 26

வாரிசுகளுக்குப் பிரித்து தருவதுதான் நலம் பயக்கும் என்றால் அந்த வாரிசுதாரர்களோ, அல்லது வழக்குமன்றம் சரியெனக் கருதினால் வழக்குமன்றமோ, அல்லது வாரிசுதாரரில் ஒருவரோ பலரும் கூட்டாகவோ அந்தச் சொத்தை விற்றுத் தமக்குள் பகிர்ந்துக் கொள்ள இந்தச் சட்டம் வழிகாட்டுகிறது''.

சொத்து வாரிசுரிமைச் சட்டத்தை மாற்றி அமைக்கும் அறி வுரையை ஏற்றுக் கொண்டால், உரிமைச் சட்ட நடவடிக்கை நெறித்தொகுப்பை (Civil Procedure Code) ஏற்றபடி சட்டத் திருத்தம் செய்து ஒரு குறிப்பிட்ட நிலத்தைப் பிரிவினை செய்து தரும்படி வழக்கு போடப்பட்டால், அப்பிரிவினை நில அளவை. பொருளாதார நில அலகினும் (economic unit) குறைவுபடுத்தி னால் பொருளாதாரப்படி அனுகூலப்படி உகந்ததல்ல என மறுத்துத் தீர்ப்பு வழங்கும் அதிகாரத்தை நீதிமன்றத்துக்கு வழங் கலாம்.

பம்பாய் மாகாண வேளாண்மைத்துறை இயக்குநர் மாண்புமிகு ஜி. எஃப். கீட்டிங்கஸ் அவர்கள் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற் கான மற்றொரு முறையை அறிவுறுத்துகிறார். இவரது மசோதா வின் உரிய நோக்கங்கள் மற்றும் காரணங்ளில் பின்வருமாறு கூறுகிறார் :

''4.... இந்தச் சட்டத்தின்முதல் நோக்கம் அல்லது குறிக்கோள் குறிப்பிட்ட நிலஉடைமையாளர்கள் விரும்பினால் தங்களது நிலங்களைப் பிரிவினைக்கு உள்ளாக்காமல் இருக்க வழி வகை செய்வதோடு அவற்றை ஓரிடத்தில் நிரந்தரமாக ஒருங்கு திரட்டிக் கொள்ளவும் வழி வகுப்பதுமாகும். மேலும் அதிகாரப் பொறுப் பில் உள்ள அரசு, இதுவரை பயன்படுத்தாத நிலங்களை இதே போல ஒன்று திரட்டி ஒருங்கிணைக்க இச்சட்டம் வழி வகுக் கிறது. மேலும் இந்தச் சட்டம் எந்த வகை நிலஉடைமையையும், உரிமை உடையவர் அக்கறை காட்டினால் மட்டுமே ஓரிடத்தில் ஒன்று திரட்டச் செய்யவும் வழிவகுக்கிறது.

''5. இந்தக் குறிக்கோள்களை அல்லது நோக்கங்களை அடைய இந்தச் சட்டப்பிரிவு (மசோதா) கீழ்வரும் திட்டத்தை வகுத்தளிக் கிறது. ஒரு சொத்து பொருளாதார அனுகூல (economic holding) அலகாகக் கருத அப்படி அச்சொத்து உரிய சட்டப்படியான பதி வேட்டில் பதிந்திருக்கப்பட வேண்டும். நிலம் ஒருவரது பயன் பாட்டில் இருந்தால் அவர் மாவட்ட ஆட்சியாளருக்கு அவரது பெயரில் அந்த நிலப்பகுதியை ஒரு பொருளாதார அனுகூல முள்ள பண்ணையாகப் பதிவு செய்யும்படி விண்ணப்பம் செய்துக் கொள்ளலாம்.... இந்த விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்யப் போதுமான அடிப்படைகள் இருப்பதாக மாவட்ட ஆட்சியர் கருதினால் ஒழிய, 1894-ஆண்டை நிலக் கையகப்படுத்தல் (ஆர் ஜிதச்) சட்டத்தின்படி உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு அவ்விண்ணப்பத்தின் பேரில் பொறுப்பான விசாரணையை

நடத்த வேண்டும். இந்த நடவடிக்கையில் தொடர்புள்ள அனை வரும் சம்மதித்தால் அந்தச் சொத்தை விண்ணப்பதாரர் பெயரில் பதிவு செய்ய வேண்டும். அரசு பொறுப்பில் உள்ள நிலங் களை விசாரணையேதும் இன்றியே பதிவுசெய்யலாம். நில உடைமை எப்போதும் ஒருவர் பெயரில் மட்டுமே பதிவு செய்ய வேண்டும். இந்தப் பதிவு மற்றத் தொடர்புடையவர்களை அப்புறப் படுத்திவிட்டுப் பதிவு செய்யப் பட்டவருக்கு முழு நில உடைமை உரிமையை அளிக்கிறது. இதற்குப் பிறகு நிலச் சொந்தக்காரர், தான் பயன்படுத்தும் வரை அதைப் பிரிவினை செய்ய உரிமை யுடையவரல்லர். ஆனால் அதை அவர் முழுமையாக விற்கலாம்; அடமானம் வைக்கலாம்; வேறு விருப்பப்பட்ட வழிகளில் பயன் படுத்தலாம். ஆனால் அந்த நில உடைமைப் பிரிக்க வழி வகுக்கும்படியாகத் தனிப்பிரிவை விற்கவோ வேறு செயல்களை மேற்கொள்ளவோ அவருக்கு உரிமையில்லை. நில உரிமையாளர் நிலத்தை விற்காமல் அல்லது வாரிசுப்பத்திரம் எழுதாமல் இறந்து விட்டால் அந்த உடைமை தனி வாரிசுக்குத்தான் செல்லுபடி யாகும். மாறாக அவர் தனிப் பிரிவை விற்றுவிட்டு விட்டாலோ அடமானம் வைத்து இழந்துவிட, அடமானம்பெற்றவர் நீதிமன்றத் தீர்ப்புரை மூலம் அப்பிரிவுக்கான உரிமையைப் பெற்று விட்டாலோ மாவட்ட ஆட் சியர் ஓர் சான்றிதழ் அனுப்பி வைத் தால் நீதிமன்றம் பழைய தீர்ப்புரையை அல்லது ஆணையைத் தள்ளி வைத்துவிட அவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. தவறான உரிமைபெற்றவரிடமிருந்து சொத்து பறிமுதல் செய்யவும் இச்சட்டத்தின்கீழ் மாவட்ட ஆட்சியருக்கு அதிகாரம் வழங்கப் பட்டுள்ளது. ஒரு சொத்து பொருளாதார அனுகூல அடிப்படை அலகாக உடையதாகப் பதிவு செய்த பிறகு மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புதல் பெறாமல் அப்பதிவைத் தள்ளுபடி செய்ய முடியாது. எந்த நிலைமைகளில் அத்தகைய பதிவைத் தள்ளுபடி செய்யலாம் என்பதற்குச் சட்டத்தில் விதிமுறைகள் தரப்படு வதோடு தக்க பொருளாதார நல மேம்பாடின்றி அத்தகைய பதிவு தள்ளுபடி செய்யப்பட மாட்டாது.

மேற்கூறிய ஒருங்குதிரட்டலின் இரு பிரச்சினைகளின் விவா தத்தைத் தொகுத்துக் கூறுமுகமாக இப்பிரச்னை எல்லோராலும் முழுமையாக இன்னும் பார்வையிடப்படவில்லை என்றே சொல் லத் தோன்றுகிறது. பரோடா குழுமட்டுமே ஒருங்கு திரட்டலை முழுமையாகப் பார்வையிட்டுப் பரிந்துரைக்கிறது. மேலும் ஓரிடத் தில் ஒன்று திரட்டிய நில உடைமையைப் பேணிப் பாதுகாப் பதிலும் முழு அக்கறை கொள்கிறது. பேரா. ஜேவான்ஸ் ஓரிடத் தில் ஒன்றாக திரட்டிய நிலத்தை பேணிப்பாதுகாப்பது பற்றி ஏதும் கூறவேயில்லை. திரு. கீட்டிங்கோ நில உடைமையை ஒருங்கு திரட்டல் பிரச்சினையைத் தொட்டுகூட பார்க்கக் காணோம். மேலும் துண்டாடப்படாமல் இருப்பது பற்றி மட்டுமே அவர் விவாதிக்கிறார். ஒரு நில உடைமை போதிய பொருளாதார

அலகாகப் பதிவு செய்தாலும் துண்டு துண்டாகப் பல இடங்களிற் சிதறிக் கிடக்கலாம். இவரது முறை மூலம் பதிவு செய்தபோதே உடைமை சிதறிக் கிடந்ததால் பொருளாதார அலகாகப் பதிவு செய்த பிறகும் அவை நிலவும். அதாவது துண்டுகள் மேலும் துண்டாடப்படாமல் மட்டுமே பார்த்துக் கொள்ள முடியும். அவை மேலும் அளவிற் குறுகாமல் இருக்கும். ஆனால் அவை மிகச்சிறிய துண்டுகளாகப் பல்வேறு இடங்களிற் சிதறித்தான் கிடக்கும். எனவே கீட்டிங்ஸ் சட்ட உத்தரவிற்குப் பிறகும் இருக்கின்ற நிலையைச் சரி செய்யாமல் இருந்த நிலைமையிலேயே நிலவ வழி விட்டு விடுகிறார். ஆனால் பரோடா குழுவும் பேரா. ஜேவான் ஸூம் உண்மையாக நிலஉடைமை பயன்படுமாறு ஒருங்கிணைத் தலை வற்புறுத்துகின்றனர். எனவே அதற்காக அவர்கள் கூறும் கோட்பாட்டு நெறிமுறைகளும் செயல்படுத்துவதற்கான நடை முறை விதிகளும் உண்மையானதாகவே அமைகின்றன.

நிலச்சிதறலிருந்து ஒன்றாக ஓரிடத்தில் திரட்டிய நிலஉடைமை காக்கப்படுவதைப் பொறுத்தமட்டில் திரு. கீட்டிங்ஸூம் பரோடா குழுவும் தனி மனிதவாரிசுச் சேர்ப்பைப் பரிந்துரைக்கின்றனர். பரோடா குழு நிலம் பிரிக்கப்படும்போது நிலஉடைமை பொரு ளாதாரவிய லாக அனுகூலரீதியாக உகந்ததல்ல என்ற நிலமையின் போது மட்டும் இந்தத் தனிவாரிசு உரிமையேற்பை, அதுவும் நில உடைமை இழக்கும் வாரிசுகளுக்கு உரிய ஈட்டுத் தொகையைத் தந்து விட்டு முழு உரிமை பெறுவதை முன் வைக்கிறது. திரு. கீட்டிங்ஸ் உரிமையிழப்போருக்கு ஈட்டுத் தொகை தர வேண் டுமெனக் கூறவில்லை. ஈட்டுத் தொகையிலாத வாரிசு உரிமை யேற்பைப் பரிந்துரைக் கிறார்.

இதற்கு எதிரான வாதங்களாவன: ஒன்று திரட்டிய நில உடைமை நிலங்கள் பெரிய பண்ணை முறையில் அமைய வேண்டும் என்பதைத் தெளிவாகப் புரிந்துக் கொண்டதாகத் தெரியவில்லை. இந்திய வேளாண்மை சிறிய நிலஉடைமையால் சீர்கேடுற்றுள்ளதைக் கூறும் போது துண்டு நிலஉடைமைகளைச் ஒருங்கிணைப்பது செறிவாக்குவது மட்டும் பயன்படாது அவற்றின் அளவைப் பெருக்கிப் பெரிய பண்ணையாகவும் மாற்ற வேண் டும். ஒன்று திரட்டல் மூலம் சிதறல் விளைவைச் சீர்ப்படுத்துமே யல்லாமல் அவை சிறிதாக உள்ளதால் உள்ள பொருளாதாரக் குறைபாடுகளை நீக்காது. இந்த நில ஒருங்கிணைப்பின் மூலம் பொருளாதார அனுகூலம் உகந்த அளவை, நிலஉடைமையை அடையச் செய்தாலொழிய முழுப்பயன் தராது. திரு. கீட்டிங்ஸூம் பரோடா குழுவும் இதைச் சிறிதும் கருதிப்பார்க்கவில்லை. பேரா. ஜேவான்ஸ் மட்டிலுமே ஒன்று திரட்டலின் போது அளவு பெரிதாக வேண்டிய கட்டாயத்தையும் எப்போதும் நினைவிற் கொள்கிறார்.

4

நிலவுடைமை விரிவாக்கம் (Enlargement)

சிதறிய சிறு நிலஉடைமையை ஒன்றாகத் திரட்டுவது போலவே பண்ணை விரிவாக்கமும் ஒரு முக்கியமான பணியே என்பதால் தற்போது சிறு உடைமையின் அளவைப் பெருக்கி, பெரும் பண்ணைகளாக்கும் செயல்முறை பற்றிக் காண்போம். நமது வேளாண்மை வளர்ச்சியிலும் மேம்பாட்டிலும் அக்கறை உள்ள எவருமே நமது வேளாண்மை நிலஉடைமைகள் பொருளாதார அனுகூலம் உகந்த அளவில் அமைய வேண்டும் என்பதை மறுக்க முடியாது. இந்தப் பொருளாதார உடைமை அலகைக் கண்டு சரியாக வரையறுத்திருந்தால் அதற்காக உரிய அறிஞர்களுக்கு நாம் பெரிதும் நன்றிக் கடப்பாடு உடையவர்களாகியிருப்போம். ஆனால் நடைமுறையில் பெரிய நிலஉடைமைகள் பொருளாதார அனுகூலத்திற்கு உகந்த உடைமையாகக் கொள்கிறோம். பேரா. ஜேவான்ஸ் இது போன்ற கருத்தைக் கூறும் தவறைச் செய்கிறார். நிலஉடைமையின் எந்த அளவு என விவாதிக்கும்போது அவர் ஒரு கிராம அளவில் 20 முதல் 30 ஏக்கர் அளவை உகந்த முகடு (mode) அளவு எனக் கூறுகிறார்.'' ஆனால் இது இதே அளவில் தான் அமைய வேண்டுமா, ஏன் 100 ஆகவோ 200 ஆகவோ இருக்கக் கூடாது? இந்த அளவை அவர் ஏன் உகந்த நடுத்தர அளவாகக் கொள்கிறார் என்பதற்கு அவர் தரும் பதில் இந்த நிலஉடைமையளவு தான் ஒரு குடும்பத்தின் வாழ்க்கைத் தரத்தை (standard) உய்ய வைக்க உதவும் என்பது தான். அவரது துண்டுப் பிரசுரம் (Pamphlet) மிகவும் வெறுப்பேற்றும் அளவுக்கு இந்த இந்திய நாட்டு வாழ்க்கைத் தரம் என்னும் நரம்பிழையை மீட்டி அறுக்கிறார்.[12] இதில் உள்ள உள்ளடங்கிய பிழையைப் பின்னர் தனியாகக் காண்போம். இங்கு அவர் தனது உகந்த முகடு (model) பொருளாதாரப் பண்ணையளவுக்கு அவர் சரியான பொருளாதார வரையறை எதையும் தரவில்லை என்பது குறிப் பிடவே போதுமானதாகும்.

பரோடா குழுவின் நிலைமை இதைவிட மோசமானது. பேரா சிரியர் ஜேவான்ஸ் ஒரு கருத்தியலான பொருளாதார அலகு வரையறையைச் சார்ந்து நிற்கிறார். ஆனால் பரோடா குழுவின் பொருளாதார உடைமை, வரையறை, பன்முக நிலை தழுவியதாய் அமைகிறது. மாநிலத்தில் நிலவும் சராசரி நிலஉடைமையைப் பற்றிப் பரோடாக் குழு மேலே பட்டியலில் உள்ளபடி விவரித்துப் பேசும் போது பண்ணையைச் செறிவாக்குவது பற்றி அக்கறையோடு கூறினாலும், கீழுள்ள விவரத்திலிருந்து, அது

11. மேலதே — பக். 38 (பட்டியல்)

12. மேலதே — முன்னுரை

நிலவும் சராசரி நில உடைமையளவு சரியாகவே, நிறைவளிப் பதாகவே உள்ளதாகக் கருதுகிறது எனலாம்.

''ஒரு விவசாயியின் சராசரி நிலஉடைமை ஒரு ஒருங்கிணைந்த புலமாகவே உள்ளது. இது குறிக்கோள் அளவினதும் மாற்றம் தேவைப்படாத ஒன்றாகவும் அமைவது தெளிவு.''[13]

எடுத்துக் கொண்ட பிரச்னையை ஆழமாக அலசாத பரோடா குழு தனக்குக் கீழ் உள்ளபடி தரப்பட்ட ஆய்வு செய்து அளிக்க வேண்டிய அறிக்கை பற்றியும் நினைவில் கொள்ளாமல் மறந்து விட்டதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

''ஒரு கருத்தியலான நில உடைமையில் 30 முதல் 50 பைகாக் கள் ஒரே வட்டாரமாக உள்ளடங்கியிருக்க வேண்டும். குறைந்தது ஒரு பாசனக் கிணறும் அதில் அமைந்திருக்க வேண்டும். உடை மைக்குள்ளேயே ஒரு வீட்டு மனையும் அடங்க வேண்டும்.''[14]

இருக்கின்ற நிலஉடைமைகள் பொருத்தமான (ideal) அளவில் உள்ளபோது அவற்றை ஏன் மேலும் பெரு அளவுடையதாக்க வேண்டும்? இந்தக் கேள்விக்குக் குழு பதிலேதும் அளிப்பதில்லை. இதோடு மட்டுமல்ல. குழு தான் ஏற்கனவே குறிப்பிட்ட கருத்திய லான பொருளாதார அனுகூல உடைமைக்கான எந்த ஓர் அள வியலான வரம்பையும் கருதுவதேயில்லை. ஆனால் தனது மறு சீர்த்திருத்தத் திட்டத்தை விளக்கும்போது புதிய மூன்றாம் பொரு ளாதார அனுகூலப் பண்ணை வரையறையைக் கூறுகிறது. இதை அடைய இந்த வழியைக் கூறுகிறது.

''ஒவ்வொரு புலமும் வட்டார மண்தரம், உழவு நிலைமை யைப் பொறுத்துப் பொருளாதார அலகு புலத்தை உருவாக்கு வதற்கேற்ற அளவைப் பெற்றிருக்க வேண்டும். இது குடும்பத்தை முழுதாகப் பணிசெய்ய வைத்து அக் குடும்பம் முழுதும் வாழப் போதுமான பலனைத் தரவல்லமைவுடையதாக அமைய வேண் டும்.[15]

இப்படிச் சம உரிமை பேசும் பரோடா குழு (1) மூவேறு கருத்தியலான பொருளாதாரப் புலங்களை அலகாக வரையறுத்து எந்த வரையறையையும் சரிவரச் சாராமல் நிற்கிறது. இந்தப் பிரச் சினை குறித்த செறிவான செய்தி விவரங்களைத் தாங்கியிருந் தாலும் இந்தக் குழுவின் அறிக்கை குழப்பமான விவாதத்துக்கு எடுத்துக்காட்டான சிறந்த வகைப்படிவமாக உள்ளது.

கீட்டிங்ஸ் பொறுத்தவரை பொருளாதார நீதியில் உகந்த நில உடைமை என்பது, ஒரு தனிமனின் பயிரிடு செலவு போக

---

13. அதே நூல் பக்கம் 4.
14. ப. கு. அ. பக்கம் 31.
15. அதே நூல் பக்கம் 53.

தன்னையும் தனது குடும்பத்தையும் கணிச அளவு வசதியோடு காப்பாற்ற வழிவகுக்கும் அளவைப் பெற்றிருக்க வேண்டும்.''[16]

இவரது வரையறையைப் பரோடா குழுவும் ஏற்கிறது. நாமும் ஏற்றுக் கொள்ளலாம். ஏனெனில் இது குழுவின் மேல்கூறிய மூன்றாம் வரையறையோடு பொருந்துவதைக் காணலாம். இந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டு இந்த வரையறை எவ்வளவு தூரம் நடைமுறை உண்மையோடு ஒத்துப்போகும் என்பதைப் பார்ப்போம்.

இந்த இருபாலார் வரையறையும் பேராசிரியர் ஜேவான்சின் வரையறையும் நுகர்அளவு சார்ந்த வரையறைகளேயன்றி, உற்பத்தி சார்ந்த வரையறைகள் அல்ல என்பதை எளிதாக நாம் உணர லாம். இதுதான் அவற்றின் அடிப்படைப் பிழை. ஏனெனில் நுகர்வை வைத்து ஒரு பொருளாதார அலகு புலத்தின் பொருளா தாரப் பண்பை மதிப்பிடுவது சரியல்ல. ஒரு பண்ணை அதில் செலவு செய்த முதலுக்கேற்ற உயர்ந்தபட்ச விளைச்சலைத் தரும் போது அந்தப் பண்ணையின் வருமானம் அதன் குடும்பத்தி னருக்குப் போதுமானதாக இல்லை என்பதற்காக அதை மோச மான பண்ணை எனக்கூறுவது வக்கிரமானதாகும். ஒரு குடும்பத் தில் எத்தனை உழைக்கும் உறுப்பினர் உள்ளனர் என்பதுதான் முக்கியம். குடும்பத்தில் உள்ள எல்லா உழைக்கும் உறுப்பினரும் பண்ணைக்குத் தேவைப்படாமல் இருப்பர். இருந்தாலும் இந்தியச் சமூக மரபுவழி வாழ்க்கைக் கட்டாயத்தின்படி அதற்காகவே இவர் களையும் அக்குடும்பம் வாழவைக்க வேண்டும். நமது சமூகப் பழக்க வழக்கம் பண்ணையில் உழைக்கத் தேவையற்ற குடும்ப உறுப்பினர் களுக்கும் மற்றக் குடும்பத்தைச் சார்ந்து நம்பி வாழும் உறுப்பினர் களுக்கும் உணவளிக்க வேண்டும் என்பதற்காக அந்தத் தேவை முழுவதையும் நல்ல கணிசமான விளைச்சல் உடைய பண்ணை நிறைவேற்றவில்லை என்பதனால் பண்ணையின் மீது குறை காண வேண்டும் என்பது இல்லை. இத்தகைய தவறான மதிப்பீட்டு முறை பல வெற்றிகரமான பண்ணை அல்லது நிறுவனங்களைத் தோல்வி வாய்ந்தனவாகக் காட்டும். ஒரு குடும்ப உறுப்பினர் தொகைக்கும் ஒரு பண்ணை அல்லது தொழிலக உற்பத்திக்கும் எந்த நேரடியான பொருளாதார உறவும் இல்லை. உண்மையான பொருளாதார உறவு உற்பத்திச் செலவுக்கும் உற்பத்தி விளை பொருளுக்கும் இடையில்தான் அமையமுடியும். மொத்த உற்பத்தி விளைபொருள் உற்பத்திச் செலவுக்குப் போதுமான வருமா னத்தைத் தருமானால் அறிவுள்ள எந்த அதிபரும் தனது தொழி லகத்தையோ பண்ணையையோ குடும்பச் செலவுக்குப் போதாத வில்லை என்பதற்காக மூட நினைக்கமாட்டார். இது தெளிந்த உண்மையே. உற்பத்தி நுகர்வை நிறைவேற்றத்தான் என்றாலும் உற்பத்திக்கு உதவும் நுகர்வோரை மட்டும் தான் அது நிறைவு செய்ய முடியும்.

16. தக்காண பம்பாயின் கிராமப் பொருளாதாரம் பக். 51.

இதனால் உற்பத்திச் செலவுக்கேற்ப உற்பத்தி கிடைப்பதுதான் உண்மையான பொருளாதார உணவு எனக் கொள்ள, பொருளாதார உகப்பு நிலை என்பதை உற்பத்தி கொண்டு வருமானத்தை வைத்து வரையறுக்க வேண்டுமே ஒழிய நுகர்வுத் தேவைநிலை கொண்டல்ல என்பது புரியும். பொருளாதார அனுகூலப் பண்ணை என்பது உற்பத்தி நிறுவனம் என்பதால் அதை நுகர்வைப் பொறுத்து வரையறுப்பது பிழையானதாகும்.

உற்பத்தி நிறுவனமாகப் பொருளாதார அனுகூல உகப்புநிலை உடைமையை (Economic holding) புரிந்து கொள்ளுதலை மேலும் தெளிவாக்க இங்கு சில கருத்துக்களை முன் வைப்பது கட்டாயமான தேவையாகும்.

போட்டி நிலைச் சமுதாயங்களில் அதன் உறுப்பினர்களின் அன்றாடப் பொருளாதாரப் பரிமாற்றங்கள் விலைவட்டத்தால் (price regime) கட்டுப்படுத்தப்படுகிறது என்பதை அடிப்படை முன்கூற்றாகக் (premise) கூறலாம். ஒரு விலை வட்டத்தில் நாம் உற்பத்தியைப் பகுப்பாய்வு செய்ய வேண்டும் என்ற முடிவுக்குத் தள்ளப்படுகிறோம். இதன் மூலந்தான் நாம் நமது குறிக்கோளை அடைய முடியும். தற்காலப் பொருளாக்கம் அல்லது உற்பத்தி பெரிதும் தொழிலதிபரால் அல்லது தொழில் முனைவோரால் தலைமையேற்று நடத்தப்படுகிறது. இந்தச் செயல் முனைவோரால் தலைமையேற்று நடத்தப்படுகிறது. இந்தச் செயல்முறையை (process) அவர்தான் வழிகாட்டி மேற்பார்வையிட்டுச் செயல் படுத்துகிறார். கருவிப்பொருள், வாடகை பெறுவோர், உழைப் பாளர்களைப் பயன்படுத்திப் பணிபுரிவோர் யாவருமே தொழி லதிபர்கள்தாம், ஒரு சந்தைப் பொருளாதாரச் சமூகத்தில் இவரது கணக்கீடுகள்தாம்—விளைபொருள் விற்பனைக்காகவோ வேறு எதற்காகவோ செய்யப்பட்டாலும், அவ்விளைபொருள் விலையை யும் விலை முதலீட்டையும் முடிவு செய்கின்றன. அவர் தனது ஆதாயத்துக்காகவே உற்பத்தி செய்வதால் அவரே தனது முத லீட்டை எவ்வெவ்வகைகளில் செலவு செய்ய வேண்டும் என்பதை யும் தீர்மானிக்கிறார். இந்தச் செலவினங்கள் உற்பத்திக் கூறுகள் அல்லது காரணிகள் எனப்படுகின்றன. இவை பொருளின் விலையை முடிவு செய்கின்றன. வழக்கமாக இவை கூலி (உழைப்புச் செலவு), இலாபம் (உற்பத்திக்கான ஆதாயம்) குடிக் கூலி (நிலவாடகை) வட்டி (முதலுக்கான உபரி) எனப்பகுக்கப்படு கின்றன. ஆனால் நடைமுறைத் தொழிலக விவரங்கள் இவற்றைப் பொய்ப்பிக்கின்றன. நேரடியாகவோ மறைமுகமாகவோ இவை மட்டுமன்றிப் பல்வேறு காரணிகள் உற்பத்தியில் வேலைப் பிரி வினைச் செயல்முறை (Distributive processs) காரணமாகச் செயல் படுகின்றன. எத்தனை காரணிகள் செயல்படுகின்றன என்பதோ அவை எந்தெந்த விகித அளவில் செயல்படுகின்றன என்பதோ இங்கு முக்கியமில்லை. உற்பத்தியைப் பொறுத்தவரை அவற்றை எப்படி ஒருங்கிணைத்துச் செயலாற்றுவது என்பதே முக்கியமாகும்.

உற்பத்தியின் அடிப்படைக் கூறுகளைக் கட்டியாளும் உற்பத்தி விகித அளவு விதி ஒன்றைக் கட்டாயம் நாம் அறிய வேண்டும். ஒரு முயற்சியில் அல்லது ஒரு நிறுவனத்தில் இந்தக் காரணிகளைக் கண்ட அளவு விகிதங்களில் பயன்படுத்துவது உற்பத்தியில் குறை பாட்டையே உருவாக்கும். விரிவாகச் சொல்லப் போனால் ஒரு முதன்மைக் காரணி மற்றொன்றின் ஒரு குறிப்பிட்ட விகித அள வில் இணையும் போதுதான் இரண்டினுடைய விளைவும் மிக உயர்ந்த திறமையோடு உற்பத்தியில் உயர்ந்தபட்ச மேம்பாட்டைத் தரும். இதில் குறைவோ மிகையோ ஏற்பட்டால் அது ஒட்டு மொத்தத் திறமையைக் குறைத்துவிடுவதால் உற்பத்தி வெளியீடும் மட்டுப்பட்டுவிடும். உற்பத்திக் காரணிகளின் இந்தச் சார்புறவு, ஒரு தொழில் முனைவோர் ஒரு காரணியை மாற்றினால் அதற் கேற்ப மற்றவற்றையும் சரிவிகித அளவில் மாற்ற வேண்டிய கட்டாயத்துக்குள்ளாகிறார். இது வேறுவிதமாக அமைய முடி யாது. ஏனெனில் உற்பத்தியின் முதலாவது நோக்கமே ஒவ்வொரு காரணியும் பேரளவுத் திறமையுடன் செயல்பட வேண்டும் என் பதே. இது காரணிகளின் சரிவிகித கூட்டுறவில் தான் நிகழ முடியும். ஒட்டுமொத்தத்தில், இவ்விதமாக, ஒவ்வொரு காரணிக் கும் ஒரு கருத்தியலான (ideal) விகிதம் அல்லது உகந்தநிலை (optimum) விகிதம் நிலவும். இந்த உகப்பு நிலையும் விகித அளவு மாறும்போது தானும் மாறும்.[17]

இப்படி விகித அளவை மாற்றும் காரணி ஒவ்வொரு காரணி யின் விலையேற்றம் அல்லது விலையிறக்கமேயாகும். இந்த விளை வைப் பகரமைப்புக் கோட்பாடு அல்லது பதிலமைவுக் கோட்பாடு (Principle of Substitution) என்பர். இது ஓரளவே செயல்படும். முழுமையாக சரிவிகிதக் கூட்டுறவு விதியைக் கட்டுப்படுத்த இய லாது. ஏனெனில் இந்தச் சரிவிகித விதி என்பது பொருளாதார உகப்புநிலை உற்பத்தியால் கட்டுப்படுத்தப் படுவதாகும். இந்த விதியை எந்த உற்பத்தியாளரும் கண்டு கொள்ளாமல் பின்பற் றாமல் இருக்க முடியாது.[18]

பொருளாதார அலகு உடைமை பால் உற்பத்தி வகிக்கும் பங்கு பற்றிய மேலுள்ள குறிப்புரைகளுக்குப் பிறகு வேளாண்மை யில் பொருளாதார உகப்பு உடைமைக்குச் சிறியதென்றோ பெரிய தென்றோ தனி அளவு ஏதும் வரையறுக்க வேண்டிய தேவை ஏதும் இல்லை என்ற எடுகோளை (postulate) நாம் தெளிவாக முன் வைக்கலாம். எனவே ஒரு உழவருக்குத் தனது நிலம் தன் கையில்

---

17. உற்பத்தி இவ்வாறு நிகழ்வதன் வர்ணனை பேராசிரியர் எச். ஜே. தேவன் போர்ட்டின் சிறந்த நூலான தொழிற் பொருளாதாரத்தில் தரப்பட்டுள்ள குறிப்புகளின் தொகுப்பாகும். [நியூயார்க், மாக்மிலன், 1913]. அமெரிக்கப் பொருளாதார சங்கத்தின் 29 ஆவது ஆண்டுக் கூட்டாட்சியை ''உற்பத்தித் திறத்தின் இருபரிமாணங்கள்'' என்னும் தலப்பில் பேராசிரியர் ஹென்றி சி. டேய்லர் அளித்த கட்டுரையும் அதுகுறித்து பேராசிரியர் ஏ. ஏ. டங் அமெரிக்கப் பொருளாதார மறுநோக்கு என்னும் மார்ச் 1917 இதழில் வரைந்த குறிப்புகளும் நோக்கத்தக்கவை.

உள்ள பிற காரணிகளின் அளவைப் பொறுத்தே பொருளாதார உகப்பு நிலையில் பயிரிட ஏற்றதற்குச் சிறியதாகவோ பெரிய தாகவோ அமையமுடியும். வெறும் நிலஉடைமையின் அளவு எந்தத் தனிப் பொருளாதார அர்த்தமும் உடையதல்ல என்பது விளங்கும். எனவே சிறு நில உடைமைப் பொருளாதார உகப்பு நிலை விளைச்சலுக்கு ஏற்றதல்ல என்பதும் பெருநில உடைமை தான் பொருளாதார உகப்பு நிலைக்கு ஏற்றதென்பதும் பொருளி யலின் மொழியல்ல வெற்றுச் சொற்களே என்பது புரியும். ஒரு நிலம் பொருளாதார உகப்பு நிலையில் விளைவிப்பது என்பதே அதில் பயன்படுத்தப்படும் பிற உற்பத்திக் காரணிகளின் அளவை யும் அவற்றின் சரிவிகித நிலையையும் பொறுத்ததேயாகும். எனவே சிறுநிலவுடைமையும் பெரும் பண்ணையைப் போலவே பொருளாதார உகப்புநிலையில் விளைச்சலைத் தரமுடியும். ஏனெ னில், நில அளவு அதை முடிவு செய்வதில்லை; மாறாக நிலம் உள்ளிட்ட அனைத்து உற்பத்திக் காரணிகளின் சரிவிகித அளவு தான் உற்பத்தியின் பெருமத் திறனைக் (Maximum efficiency) கட்டுப்படுத்துகிறது.

எனவே சரியான பொருளில் பொருளாதார உகப்பு நில உடைமை என்பது நிலம், முதலீடு, உழைப்பு ஆகிய கூறுகளும் சரிவிகித அளவில் செயல்படும் உடைமைக்குத் தான் பொருந்தும். இந்தச் சரி விகிதம் தான் அனைத்துக் கூறுகளின் உயர் திறமையை வடித்தெடுத்துக் கொள்ள வழிவகுக்கிறது. எனவே பொருளாதார உகப்புநிலை நில உடைமையை உருவாக்க, விவசாயி நில அளவை மாற்றியமைப்பது போதாது. நிலத்துக்கேற்ப பிற உற்பத்திக் காரணி களையும் சரிவிகித அளவில் அமைக்க வேண்டும். இல்லாவிட் டால் அவர் தனது நிலத்தில் பேரளவு உற்பத்தியைச் செய்ய முடி யாது. அவரது பிற உற்பத்திச் சாதனங்கள் சுருங்கும் போது பயிரிடும் நிலஅளவைச் சுருக்கிக் கொள்ளவேண்டும். எப்போதுமே அவரது உடைமையும் சாதனங்களும் சரியற்ற விகிதத்தில் இருக்க கூடாது; சரியான விகிதத்திலேயே அமைய வேண்டும். மாறும் போதும் சரியான விகித்திலேயே மாற வேண்டும்.

மேற்கூறிய விவாதம் நடைமுறையோடு பெரிதும் பொருந்தி வருவதைக் கண்கூடாகக் காணலாம். நிலஅளவை மற்றும் நிலத்

18. விவசாயத்தைக் குறைந்து செல்விளைவு விதி நிறுவகிக்கிறது என்பதில் நம்பிக்கை உடைய பொருளாதார வல்லுநர்கள் பதிலமைவுக் கோட்பாடு பொதுவாக எல்லா விடத்தும் பொருளிலும் என்பதனை ஏற்கத் தயங்குவார்கள். குறிப்பிட்ட நிலத்துக்குக் கூடுதலாக இடம்பெறும் மூலதனமும் பலனாக படிப்படியாகக் குறையும் வருவாயை அளிக்கும் என்பது குறைந்து செல்விளைவு விதி. அதாவது நிலம் தவிர பிற செலவுகள் இருமடங்குமாகுமானால் பலன் இருமடங்குக்கும் குறைவாகவே இருக்கும். இது தான் இவ்விதி என்றால், விவசாய உற்பத்திக்கு மட்டுமே பொருளினும் என்பது பொருந்தாது. நிலம் இரட்டிக்கப்பட்டால் போனால் இது நேருவது இயல்பு, விளைவு மிக வேண்டுமானால் எல்லாக் காரணிகளும் ஒரே விகிதத்தில் அதிகமாகவேண்டும் என்று வேறு விதமாகச் சொல்லலாம். விகிதாசார விதிக்கு வேறு பெயர் குறைந்து செல்விளைவு விதி எனலாமா?

தீர்வை முறையமைப்பின் இந்தியத் தந்தையர் எனப்படும் பொருளாதார வல்லுநர் ஒருவரே இந்தக் கண்ணோட்டத்தைக் கருதி ஏற்றிருப்பதும் பெரும் மகிழ்ச்சியைத் தருகிறது. பம்பாய் மாநிலத்தில், 1840 ஆண்டைய பெயர் பெற்ற கூட்டறிக்கை இந்தப் பிரச்னை குறித்த தெளிவான விவாதத்தைக் கொண்டிலங்குகிறது. தக்காணத்துக்கு நிலஅளவை செய்து தீர்வை விதிக்க அனுப்பப்பட்ட அலுவலர்களது முதல் பிரச்னை, நிலஅளவைப் பொறுத்து எந்த முறை மூலம் வரித் தீர்வையைக் கணிப்பது என்பதாகும். நிலப்புலம் எண் அடிப்படையிலா, கிராம ஒட்டு மொத்த நில உடைமை அடிப்படையிலா, பங்குதாரர்களின் பங்கடிப்படையிலா, உடைமையாளர் அடிப்படையிலா குத்தகைதாரர் அடிப்படையிலா என்பதே அவர்களது ஆய்வுக்குரிய முதற் பொருளாகியது. ஆழ்ந்த ஆய்வுக்குப் பிறகு தனிநிலப்புல எண் அடிப்படையில் வரிதீர்வை விதிப்பது என முடிவாகியது என்பது யாவருக்கும் தெரியும். ஆனால் இந்த முடிவெடுக்கப்பட்டதன் காரணத்தை, அறிக்கையைப் படித்த ஒரு சிலரே அறிவர். அறிக்கையில் காணப்படும் பின்வரும் பகுதிகள் தரும் செய்தி ஆர்வமூட்டுவது மட்டுமல்ல நல்ல படிப்பினை தருவதாயும் உள்ளன.

''பத்தி 6. கிராமத் தீர்வையைப் புலஎண் என்னும் மிகச்சிறிய அளவு வரை நிலஉடைமையைப் பிரித்து மதிப்பிடுவது விவசாயிகள் ஒவ்வொரு ஆண்டும் தங்கள் கையில் உள்ள விவசாய உற்பத்தி முதலுக்கேற்ப தமது பண்ணை நிலத்தைச் சுருக்கிக் கொள்ளவும் பெருக்கிக் கொள்ளவும் நல்ல வசதியாக அமைகிறது. இந்த வேளாண்மைக்காக, கையிருப்பில் அமையும் முதலீடு, இந்தியாவின் பிற உழவுத்தொழில் வர்க்கங்களைப் போலவே, விவசாயிகளுக்கு முக்கியமானதாகும்.

பத்தி 7. நோய்வாய்ப்பட்டோ வேறு காரணத்தாலோ சில காளைமாடுகளை இழந்துவிட்டால் விவசாயி பெரிதும் திறமை குன்றி விடுகிறார். அவரது நிலத்தை அவரால் முன்புபோல உழுது பயிரிட முடிவதில்லை. அவர் பயிரிடு நிலத்தைச் சுருக்கிக் கொள்ளாவிட்டால் அதனால் ஏற்படும் இழப்புகள் அவரை விரைவில் மூழ்கடித்துவிடும்''.[19]

இவற்றிலிருந்து மதிப்பீடு செய்யும்போது நில உடைமை அளவைக் கட்டுப்படுத்துவது தவறான கருத்து மட்டுமல்ல தவறான விளைவுக்கும் வழி வகுத்திடும். பேராசிரியர் ரிச்சர்டு டி. எலி[20] (Prof. Richard T. Ely) பின்வருமாறு இச்செயல்முறை பற்றிக் கருத்தறிவிக்கிறார் :

''எனவே இதற்கு (பண்ணை நில அளவு எப்படி அமைய வேண்டும் என்பதற்கு) நேரடியான எளிய தனி விடையே இல்லை

---

19 பம்பாய் மாகாண நில அளவைக் கையேடு, 1882. பக். 3.

20. பொருளாதார நூல் பக். 531-32.

என்பது தெளிவானது. நிலமதிப்பு அல்லது அதிலிருந்து கிடைக்கும் வாரம் (rent) இங்கு முக்கியமானதாகும்......வாரத்தைப் போலவே, அதோடு செலவிடத் திரட்ட முடிந்த முதல், அவரிடம் அமைந்த திறமை மிகுந்த வேளாண் தொழில்நுட்ப முறை, அவரால் திரட்ட முடிந்த உழைப்பாளிகளின் செயல்திறமை, சந்தையிடம் அமையும் தொலைவு, போக்குவரத்துச் சாதன வசதிகள், இவை எல்லாமே ஓர் உழவர் அல்லது விவசாயி தனது உழுது பயிரிடும் நில அளவைத் தேர்ந்தெடுக்கும் போது கருத வேண்டிய காரணிகளாகின்றன. அந்த நிலத்தை எவ்வளவு தீவிரமாகப் பயிரிடுகிறார் என்பதும் இந்தக் கூறுபாடுகளைச் சார்ந்ததே.

''இந்தப் பிரச்னையின் முக்கியமான பகுதி என்னவென்றால், தனியே ஒருவர் தானாகவே தனக்கு வேண்டிய தனியார் உபரியை அல்லது லாபத்தைத் தீர்மானித்துக் கொள்வதில் அடங்கும். ஆனால் சட்டத் துறையினரோ, அறிவியல்முறை மாணவரோ செய்ய வேண்டியது மிக அரிய அறிவியல் துறையான ''வேளாண் மதிப்பீட்டு முறை''யை உருவாக்கித் தருவதுதான். இது விவசாயி மாறும் விலைகள், கூலிகள், போக்குவரத்துச் செலவுகள் ஆகியவற்றை எப்படிச் சரி கட்டுவது என்பதை உணர்த்தும்''.

நிலவுடைமை அளவை தீர்மானிப்பதை முக்கியமானதாகக் கருதுபவர்களுக்குப் பேரா. எலியின் நல்ல கருத்துரைகள் அத்தகைய போக்கு நல்லெண்ணம் சார்ந்ததுதான் என்றாலும் அது தீமையைத் தரும் என்பதை விளக்குகின்றன. ஏனெனில் மற்றவர்களை விட விவசாயிகள்தான் அவரது நிலம் எந்த அளவில் அமைய வேண்டும் என்பதைத் தீர்மானிக்க ஏற்றவர். மேலும் காலத்தைப் பொறுத்து இந்த அளவும் மாற்றிக்கொள்ள வேண்டிய ஒன்று என்பதையும் அவர்கள் நடைமுறையில் அறிந்துள்ளனர். அவர்களது சாதனஅளவு மாற்றத்தைப் பொறுத்து அவரது பண்ணையளவை மாற்றவேண்டிய நிலைமை அவருக்குத் தெரிந்ததே. ஒரு நேரத்தில் அவர் சிறு நிலஉடைமையைத் தேர்ந்தெடுக்கிறார். மறுநேரத்தில் வாய்ப்புள்ள நிலையில் பெரிய நில உடைமையைத் தேர்ந்தெடுப்பர். எனவே சட்டமுறையால் நிலஅளவை உறுதி செய்பவர் சரியான பொருளாதாரவாதியல்ல. ஏனெனில் நில அளவு மாறவேண்டிய தேவை வந்தால் மாற்றிக் கொள்வதுதான் பொருளாதாரவியலாக உகந்ததாகும். நிலஅளவை நிலைநிறுத்துவது நிலத்தைப் பெரிதாக்க உதவுகிறது. ஆனால் பொருளாதார அனுகூல ரீதியாக உகந்ததாகாது. ஏனெனில் பொருளாதார உகப்பு நிலை நிலஉடைமை என்பது நில அளவைச் சார்ந்ததன்று. மாறாக, இந்த நிலத்தைத் திறம்படப் பயன்படுத்தி உழுது பயிரிட அவரிடம் அமைந்த சாதன அளவையும் பொறுத்தே அமைகிறது.

5

தீர்வுமுறைகளைப் பற்றிய நுண்ணாய்வு

(Critique of the remedies)

நமது வேளாண்மையில் நிலவும் கேடுகளைச் சீர்செய்ய உதவும் முறையாகப் பண்ணை உருவாக்கத்தைப் பரிந்துரைத்தால் அதை வேளாண்மைக் கருவி தளவாடம் பெருகும்போது வேளாண்மை செய்யும் நிலஉடைமை குறைந்து வரும் நிலையில் மட்டுமே ஏற்கலாம். நிலப்பண்ணை அளவுகள் ஏற்கனவே பதிவு செய் யப்பட்டுள்ளன. எனவே நமது பணி உரிய வேளாண் தளவாடங் கள் அளவு பெருகியுள்ளதா எனச் சரிபார்க்க வேண்டியதே. தனது விரிவான கள ஆய்வில் திருவாளர் கே. எல். தத்தா கூறுவ தாவது:[21]

''178. நாம் ஆய்வு செய்தபோது சந்தித்த பெரும்பாலான இந்திய விவசாயிகள் தாங்கள் நிலத்தை நன்கு உழாததால் தான் வேளாண்மை விளைச்சல் குறைந்துள்ளது எனக் கருதிக் கொண் டுள்ளனர். உழைப்பாளர், மாடு, உழுகலப்பை ஆகியவை போது மான அளவுக்குக் கிடைக்காமல் அதனால் முன்புபோல தற்காலத் தில் நிலத்தை நன்கு உழ முடியவில்லை எனக் கூறினர். மேலும் முன்பு போல அடிக்கடி உழுவதும் நின்றுவிட்டது. உரமிடலும் கிணறுகளிலிருந்து நீர் பாய்ச்சுதலும் களை எடுத்தலும் கூட குறைந்து விட்டது''.

''179. உழுகலப்பை, மாடு முதலியவை அறிதாகி உள்ளது பற்றிக் கருதும்போது நமக்குக் கிடைக்கும் விவரம் பஞ்சத்தால் விளைந்த வறுமைநிலை தெளிவாகிறது. இந்த விளைவு காளை மாடு குறைந்து கொண்டே போவதில், இந்த குறைபாடு சில ஆண் டுகளுக்குள் ஈடுசெய்யப்பட்டாலும், தெளிவாகிறது. இந்தியாவில் வினையேற்றம் குறித்த ஆய்வு அறிக்கை, 1914, தொகுதி 1 பக். 66-67 (சரிவு எழுத்துகள் நாமிட்டன). அண்மை ஆண்டில் (1908-09) இருந்த உழுகலப்பை, மாடுகளின் தொகை ஆகியவை பஞ்சத் தொடக்க ஆண்டில் (1993-94) இல் இருந்த அளவை விட எண்ணிக்கையில் அசாம், பண்டேல்கண்டு, ஆக்ரா ஆகிய வட்டாரங்களிலும் வடமேற்கு, குஜராத்து, தக்காணம், பீரார், வடசென்னை, மேலைச் சென்னை ஆகிய வட்டாரங்களிலும் குறைந்துள்ளது. இந்தப் புள்ளி விவரங்களைப் பெரிதும் நம்ப முடியாது என்றாலும் இவற்றில் சிற்சில இடங்களில் உண்மையாக இருக்கும் என நம்பலாம்''.

---

21. இந்தியாவில் விலையேற்றம் குறித்து விசாரணைக் குழு அறிக்கை, 1914. நூல். 1. பக். 66-67.

முதலீட்டு நிலையைப் பற்றி திருவாளர் எலியட்டு ஜேம்ஸ் கூறுவதாவது:

''நாம் செய்து காட்டிய மாதிரிப் பண்ணையை விவசாயிகள் நன்கு கவனிக்காமல் இல்லை. ஆனால் இந்த அறிவு அவர்களுக்கு உதவவில்லை. நன்கு உரமிடுவதும் நன்கு உழுவதும் நல்ல விளைச்சலைத் தரும் என்பது அவர்களுக்குத் தெரிந்துதானிருந்தது. ஆனால் அவர்களிடம் இல்லாதது கட்டாயமாகத் தேவைப்பட்டதான முதலீடுதான்''.[22]

மேலும் ஆசிரியர் கூறுகிறார். உழவர்களுக்குத் தங்களிடம் இருந்த உழவு தளவாடம் காலங்கடந்தது. நல்ல பயன்தராதவை எனத் தெரிந்திருந்தும் அதை அவர்களால் புதிய உழவுக் கருவிகளாக மாற்ற இயலாமலிருந்தது.

''நல்ல் உழவு மாடுகளும் நல்ல உயர் பண்ணைக் கருவிகளும் பெற, அவனால் புரட்ட முடியாததாக உள்ள பணத்தால் மட்டுமே முடியும்''.

இதே போன்ற நிலை பரோடா மாநிலத்தில் நிலவியதைத் தொழில், வணிகத்துறை இயக்குநரான திரு. என். பி. நானாவதி திரட்டிய செய்தி விவரங்களிலிருந்தும் தெரியவருகிறது. ஆனால், துரதிரஷ்டவசமாக, அவர் இந்த விளக்கத்தைப் பரோடா குழுவிடம் பரிந்துரைத்து குழு அறிக்கையைச் செழுமைபடுத்த முடியவில்லை. காரணம் அவர் உற்பத்திக் கருவிகளுக்கும் நிலவுடைமையின் திறமைக்கும் இடையிலமைந்த ஒட்டுறவை அறியாததுதான். மேலும் இது குறித்து உருகியபடி கூறுவதாவது:

''விவசாயிகளிடம் போதுமான உழவுமாடுகள் இல்லை. இன்று (1913) பண்ணையில் பயன்படுத்த அவர்களிடம் 8,34,901 காளை மாடுகளே உள்ளன. அதாவது 36 பைகாக்களுக்கு ஒரு ஜோடி மாடுகள் தான் உள்ளன. சராசரியாக ஒரு ஜோடி மாடு 25 பைகாக்கள் அளவு நிலத்தை மட்டுமே திறம்பட உழ முடியும். ஆனால் தற்போதைய சராசரி உழவு நிலம் 36 பைகா. எனவே உழவு ஆழமாக அமையாது. நிலத்தைக் கீறி மட்டுமே விட முடியும். சிறு விவசாயிகளிடம் உழவு மாடே இருக்காது. இருந்தாலும் ஒன்றே ஒன்று தான் இருக்கும். இதே போன்ற சகவிவசாயி உடன் ஒத்துழைத்தாலன்றி உழவு சரிவரச் செய்ய முடியாது. பண்ணைக் கருவிகளைப் பொறுத்தமட்டில் 1,54,364 உழுகலப்பைகள்தான் உள்ளன. அதாவது இரு விவசாயிகளுக்கு ஒரு உழு கலப்பை வீதம் உள்ளது. ஆனால் உழவரும் குத்தகைதாரரும் மூன்று இலட்சத்துக்கும் கூடுதலானவர்களாக உள்ளனர். இதில் ஒவ்வொருவருக்கும் ஒரு முழுக் கருவித் தொகுதி தேவை. எனவே நாம் மேற்சொன்ன சராசரி அளவை மேலும் குறைந்துவிடும்''.[23]

22. இந்தியத் தொழிற்சாலைகள். பக். 6.

23. பரோடா ராஜ்ஜியத்தில் விவசாயக் கடன் பற்றிய அறிக்கை. 1913 பத்தி 35.

1898-இதற்குப் பிறகு மாநிலத்தின் பண்ணைக் கருவி இருப்பு மோசமடைந்துக் கொண்டே வந்திருப்பதைக் கீழ்வரும் பட்டியலின் விவரங்களால் தெரிந்து கொள்ளலாம்.

23.பரோடா மாநிலப் பண்ணைக் கடன் நிலை அறிக்கை. 1913 பத்தி. 32.

ஆண்டு	உழுகலப்பை	மாட்டுவண்டி	உழுமாடு	பிற வீட்டுக் கருவிகள்
1898	1,75,989	....	4,15,089	5,70,517
1910	1,51,664	68,946	3,34,801	5,09,416

இந்த நிலைமையில் பெரும்பாலான சொத்துக்களைப் பொருத்த வரை பண்ணைக்கருவிகள் குறைவாக இருந்தது மட்டுமல்லாமல், தங்களிடமிருந்த பெரிய பண்ணையின் அளவுக்கு நேர்மாறாக மிக மிகக் குறைந்த பண்ணைத் தளவாட வசதியே அவர்களிடமிருந்தது. இந்த விவரங்களின்படி நடைமுறையில் நிலவிய நிலங்கள் சிறிதாக இருந்ததைவிட அளவில் பெரிதாக இருந்தமையே அவை பொருளாதார அனுகூல ரீதியாக சிக்கனமற்றதாக நிலவ வழிவகுத்திருந்தது என நாம் முன்பு படித்த பொருளாதாரக் கோட்பாடுகள் மூலம் அறிய வருகிறோம். இதனால் பொருளாதாரவியலாக உகந்த அளவாக்க நிலவும் நில உடைமைகளைத் துண்டாடலாமா? பொறுப்பற்ற வாசகர் இந்த முடிவுக்கு வரலாம். ஆனால் நாட்டில் இதற்கு நேர் முரண்பாடான கருத்தே நிலவுவதை அவர்கள் அறிய வாய்ப்பில்லை. ஆனால் அவர்கள் முடிவு சரிதான் எனினும் அப்படியே முடிவு எடுக்க வேண்டிய கட்டாயம் ஏதும் இல்லை. எதிர்மாறாக நிலவும் நில அளவுக்கேற்ப பண்ணைத் தளவாட வசதி காட்டி நிலஉடைமையைப் பொருளாதாரப்படி உகந்த சிக்கனமான விளைச்சல் தரும்படி செய்யலாம் என்பதே மேலும் பொருத்தமான, தர்க்கவியலான நேர்நிலை முடிவாக அமையும்.

இந்தக் காரணத்தால் இந்திய வேளாண்மையின் சீர்கேடுகளைச் சரி செய்ய பெரிய பண்ணைகளாக உருவாக்கும் முறை உதவாது. மாறாக முதலை அதிகப்படுத்தியும் முதல் அடிப்படைச் சரக்குகளின் விளைச்சலை அதிகப்படுத்தியும் தான் அந்தச் சீர்கேடுகளைத் தீர்க்கலாம். சேமிப்பு மூலம் முதல் அல்லது மூலதனத்தைப் பெருகச் செய்யலாம். இந்தச் சேமிப்பு விளைச்சலில் உபரியால் (surplus) கிடைக்கும் என்பது அரசியல் பொருளாதாரச் செய்தியாகும்.

நமது மக்கள்தொகைக்கு ஏற்றவாறு பெருந்தொழிலாக உள்ள வேளாண்மைத் தொழிலில் உபரி கிடைக்கிறதா? இல்லை என்ற விடையை நாம் தரத் தயாராக இருக்கிறோம். ஆனால் நில உடைமைகளைத் திரட்டிப் பண்ணைகளாக்கியும் பண்ணைகளின் நிலச்சிதறல்களை ஒன்றாக்கியும் அந்தச் சீர்கேடுகளைத் தீர்த்து

விடலாம் என்றும், பற்றாக்குறைப் பொருளாதாரத்தை உபரிப் பொருளாதாரமாக மாற்றலாம் என்றும் ஒப்புக் கொள்கிறோம். நம்மால் செய்ய முடியாத ஒன்று, இந்த நோக்கக் கருத்தை நடைமுறைப்படுத்த முடியாமைதான். இந்தியச் சிறுநில உடைமையின் தீங்குகள் அடிப்படையானவை அல்ல; மாறாக இந்தியாவில் அரசியல் பொருளாதாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியதால் ஏற்பட்ட துணை விளைவுகளாகும். நிலையான தீர்வை எட்டுதல் முதன்மையான தவறினை இனங்காண்பது தான்.

அதற்கு முன்பு நமது சமூகப் பொருளாதாரம் நம்மை எப்படி வாட்டி வதைக்கிறது எனக் காண்போம். பேரளவில் நமது இந்தியா ஒரு வேளாண்மைப் பொருளாதார நாடு என்பது எல்லோரும் கூறும் கருத்து. தற்போது பேரளவு நிலப்பகுதி உழவில் இருந்தாலும் நமது மக்கள்தொகையைக் கருதும்போது அது மிகச் சிறுபகுதி நிலமே.

1895-ஆண்டுக்கான மல்ஹால் (Mulhall) அவர்களின் புள்ளி விவரம் மேற்கூறிய கூற்றை மெய்யாக்குகிறது.

1895-இல் தனிமனிதருக்கான சராசரி நில உடைமை

பிரிட்டன்	அயர்லாந்து	பிரான்ஸ்	ஜெர்மனி	ருசியா
0.91	3.30	2.30	1.70	5.60

ஆஸ்திரலியா	இத்தாலி	ஸ்பெயின் மற்றும்	அமெரிக்கா	இந்தியா
2.05	1.75	2.90	8.90	1.0

1895-க்குப் பிறகு நிலைமை மேலும் மோசமடைந்துவிட்டதைக் கீழ்வரும் தகவல் காட்டுகிறது

	1881	1891	1901	1911
வங்காளம்	1.5	0.8	1.12	—
பம்பாய்	1.7	1.6	1.41	1.30
சென்னை	1.3	0.3	0.68	0.79
அசாம்	—	0.5	0.78	0.85
பஞ்சாப்	1.2	1.3	1.05	1.11
அவுத்	0.81	0.7	0.73	0.75

	1881	1891	1901	1911
வடமேற்கு மாநிலம்	—	0.8		
பர்மா	—	1.5	1.08	1.09
மத்திய மாநிலம்	1.67	2.4	1.80	1.79
பிரிட்டிஷ் இந்தியா	1.04	1.0	0.86	0.88

இப்போது இயல்பு மீறிய நிகழ்வு என்றால் என்ன என்று பார்ப்போம். பேரளவு வேளாண்மைத் தொழிலை நம்பிய மக்கள் தொகையோடு மிகக்குறுகிய அளவு நிலத்தோடு ஒப்பிடும்போது விவசாயத்தைச் சார்ந்த பலர் வேலைசெய்யாமல் உபரியாக உள்ளனர் என்று தெரிகிறது. இந்தியப் பண்ணைகளில் இது போல எத்தனை பேர் உபரியாக உள்ளனர் என்பதற்குச் சரியான துல்லியமான கணக்கு நம்மிடம் இல்லை. 1884 ஆம் ஆண்டில் முதன்முதலாக இத்தகைய வேலை இல்லா உபரி உழைப்பாளிகள் தொகையைக் கணக்கிட்ட திரு. ஜேம்ஸ் கயர்டு (Sir James caird) என்பவர் பின்வருமாறு கூறுகிறார்:

''இங்கிலாந்தின் நல்ல விளைச்சல் தரும் ஒரு சதுர மைல் நிலத்தில் 50பேர் வேலை செய்கின்றனர். இதில் 25 பேர் இளையோரும் முதியோரும் கலந்த ஆண்கள், மற்ற 25 பேர் பெண்களும் பையன்களும் சேர்ந்தவர். இந்தியாவில் 1 சதுர மைலில் இதைப் போல நான்கு மடங்கு உழைப்பாளிகளை அதாவது 200 பேரை அனுமதித்தால் கூட மொத்த மக்கள் தொகையில் மூன்றில் ஒருவருக்குத் தான் வேலை கிடைக்கும்.''[24]

1881-ல் நமது இந்திய மக்கள்தொகை 25.4 கோடி. இதில் 2/3 பகுதியினர் வேளாண்மையைச் சார்ந்தவர். ஒரு மதிப் பீட்டின் படி மூன்றில் ஒரு பகுதியினர் மட்டுமே வேளாண்மைத் தொழிலில் வேலை செய்கின்றனர். அடுத்த 1/3 பகுதியினர் வேலையின்றி உபரியாக இருப்பவர்களே. இந்தியக் கிராமப்புறப் பகுதி கூடுதலாகி வர, பயன்பாட்டுக்குக் கிடைக்கும் நிலம் ஒரு புறம் குறைந்து கொண்டே வர, வேலையில்லாதோர் தொகையோ பெருகிப் பல மடங்காகி வருகிறது.

இந்த உபரியாக உள்ள கூலியாளர் தொகை இருவகைப் பொருளாதார விளைவுகளை ஏற்படுத்துகிறது. வேளாண்மக்கள் நிலத்தின் மீது கூடிய விளைவுகளை ஏற்படுத்துகின்றனர். இதைக் கீழ்வரும் அட்டவணையில் உள்ள அளவியலான தகவல் நன்கு தெளிவுப்படுத்துகிறது.

24. இந்தியா, நிலமும் அதன் மக்களும் பக். 225.

1911-ஆம் ஆண்டில் 1 சதுரமைல் உள்ள நிலத்தில் சராசரி மக்கள் அடர்த்தி

மாநிலம்	ஊத் வ. மே மாநிலம்	வங்காளம்	சென்னை	பஞ்சாப்	பம்பாய்	அசாம்	பீரார் மத்திய மாநிலம்	கூர்கு பர்மா	பிரிட்டன்
மொத்தப் பரப்பில்	427	551	291	177	145	115	122	111	53
விளைச்சல் உள்ள பரப்பில்	829	1162	785	453	444	766	360	792	575

இதுபோன்று நிலத்தைச் சார்ந்த அதிக அளவு மக்கள்தொகை வேறு நாடு எதிலுமே உலகத்தில் இல்லை. இதனால் ஏற்படும் விளைவு அனைவரும் அறிந்ததே.

பிறர் சொன்னவற்றைக் கருத்தில் கொள்ளாவிட்டாலும் நிலத்தை மிகப் பலர் சார்ந்திருப்பது நிலம் பிளவுபடுவதற்கான முதனிலைக் காரணமாகும். இந்த உண்மை புரிந்து கொள்ளாது செயல்படுத்தப்படும் வாரிசுரிமைச் சட்டம் பரவலான வருத்தத்தைத் தான் தோற்றுவிக்கிறது. வாரிசுரிமைச் சட்டத்தால் தான் நிலம் பிளவுபடுகிறது என்பது இந்த உண்மைச் சூழ்நிலையைத் தலைகீழாகப் பார்க்கிற செயலாகும். வெறும் சட்டமே துன்பமும் துயரமும் தராது. அந்தச் சட்டத்தைப் பின்பற்றுவது தான் துயரம் தருகிறது. துன்பம் தரும் சட்டத்தை நாம் ஏன் பின்பற்றத் துடிக்கிறோம். ஏனெனில் அது தான் ஆதாயம் தருவதாய் அமைகிறது. இதில் புதுமை ஏதுமில்லை. உழவு மட்டுமே தொழிலாக உள்ள நிலையில் நிலம் இல்லாமல் இருப்பதைக் காட்டிலும் சிறுதுண்டு நிலமேனும் பெற்றிருப்பது ஆதாயமானதாகத் தோன்றுகிறது. இந்த நிலையில் இந்தச் சிறுநிலத்துக்கும் அரசு வாரம் (premium) வசூலிக்கும் போதுதான் அது துன்பமும் துயரமும் ஏற்படுத்துகிறது. வேளாண்மையை மட்டுமே நம்பிப் பேரளவு மக்கள் வாழ்வதால் இந்த வாரத்தொகையும் அளவுக்கு அதிகமாகி விடுகிறது. இந்த நிலையில் இயல்பாகவே வேளாண்மைதவிர வேறு ஊதியம் தரும் வேலை இல்லாமையால் சமுதாய உறுப்பினர் ஒவ்வொருவருமே ஒரு சிறு நிலவுடைமையையேனும் பெற வாரிசுரிமைச் சட்டத்தை கையாளக் கட்டாயம் ஏற்படுகிறது. அது எவ்வளவு சிறிதாய்ப் போனாலும் கவலைப்படுவதில்லை. எனவே, வாரிசுரிமை சட்டம் நிலத்தைத் துண்டாடுகிறது என்பதைவிட நிலத்தை வேளாண்மை செய்வதற்காக நம்பிப் பலர் இருப்பது தான் நிலம் பிளவுபடக் காரணமாகிறது என்பதே சரி. பேரா. ஜேவான்ஸ் கருதுவது போல[25] முதல் வளமில்லாமையால் சிறுசிறு துண்டாக நிலம்

25. மேலதே. அறிமுகம். பேராசிரியர் ஜேவான்ஸ் வாசகரிடம் இந்திய வேளாண்மை

பயிரிடப்படவில்லை. மாறாக, சிறுதுண்டு நிலம் பயிரிடுவது மட்டுமே அவர்களுக்கு இயன்ற ஆதாயம் தரும் கட்டாயநிலை இருப்பதால் தான் அவர்கள் சிறுதுண்டு நிலங்களைப் பயிரிட்டு வருகின்றனர். இதைவிட வேறு அதிக ஆதாயம் தரும் வேலையை அவர்களுக்குத் தர வேறு வழிமுறைகள் இல்லாமையே இதற்கு முக்கிய காரணமாகும். மேலும் ஆதாயமிக்க பணி கிடைத்தால் சிறுதுண்டு நிலத்தைப் பயிரிடுவதை அவர்கள் நிறுத்திவிடுவர். இதிலிருந்து பேரளவு மக்கள்தொகையினர் நிலத்தைச் சார்ந்து இருப்பதால் சிறுநிலப் பயிரிடும் வழக்கம் நிலைத்து நிலவி வருகிறது.

நமது விவசாயப் பெருமக்கள் நில உற்பத்தி செயல்பாட்டில் பங்கெடுக்கத் தீவிரமாகப் பெரிதும் போராடினாலும் சர் ஜேம்ஸ் கைர்டு (Sir James Caird) மதிப்பிட்ட **செந்தரத்தின்** (standard) படி பேரளவு நிலம் பயிரிடப் படாமலே கிடக்கிறது. ஒருபுறம் பேரளவில் பயிரிடாநிலம், மறுபுறம் உழைப்பில் ஈடுபட இயலாத பேரளவு மக்கள்தொகை, இன்னொருபுறம் பயன்படுத்தப்படாத முதல், இந்த மூன்றும் வெவ்வேறு வகைகளில் பொருளாதார வளர்ச்சிக்குக் குந்தகம் தருபவையாகும். பயன்படாத முதலும் உழைப்பில் ஈடுபடாத உழைப்பும் வெவ்வேறு விளைவுடையன. செயல்படாத முதல் பொருளீட்டாதது மட்டுமல்ல; அதைக் கட்டிக் காக்கும் செலவினத்தையும் உருவாக்குகிறது. உழைப்பு நம்பிய மக்கள்திரள் உழைத்தாலும் இல்லாவிட்டாலும் வாழ்வதற்காக உணவு உட்கொண்டே ஆகவேண்டும். எனவே உழைக்கா மக்கள் கூட்டத்தினர் சூறையாடியோ கொள்ளையடித்தோ வாழ்கின்றனர். இந்த உழைப்பில் ஈடுபடா மக்கள்தாம் இந்திய வளங்களைச் சுரண்டியுண்ணும் பெருந்தீனிகள். இந்திய வளத்தை இவர்கள் பெருக்காவிட்டாலும் பரவாயில்லை. இருக்கும் வளத்தையும் குன்றச் செய்து வருகின்றனர். எனவே உழையாமக்கள்தொகை தேசிய வருமானத்தை மந்தப்படுத்தச் சீர்குலைக்கிறது. தனி மனிதனைப் போலவே சமூக வருமானம் (1) செய்யப்படும் முயற்சி (2) கையிருப்பில் உள்ள வளம் இரண்டின் சமநிலை பொறுத்தே அமைகிறது. எனவே தனி நபர் அல்லது சமூக

யின் குறைகள் மக்களின் தரங்குறைந்த வாழ்க்கையால் உருவானவை என்ற கருத்தோட்டத்தைப் பதிக்க முனைகிறார். வாழ்க்கைத் தரம் உயர்ந்தால் அது கட்டாயப்படுத்தும். ஏனெனில் உயர்ந்த வாழ்க்கைத்தரம் சிறுநிலத்தை ஏற்பதை விட இடப்பெயர்ச்சிக்கு வழிகோலும். நிலஉடைமையளவு மாற்றத்தையும் வாழ்க்கைத் தரத்தையும் மேற்கூறியபடி உறவுபடுத்துவது சிந்தனை குறைந்த வாசகரிடம் தவறான எண்ணப் பதிவை உருவாக்கி விடும். எனவே அதற்காக ஒரு சில கூறுவோம். வாழ்க்கைத்தரம் என்பது வழக்கப்படுத்தப்பட்ட நுகர்வின் அளவு. இந்த நுகர்வினது அளவை—அதன் அடித்தளத்தைத் தீர்மானிப்பது எது? அறுதியாக உற்பத்தியின் அளவு தான். உற்பத்தி உயரும்போது வாழ்க்கைத் தரமும் உயரும் என நாம் உறுதியாகச் சொல்லலாம். வாழ்க்கைத்தரம் உயர்த்தும் எண்ணம் மட்டுமே அதைச் சாதிக்க முடியாது. எனவே உற்பத்தி மட்டுமே வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும், பயணப்பட்டறிவோ கல்வியோ தரும் எண்ணமல்ல. உயர் உற்பத்திக்கான வாய்ப்பு ஏற்படுத்துவது வாழ்க்கைத் தரம் உயர்த்த வழி வகுக்குமெனவும் சில உடைமையைத் தவிர்க்கும் எனவும் பேராசிரியர் ஜேவான்ஸ் கூறினால் நாமும் அதை ஏற்கிறோம்.

வருமான நடப்பு உழைப்பு ஆதாயத்திலிருந்தோ அல்லது திரட்டி வைத்திருந்த கையிருப்பிலிருந்தோ கிடைக்கிறது எனக் கொள்ள லாம்.

இன்று சமுதாயம் நுகரும்பகுதி நடப்பு உற்பத்தி உழைப்பி லிருந்து பெறப்படுகிறது அல்லது திரண்டிருக்கும் முந்தைய உற் பத்தி உழைப்பிலிருந்து பெறப்படுகிறது. இந்த வரைமுறைப்படி தற்போதைய நிலையை மதிப்பிட்டால் நடப்பு முயற்சி மிகவும் அருகிவிட்டது புரியும். மேலும் தற்போதைய நுகர்வைப் பழைய இருப்பில் பெற பேரளவு திரண்ட செல்வ வளமும் நம்மிடம் இல்லை என்பதும் உண்மை. எனவே நமது சமுதாயம் முதல் (Capital) பற்றாக்குறை சமூகமாக உள்ளது. முதல் என்பது நுகர்வு போக உபரியாகத் திரட்டி வைக்கப்பட்ட முந்தைய உழைப்புச் செல்வம். எங்கு முயற்சி இல்லையோ, அங்கே வரு மானம் இல்லை, உபரி இல்லை மற்றும் முதலும் (capital) இல்லை.

எனவே இத்தகைய நமது சமூகப் பொருளாதார நிலைதான் வேளாண்வளர்ச்சிக்குக் குந்தகமானதாய் அமைகிறது. மேலும் வேளாண்மையை மட்டுமே நம்பிப் பலரும் இருப்பது எப்படி நிலத்தை துண்டாட வைக்கிறது என்றும் காட்டினோம். நமது வேளாண்மை நம்பிய மக்கள் அனைவரையும் உற்பத்தியில் உற் பத்தித் திறனுடன் ஈடுபடுத்த இயலாத நிலையில் பலர் உழைக் காமல் இருக்க வேண்டியிருப்பதை விளக்கினோம். இந்த உழைப் பில் ஈடுபடா பட்டாளம் நமது நாட்டு முதலை அரித்துத் தேய்த்து விடுகிறது என்றும் கூறினோம். இதனால் தான் நமது மேற்கூறிய பொருளாதார ஆய்வு மூலம் நமது சமூகப் பொருளாதார நிலை யில் நிலத்தைத் திரட்டிப் பண்ணைகளாக மாற்றுவது பொருளா தார வளர்ச்சிக்கு உதவாது தோல்வியையே தழுவும் எனக் கூற விழைகிறோம்.

சிறு உடைமைதான் அடிப்படை தீமை எனக்கருதுவோர் பெரும் பண்ணை உருவாக்கத்தைப் பரிந்துரைக்கின்றனர். ஆனால் இது தவறான அரசியல் பொருளாதார நிலைப்பாடாகும். மேலும் தாமஸ் அர்னால்டு கூறுகிறார்:

தவறான அரசியல் பொருளாதாரம்தான் குற்றத்திற்கு வழி வகுக்கும் முதற்காரணி. நிலத்தைத் திரட்டிப் பெரிய பண்ணை யாக மாற்றுவது சிக்கன வேளாண்மைக்கு வழி வகுக்காது. இத் தகைய செயற்கைத்தனமான பண்ணையாக்க முயற்சிகள் பல சமூகத் தீங்கேடுகளை நல்கும். இது நில உடைமையற்ற பெரிய பட்டாளத்தை உருவாக்கும். தனி மனிதனுக்கும் மகிழ்ச்சி தராது. நாட்டுக்கும் நலம் விளைவிக்காது. பெரிய பண்ணைகளை உரு வாக்கி அவற்றைச் சிக்கனமாக உற்பத்தி செய்ய போதுமான முதலும் தளவாடங்களும் வாங்கிட முடிந்தாலும் இம்முறையை

நாம் ஒப்புக் கொள்ள முடியாது. ஏனெனில் இது உழைக்க வாய்ப்பற்ற மக்கள்தொகையைப் பேரளவில் உருவாக்கிவிடும். இதற்குக் காரணம் முதலாளித்துவ வேளாண்மை விளைச்சல் முறைக்கு மிகக் குறைந்த மக்கள் தொகையே போதுமானதாகும்.

நிலத்தைப் பண்ணையாக்குவது சரியல்ல எனில் சிதறுண்ட நிலத்தை ஒன்று திரட்டி ஒருங்கிணைப்பது சரிவருமா? நமது சமூகப் பொருளாதாரச் சூழ்நிலையில் இதுவும் சரியல்ல என்றே கூறவேண்டும். ஒருங்கிணைந்த நிலத்தைத் துண்டாகிச் சிதறிடு வதைத் தடுக்கும் வழி மட்டுமே நல்ல பலனைத் தராது. மாறாக இது ஒரு சட்டவழி கண்துடைப்பாகவே செயல்படும். இதைப் புரிந்து கொள்ள நடைமுறையில் தனியொருவருக்குப் போகும் வாரிசுரிமை எப்படி இருக்கிறது என அறிவதே போதும். நில அளவைப் பதிவுகளில் இத்தகைய வாரிசுரிமை எப்படிப் பதியப் படும் என்பதைக் கவனிப்போம். பம்பாய் நில வருவாய் நடை முறை நூலின் இயல் 1, பிரிவு 3 இல் உள்ள 6ஆம் துணைப் பிரிவுப்படி (clause) 'நில அளவை எண்' (Survey Number) என்பது நிலப்பரப்பும் பிற செய்திகளும் தனித்தனியாக மாநகர், பேரூர், அல்லது கிராம நில அளவைப் பதிவேட்டில் எழுதப்படும் நிலப்பகுதியைக் குறிக்கும் எண். இது அந்த நிலஅளவை எண் ணில் அமைந்த நிலப்பங்கைத் தெரிவிக்கிறது. துணைப்பிரிவு 7 இன்படி,

''ஒரு நிலஅளவை எண்'' தரும் சட்டம் ஒப்புக்கொண்ட நிலப் பங்கு'' (Recognised share of a survey number) என்பது அந்த எண்ணில் உள்ள தனியாகத் தீர்வை மதிப்பிட்டு பதிவு செய்யப் படும் துணைப்பகுதி நிலமாகும்.

தனிமனிதனுக்கு மட்டுமே உரிமையாகும் வாரிசுரிமை முறையை ஏற்றதும் ஒவ்வொரு நிலஅளவை எண்ணும் கருத்தியலான (ideal) பொருளாதார உகப்புநிலை வாய்ந்த உடைமைக்காக ஏற்படுத்திய பரப்பளவு கொண்டதாக உள்ளபடி அமைக்க வேண்டும். இரண்டாவதாக, அந்த எண்ணில் உள்ள எந்தத் துணைப் பிரிவும் தனித்தனியாக வேறு ஒருவர் மீது பதிவாகாதபடி தடுக்க வேண்டும். அதாவது தனிநில அளவை எண்ணில் பதியப் படும் நிலத்தை எப்போதும் பொருளாதார உகப்புநிலை உடைமை யாகவே அமையும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். அதுமட்டு மல்ல இத்தகைய நில அளவை எண்ணும் ஒரே ஒருவர் பேரில் மட்டுமே பதியும்படி பார்த்து கொள்ள வேண்டும். பரோடா குழு அறிக்கையை நடைமுறைப்படுத்தும்போது இத்தகைய சூழல் நிலவும். ஆனால் கீட்டிங்ஸ் கருத்துப்படி ஒரே நில அளவை எண்ணில் பதியும் நிலம் பொருளாதார உகப்புநிலை நில உடைமையாக இருக்க வேண்டியதில்லை. ஆனால் பல நில அளவை எண்களில் அமையும் பொருளாதார உகப்புநிலை நில

உடைமையும் சிதறிய பகுதிகளையும் உள்ளடக்கி ஒரே ஒருவர் பேரில் பதிவு செய்தால் போதும். இதனால் கீட்டிங்ஸ் முறை நடைமுறைப்பலன் ஏதும் தராது என்பது தெளிவு. இதனைத் தள்ளிவிட்டால் ஒருங்கிணைந்த நிலத்திற்கான தனி ஒருவர்க்குச் செல்லும் வாரிசுரிமை என்பது நடைமுறையில் பொருளாதார உகப்புநிலை நிலஉடைமை அளவுக்கும் கீழான நில உடைமை உரிமைகளைச் சட்டம் ஏற்காது; பதிவு செய்யாது என்பதுதான். இதனால் ஒருங்கிணைந்த நிலம் துணை நிலப்பிரிவுகள் உரு வாவதைத் தடுக்கிறது. ஆனால் நிலம் பிளவுபடுதல் பல சூழ் நிலைக் காரணிகளால் நிகழும் நிகழ்ச்சி, இது பொருளாதார காரணங்களுக்கு மதிப்பு தருவதில்லை. நிலம் பிரியாமல் பார்த்துக் கொள்வது நிலமதிப்பைக் குறைக்க வழிவகுக்கும் என்கிறார் கீட்டிங்ஸ். மேலும் முதலீட்டு வளம் குறையும்போது நிலம் பிளவு படுவதைத் தடுப்பது பொருளாதாரச் சிக்கன விளைச்சலைத் தடுக்கிறது. இந்நிலை எந்தக் காரணத்துக்காக நிலம் பிளவுபடக் கூடாது என்றோமோ அதற்கு எதிரான விளைவுக்கு இட்டுச் செல்கிறது. மேலும் நிலம் பிளவுப்படக் கூடாது எனச் சட்டம் இயற்றுவதே அச் செயல்பாட்டை நடைமுறைப்படுத்த எந்த உத்தர வாதமும் தராது. எதிர்பாராத சூழ்நிலைகளின் காரணமாக நிலம் பிளவுப்பட்டுக் கொண்டேதான் இருக்கும். நிலத்தை நம்பிப் பலர் இருக்க வேண்டிய சமூகச் சூழ்நிலையும், குறைந்து கொண்டே வரும் முதலும், முதலீட்டு வளமும்—இதைப் பற்றி நிலம் ஒன் றிணைந்து செறிவாக இருக்க வேண்டும் என்பவர்களும், பெரி தாக்கிப் பண்ணைகள் உருவாக்க வேண்டும் என்பவர்களும் இதைக் கருதியே பார்க்க மறுக்கின்றனர்—நிலத்தைத் துண்டாடும் சாத்தியக் கூற்றையே தோற்றுவிக்கின்றன. இதற்கு எதிராக நாம் சட்டமியற்றுவதும் துண்டாடப்படும் நிலவுடமையை ஏற்ற நில அளவை எண்களால் பதிவு செய்ய மறுப்பதும் நடைமுறையில் உள்ள நிலவுடமையை, அதாவது, உண்மை நிலவரத்தைப் பதி வேடுகளில் பதிய மறுப்பதேயாகும்.

நிலம் பிளவுபடாமலிருக்கச் செய்வது பற்றிய இந்த ஆய்வுக்குப் பிறகு நிலம் ஒன்று திரட்டல் பற்றிய நமது கருத்தைக் கூற பெரிதும் சிந்தனை ஏதும் தேவையில்லை. ஒன்று திரட்டலும் பிளவுபடாமல் காத்தலும் ஒன்றையொன்று சார்ந்தவை. திரண்ட நிலத்தைப் பிளவுபடாமல் கட்டிக்காக்க முடியவில்லை என்றால் சிதறிய நிலத்தை ஒன்று திரட்டிடும் திட்டம் எதற்கு? இது நடைமுறையில் எளிதாகச் செயல்படக் கூடியதென்றாலும் பயனில்லை அல்லவா? தேவைப்பட்ட சமூகப் பொருளாதார அமைப்பை உருவாக்காத வரை இந்த 'பகீரதப் பிரயத்தனம்' நடைமுறையில் பலன் ஏதும் தராது. தோல்வியையே தழுவிடும்.

சிதறிய நிலத்தை ஒன்றாக்குவதும், பெரிய பண்ணையாக்கலும் வேலையில்லாக் கூலி உழைப்புப் பட்டாளத்தை உண்டாக்குவது

அது தரும் நலமனைத்தையும் விழுங்கி ஏப்பமிட்டு விடும். எனவே பேராசிரியர் கில்பர்ட் ஸ்லேட்டர் (Prof. Gilbert Slater) இத் தகைய பொருளாதாரத் திட்டங்களை எதிர்க்கிறார்.[26]

பேராசிரியர் ஸ்லேட்டரின் இந்தக் கருத்துக்கு மாறாக இந்தத் தீமையைத் தடுக்க முடியும் என நாம் நம்புவதால் நிலம் பெரிய பண்ணையாக மாற்றுவதற்கான பல திட்டங்களைக் கூறுகிறோம். எனவே, இத்திட்டங்களின் துணை விளைவான வேலையில்லா உழைக்கும் மக்கள் தொகையைச் சமாளிக்கப் பல முயற்சிகளை மேற்கொள்வதில் தான் நம் கருத்தைச் செலுத்த வேண்டும்.[27]

வேளாண்துறையில் உபரியாக உள்ள உழைப்புக் கூட்டத்துக்குப் புறத்துறைகளில் வேலைவாய்ப்பு தருவதன் மூலம் வேளாண்மை நிலம் சார்ந்து வாழும் மக்கள் தொகையளவைக் குறைக்கிறோம். மேலும் நிலத்தில் வேலையில்லாத இந்த உழைப்பாளிகட்கு அது தர வேண்டிய பிழைப்பூதிய வாரமும் (Premium) தவிர்க்கப்படு கிறது. உழைப்பாளர்கள் உற்பத்தியில் ஈடுபட்டால் உழைப்புத் திரள், சூறை கொள்ளைகளில் ஈடுபடாது. அதோடு, நாட்டு வருமானத்துக்கு வேளாண்சாராப் புற உழைப்பின் மூலம் முதல் உபரியையும் தோற்றுவிக்கும். இதனால் முதல் வளம் பெருகும். எடுத்த எடுப்பில் வேடிக்கையாகத் தோன்றினாலும் வேளாண் பிரச்னைகளின் அடிப்படைத் தீர்வின் திறவுகோல் இந்தியாவைத் தொழில்மய நாடாக்குவதிலேயே அடங்கியுள்ளது என்பது தெளிவு. இந்தத் தொழில்மயப்பாட்டின் தொடர் விளைவாக ஏற்படும் நிலம் நம்பிய உழைப்புத் திரளின் தொகை குறைதலும் முதல் (Capital) வளம் பெருகலும் முதலீட்டு வள வாய்ப்பை நல்கி அதன் மூலமாக நில உடைமையைப் பெரிய பண்ணை முறைக்கு இட்டுச் செல்லும். இதுமட்டுமல்ல, நிலம் நம்பிய பிழைப்பூதிய நல்கையைத் தவிர்க்க உதவும் தொழில்மயப்பாடு, நிலம் துண் டாடிப் பிரிக்கப்படுவதற்கான சூழ்நிலை ஏற்படுவதைப் பெரிதும் தவிர்க்கும். எனவே மேற்கூறிய பொருளற்ற திட்டங்களைக் காட்டி லும் தொழில்மயமாக்கம் பெரும் பயன் விளைக்கும். மேலும்

---

26. 'உருகும் பானையில் கிராமம்', இந்தியப் பொருளாதாரக் கழக சுழலிதழ், தொகுதி-1, எண் 1.

27. பேராசிரியர் ஜேவான்ஸ் உபரி கிராம மக்களை நகருக்குக் கொண்டு செல்வது பற்றிப் பேசுகிறார். பேராசிரியர் ஜெவான்ஸ் உபரி மக்கள் உபாதையை அறிந்துள்ளது குறித்து உண்மையிலேயே இக்கட்டுரை ஆசிரியருக்கு மகிழ்ச்சிதான். ஆனால் உணர மறுத்தது இந்த அடிப்படை தீமை தான் மற்ற வேளாண்மைதுறையின் கேடுகளுக்கான ஊற்றுக்கண் என்பதைத்தான். தொழில்மய மாதலை எதிர்க்க தனது அறிவு, செல்வாக்கு அனைத்தையும் ஒன்று திரட்டி வாதிடும் பேராசிரியர் ஜெவான்ஸ் இந்தக் கிராம மக்களை எதற்காக நகருக்கு இடம் பெயர வைக்க விழைகிறார். இதன் பொருள் மறைமுகமாகத் தொழில் வளர்ச்சியால் ஏற்படும் விளைவுதானே. ஆனால் இந்தியாவில் சிற்சில நகரங் களே உள்ளன என்பதை மறந்து விட்டுள்ளாரா? உண்மையில் பேராசிரியர் ஜேவான்ஸ் உபரி மக்கள் தொகையில் தீமை தான் விளைகிறது என நம்பினால் இத்தொகை வாழப் பல நகரங்களை உருவாக்க வேண்டும். அதாவது இந்தியாவைத் தொழில்மயப்படுத்த வேண்டும்.

மேற்கூறிய திட்டங்களுக்கான சட்டம் பல சமூகத் தீங்குகளை உருவாக்கிக் கொண்டே தான் நிலத்தின் அளவைப் பெரிதாக்கும் அல்லது துண்டாடப்படாமல் தடுக்கும் என்பதை நம் கவனத்தி லிறுத்த வேண்டும். ஆனால் தொழில் மயமோ எந்தவிதப் புற விளைவின்றிப் பெருநில உடைமையை நேரடி ஆதாயமாகக் கிடைக்க வழி வகுக்கிறது.

நிலத்தைப் பெரும் பண்ணையாக்குவதும் (Enlargement) நிலச் சிதறல்களை ஒன்றாக்குவதும் (Consolidation) ஒருங்கிணைந்த நிலவுடமையைச் சிதறாமல் தொடர்ந்து பாதுகாப்பு செய்ய, நமது தீர்வு கீழே தரப்படுகிறது. நாம் தொழில்மய மறிவினை (Reflex) விளைவால் வேளாண்மையின் கேடுகளைச் சரிசெய்ய விரும்பு கிறோம். இதனைக் கற்பனையாகக் கொள்வோருக்குத் தக்கச் சான்றுகள் தருவோம். 1883 ஆம் ஆண்டில் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் தொழில்மய மறிவினை விளைவால் வேளாண்மைத் தொழில் பெருகியது என்பது பற்றி மேற்கொண்ட ஆய்வையும் அதன் முடிவுகளையும் முன்வைக்கலாம். ''லண்டன் டைம்ஸ்'' இதழிலிருந்து இது பற்றிய விரிவான முழு விவரம் கீழே தரு கிறோம்.

''அமெரிக்க ஐக்கிய நாட்டு வேளாண் துறை புள்ளிவிவர அறிஞர் அண்மையில் வெளியிட்ட ஓர் அறிக்கை மூலம் விவ சாயத் தொழிலுக்கும் பிற தொழில்களுக்கும் உள்ள உறவு விகிதம் கூடக்கூட நிலத்தின் பணமதிப்பு குறைகிறது என நிறுவியுள்ளார். வேளாண்நிலம் அதில் முழுமக்கள் தொகையும் நம்பி வாழும் நிலையை விடப் பாதிபேர் மட்டும் ஈடுபடும் நிலையில் உற்பத்தித் திறன் மிக்கதாய் உள்ளது. கூடுதல் உபரி மதிப்பையும் தோற்று விக்கிறது. கால்பங்கினரே ஈடுபடும் நிலையின் விளைச்சல் பொரு ளின் மதிப்பும் உயர்கிறது. புள்ளி விவரம் மூலம் பல தொழில் பெருகல் நாட்டு வளத்தைப் பன்மடங்காக்கும் என்பதும் தெளி வாகிறது. பண்ணை அருகில் உள்ள தொழில்பட்டறை பண்ணை விலையைக் கூட்டி அதன் விளைச்சல் பொருள்களின் விலையை யும் உயர்த்துகிறது. அமெரிக்காவை நான்காகப் பிரிப்போம். 30%த்திற்கும் குறைவான வேளாண் மக்கள் தொகையுள்ள பகுதியைப் பிரிவு ஒன்று எனவும் 30%த்திற்கும் கூடுதலாகவும் 50%த்திற்குக் குறைவாகவும் வேளாண்மை மக்கள் தொகை உள்ள பகுதியைப் பிரிவு இரண்டு எனவும் 50%திற்குக் கூடுதலாக வும் 70%திற்குக் குறைவாகவும் வேளாண் மக்கள் உள்ள பகு தியை மூன்றாம் பிரிவு எனவும் 70%திற்கும் கூடுதலாக வேளாண் மக்கள் தொகை உள்ள பகுதியைப் பிரிவு நான்கு எனவும் கொள் வோம். பண்ணை விலைமதிப்பு அதில் வாழும் வேளாண் மக்கள் தொகைக்குத் தலைகீழ் விகிதத்தில் அமைகிறது. நான்காம் பிரிவில் பெரும்பாலார் வேளாண்மை நம்பிய மக்களே வாழ்கின்றனர்.

இதில் பண்ணைவிலை ஏக்கருக்கு $5.28; மூன்றாம் பிரிவில் இது $13.03; இரண்டாம் பிரிவில் இது $ 22.21 முதல் பிரிவில் பண்ணை விலை மதிப்பு ஏக்கருக்கு $ 40.91 ஆகும். இதிலிருந்து கலப்பு பொருளாதார மாநிலம் அல்லது மாவட்டத்தின் மேம்பாடு விளங்குகிறது. நில மதிப்பு கூடுவது மட்டுமல்ல. ஓர் ஏக்கரில் விளையும் விளைச்சலும் கூடுகிறது. பண்ணைக் கூலியும் உயர்கிறது. பட்டறைகளும் தொழிலகங்களும் தொழில் முனைவருக்கு மட்டுமன்றி அதே அளவில் உழவர் சமுதாயத்துக்கும் உதவுகிறது.''

எனவே நாம் கூறிய தீர்வு நடைமுறையில் ஏற்கனவே நிறுவப் பெற்ற தீர்வு ஆகும். எனவே தொழில்மயமாக்கல் மட்டும் நிலவுடைமையைப் பெரும் பண்ணையாக்க உதவும். அதோடு நிலம் துண்டாடப்பட்டுப் பிளவுபடுவதைத் தவிர்க்கும். இது திண்ணம். ஆனால் தொழில்மயமாதல் நிலத்தை ஒன்று திரட்டுவதற்குப் போதிய அளவு உதவுவதில்லை. எனவே இதற்கு ஒரு தீர்வு வேண்டும் என்பது உண்மையே. ஆனாலும் தொழில்மயமாதல் நேரடியாக நிலச்சிதறல் ஒருங்கிணைக்கப் பயன்படாது என்றாலும் மறைமுகமாக அதற்கு வழிவகுக்கலாம். நிலம் நம்பிய பிழைப்பூதிய வாரம் தள்ளுபடியாகும் வரை எந்தச் சமநிலையான கோட்பாட்டாலும் சேர வாய்ப்பு குறைந்தே காணப்படும். தொழிலகம் தரும் சிறு பணிகளா இந்தப் பிழைப்பூதிய வாரத்தைக் குறைக்கும்? இல்லவே இல்லை. சிதறிய நிலத்துண்டுகளை ஒன்றாக்கும் மற்றொரு கூறுபாட்டைக் கருதினாலும் இதே முடிவுக்கு வருகிறோம். இதற்குச் சிதறிய நிலங்களை ஒருங்கிணைப்பதற்கு முன்பு தொழில்மயமாதல் அமைய வேண்டும். மேலும் நிலம் துண்டாடிப் பிளவுபடுவதைத் தடுப்பதற்கான அரணின்றி, நில ஒருங்கிணைப்புத் திட்டங்களைப் போடுவதால் பயனேதும் விளையாது. இத்தகைய அரணை தொழில்மயமாக்கமே தரும். இது மட்டும் நிலம் நம்பிவாழ் மக்கள் தொகையைக் குறைத்து நிலம் பிரிவுகளாகிச் சிதறலைத் தடுக்கும். வேளாண்மையின் அடிப்படை தீமை சிறுநிலவுடைமையும் நிலச் சிதறல்களுமே என்பதால் அதைத் தீர்க்கத் தொழில்மயமாக்கலே சரியான வழிமுறையாகும்.

பல நாடுகளின் பொருளாதார நிலையை ஆய்வு செய்த சர். ராபர்ட் கிஃப்பன் (Sir Robert Giffen) கீழ்வரும் செய்தியைக் கூறுகிறார்.

''மக்களின் தேவை அவர்களது செல்வ வளர்ச்சியைப் பொருத்து வளர்ந்து கொண்டே போகிறது. பிற தொழில்களில், அதாவது தொழில் வேலையில் மக்கள் ஈடுபட நிலம், சுரங்கம் நம்பிய வேலைகளில் ஈடுபடும் மக்கள் அளவு குறைந்து கொண்டே போகிறது.''[28]

28. நிதி றற்றிய கட்டுரைகள். இரண்டாம் வரிசை. பக். 240.

நமது இந்திய தொழில் வளர்ச்சி எந்த நிலையில் உள்ளது?

ஆண்டு	இங்கிலாந்தும் வேல்ஸும் ஊரகம்	இங்கிலாந்தும் வேல்ஸும் நகரம்	ஜெர்மனி ஊரகம்	ஜெர்மனி நகரம்	அ. ஆ. நாடு ஊரகம்	அ. ஆ. நாடு நகரம்
1790	—	—	—	—	87.5	—
1840	—	—	—	—	77.5	—
1851	49.92	50.08	—	—	—	—
1871	38.20	61.80	—	36	47.6	29.5
1881	32.10	67.90	-	41	44.3	29.5
1891	27.95	72.05	—	47	39.2	36.1
1901	23.00	77.00	—	54	35.7	40.5
1911	19.90	78.10	—	—	33.3	46.3

	பிரான்ஸ்		இந்தியா	
	ஊரகம்	நகரம்	ஊரகம்	நகரம்
1790	—	—	—	—
1840	75.6	24.4	—	—
1851	—	—	—	—
1871	—	—	—	—
1881	—	—	—	—
1891	—	—	64.4	—
1901	—	—	67.5	—
1911	57.9	42.1	71.5	—

(இந்த ஆண்டுகட்கு உரிய விவரங்கள் சரியானவை அல்ல. மூன்று ஆண்டுகள் வரை முன் பின் அமைபவை.)

இந்திய நிலைமை இத்தகைய வல்லுநரின் கூற்றுக்கு நேர் எதிரிடையாக உள்ளது. அமெரிக்கா போன்ற நாடுகள் தொடக்கத்தில் வேளாண் நாடுகளாக இருந்திருந்தாலும் வேகமாகத் தொழில் மயமாகி வருகின்றன. இந்தியாவிலோ நகரமயமாதல் குறைந்து ஊரக மக்கள் பெருக்கம் கூடி வருகிறது. இந்தப் பேரலையை நாம்

சீக்கிரம் சந்தித்தால் நல்லது. யார் எவராயினும் அவர் இந்தியா வின் பால் எப்படிப்பட்ட ஆர்வம் உடையவராயினும்[29] சர். ஹென்றி காட்டன் என்பார் இந்தியப் பொருளாதாரம் குறித்துக் கூறிய கீழுள்ள கண்ணோட்டத்தை விஞ்சல் அரிதே.

''இந்தியாவின் தேவைக்கு மீறிய கூடுதலான வேளாண்மைத் துறை வளர்ச்சி ஆபத்தையே விளைவிக்கும்.''

29 பேராசிரியர் ஜேவான்ஸ் தனது, ''வேளாண்துறையின் முதலாளித்துவ முறை வளர்ச்சி'' என்ற கட்டுரையை 1915 இல் பம்பாயில் நடந்த இந்தியத் தொழில் வளர்ச்சி மாநாட்டில் படித்தார். இவர் அதில் இந்தியா தொழில்மயமாதலை எதிர்த்து வாதிடு கிறார். ஆனால் தொழில்மயமாதல் மட்டுமே வேளாண்மைத் துறையின் முதலாளித்துவ முறை வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்பதைப் பேராசிரியருக்கு நினைவூட்டுகிறோம். இந்தக் கட்டுரைக்கான சரியான திருத்தங்கள் சர். ராபர்ட் கிஃப்பன் முதல்வரிசை கட்டுரைகள் IVஇல் உள்ள ஃபிரான்ஸ் குறித்த கட்டுரையில் உள்ளன.

6

திரு. ரஸ்ஸலும் சமுதாய மறுசீரமைப்பும்

மேதகு திரு. பெர்ட்ரண்ட் ரஸ்ஸல்
எழுதிய
'சமுதாய மறுசீரமைப்புக் கோட்பாடுகள்'
என்னும் நூல் பற்றிய மதிப்புரை

வெளியீடு:
ஜர்னல் ஆஃப் தி இண்டியன் எகனாமிக் சொசைடி
தொகுதி 1, 1918

திரு. ரஸ்ஸலும் சமுதாய மறுசீரமைப்பும்

திரு. பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் எழுதிய ''சமுதாய மறுசீரமைப்புக் கோட்பாடுகள்''[1] என்னும் நூல் ஒரு போர்க்கால நூலாகும். போர்க்கால இலக்கியம் பொதுவாகப் பிரசார நோக்குடைய தாகவோ, அல்லது போர் தடுப்பு நோக்குடையதாகவோ இருக்க லாம். ரஸ்ஸலின் நூல், போர் எதிர்ப்பு நோக்குடையது என்றா லும் அவ்வகையினின்றும் சற்று வேறுபட்டதாகும். நாடுகளை ஆதிக்க நோக்கோடு ஆக்ரமித்து அந்த நாட்டிலுள்ளவர்களின் விருப்பத்திற்கு மாறாக, இயற்கை நிலவியல் அமைப்புக்குப் புறம் பான பிரதேச எல்லைகளுக்குள் அவர்களை அடக்கி ஒடுக்கி வைப் பதைக் கண்டனம் செய்யும் வகையில் எழுதப்பட்ட போர் எதிர்ப்பு நூல்கள் சில உள்ளன. போரில் வெற்றிபெற்றவர் கடைசியாகப் போரின் லாப நஷ்டங்களைக் கூட்டிக் கழித்துப் பார்த்தால் போரில் அவரது இழப்புக்கள் லாபக் கணக்கை விடவும் கூடுதலாகவே இருக்கும் என்று ''மாபெரும் மாயை'' எனும் நூலின் ஆசிரியர் திரு. ஏஞ்சல் (Mr. Angell) போன்றோர் விளக்கியுள்ளனர். ஆனால் திரு. ரஸ்ஸலின் ஆய்வு விளக்கமோ முற்றிலும் வேறானது. மேற் கூறிய பகுத்தறிவு விளக்கங்களால் போரைத் தடுத்து நிறுத்த முடி யாது என்பதே அவரது எண்ணம். ''பகுத்தறிவினால் மட்டும் போர் களைத் தடுக்க முடி யாது. போரில் கொண்டுவிடும் மனஇயல்பு களுக்கு எதிரிடையான எழுச்சியும் உத்வேகமும் கொண்ட ஆக்க பூர்வ வாழ்க்கையே போர் எழுவதைத் தடுக்க வல்லது. எனவே அறிவார்ந்த வாழ்க்கையை மட்டுமன்றி உத்வேக உணர்வுபூர்வமான வாழ்க்கையையும் மாற்ற வேண்டியது அவசியம்''[2] என்கிறார். அவ ருடைய ஆய்வு விளக்கத்தைப் போலவே அவரது சமூகத் தத்துவ மும் வேறுபடுகிறது. அவருக்கு, ''போர் வாயிலாக அறிய வேண் டிய தலையாய விஷயம், மனிதச் செயற்பாடுகளின் உயிரூற்றுக்கள் பற்றியது—அவை யாவை, எவ்வாறு அவை மாறக்கூடும் என நம்பகமாக எதிர்பார்க்கலாம் என்பது பற்றியது. இக்கருத்து உண்மையெனில் இது ஒரு அரசியல் தத்துவத்திற்குரிய அடிப் படையை வழங்குமென்று தோன்றுகிறது. மரபு வழி தாராளக் கொள்கையை (Traditional Liberalism) விட, இத்தத்துவம் உறுதி யாக நிற்கும் வல்லமை பெற்றதாகத் தோன்றுகிறது.''[3]

---

1. லண்டன் ஜார்ஜ் ஆலன் அன்வின் லிமிடெட், 1917.

2. ''சமுதாய மறுசீரமைப்புக் கோட்பாடுகள்'' (Principles of Social Reconstructions) பக்கம் 13

3. அதே நூல்: பக்கம் 9

இம்மனப்பான்மையுடன் இணைந்து இவர் மேற்கொள்ளும் உறுதி நிலை புறத்திலிருந்து நடத்தைப் பற்றிய உளவியல் (Behaviouristic Psychology) பாங்கானது.''[4]

மனிதச் செயற்பாடுகளுக்கான மூலாதாரம் என்னும் இந்தப் புதுக்கருத்து அறிவியலின் ஒரு பகுதியான நடத்தைச் சார்ந்த உளவியலில் ஒரு குறிப்பிடத்தக்க வளர்ச்சியாகும். 'மானிடனின் செயல்களுக்கு புறச் சூழ்நிலையே பொறுப்பாகிறது' என்ற கோட்பாடை இது தகர்த்தெறிந்து விட்டது. அக்கோட்பாடு உண்மை எனில், ஏதும் ஆட்டுவிக்காமல் அசையா நிலையொன்று உண்டு எனக் கொள்ள வேண்டும்; ஆனால் அவ்வாறு ஆடாமல் அசையாமல் இயங்கும் உயிர் என்பது உயிரியல் ரீதியாக உண்மையற்ற நிலையாகும் என்று நடத்தைப் பற்றிய பண்புரைக்கும் உளவியலார் கருதுகின்றனர். இயக்கத்திற்கான அகத்தூண்டுதல் மனிதனுள் அடங்கியுள்ளது; அவன் செயற்போக்கிற்காகவே படைக்கப் படுகிறான் என்ற கருத்து நிலைநாட்டப்படுகிறது. புறநிலை சந்தர்ப்ப சூழ்நிலைகள் எதுவும் ஒரு செயலைத் தூண்டாது. அவை மறு இயக்கத்தை (re-direct) மட்டுமே வழங்கும். மேலும், நடத்தைப் பற்றிய பண்புரைக்கும் உளவியலார் கருத்தின்படி இம்மனப் போக்குகள் செயலாற்றும்போது, அச்செயல்மீது படிந்துள்ள சமுதாயச் சூழல் தாக்கத்தின் விளைவுகளினால் அச்செயல்கள் மாற்றம் பெறுகின்றன. மூல அல்லது அடிப்படையான மனப் போக்குகள் மீது இவ்வாறு ஏற்படும் செயல்மாற்றங்கள் மிகவும் முக்கியமானவை. கல்வி என்ற சொல்லின் விரிவான சொல் விளக்கம் இவையே. அதே சமயம், எல்லா செயல் மாற்றங்களும் சம மதிப்புடையவை அல்ல. சமூகத் தீமைகளாக அமைந்த இத்தகைய செயல் மாற்றங்களைத் தூண்டிய சூழ்நிலைகளையும் நிறுவனங்களையும் புறக் கணித்து, சமூகத்தை மேன்மைப்படுத்த வல்ல போக்குகளை அறிமுகப்படுத்துதல் சமூக சீர்திருத்தவாதிகளின் கடமைகளாகும். இவை எவ்வாறாயினும், இந்தப்போக்குகள் முடிவற்ற மாற்றங்களை உருவாக்கக் கூடியவை என்பதே மிகுந்த சமூக மதிப்புக்குரியதாகும். இது சாத்தியமானதுவே என்று திரு. ரஸ்ஸல் கூறுமிடத்து, ''ஆதி மனிதத் தோற்றத்திலிருந்து மனித மனத் துடிப்புகள் நிலையானவையாக விளங்கவில்லை. சூழ்நிலை, சந்தர்ப்பம் மற்றும் வாழ்க்கை முறை ஆகியவை அவனுடைய அகப்பண்புகளை மிகவும் மாற்றி வருகின்றன. இம் மாற்றங்களின் இயல்புகளை ஆழ்ந்து ஆராய வேண்டும். அரசியல் மற்றும் சமூக நிறுவனங்களால் விளைந்த நன்மை-தீமைகளைப்

4. திரு. ரஸ்ஸலின் வாசகர்கள் அதேசமயம், பேராசிரியர் ஈ. எல். தார்ன்டை எழுதிய ''கல்வியியல் உளநூல்'' (Educational Psychology) தொகுதி - 1 மற்றும் ''மனிதனின் உண்மையான இயற்கை சுபாவம்'' பற்றி (On the Original Nature of Man) ஆகிய நூல்களையும் காண்க.

பற்றி முடிவெடுக்க, மேற்கூறிய ஆராய்ச்சியின் முடிவுகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.''[5]

அரசு, போர், சொத்துரிமை, கல்வி, திருமணம், சமயம் என்று ஆறுவகையான நிறுவனங்களினால் மனித இயல்புகள் அடைந்த மாற்றங்கள் பற்றி ஆறு தலைப்புகளில் திரு. ரஸ்ஸல் ஆய்ந்துள்ளார். இந்த ஆறு தலைப்புகளில் அவர் கூறியுள்ளவற்றைச் சுருக்கமாகத் தொகுத்து நோக்கினாலும் திரு. ரஸ்ஸலின் சமூகத் தத்துவத்தைப் பற்றியக் கருத்தைச் சரியானபடி எடுத்துக் காட்டுவது கடினம். இந்நூல் எடுத்துக் கொண்டுள்ள ஒவ்வொரு துறைக்கும் உரிய இலக்கியங்களுக்கு வழங்கப்பட்ட கொடைகள் அவை. புதுக் கருத்துக்களை வாரி வழங்கி, சிந்தனைகளைத் தூண்டும் அந்த நூலை மூலவடிவில் படிக்க வேண்டும். இவ்வாறு கூறுவது நூல் பற்றி மதிப்புரை வழங்கும் வழக்கத்திற்கு மாறானதாகத் தோன்றலாம். எனினும் திரு. ரஸ்ஸலின் கருத்துப்படி சொத்துரிமை சம்பந்தமான நிறுவனங்கள் மனித இயல்பில் விளைவிக்கும் செயல்வினை மாற்றங்களைப் பற்றி விளக்குவது மட்டுமே நமது நோக்கமாதலின் பொருளியல் துறை இதழ் ஒன்றிற்காக அளிக்கப் படும் இந்த மதிப்புரை இவ்வாறு அமைவதை நியாயப்படுத்தலாம்.

பரிசீலனையைத் தொடங்குவதற்கு முன், போரின் தத்துவம் எவ்வாறு திரு. ரஸ்ஸல் எடுத்துரைக்கும் மனித வளர்ச்சிக் கொள்கையுடன் தொடர்புடையது என்பதை ஆய்வது சிறந்தது.

தொடக்கத்திலேயே ஒன்றைக் கட்டாயம் குறிப்பிட வேண்டும். இவருடைய நூல் போருக்கு எதிரானது என்பதால், இவர் விருப்பு வெறுப்பின்மை தத்துவத்தை (Philosophy of Quietism) கடைபிடிப்பவரென எண்ணினால் இவரை சரிவரப் புரிந்து கொள்ள இயலாது. திரு. ரஸ்ஸல் அமைதி வாழ்வை விரும்பி யுத்த ஒழிப்பில் ஆர்வமுள்ளவராக இருந்தபோதிலும், ''போருக்கு வழிகோலும் உத்வேகம் எத்தனையோ அழிவுகளுக்குக் காரணமாக அமைந்த போதிலும், உத்வேக உணர்வுகள் அற்றுப் போன ஒரு நாட்டை விட, அத்தகைய உத்வேகம் கொண்ட நாட்டின் எதிர்காலம் சிறப்பாக அமையக்கூடும். உத்வேகத்தூண்டுதலே வாழ்வின் வெளிப்பாடு. உள்ளத்தில் அவ்வுணர்வு உள்ளவரை அதனைச் சாவை நோக்கித் திருப்புவதற்குப் பதிலாக வாழ்வை நோக்கித் திருப்பக் கூடிய நம்பிக்கையும் உண்டு. ஆனால் உத்வேகம் இன்மை சாவுக்குச் சமம்; மரணத்திலிருந்து புதுவாழ்வு மலராது.''[6] என்கிறார். அவர் மேலும் ஒப்புக் கொள்ளும் விஷயமாவது, ''இன்று நாடுகளைப் போர் புரியத் தூண்டும் உணர்ச்சித் துடிப்புகள் பலவும் ஆற்றல் நிறைந்த அல்லது முன்னேற்றமான வாழ்க்கைக்கு அவசியமானவை. கற்பனை வளமும், துணிந்த முயற்சி ஆர்வமும் இல்லை

5. ''சமுதாய மறுசீரமைப்புக் கோட்பாடுகள்'' ப. 19.

6. ''சமுதாய மறுசீரமைப்புக் கோட்பாடுகள்'' ப. 21

யேல் சமூகம் தேக்கநிலை கண்டு உளுத்துப் போக தொடங்கும். பிணக்குகள், அவை அழிவை நோக்கியதாகவும் மூர்க்கமாகவும் இல்லாதவரையில், மனித நடவடிக்கைகளுக்கு ஊக்கமளிக்கின்றன; மடிந்து வெறும் சம்பிரதாயமாகிவிட்டவை மீது நடப்பு வாழ்வு வெற்றி கொள்ள உதவுகின்றன. தன் லட்சியம் வெற்றி பெற அவா. திரள்திரளான மக்களுடன் கூட்டுப் பொறுப் புணர்ச்சி இவற்றை விவேகமுள்ள எவரும் அழித்துவிட விரும்ப மாட்டார். சாவையும், அழிவையும் வன்மத்தையும் விளைவிக்கும் போதுதான் இவ்வுந்துதல்கள் தீங்காகின்றன. உத்வேகங்களுக்கு யுத்தம் வடிகாலாக அமைந்துவிடாமல் காப்பதே பிரச்சினையாகிறது.''[7]

செயலே வளர்ச்சிக்கான முன் நிபந்தனை என்பதே இதன் சாரம். திரு. ரஸ்ஸல் போரை எதிர்ப்பவர், என்பது வலியுறுத்தப் பட வேண்டுமெனில் அவர் சாந்திவழிவாதி அல்ல. அவருக்குச் செயற்பாங்கே வளர்ச்சிக்கு வழிகோலுகிறது, மரணத்தின் மறு பெயரே சாந்தி நிலை என்பது அவர் கருத்து. பேராசிரியர் டிவேயின் (Prof. Dewey) கருத்தையொட்டிக் கூறுவதானால், ''வலிமை வன்முறை ஆகிவிடுவதையே'' ரஸ்ஸல் எதிர்த்தார். ஆனால் ''வலிமை அளிக்கவல்ல ஊக்க சக்தியைப்'' பெரிதும் விரும்பினார் எனலாம். வலிமையை எதிர்ப்பவர்கள் நினைவில் கொள்ள வேண்டுவது எதுவெனில், பலத்தைப் பயன்படுத்தா விட்டால் இலட்சியங்கள் வெறுமையானதாகவே இருக்கும் என்பதையே. எவ்வாறெனில், இலட்சியம் அல்லது நோக்கம் ஏதுமில்லாவிடின் (உணர்ந்தோ அல்லது வேறெந்த விதமாகவோ அமைந்தவை) அனைத்துச் செயல்களும் பயனற்றவை ஆகிவிடும். முடிவுகளும் அதற்கான வழிமுறைகளும் (பலப்பிரயோகம்) இணைந்தியலுபவை. ஆகவேதான், ஒரு முடிவு அதனை அடையும் மார்க்கத்தை நியாயப்படுத்துகிறது என்கிற பொது முதுமொழியில் ஆழ்ந்த உண்மை பொதிந்துள்ளது. இதைத் தவறாகப் புரிந்து கொள்ளும்போதுதான் பொருளைத் திரித்துக் கூறுகிறார்கள். ஒரு முடிவு அதை அடைவதற்கான வழிமுறையை நியாயப்படுத்தாமல் வேறு எதைத்தான் நியாயப்படுத்தும்? இதில் உள்ள இடர் யாதெனில், ஒரு முடிவை அடைய நாம் கடைப்பிடிக்கும் வழிமுறையைச் சரிவரக் கட்டுப்படுத்தாமையால் எழும் விளைவுதான். ஏனெனில் சரிவரக் கட்டுப்படுத்தாமையால் எழும் விளைவுதான். ஏனெனில் அது நாம் விரும்பும் ஒரே முடிவுக்கு மட்டுமே அல்லாமல் பல்வேறு முடிவுகளுக்கும் வழிகோலுகிறது என்கிற உண்மையை அறிவாரில்லை. இருந்தபோதிலும், அடைந்தே தீருவோம் என்கிற வெறியில் நாம் எண்ணியிருக்கும் ''அந்த'' ஒரு முடிவையே எதிர்நோக்குகிறோமே தவிர, அவ்வழிமுறை பிறப்

7. அதே நூல், பக்கம் 93.

பிக்கும் வேறு பல முடிவுகளை நாம் கவனிப்பதில்லை. நடைமுறை வாழ்வில் ஓர் அவசரத் தேவைக்காக ஏதாவதொரு முடிவின் மீது நாம் முழுமையாக மதிப்பு வைக்கத்தான் வேண்டியுள்ளது. ஆனால் அவ்வாறு செய்யும்போது அம்முடிவோடு தொக்கி நிற்கும் மற்ற முடிவுகளையும் புறக்கணிக்காமல் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். எனவே பிரச்சினை யாதெனில், ஏதேனும் ஒரு குறிக்கோளை அடைய நாம் வன்முறையைப் பயன்படுத்தும் போது — பயன்படுத்தியே தீர வேண்டும் — அச்சாதனைப் புரியும் போது நாம் எதிர்பார்க்கும் முடிவுக்குச் சமமாகக் கொள்ள வேண்டிய வேறு சிறப்பான முடிவுகளையும் நாம் அழித்து விடக்கூடாது. நடைபெறும் உலகப் போரை இவ்வகையில் நோக்கினால், அதில் வன்முறையைப் பிரயோகிக்கத் தனி நியாயம் ஏதும் தேவை யில்லை என்றே நினைக்கிறேன். கேடு விளைவிக்கும் வன்முறைச் செயலுக்குத்தான் நியாயத்தைத் தேடிச் செல்ல வேண்டிவரும். அப்படி வன்முறைக்குக் கற்பிக்க வேண்டிய நியாயத்தில் உலகம் திருப்தியுற வேண்டும். போரில் ஈடுபடுவோர் மேற்கொள்ளும் முடிவுகளைச் சாதிக்க வன்முறையைத் தவிர வேறு வழியில்லை என்று உலகம் ஒப்புக் கொள்ளும் வகையில் நியாயம் அமைதல் வேண்டும்; அதாவது, உலக நிலை பேற்றிற்கான மற்ற லட்சியங் களைத் தியாகம் செய்ய வேண்டிய நிர்பந்தமும் எழக்கூடாது. உண்மையில் வன்முறையை எப்போதுமே தவிர்க்க முடியாது; எதிர்ப்புத் தெரிவிக்க எதிர்ப்பின்மையே சிறந்த ஆயுதம் என்கிற நிலையில்தான் சாத்வீகப் போராட்டம் மேற்கொள்ளப்படலாம். ஆனால், வலிமையை விவேகத்துடன் கட்டுப்படுத்தும் பொறுப்பு நம் அனைவரையும் சார்ந்தது. சுருங்கக்கூறின், எதைச் சாதிக்கவும் பலாத்காரத்தைப் பயன்படுத்தலாம்; என்றாலும் அதனை ஆக்கப் பூர்வமான ஆற்றலாகப் பயன்படுத்த வேண்டுமே தவிர, அழிவை நோக்கிய வன்முறையாக அல்ல.

போர்த் தத்துவம் சார்ந்த வளர்ச்சிக் கொள்கைகளுக்கு ஆதர வான இவ்விவாதத்தை, வேண்டுமாயின் மேலும் சில சூழ்நிலை களை வலிந்துரைத்து வளர்த்திக் கொண்டே போக முடியும். இன்று நிகழ்ந்து வரும் ஐரோப்பிய யுத்தம், வன்முறைத் தத்து வத்தை அளவுக்கதிகமாகவும் கண்மூடித்தனமாகவும் கண்டிக்க வைத்தது மட்டுமல்லாமல் செயலற்ற சாந்தி மார்க்க வழிபாடுக் கும், எதிர்ப்பற்ற சாத்வீகக் கோட்பாட்டிற்கும் வாழ்வளிக்க வைத்து விட்டது. திரு. ரஸ்ஸல் எழுதியது யுத்த—எதிர்ப்புப் புத்தகம், அதை எழுதியவர் ஆறுமாத சிறைதண்டனை பெற்றார். ஆனால் புத்தகம் எழுதியதற்காக அல்ல அத்தண்டனை. போரை எதிர்க்கும் பித்துக்குளி என்பதற்காக, என்ற உண்மைகள் யுத்த கால குழப்பங்களினின்றும் விடுபட்டு சாத்துவிக வாழ்வினை இயல் பாய் உள்ளூர விரும்பும் பலரின் எண்ணத்தில் திரு. ரஸ்ஸல் ஓர் சமாதானப் பிரியராகவே காட்சியளிப்பார். ஆகவே திரு. ரஸ்ஸல் எந்த அளவுக்கு வன்முறையைக் கண்டனம் செய்கிறார் என்பதை

நாம் தெரிந்து கொள்வது அவசியமாகிறது. இரண்டாவதாக, இந்திய வாசகர்களின் மத்தியில் திரு. ரஸ்ஸலைப் பற்றி ஓர் தனி அபிப்பிராயம் நிலவுவதும் மற்றோர் காரணமாக் அமைகிறது. வன்முறைத் தத்துவத்திற்குப் பதிலாக அதன் இடத்தில் கீழை நாட்டுத் தத்துவத்தை குறிப்பாக இந்தியத் தத்துவத்தை—நிலை நாட்ட விழைகிறார்கள். ஆகவே திரு. ரஸ்ஸலின் அணுகு முறையை இந்திய வாசகர்களுக்குச் சரிவர அறிமுகம் செய்வது அவசியமாகிறது. சமாதான வாழ்வை விரும்பும் மன இச்சையும் சாத்வீகச் சித்தாந்தம் பற்றிய ஒரு சார்பு நோக்கும் கொண்டவர்கள் தங்கள் கண்ணோட்டத்தில் திரு. ரஸ்ஸலைப் படித்து அதனில் தங்கள் வாழ்க்கை எதிர்பார்ப்புக்களுக்கு ஆதரவு தேடிக் காண்பார்கள் என அச்சப்படுகிறேன்; அதனைத் தவிர்க்க விரும்புகிறேன்.

வாழ்வு நெறி பற்றிய இந்திய நோக்கு நடைமுறைக்கு ஏற்றதா? நிட்ஷே (Nietzche) கிறிஸ்தவ சமயம் பற்றி சீற்றத்துடன் சொன்னார், ''இருந்தது ஒரே ஒரு கிறிஸ்தவன் மட்டும் தான்; அவனை சிலுவையில் அறைந்து விட்டார்கள்'' என்று. கிறிஸ்தவம் வகுத்த வாழ்க்கை நெறி நடைமுறையில் சாத்தியமல்ல என மறைமுகமாகச் சுட்டிக்காட்டவே இவ்வாறு கூறினார். இது கிறிஸ்தவ மதத்திற்குப் பொருந்தும் என்றால் அதைக் காட்டிலும் அது அதிக அளவில் கீழை நாட்டு வாழ்க்கை நோக்கிற்கும் பொருந்தும். ஏனெனில் கிறிஸ்தவ நெறி, மேலை நாட்டினது என்றாலும் அதன் தொடக்கமும் உள்ளடக்கமும் வெகுவாக கீழை நாட்டைச் சார்ந்தவையே. மேற்சொன்ன அளவில், ஆனால் அவ்வளவு கடுமையின்றி, திரு. ரஸ்ஸலும் சாந்தி நிலைத் தத்துவத்தைக் கண்டனம் செய்கிறார். வெவ்வேறு நிலை மாற்றங்களைக் கடந்த இந்த நாட்டில் கவைக்குதவாத இத்தகைய வாழ்க்கை மனப்பான்மையே என்றென்றும் தொடருகிறது என்பதைப் பீதியுடன் நோக்க வேண்டியுள்ளது. அந்தோ தேசிய எழுச்சி கொண்ட இன்றைய இந்தியாவிலும் கூட அனைத்துமே இந்தியப் பெருமிதங்களாக இத்தேசியம் ஏற்கும் பரிதாபம்—இந்த மனப்பான்மையே அங்கீகரித்துத் தொடர வைக்கும், என்று தோன்றுகிறது. கிழக்கிற்கும் மேற்கிற்கும் இடையே உள்ள வழக்கமான வேறுபாடுகளுள், போர்ப் பின்னணியில் தெளிவாகத் தோன்றும் ஒன்றை மட்டும் கீழ்த்திசையினர் தற்புகழ்ச்சியுடன் உயர்வாகக் கூறிக் கொள்கிறார்கள்—அதாவது, போருக்கும் விநாசத்திற்கும் இட்டுச் செல்லும் மேலை நாட்டினரின் தீவிர உலகியல வாழ்வினின்றும் தாங்கள் விடுபட்டவர்கள் என்கிறார்கள். மேலை நாட்டினரை இத்தகைய கொடூர முரண்பாட்டில் வைப்பதற்கு நியாயம் ஏதுமில்லை. நாம் அனைவருமே உலோகாயத்தினர் தாம் (Materialist) என்பதை மறந்து விடலாகாது; ஆம், கீழை நாகரீகமும் கூடத்தான். போரைப் பொருத்தவரையில் ஒருக்கால் மேலை நாடுகளைக் குற்றம் கூறலாம். ஆனால் அவை இவ்வாறு எதிர்வாதம் வழங்கலாம்:

''செயற்படாமை சாவுக்குச் சமம். செயற்படுவதே வாழ்க்கை. செயற்படாமலேயே இருந்துவிடுவதைக் காட்டிலும் போரிடுவது போன்ற வன்முறைச் செயலில் இறங்குவதே மேலானது. ஏனெனில், செயலை மேற்கொண்டால்தான் மேலும் செவ்வனே செய்ய வாய்ப்புண்டு.'' யுத்தம்கூட தனிமனித வளர்ச்சிக்கு வழி கோலும் என்று சமாதானப் பிரியர் திரு. ரஸ்ஸல் எண்ணுவது வியப்பளிப்பதாக இருக்கலாம். போரின் விளைவு சாவும் அழிவும் என்பதால் மட்டுமே அவர் போரைப் பழிக்கிறார். கடுமையற்ற போர் வகைகளை அவர் வரவேற்பார் போலும்; ஏனெனில் அவர் கூற்றுப்படி, ''தம் வினைத் திறமையை வெளிப்படுத்துகிறோம் என்ற உணர்வு பெற ஒவ்வொரு மனிதனுக்கும் ஏதாவதொரு வகைப் போட்டி, எதிர்ப்பைச் சமாளித்துவிட்ட நிறைவு தேவைப் படுகிறது.''[8] வேறு வார்த்தைகளில் சொல்வதானால், தான் வளர்ச்சி பெறுகிறோம் என்று உணர்வதற்காக இவை தேவை எனலாம்.

இந்தியரின் வாழ்க்கை நெறியைப் போற்றியுரைக்க முன் வைக்கும் பல காரணங்களில் ஒன்று, அந்த நெறியைப் பின்பற்றி வந்திருப்பதால்தான் இன்றளவும் உலகில் எஞ்சியுள்ள பழைமைச் சிறப்புள்ள நாடாக இந்தியா நிலைத்திருந்து வருகிறது என்ற கருத்தாகும். இந்தக் கூற்றினை அடிக்கடி கேட்டு வருகிறோம்; அவ்வளவு சுலபமாக ஒதுக்கிவிட முடியாத அளவு உயர்ந்த கருத்துக்களைக் கூறும் பெரிய அறிவாளிகள் கூட இவ்வாறு கூறியிருக்கிறார்கள். இக்கூற்றுக்குச் சான்றுகள் உள்ளனவா, இல்லையா என்பதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. அந்தத் தொடர்நிலை உண்மை என்றே கொள்வோம். இந்த நிலை குறித்து அதைக் காட்டிலும் முக்கியமாக ஒன்றைக் குறிப்பிடுவது அவசியமாகிறது. அது இதுதான்; தொன்றுதொட்டுத் தொடர்ந்து நிலைத்திருந்து வந்திருப்பவற்றில் பல பாங்குகள் உண்டு; அவை யாவுமே ஒரே விதமாகப் பாராட்டுதலைப் பெறத்தக்கவை அல்ல. எடுத்துக் காட்டாக, பணிந்திருந்து தகுந்த தருணத்தில் பின் வாங்கி, வளைந்து கொடுப்பதன் காரணமாகப் பலவீனமான மக்கள் தொடர்ந்து வாழ்ந்து வருவார்கள். மானங்கெட்டு அஞ்சி வாழ்வதோ, அடிமையாய் அடிபணிந்து, அவ்வாறே காலங்காலமாய்த் தொடர்ந்து வாழ்ந்துவருவதோ பாராட்டத்தக்கதுதானா? இந்த இழிந்த வாழ்வும் தக்க தருவாயில் வீரிட்டெழுந்து பெருமையை நிலைநாட்டி வழிவழியாய் வாழ்வைத் தொடருவதும் சமமாகி விடுமா? ஆகவே ஒரு மக்கள் கூட்டத்தினர் காலத்தைப் புறங் கண்டு எஞ்சி வாழ்ந்து வருகிறார்கள் என்பதனாலேயே அவர்கள் காலங்காலமாய் வளர்ச்சியுற்று முன்னேறி வந்துள்ளார்கள் என்பதை ஒப்புக்கொள்ள முடியாதது. எனவே, தொடர்-வாழ்வு முக்கியமல்ல; பண்புத் தரமும் வாழ்க்கைத் தரமும்தான் முக்கிய

8. சமுதாய மறுசீரமைப்புக் கோட்பாடு. ப. 96.

மானவை. ரஸ்ஸலின் இந்திய வாசகர்கள் தங்கள் தொன்மைமிக்க வாழ்க்கைத் தொடரை ஆழ்ந்து ஆய்வு செய்வார்களாக; காலங் காலமாக வாழ்ந்து இன்னமும் எஞ்சி நிற்கிறோம் என்பதோடு திருப்தியடையாதீர்கள்; இவ்வாறு கூர்ந்து நோக்கினால் தங்கள் வாழ்க்கையின் மதிப்பீடுகளை மறுகணிப்புச் செய்ய வேண்டிய அவசியத்தை உணர்வார்கள்.

ரஸ்ஸலின் போர்த் தத்துவச் சிந்தனைகளை இத்துடன் நிறுத்திக் கொள்வோம். உடைமைகளின் விளைவுகள் பற்றிய ஆய்வுகளை அறிய முற்படுவோம். திரு. ரஸ்ஸல், தம் நூலில், இப்போது சமூகத்தில் இயங்கி வரும் பல்வேறு பொருளாதார அமைப்புகள் பற்றியும் அவை விளைவிக்கும் தீமைகள் பற்றியும் அதற்கான பரிகாரங்கள் பற்றியும் விமர்சனம் செய்கிறார். அவை பற்றிய ஒட்டுமொத்தமாகத் தன் திறனாய்வுக் கட்டுரைச் சுருக்கத்தை அவரே பின்வருமாறு தருகிறார்:

''நுகர்வோர், உற்பத்தியாளர், முதலாளி என்ற மூவகைப் பிரிவுகளே இன்றைய அமைப்பில் காணப்பெரும் தீமைகளுக்குக் காரணம். இம்மூவரில் எவருடைய நலனும், மக்கள் சமூக நலனோடு இசைவு இல்லை; அல்லது ஒருவர் நலன் மற்ற இருவருடைய நலனோடு ஒத்து வருவதில்லை. கூட்டுறவு முறை, நுகர்வோர் மற்றும் முதலாளி ஆகிய இருவர் நலன்களை ஒருங்கிணைக்கிறது. தொழில் சங்க ஆட்சி இயக்கம் (syndicalism) உற்பத்தியாளர் நலன்களையும் முதலாளிகள் நலன்களையும் கூட்டாக்குகிறது. ஆனால் இவ்விரு அமைப்புகளுக்கும் மூன்று பிரிவினரையும் ஒருங்கிணைக்க மாட்டாதவை. தொழில் முனைவோர் நலன்களையும் சமூக நலன்களையும் இவ்வாறே இந்த இரண்டினாலும் இணைக்க முடிவதில்லை. ஆகவே இந்த இரண்டினாலும் தொழில் தகராறுகளைத் தீர்த்து வைக்க முடியாது. அரசு ஒரு நடுநிலையாளராக இருந்து தீர்ப்பளிப்பதைத் தவிர்க்க முடியாது. ஆனால் இவ்விரண்டு அமைப்புகளில் ஒவ்வொன்றும் இன்றுள்ள பொருளாதார அமைப்பை விட மேலானது. ஒருக்கால், இவ்விரண்டையும் கலந்து அமலாக்கினால் பெருந்தொழிலமைப்பில் இன்று காணும் தீமைகளைக் குறைக்கக் கூடும். வியப்பு யாதெனில், ஆண்களும் பெண்களும் அரசியல் ஜனநாயகத்தைப் போராடி பெற்றதைப் போல் தொழில் அமைப்பு ஜனநாயகத்தை உருவாக்க எதுவும் செய்யாததுதான். கூட்டுறவு மாதிரியிலான தொழில் அமைப்பை உருவாக்குவதன் மூலமோ அல்லது அரசாங்கத்தைச் சார்ந்த பகுதிகளாக ஏற்கப்பட்டு, தொழிற்சங்க ஆட்சி இயக்கம் போல் அவை தன்னாட்சி (Home rule) செலுத்த வகை செய்யலாம். அங்கங்கள் நில அமைப்பு ரீதியாக ஒரே இடத்தில் அமைய வேண்டுமென்பதில்லை. முன்பு தகவல் தொடர்புகளில் காலதாமதம் இருந்ததால் அம்முறை அவசியமாயிருந்தது; இப்போது அதற்கு அவசியம் இல்லை. தொழில்களும் வர்த்தகமும் தன்னாட்சி நிறைந்த அரசு அங்கங்களானால் அத்தகைய அமைப்பில் பற்பலர் தங்கள் பணியில் பெருமையுறுவதுடன், ஆக்கபூர்வமான ஊக்கமும் பெறுவர்.

இன்றுள்ள அமைப்பில் இத்தகைய வாய்ப்புக்கள் ஒரு சிலருக்கு மட்டுமே கிட்டுகின்றன. இது போன்ற அமைப்பின் கீழ் நில உரிமை நீக்கப்பட்டு, முதலாளிகளையும் கட்டுப்படுத்த வேண்டும். ஆயினும், வருமானம், அனைவரும் சரிசமமான வருமானம் பெறுவர் என்பதில்லை. மேலும், சோஷலிசத்தில் உள்ளது போல் இந்த அமைப்பு தேக்க நிலை கொண்டதோ, இறுதியானதோ அல்ல. ஆற்றலையும் ஊக்கத்தையும் நல்கும் வரைச்சட்டம் மட்டுமே. இது போன்ற அணுகுமுறை மூலமே தனி மனிதனின் சுதந்திரமான வளர்ச்சியைத் தொழில் வளர்ச்சிக்குத் தேவையாகிவிட்ட மாபெரும் தொழில்நுட்ப அமைப்புகளுடன் ஊக்குவிக்க இயலும்.''[9]

தொழில்முறைப் பற்றிப் பொதுவாகக் குறை கூறுகையில், அது நடையொழுக்கத்தைக் கூறுபோட ஏதுவாகிறது, தனிமனித இயல்புகளைக் குன்றச்செய்கிறது, தொழிலாளர்களை அடிமைகளாக்கி விடுகிறது என்பார்கள். இத்தகைய விளைவுகளை அகற்ற, திரு. ரஸ்ஸல் முற்காப்புணர்வுடனும், பரந்த நோக்குடனும், பொருளாதார நிறுவனங்களின் சமூக விளைவு பற்றிய தத்துவ அறிவுத் திறனுடனும் அணுகுகிறார். மனநிலையில் உடைமைகளின் பாதிப்பைப் பற்றிய அவரது பகுப்பாய்வுகளைப் பற்றியும் நான் இவ்விதம் கூற இயலவில்லையே என்பதே என் ஆதங்கம். மாறாக, உடைமைகள் தொடர்பான இவரது சர்ச்சைகளில் சில தவறான கருத்துக்கள் பொதிந்துள்ளன. அவற்றை வெளிப்படுத்துவது அவசியமாகும்.

முதல் தப்பெண்ணம் பணத்தாசை பற்றிய அவரது வாசகத்தில் உள்ளடங்கியது. அதனில் இவ்வாறு கூறுகிறார்: ''பொருளாசை மனித சுபாவத்தைச் சிதைத்து விடுகிறது; எவ்வாறெனில் மன நிறைவுக்கு ஒரு தவறான தத்துவத்தை அது திணிக்கிறது. மானிட நல்வாழ்வுக்குச் சிறிதும் உதவாத முயற்சிகளுக்கு உயர்வளிக்கிறது. மனித சுபாவத்தையும் நோக்கத்தையும் ஒரு மட்டமாக வேறுபாடற்றதாக்கி விடுகிறது. வாழ்க்கையில் இன்பத்தை வற்றச் செய்கிறது. மன இறுக்கத்தையும் சுமையையும் சுட்டிச் சமூகங்களை சோர்விலும் நிராசையிலும் ஆழ்த்துகின்றது.''[10] எக்காலத்திலோ ஏதோ நியாயத்துடன் வாழ்க்கைச் சித்தாந்தமாகப் பயன்பட்ட பழம்பாணியான அவல உணர்ச்சியையே இது பிரதிபலிக்கிறது. பொருளாதார வாழ்வும் ஒரு சமூகத்தின் தத்துவ நோக்கும் நாம் பொதுவாக நினைப்பதைவிட மிக நெருங்கிய தொடர்புடையவை.[11] இதன் மிகைப்படுத்தலைக் களைந்துவிட்டால், ''வரலாற்றின் பொருளாதார வாயிலாக விளக்கம்'' (Economic Interpretation of History) இங்கு உண்மையில் பொருந்தும். பணத்

9. அதே நூல் பக். 141-142.

10. அதே நூல் பக். 113

11. பார்க்க: ஜேம்ஸ் போனாரின் தத்துவத்துடன் அரசியல் பொருளாதாரம் கொள்ளும் உறவு மற்றும் அக்கில்லா லொரியாவின் ''சமூகத்தின் பொருளாதார அடித்தளம்''.

தாசைக்கு எதிராக அறநெறியாளர் காலங்காலமாய்க் குறைகூறுவது லோகாயதப் பொருள்களை அவர்கள் பொதுவாகக் குறைகூறும் மனப்பான்மையின் ஒரு அம்சமே. இன்றைய பொருளாதாரச் சூழ்நிலையில் அப்பழைய மனப்பான்மையே இப்படியொரு கருத்தை எழுப்பித்து நியாயப்படுத்த முனைகிறது. இதனை மனதிற் கொண்டால் ''சீச்சீ இந்தப் பழம் புளிக்கும்'' என்ற கிட்டாதோரின் புளிப்புத் திராட்சைத் தத்துவம், ஏன் அனைத்து நம்பிக்கைகளுள் மிக மனித இயல்பு வாய்ந்தது, நமக்கு எட்டும் அல்லது முயற்சித்தும் எட்டாமற் போகும் பொருட்களைப் பற்றிய மதிப்பீடுகளில் ஏன் விரவியுள்ளது என்பதைச் சுலபமாக அறியலாம். ஒரு பொருளைப் பெற முடியாவிடின் 'அது கிடைத்து ஆக வேண்டியது என்ன' என்று சமாதானப் படுகிறோம். ஆகவே உள்ளவர்களுக்கும் இல்லாதவர்களுக்கும் அமையும் லோகாய்தமான பொருட்களைப் பற்றிய நோக்கு உண்மையில் வித்தியாசப் படுகிறது. அவ்வாறேதான் இவ்வேற்றுமை, சிறப்புடையவர்களின் மதத்திற்கும், ஒடுக்கப்பட்டவர்களின் மதத்திற்கும் இடையேயும் உண்டு. மதத்தின் உயர்ந்த அறநெறி ஒழுக்கங்களுக்குக் கட்டுப் பட்டு—ஒழுக்கமின்மையிலும் ஒழுக்கம் தேடி அதன் போக்கில் அனைத்தையும் அறிநெறியாக்கி—இதே சுபாவத்தை இலட்சியப் படுத்திவிட்டது. ஆதி காலத்தில் உலகெங்கும் ''வறுமைப் பொருளாதாரம்'' (Pain economy) நிலவி வந்தபோது மனித உழைப்பின் உற்பத்தித்திறன் மிகவும் குறைவாக இருந்தபோது, உழைப்பின் பலனை எத்தகைய முயற்சியாலும் மேம்படுத்த முடியாத போது சுருக்கமாகச் சொன்னால் உலகம் முழுவதுமே வறுமையில் உழன்று கொண்டிருந்த போது, அறநெறியாளர்கள் வறுமைத் தத்துவத்தைப் போதித்ததும், உலக சுகபோகங்களைத் துறக்கும்படி உபதேசித்ததும் முற்றிலும் இயல்பே; உலக இன்பங்கள் கிடைக்கப் பெறாததே இதற்குக் காரணம். ஒரு பொருள் கிடைக்கவில்லையென்றால் அது மோசமானதாகத்தான் இருக்க வேண்டும் என்பது ''வறுமைப் பொருளாதார'' சமூதாயத்தின் கோட்பாடு. அதே போன்று, ஒரு பொருள் மலிவாகக் கிடைத்தால் அது கேடுகெட்டதாகத்தான் இருக்க வேண்டும் என்று ''அபரிமிதமான பயனீட்டுப் பழக்கத்துக்கு'' அடிமையாகிப்போன ''சுகபோகப் பொருளாதாரச்'' சமுதாயம் நம்புகிறது. ''பணத்தாசை''யின் தீமைகள் பற்றி திரு. ரஸ்ஸல் என்னதான் திரும்பத் திரும்பக் கூறினாலும், அதன் வரலாற்று மதிப்புக்கு அதனால் எத்தகைய தத்துவார்த்த முக்கியத்துவமும் அதிகரிக்கப் போவதில்லை, பணத்தாசையை ஏன் குறை கூறுகிறோம் என்று தீர்க்கமாக ஆராயாமலேயே அதனை அவர் கண்டிப்பதிலிருந்துதான் தப்பெண்ணமே எழுகிறது எனலாம். ஓர் ஆரோக்கியமான உள்ளத்தில் பணத்தாசை என்பதான ஒன்று அருவமாக இருக்க முடியாது என்பதை இங்கு வலியுறுத்திக் கூறுவது அவசியம். ''ஏதோ ஒன்றைப் பெறுவதற்காகத்தான் எப்போதும் பணத்தை நாடுகிறோம்; அந்த ''ஏதோ ஒன்றில்''

பொதிந்துள்ள நோக்கம்தான் அதற்குப் பெருமையையோ, சிறுமையையோ அளிக்கின்றது. இதைக் கருத்திற்கொண்டு நோக்கும் போது, தனிநபர்களிடையே ''முற்றிலும் ஒரே மாதிரியான'' குண இயல்பு இருக்க முடியாது என்பது தெளிவு; ஏனென்றால் பண ஆசையால் உந்தப்பட்டு அவர்கள் செயல்பட்ட போதிலும் அவர்களின் நோக்கங்கள் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பல்வகையானதாக இருப்பது சாத்தியம். இவ்வாறு ஒரு குறிக்கோள் என்ற முறையில் பண ஆசைகூட வெவ்வேறுவிதமான குண இயல்புகளை உருவாக்கலாம்.

நமது வாழ்க்கையில், உற்பத்திக் கண்ணோட்டத்திலிருந்து திரு. ரஸ்ஸலின் சித்தாந்தத்தை நோக்கும் போது அது ஆட்டம் கொடுக்கிறது; அதே சமயம் பயனீட்டுக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது அது முற்றிலும் தகர்ந்து நொறுங்கி விழுந்து விடுகிறது. பசியோடு இருக்கும் ஒருவருக்குத் தனிப்பட்ட முறையில் உணவளிப்பதன் மூலம் மனித இயல்பு தன்னை உருச்சிதைத்துக் கொள்கிறது என்பதை மெய்ப்பிப்பதற்கு வாழ்க்கையின் உற்பத்தித் துறையை அல்லாமல் பயனீட்டுத் துறையை ஆராய்வதன் மூலமே உண்மையில் நாம் ஆதரவு தேட வேண்டியிருக்கிறது. பயனீட்டு விதிகளை[12] நாம் நன்கு அறிந்துள்ள நிலைமையில், இத்தகைய ஓர் உருச் சிதைவுக்கான சாத்தியக்கூறு இருக்கிறதா? நமக்குத் தெரிந்தவரை ''இல்லை'' என்பதுதான் இதற்குப் பதிலாக இருக்க முடியும்.

பயனீட்டு விதிகள் என்பவை மதிப்பின் பயன் நோக்குக் கோட்பாடு என்ற பொருளாதார சித்தாந்தத்திலிருந்து பெறப்பட்ட சில அனுமானங்களே தவிர வேறல்ல என்பதை இங்கு கவனத்திற் கொள்ள வேண்டும். கோர்னாட், கோஸ்ஸன், வால்ரங் மெங்கர், ஜெவோன்ஸ் போன்றோரின் பழைமையான கோட்பாட்டுக்குப் பதில் கூறும் வகையில் உருவாக்கப்பட்ட இந்த சித்தாந்தம் பயனோக்கை ஒரு கண்கூடான பொருளில் அல்லது நிலைமையில் பொதிந்துள்ள ஒரு பண்பாகக் கருதுவதில்லை; மாறாக, மனிதத்தேவைகளை நிறைவேற்றுவதற்கு அதற்குள்ள ஆற்றலைச் சார்ந்து நிற்கும் ஒன்றாகவே அதனை நோக்குகிறது. எனவே, ஒரு பொருளின் பயனோக்கு உடல் தேவையின் வெவ்வேறு நிலைமைகளைப் பொறுத்து வேறுபடுகிறது. நமக்குப் பெரிதும் தேவையான, நாம் மிகவும் விரும்பக்கூடிய உணவு கூட நாம் பசியாக இருக்கும்போது இன்பமளிப்பதாகவும், வயிறு மந்தமாக இருக்கும்போது குமட்டுவதாகவும் இருப்பதைப் பார்க்கிறோம். ஆக, தேவை நிறைவேறுவது அதிகரிக்கும்போது பயனோக்குக் குறைகிறது. வேறுவிதமாகச் சொன்னால், தேவை நிறைவேற்றமே எந்த ஒரு மனித உறுப்புக்கும் அல்லது உறுப்புகளுக்கும் இன்ப

12. இது குறித்த ஒரு சிறந்த விவாதத்தை பேராசிரியர் எஸ். என். பேட்டனின் ''பயனீட்டுக் கோட்பாடு'' என்னும் நூலில் காணலாம்.

மளிக்கக் கூடியதாக இருப்பதால், அத்தகைய தேவையை நிறை வேற்றும் பொருளுக்கும் அந்த உறுப்புக்குமுள்ள உறவானது அவ்வுறுப்பின் நிலையைப் பொறுத்து நேர்மாறான விகிதத்தில் வேறுபடுகிறது.

இந்த மனோதத்துவப் பகுத்தாய்வின் முக்கிய அம்சங்களை திரு. ரஸ்ஸல் கவனமாகக் கணக்கிலெடுத்துக் கொண்டிருந்தால் அவர் நிச்சயமாக இந்தத் தப்பெண்ணங்களை எல்லாம் தவிர்த் திருக்க முடியும். மனோதத்துவ ஆய்வு உண்மையிலேயே எதைக் குறிக்கின்றது? ஒரு பொருளின் பயனோக்குப் பூஜ்யமாகவும், இன்னும் சொல்லப்போனால் எதிர்மறையானதாகவும் இருப்பது ஏன்? இவ்வாறு நிகழ்வதற்குக் காரணம் (1) தேவை பூர்த்தி செய்யப்படும்போது ஒரு குறிப்பிட்ட கட்டத்தில், ஓர் உறுப்பின் தேவை அவர் மங்கிவிடுகிறது, அதற்குத் திகட்டிப்போய் விடுகிறது அல்லது (2) ஒரு வேறுபட்ட வகையான தேவையை நிறைவேற்றிக் கொள்வதில் மிகுந்த ஆவல் கொண்ட வேறு உறுப்புகள் தமக்குப் பாதகமான முறையில் ஓர் உறுப்பு அளவுக்கு அதிகமாக தேவையை நிறைவேற்றிக் கொள்வதில் ஈடுபடும்போது அதனைக் கடுமையாக எதிர்க்கின்றன என்பதாக வாதிக்கப்படுகிறது. பிந்திய கருத்தை ஆதரிக்கும் பேராசிரியர் கீட்டிங்ஸ் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: ''ஒரு குறிப்பிட்ட அவயவத்தின் அல்லது அவயவங்களின் ஆவல் தாராளமாக நிறைவேற்றப்பட்டு அவற்றின் தேவை உரிய முறை யில் பூர்த்தி செய்யப்படும் போது, வேறு சில உறுப்புகள் இழப் புக்கு உள்ளாகின்றன; இவ்வாறு புறக்கணிக்கப்பட்ட உறுப்புகள் இதனை ஆட்சேபிக்கின்றன; இந்நிலைமையில், அவற்றைத் திருப் திப்படுத்த வேண்டிய கட்டாயம் நமக்கு ஏற்படுகிறது. நமது உடலின் புறக்கணிக்கப்பட்ட உறுப்புகளின் வேட்கை நமது உணர்வை ஆட்கொண்டு, தனக்குரிய பங்கைவிட அதிகமாகப் பெறும் உறுப்பிடமிருந்து நமது கவனத்தையும், முயற்சிகளையும் திசை திருப்புகிறது.''[13] பேராசிரியர் கீட்டிங்ஸின் இரு மாற்று விளக்கங்களில் அநேகமாக இதுவே மிகவும் சரியாகத் தோன்று கிறது. உடலின் நடத்தைக் கோட்பாட்டை எடுத்துக் கொண்டு பார்க்கும்போது, ஒவ்வொரு உறுப்புக்கும் ஏற்ற முறையில் பல தரப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய, அதே சமயம் மேலே கூறியவாறு ஆட்சேபத்தைத் தோற்றுவிக்கக் கூடிய இந்த வேட்கை உடலுக்கு இருந்து வரவே செய்கிறது என்று கருதுவது முறையே ஆகும். இந்த ஆட்சேபம்தான் பல்வகையான பயனீடு என்னும் விதிக்குப் பணிந்து போகும்படி நிர்ப்பந்திக்கிறது. இது உண்மையானால் எப்படி ஓர் உறுப்பு நிரந்தர ஆதிக்கத்தின் மூலம் உடல் முழுவதையும் மூடமாக்க முடியும் என்பதைப் புரிந்து கொள்வது கடினமாக இருக்கிறது. அதேசமயம், இன்னொரு புறம் எல்லா நுகர்ச்சி வேட்கைகளும் ஒன்றன்பின் ஒன்றாக பூர்த்தி

13. ஜனநாயகமும் சாம்ராஜ்யமும், பக். 19.

செய்யப்பட முடியும். ஒருசார்பான வளர்ச்சிக்கு எதிரான ஓர் ஒழுங்கமைவை அதிர்ஷ்டவசமாக மனித இயல்பு பெற்றுள்ளது; மிக இணக்கமான முறையில் சர்வாம்ச வளர்ச்சிக்கு இது வகை செய்கிறது என்பதில் ஐயமில்லை. உணவுப் பசி, அறிவுப்பசி, ஆன்மிகப் பசி முதலிய பலதரப்பட்ட பசிகளை, வேட்கைகளை, விருப்பங்களை அது பூர்த்தி செய்து கொள்ள முடியுமா என்பது அதன் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட விஷயமாகும். பலவித மான உணவு கிடைக்காததால் அது முடமாகுமானால் அது சமூகத் தின் தவறே அன்றி அதன் சொந்தத் தவறல்ல.

உடைமை உணர்வின் உருவமாக அமைந்துள்ள சொத்து யுத்தத் திற்கு வழிகோலுகிறது என்பது திரு. ரஸ்ஸலின் மற்றொரு குற்றச் சாட்டு, திரு ரஸ்ஸலின் இந்தக் கருத்து ஏற்கக் கூடியதாயினும், சொத்தின் விளைவுகளை திரு. ரஸ்ஸலைவிட பிரெட்ரிக் நியட்ஸே தான் மிக நன்றாகப் புரிந்து கொண்டுள்ளார் என்று கூற வேண் டும். தூஸிடைட்ஸ் ஓரிடத்தில் கூறும் கதையில் இந்த விளைவுகள் மிக அற்புதமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இந்தக் கதையில் ஒரு விவசாயி வருகிறான்; அவன் அறுவடை செய்து முடித்ததும், தானியக் குவியலுக்கு அருகே அமர்ந்து ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கிப் போயிருக்கிறான்; தானியத்தை சந்தைக்கு கொண்டு சென்று விற்றால் தனக்கு எவ்வளவு லாபம் கிடைக்கும் என்பதை மனத்துக்குள் கணக்குப் போட்டுக் கொண்டிருக்கிறான். அப் போது திடீரென்று ஒரு திருடன் அங்கு தோன்றுகிறான். இதைக் கண்டு விவசாயி பெரிதும் திகைத்துப் போகிறான். எனினும் எதிர்த்து ஒரு வார்த்தை கூடப் பேசாமல், தானியத்தைத் திருட னுடன் பகிர்ந்து கொள்ள உடனே ஒப்புக் கொள்கிறான்; அது மட்டுமல்ல, பாதி தானிய இழப்போடு தான் தப்பித்துக் கொண் டதற்காக ஆண்டவனுக்கு நன்றி கூறுகிறான். மேலே விவரித்த நிகழ்ச்சி உண்மையாக இருந்தாலும் சரி, பல சந்தர்ப்பங்களில் கவனிக்கத் தவறிவிடும் ஒரு முக்கியமான உண்மை இதில் பொதிந் துள்ளதைக் கருத்திற் கொள்ள வேண்டும். பொருள் ஈட்டும் மூர்க்க வெறியை மனிதன் எந்த அளவுக்குக் கட்டுப்படுத்தியுள் ளான் என்பதை அளவிட்டுக் கூறமுடியாது. ஆனால் இத்தகைய வெறி இருந்து வருகிறது என்பதில் ஐயமில்லை. நியட்ஸே இதனை முற்றிலும் உணர்ந்துள்ளார். எனவேதான், தாம் கற்பனையில் உருவாக்கிய மாமனிதனை சொத்துக்கள் இல்லாதவனாகச் சித்தி ரிக்கிறார்; அவனிடம் சொத்துக்கள் இருந்தால் பேரழிவை உண்டு பண்ணுவான் என்று நினைக்கிறார்; பேரத்தில் தனது சொத்தை இழக்க வேண்டிவரும் என்ற அச்சத்தை அவனிடம் ஏற்படுத்த விரும்புகிறார். ஆகவே, இதிலுள்ள சிக்கல் சொத்து சம்பந்தப் பட்டதல்ல; அதற்கு மாறாக அதன் ஏற்றத்தாழ்வான வினியோகம் சம்பந்தப்பட்டதாகும்; சொத்து உள்ளவர்களைவிட சொத்தில்லாத வர்கள் அதனைப் பெறும் பொருட்டு பெரும் நாசத்தை உண்டாக் கும் மனோநிலை கொண்டவர்களாக இருக்கிறார்கள். தற்காலத்தில்

நடைபெறும் ஒரு தொழில்துறைத் தகராறை இதற்கு மற்றோர் உதாரணமாகக் கூறலாம்; ஒரு வேலைநிறுத்தத்தில் முதலாளிகளை விட தொழிலாளர்கள் ஏன் அதிக வன்முறையைக் கைக்கொள் கிறார்கள் என்பதை மேலே கூறியவற்றிலிருந்து புரிந்து கொள்ள லாம். சொத்துக்கள் இருப்பது வாளை முனை மழுங்க வைக்கிறது; சொத்துகள் இல்லாமலிருப்பது அதனைக் கூராக்கிறது. இவ்விதம் சொத்து வலிந்து தீங்கு செய்யக் கூடியதாக இருக்கிறது. ஆனால் அதேசமயம் இதனை ஈடுசெய்யும் நற்பலன்களும் உள்ளன என் பதை மறந்துவிடக் கூடாது.

திரு ரஸ்ஸலின் கண்ணோட்டம் முழுவதிலும் படர்ந்து பரவி யிருக்கும் மிக அடிப்படையான ஒரு கருத்தை உதாசீனம் செய்வது நியாயம் அல்ல. மனிதனின் உந்துணர்வுகளையும் ஆர்வ விருப்பங் களையும் ஆக்கத்திறன் கொண்டவை என்றும், உடைமை நாட்டம் கொண்டவை என்றும் பிரிக்கலாம் என அவர் கூறுகிறார். நம் முடைய சில செயற்பாடுகள் இதுவரை இல்லாதவற்றைப் படைக் கும் திசைவழியில் செலுத்தப்படுகின்றன; வேறு சில செயற் பாடுகள் ஏற்கனவே உள்ளவற்றை ஈட்டுகின்ற அல்லது பாதுகாக் கின்ற திசைவழியில் செலுத்தப்படுகின்றன. எந்த வாழ்க்கையில் படைப்பாக்க உந்துணர்வுகள் பெருமளவிலும், உடைமை நாட்ட உந்துணர்வுகள் சிறு அளவிலும் பங்காற்றுகின்றனவோ அதுவே மிகச் சிறந்த வாழ்க்கையாகும்.[14] உந்துணர்வுகளை இவ்விதம் பிரிப்பது சாத்தியமா? இந்த முக்கிய பிரச்சினை குறித்து இங்கு விவாதிப்பது என்பது இந்த ஆய்வின் வீச்சுக்கு அப்பாற்பட்ட தாகும். எனினும் இங்கு ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்பு கிறேன்; இந்த வேறுபாட்டை உந்துணர்வுடன் இணைத்து திரு. ரஸ்ஸல் வாதிடுவதற்குப் போதிய அடிப்படை இல்லை என்றே கருதுகிறேன். எத்தகைய கட்டுப்பாடுமில்லாத ஒவ்வொரு உந்துணர் வுமே ஏதேனும் படைப்பாக்கச் செயலுக்கு இட்டுச் செல்லும். இது அதன் உற்பத்தி முறையையும் — தனிநபர் உற்பத்தியா அல்லது வேறா — அதனைப் பயன்படுத்தும் தன்மையையும் — சமூக ரீதியா அல்லது வேறா — பொறுத்துள்ளது. பொது முயற்சியின் மூலம், உற்பத்தி செய்யப்பட்ட எதையும், கூட்டு உபயோகத்துக்காக இருக்கும் எதையும் தனதாக்கிக் கொள்ளும் உரிமையை யாரும் முன்வைக்க முடியாது. பூர்வீக மக்கள் ஒன்றுசேர்ந்து அவ்வப் போது நடத்தி வந்துள்ள வேட்டையை முதலாவதாகக் குறிப்பிட்ட தற்கு உதாரணமாகக் கூறலாம். ஒரு குடும்பத்திலுள்ள நிலைமையை இரண்டாவதாகக் கூறியதற்கு எடுத்துக்காட்டாகச் சொல்லலாம். எவ்வாறு பொது நினைவுச் சின்னங்கள்மீது அவரும் தனிப்பட்ட முறையில் உரிமை கொண்டாட முடியாதோ அவ்வாறே வீட்டில் மேஜை மீதுள்ள பொருள்கள்மீதும், அலங்காரப் பொருள்கள் மீதும் எவரும் தனிப்பட்ட முறையில் உரிமை கொண்டாட

14. சமுதாய மறுசீரமைப்புக் கோட்பாடுகள், பக்கம் 234.

முடியாது. இவையாவும் வீட்டிக்குரியவை. அதேசமயம் குடும்ப உறுப்பினர் ஒவ்வொருவரும் தமது ஆடைகளை அணிந்து கொள்வதற்குப் பிரத்தியேக உரிமை உண்டு. அவை தனிநபர்களுடையவை. ஆகவே, ஒரு பொருளை உரிமைப்படுத்திக் கொள்வது என்பது உற்பத்தியையும் பயனீட்டையும் பொருத்ததே அன்றி உந்துணர்வைப் பொருத்ததல்ல. இவ்விதம் படைப்பாக்கமும் உடைமை பெற்றிருப்பதும் வெவ்வேறு படிநிலையில் இருப்பவை; இதனால் முந்தியதை மேம்படுத்தும் முறையும் பிந்தியதை குறைக்கும் முறையும் வெவ்வேறானவையாக இருக்கவே செய்யும். ஒன்று அதிகமாக இருப்பது இன்னொன்று குறைவதை உத்திரவாதம் செய்யாது.

இத்துடன் திரு. ரஸ்ஸலின் நூல் குறித்த மதிப்பாய்வை முடித்துக் கொள்வோம். எதிர்காலத்தில் சமுதாயத்தை மறுசீரமைப்பதற்காக அடித்தளத்தை இடுவதற்கான விஷயங்கள் இதில் நிறைய இருக்கின்றன. சமூக வாழ்க்கைக்கு மனரீதியான அடிப்படையை வலியுறுத்திய முழுப் பெருமையும் திரு. ரஸ்ஸலையே சேரும். சமூக மறுசீரமைப்பானது சமுதாயத்துடன் தனிநபருக்குள்ள உறவை சரியாகப் புரிந்து கொள்வதைச் சார்ந்துள்ளது. இப்பிரச்சினை நீண்டகாலமாகவே மிகப் பல சமூகவியலாளர்களைத் திகைக்க வைத்து அவர்களுக்கு ஒரு புதிராக இருந்து வந்திருக்கிறது. இந்த உறவு பற்றிய திரு. ரஸ்ஸலின் கண்ணோட்டம் மிக உண்மையானது என்பதில் ஐயமில்லை. இதையும் மற்றும் இந்த நூல் தொட்டுக்காட்டும் இதர பல பிரச்சினைகளையும் புரிந்து கொள்வதற்கு மூலத்தைப் படிக்குமாறு வாசகர்களுக்குப் பெரிதும் பரிந்துரைக்கிறேன். திரு. ரஸ்ஸல் எங்கெல்லாம் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறாரோ அங்கெல்லாம் அவரைச் சரியான கோணத்தில் படம்பிடித்துக் காட்டவும், அதே போல் அவருடைய போதிய திறனாய்வற்ற வாசகர்களிடம் அவர்களை அறியாமலேயே தோன்றியுள்ள தப்பெண்ணங்களை அகற்றுவதற்கும் முயன்றுள்ளேன்.

சிறப்புப் பெயரகராதி

அ

அடிப்படை உரிமைகள், 193,

அமெரிக்க அரசியல் சாசனம், 194

இக்பால் முகம்மது, 142

இந்து மகாசபை, 154

க

கர்சன், 195

காங்கிரஸ், 123, 124, 155

காட்கில், டி. ஆர். 57

காந்தி, மகாத்மா, 148, 155

காலே, ஆர். ஆர், 57

கிரிப்ஸ்கமிட்டி., 168, 174, 175

கிழக்கிந்தியக் கம்பெனி, 26

கிறிஸ்து, 30

கீட்டிங்ஸ், 338

கூட்டாட்சித்திட்டம், 55

கொலம்பியா பல்கலைக்கழகம், 46

கோகலே, கோ. கி. 156

ச

சங்கராச்சாரியர் குர்ட கோடி, 39, 156

சமார்கள், 47

சமூக பகிஷ்காரம், 219

சர்வதேச சங்கம், 193

சாப்ரு கமிட்டி, 168

சிவில் உரிமைகள், 20

சுரேந்திரநாத் பானர்ஜி., 156

சைமன் கமிஷன், 128

டிப்ரஸ்ட் கிளாஸ் மிஷன், 32

த

தக்கர்பாபா, 148

தனிவாக்காளர் தொகுதிகள், 223

தாதாபாய் நவரோஜ், 30

திலகர், 104, 156

தூசிடைட்ஸ், 339

ந

நடராசன், 49

நார்ஸிமேத்தா, 155

நெப்போலியன் போனப்பார்ட், 38

ப

படேல், 33

பட்லர் கமிட்டி, 129

பம்பாய் இராணுவம், 26

பிரெட்ரிக் நியட்ஸே, 339

பிரம்ம சமாஜம், 37

பிராத்தனை சமாஜம், 37

பிரிவிகவுன்ஸில், 136

புனா ஒப்பந்தம், 222

போப், 30

ம

மகார்கள், 17, 47, 148

மாண்டேகு—செம்ஸ்ஃபோர்டு, 35, 114

முகம்மது நபி, 30

மெக்காலே, 116

மேத்தா பிரோஷா, 156

ர

ரானடே, எம். ஜி., 156, 157

ல

லார்டு இர்வின், 126, 127

லார்டு மார்லி, 28

லிங்காயத்துகள், 44

வ

வட்டமேஜை மாநாடு, 148, 155

வல்லபாய் பட்டேல், 148

வெல்லிங்டன், 38

ஜ

ஜான் ஷோர், 38

ஜேம்ஸ் பிரைஸ், 100

ஜோஸப் அடிஸன், 35

ஹ

ஹார்ட், ஏ. பி., 7

ஹாப்ஹவுஸ், எல். டி., 25

ஹோம் ரூல், 35, 334

ஷ

ஷெட்யூல்டு வகுப்பார் சம்மேளனம், 163

மகாராஷ்டிர மாநில அரசு தொகுத்து வெளியிட்டு வரும் 'டாக்டர் பாபா சாகேப் அம்பேத்கர்: பேச்சும் எழுத்தும்' என்னும் ஆங்கில நூல் வரிசையில் முதல் தொகுப்பில் அடங்கியுள்ள பன்னிரண்டு கட்டுரைகள் தமிழில் இரு தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன.

முதல் தொகுதியில் இடம்பெற்றவை:

- இந்தியாவில் சாதிகள்
- சாதி ஒழிப்பு
- மொழிவாரி மாகாணமாக மகாராஷ்டிரம்
- வரைமுறை, தராதர நிர்ணய அவசியம்
- மொழிவாரி, மாநிலங்கள்பற்றிய சிந்தனைகள்
- ரானடே, காந்தி, ஜின்னா

இரண்டாம் தொகுதியில் இடம்பெற்றுள்ளவை

★ சவுத்பரோ குழுவின் முன் அளித்த சாட்சியம்

★ கூட்டாட்சியா? சுதந்திரமா?

★ சமூகத் தடையும் அதைத் தீர்க்கும் வழியும்

★ மாநிலங்களும் சிறுபான்மையினரும்

★ இந்தியாவில் சிறு நிலவுடைமைகளும் அவற்றுக்கான தீர்வுகளும்

★ திரு. ரஸ்ஸலும் சமுதாய **மறுசீரமைப்பும்**